நபியே நீர் கூறும்:
நீங்கள் அல்லாஹ்வை
நேசிப்பீர்களானால்
என்னைப்பின் பற்றுங்கள்;
அல்லாஹ் உங்களை நேசிப்பான்.

# முஹம்மது

*அல்லாஹ்வின் கருணையும் சாந்தியும்*
*அவர்கள் மீது பொழியட்டுமாக*

## அனைவருக்கும் பொதுவான நபி

ஆசிரியர்
ஸையத் ஹமீத் மோஹ்ஸின்

தமிழாக்கம்
சேயன் இப்ராஹிம்

வெளியீடு

ஸலாம் சென்டர்
*65, முதல் மெயின், எஸ.ஆர்.கே கார்டன்*
*ஜெயநகர் கிழக்கு, பெங்களூரு – 560041*
கைபேசி: +91 99011 29956, +91 99451 77477, +91 99451 88488
E.mail: salaamcenterbangalore@gmail.com

MUHAMMAD, Anaivarakkum Poduvana Nabi
FOLLOW ME, God Will Love You (English)
Copyright © 2013 Syed Hamid Mohsin.
ISBN: 978-81-928089-8-7

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, including photocopy, recording, or any information storage and retrieval system, without permission in writing from the author, except for the situation below which is permitted.

For Reprinting
Reprinting or reproducing this book on the condition that absolutely no change, addition, or omission is introduced is permitted free of charge. To make high quality reprints, you may contact the author / Salaam Centre to obtain free copies of the soft copy or printing files of this book.

The Web Site of this book :
This e-book is available on the Web, world wide at:
www.FollowMe-Muhammad.in , www.quranforall.in
Price:

Printed and Published by :
SALAAM CENTRE
# 65, Ist main, S.R.K. Garden, Jayanagar, Bangalore – 560 041
Contact: +91 99011 29956 / +91 99451 77477 / 080-2663 9007
Email: salaamcentrebangalore@gmail.com

# பொருளடக்கம்


நன்றி - முன்னுரை i-xv

1. கஅபா - இறைவனின் இல்லம் 1
   - ✳ பிறப்பு 2
   - ✳ இயற்கைக் கல்வி 4

2. நபித்துவத்தின் அத்தாட்சிகள் 9
   - ✳ நுண்ணறிவு 17
   - ✳ முதல் இறைச் செய்தி 23

3. செய்தி 27

4. அடக்கு முறையும் சோதனையும் 33
   - ✳ குறைஷியர்கள் எடுத்த நடவடிக்கை 38
   - ✳ மீடியாவின் தாக்கம் 42
   - ✳ இறைவன் தான் விரும்பியவருக்கு வழிகாட்டுகிறான் 45

5. சமூகத்தில் நிகழ்ந்த புரட்சி 49
   - ✳ இன்ஷா அல்லாஹ் (இறைவன் நாடினால்) 53

6. அபிசீனியாவில் தஞ்சம் 55
   - ✳ மரியமின் மகன் ஈஸா (அலை) 60
   - ✳ அபாயமும் உண்மையும் 61
   - ✳ ஊக்கமும் தைரியமும் - ஹம்ஸா (ரலி) 63
   - ✳ உமர் (ரலி) 64
   - ✳ மனப் புரட்சி 68

7. தடை 71
   - ✳ கதிஜா (ரலி) 75

8. பயணம் (ஹிஜ்ரா) 87
   - ✳ அபூபக்கர் (ரலி) 88
   - ✳ ஹிஜ்ரா-நம்பிக்கை பற்றிய சோதனை 91

9. மதீனா 95
✳ பள்ளிவாசல் 96
✳ அஸ்ஸலாமு அலைக்கும் 97
✳ தொழுகைக்கான அழைப்பு 103
✳ ஜிகாத் - தடுத்தல் 108
✳ பெரிய ஜிகாத் 115
10. முதல் போர் - பத்ர் 117
✳ அறிவார்ந்த படைப்பாக்கம் 119
✳ மதீனாவில் மகிழ்ச்சியும் வருத்தமும் 128
✳ மனத்தளவில் 130
11. பெருந்தன்மை - கவனிப்பு - அன்பு 133
✳ பாத்திமா(ரலி) - மகள் 138
✳ ஆயிஷா (ரலி) - மனைவி 141
12. நபிகள் நாயகம்(ஸல்) - கருணையாளர் 145
✳ பறவைகள் - மிருகங்கள் பால் கருணை 146
✳ இயற்கையும். சுற்றுப்புறச்சூழலும் 150
✳ பசுமை பூமி - இயற்கை வளங்கள் 158
✳ மனித குலத்தின்பால் கருணை 161
பெற்றோர், தாயார், தகப்பனார், உறவினர்
பெரியவர்கள், குழந்தைகள், அண்டை
வீட்டுக்காரர்கள், ஏழைகள், அடிமைகள்,
வேலையாட்கள், ஊனமுற்றோர், அநாதைகள் -
ஆதரவற்ற ஏழைகள், நோயாளிகள்
✳ பெண்கள் 182
✳ இஸ்லாமியச் சட்டப்படி வாரிசுரிமைச்
சொத்தில் ஆணின் பங்கில் பாதி பெண்களுக்கு
வழங்கப்படுவது ஏன் ? 196
✳ ஹிஜாப் அல்லது முக்காடு 201
13. உஹது - எதுவும் முடிவல்ல 209

✳ பணிவு - அடக்கம் 218
14. அகழி - துரோகம் - சூழ்ச்சி 227
✳ புதிய கண்டுபிடிப்பும் வெளிநாட்டுப் போர்
தந்திரங்களும் 229
✳ அற்புதமான படைத்தளபதி 232
✳ முஸ்லிம்களின் பெருந்தன்மை 241
✳ பேச்சுரிமை 244
✳ மனித குலத்திற்குச் சேவை 248
✳ நன்றியுணர்வு 254
15. ஹுதைபிய்யா 257
✳ ரம்ஜானும் ஒரு கனவும் 257
✳ மதீனா - இரு எதிரிகளுக்கிடையில் 266
✳ இஸ்லாம் வேகமாகக் பரவுகிறது 277
✳ பெரிய பாடம் 279
✳ மன்னர்களின் எல்லைகளுக்கும் அப்பால் 280
✳ இந்தியர்களிடையே ஏற்பட்ட தாக்கம் 282
✳ அறநெறியுள்ளவன் 283
16. முஸ்லிம் அல்லாதவர்களுடன்
நபிகளார் கொண்டிருந்த உறவு 287
✳ மக்காவில் 287
✳ மதீனாவில் 297
✳ பகிரங்கமான பாவம் 304
✳ உயரிய குணமும் - பொறுமையும் 305
✳ பிற சமயங்கள் பால் சகிப்புத்தன்மை 306
✳ சமயத்தில் கட்டாயமில்லை 307
✳ சமயப் பன்முகத்தன்மை 310
17. கைபர் 314
✳ விஷமும் ஒப்பந்தமும் 317
✳ பெருந்தன்மையான அணுகுமுறை 320

✳ ஒழுக்கமும் - அறநெறிகளும் 323
✳ புறங்கூறல் 323
✳ சந்தேகம் - பொய்யுரைத்தல் 324
✳ யூகங்கள் பாவமேயாகும் 325
✳ பொழுது போக்கும் ஓய்வும் 327
18. உம்ரா எனும் புனிதப்பயணம் 329
✳ உள்ளொளி 330
✳ பிரியமுள்ளவர்களுக்காக அழுதல் 333
✳ அபூசுஃப்யான் 337
19. பெருமைக்குரிய வெற்றி 341
✳ இஸ்லாமியத் தலைமை 351
✳ இறைவனே நான் ஒன்றுமறியாதவன் 354
✳ பேராசை 363
✳ லஞ்சம் (கையூட்டு) 365
✳ பயங்கரவாதம் 366
20. ஹுனைன் 367
✳ முன்னறிவிப்புகள் 374
✳ நபிகளாரின் பொன் மொழிகள் 378
21. மதீனா நகரத்தின்மீது நபிகளார்
கொண்டிருந்த அன்பு 381
✳ மனித உரிமைகள் - நபிகளாரின் கொள்கைகள் 389
✳ குர்ஆனும் மனித மாண்பும் 392
✳ மனித குலத்தின் சமத்துவம் 397
✳ ஹஜ் புனிதப்பயணம் - ஒரு வாழும் அத்தாட்சி 398
✳ இனவெறி 400
✳ இளைஞர்களை ஊக்குவித்தல் 402
✳ போர் நெறிகள் 404
22. போர்பற்றிய நபிகளாரின் கொள்கைகள் 405
✳ மோசமான வன்முறை நூற்றாண்டு 410

23. திருமணங்கள் - ஒருதார - பலதார மணங்கள் 417
✳ மேற்கத்திய ஆயுதம் 417
✳ ஜுடிஸம் 418
✳ கிறிஸ்துவம் 420
✳ ஹிந்துயிஸம் 421
✳ மேற்கத்திய சமூகம் 422
✳ இஸ்லாம் 425
✳ விதவைகள் மற்றும் விவாகரத்து செய்யப்பட்ட பெண்களின் மறுமணம் 431
✳ பெண்களின் சம்மதம் 435
24. பலதாரமணமும் நாயகம்(ஸல்) அவர்களும் 439
✳ பலதார மணத்திற்கான காரணங்கள் 456
25. மதீனா - ஒரு முன்மாதிரி நகரம் 465
✳ அனைவருக்கும் நீதி 488
✳ மன்னரும் குடிமகனும் சமமே 493
✳ மகனின் இறப்பிற்காக வருந்துதல் - கிரகணம் 494
26. விடைபெறும் ஹஜ்ஜுப் பயணம் 497
27. சொர்க்கத்தில் ஓர் உயர்நத ஒருங்கிணைப்பு 505
✳ பிரிவு 509
✳ அன்பும் - வெற்றிடமும் 512
28. இறைவனின் தூதர் ஒரு அழகிய முன்மாதிரி 515
✳ வழிகாட்டிய ஒளி 522
✳ நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பற்றிய பேரறிஞர்களின் கூற்றுகள் 526
✳ ஆதார நூற்கள் பட்டியல் 531

# நன்றி

முஸ்லிம்கள் மட்டுமின்றி முஸ்லிமல்லாதாரும் அதிக அளவில் படிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து அதன் மூலம் அவர்கள் மீட்சி பெறவும், மேம்பாடு அடையவும் வேண்டுமென்ற நோக்கில் செய்யப்பட்ட நன் முயற்சியே இது. இந்நூலைப் படிக்கின்ற வாசகர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் இன்னொரு புத்தகமாக இதனை கருதாமல் உலகில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்திய அவர்களின் வாழ்க்கையிலிருந்து சிறந்த வழிகாட்டுதல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் படித்திட வேண்டும்.

நபிகளாரின் வரலாற்றைச் சொல்லிடும் இன்னொரு புதிய முயற்சி என இதனைக் கருதிடக் கூடாது. நபிகளாரைப் பற்றி இன்னொரு புதிய வரலாற்று நூலை எழுத வேண்டும் என்ற விருப்பம் காரணமாகவோ அல்லது அவர்களின் வாழ்க்கையையும் தூதுத்துவத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவா காரணமாகவோ எழுதப்பட்ட நூல் அல்ல இது. "குர்ஆன் அனைவருக்கும்"' என்ற பிரச்சாரத்தின் போது இதற்கான பொறி என்னுள் தோன்றியது. அதுவே மிக எளிய முறையில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிடும் நன் முயற்சிக்கு என்னை தயார்படுத்தியது எனலாம்.

*2008*ம் ஆண்டு, "குர்ஆன் அனைவருக்கும்"' என்ற புதிய திட்டம் ஒன்றினை நான் தயார் செய்து கொண்டிருந்தேன் அதனை எப்படி செயல்படுத்துவது என்று எழுந்த சிந்தனையின் விளைவாக நான் சிறிது அமைதியிழந்து இருந்தேன். என்னுடைய துணைவியார் ஷபானாவும், மகள் சுஃபியாவும் அந்தப் பணியில் தொடர்ந்து ஈடுபடுமாறு என்னை ஊக்குவித்தனர். அதிலிருந்து பின் வாங்க முடியவில்லை. அவ்விருவரும் அனைத்து நிலைகளிலும் எனக்கு உறு துணையாக நின்று அந்தப் பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றிட ஊக்குவித்தனர். உண்மையில் 'குர்ஆன் அனைவருக்கும்' என்ற அந்தத் திட்டமானது உண்மையைப் பார்ப்பதினின்றும் சமுதாயத்தின் கண்களை மறைத்து நின்ற திரையினை விலக்கும் ஒரு முயற்சியாகவே அமைந்திருந்தது எனலாம். நாட்டு மக்களுக்கு இறைவனின் செய்தியைச் சொல்லிடும் பணியினைத் தவிர வேறு மகிழ்ச்சியான பணி எதுவும் இருக்க முடியாது.

காலம் காலமாக, இந்தியாவில் சமூக நல்லிணக்கம் மிகச் சிறப்பான முறையில் நிலவி வருகிறது. இந்திய சமூகத்தின் விலை மதிக்கத்தக்க சொத்து இதுவேயாகும். திருக்குர்ஆனின் செய்தியை எடுத்துக் கூறுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்ட மாண்புமிகு நீதிபதிகள், வழக்கறிஞர்கள், காவல்துறை அதிகாரிகள், கல்வியாளர்கள், அறிவு ஜீவிகள், மாணவர்கள், என அனைவரும் இதற்கு சாட்சியாகத் திகழ்கின்றனர். இந்த முயற்சிக்காக என்னை நேரில் சந்தித்து இந்தப் பெருமக்களில் பலர் பாராட்டுத் தெரிவித்தனர். இதன் மூலம் நாட்டு மக்கள் எங்ஙனம் புனிதமான ஆன்மீக விஷயங்களுக்கு மரியாதை அளிக்கிறார்கள் என்பதை நான் அறிந்து கொள்ள முடிந்தது. இறுதித் தீர்ப்பு நாளின் போதும் அல்லாஹ் இதே முறையில் என்னை கண்ணியப்படுத்தி வெற்றிப்படிக்கட்டில் நிலை நிறுத்துவான் என உளப்பூர்வமாக நம்புகிறேன்.

இந்தப் பணியில் என்னை ஊக்குவித்த பெங்களூர் நகர ஜும்ஆ பள்ளி வாசலின் இமாம் மறைந்த மௌலானா மௌலவி ரியாஸுர் ரஹ்மான் ரஸாதி அவர்கட்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கையெழுத்துப் பிரதிகளை பார்த்து மேலாய்வு செய்த முன்னாள் மங்களூர் – கோவா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் பி.ஷேக்அலி, அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியத்தின் தலைவரும் தாருல் உலூம் நத்வத்துல் உலமாவின் தலைவரும், ரியாத்தில் செயல்பட்டு வரும் ஆலமி ராபிதா அதாப்–இ–இஸ்லாமியின் துணைத் தலைவருமான மௌலானா ஸையிது முஹம்மது ரபே ஹுஸைன் நத்வி, புதுடெல்லி ஜாமியா மில்லியா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் முஹம்மது ரபாத் ஆகியோருக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் வழங்கிய மேலான ஆலோசனைகள் இந்த நூலை மேலும் செழுமைப்படுத்த உதவின. எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிந்து இந்தப் பணி முழுமை பெற்றிட அவர்கள் செய்திட்ட முயற்சிகளை ஏற்றுக் கொள்வானாக.

இந்த நூலைத் தொகுப்பதில் பெரிதும் உதவிபுரிந்த ஜனாப் முஹம்மது நுஃமான் கானுக்கு எனது நன்றி. அவருக்கு திருமதி சாதியாவும், திருமதி பிரபாவும் உறுதுணையாக இருந்தனர். அவர்கள் இந்தப் பணியில் காட்டிய ஆர்வத்திற்கும், விசுவாசத்திற்கும், பணிவுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இந்தப் பணியில் எனக்கு உறுதுணையாக இருந்த ஜனாப் செய்யது தன்வீர் அஹமதுவுக்கும் எனது நன்றி.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை நான் எழுதிடத் துணை நின்ற நூல்களை எழுதியுள்ள உலமாக்களுக்கும், அறிவு ஜீவிகளுக்கும், ஆசிரியர்கட்கும் எனது உளப்பூர்வமான நன்றியினைத்

தெரிவித்துக் கொள்கிறேன். நபிகளாரின் முழுமையான வரலாறு இந்நூலில் அடங்கியுள்ளது. இந்த நூலைத் தொகுத்ததில் எனக்கு எந்த விதமான வணிக நோக்கமோ, லாபம் பற்றிய எதிர்பார்ப்போ இல்லை. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும், மக்களுக்குத் தெரியப்படுத்தி அதன் மூலம் மீட்சிக்கான பாதையைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு உதவுவதே எனது முக்கிய நோக்கமாகும்.

என்னுடைய குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், சகோதரர்கள், சகோதரிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணியில் என்னை தொடர்ந்து ஊக்குவித்து வந்த எனது தாயாருக்கு நான் எனது நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன். 1970ல் எனது தந்தையார் செய்யிது அப்துல் ஸலாம் அவர்களின் தியாக மரணத்திற்குப் பின்னர், என்னைப் பண்படுத்தி இந்த முயற்சியில் என்னை ஈடுபடுத்தியவர் எனது தாயார் தான். இஸ்லாத்தின் செய்தியினை அனைவருக்கும் தெரிவித்திடும் இந்தப் பணியில் என்னை ஈடுபடச் செய்தது கொழுந்துவிட்டெரிந்த அவர்களின் ஆர்வமே ஆகும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வரலாற்றைத் தொகுத்திடும் இந்தப் பணியில் நான் ஈடுபட்டிருந்த போது அதனைத் தொடர்ந்து அவர்கள் கவனித்து வந்ததற்கு இந்த ஆர்வமே காரணமாகும். இறுதியாக இந்தப் பணியினை நிறைவேற்றிட இந்த எளியவனுக்கு எல்லையற்ற வல்லமையையும், அறிவையும் வழங்கிய எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கு நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

ஸையத் ஹமீத் மோஹ்ஸின்,

பெங்களூர்.

செப்டம்பர்– 2013

# முன்னுரை

நபித்துவம் என்பது திருக்குர்ஆனின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். தவறுகளிலிருந்தும் பாவங் களிலிருந்தும் மக்களை விலகியிருக்கச் செய்து நன்மையையும் நியாயத்தையும் நோக்கி அவர்கள் சென்றிட வழிகாட்டவே இறைவன் நபிமார்களை அனுப்பியுள்ளான். நபிமார்கள் மக்களின் முன்னேற்றத்திற்காகவும், உயர்வுக்காகவும் நற்செய்தியினைக் கொண்டு வந்த அதே நேரத்தில் அறியா மையிலும், காட்டு மிராண்டித்தனத்திலும் மூழ்கிவிடாமலிருக்கு மாறும் மக்களை எச்சரித்தார்கள். மனித சமுதா யத்திற்கு நேர்வழி காட்டி, ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி அவர்களின் உள்ளத்தில் நம்பிக்கையை ஊட்டி மேம்படச் செய்து அவர்களை இறைவனுக்கு நெருக்கமானவர்களாக ஆக்குவதே நபிமார்களின் பணியாக இருந்தது. எனவே நபித்துவம் என்பது இறைவன் தனது செய்தியை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு வழி முறையாக மட்டுமல்லாது, அவனது கருணை மற்றும் ஆதரவின் அத்தாட்சி களாகவும் திகழ்கின்றது.

நபித்துவத்தை ஒரு உலகளாவிய தத்துவமாக குர்ஆன் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு சமூகத்திற்கும் (நாட்டிற்கும்) நாம் தூதர்களை அனுப்பியுள்ளோம். (குர்ஆன் *16:36*) 'எல்லா நபிமார்களும் சமமானவர்களே. நாம் அவர்களுக் கிடையில் எவ்விதப் பாகுபாடும் காட்ட வில்லை'. (குர்ஆன் *3:34*) ஆனால் 'சில நபிமார்களை நாம் மற்றவர்களை விட சிறப்பான வர்களாக ஆக்கியுள்ளோம் (குர்ஆன் *2:153*) ஒவ்வொரு இறை வசனத்தையும் நம்புவது முஸ்லிம்களின் கடமையாகும். நபிமார்கள் இறைவனின் செய்தியைக் கொண்டு வந்தவர்கள் மாத்திரமல்ல, அதன்படி வாழ்ந்து காட்டி மக்களுக்கு முன்

மாதிரியாகத் திகழ்ந்தவர் களுமாவர். "எனவே அவர்களும் மனிதர்கள் தான்" (குர்ஆன் *14:11*) மனித சமுதாயத்திலிருந்தே வந்தவர்கள்தான். அவர்கள் மக்கள் சமூகத்தின் துன்பங்களை அறிந்திருந்தார்கள். குழப்பங்கள் கண்டு கவலையடைந்தார்கள். அதே நேரத்தில் அனைவரின் நம்பிக்கையையும் பெற்றவராக இருந்தார்கள். (குர்ஆன் *9:128,129*)அவர்கள் பரிசுத்தமான நற்பண்புகள் மற்றும் சிறப்புமிக்க குண நலன்கள் கொண்டிருந்ததன் காரணமாக இறைவனின் அத்தாட்சிகளை மனித சமூகத்திற்கு அறிவித்திடத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். (*3:164*). அவர்கள் தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் உருவாகி இறைவனின் செய்தியை எந்தவிதமான பயமுமின்றி அதே நேரத்தில் உறுதியுடனும், பொறுமையுடனும் மக்களிடம் கொண்டு சென்றார்கள்.

இஸ்லாமிய ஓரிறைக் கொள்கை நபிமார்களின் புனித வரலாற்றோடு தொடர்ந்து நிலை பெற்று வந்துள்ளது. ஆரம்ப காலத்திலிருந்தே இறைவன் தனது இருப்பையும், ஆணையையும், நேசத்தையும் நினைவுபடுத்திட நபிமார் களையும், தூதர்களையும் தனது செய்தியுடன் அனுப்பி வைத்தான். ஆதம்(அலை) முதல் நபி. முஹம்மது(ஸல்) அவர்கள் இறுதி நபி. இவர்களுக்கிடையில், திருக்குர்ஆன் 23 நபிமார்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பல நபிமார்களின் பெயர்கள் பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள நபிமார்களின் பெயர்களுடன் ஒத்துப் போகிறது.

இந்த அனைத்து இறை தூதர்களும் ஒரே சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். ஓரிறைக் கொள்கையை மக்களிடம் கொண்டு சென்றவர்கள். சமத்துவத்தையும், நியாயத்தையும் நிலை நாட்டுவதன் முக்கியத்தை மக்களுக்கு உணர்த்தியவர்கள். (குர்ஆன் *42:13*)

- ♦இத்ரீஸ் (ஈனோக்) (குர்ஆன்*19:56,57;21:85,86*)
- ♦நூஹ் (நோவா) (*6:4*)

| | | |
|---|---|---|
| ♦ஹூத் | | *(11:50, 60)* |
| ♦சாலிஹ் | | *(11:61, 62)* |
| ♦இப்ராஹிம் | (ஆப்ரஹாம்) | *(6:83, 11:69, 76)* |
| ♦இஸ்மாயில் | (இஸ்மேல்) | *(6:84, 19:54, 55)* |
| ♦ இஸ்ஹாக் | (ஈசாக்) | *(11:70, 74)* |
| ♦லூத் | (லோத்) | *(7:80, 84)* |
| ♦யாகூப் | (ஜாக்கப்) | *(11:71)* |
| ♦யூஸுப் | (ஜோசப்) | *(6:84, 19)* |
| ♦சுஐப் | | *(7:85, 11:84)* |
| ♦அய்யூப் | (ஜாப்) | *(6:84)* |
| ♦மூஸா | (மோஸஸ்) | *(6:84, 20:9, 91)* |
| ♦ஹாரூன் | (ஆரூன்) | *(6:84, 20:90)* |
| ♦துல் கிப்ல் | (இசேகில்) | *(21:85, 138:48)* |
| ♦தாவூது | (டேவிட்) | *(6:84)* |
| ♦சுலைமான் | (சாலமன்) | *(6:84)* |
| ♦இல்யாஸ் | (எலியாஸ்) | *(6:85)* |
| ♦அல் யாசா | (லோத்) | *(6:86)* |
| ♦யூனுஸ் | (ஜோனா) | *(6:86)* |
| ♦ஜக்கரிய்யா | (ஜக்கரியா) | *(6:85)* |
| ♦யஹ்யா | (ஜான்) | *(6:85)* |
| ♦ஈஸா | (ஜீசஸ்) | *(3:45; 43:57–58; 19:88, 98; 5:116, 117; 19:16, 36; 5:46, 47; 5:72; 5:43; 63:5)* |

நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். மேலும் நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோராய் இருக்கிறோம்' (திருக்குர்ஆன் *2:156*)

முஹம்மது(ஸல்) அவர்களைத் தனது இறுதித் தூதராக அனுப்பிய இறைவன், குர்ஆனை தனது இறுதி வேதமாகவும் இவ்வுலகிற்கு வழங்கியுள்ளான். இதன் மூலம் தனக்கும் மனிதனுக்குமிடையில் ஒரு நிலைத்த தொடர்பினை ஏற்படுத்தி,

என்றைக்கும் வழிகாட்டி ஒளி தரக்கூடிய ஒரு கலங்கரை விளக்கை மனித சமுதாயத்திற்கு வழங்கியுள்ளான். ஆனால் இறை வேத வெளிப்பாடு என்பது என்ன? இதற்கான விடை குர்ஆனின் 42வது அத்தியாயத்தில் உள்ள 51, 52 வசனங்களில் உள்ளது.

எந்த மனிதருடனும் அல்லாஹ் நேருக்கு நேர் பேசுவதில்லை. ஆயினும் வஹியின் (சைக்கினையின்) மூலமோ, திரைக்கு அப்பாலிருந்தோ ஒரு தூதரை (வானவரை) அனுப்பி வைத்தோ அல்லாமல் (நேரடியாகப்) பேசுவதில்லை. அவர் அவனுடைய அனுமதி கொண்டு அவன் நாடுவதை அறிவித்து விடுகிறார். நிச்சயமாக அவன் உயர்வானவனும் நுண்ணறிவு மிக்கவனு மாவான். இவ்வாறே (நபியே) நம் கட்டளையின் வாயிலாக ஒரு ரூஹை (இறைவனால் புகட்டப்பட்ட அறிவுரை) உமக்கு வஹி அறிவித்தோம். வேதம் என்பதென்ன? ஈமான் (இறை நம்பிக்கை) என்றால் என்ன என்பதெல்லாம் உமக்குத் தெரியா திருந்தது. ஆனால் அந்த ரூஹை நாம் ஒளியாக்கினோம். நம் அடியார்களில் நாம் நாடுவோருக்கு அதன் மூலம் வழி காட்டுகிறோம்" என்பதே மேற்கண்ட இறை வசனங்களாகும். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால் இறைவன் நபியுடன் நேரடியாகப் பேசவில்லை. ஆனால் வேத வெளிப்பாடுகள் அல்லது செய்திகள் தூதுவர் வழியாக வஹி மூலம் அறிவிக்கப்பட்டன. குர்ஆனின் 53வது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள 'நட்சத்திரம்' நபிகள் நாயகம்(ஸல்) அவர்களையே குறிப்பதாகக் கருதப்படுகிறது. ஹிரா குகையில் இருந்த போது குர்ஆன் வசனங்கள் அவர்கட்கு முதலில் அருளப்பட்டன. **மாபெரும் நுண்ணறிவாளரும், அதிக வலிமை வாய்ந்தவருமான ஒருவர் உயர்ந்த வானத்தின் விளிம்பிலிருந்து இதனை அவருக்குக் கற்றுக் கொடுத்தார் (குர்ஆன் 53:1-7)** சில மொழி பெயர்ப்பாளர்களும், விரிவுரையாளர்களும் அவர் வானவர் ஜிப்ரீல் தான் எனக் கூறியுள்ளனர்.

நபிகளாருக்கு இறைவனால் அருளப்பட்ட இறுதி வேதமான திருக்குர்ஆன், இறைவனது தூதரின் அசாதா ரணமான

முக்கியத்துவத்தையும், அவர்கள் இறைவனின் செய்தியைக் கொண்டு வந்த ஒரு வழிகாட்டியாக, முன் மாதிரியாகத் திகழ்ந்ததையும் சிறப்பித்துக் கூறுகிறது. தனக்கு இறைவனால் அருளப்பட்ட இறைவசனங்களின் அடிப்படையிலும் தமது பேராசிரியரான இறைவனிடமிருந்து பெற்ற வஹி (உள்ளுணர்வு) அடிப்படையிலும், நபிகளார் இந்த உலகைச் சீர்படுத்தினார்கள். இறைவனால் தூதராகத் தேர்வு செய்யப்பட்ட அவர்கள் மக்களால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் விளங்கினார்கள்.

கடந்த காலங்களைப் போலவே, இன்றைக்கும் உலக முஸ்லிம்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றுள்ளார்கள். இறைவனுக்கும் மக்களுக்குமிடையில் ஒரு மத்தியஸ்தராக (முகவர்) நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை முஸ்லிம்கள் கருதிடவில்லை.

சில சமயங்களில் நபிகளார், ஒட்டு மொத்த மனித சமூகத்தின் நலனிற்காக இறைவனிடம் இறைஞ்சிய போதிலும் ஒவ்வொரு தனி மனிதனும் தன்னிடம் நேரடியாகக் கேட்குமாறே இறைவன் தனது மறையான திருக்குர்ஆனில் கூறுகிறான். ஒவ்வொரு மனிதனும் இறைவனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதை நபிகளாரும் வலியுறுத்தியுள்ளார்கள். இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை மனித சமுதாயத்திற்கு நினைவுபடுத்துகின்ற பணியினையே நபிகளார் செய்தார்கள். இறைவனைப் பற்றிய அறிவை மக்களிடையே புகட்டி, ஆன்மீகப் பாதையை அவர்களுக்குக் காட்டிய நபிகளார், தமது தோழர்களும், பிற முஸ்லிம்களும் தன் மீது வைத்துள்ள மரியாதைக்கும், நேசத்திற்கும் அப்பாற்பட்டு, எந்தத் தேவையுமற்ற ஏக இறைவனாகிய அல்லாஹ்வையே வணங்குமாறு போதித்தார்கள். அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுமாறும், தூதுத்துவத்திற்கான வெளிப்படையான சான்றுகளை அளிக்குமாறும் தம்மிடம் கேட்டவர்களிடம் கீழ்க்கண்டவாறு

பதிலளிக்குமாறு இறைவன் நபிகளாருக்கு ஆணையிட்டான்.

> (நபியே) கூறும், நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான், உங்கள் இறைவன் ஒரே இறைவன் என எனக்கு வஹி வருகிறது (திருக்குர்ஆன் *18:110*)
>
> உண்மையாதெனில் உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஒரு அழகிய முன்மாதிரி இருக்கிறது. உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகின்ற அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்கின்ற ஒவ்வொருவருக்கும் (திருக்குர்ஆன் *33:21*)

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதராக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எப்போதும் திகழ்வார்கள் என்பதை மேற்கண்ட இறை வசனங்கள் உணர்த்துகின்றன.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் சீரிய வாழ்க்கை பற்றியும், இன்றைக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ள அவர்களின் ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள், சூழ்நிலைகள், போதனைகள் பற்றியும் இந்நூலில் பெரிதும் விளக்கப்பட்டுள்ளன. நபிகளாரின் ஆளுமைப் பண்புகள் குறித்து ஒரு முறை ஆயிஷா(ரலி) அவர்களிடம் கேட்டபோது "திருக்குர்ஆனே அவர்களது வாழ்க்கை" எனப் பதிலளித்தார்கள். நபிகளாரின் வாழ்க்கையிலிருந்து உலக மக்கள் பெறத்தக்க ஆன்மீக போதனைகளை வெளிக்–கொண்டுவருவதே இந்நூலின் முதன்மை நோக்கமாகும். அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்திட்ட சில வரலாற்றுச் சம்பவங்களை வாசகர்களின் நினைவிற்குக் கொண்டு வந்து அதன் மூலம் அவர்களைப் பாடம் கற்றுக் கொள்ளச் செய்வது இரண்டாவது நோக்கமாகும்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் ஒரு குறிப்பிட்ட சமூக, அரசியல், கலாச்சாரச் சூழலில் இறைவனின் தூதரான நபிகளார் எங்ஙனம் செயல்பட்டார்கள், எங்ஙனம் எதிர்வினை ஆற்றினார்கள்,

இஸ்லாமிய நம்பிக்கை மற்றும் அறநெறிகளின் அடிப்படையில் எங்ஙனம் மனித சமுதாயத்தை நெறிப்படுத்தினார்கள் என்பது பற்றியும் இந்நூல் விரிவாகப் பேசுகிறது. இந்த ஒரு குறிப்பிட்ட வரலாறு, புவியியல் அமைப்பில் நபிகளாரின் பொன்மொழிகள், செயல்பாடுகள், மனித சமூகத்திற்கும் நம்பிக்கைக்கு மிடையிலான தொடர்புகள், சகோதரத்துவம், நேசம், துயரம், சமூகவாழ்வு, நீதி நெறிமுறைகள், சட்டம்,போர் ஆகியன பற்றிய இஸ்லாமியக் கொள்கைகளையும் அறிந்து கொள்ள இந்நூல் உதவும் என்பதில் ஐயமில்லை. நபிகளாரின் போதனைகள் நாம் வாழுகின்ற இன்றையக் கால கட்டத்திற்கும் எங்ஙனம் பொருந்தக் கூடியனவாக உள்ளன என்ற கோணத்தில் அவர்களின் வாழ்க்கையை அணுகுகின்ற ஒரு முயற்சியே இது எனலாம்.

இந்நூலைப்படிப்பவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, அல்லாதவராக இருந்தாலும் சரி இதில் கூறப்பட்டுள்ள உண்மைகளால் ஈர்க்கப்பட்டு நபிகளாரைப் பின்பற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. இன்றைய கால கட்டத்தில் நமது வாழ்க்கைக்குப் பொருந்தக் கூடிய நபிகளாரின் வாழ்க்கையில் நடந்த சில வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும், அவர்களது போதனைகளுக்கும் இந்நூலில் முன்னுரிமை கொடுக்கப் பட்டுள்ளது.

இந்நூலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் அதன் துணைத்தலைப்புகளிலும் நபிகளாரின் வாழ்க்கைக்கும் திருக்குர்ஆனுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றியும், நபிகளாரின் போதனைகள் எங்ஙனம் ஆன்மீகம், தத்துவம், சமூகம், அரசியல், நீதி, கலாச்சாரம் ஆகிய அம்சங்களில் தற்காலச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தி வருகின்றன என்பது பற்றியும் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதாரும் இதனைப் படிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள கோர்வையான நிகழ்ச்சிகள் எளிதில் புரிந்து

கொள்ளத்தக்க வகையிலும், இஸ்லாமியக் கோட்பாடுகளை அறிந்து கொள்ளும் முறையிலும் உள்ளன. இறைத்தூதரின் இந்த வரலாற்று அனுபவங்கள் உலகெங்கும் வாழும் 1.7 பில்லியன் முஸ்லிம்களால் புரிந்து கொள்ளப்பட்டு இஸ்லாத்தின் நிலைத்த கொள்கைகளை ஒருவருக்கொருவர் பறிமாறிக் கொள்ளக் கூடிய வாய்ப்பினையும் வழங்குகின்றன. நபிகளார் பால் தோழர்கள் மிகுந்த நேசம் கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து ஆன்மீக வலிமையைப் பெற்றார்கள். இறைவன் பால் நேசம் கொள்ளுமாறு முஸ்லிம்களை நபிகளார் அறிவுறுத்தினார்கள். இது பற்றித் திருக்குர்ஆன் கூறுவதாவது:–

> (நபியே! மக்களிடம்) நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவராக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்(3:31)

முஸ்லிம்கள் நபிகளார் மேல் கொண்டுள்ள நேசம் காரணமாக அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்றி நடந்திட அனைத்து முயற்சிகளையும் மேற் கொள்கிறார்கள். இறைவன் பால் அவர்கள் கொண்டிருக்கும் அளப்பரிய நேசம் இதன் வெளிப்பாடேயாகும். இந்த நேசத்தினை முஸ்லிம்கள் தங்களது இதயங்களிலும், நினைவுகளிலும் வைத்துப் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள். தங்களது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும், தினசரி நடத்துகின்ற தொழுகைகளிலும் இந்த நேசத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

> அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் நபியின் மீது 'ஸலவாத்' எனும் நல் வாழ்த்துக்களை அனுப்புகின்றார்கள் நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்' (திருக்குர்ஆன் 33:56)

இந்நூல், இந்தத் தேவையை அன்பு மற்றும் அறிவின்

துணை கொண்டு பூர்த்தி செய்திட முயற்சிக்கிறது. நபிகளாரின் வாழ்க்கை நம்மை ஆன்மீக நிலைக்கு இட்டுச் செல்லும் ஒரு அழைப்பே என்பதை இது விளக்குகிறது. வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் பற்றி தற்போது கேட்கப்படுகின்ற பல்வேறு வினாக்களுக்கு அறிவுப் பூர்வமாகப் பதிலளிப்பதைக் காட்டிலும் இதயப் பூர்வமாகப் பதிலளிக்க முயற்சி செய்கிறது.

தங்களது போதனைகளைப் பின்பற்றுவோருக்கு நபிகளார் ஒரு பேராசிரியராகவும், சிறந்த வழிகாட்டியாகவும், சிறந்த முன்னுதாரணமாகவும் திகழ்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களது பொன் மொழிகள், செயல்கள், மௌனம் என அனைத்தும் சிந்தையில் இருத்தி பின்பற்றத் தக்கனவாகும்.

ஆழ்ந்த ஆய்விற்கும், படிப்பிற்குப் பின்னர் நான் இந்த நூலை எழுதியுள்ளேன். என்னைப் படைத்திட்ட எல்லாம் வல்ல அல்லாஹ் எனது இந்த சீரிய முயற்சிகளை ஏற்றுக்கொள்ளுமாறு இறைஞ்சுகிறேன். அனைத்தையும் அவனுக்கே அர்ப்பணித்து விட்டு எனக்கு உதவிடுமாறும், வழிகாட்டுமாறும் வேண்டுகிறேன். நான் செய்திட்ட எண்ணற்ற பிழைகளை மன்னிக்குமாறும் அவனது கருணையையும் அருளையும் வேண்டி நிற்கிறேன்.

> மேலும் (நான் ஆற்ற விரும்புகின்ற அனைத்தும்) அல்லாஹ்வின் பேருதவியைப் பொறுத்தே இருக்கின்றன. நான் அவனையே முழுமையாகச் சார்ந்து விட்டேன். மேலும் (ஒவ்வொரு விஷயத்திலும் நான் அவன் பக்கமே திரும்புகிறேன்' (திருக்குர்ஆன் *11:88* )

ஸையத் ஹமீத் மோஹ்ஸின்,

பெங்களூர்.

மார்ச் – *2025*.

# மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு

பெங்களூர் "ஸலாம் சென்டரின்" நிறுவனர் ஜனாப் ஸையித் ஹமீத் மோஹ்சின் அவர்கள் எழுதியுள்ள நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வரலாற்றைக் கூறும் '*Follow Me*' என்ற ஆங்கில நூலைத் தமிழில் மொழி பெயர்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது குறித்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நல் வாய்ப்பிற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள இஸ்லாமிக் பவுண்டேஷன் டிரஸ்ட் நிறுவத்தினர் இந்த நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்யும்படி என்னைக் கேட்டுக் கொண்ட போது நான் சற்றுத் தயங்கினேன். காரணம் இது வரை நான் எந்த மொழி பெயர்ப்புப் பணியிலும் ஈடுபட்டதில்லை. நான் ஆங்கில மொழியில் அதிகப் புலமை கொண்டவனுமில்லை. தமிழில் அவ்வப்போது பல்துறை சார்ந்த கட்டுரைகள் எழுதியுள்ள ஒரு சிறு தகுதி இந்தப் பணிக்குப் போதுமா என்ற தயக்கம் என்னுள் இருந்தது. எனினும் இறையருளால் முயன்று பார்ப்போமே என்றெண்ணி இந்நூலைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டேன். அதுவே தற்போது உங்களது கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் ஏராளமான நூல்கள் தமிழில் உள்ளன. இந்நிலையில் இந்த ஆங்கில நூலை சிரமப்பட்டு தமிழில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டுமா எனச் சிலர் எண்ணலாம். ஆனால் இந்த நூல் பிற நூல்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பிற சமயத்தினர் இஸ்லாத்தைப் பற்றியும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப்

பற்றியும், சரியான முறையில் அறிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. எனவே இதில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஆளுமைப் பண்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ளது. எனவே முஸ்லிம்கள் மட்டுமின்றி பிற சமய அன்பர்களும் நபிகளாரைப் பற்றி சரியான முறையில் புரிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

இந்த முயற்சியில் எனக்குத் துணை நின்ற எனது இளைய சகோதரர் சேயன் ஹமீது அவர்கட்கும், கையெழுத்துப் பிரதிகளை கணினி அச்சு செய்து தந்த சகோதரர் மூன் கிராஃபிக்ஸ் ஜாஹிர் ஹுஸைன் அவர்கட்கும். இந்நூலை முழுமையாகப் படித்து மேலாய்வு செய்த மௌலானா மவ்லவி கே.ஜே.மஸ்தான் அலி பாகவி உமரி அவர்களுக்கும், ஓய்வு பெற்ற தமிழாசிரியர் புலவர் எஸ்.எஸ்.அப்துல் ஹுஸைன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மொழி பெயர்ப்பில் ஏதேனும் குறைகள் இருக்கு மானால் அது என்னைச் சார்ந்தது. நிறைகள் இருக்குமானால் அது இறைவனையே சாரும்.


சே.அ.முஹம்மது இப்ராஹிம்

(சேயன் இப்ராஹிம்)

கடையநல்லூர்.

மார்ச்:2013.

# Map of Arabian Peninsula as at the time of Prophet Muhammad (s), 570 - 632



# நபிகள் நாயகம்(ஸல்) அவர்களையும், அவர்கள் தம் தோழர்களின் பெயர்களையும் படிக்கின்ற போதும் கேட்கும் போதும் கடைப்பிடிக்க வேண்டிய மரியாதை நெறிமுறைகள்.

தொழுகையின் போதும், பிற சமயங்களிலும் நபிகளாரின் பெயர் உச்சரிக்கப்படும் போதெல்லாம் 'ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்' (அல்லாஹ்வின் கருணையும், சாந்தியும், ஈடேற்றமும் அவர்கள் மீது பொழியட்டுமாக) எனக் கூறுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும். எனவே இந்த நூலில் நபிகளாரின் பெயர் குறிப்பிடப்படுகின்ற இடங்களிலெல்லாம் அவர்களது பெயருக்குப் பிறகு, 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' என்ற வார்த்தைகள் சேர்க்கப் பட்டுள்ளன. இந்த நூல் முஸ்லிம்கள் மட்டுமின்றி முஸ்லிமல்லாதவர்களாலும் பெருமளவில் வாசிக்கப்படும் என்பதால், நபிகளாரின் பெயருக்குப் பின்னால் அடைப்புக் குறிக்குள் (ஸல்) என்ற வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளது. நபிகளாரின் பெயர் உச்சரிக்கப்படும் போதெல்லாம் இந்த ஸலவாத்தைச் சொல்ல வேண்டும் என்பதை முஸ்லிம்கள் அறிவார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்குச் சொல்லப்படும் இந்த ஸலவாத்து அவர்கள் இறைவன் அல்ல, மனித சமுதாயத்தின் தலைவராகவும், இறுதி நபியாகவும் திகழ்ந்த, அல்லாஹ்வின் கருணையையும், அருளையும் பெற்ற ஒரு மாமனிதர் என்ற இஸ்லாமிய அடிப்படையின்பாற்பட்டதாகும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் தகுதியை முஸ்லிம்களுக்கு நினைவுபடுத்தும் ஒரு அம்சமாக இது விளங்குவதோடு, அவர்களை இறைவனுடைய அந்தஸ்துக்கோ அல்லது அதற்குச் சமமான நிலைக்கோ உயர்த்துவதாக அமைந்து விடக் கூடாது

என்பதையும் உணர்த்துகிறது. 'ஓரிறைவன்' என்ற இஸ்லாமிய சமயக் கோட்பாட்டின் அடிப்படையை இது பாதுகாக்கிறது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடைய தோழர்களின் பெயரைக் குறிப்பிடும் போதெல்லாம் முஸ்லிம்கள் ரலி அல்லாஹுத்தஆலா அன்ஹு என்று மரியாதை அளிக்கும் சொற்களைக் கூறுவது விரும்பத் தக்கதாகும். எனவே இந்நூலில் நபித்தோழர்களின் பெயர்கள் வரும் இடங்களிலெல்லாம் அவர்களது பெயருக்குப் பின்னால் ரலி அல்லாஹு தஆலா அன்ஹு (அல்லாஹ் அவர்கள் மீது மகிழ்ச்சி கொள்வானாக) என்று வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும் சுருக்கமாக (ரலி) என்ற வார்த்தை அடைப்புக் குறிக்குள் போடப்பட்டுள்ளது. உதாரணம் உமர்(ரலி)

2

# 4

# அடக்கு முறையும், சோதனையும்

இறைவசனங்கள் முதலில் அருளப்பட்டபோது பெற்ற அனுபவங்களிலிருந்து மீண்ட நபிகளாருக்கு தொடர்ந்து வசனங்கள் அருளப்பட்டு வந்தன. எப்படி இந்த வசனங்களை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்று அறிவுரைகள் எதுவும் வராத நிலையில், அவர்கள் இதனை தனக்கு நெருக்கமானவர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள். கிறிஸ்துவப் பாதிரியார் வரகா முன்னமே சொன்னது போல் அவர்கள் கடுமையான எதிர்ப்பை எதிர்பார்த்தே இருந்தார்கள்.

## பொது அழைப்பு

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, தங்களுடைய அழைப்பை மக்களிடம் சொல்லும்படி நபிகளாருக்கு இறை வசனங்கள் அருளப்பட்டன. உம்முடைய நெருங்கிய உறவினர்களை எச்சரிக்கை செய்யுங்கள் (குர்ஆன் *26:214*) என்று இறைவசனங்கள் நபிகளாரை அறிவுறுத்தின.

இஸ்லாத்தின் செய்திகளை தனது குடும்ப அங்கத்தினர் களுக்கும் தெரிவித்திட வேண்டுமென்பதை நபிகளார் இப்போது உணர்ந்து கொண்டார்கள். ஏதேனும் ஒரு புதுச் செய்தியைச் சொல்ல வேண்டுமானால் ஒரு குன்றின் மேல் ஏறி நின்று கொண்டு அதனைச் சொல்வது அரேபியர்களின் வழக்கமாகும். ஒரு நாள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சஃபா மலையின் மீது ஏறி நின்று

கொண்டு இனக்குழுத் தலைவர்களை ஒருவர் பின் ஒருவராக அழைத்தார்கள். நபிகளார் ஒரு முக்கியச் செய்தியை சொல்லப் போகிறார்கள் என்று எண்ணிய அவர்கள் அம்மலையின் அடிவாரத்திற்கு வந்து கவனிக்கலானார்கள். (நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அவர்களால் பள்ளத் தாக்கைப் பார்க்க இயலவில்லை. ஆனால் நபிகளார் அதை நோக்கி நின்றார்கள்.) குறைஷியர்களை அழைத்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் “நீங்கள் நின்று கொண்டிருக்கும் பள்ளத்தாக்கில் உங்களைத் தாக்குவதற்காக ஆயுதம் ஏந்திய குதிரைக்காரர்கள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என நான் எச்சரிக்கை விடுத்தால் அதனை நீங்கள் நம்புவீர்களா?” என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் நாங்கள் நிச்சயம் நம்புவோம். ஏனெனில் நீங்கள் வாய்மையாளர். பொய்யுரைக்க மாட்டீர்கள் என்று ஒரே குரலில் பதிலளித்தார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தொடர்ந்து சொன்னார்கள் 'பெரும் இன்னல்கள் வரும் என நான் உங்களை எச்சரிக்கிறேன். எனது சொந்த பந்தங்களை எச்சரிக்குமாறு இறைவன் என்னைப் பணித்துள்ளான். நீங்கள் அனைவரும் இறைவன் ஒருவனே என்பதில் நம்பிக்கை கொண்டால் ஒழிய உங்களது தற்போதைய வாழ்க்கையைப் பாதுகாத்திடவோ அல்லது வரப்போகிற வாழ்க்கை பற்றி உங்களுக்கு நன்மாராயம் கூறிடவோ எனக்கு அதிகாரம் இல்லை.

நபிகளார் மேலும் சொன்னார்கள். "எதிரி ஒருவனைப் பார்த்ததும், மக்களிடம் ஓடிச் சென்று 'எச்சரிக்கை... எச்சரிக்கை' என்று சப்தமிட்டுச் சொல்பவரைப் போல் எனது நிலை இருக்கிறது." இது கேட்ட, நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் சிறிய தகப்பனார் அபூலஹப் "இதற்காகத்தான் நீ எங்களை அழைத்தாயா? நீ அழிந்து போவாயாக" என்று உடனே பதிலிறுத்தார். அங்கு வந்திருந்த குலத்தலைவர்களை அழைத்துக் கொண்டு உடனே திரும்பிச் சென்றார். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் செய்தியை நிராகரித்த அபூலஹப் மிக

வன்மையான முறையில் அதை வெளிப்படுத்தினார். ஆரம்பத்தில், அபூலஹப்பும், அவரது மனைவியும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் பொன்னும், பொருளும் தருகிறோம், இந்த மக்காவின் மன்னராக உங்களை நியமிக்கிறோம். புதிய மார்க்கத்தை விட்டு விடுங்கள் என்று ஆசைவார்த்தை கூறினார்கள். இதனை ஏற்க மறுத்த நபிகளாரை பேய் பிடித்தவர், பைத்தியம் பிடித்தவர் என்று தூற்ற ஆரம்பித்தனர்.பின்னர் நபிகள் நாயகம்(ஸல்) இஸ்லாத்தின் கொள்கைகளைப் பற்றி விளக்கிக் கூறிட இரண்டு விருந்து நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். ஒரு நிகழ்ச்சி நடைபெறவில்லை அபூலஹப் தலையிட்டு நபிகளாரைப் பேச விடாமல் செய்துவிட்டார். இரண்டாவது நிகழ்ச்சியின் போது, நபிகளார் தனது தூதுச் செய்தியை மக்களிடம் எடுத்துக் கூற முடிந்தது. அதைச் செவிமடுத்த சிலர் இத்தூதுச் செய்தியை ரகசியமாக ஏற்றுக் கொண்டனர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தொடர்ந்து தனது குடும்பத்தினருடன் இது பற்றிப் பேசி வந்தார்கள். மிகத் தெளிவான நேரடியான, உறுதியான இறை வசனங்கள் பின்னர் அவர்கட்கு அருளப்பட்டன.

> எனவே (நபியே!) உமக்குக் கட்டளையிடப்படுகின்ற வற்றை வெளிப்படையாகக் கூறிவிடும். மேலும் இணை வைப்போரைச் சிறிதும் பொருட்படுத்தாதீர். (குர்ஆன்*15:94*)

நபிகளாரின் தூதுத்துவப் பயணம் ஒரு புதிய நிலையை இப்போது எட்டியிருந்தது. இச் செய்தி இப்போது எல்லோருக்கும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. ஓரிறைக் கொள்கையின் மீது நம்பிக்கை கொள்வது (தௌஹீது) அல்லது குறைஷிகளின் பல தெய்வ வழிபாடு என இந்த இரண்டிற்குமிடையே உள்ள வேறுபாடு தெளிவாக உணர்த்தப்பட்டது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைச் சுற்றி நம்பிக்கைக்குரிய ஆண்களும், பெண்களும் கொண்ட ஒரு குழு சேர்ந்து விட்டது. சிலர் அவர்களது உறவினர்கள். ஆனால் பலர், பல்வேறு இன சமூகக் குழுக்களைச்

சார்ந்தவர்கள். நபிகளாரிடம் கடந்த மூன்று ஆண்டுகளாக சமயக் கல்வியும் ஆன்மீக கல்வியும் பெற்றவர்கள். உறுதியுடனும், பொறுமையுடனும் இருந்த இந்த முஸ்லிம்கள் மெக்காவில் நிராகரிப்பையும், தொல்லைகளையும் சந்திக்க நேர்ந்தது.

## வெகுமதிகளும் கோரிக்கைகளும்

இஸ்லாம் இப்போது, "ஒரு சமயம்" என்ற நிலையை அடைந்து விட்டது. அர்கம்(ரலி) இல்லத்தில் பயிற்சி பெற்ற முஸ்லிம்கள் தங்களது உறவினர்களிடமும் தங்களைச் சுற்றி இருப்பவர்களிடமும் இது பற்றிப் பேசிடத் தயங்கவில்லை. புதிய சமயம் ஏற்படுத்தவிருக்கும் ஆபத்துகள் பற்றி குறைஷி குலத் தலைவர்கள் உணரத் தலைப்பட்டனர் இது தங்களது கடவுள்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் எதிராக நேரடியாகத் தொடுக்கப்பட்ட கிளர்ச்சி என்றும் இதனால் தங்களுடைய அதிகாரத்திற்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதாகவும் அத்தலைவர்கள் கருதினர்.

இஸ்லாம் பரவினால், இனக்குழு மக்கள் கஅபாவிற்கு வந்து அங்குள்ள சிலைகளை வழிபடமாட்டார்கள். கஅபாவின் பாதுகாவலர்கள் என்ற வகையில் இதுவரை தங்களுக்குக் கிடைத்து வந்த மரியாதை போய் விடும் எனவும் அவர்கள் எண்ணினர். இனக்குழு மக்கள் ஆண்டு முழுவதும் கஅபாவிலுள்ள சிலைகளுக்கு வழங்கி வரும் காணிக்கைகள் குறைந்து அதன் காரணமாக மக்கா நகரின் வளமே பாதிக்கப்படும் என்றும் கருதினர்.

புனிதப் பயணம் வரும் இந்த மக்களால் அவர்களுக்கு (மக்கா வாசிகளுக்கு) நல்ல வருமானம் கிடைத்து வந்தது. இந்த நகரத்து மக்களுக்கு வருமானம் கிடைக்க வேறு பிற வழிகள் ஏதும் அப்போது இல்லை.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பாதுகாத்து வந்த

அவர்களின் பெரிய தகப்பனார் அபூதாலிப்பை ஒரு குழுவாகச் சென்று சந்திக்க குறைஷித் தலைவர்கள் முதலில் முடிவு செய்தனர். இஸ்லாமியப் பிரச்சாரத்தை விட்டு விடவேண்டும் என்று நபிகளாரிடம் கூறுமாறு அவர்கள் அபூதாலிப்பிடம் சொன்னார்கள். நபிகளாரின் பிரச்சாரம் காரணமாக தங்களது கடவுள்களும், பழக்கவழக்கங்களும் பெரும் ஆபத்தைச் சந்தித்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். முதலில் அவர்களது கோரிக்கை பற்றி அபூதாலிப் நடவடிக்கை எதுவும் மேற்கொள்வில்லை. எனவே அவர்கள் மீண்டும் அபூதாலிபிடம் இது பற்றி வலியுறுத்தினர். எனவே அபூதாலிப் நபிகளாரை அழைத்து இது பற்றி எடுத்துக் கூறி தனக்கு ஒரு சங்கடமான நிலைமையை உருவாக்கிட வேண்டாமென்று கூறினார்.

இதற்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் உறுதியான முறையில் கீழ்க்கண்டவாறு பதிலிறுத்தார்கள் "'என் அருமை பெரிய தகப்பனார் அவர்களே!' எனது வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் அளித்தாலும் நான் என்னுடைய பணியிலிருந்து விலகிட மாட்டேன் என நான் அல்லாஹ்விடம் சத்தியப் பிரமாணம் செய்துள்ளேன். இதில் நான் வெற்றியடைந்தாலும் சரி அல்லது அழிந்தாலும் சரி." நபிகளாரின் இந்த உறுதியான நிலைப்பாட்டின் காரணமாக அபூதாலிப் இதுபற்றி அவர்களிடம் மேலும் வலியுறுத்தவில்லை. மாறாக, தன்னுடைய தொடர்ந்த ஆதரவை நபிகளாருக்குத் தெரிவித்தார். ஒரு புதிய குறைஷிக் குழுவினர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் வந்து பணம், பொருள், பதவி என அனைத்தும் தருவதாக கூறினார். ஆனால் அவற்றை மறுத்த நபிகளார் 'என்ன விலை கொடுத்தாயினும் சரி இறைவன் ஒருவனே' என்ற ஏகத்துவக் கொள்கையைப் பிரச்சாரம் செய்வதில் தான் எனது நாட்டம் இருக்கிறது என்று கூறி விட்டார்கள்.

"என்னிடம் சொத்துக்கள் எதுவுமில்லை உங்களிடம் நான் கௌரவத்தையோ அல்லது அதிகாரத்தையோ கேட்கவில்லை. என்னை ஒரு தூதராக உங்களிடம் இறைவன் அனுப்பியுள்ளான்.

எனக்கு ஒரு வேதத்தை அருளியுள்ளான். அது ஒரு நற்செய்தியைக் கூறுகிறது. உங்களை எச்சரிக்கவும் செய்கிறது. என்னுடைய இறைவனின் செய்தியை உங்களிடம் தெரிவித்து விட்டேன். உங்களுக்கு நல்ல ஆலோசனைகளையும் வழங்கி விட்டேன். இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால் இந்த உலகத்திலும், மறுமையிலும் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். இதனை நீங்கள் நிராகரிப்பீர்களென்றால் நான் பொறுமையோடு காத்திருப்பேன் நமக்கிடையே இறைவன் தீர்ப்பளிப்பான்" என்று தெரிவித்தார்கள்.

சமரசம் ஏற்படுவதற்கு ஒரு எல்லையை நபிகளார் ஏற்படுத்தி விட்டார்கள். அவர்கள் இறைவனின் செய்தியை மக்களிடம் சொல்வதை நிறுத்தவில்லை இறைவனின் மீது நம்பிக்கை வைத்து விளைவுகளைச் சந்திக்க தயாராகி விட்டார்கள். ஆனால் நடைமுறையில் பகைமை ஏற்பட்டு விட்டது. நபிகளாரை பைத்தியக்காரர், பித்துப்பிடித்தவர், மந்திரவாதி, சூனியக்காரர் என்று அவமதித்தார்கள்.

## குறைஷியர்கள் எடுத்த நடவடிக்கை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அவமரியாதைக்கும் கேலிக்கும் உள்ளானார்கள். அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுமாறும், ஆதாரங்களைக் கொடுத்திடுமாறும் மக்காவாசிகள் கேட்டபோது நபிகளார் 'நான் ஒரு நபி' என்று குர்ஆனிலிருந்து மேற்கோள் காட்டி பதிலளித்தார்கள். நெருக்கடி அதிகரித்தது. வன்முறை எதிர்ப்புகள் நபிகளார் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. குலப்பாதுகாப்பு இல்லாத ஏழை முஸ்லிம்கள் மீது குறைஷித் தலைவர்கள் தாக்குதல்கள் நடத்தினர். அடிமையாக இருந்த பிலால்(ரலி) அவர்களை அவரது எஜமான் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று சுட்டெரிக்கும் பாலைவன வெயிலில் கிடத்தினான். அவரின் மார்பின் மீது ஒரு பாறாங்கல்லை வைத்து இஸ்லாத்தை விட்டுவிடு என்று கூறினான். ஆனால் பிலால் பணியவில்லை. இறைவன் ஒருவன், இறைவன் ஒருவன் என்று கூறிக்கொண்டே இருந்தார். பின்னர் அபூபக்கர்(ரலி) அவர்கள்

பிலாலை விலைகொடுத்து வாங்கி அவரை விடுதலை செய்தார்கள். (இது போல் பல அடிமைகளை விடுதலை செய்துள்ளார்கள்) பின்னர் அவரது நேர்மை, நம்பிக்கை, குரலின் இனிமை ஆகியவற்றை அங்கீகரிக்கும் வண்ணம் மதீனாவின் 'முஅத்தின்' (தொழுகைக்கு அழைப்பவர்) ஆக அவர் நியமிக்கப்பட்டார்.

இஸ்லாத்தின் எதிரியான 'அபூலஹப்' நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மீது கற்களை வீசி எறிந்து துன்புறுத்தினான். தனது மகன்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டிருந்த நபிகளாரின் புதல்விகளான ருக்கையா, உம்மு குல்தூம் ஆகியோரை விவாகரத்துச் செய்யும்படி செய்ததோடு நபிகளாரின் இரண்டாவது மகன் இறந்த போது 'வாரிசு இல்லாமல் போய் விட்டார்' என்று மகிழ்ச்சி தெரிவித்தான். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கணுக் கால்களிலிருந்து இரத்தம் வரும்வரை அபூலஹப் நபிகளார் மீது கற்களை வீசி எறிந்து கொண்டே இருப்பான் என அப்துல்லாஹ் என்பாரின் மகனான தாரிக் குறிப்பிடுகிறார்.

அபூலஹபின் மனைவியான உம்மு ஜமீலும் இது போன்ற செயல்களில் ஈடுபட்டார். நபிகளாரிடம் விரோதம் காட்டுவதில் தனது கணவருக்குச் சற்றும் தான் சளைத்தவர் இல்லை என்பது போல் அவரது நடவடிக்கைகளும் இருந்தன. நபிகளாருக்கு காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அவர் வழக்கமாக செல்லும் பாதையில் முட்களைப் பரப்பி வைக்கும் பாதகச் செயலிலும் அவர் ஈடுபட்டார். அவதூறு கூறித்திட்டும் நாகரீகமற்ற மோசமான நடத்தையுடைய பெண் அவள். பகைமைத் தீயை ஊதிப் பெருக்குவதில் அவள் வல்லவள். குர்ஆன் அவளை 'எரியும் விறகு' என்று கூறுகிறது. ஒரு நாள் கஅபாவில் நபிகள் நாயம்(ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்த போது அங்கு தனது நண்பர்களுடன் இஸ்லாத்தின் எதிரியான அபூ ஜஹ்ல் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்போது அவன் தனது நண்பர்களிடம் "உங்களில் யார் ஒட்டகத்தின் குடலைக் கொண்டு

வந்து முஹம்மது தொழுகையில் ஷஜ்தா செய்யும் போது (சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கும் போது) அவர் முதுகின் மேல் போடப் போகிறீர்கள்?" என்று கேட்டான். 'உக்பா' என்ற மோசமான ஒருவன் எழுந்து நான் அதனைச் செய்கிறேன் என்றான். அதன்படியே அவன் ஒட்டகத்தின் குடலைக் கொண்டு வந்து நபிகளாரின் இரண்டு தோள்பட்டைகளுக்கு இடையில் போட்டான். இதைப் பார்த்து அவர்கள் ஒருவன் மீது ஒருவன் விழுந்து கொண்டு சிரித்தார்கள். ஆனால் ஜஜ்தாவில் இருந்த நபிகளார் தனது தலையை நிமிர்த்தவில்லை அவர்களுடைய மகள் பாத்திமா(ரலி) அவர்கள் வந்தே ஒட்டகக்குடலை அகற்றினார்கள்.

ஒருமுறை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கஅபாவில் தொழுது கொண்டிருந்த போது உக்பா என்பான் அங்கு வந்து தான் கொண்டு வந்த ஒரு துணியை அவர்களின் கழுத்தைச் சுற்றிப் போட்டு அதனை பலமாக இறுக்கினான். இதனைக் கண்ணுற்ற ஒருவர் அபூபக்கரிடம் ஓடிவந்து 'உங்களது நபியைப்பாருங்கள்' என்றார். அபூபக்கர் உடனே ஓடி வந்து உக்பாவின் தோளைப் பிடித்து அவனைக் கீழே தள்ளி "அல்லாஹ் எனது எஜமான்' என்று சொன்னதற்காக ஒரு நேர்மையான மனிதரை கொல்லப் போகிறீர்களா?" என அவனிடம் கேட்டார்கள். உக்பா ஒரு தடவை நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் வந்து 'நான் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள எதனையும் நம்பவில்லை' என உரத்த குரலில் சொன்னான். பின்னர் அவன் கோபத்துடன் நபிகளாரின் மேல் கை வைத்து அவர்களது சட்டையைக் கிழித்து எறிந்தான். ஆனால் அவனது கைகள் நபிகளாரின் முகத்தில் படவில்லை.

இஸ்லாத்தின் எதிரியான அபூஜஹல் ஒருமுறை தனது சகாக்களிடம் கூறியதாவது. "ஓ! குறைஷியர் குல மக்களே! நம்முடைய சமயத்தையும், நம்முடைய முன்னோர்களையும், நம்முடைய வாழ்க்கை முறைகளையும் குற்றம் கூறி வருகிறார் முஹம்மது. தொழுது கொண்டிருக்கும் போது (சஜ்தாவின் போது) அவர் தலையின் மீது ஒரு பெரிய பாறாங்கல்லைப்

போட்டு அவரை ஒரேயடியாக ஒழித்து விட வேண்டும். அவருடைய ஆட்கள் என்ன செய்தாலும் அதைப்பற்றி நான் அச்சம் கொள்ளப்போவதில்லை." அங்கு கூடியிருந்தவர்கள் அவனது திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி அதனைச் செயல்படுத்த முடிவு செய்தனர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்த போது ஏற்கனவே திட்டமிட்டபடி அபூஜஹல் ஒரு பெரிய கல்லை தூக்கிக் கொண்டு போய் அவர்கள் மீது போட எத்தனித்தான். நபிகளாரை நெருங்கிய உடனேயே அவனது முகம் வெளிறிப் போய், அவனது கரங்கள் நடுங்கி கல் கீழே விழுந்தது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் 'என்ன நேர்ந்தது' என அபூ ஜஹலிடம் வினவினர். அதற்கு அவன் 'நான் முகம்மதை நெருங்கிய போது வழக்கத்திற்கு மாறான தோற்றமுடைய ஒரு ஒட்டகம் இடையில் வந்து தன்னுடைய கோரப் பற்களைக் காட்டி என்னை விழுங்க முயற்சித்தது' என்றான். இது சம்பந்தமாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாக 'இப்னு இஸ்ஹாக்' என்பார் கூறியதாவது:– 'அது ஜிப்ரீல் தான். அபூ ஜஹல் நபிகளாரை நெருங்கியிருந்தால், அவன் கொல்லப்பட்டிருப்பான்.'

## மீடியாவின் தாக்கமும் கருத்துச் சுதந்திரத்தின் பயனும், தவறான முறைகளும்

நபிகளார் வாழ்ந்த காலகட்டத்தில் தொழில் நுட்பமும், செய்தித் தொடர்பும் தற்போது இருப்பது போல் ஒரு முன்னேற்றமடைந்த நிலையில் இருக்கவில்லை. எழுத்து ஊடகங்களோ, மின்னணு ஊடகங்களோ அப்போது இல்லை. ஆனால் இறைநிந்தனை செய்வதற்கும், இஸ்லாத்தையும் பெருமானாரையும் பழிப்பதற்கும் எந்தவிதமான தடையும் அப்போது இல்லை. இஸ்லாத்தையும், பெருமானாரையும் பழித்து கவிதை புனையும் பல கவிஞர்கள் மக்காவில் இருக்கவே செய்தனர். இந்தக்கவிதைகள் பெருமானாருக்கு எதிராக அவதூறு பரப்பும் வண்ணம் புனையப்பட்டிருந்தன. இதுபோன்று பெருமானாரைப் பழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கவிஞர்களில் ஜுஹைரின் மகன் காஅப், தலாதில் மகன் ஹாரிஸா, அபூ வஹாப் மகன் ஹுபைரா, நாபித் மகன் ஹுவேரித், ஹன்ஸல் மகன் அப்துல்லாஹ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தங்களது கவி இயற்றும் திறனை ஆன்மீகத்திற்குப் பயன்படுத்தாமல், பெருமானாரின் புகழைக் கெடுக்கும் அவதூறுப் பாடல்கள் இயற்றப் பயன்படுத்தினர். குறைஷியர் குலத்தலைவர்கள் சில நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து அதில் இந்தக் கவிஞர்களை அழைத்து இஸ்லாத்தையும் நபிகள்

நாயகம்(ஸல்) அவர்களையும் இகழ்ந்து பாடச்செய்தனர். அத்தோடு நிற்கவில்லை. அப்துல்லாஹ்வின் அடிமைப் பெண் கர்த்தானா, இக்ரிமாவின் அடிமைப்பெண் சாரா ஆகியோர் இந்தக் கவிஞர்கள் புனைந்த பாடல்களுக்கு ஏற்ப நடனம் ஆடினர். குறைஷியர்கள் மதுபானம் அருந்தும் நிகழ்ச்சிகளில் இது வழக்கமாக நடந்து வந்தது. மோசமான அறுவெறுக்கத்தக்க இந்தப் பாடல்கள் பெருமானாரையும் அவரது தோழர்களையும் மிகவும் புண்படுத்தின. அவர்கள் மனத்தளவில் பெரும் துன்பத்தை உணர்ந்தனர்.

ஒவ்வொரு துன்பத்திற்குப் பின்னரும் ஒரு நிவாரணம் இருக்கிறது. என்ற இறைவசனத்திற்கு ஏற்ப, பெருமானாரை இழிவுபடுத்திப் பாடல்கள் புனைந்த கவிஞர்கள் 'க அப்'பும், ஹஸ்ஸானும்(தாபித் மகன்) பின்னர் இஸ்லாத்தில் இணைந்தனர். கவிஞர் ஹஸ்ஸான் இஸ்லாத்தின் மீது நம்பிக்கை கொண்டது பெருமானாருக்குப் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இஸ்லாமிய எதிரிகளின் அவதூறுப் பிரச்சாரங்களுக்குப் பதில் அளிக்கும் வண்ணம் பாடல்கள் புனையுமாறு கவிஞர் ஹஸ்ஸானை பெருமானார் ஊக்கப்படுத்தினார்கள். தொழுகையின் போது தான் நின்று உரை நிகழ்த்துகின்ற 'மிம்பர்' படியையும் உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஹஸ்ஸானுக்கு அனுமதி வழங்கி னார்கள். அவரும் இஸ்லாத்தின் மேன்மை பற்றி தனது பாடல்களில் சிறப்பித்துக் கூறினார். இது பற்றிக் குறிப்பிட்ட நபிகளார். 'இந்தக் கவிஞரின் வார்த்தைகள் ஈட்டியை விடவும் எதிரியைத் தாக்கவல்ல வலிமையான ஆயுதமாகும்' என்றார்கள்.

இன்னொரு முறை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் 'ஒரு முஸ்லிம் தன்னுடைய வாயாலும், வார்த்தைகளாலும் ஜிகாத் (புனிதப்போர்) செய்கிறான்' என்று நவின்றார்கள். இந்த வகையில் இஸ்லாத்திற்கு எதிராகக் கவிதை புனைந்த கவிஞர் களுக்கும் அவர்களது பாடல்களுக்கும் தக்க பதில் அளிக்கப் பட்டது. தற்போது காட்சி வித்தியாசமாக இருக்கிறது. உலகின்

பல பகுதிகளிலுமுள்ள கெடுமதி படைத்தோர் அவர்கள் அறிவு ஜீவிகளாயினும் சரி எழுத்தாளர்களாயிலும் சரி, ஓவியர் களாயினும் சரி, கருத்துப்படம் போடுபவர்களாயினும் சரி, இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களையும் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் இழிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். சில நடுநிலை தவறிய ஊடகங்கள் இஸ்லாத்தைப் பற்றி உள்நோக்கம் கொண்ட நேர்மையற்ற கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. அது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

இன்றைய நவீன உலகில் ஒரே ஒரு விஷயத்தில் மட்டுமே முழு கருத்து சுதந்திரம் இருக்கிறது. அது தான் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் வன்முறையாளர்களாகவும், பண்பற்றவர் களாகவும், கொடுமையாளர்களாகவும், அறியாமையினராகவும், தீவிரவாதிகளாகவும், முட்டாள்களாகவும் சித்தரிக்கும் கருத்துச் சுதந்திரமாகும். முஸ்லிம் களுக்கு குர்ஆன் வழங்கும் பொதுவான ஆலோசனை என்ன வென்றால், கதைகளிலும், சினிமாக்களிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், கருத்துப்படங்களிலும் முஸ்லிம்களையும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களையும் அவதூறு செய்யும் வண்ணம் வெளியிடப்படக்கூடிய கருத்துக்களை பொருட்படுத்த வேண்டாம் என்பதேயாகும். அவர்கள் மீது (முஸ்லிம்கள் மீது) சுமத்தப்படும் நியாயமற்ற குற்றச்சாட்டுகளை பொறுமையுடனும் உணர்ச்சிவயப்படாமலும் எதிர் கொள்ளுமாறு குர்ஆன் அறிவுரை கூறுகிறது.

> 'மேலும்(நபியே) உலகில் வாழும் மக்களில் பெரும்பான்மை(யினரின் கூற்று)க்கு நீர் கீழ்ப்படி வீராயின் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் வழியிலிருந்து பிறழச் செய்து விடுவார்கள். அவர்களோ வெறும் யூகங்களையே பின்பற்று கிறார்கள். கற்பனைகளிலேயே மூழ்கிக்கிடக் கின்றார்கள். (குர்ஆன் 6:116)

## மந்திரக்காரர்/சூனியக்காரர்

குறைஷியர் குலத் தலைவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைக் கேலி செய்ததோடு, அவ்வாறு குறை கூறவும், அவமரியாதை செய்யவும் மற்றவர்களைத் தூண்டினர். எந்த வல்லமையும் இல்லாத ஒருவரை இறைவன் எப்படி தனது தூதராகத் தேர்வு செய்துள்ளான் என்றும் கேள்வி எழுப்பினர். நபிகளாரின் இந்த நிலைப்பாட்டையும், அவர்கள் எடுத்தியம்பிய செய்தியையும் கேலி செய்தனர். முஹம்மது(ஸல்) அவர்கள் உண்மையில் ஒரு சூனியக்காரர் என்றும், மந்திரவாதி என்றும், குடும்பங்களைச் சீர் குலைப்பவர் என்றும், பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்தும், கணவன்மார்களை மனைவியரிட மிருந்தும் பிரித்துக் குழப்பம் விளைவிப்பவர் என்றும் குறைஷியர்கள் பிரச்சாரம் செய்தனர்.

## இறைவன் தான் விரும்பியவருக்கு வழிகாட்டுகிறான்

மக்கா நகரில் வருடாந்திரச் சந்தை நடைபெறும் நாள் நெருங்கிய போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அங்கு வரும் மக்கள் மத்தியில் இஸ்லாமியப் பிரச்சாரத்தை மேற்கொள்ளக் கூடும் எனக் கருதிய குறைஷிய குலத்தலைவர்கள் சந்தையின் வாயில்கள் தோறும் தங்களது ஆட்களை நிறுத்தினர். இஸ்லாத்தைப்பற்றியும், நபிகளாரைப்பற்றியும் அங்கு வந்தவர்களிடம், அவர்கள் எச்சரிக்கை செய்தனர்.

நபிகளாரைத் தனிமைப்படுத்த குறைஷியர் குலத் தலைவர்கள் எடுத்த முயற்சிகள் ஓரளவு வெற்றி பெற்றன. எனினும், வழிப்பறித்திருடராக இருந்த 'பனு ஹிபார்' குலத்தைச் சார்ந்த 'அபூதர்ரு' போன்ற சிலர் அவர்களின் பிரச்சாரத்திற்குச் செவிசாய்க்கவில்லை. 'ஓரிறைவன்' என்ற இஸ்லாத்தின்

செய்தியைக் கேள்வியுற்ற 'அபூதர்ரு' குறைஷியர்களின் எச்சரிக் கையையும் மீறி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைச் சந்திக்கச் சென்றார் அப்போது நபிகளார் கஅபாவின் நிழலில் உட்கார்ந்திருந்தார்கள். நபிகளாரைப் பெயர் சொல்லி அழைத்த அவர், இஸ்லாத்தைப் பற்றி அவர்களிடம் கேட்டறிந்து உடனே தன்னை நம்பிக்கையாளராக அறிவித்துக் கொண்டார். இது கண்டு வியப்படைந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "விரும்பியவர்கட்கு இறைவன் நேர்வழி காட்டுகிறான்.'" என்று நவின்றார்கள். பின்னர் இந்த அபூதர்ரு (அல் ஃகிஃபாரி) நபிகளாரின் நம்பிக்கைக்குரிய சகாபாவாக மாறினார். அவர் அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவராகவும் ஆடம்பரத்தையும், சோம்பேறித்தனத்தையும் வெறுப்பவராகவும் விளங்கினார்.

## இஸ்லாத்தின் முதல் தியாகிகள்

ஏமன் பகுதியைச் சார்ந்த அம்மார்(ரலி) என்ற இளைஞர் இஸ்லாத்தை ஏற்று, நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் அல் அர்கம்(ரலி) இல்லத்தில் பயிற்சி பெற்றார். அவரது தகப்பனார் யாஸிர்(ரலி) தாயார் சுமையா(ரலி) ஆகியோரும் அவருக்குப் பின்னர் இஸ்லாத்தில் இணைந்தனர். அபூஜஹல் என்பான் அவர்களைக் குறி வைத்துத் தாக்குதலில் ஈடுபட்டான். அவர்களைக் கட்டிவைத்து கொதிக்கும் மணலில் கிடத்தி அடித்தான்.

பல வாரங்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்தக் கொடுமைகளுக்குப் பின்னரும், அவர்கள் இஸ்லாத்தின் மீதான நம்பிக்கையை விட்டுவிட மறுத்தனர். அவனது கோழைத் தனமான நடவடிக்கைகளுக்காக, சுமையா(ரலி) அபூஜஹலை திட்டினார் இதனால் கோபமடைந்த அபூஜஹல் அவரைச் கத்தியால் குத்தி கொன்றான். பின்னர் யாசிரையும் அடித்துக் கொன்றான். இஸ்லாத்தின் முதல் தியாக சீலர்களாக

யாசிர்(ரலி)யும், சுமையாவும் திகழ்கின்றனர். அவர்கள் ஏக இறைவனின் மீது நம்பிக்கை கொண்டதற்காகவும், குர்ஆனை உண்மையென நம்பியதற்காகவும் நிந்திக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். நிலைமை முஸ்லிம்களுக்குப் பாதகமாக இருந்தது. குறிப்பாக சமூக அந்தஸ்திலும், இனக்குழு அந்தஸ்திலும் குறைவானவர்கள் பெரும் தாக்குதல்களுக்கு உள்ளாயினர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை, அவர்களது பெரிய தகப்பனார் அபூதாலிப்பும், பெரியம்மா பாத்திமா(ரலி)வும் பாதுகாத்தார்கள். ஆனால் இந்தப் பாதுகாப்பு முதலில் இஸ்லாத்தில் இணைந்த மற்றவர்கட்குக் கிடைக்கவில்லை. அவமரியாதையையும், நிராகரிப்பையும், அநீதியையுமே அவர்கள் சந்தித்தனர்.

# 5

# சமூகத்தில் நிகழ்ந்த புரட்சி

குறைஷிகளின் எதிர்ப்பு ஒரு தனி மனிதருக்கோ அல்லது அவர் சொன்ன செய்திகளுக்காகவோ அல்ல. உண்மையில் அனைத்து இறை தூதர்களும் இது போன்ற எதிர்ப்பை அதுவும் தங்களது சொந்த சமுதாய மக்களிடமிருந்தே சந்தித்துள்ளனர். தாம் சார்ந்துள்ள சமூக அமைப்பில் பெரும் புரட்சியை உருவாக்கும் கருத்துக்களை அவர்கள் கூறியதே இதற்குக் காரணமாகும். பல்வேறு கால கட்டங்களில் இறைச் செய்தியை தம்முடைய மக்களிடம் எடுத்துக் கூறிய நபிமார்கள் சந்தித்த பிரச்னைகள் பற்றி திருக்குர்ஆன் விரிவாக எடுத்தியம்புகிறது. தங்களது சமூக அமைப்பில் மாற்றம் ஏற்படுமென்றும், தங்களது அதிகாரங்கள் குறைந்து விடுமென்றும் அஞ்சியே பாரோ மக்கள் நபி மூசா (அலைஹி) நபி ஹாரூன்(அலை) ஆகியோரின் போதனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

> ...அதற்கு அவர்கள் கூறினார்கள். எங்கள் முன்னோர்கள் எந்த வழியில் வாழ்ந்திடக் கண்டோமோ அந்த வழியிலிருந்து எங்களைத் திருப்பி விட வேண்டாம். மேலும் இப்புவியில் உங்கள் மேலாதிக்கம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதற்காகவா நீர் எங்களிடம் வந்திருக்கிறீர் ஆகவே உங்களிருவரையும் நாங்கள் நம்பவே மாட்டோம்.' (குர்ஆன் 10:78 )

சிலைகளை நிராகரிக்க வேண்டுமென்றும், ஏக இறைவன் மற்றும் மறுமை வாழ்வின் மீது நம்பிக்கை கொண்டு நீதியுடனும், நேர்மையுடனும் வாழ வேண்டுமென்றும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தம் மக்களைக் கேட்டுக் கொண்டார்கள். சமுதாயத்திலும், மக்களின் மனப்பான்மையிலும் பெரும் புரட்சியை ஏற்படுத்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முயற்சி மேற்கொண்டார்கள். அவர்கள் விடுத்த செய்தி இறப்பிற்குப் பின்னர் உள்ள வாழ்வைப் பற்றியதாக இருந்ததால், உலக வாழ்க்கையின் அடித்தளத்தைத் தகர்ப்பதாக அது அமைந்திருந்தது. ஏக இறைவனை அங்கீகரிப்பதும், அவனது அழிவில்லாத் தன்மை பற்றிப் புரிந்து கொள்வதுமே புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்கள் தங்களுடைய ஆன்மீக, அறிவார்ந்த சமூக விடுதலையின் காரணிகள் என உணர்ந்தனர். ஓரிறைவன் மீது நம்பிக்கை கொள்வது, தங்களது சமூக நிலையில் முற்றிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என குறைஷித் தலைவர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

> கூறுவீராக! அவன் அல்லாஹ் ஏகன். அல்லாஹ் எவரிடத்தும் எந்தத் தேவையுமில்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுடையவர்களே! அவன் யாருடைய சந்ததியும் இல்லை. அவனுக்கு யாரும் சந்ததி இல்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமே இலர். (குர் ஆன்112)

> கூறி விடுவீராக! ஓ! நிராகரிப்பாளர்களே! நீங்கள் எவற்றை வணங்குகிறீர்களோ அவற்றை நான் வணங்குவது இல்லை. நான் யாரை வணங்கு கின்றேனோ அவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர். மேலும் நீங்கள் வணங்கியவற்றை நான் வணங்குபவன் அல்லன். நான் யாரை வணங்கு கின்றேனோ அவனை நீங்கள் வணங்குகின்றவர்கள் அல்லர். உங்களுக்கு உங்களுடைய மார்க்கம். எனக்கு என்னுடைய மார்க்கம். (குர்ஆன்109)

குறைஷி குலத் தலைவர்கள் தங்களது முன்னோர்கள் கடைப்பிடித்த பல தெய்வக் கோட்பாட்டிற்கும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் போதித்துவரும் ஓரிறைக் கோட்பாட் டிற்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறிய போது அருளப்பட்ட இறை வசனங்களே இவை. இந்த வசனங்கள் உணர்த்தும் செய்தி தெளிவானது; தீர்க்கமானது; ஓரிறைக் கொள்கையில் மாற்றம் எதையும் கொண்டு வர முடியாது என்று அது உறுதிபடத் தெரிவிக்கிறது.

## மூன்று கேள்விகள்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பிரச்சாரத்தை தடுப்பது எப்படி என்று குறைஷித் தலைவர்கட்குத் தெரியவில்லை. மதீனாவிற்கு ஒரு குழுவினரை அனுப்பி, அங்குள்ள யூதப் பிரமுகர்களிடம் நபிகளாரின் இந்தப் புதிய மார்க்கம் பற்றிய உண்மைகளை விசாரித்து அறிந்து வர முடிவு செய்தனர். மதீனாவில் இருந்த யூதர்கள் ஓரிறைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் யூதர்களின் தூதரான மூஸா நபியைப் பற்றி அடிக்கடி தங்களுடைய பிரச்சாரங்களில் கூறி வந்ததால், இது விஷயத்தில் கருத்துச் சொல்ல யூதர்கள் தகுதியானவர்கள் என குறைஷித் தலைவர்கள் எண்ணினர்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பற்றி விசாரித்து அறிந்து கொண்ட யூதப் பிரமுகர்கள், மூன்று கேள்விகளை அவர்களிடம் கேட்குமாறு குறைஷித் தலைவர்களிடம் கூறினர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொல்வது உண்மையிலேயே இறைவனால் அருளப்பட்ட செய்திகள்தானா? என்பதையும், அப்படி இல்லை என்றால் அவர்கள் பொய்யுரைக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ள இக் கேள்விகள் உதவும் என அவர்கள் தெரிவித்தனர்.

முதலாவது கேள்வி தங்களது கூட்டத்திலிருந்து விலகிச் சென்று வாழும் ஒரு இளைஞர்களின் குழு பற்றியது. இரண்டாவது கேள்வி கிழக்கு விளிம்பிற்கும், மேற்கு விளிம்பிற்கும் சென்றடைந்த ஒரு பெரிய பயணி பற்றிய செய்தி. மூன்றாவது கேள்வி ஆத்மாவை நேரடியாக வரையறுத்துச் சொல்வது பற்றியது. இவற்றிற்கு அவர் பதிலளித்தால் அவரை 'நபி' என்று நம்பி அவர் பக்கம் செல்லுங்கள் என்றும் அவர்கள் குறைஷியர்களிடம் தெரிவித்தனர். நபிகளாரை எப்படியும் சிக்க வைத்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் குறைஷித் தலைவர்கள் மக்காவுக்குத் திரும்பினர். நபிகளாரைச் சந்தித்து இந்த மூன்று கேள்விகளையும் கேட்டனர்.

நாளை உங்களது கேள்விகளுக்குப் பதில் சொல்வேன் என நபிகளார் அவர்களிடம் தெரிவித்தார்கள். ஆனால் மறு நாள் வானவர் ஜீப்ரீல்(அலை) வரவில்லை. அதற்கு மறு நாளும் வரவில்லை. பின்னர் வந்த பதினான்கு நாட்களிலும் வரவில்லை. இதனால் யூத குருமார்கள் கேட்ட கேள்விக்கு நபிகளாரால் பதில் அளிக்க இயலவில்லை. எனவே அவர்களின் போலித்தன்மையை நிரூபித்து விட்டோம் என குறைஷித் தலைவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். நாட்கள் சென்றன நபிகளார் வருத்தமடைந்தார்கள். தாங்கள் கைவிடப்பட்டதாக உணர்ந்தார்கள். எனினும் இறைவன் மீது எந்த விதமான சந்தேகமும் கொள்ளாது தனது பக்கம் ஏதாவது குறையிருக்குமோ? என்று யோசித்தார்கள்.

## இன்ஷா அல்லாஹ் (இறைவன் நாடினால்)

இரண்டு வாரங்களுக்குப் பிறகு இறைவசனங்கள் அவர்கட்கு அருளப்பட்டன.

மேலும் எந்தச் செயலைக் குறித்தும் 'நாளை நான் அதனைச் செய்து விடுவேன் என்று ஒரு போதும் கூறாதீர் (உம்மால் எதுவும் செய்திட முடியாது) அல்லாஹ் நாடினால் அன்றி ஆனால் மறந்து அவ்வாறு கூறி விடுவீராயின் உடனே தம் இறைவனை நினைவு கூர்ந்து இவ்விஷயத்தில் இதை விட நேர்மைக்கு நெருக்கமான வற்றின் பக்கம் என் இறைவன் எனக்கு வழிகாட்டக் கூடும் என நான் நினைக்கிறேன்' என்று கூறும் (குர்ஆன் *18:23, 24*)

இந்த இறை வசனங்கள் ஒரு புதிய அணுகு முறையையும், போதனையையும் உணர்த்தியது. இவை நபிகளாரின் தகுதியையும், அவர்களின் அறிவையும், அவர்களின் விதி தனது ரப்பான ஏக இறைவனையே சார்ந்துள்ளது என்பதையும், இதனை ஒரு போதும் மறந்திடலாகாது என்பதையும் நினைவுபடுத்தின. 'இன்ஷா அல்லாஹ்' என்பதின் பொருளை நாம் நன்றாக விளங்க வேண்டும். இறைவனே அனைத்தையும் செய்யும் ஆற்றல் பெற்றவன் என்பதையும், நம்முடைய வரைமுறைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பதையும், அவனுடைய உதவி இல்லாமல் நாம் எதனையும் செய்ய இயலாது என்பதையும் இது உணர்த்துகிறது. இது ஒரு தத்துவார்த்தமான செய்தி அல்ல. செயலற்ற தன்மையும் அல்ல. மனித சக்தியின் எல்லைகளை அறிந்து செயல்பட வேண்டும் என்பதையே இது உணர்த்துகிறது. இரண்டாவது முறையாக, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கு இறைவன் தெளிவைப் புகட்டினான். என்னதான் தடங்கல்களைச் சந்திக்க நேர்ந்தாலும் ஒருவனது வல்லமையும், ஆற்றலும், படைத்த இறைவனைச் சார்ந்தே உள்ளன என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் என்பதே இறைவன் நபிகளாருக்கு இவ்வசனங்கள் மூலம் உணர்த்திய பாடமாகும். இதன் பின்னர், இந்த மூன்று கேள்விகளுக்கான பதில்கள் அவர்களுக்குக்

கிடைத்தன. வியப்புறும் வகையில் இந்தத் தாமதம் நம்பிக்கை யாளர்களின் நிலையை வலுப்படுத்தியது. ஆரம்பத்தில் இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டதும், குர்ஆனைப் படைத்தவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இல்லை என்பதையும், எல்லாவற்றுக்கும் தனது ரப்பான இறைவனையே அவர்கள் சார்ந்திருக்கிறார்கள் என்பதையும் பின்னர் வந்த இறை வசனங்கள் நிரூபித்தன.

> ஆத்மா பற்றிய நேரடியான கேள்விக்குப் பதில் அளித்த இறைவன் 'அது முழுக்க முழுக்க எனது வல்லமைக்கு உட்பட்ட விஷயமே என்றும், உங்களுக்குச் சொல்லப்பட்டிருப்பது மிகக் குறைவானதே' என்றும் நபிகளாருக்குக் கூறுகிறான். (குர்ஆன் 17:85)

மற்ற இரண்டு வரலாறுகள் பற்றி குர்ஆனின் 18வது அத்தியாயத்தில் ('குகை') விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. இந்த வசனங்கள் அருளப்படுவதற்கு முன்னர் இந்த இரு வரலாறுகள் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்கு தெரியாது. அதே அத்தியாயத்தில் நபி மூஸா(அலை) அவர்கள் ஞாபக மறதியாலும், தவறுதலாகவும் நபி என்ற அந்தஸ்து காரண மாகவும் 'தனக்குத் தெரியும்' என்று சொன்ன போது, இறைவன் 'அல்கிழ்ர்' என்பவரை சந்திக்கச் செய்து அவர் மூலம் நபி மூஸா(அலை)வுக்கு இறைவனின் அளப்பரிய அறிவு பற்றியும், பொறுமை பற்றியும், பணிவுடன் இருப்பதன் மேன்மை பற்றியும் உணரச் செய்தான். இந்த அத்தியாயம் முழுவதிலும் முஸ்லிம் களின் பாதுகாப்பற்ற தன்மைகள் குறித்தும், அவர்களின் நிலை குறித்தும், அவர்களுக்கு இறைவனின் தேவை குறித்தும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. நபிகளாரின் இந்த அனுபவமும், போதனைகளும் அனைத்து மக்களுக்கும் உரியதாக அமைந்திருந்தது. இந்த 'குகை' அத்தியாயம் முழுவதையும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் ஓதி வர வேண்டுமென்றும், அதன் மூலம் மக்கள் தங்களின் நிலையை மறவாது இறைவனையும் மறவாதிருப்பார்கள் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# 6

# அபிசீனியாவில் தஞ்சம்

குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில் முஸ்லிம்களின் மீதான அவமரியாதையும், தாக்கு தல்களும் தொடர்ந்தன. மிகவும் பலவீனமான நிலையில் இருந்த முஸ்லிம்கள் மட்டுமல்ல, குல அந்தஸ்து பெற்றிருந்த அபூபக்கர்(ரலி) போன்றவர்களாலும் இதிலிருந்து தப்ப முடியவில்லை. அபூதாலிபால் பாதுகாப்புப் பெற்ற நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் கேலிக்கும் பரிகாசத்திற்கும் உள்ளானார்கள். மக்காவில் நிலைமை மோசமானதை உணர்ந்த நபிகளார் தமது தோழர்களிடம் 'நீங்கள் அபிசீனியாவிற்குச் சென்றால், அங்கு உங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். அங்கு ஆட்சிபுரியும் மன்னரின் நேர்மை காரணமாக உங்களுக்கு பாதிப்பு நேராது. சமய நேர்மை உள்ள நாடு அது. இப்போதுள்ள துன்பங்கள் நீங்கும் வரை நீங்கள் அந்த நாட்டில் தங்கி இருக்கலாம் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

அபிசீனியாவை அப்போது ஆண்டு வந்த 'நஜாஷி' என்ற மன்னரைப் பற்றித்தான் நபிகள் நாயகம்(ஸல்) இவ்வாறு குறிப்பிடுகிறார்கள். தன்னுடைய மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஒரு கிறிஸ்துவர் அவர். நபிகளாரின் ஆலோச னைப்படி முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் அந்த நாட்டிற்குச் செல்ல ஆரம்பித்தனர். அப்படிச் சென்றவர்களில் 82, அல்லது 83 ஆண்களும் 20 பெண்களும் ஆகமொத்தம் 100 பேர் வரை இருந்தனர். இச்சம்பவம் கி.பி.615ல் நடந்தது. (அதாவது குர்ஆன் அருளப்பட்ட ஐந்து ஆண்டுக்குப் பிறகு; நபிகளார் மக்களுக்கு

பொது அழைப்பு விடுத்த இரண்டு ஆண்டுக்குப் பிறகு) மோசமான நிலை காரணமாகவே, முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் பாதுகாப்புத்தேடி, தொலை தூர நாடான அபிசீனியாவிற்குச் செல்ல நேர்ந்தது. மக்காவை விட்டு சில முஸ்லிம்கள் சென்று விட்டதை அறிந்த குறைஷியர்கள் கவலை கொள்ள ஆரம்பித்தனர். இப்படிச் சென்று விட்ட முஸ்லிம்கள் அங்கேயே தங்கி விட்டால் அவர்கள் மக்காவின் மாண்பைச் சீர்குலைத்து விடுவார்கள் என்றும், ஒரு குழுவாகச் செயல்பட்டு ஓரிறைக் கொள்கையில் நம்பிக்கை கொண்ட அந்த நாட்டு மன்னருடன் இணைந்து தங்களுக்கு எதிராகச் செயல்படுவார்கள் என்றும் கருதிப் பயந்தனர். குறைஷித் தலைவர்கள், அமர் பின் ஆஸ் என்பவரையும், அப்துல்லாஹ் பின் ரபீஆ என்பவரையும் தங்களது தூதுவர்களாக 'நஜ்ஜாஷி' மன்னரிடம் அனுப்ப முடிவு செய்தனர். முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடாது, அவர்களை உடனே மக்காவிற்குத் திரும்ப அனுப்ப வேண்டும் என்று மன்னரிடம் வேண்டுகோள்விடுக்கவே இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். அபிசினீய அரசப் பிரமுகர்கள் விரும்பக்கூடிய பல்வேறு அன்பளிப்புகளுடன் இந்தத் தூதுவர்கள் மன்னரது அரண்மனைக்குச் சென்றனர். ஒவ்வொரு அரசப் பிரமுகர்களையும் சந்தித்து, அவர்களுக்கு தாங்கள் கொண்டு வந்திருந்த அன்பளிப்புகளை வழங்கி தங்களது கோரிக்கையை எடுத்து வைத்தனர்.

# மன்னர் நஜாஷி

தஞ்சமடைந்துள்ள முஸ்லிம்களிடம் கேட்காமலேயே, தங்களது வேண்டுகோளை ஏற்று அவர்களை மக்காவிற்கு மன்னர் திருப்பி அனுப்பி விடுவார் என குறைஷித் தலைவர்களால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் நினைத்தனர். ஆனால், பாதுகாப்புத் தேடி வந்தவர்களுக்கு தங்களது நிலைமையினை எடுத்துக் கூற உரிமையுண்டு என்று கூறி மன்னர் தூதுவர்களின் கோரிக்கையை நிராகரித்தார். மக்காவிலிருந்து வந்த குறைஷித் தூதுவர்களும், முஸ்லிம்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் வகையில் ஒரு கூட்டத்திற்கு மன்னர் ஏற்பாடு செய்தார். முஸ்லிம்கள் சார்பாக அறிவும் பேச்சாற்றலும் கொண்ட ஜாபர்(ரலி) நியமிக்கப்பட்டார். மன்னர், முஸ்லிம்களிடம் அங்கு வந்து தஞ்சம் புகுந்துள் ளதற்கான காரணத்தையும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் புதிய சமயம் பற்றியும் கேட்டார். அதற்கு ஜாபர்(ரலி) அவர்கள் திருக்குர்ஆனில் சொல்லப்பட்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்டு வரும் அடிப்படைக் கொள்கைகளான ஓர் இறைவன் பால் விசுவாசம் கொள்வது, சிலை வணக்கங்களை நிராகரிப்பது, உறவினர்களை மதிப்பது, உண்மை பேசுவது, அநியாயத்தை எதிர்ப்பது ஆகிய இஸ்லாத்தின் கொள்கைகளை விளக்கிக் கூறினார்.

> ஜாபர்(ரலி) மன்னரிடம் மேலும் கூறியதாவது:– மேன்மை தங்கிய மன்னரே! நாங்கள் அறியா மையிலும் காட்டு மிராண்டித்தனத்திலும் மூழ்கி யிருந்தோம். சிலைகளை வணங்கினோம். பாவங்கள் செய்தோம், இறந்த பிராணிகளை உண்டோம், வெறுப்பை ஊட்டினோம், மனித சமூகத்தின் ஒவ்வொருவரின் உணர்வுகளையும் கொச்சைப் படுத்தினோம், விருந்தோம்பும் பண்பைப் புறக்க ணித்தோம். அண்டை வீட்டுக்காரர்களுடன் சண்டை யிட்டோம்; எங்களுக்குச் சட்டம் எதுவுமில்லை. பின்னர்

இறைவன் எங்களிடையே வாய்மையும், நம்பிக்கையும் தூய்மையும் கொண்ட ஒருவரை பிறக்கச் செய்தான். அவர்கள் எங்களை ஒரே இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுமாறும், அவனுடன் வேறு எதனையும் இணை வைக்க வேண்டா மென்றும், சிலை வணக்கங்களை விட்டு விடுமாறும், உண்மையையே பேசுமாறும், விசுவாசத்துடனும், கருணையுடனும் நடந்து கொள்ளுமாறும், அண்டை வீட்டுக்காரர்களின் உரிமையை மதிக்குமாறும் போதித்தார்கள். பெண்களின் மீது கொடுமைகள் புரிய வேண்டா மென்றும், அனாதையின் சொத்துக்களை அபகரிக்கக்கூடாது என்றும் எங்களிடம் கூறினார்கள். தீய செயல்களினின்றும் விலகிஇருக்குமாறும், தொழுகை நடத்துமாறும், தர்மங்கள் செய்யுமாறும், நோன்பு நோற்கு மாறும் எங்களுக்குக் கட்டளை யிட்டார்கள். நாங்கள் அவர்களை நம்பினோம். அவர்களது கட்டளைகளையும் தடைகளையும் மதித்து நடந்தோம். அந்த ஒரே காரணத்திற்காக எங்களது மக்கள் எங்களுக்கு எதிராகக் கிளம்பினர். எங்களுக்குத் தொல்லைகள் தந்தனர். ஓரிறைவனை வணங்குவதை விட்டு விலகி கற்சிலைகளையும் மரச் சிலைகளையும் வணங்க வேண்டுமென்றும் நிர்ப்பந்தித்தனர். அவர்கள் எங்களுக்கு கொடுமைகள் புரிந்தனர். காயம் உண்டாக்கினர். அவர்களிடமிருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே நாங்கள் உங்களிடம் தஞ்சம் அடைந்துள்ளோம். நீங்கள் இவர்களின் தாக்குதல்களிலிருந்து எங்களைப் பாதுகாப்பீர்கள் என நம்புகிறோம்.

ஜாபர்(ரலி) அவர்களின் வேண்டுகோளால் பெரிதும் மனமிரங்கிய மன்னர் 'நஜாஷி' நபிகளாருக்கு அருளப்பட்டுள்ள குர்ஆனின் பிரதி உங்களுடன் உள்ளதா எனக்கேட்க, ஆம் என்று

பதிலளித்த ஜாபர்(ரலி) குர்ஆனின் மர்யம்' என்ற அத்தியாயத்திலிருந்து சில வசனங்களை ஓதினார்.

> மேலும்(நபியே) மர்யத்தைப் பற்றி இந்த வேதத்தில் (உள்ளதை) நீர் விவரித்துக் கூறுவீராக! அவர் தம்முடைய குடும்பத்தாரை விட்டு விலகி கிழக்குப்பக்கமாக ஒதுங்கியிருந்து திரையிட்டு அவர்களிலிருந்து மறைந்திருந்தார். (அப்போது) நாம் அவரிடம் நம்முடைய ரூஹை (வானவரை) அனுப்பினோம். அவர் மர்யத்தின் முன்னிலையில் முழு மனித உருவில் தோன்றினார். உடனே மர்யம் கூறினார் உம்மை விட்டு கருணை மிக்க இறைவனிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன்! நீர் இறையச்சம் உள்ளவராயின் என்று, அதற்கு அவர் கூறினார் நான் உம் இறைவனின் தூதராவேன், தூய்மையான ஒரு ஆண் குழந்தையை உமக்கு வழங்குவதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். மர்யம் கூறினார்' எனக்கு எவ்வாறு ஆண் குழந்தை பிறக்கும். என்னை எந்த மனிதனும் தீண்டவில்லையே நான் தீய நடத்தையுடையவளும் அல்லவளே! அதற்கு வானவர் கூறினார் அவ்வாறே நிகழும். உம் இறைவன் கூறுகின்றான். அவ்வாறு செய்வது எனக்கு மிகவும் எளிதானது. மேலும், நாம் அக் குழந்தையை மக்களுக்கு ஒரு சான்றாகவும் நம்மிடமிருந்து ஒரு கருணையாகவும் ஆக்குவதற்காகவே இவ்வாறு செய்கின்றோம். மேலும் அது நடந்தே தீரும். (குர்ஆன் 19:16–21)

அரசரும், அங்கிருந்த அரசப் பிரதானிகளும் ஓதப்பட்ட குர்ஆன் வசனங்களின் அழகைக் கண்டு பெரிதும் வியப்ப டைந்ததோடு, நபி ஈஸா(அலை) (ஜீசஸ்) அவர்களின் அற்புதமான பிறப்பு பற்றி அதில் குறிப்பிடப்பட்டுள்ளதை மொழி பெயர்ப்பு மூலம் தெரிந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

'நபி ஈஸா(அலை) அவர்களுக்கு யாரால் வேதம் அருளப்பட்டதோ அவர் தான் இதனையும் அருளியுள்ளார்' என்று மன்னர் மகிழ்ச்சி பொங்கக் கூறினார். பின்னர், மக்காவிலிருந்து வந்த தூதுவர்களிடம், 'இந்த முஸ்லிம்களை உங்களிடம் ஒப்படைக்கமாட்டேன். இவர்கள் இங்கேயே தங்கியிருப்பார்கள்' என்று தெரிவித்தார்.

## மரியமின் மகன் ஈஸா(அலை) (ஜீசஸ்)

குறைஷியர்களின் தூதர்களான அம்ரும், அப்துல்லாவும் கோபத்துடன் வெளியே சென்றனர். ஆனால், மறுநாளே அம்ர் மீண்டும் மன்னரின் அவைக்குச் சென்று, நபி ஈஸா(அலை) அவர்கள் பற்றி திருக்குர்ஆனில் சொல்லப்பட்டிருப்பதற்கும், கிறிஸ்துவர்களின் நம்பிக்கைகளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று கூறினர். அவரது வாதங்களைக் கேட்ட மன்னர், மீண்டும் ஜாபர்(ரலி) அவர்களை அழைத்து, நபி ஈஸா(அலை) அவர்களைப் பற்றி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் என்ன கூறியுள்ளார்கள் என்று விளக்கம் தருமாறு கேட்டார். முஸ்லிம்கள் இந்த விஷயத்தில் இருந்த ஆபத்தை உணர்ந்தே இருந்தனர். இரண்டு சமயங்களுக்கிடையிலான வித்தி யாசங்களை விளக்கிச் சொல்வது தங்களைத் திருப்பி அனுப்பும் நிலைக்கு மன்னர் நஜாஷியை இட்டுச் செல்லும் என எண்ணி அஞ்சினர்.

எனினும் அவர்கள் நபிகளாரின் செய்தியினை வாய்மையுடன் எடுத்துக் கூறிட முடிவு செய்தனர். மரியமின் மகன் ஈஸா பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று மன்னர் நேரடியாகக் கேட்டார். இதற்கு ஜாபர்(ரலி) அவர்கள் நபி ஈஸா இறைவனின் அடியார் அவனுடைய தூதுவர், இறைத் தன்மை பெற்றவர்; அவனுடைய மொழி; அவர் கன்னி மேரி வயிற்றில் உதித்தார் என்றே எங்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எங்களுக்குச் சொல்லித் தந்துள்ளார்கள் என்று கூறினார். அவர் இறைவனின் மகன் என்பது பற்றி எதுவும் சொல்லவில்லை

என்றும் சொன்னார். எனினும் மன்னர் ஒரு கைத்தடியை எடுத்துக் கொண்டு வியப்புடன் 'நீங்கள் சொன்னதற்கு மேல் மரியமின் மகன் ஈஸா பற்றி அதிகம் சொல்ல எதுவும் இல்லை இந்த கைத்தடியின் நீளம் போல' என்று குறிப்பிட்டார்.

அரசனின் இந்தப் பதில் கேட்டு வியப்படைந்த அரசப் பிரதானிகள் அதனைத் தங்களது 'கனைப்பு' மூலம் வெளிப்படுத்தினர். வெளிப்படுத்தினர். எனினும் அவர்களைப் புறக்கணித்த மன்னர், இரண்டு குறைஷித் தூதுவர்களையும் அவர்கள் கொண்டு வந்த அன்பளிப்புப் பொருட்களுடன் மக்காவிற்குத் திரும்பிச் செல்லுமாறு ஆணையிட்டார். முஸ்லிம்களிடம் தன்னுடைய வரவேற்பை தெரிவித்த மன்னர், அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாக மீண்டும் உறுதி வழங்கினார்.

## அபாயமும் உண்மையும்

பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் செயல்பட்ட மக்கா குறைஷியர்களுக்கு இந்தச் சம்பவம் ஒரு பின்னடைவாக அமைந்தது. கிறிஸ்துவர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற ஒரு நாட்டில் அந்த நாட்டு மக்களின் சமய நம்பிக்கையில் பங்கு கொள்ள முடியாத ஒரு நிலையில் அகதிகளாக அங்கு தங்கியிருந்த ஜாபர்(ரலி)க்கும் பிற முஸ்லிம்களுக்கு பாதுகாப்பும், மரியாதையும் கிடைத்தது. அவர்கள் நல்ல முறையில் நடத்தப்பட்டார்கள். மன்னர் நஜாஷியுடன் உறவாடிய ஒரு தர்மசங்கடமான நிலையில், நபி ஈஸா(அலை) அவர்களைப் பற்றி நபிகள் நாயகம்(ஸல்) என்ன கூறுகிறார்கள் எனக் கேட்கப்பட்டபோது, முஸ்லிம்கள் அந்தக் கேள்வியினைத் தட்டிக் கழிக்காது, அதே நேரத்தில் பொய்யுரைக்காது உண்மையினை எடுத்துரைக்க முடிவு செய்தனர். அவர்கள் திருப்பி அனுப்பப்படக் கூடிய அபாயகரமான சூழ்நிலையிலும் முஸ்லிம்கள் நம்பிக்கைக்கு ஊறு நேரா வண்ணம் தங்களது கருத்துக்களை நேர்மையுடனும், சீரிய வழியிலும் எடுத்துரைத்தனர். உண்மையை

உரைப்பதைத்தவிர அவர்கட்கு வேறு வழிஇல்லை. எனவே உண்மையே உரைத்தனர்.

பின்னர் மன்னர் நஜாஷி இஸ்லாத்தில் இணைந்து நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். சில ஆண்டுகளுக்குப்பின் மன்னர் இறந்த செய்தி கேட்டபோது, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அவருக்காக ஜனாஸா தொழுகை நடத்தினார்கள். (ஃகாயிப் ஜனாஸா தொழுகை) இப்படி அபிசீனியாவில் தஞ்சமடைந்த முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் அங்கேயே பதினைந்து ஆண்டுகள் தங்கியிருந்தனர். கைபர் போரின் போது தான் (கி.பி 630) அவர்கள் மதீனாவிற்கு வந்து நபிகளாருடன் சேர்ந்து கொண்டார்கள். மற்றவர்கள், மக்காவில் நிலைமை சாதகமாக உள்ளது என்று செய்தி வந்தவுடன் அங்கு சென்று விட்டார்கள். ஆனால் நஜாஷி ஆட்சியின் போது அவர்கள் எந்த விதமான தொல்லைகளுக்கும் உள்ளாகவில்லை.

# ஊக்கமும் தைரியமும் ஹம்ஸா (ரலி)

நபித்துவம் பெற்ற ஆறாம் ஆண்டில், அப்துல் முத்தலிப்பின் மகன் ஹம்ஸா(ரலி) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். எதிர்ப்பும், அநீதியும் சூழ்ந்திருந்த அந்த இருண்ட காலகட்டத்தில், அவரது வருகை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஒளியாக அமைந்திருந்தது.

ஒரு நாள் நாயகம்(ஸல்) அவர்கள் கஅபாவிற்கு அருகிலுள்ள சபா குன்றில் அமர்ந்திருந்தபோது, அவ்வழியாகச் சென்ற அபூஜஹ்ல் இஸ்லாமியத்தைப் பற்றி இழிவாகப் பேசிக் கொண்டு போனான். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அபூஜஹல் ஒரு கல்லை எடுத்து நபிகளாரை நோக்கி எறிந்தான். அது அவர்களின் தலையில் பட்டு ரத்தம் கொட்டியது. பின்னர், அந்த அநியாயக்காரன் குறைஷியர்கள் நடத்திய கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்று விட்டான். அதற்குச் சிறிது நேரத்திற்குப் பின்னர், வேட்டையை முடித்துக் கொண்டு தோளில் அம்புடன் அவ்வழியே வந்த ஹம்ஸா(ரலி) அவர்களிடம் ஒரு சிறுமி அபூஜஹ்லின் மோசமான நடத்தைப் பற்றியும், நபிகளார் தாக்கப்பட்டது பற்றியும் எடுத்துக் கூறினாள்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் பெரிதும் கோபமும் வருத்தமும் அடைந்த ஹம்ஸா(ரலி), விரைந்தோடிச் சென்று கஅபாவின் முற்றத்தில் தனது சகாக்களுடன் உரையாடிக் கொண்டிருந்த அபூஜஹ்லின் தலையில் ஓங்கி அடித்து, 'நீ முஹம்மதை (ஸல்) திட்டுவதை வழக்கமாகக் கொண்டிருக்

கிறாய். நானும் இஸ்லாத்தில் இணைந்துவிட்டேன். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி நடக்கச் சித்தமாகி விட்டேன்' என்று கூறினார். பின்னர் அவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் சென்று 'நான் அபூஜஹ்லைப் பழி வாங்கி விட்டேன். நீங்கள் அதற்காக மகிழ்ச்சி அடையலாம்' எனக் குறிப்பிட்டார். அதற்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பழிவாங்குவது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் முஸ்லிமாகிவிட்டால் இறைவனுக்குப் பணியுங்கள். நான் அதற்காக மகிழ்ச்சியடைவேன்' என்று கூறினார்கள். நபிகளாரின் இச்செய்தியைப் புரிந்து கொண்ட ஹம்ஸா(ரலி) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். நான் இப்போது முஸ்லிம் ஆகிவிட்டேன். எனவே எனது சகோதரரின் (நபிகளாரின்) பாதுகாப்பிற்கு நான் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று ஹம்ஸா(ரலி) கூறினார்கள்.

இதற்குப் பிறகு அபூஜஹ்ல், நபிகளாரைத் துன்புறுத்துவதை விட்டு விட்டு, ஏழை மற்றும் மிகவும் பலவீனமான முஸ்லிம்களைத் துன்புறுத்த ஆரம்பித்தான். உண்மையில், தன்னுடைய நெருங்கிய உறவினர் பிறரால் அவமதிக்கப்படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத காரணத்தாலேயே ஹம்ஸா(ரலி) அவர்கள் மதம் மாறினார் என்று ஆரம்ப கட்டத்தில் ஒரு கருத்து நிலவியது. எனினும், பின்னர் இறைவன் அவருடைய உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, அவரை தனது நம்பிக்கைக்குரிய அடியாராக மாற்றினான். அவர் இஸ்லாத்திற்கும், அதனைப் பின்பற்றியோருக்கும் ஒரு பெரும் சக்தியாகத் திகழ்ந்தார் என்பது பின்னாட்களில் நிரூபணம் ஆனது.

## உமர்(ரலி)

இஸ்லாத்திற்கு வலு சேர்த்த இன்னொரு குறிப்பிடத்தக்க நிகழ்வு உமர் பின் கத்தாப்(ரலி) இஸ்லாத்தில் இணைந்ததாகும். நபித்துவம் வந்த ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, ஹழ்ரத் ஹம்ஸா(ரலி) இஸ்லாத்தில் இணைந்த மூன்று நாட்களுக்குப்

பிறகு இந்நிகழ்ச்சி நடந்தது. அதுவரை இஸ்லாத்தின் கடும் எதிரியாக விளங்கிய ஹழ்ரத் உமர்(ரலி) தைரியமும் உறுதியும் கொண்டவர். மக்கா நகர மக்களால் பயம் கலந்த மரியாதை அளிக்கப்பட்டவர். ஒரு தடவை, தொழுகையின் போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தமது கரங்களை உயர்த்தி 'என் இறைவனே! நீ பெரிதும் நேசிக்கும் உமர்பின் கத்தாபையோ அல்லது அபூஜஹல் பின் ஹிஸ்ஸாமையோ இஸ்லாத்திற்கு வலிமை சேர்ப்பதற்காக எங்களுக்கு தருவாயாக' என்று பிரார்த்தனை செய்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு நாள் உமர்(ரலி) மிகவும் ஆத்திரமுற்றவராகக் காணப்பட்டார். நபிகள் நாயகத்தைக் கொன்று விட முடிவு செய்தார். தனது மக்கா சமுதாயத்தைச் சூழ்ந்திருந்த ஆபத்துக்களைத் தீர்ப்பதற்கான ஒரே வழி அது தான் என்று அவர் எண்ணினார். உருவியவாளுடன் தனது இல்லத்தை விட்டு கிளம்பிய உமர்(ரலி) நபிகளாரைத் தேடிச் சென்றார். போகும் வழியில் ரகசியமாக இஸ்லாத்தில் இணைந்திருந்த 'நயீம்' என்பவரைச் சந்தித்தார். நீங்கள் ஏன் இப்படிக் கோபமாகத் தோற்ற மளிக்கிறீர்கள் என்று நயீம் கேட்டபோது, நபிகளாரைக் கொல்லவிருக்கும் தனது திட்டத்தைத் தெரிவித்தார். அவருடைய திட்டத்தை முறியடிக்க எண்ணிய நயீம், உமர்(ரலி) அவர்களிடம், முஹம்மது(ஸல்) அவர்களைக் கொல்வதற்கு முன்னால் முதலில் நீங்கள் உங்களது வீட்டைச் சரி செய்து கொள்ளுங்கள்'. உங்களது தங்கை பாத்திமா(ரலி) வும், மைத்துனர் ஸைதும் ஏற்கனவே இஸ்லாத்தில் சேர்ந்து விட்டனர் என்று கூறினார். இதனால் அதிர்ச்சியும், வியப்பும் அடைந்த உமர்(ரலி) தனது திட்டத்தை மாற்றிக் கொண்டு நேராக தனது தங்கையின் இல்லம் நோக்கிச் சென்றார்.

அவருடைய சகோதரி பாத்திமாவும், அவரது கணவரும் இன்னொரு இளைஞரான 'கப்பாப்(ரலி)' என்பாரும் அப்போது குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தனர். யாரோ ஒருவர் தங்கள் இல்லம் நோக்கி வருவதை அறிந்து கொண்ட இளைஞரான கப்பாப்

குர்ஆன் ஓதுவதை நிறுத்தி விட்டு ஓடிப்போய் ஒளிந்து கொண்டார். வீட்டில் அவர்கள் குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பதைப் பார்த்த உமர்(ரலி) 'என்ன ஓதிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். ஒன்றும் ஓதவில்லை என்று இருவரும் பதிலளித்தனர். ஆனால் உமர்(ரலி) 'நீங்கள் எதையோ ஓதிக் கொண்டிருந்தீர்கள்' என்று மீண்டும் சொல்ல 'அது பற்றிச் சொல்ல விரும்பவில்லை' என அவர்கள் பதில் கூற, உமர்(ரலி) பெரும் கோபத்திற்கு ஆளானார். தனது மைத்துனரை அவர் அடிக்கப்பாய்ந்த போது, அதனை அவரது சகோதரி தடுத்தார். அவளையும் உமர்(ரலி) தாக்கவே அவளின் தலையிலிருந்து இரத்தம் வழிந்தது. தனது சகோதரியின் தலையிலிருந்து இரத்தம் வழிவதைக் கண்ணுற்ற உமர் உடனடியாக அடிப்பதை நிறுத்தினார். உடனே அவரது சகோதரி உணர்ச்சிவயப்பட்ட நிலையில்' ஆம் நாங்கள் உண்மை முஸ்லிம்கள். நாங்கள் ஓர் இறைவனையும் அவனது தூதரையும் நம்புகிறோம்' என்று கூறியதோடு நீங்கள் விரும்பியவாறு எங்களை இப்போது என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்றும் கூறினார்.

உமர்(ரலி) அதிர்ச்சியடைந்தார். தனது சகோதரியைத் தாக்கிய வருத்தம் காரணமாகவும், இப்போது கேட்ட செய்தி காரணமாகவும் அவர் நொறுங்கிப் போனார். தான் வந்த போது ஓதிக்கொண்டிருந்த அந்தக் குர்ஆனின் பகுதியை தன்னிடம் தருமாறு வேண்டினார். அவரது சகோதரி நீங்கள் முதலில் ஒலுச் செய்து உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் (தண்ணீர் கொண்டு உடலின் உறுப்புகளைக் கழுவுவதற்கு ஒலு என்று பெயர்) என்று கூறவே முதலில் தயங்கிய உமர்(ரலி) பின்னர் சகோதரியின் வேண்டுகோளை ஏற்று ஒலுச் செய்து விட்டு பின்னர் அதனை ஓதத் தொடங்கினார்.

> நீர் துன்பத்திற்குள்ளாக வேண்டும் என்பதற்காக இந்தக் குர்ஆனை நாம் உம் மீது இறக்கியருள வில்லை, இதுவோ அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நினைவூட்டுதலாகும். பூமியையும் உயர்வான

வானங்களையும் படைத்தவனிடமிருந்து இறக்கியரு ளப்பட்டதுமாகும். கருணைமிக்க இறைவன் (பேரண்டத்தின்) ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளான். வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவற்றிற்கும் அவற்றுக்கிடையே உள்ளவற்றிற்கும் மற்றும் மண்ணுக்கு அடியில் உள்ளவற்றிற்கும் அவனே உரிமையாளன் ஆவான்.' நீர் உம்முடைய சொற்களை உரக்கக் கூறும். ஆனால் இரகசியமாகப் பேசுவதையும் ஏன் அதை விட மறைவானவற்றையும் திண்ணமாக அவன் அறிகின்றான். அவன் தான் அல்லாஹ். அவனைத்தவிர வேறு கடவுள்கள் இல்லை. அவனுக்கு மிகவும் அழகிய பெயர்கள் உள்ளன. (குர்ஆன் *20:1–8* )

முதலில் இந்த வசனங்களை ஓதிய உமர்(ரலி) பின்னர் அதன் மற்றப் பகுதிகளையும் ஓதி முடித்தார். இந்த வசனங்கள் சினாய் குன்றில் இருந்த நபி மூஸாவுக்கு இறைவன் விடுத்த அழைப்பு பற்றியதாகும். கீழ்க்கண்ட இந்தப் பகுதிவரை அவர் ஓதி முடித்தார்.

திண்ணமாக நான் தான் அல்லாஹ் என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. எனவே எனக்கு அடி பணிவீராக! என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையை நிலைநிறுத்துவீராக. ( *20:14* )

ஓதுவதை நிறுத்திய உமர்(ரலி) அந்த வசனங்களில் காணப்பட்ட அழகையும், அதன் மேன்மையையும் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். உமர்(ரலி) அவர்களின் மனமாற்றத்தைத் தெரிந்து கொண்ட 'கப்பாப்' தான் ஒளிந்து கொண்டிருந்த இடத்திலிருந்து வெளியே வந்து அவரிடம் 'உமரையோ, அல்லது அபூஜஹ்லையோ இஸ்லாத்தில் இணையச் செய்வதன் மூலம் இஸ்லாத்திற்கு வலு சேர்ப்பாயாக' என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தொழுகையின் போது இறைவனிடம் பிரார்த்தனை செய்ததைத் தான் கேட்டதாகக் குறிப்பிட்டார். இப்போது முஹம்மது(ஸல்) எங்கிருக்கிறார்? என்று உமர் கேட்டபோது,

அதற்கு கப்பாப்; அர்கம்(ரலி)யின் வீட்டில் இருப்பதாகக் கூறினார். உமர் உடனே அங்கு புறப்பட்டுச் சென்றார். அவர் வாசலை நோக்கி வந்து கொண்டிருந்தபோது அவரது இடை உறையில், வாள் இருந்ததைக் கண்ணுற்ற அங்கிருந்தவர்கள் பயந்து போனார்கள். ஆனால் நபிகள் நாயகம்(ஸல்) அவரை விட்டு விடுங்கள் என்று சொல்லவே உமர்(ரலி) உடனே தான் இஸ்லாத்தில் இணையவிருப்பதாகத் தெரிவித்தார். வியப்படைந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ்வே மிகப்பெரியவன்) என முழங்கி அவரை இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டார்கள். தனது பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொண்டதாகவே அவர்கள் கருதி மகிழ்ந்தார்கள்.

## மனப் புரட்சி

மனங்களை மாற்றும் வல்லமை தமக்கு இல்லை என்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிந்தே இருந்தார்கள். சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில், மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமையும், திறமையும் நல்ல பண்புகளும் கொண்ட இந்த இருவரில் யாராவது ஒருவர் இஸ்லாத்தில் இணைந்தால் அது சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை காரணமாகவே இறைவனிடம் வேண்டினார்கள். இறைவனால் மட்டுமே மனித உள்ளங்களை நேர்வழிப்படுத்தி வழிகாட்ட முடியும் என அவர்கள் உணர்ந்திருந்தார்கள். சிலருக்கு இஸ்லாத்தில் இணைவதற்கு அதிக காலம் தேவைப்பட்டது. ஆனால் இன்னும் சிலர் குர்ஆனின் ஒரு பகுதியை ஓதியவுடனேயே அல்லது ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடந்தவுடனேயே தாங்களாகவே மனமுவந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். இதனை விளக்கிட முடியாது. நீண்ட காலம் எடுத்துக் கொண்ட சமய மாற்றங்கள் உறுதியாக இருந்தன என்றோ உடனடியாக நிகழ்ந்த சமய மாற்றங்கள் பலவீனமானவைகள் என்றோ கருத இயலாது.

சமய மாற்றம் என்று வரும் போது அது மனமாற்றத்தையும், இறைவன் மீது கொண்டுள்ள விசுவாசத்தையும், அன்பையுமே பொருத்ததாகும். இவையனைத்தும் இறைவனின் அசாதார ணமான சக்தியில் அடங்கியுள்ளன. முஹம்மது நபி(ஸல்) அவர்களைக் கொல்ல வேண்டும் என்ற திட நோக்கத்துடன் சென்ற ஹழ்ரத் உமர்(ரலி) சில மணி நேரத்திற்குப் பிறகு குர்ஆனின் வசனங்களையும், அதன் பொருளையும் உணர்ந்து மனம்மாறி இஸ்லாத்தில் இணைந்தார். யாரைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தாரோ, அவரின் உண்மை தோழராக அவர் பின்னர் மாறினார். இஸ்லாத்திற்கு எதிராக வெறுப்பைக் கக்கிய உமர்(ரலி) அவர்கள், அதில் இணைவார் என்று யாரும் கற்பனை செய்துகூடப் பார்த்திருக்கமாட்டார்கள். இந்த மனப்புரட்சி மிகச்சிறந்த அடையாளமாகவும், இறைவனால் செய்ய முடியாதது எதுவுமே இல்லை என்றும், எனவே எதைப்பற்றியும் யாரைப்பற்றியும் எந்த விதமான தீர்க்கமான முடிவுக்கும் யாரும் வந்து விடமுடியாது என்பதை உணர்த்தியது.

வீரமும், தைரியமுமிக்க ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள் தான் இஸ்லாத்தில் இணைந்திருப்பதை வெளிப்படையாக அறிவிக்க விரும்பினார். அபூஜஹ்லிடம் சென்று தான் இஸ்லாத்தில் இணைந்ததைத் தெரிவித்தார். நபிகளாரிடம் நாம் கஅபாவில் இணைந்து தொழுகை நடத்தலாம் என்று கூறினார். இது பிரச்னைகளை உருவாக்கும் என்றாலும், குறைஷியர்களுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்ற உறுதியான நிலையைத் தெரிவித்திட இது வழி செய்யும் என்று நம்பினார். உமர்(ரலி) அவர்களும், ஹம்ஸா(ரலி) அவர்களும் கஅபாவின் எல்லையைத் தாண்டிச் சென்று அங்கு தொழுகை நடத்தினார்கள். யாரும் அவர்களைத் தடுக்கவில்லை.

# 7

# தடை

இருந்தபோதிலும் விஷயங்கள் வெகுதூரம் சென்று விட்டன. குறைஷித் தலைவர்கள் ஒன்றுகூடி இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுத்திட வேறு என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என யோசித்தனர். ஆரம்பகால கட்டத்தில் இஸ்லாத்தில் இணைந்தவர்களில் எல்லா இனக் குழுவைச் சார்ந்தவர்களும் இருந்தனர். எனவே வழக்கமான அணிசேர்ப்பு முறையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சாத்தியமில்லாததாக இருந்தது. மிக நீண்ட காரசாரமான விவாதங்களுக்குப் பிறகு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் குலமான 'பனூஹாஷிம்' குலத்தினரைப் புறக்கணிப்பது என்று முடிவெடுத்தனர். அந்தக் குடும்பத்தினருடன் திருமண உறவுகள் வைத்துக் கொள்வதில்லை என்றும், அவர்களுடன் வணிகம் செய்வதில்லை என்றும், வேறு எந்த விதமான தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை என்றும் முடிவு செய்தனர்.

நாற்பது குறைஷித்தலைவர்கள் கையொப்பமிட்ட இந்த முடிவுகள் அடங்கிய அறிவிப்பு, கஅபாவின் உள்பகுதியில் எழுதி தொங்கவிடப்பட்டது. அபூலஹப் பனூஹாஷிம் குலத்தைச் சார்ந்தவராயினும், தனது குலத்திலிருந்து விலகி குறைஷித் தலைவர்களின் முடிவுக்கு ஆதரவு தெரிவித்தார்.

இந்த புறக்கணிப்பு 'பனூஹாஷிம்' குலத்தினருக்கும், முஸ்லிம்களுக்கும் பெரும் சிரமங்களைக் கொடுத்தது. இந்தத் தடை காரணமாக இந்தக் குலத்தின் தலைவரும், நபிகளாரின் பெரிய தந்தையுமான அபூதாலிப்பும், நபிகளாரும் பிற தோழர்களும் ஒரு சிறிய பள்ளத்தாக்கில் மூன்று ஆண்டுகள் தங்கவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தப் பள்ளத்தாக்குக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதும்

குறைஷியர்களால் தடுக்கப்பட்டது. இதன் காரணமாக தோழர்களில் சிலர் இலைகளையும், மரங்களின் வேர்களையும் உண்டு உயிர் வாழ நேர்ந்தது.

நிலைமை மேலும் மோசமானது, நோய், பசி காரணமாக ஏராளமானோர் துன்புற்றனர். இந்தத்தடை மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது. அது பொருளாதார ரீதியில் இக் குலத்தினரைப் பெரிதும் பாதித்தது. இந்தத் தடை காரணமாக ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டது. சமூக, மனரீதியான அழுத்தம் தாங்க முடியாததாக இருந்தது.

## உடன்படிக்கை ரத்து

நாளாவட்டத்தில் குறைஷித் தலைவர்களில் பலர் இந்தத் தடை பயன் அளிக்கக் கூடியது என்றாலும் தேவையற்றது என்று கருதினர். உறவுகளுக்கு இடையில் இது பிரச்னைகளை உருவாக்கியதால், ஒரு அசாத்தியமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்தத் தடையை நீக்கிட பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், முக்கியப் பிரமுகர்களான அபூலஹப், அபூஜஹ்ல் ஆகியோரின் கடுமையான எதிர்ப்பு காரணமாக அம் முயற்சிகள் வெற்றியடையவில்லை. முடிவில், ஒவ்வொரு குலத்தினருக் கிடையிலும் தொடர்பு நீடிக்க வேண்டும் என்ற சிலரின் முயற்சி காரணமாக மாற்றம் ஏற்பட்டது. இந்தத் தடை உடன் படிக்கையின் அனைத்து அம்சங்களையும் ரத்துச் செய்ய வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்ட சிலர், தங்களது நோக்கம் நிறைவேறும் வரை ஓயப் போவதில்லை என்றும் அறிவித்தனர். ஆனால் அபூஜஹ்ல் உடன்படிக்கையை ரத்து செய்ய முடியாது என்றார். அப்போது அங்கு வந்த அபூதாலிப் ஒரு இறைச்செய்தி தனது மகனான நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு வந்துள்ளது என்றும், அதில் 'அநீதியான இந்தத் தடை உடன்படிக்கையில் உள்ள 'அல்லாஹ்வின் பெயரைத் தவிர மீதம் உள்ள அனைத்துப் பகுதிகளையும் கரையான்கள் அரித்துவிட்டதாகத் கூறப்

பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்தச் செய்தி உண்மையாக இருந்தால், நீங்கள் உடன்படிக்கையை ரத்துச் செய்து தடையை நீக்க வேண்டும் என்றும் கோரினார். இதனை குறைஷியர்கள் ஏற்றுக் கொண்டனர். குறைஷியர்களின் தலைவரான 'முத்இம்' உடன்பாட்டின் அம்சங்கள் எழுதப்பட்டுள்ள தோல் காகிதத்தை (ஆடு, அல்லது மாட்டின் தோல்களைக் காகிதத்திற்கு பதிலாக அப்போது பயன்படுத்தினர்) சென்று பார்த்த போது அதில் அல்லாஹ்வின் பெயரைத் தவிர, பிற அனைத்துப்பகுதிகளும், கரையான்களால் அரிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். இதனால், கடுமையான நிலை எடுத்தவர்கள் மேலும் அதனை வலியுறுத்துவதில் பொருளில்லை என உணர்ந்து கொண்டனர். இவ்வாறாக அந்தத் தடை உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட்டு, நபிகளாரும், அவரது தோழர்களும் மக்கா நகர் திரும்ப அனுமதிக்கப்பட்டனர். முஸ்லிம்களைக் கொடுமைக்கு உள்ளாக்கிய இந்த நிகழ்ச்சி, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இறைவனின் தூதரே என்பதை உணர்ந்து கொள்ள ஒரு பொன்னான வாய்ப்பாக குறைஷித் தலைவர்கட்கு அமைந்து விட்டது. எனினும் அவர்கள் இதனை ஏற்க மறுத்து நம்பிக்கையின்மையை வளர்த்துக் கொண்டனர்.

> *ஆனால் (இந்த மக்கள் நிலைமை என்ன வெனில்) எந்தச் சான்றினைப் பார்த்தாலும் புறக்கணிக்கிறார்கள். மேலும் இது எப்போதும் நடை பெறுகிற சூனியம் தான் என்று சொல்கிறார்கள். (குர்ஆன் 54:2)*

## துயரமான ஆண்டு

தடை நீங்கிய பல மாதங்களுக்குப் பிறகு முஸ்லிம்களின் நிலை சற்று மேம்பட்டது. குறைஷியர்களுடன் அவர்கள் மீண்டும் உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டனர். அவமரியாதைகளும், தொல்லைகளும் ஒரு பக்கம் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தொடர்ந்து மக்கா நகரில் தங்களுடைய பிரச்சாரத்தை மேற்கொண்டு வந்தார்கள்.

நிலைமை வெகுவாக மாறிக்கொண்டு வந்தது. எனினும் தடை நீக்கப்பட்ட சில காலத்திற்குள்ளாகவே திடீரென்று நபிகளாரின் துணைவியார் கதிஜா நாயகி மரணமடைந்துவிட்டார்கள். மக்காவிலேயே ஒரு பெரிய செல்வச் சீமாட்டியாக விளங்கிய அவர் நபிகளாரின் வாழ்க்கைத் துணைவியாக மட்டுமல்லாது அவர்களின் நம்பிக்கைக்குரிய உற்ற துணைவராகவும் மிகவும் நம்பத்தக்க ஆதரவாளராகவும் இருபத்து ஐந்து ஆண்டுகள் இருந்தார்கள்.

நபித்துவம் வந்து ஒன்பது ஆண்டுகளுக்குப்பிறகு கி.பி.619ல் அவர்களை இறைவன் தன்பால் அழைத்துக் கொண்டான். இதனால் நபிகளார் பெரிதும் துயருற்றார்கள். கதீஜா நாயகி தன்னருகில் இருப்பது இறைவன் தனக்கு அளித்த பாதுகாப்பாகவும், அன்பின் வெளிப்பாடாகவும் அவர்கள் கருதினார்கள்.

இதற்கு சில நாட்களுக்கு முன்னர் நபிகளாரின் பெரிய தகப்பனார் அபூதாலிப் கடும் சுகவீனமுற்றிருந்தார். அவரைப் பார்ப்பதற்காக நபிகளார் சென்ற போது அங்கே இஸ்லாத்தின் எதிரிகளான அபூலஹப்பும், அபூ உமைய்யாவும் இருந்தனர். நபிகளார் அபூதாலிப் அவர்களை நோக்கி,'என் பெரிய தந்தையே, அல்லாஹ்வைத் தவிர வேறு உண்மையான இறைவன் யாருமில்லை என்று நீங்கள் அறிவியுங்கள். நான் உங்களுக்கு அல்லாஹ்விடம் சாட்சியாக இருப்பேன் (நீங்கள் நம்பிக்கையாளர் என்று)' என்று வேண்டிக்கொண்டார்கள். உடனே அபூலஹப்பும், அபூ உமைய்யாவும் அபூதாலிபிடம் "அபூதாலிப் உங்களது தந்தையாரின் சமயத்தை நீங்கள் விட்டு விடுவீர்களா?"' என்று கேட்டனர். நபிகளார் மீண்டும் அபூதாலிப்பை வேண்ட, அபூலஹப்பும், அபூ உமைய்யாவும் அதே பதிலைத் திரும்பவும் கூறினார்கள். முடிவில் அபூதாலிப் தன்னுடைய தந்தையாரின் சமயத்திலேயே தான் நீடித்து இருக்கப் போவதாகவும், அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் உண்மையான இறைவன் இல்லை' என்று அறிவிக்க

முடியாதென்றும் கூறினார். இதனைக் கேட்ட முஹம்மது (ஸல்) அவர்கள் "'இறைவனிடம் நான் உங்களுக்காக மன்னிப்புக் கோருவேன். அப்படி கோருவதற்கு நான் தடுக்கப் பட்டிருக்கிறேன் என்ற போதிலும்"' என்று கூறினார்கள்.

மேலும் இது பற்றி விவாதிக்க அவர்கட்கு நேரம் இல்லை. நபிகளார் அருகிலிருக்க அபூதாலிப் மரணமடைந்தார். அவர் கடைசிவரை இஸ்லாத்தில் இணையவில்லை எனினும், நபிகளாருக்குப் பாதுகாப்பு வழங்கியதுடன் அவர்கள்மீது அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். நபிகளாரும் அவர்மீது அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார்கள். அவர் மரணமடைந்தது குறித்து மிகவும் துயருற்றார்கள். இந்த சம்பவத்தை நினைவு கூரும் வண்ணம் இறைவசனம் ஒன்று நபிகளாருக்கு அருளப்பட்டது. மனங்களின் ரகசியத்தை அறியவல்ல போதனைகளை அது உள்ளடக்கியதாக இருந்தது.

> (நபியே) நீர் விரும்புகிறவர்களுக்கு நேர்வழி காட்டிய உம்மால் முடியாது ஆயினும் அல்லாஹ் தான் நாடுவோருக்கு வழிகாட்டுதலை அளிக்கின்றான். மேலும் வழிகாட்டுதலைப் பெறக் கூடியவர்களை நன்கறிகிறான். (*28:56*)

## கதீஜா(ரலி)

இந்தக் கால கட்டத்தில் ஏற்பட்ட அசாதாரணமான, வேதனை தரத்தக்க பல்வேறு சூழ்நிலைகளில் கதீஜா(ரலி) அவர்கள் அளித்திட்ட பங்களிப்பை இங்கு குறிப்பிடுவது மிக முக்கியமானதாகும். அவர்கள் தான் முதன் முதலாக நபிகளாரின் நேர்மையையும், நியாயத்தையும், உயரிய பண்பையும் அறிந்து அவர்களை தங்களது வணிகப் பணிக்காகத் தேர்வு செய்தார்கள். வழக்கத்திற்கு மாறாக அவர்கள் தான் நுபைசாவை அனுப்பி நபிகளாரைத் தாம் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக

தெரிவித்தார்கள். அவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியும், துன்பமும், சோகமும் கலந்ததாகவே அமைந்திருந்தது. குழந்தைப் பருவத்திலிருந்த இரண்டு மகன்களான காசிமையும் அப்துல்லாவையும் அவர்கள் இழந்தார்கள். அவர்களின் நான்கு புதல்விகள் மட்டுமே உயிரோடிருந்தனர்.

அரபு மக்களிடையே பெண் குழந்தைப் பிறப்பு ஒரு வெட்ககரமான நிகழ்வாகக் கருதப்பட்டு வந்த அந்தக் கால கட்டத்தில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களுடைய பெண் குழந்தைகள் பால் அளப்பரிய அன்பும், அக்கறையும் கொண்டிருந்தார்கள். இதை அவர்கள் வெளிப்படையாக அறிவிக்க ஒரு போதும் தயங்கியதில்லை.

நபிகளாரின் நாற்பதாவது வயதில் அவர்களுக்கு இறைவசனங்கள் அருளப்பட்டபோது, அவர்கட்கு கதீஜா நாயகி துணையாக நின்று ஆறுதல் கூறினார்கள். அதற்கு முந்தைய ஆண்டுகளில், நபிகளாரின் மேன்மையான பண்புகளை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. நபிகளார் 'ஹிரா' குகையில் இருந்து 'தான் யார், தனக்கு என்ன நேர்ந்து விட்டது என்ற மன சஞ்சலத்துடன் வீட்டிற்கு வந்த போது, கதீஜா நாயகி தான் அவர்களை அரவணைத்து, ஆசுவாசப்படுத்தி நம்பிக்கை அளித்தார்கள்.

முதன் முதலில் நபிகளாருக்கு அருளப்பட்ட இறையருட்செய்தி ஒரு அசாதாரணமான வெகுமதியாகவும் அதே நேரத்தில் ஒரு பயங்கரமான சோதனையாகவும் இருந்தது. நபிகளார் குழப்பமான மன நிலையில் இருந்தபோது, கதீஜா நாயகி தான் அவர்கட்கு ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருந்தார்கள். அந்தக் கணத்திலிருந்து அவர்கள் இருவரும் சேர்ந்தே பல்வேறு சோதனைகளைச் சந்தித்து அவற்றின் உண்மையான பொருளை உணர்ந்து கொண்டார்கள். இறைவனின் அழைப்பை ஏற்று ஆன்மீகப் பாதையில் நடைபோட்டார்கள்.

கதீஜா நாயகி தான் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். நபிகளாரின் முதல் பத்து ஆண்டுகால நபித்துவ வாழ்க்கையில், அவர் தான் அவர்களுக்கு மாறாத விசுவாசம் கொண்ட உற்ற தோழராக விளங்கினார். நபிகளாரின் வாழ்க்கையில் அவர் ஆற்றிய பங்கு மகத்தானது. அவர் நபிகளாருடன் இருபத்து ஐந்து ஆண்டுகள் வாழ்க்கை நடத்தினார். நபிகளாரைக் கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்டார். நபிகளாரைப் போலவே அவரும் உறவினர்களால் நிராகரிக்கப்பட்டு துன்பத்திற்கும், தனிமைக்கும் ஆளானார்.

நபிகளாரும் கதீஜா நாயகி மீது மிகவும் அன்பு செலுத்தினார்கள். இறைவன் தனது பிரதிநிதியாக நபிகளாரை நியமித்திருக்கிறான் என்ற நல்ல செய்தி கதீஜா நாயகிக்குத்தான் முதலில் கிடைத்தது. அவர் சுயமானவராகவும், மதிப்பு மிக்கவராகவும், கௌரவ மிக்கவராகவும் திகழ்ந்ததோடு, ஒரு மனைவி என்ற முறையில் நம்பிக்கைக்குரியவராகவும், விசுவாசமானவராகவும் அதே நேரத்தில் பக்தி மிக்க முஸ்லிமாகவும், உறுதியானவராகவும், நேர்மையானவராகவும், சகிப்புத்தன்மை மிக்கவராகவும் விளங்கினார்.

இறுதி நபியான முஹம்மது(ஸல்) அவர்கள் தனித்தவரல்ல. அவர்கள் மேல் இறைவன் அளப்பரிய அன்பு கொண்டிருந்தான் என்பதற்கான அடையாளமே அவர்களது மனைவியான கதீஜா நாயகியாகும் நபிகளாரின் வாழ்க்கையில் அவர்களின் பங்களிப்பு பற்றி பல ஆண்டுகளுக்குப் பின்னர் அருளப்பட்ட இறை வசனங்கள் ஒரு கணவனும் மனைவியும் எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கும் வண்ணம் அமைந்திருந்தன.

> அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்கட்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள். (குர்ஆன் *2:187* )

கதீஜா நாயகி, நபிகளாரைப் பாதுகாக்கும் ஆடையாகவும், (உணர்வு பூர்வமாகவும், உடல் பூர்வமாகவும்) அவர்களின்

பலவீனங்களை மறைக்கும் ஆடையாகவும், அவர்களின் வனப்பை இரட்டிப்பாக்கும் ஆடையாகவும், அவர்களுக்கு அன்பு, வலிமை, அந்தஸ்து, மரியாதை, பணிவு ஆகியவற்றை அளித்த ஆடையாகவும் திகழ்ந்தார்கள். அவரின் மறைவினால் நபிகளார் பெரிதும் துயருற்றார்கள். நபிகளார் கூறியதாவது "மக்கள் என்னை நம்ப மறுத்த போது அவர் என்னை நம்பினார். மக்கள் என்னைப் பொய்யர் என்றுரைத்த போது அவர் என்னை உண்மையானவர் என்று ஏற்றுக் கொண்டார். அவர் எனக்கு உதவியும் ஆறுதலும் அளித்தார். அவர் மூலமாக இறைவன் எனக்குக் குழந்தைகளை அளித்தான்."

## தாயிப்

சில மாதங்களுக்குள்ளாகவே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் உடல் நலிவுற்றார்கள். தன் மீது அன்பு கொண்டிருந்த மனைவியையும், தனக்குப் பாதுகாப்பாக இருந்த பெரிய தந்தையையும், இழந்து தவித்தார்கள். இந்த சோகத்திற் கிடையேயும், மக்காவில் இருந்த முஸ்லிம்களின் பாதுகாப்பு பற்றிச் சிந்தித்தார்கள். மக்கா நகருக்கு வெளியே ஆதரவு திரட்டிட முயற்சி செய்தார்கள்.

கி.பி.619 ஆம் ஆண்டு ஜூன் மாதத் துவக்கத்தில், நபித்துவம் பெற்ற 10வது ஆண்டில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து 60 கி.மீ தொலை விலுள்ள தாயிப் நகருக்குச் சென்று அங்குள்ள இனக்குழுத் தலைவர்களிடம் இஸ்லாத்தின் செய்தியை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்து ஸைது(ரலி) (நபிகளாரால் விடுவிக்கப்பட்ட அடிமை) அவர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு அங்கு சென்றார்கள். அங்கு அவர்கட்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. எனினும், இனக்குழுத் தலைவர்கள் நபிகளாரை 'நபி' என்று ஏற்றுக்கொள்ள மறுத்துக் கேலி செய்தனர். இறைவன் எப்படி தன்னுடைய தூதரை எங்களைப் போன்ற அடையாளம் தெரியாத இனக்குழுத் தலைவர்களிடம் ஆதரவு கேட்டுக் கெஞ்சுமாறு

செய்திருப்பான் என அவர்கள் கேள்வி எழுப்பினர். இது பற்றி அவர்கள் விவாதிக்க மறுத்ததோடு, மக்களையும் நபிகளாருக்கு எதிராகத் திருப்பி விட்டனர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தாயிப்பை விட்டுக் கிளம்பிச் சென்றபோது, அவர்களை அவமதிக்கும் விதமாக குழந்தைகள் அவர்கள் மீது கற்களை எறிந்தனர். அவர்களின் கால்களிலிருந்து இரத்தம் வழிந்தது. நபிகளாரைப் பாதுகாக்க முயன்ற ஸைதின் தலையில் காயம் ஏற்பட்டது.

தாயிப் நகர மக்கள் அவர்களை நகரிலிருந்து இரண்டு, மூன்று மைல்கள் தூரம் வரை விரட்டிச் சென்று விட்டு பின்னர் திரும்பினர். சுற்றிலும் குன்றுகளால் சூழப்பட்ட ஒரு மணல் வெளியில் நின்ற நபிகளார் மிகவும் களைப்புற்றவர்களாக எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக ஒரு பழத்தோட்டத்தில் தஞ்சமடைந்தார்கள். பாதுகாப்பு இல்லாத நிலையில் தனிமையில் இருந்த நபிகளார் இறைவனிடம் கீழ்க்கண்டவாறு பிராத்தனை செய்தார்கள்.'

> என் இறைவனே ! என்னுடைய பல வீனத்தையும், வசதி வாய்ப்பற்ற நிலையினையும், மனிதர்களின் பார்வையில் அற்பமாகத் தெரியும் நிலையினையும் நான் உன்னிடம் மட்டுமே முறையிட முடியும், மிக்க கருணையாளனே ! நீ தான் என்னுடைய எஜமான். நீ தான் பலவீனமானவர்களின் எஜமான். என் ரப்பே என்னை யார் கையில் நீ ஒப்படைக்கப்போகிறாய்? என்னைத் துன்பத்திற்குள்ளாக்கும் தொலைவிலுள்ள புதியவர்களிடமா? அல்லது என்னுடைய எதிரியிடமா? நீ என்னிடம் கோபம் கொள்ளாதவரையில் நான் அஞ்சப் போவதில்லை. எனினும் உனது மகத்தான ஆதரவு எனது பாதையை விசாலப்படுத்தி புதிய உச்சங்களை எனக்குத் தரும்! நான் உன்னுடைய ஒளியில் தஞ்சமடைகிறேன். அதன் காரணமாக இருள் விலகி ஒளி கிடைக்கும். அதனால் உலகில் உள்ள

பொருட்கள் அனைத்தும் சரி செய்யப்பட்டுவிடும். நான் உன்னுடைய கோபத்திற்கு ஆளாகமாட்டேன். இருந்த போதிலும் நீ திருப்தி அடையாதவரை என்னை எச்சரிக்கை செய்து கொண்டிருப்பது உனது உரிமையாகும். உன்னைத் தவிர, வேறு சக்தியோ வலிமையோ எனக்கு இல்லை'.

இந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையில், இறைவன் மீது தான் கொண்டிருந்த நம்பிக்கையையும், விசுவாசத்தையும் வெளிப் படுத்தியதன் மூலம் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இறை வனிடமே தன்னை ஒப்படைத்து விட்டார்கள்.

மிகவும் புகழ் பெற்ற இந்தப் பிரார்த்தனை மனித இனத்தின் உதவிகரமற்ற தன்மையையும், இறைவனது தூதரின் அசாதாரணமான ஆன்மீக வலிமையையும் எடுத்தியம்புகிறது. ஆதரவற்று தனித்திருந்த போதிலும் தான் தனியாக இல்லை என்பதை நபிகளார் உணர்ந்திருந்தார்கள்.

## ஒரு அடிமை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பழத்தோட்டத்தினுள் நுழைந்ததையும், தனது இருகரங்களை உயர்த்தி இறைவனிடம் பிரார்த்தனை செய்ததையும், அந்த பழத்தோட்டத்தின் இரு உரிமையாளர்கள் தொலைவிலிருந்து பார்த்து விட்டனர். தங்களது அடிமையான 'அத்தாஸ்' என்ற கிறிஸ்துவரிடம் திராட்சைப் பழக்கொத்துக்களை கொடுத்து நபிகளாரிடம், அனுப்பினர். அத்தாஸ் பழக் கொத்துக்களை கொடுத்த போது நபிகளார் 'பிஸ்மில்லாஹ்' என்று சொன்னார்கள் (இறைவனின் பெயரால்) இது போன்ற ஒரு வார்த்தையை பல தெய்வ வழிபாட்டாளர்களிடமிருந்து ஒரு போதும் கேட்டிராத அத்தாஸ் பெரிதும் வியப்படைந்து நபிகளாரைப்பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் கொண்டார். நபிகளார் 'நீங்கள் எந்த நாட்டைச்

சார்ந்தவர்?' என அவரிடம் வினவிய போது அதற்கு அத்தாஸ் தான் 'நினேவா' (தற்போது இஸ்ரேலில் உள்ளது) விலிருந்து வருவதாகத் தெரிவித்தார். உடனே நபிகளார் 'மத்தாஸின் மகன் நீதிமான் யூனூஸின் நாட்டிலிருந்தா' என்று கூறியபோது, அத்தாஸ் எப்படி இவர் இதனை அறிந்திருக்க முடியும் என்று எண்ணி வியப்புற்றார். தான் ஒரு கிறிஸ்துவன் என்று தன்னை அறிமுகப்படுத்திய அத்தாஸ் நபிகளாரிடம் தாங்கள் யார் என்றும் எப்படி தங்களுக்கு இந்த ஞானம் கிடைத்தது? என்றும் கேட்டார். யூனூஸ் எனது சகோதரர் அவர் ஒரு நபி நானும் ஒரு நபி' என நபிகளார் பதில் அளித்தார்கள்.

நபிகளாரை ஒரு கணம் உற்று நோக்கிய அத்தாஸ், அவர்களுடைய தலையிலும், கைகளிலும், கால்களிலும் முத்த மிட்டார். இதனைப் பார்த்த அவரது எஜமானர்கள் அதிர்ச்சி யுற்றார்கள். அத்தாஸ் தனது எஜமானர்களிடம் சென்று ஒரு நபிக்கு மட்டுமே அடுத்த மனிதருக்கு தெரிந்த விஷயங்கள் தெரியும்' என்றார். சில நிமிட விவாதங்களுக்குப் பின்னர், அத்தாஸ் இஸ்லாத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். எப்படி அபிசீனிய கிறிஸ்துவ மன்னர் இரண்டு செய்திகளுக்கும் (இஸ்லாம் மற்றும் கிறிஸ்துவம்) இடையில் இருந்த தொடர்பை உணர்ந்து கொண்டாரோ, அது போலவே இந்த அடிமை கிறிஸ்துவரும் அறிந்து கொண்டார்.

ஏற்கனவே ஒரு முறை நபிகளார் வருத்தத்திலும், தனிமை உணர்வுடனும் இருந்த போது, ஒரு கிறிஸ்துவர் அவர்கட்கு பாதுகாப்பும், மரியாதையும், அடைக்கலமும் அளித்தார். ஒரு கிறிஸ்துவ அரசர் முஸ்லிம்களை வரவேற்று அவர்கட்கு அடைக்கலம் கொடுத்தார். இப்போது ஒரு அடிமை மற்றவர்கள் அனைவரும் இஸ்லாத்தை நிராகரித்த நிலையில் இஸ்லாத்தில் இணைந்துள்ளார். பார்க்க இயலாத தெய்வீக ஒளியால் இறைவனின் தூதர் புத்துணர்ச்சி பெற்று மன ஆறுதல் அடைந்து மக்கா நோக்கிப் பயணமானர்கள்.

## மதீனாவில் இருந்த சாதகமான சூழ்நிலை

மக்காவிற்கு அருகில் இருந்த 'அல் அக்பா' என்ற பள்ளத்தாக்கில் மதீனாவிலிருந்து வந்த ஒரு குழுவினரை நபிகளார் சந்தித்தார்கள். அவர்கள், மதீனாவில் அப்போது இருந்த இரு போட்டி இனக்குழுக்களில் ஒன்றான 'கஸ்ராஜ்' குழுவைச் சார்ந்தவர்கள் (இன்னொரு குழுவின் பெயர் அவ்ஸ்) அவர்களிடம் இஸ்லாத்தின் செய்தியை நபிகளார் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் ஏற்கனவே இஸ்லாத்தைப் பற்றி மதீனாவில் இருந்த யூதர்கள் மூலம் கேள்வியுற்றிருந்தார்கள். எனவே அதனைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்பினர். நபிகளார் சொன்னதை கவனத்துடன் செவி மடுத்த அவர்கள், இஸ்லாத்தின் செய்தியை ஏற்றுக் கொண்டனர். தங்களது இனக்குழுவைச் சார்ந்த மக்களிடம் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துச் சொல்வதாகவும், நபிகளாருடன் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்வதாகவும் உறுதி அளித்தனர். மதீனாவிற்குத் திரும்பிய அவர்கள், அங்கு இஸ்லாத்தின் செய்தியைப் பரப்புவதில் ஈடுபட்டனர்.

ஓர் ஆண்டிற்குப் பிறகு, ஹஜ் புனிதப் பயணிகளும், வர்த்தகர்களும் கொண்டாட்டங்களுக்காக மக்காவில் குவிந்தனர். அல் அக்பா பள்ளத்தாக்கில் நபிகளாருக்கும், மதீனாவிலிருந்து வந்த தூதுக்குழுவினருக்குமிடையே இரண்டாவது கூட்டம் நடைபெற்றது. இதில் மதீனா நகரில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி அவர்கள் நபிகளாரிடம் தெரிவித்தனர். மதீனாவிலிருந்து வந்து கலந்து கொண்ட 12 பேர்கள் அடங்கிய இக்குழுவில் இரண்டு பேர் அவ்ஸ் இனக் குழுவைச்சார்ந்தவர்கள். அவர்கள் நபிகளாரிடம் தாங்கள் ஏக இறைவனை மட்டுமே வணங்குவோம் என்றும், இஸ்லாத்தின் கடமைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்வோம் என்றும் உறுதி அளித்தனர். எனவே, அவர்களே மதீனா நகரின் முதல் முஸ்லிம் சமூகம் என்ற பெருமையினைப் பெற்றனர். அமைதியும், அறிவும், குர்ஆனை அழகுற ஓதும்

திறனும் பெற்றிருந்த உமைர்' மகன் முஸ்அப்(ரலி) என்பாரை நபிகளார் அவர்களுடன் மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

மதீனாவில், இந்தக் குழுவினர் இஸ்லாத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். முஸ்அப் திருக்குர்ஆனை அவர்களிடம் ஓதி, அதன் பொருளையும் விளக்கிக் கூறி அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் அளித்தார். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் இனக்குழுவினருக்கிடையே பல்லாண்டுகளாக பிரிவுகள் இருந்த போதிலும், இந்த இரண்டு இனக்குழுவைச் சார்ந்தவர்களும் இஸ்லாத்தில் இணைந்தனர். இனிமேலும் தங்களுக் கிடையேயுள்ள பிரிவுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது பொருளற்றது என உணர்ந்தனர். இஸ்லாத்தின் சகோதரத்துவச் செய்தி அவர்களை ஒன்றிணைத்தது. ஆனாலும் இனக்குழுத் தலைவர்கள் இஸ்லாத்தில் இணைவதற்குப் பெரிதும் தயங்கினர். முஸ்அப்(ரலி), அவர்களது தாக்குதல்களுக்கும், எதிர்ப்பு களுக்கும் எதிர்வினையாக எதுவும் செய்யவில்லை. மாறாக உட்கார்ந்து செய்தியைக் கவனமாகக் கேளுங்கள். நீங்கள் விரும்பினால் ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லையெனில் விட்டு விடுங்கள்'. என்று அவர்களிடம் கூறினார். இதன் விளைவாக, தலைவர்கள் மத்தியிலும் இஸ்லாத்தில் இணைந்தோர் எண்ணிக்கை அதிகரித்தது.

அதற்கு அடுத்த ஆண்டு மக்காவிற்குப் புனிதப் பயணம் வந்த முக்கியப் பிரமுகர்களைக் கொண்ட மதீனா தூதுக்குழு நபிகளாரைச் சந்தித்தது. இந்தக்குழுவில் அவ்ஸ், கஸ்ரஜ்ஆகிய இரண்டு இனக்குழுவைச் சார்ந்தவர்களும், இரண்டு பெண்களும் இருந்தனர். இஸ்லாத்தின் மீதான தங்களது உறுதிப்பாட்டை அவர்கள் நபிகளாரிடம் தெரிவித்தனர். எதிர் காலத்தில் அவர்களது உறவுகள் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றிச் சிறிது விவாதித்த பிறகு ஒரு ஒப்பந்தம் உருவானது. அதன்படி நபிகளாருக்கும் மக்காவிலுள்ள முஸ்லிம் பெண்களுக்கும், அவர் தம் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க மதீனா முஸ்லிம்கள் ஒப்புக் கொண்டனர்.

மக்கா முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு அளிக்க மதீனா முஸ்லிம்கள் முன் வந்தது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஊட்டியது. எதிர் வரும் நாட்கள் வளமாக இருக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். இதற்குப் பின்னர் மதீனாவிற்குச் செல்லுமாறு மக்கா முஸ்லிம்களை நபிகளார் ஊக்கப்படுத்தினார்கள். நெருங்கிய தோழர்கள் மட்டுமே நபிகளாருடன் மக்காவில் இருந்தனர்.

## ஒரு சதி

மக்காவில், நபிகளார் நாயகம்(ஸல்) அவர்கட்குப் பாதுகாப்பு அளித்து வந்த 'முத்இம்' மரணமடைந்து விட்டார். இதனால் நிலைமை இன்னும் மோசமாகியது. முஸ்லிம்கள் மக்காவை விட்டு மதீனாவிற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்த குறைஷியர்கள் கோபமுற்று தங்களது எதிர்ப்பை வன்முறை மூலம் காட்ட ஆரம்பித்தனர். அபூலஹப், அபூஜஹ்ல் ஆகியோரின் தூண்டுதலின் பேரில் இனக்குழுத் தலைவர்கள் ஒன்று கூடி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைக் கொன்று விட முடிவு செய்தனர். இந்தக் காரியத்தை நிறைவேற்றிட ஒவ்வொரு இனக் குழுவிலிருந்தும் ஒரு பிரதிநிதியை நியமிக்க முடிவு செய்தனர். இப்படிச் செய்வதன் மூலம் 'பனூ ஹாஸிம்' இனக் குழுவினர் ஒரு குறிப்பிட்ட இனக்குழுவிற்கு எதிராகப் பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட இயலாது என்றும், ஈட்டுப்பணம் பெற இயலாது என்றும் கருதினர். இனிமேலும் தாமதிக்காது வெகு சீக்கிரத்தில் நபிகளாரைக் கொன்று விட வேண்டுமென்று முடிவு செய்தனர்.

தங்களுடைய இறைப் பயணத்தின் போது ஒரு அழகிய நகரத்தைக் கண்டதாகவும் அது தன்னை வரவேற்பதாகவும் நபிகளாருக்கு ஒரு நாள் கனவு ஒன்று தோன்றியது. அக்கனவின் பொருளை விளக்கிட வானவர் ஜிப்ரீல் நபிகளாரிடம் வந்தார். மதீனா நகருக்குச் செல்ல நீங்கள் தயாராக வேண்டும் என்றும், உங்களுடன் ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) துணைக்கு வருவார்

என்றும் ஜிப்ரீல் தெரிவித்தார். நபிகளார் இதனை அபூபக்கர்(ரலி) யிடம் தெரிவித்த போது அவர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். நபிகளார் ஹழ்ரத் அலி(ரலி) அவர்களிடம் மறு நாள் இரவு தன்னுடைய படுக்கையில் படுத்துக்கொள்ளும்படியும், தான் சொல்லும் வரை மக்கா நகரை விட்டுச் செல்லக் கூடாது என்றும் கூறினார்கள்.

நபிகளாரைக் கொலை செய்யும் நோக்குடன் வந்த குறைஷியர்கள் வீட்டினுள் இருந்து வந்த சப்தத்தைக் கேட்டு நபிகளார் தான் வீட்டை விட்டுச் செல்லவிருக்கிறார்கள் என நினைத்து தங்களது திட்டத்தை நிறைவேற்றத் தயாராயினர். ஆனால் அவர்கள் வீட்டினுள் சென்று பார்த்த போது, அங்கு அலீ(ரலி) அவர்கள் இருப்பதைக் கண்டு ஏமாற்றம் அடைந்தனர். இவ்வாறு குறைஷியர்களும், அவர்களது அணியினரும் போட்ட திட்டம் தோல்வியுற்றது.

# 8

# பயணம் (ஹிஜ்ரா)

ஓர் இறைவன் மீது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை தீர்க்கமானது. சில சம்பவங்களின் காரணமாக அவர்களின் நம்பிக்கை ஒரு போதும் நீர்த்துப் போனதில்லை. ஏதாவது ஒரு செயலைச் செய்திட திட்டமிடும் போது, இறைவனை மறவாது 'இன்ஷா அல்லாஹ்' (இறைவன் நாடினால்) என்ற வார்த்தையைச் சொல்ல ஒரு போதும் மறந்திடக் கூடாது என்று இறைவசனங்கள் நபிகளாருக்கு நினைவூட்டின. (குறிப்பாக மனிதர்கள் தங்களுடைய அதிகாரம் சம்பந்தப்பட்ட விஷயங்களில்)

இரண்டாண்டுகளாகவே மதீனாவிற்கு பயணம் மேற்கொள்ள வேண்டுமென நபிகளார் திட்டமிட்டு இருந்தார்கள். இதில் எந்தவிதமான பின்னடைவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். தங்களது நுண்ணறிவையும், சக்தியையும் பயன்படுத்தி, இறைப்பணிக்கான தன்னம் பிக்கையை வெளிப்படுத்தும் விதத்தில் நபிகளாரின் இச்செயல் அமைந்திருந்தது. (அதாவது இறைவனைச் சார்ந்து, அவன்மீது நம்பிக்கை கொள்வது அத் தவக்குல் – அல் அல்லாஹ்) நாம் ஒவ்வொருவருக்கும் அறிவார்ந்த, ஆன்மீக மிக்க உளப் பூர்வமான, உணர்ச்சிப்பூர்வமான பண்புகளையும் அவற்றைப் பயன்படுத்தும் திறமையையும் இறைவன் வழங்கியுள்ளான். அதே நேரத்தில், மனிதனது சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களைச்

செய்திடும் ஆற்றல் இறைவன் ஒருவனுக்கே உண்டு. உண்மையில், இந்தப் போதனை தீய எண்ணத்திற்கு எதிரானது. மனிதர்கள் முடிந்த அளவு தங்களிடமுள்ள அனைத்து சக்தியையும் பயன்படுத்திய பின்னரே இறைவன் செயலில் இறங்குவான். அதுவே கீழ்க்கண்ட குர்ஆன் வசனத்தின் உண்மைப் பொருளாகும்.

> எந்த ஒரு சமூகமும் தன் பண்புகளை மாற்றிக் கொள்ளாதவரை உண்மையில் அல்லாஹ்வும் அச்சமூகத்தின் நிலையை மாற்றுவதில்லை. (குர்ஆன் – *13:11*)

## அபூ பக்கர் (ரலி)

இரவு நேரத்தில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும், ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்களும் பிறரது கவனத்திலிருந்து தப்பிக்க, யேமன் செல்லும் பாதையில் சென்றார்கள். தெற்கு நோக்கிப் பயணம் செய்த அவர்கள் 'தௌவ்ர்' குகைக்குச் சென்று அங்கு சில நாட்கள் மறைவாக இருந்தார்கள். இந்நிலையில், சில குறைஷியர்கள் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என சந்தேகித்து நபிகளாரைத்தேடி தெற்கு நோக்கி வந்தார்கள். அவர்கள் குகைக்கு முன்னால் வந்து உள்ளே புகுந்திட தயாராயினர். குகையினுள் இருந்த அபூபக்கர் (ரலி) அவர்களால் வெளியே இருந்த குறைஷியர்களைப் பார்க்க முடிந்தது. அவர்கள் நபிகளாரிடம் 'கீழ் நோக்கிப் பார்த்தால் எதிரிகள் நிச்சயம் நம் இருவரையும் கண்டுபிடித்து விடுவார்கள்' என்று தெரிவித்தார்கள். இதனைக் கேட்ட நபிகளார் அவருக்கு நம்பிக்கை யூட்டும் முகமாக 'அச்சமடைய வேண்டாம், இறைவன் நம்மோடு இருக்கிறான்'. என்று நவின்றார்கள். இந்த வார்த்தைகள் அபூபக்கருக்கு ஆறுதல் அளித்தன. வெளியே நின்ற குறைஷியர்கள், குகையின் வாசலில் ஒரு சிலந்தி வலை இருப்பதையும், புறா ஒன்று கூடுகட்டி இருந்ததையும் கண்டார்கள். எனவே நபிகளார் இந்தக் குகையில் ஒளிந்திருக்க

முடியாது என முடிவுக்கு வந்த அவர்கள், வேறு இடங்களுக்குத் தேடிச் சென்றார்கள். கவனமாகத் திட்டமிட்ட முறையிலும் கூட பலவீனமான நிலை ஏற்பட்டு விட்டதை நபிகளாரும். அபூபக்கரும் உணர்ந்து கொண்டனர். எனினும் அவர்களை மிகவும் மெல்லிய, எளிதில் அழிக்கவல்ல ஒரு சிலந்திக் கூடு காப்பாற்றியது.

இறைவன் மீது தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை (அத்–தவக்குல் அலல்லாஹ்) அத்தருணத்தில் அபூபக்கர்(ரலி) அவர்களிடம் நினைவுபடுத்திய நபிகளார், அவனின் வலிமையையும் உணர்த்தினார்கள். இறைவனால் மட்டுமே அவனது தூதரைக் காப்பாற்ற முடிந்தது. நபிகளார் பயணம் மேற்கொண்ட போது அவர்கள் யாருக்கும் கடமைப்பட்டவராக இருக்கவில்லை (அன்பளிப்பை ஏற்க மறுத்தார்கள். தாங்கள் வாங்கியிருந்த கடன்களைத் திருப்பிச் செலுத்தியிருந்தார்கள். தாங்கள் வைத்திருந்த அமானிதப் பொருட்களைப் திருப்பிக் கொடுத்திருந்தார்கள்) ஆனால், தாம் இறைவன் ஒருவனுக்கே கடமைப்பட்டவன் என்பதனையும் இறைவனுக்கு தான் செய்ய வேண்டிய பிரதி உபகாரங்கள் எண்ணற்றவை என்பதனையும் உணர்ந்தே இருந்தார்கள்.

அபூபக்கர்(ரலி) அவர்கள், பதூயின் இனக் குழுவைச் சார்ந்த 'உரைகாத்' என்ற முஸ்லிமல்லாத ஒருவனை யாரும் கவனிக்க முடியாத, வழக்கத்திற்கு மாறான ஒரு வழியில் மதீனாவுக்குச் செல்ல வழிகாட்டியாக நியமித்தார்கள். புறப்பட வேண்டிய நேரத்தில், அவன் குகைக்கு ஒட்டகங்களுடன் வந்து சேர்ந்தான். முதலில் அவர்கள் மேற்கு நோக்கிச் சென்று பின்னர் தெற்கு நோக்கியும் அதன் பின்னர் மதீனாவை நோக்கி வடக்குத் திசையிலும் சென்றார்கள் (மக்காவிலிருந்து மதீனா 340 கி.மீ தூரத்தில் இருந்தது) அது ஒரு ஆபத்தான பயணமாக இருந்தது. குறைஷியர்கள் இந்த மூவரையும் பிடித்திருந்தால் நிச்சயம் அவர்களைக் கொன்று இஸ்லாமிய பிரச்சாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருப்பார்கள்.

நபிகளாரும், அபூபக்கர்(ரலி)யும் இறைவனின் மீது முழு நம்பிக்கை கொண்டிருந்தனர். எனினும் பல தெய்வ வழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த ஒரு பதூயினை வழிகாட்டியாக நியமித்துக் கொண்டார்கள். அவன் தங்களுக்குச் சரியாக வழிகாட்டுவான் என்ற நம்பிக்கை அவர்கட்கு இருந்தது. அந்தச் சாலையைப் பற்றி அவன் மற்றவர்களை விட நன்கு அறிந்தவன். நபிகளாரின் வாழ்க்கை முழுவதும் இது போன்ற பல சம்பவங்கள் நடந்தன. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத போதிலும், நபிகளாரின் நற்குணங்களைப் பற்றித் தெரிந்து கொண்ட பலர் அவர்களுக்குப் பல இக்கட்டான கால கட்டங்களில் உதவியிருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களின் உதவியினை ஏற்றுக் கொள்ள நபிகளார் ஒரு போதும் தயங்கியதில்லை.

# ஹிஜ்ரா – நம்பிக்கை பற்றிய சோதனை

நபிகளாரும் அவரது தோழர்களும், தங்களுடைய சொந்த இனக் குழுவைச்சார்ந்த சகோதரர்களாலும், சகோதரிகளாலும் துன்புறுத்தலுக்கும், எதிர்ப்புக்கும் ஆளான நிலையில் தான் மக்காவை விட்டுச் செல்ல நேர்ந்தது. நிலைமை பொறுத்துக் கொள்ள முடியாததாக இருந்தது. பலர் இறந்தனர். பலர் சித்திரவதைக்கு உள்ளாயினர். இறுதியில் நபிகளாரையே கொன்று விட குறைஷியர்கள் முடிவு செய்தனர். இந்தப் பயணம் முஸ்லிம் ஆண்களும் பெண்களும் தங்களுடைய நம்பிக்கையை எந்த விதமான தடங்கலுமின்றி நடை முறைப்படுத்த ஏதுவான ஒரு முதல் நிகழ்வாக அமைந்தது. ஏனெனில், இறைவனின் பூமி விசாலமானது' என்று குர்ஆன் கூறுவது போல, அவர்கள் மக்கா நகரை விட்டுச் செல்ல முடிவு செய்தனர். தங்களது நம்பிக்கையைப் பாதுகாக்கவே அவர்கள் தங்களது உடமைகளையும், பழக்க வழக்கங்களையும் துறந்து விட்டு ஒரு புதிய நகரில் தஞ்சம் புக முடிவு செய்தனர். அப்போது அருளப்பட்ட இறைவசனம், முஸ்லிம்களின் தைரியத்தையும், மன உறுதியையும் பாராட்டும் வண்ணம் அமைந்திருந்தது. இத்தகைய ஒரு முடிவை மேற்கொண்டதன் மூலம் அவர்கள் இறைவன் மீது தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர்.

> எவர் கொடுமைக்கு ஆளான பிறகு அல்லாஹ்வுக்காக ஹிஜ்ரத் செய்தார்களோ அவர்களுக்கு நாம் இவ்வுலகிலேயே வசிப்பிடத்தை வழங்குவோம். மேலும் மறுமையின் கூலியோ அதை விட மகத்தானதாகும். கொடுமைக்கு ஆளான அந்த மக்கள் பொறுமையைக் கைக் கொண்டு தம் அதிபதியை

முழுமையாகச் சார்ந்திருக் கின்றார்கள். அவர்கள் (எத்தகைய நல்ல முடிவு தங்களுக்குக் காத்திருக்கிறது என்பதை) அறிந்திட வேண்டுமே. (*16:41,42*)

தலைமறைவு வாழ்க்கை ஒரு நம்பிக்கை பற்றிய பரிசோதனையே ஆகும். எல்லா நபிமார்களும் இந்தப் பரிசோதனையை எதிர் கொள்ள வேண்டியதிருந்தது. ஏக இறைவனின் அன்பைப் பெறுவதற்காக எவ்வளவு தூரம் அவர்கள் செல்லத் தயாராக உள்ளனர், எவ்வளவு தூரம் தங்களை அர்ப்பணிக்கவும் தங்களது உயிரை இழக்கவும் கூட தயாராக உள்ளனர் என்பதை அறிய முயற்சிக்கும் பரிசோதனையே இது. அவை நம்பிக்கையின் மீது எழுப்பப்படும் கேள்விகளாகும். தங்களது இருப்பை உறுதி செய்து கொள்ள முஸ்லிம்களுக்கு ஹிஜ்ரத் (பயணம்) பயன்பட்டது.

இடம், கலாச்சாரம், நினைவுகள், இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட சூழலில் வாழ நேர்ந்த போதிலும் முதன் முதலில் இஸ்லாத்தில் இணைந்து கொண்ட முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு விசுவாசமாக இருந்திட இந்த தலைமறைவு வாழ்க்கை தேவைப்பட்டது. மதீனாவில் அவர்கள் புதிய பழக்க வழக்கங்களுக்கும், புதிய ஒரு சமூக உறவுகளுக்கும் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டியதிருந்தது. தலை மறைவு வாழ்க்கை ஒரு புதிய அனுபவமாகும். அந்த வாழ்க்கை ஒருவரது நிலையை தலைகீழாகப் புரட்டிப் போட்டாலும், அவர்கள் தொடர்ந்து அப்புதிய சூழ்நிலையிலும் இறைவன் மீது விசுவாசமாக இருந்து கொண்டு இறைக் கோட்பாட்டின் பொருளையும் உணர்ந்து கொண்டு அதன்படி வாழ வேண்டிய பயிற்சியை அளித்தது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக துன்பத்திற் குள்ளான விசுவாசமுள்ள முஸ்லிம்கள் தங்களைத் தாக்குபவர் களிடமிருந்து விலகி, சுதந்திரமாக வாழ முடிவு செய்தனர். அப்படிச் செய்ததன் மூலம், அடக்கு முறையைத் தங்களால் சகிக்க இயலாது என்பதையும், தாக்கப்படுபவர்கள் என்ற நிலையை ஏற்றுக் கொள்ள இயலாது

என்பதையும் அவர்கள் உணர்த்த விரும்பினர். அடிப்படையான விஷயம் இது தான். இறைவனைப் பற்றி வெளிப்படையாகப் பேசி, சுதந்திரமாக இருப்பது அல்லது சுதந்திரத்தை மீறுவது என்ற உள்ளார்ந்த பொருள் கொண்டதாக இருந்தது. இந்தச் செய்தி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களாலும், ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்களாலும் ஏற்கனவே மக்கா விலிருந்த அனைத்து அடிமைகளுக்கும் கூறப்பட்டிருந்தது. இஸ்லாத்தை ஏற்றதன் மூலம் அவர்களுக்கு விடுதலை கிடைத்தது. இஸ்லாத்தின் அனைத்து போதனைகளும் அடிமைத் தனத்திற்கு முடிவு கட்டுவதாக அமைந்திருந்தது. இதன் பின்னர் இறை நம்பிக்கைக்கு, சுதந்திரமும், நீதியும் தேவை என்ற விரிவான செய்தி முஸ்லிம் சமூகத்திற்கு விடுக்கப்பட்டது. ஹிஜ்ரத்தைப் போல, தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் அதற்குரிய விலையைக் கொடுத்திட தயாராக இருக்க வேண்டும் என்ற செய்தியும் உணர்த்தப்பட்டது.

பொய்யான கடவுள்களிடமிருந்தும், தீமைகளிலிருந்தும், பாவங்களிலிருந்தும் மனமும், மனச்சாட்சியும் விலகியிருப்பதே ஹிஜ்ரா எனப்படும். ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் அதிகமாக (அதிகாரம், செல்வம், பக்தி சிரத்தையான தோற்றங்கள்) நேசிப்பவற்றை விட்டு விலகியிருப்பதும், நேர்மையற்ற வாழ்க்கை முறைகளிலிருந்து விலகியிருப்பதும், பழக்கவழக்கங்கள் காரணமாக ஒருவருடைய மனதில் தோன்றியுள்ள சுயேட்சையான தோற்றங்களிலிருந்து விடுபடுவதும் ஹிஜ்ரத்துக்குத் தேவையான ஆன்மீகப் பண்புகளாகும். பின்னொரு நாள், எது உண்மையான ஹிஜ்ரத் என தோழர் ஒருவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் கேட்டபோது நபிகளார் "'தீயவற்றிலிருந்து (பொய், பாவம், இழிவான பழக்கங்கள்) நீ விலகி வாழ்வதே" என்று நவின்றார்கள். ஆன்மீக மறைவு வாழ்க்கையின் தேவையானது பல்வேறு வடிவங்களில் அதனை மீண்டும் மீண்டும் மேற்கொள்வதேயாகும். இவ்வாறாக மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற

முஸ்லிம்கள், இஸ்லாமியப் போதனைகளின் புதிய பரிணாமத்தை அனுபவப்பூர்வமாக அறிந்து கொண்டனர். அதன் மூலம் இதயபூர்வமான ஒரு மாற்றத்தை அவர்கள் பெற முடிந்தது. தங்களது நகரிலிருந்த உறவுகளை எல்லாம் விட்டு விட்டு அவர்கள் மதீனாவை நோக்கி மேற்கொண்ட பயணம் அவர்களுக்குள் ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. வரலாற்றுப் பூர்வமாக இது ஒரு தற்செயலாக நிகழ்ந்த சம்பவமேயாயினும் அவர்கள் இறைவனுக்கு நெருக்க மானவர்களாக ஆனார்கள்.

நீங்கள் யார், உங்கள் வாழ்க்கையின் பொருள் என்ன? நீங்கள் எங்கே சென்று கொண்டிருக்கிறீர்கள் என்ற இறைவனின் கேள்விகளுக்கு விடை தரும் ஒரு அனுபவமாக இந்த ஹிஜ்ரத் இருந்தது.

# 9

# மதீனா

மக்காவிலிருந்து மதீனாவின் புறநகர் பகுதியிலுள்ள 'குபா' என்ற ஊரை சென்றடைய இருபது நாட்கள் பிடித்தன. அங்கு சென்ற நபிகள் நாயகம்(ஸல்) அவர்களையும் ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்களையும் வரவேற்க மக்கள் காத்திருந்தனர். அந்தக் கிராமத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்த அவர்கள் அங்கு ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். அங்கிருந்து கிளம்பிச் சென்ற நபிகளார் வழியில் நண்பகலில் தொழுகை நேரம் வந்தவுடன் 'ரனுனா' பள்ளத்தாக்கில் முதல் வெள்ளிக்கிழமை தொழுகையை தங்களது தோழர்களுடன் நிறைவேற்றினார்கள்.

அங்கும் ஒரு பள்ளிவாசலைக் கட்டும் பணியை ஆரம்பித்தார்கள். 4.10.622 திங்கட்கிழமையன்று அவர்கள் மதீனா நகர் வந்தடைந்தார்கள். அவர்களை பலர் தடுத்து நிறுத்தி தங்களது இல்லங்களுக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். தன்னுடைய ஒட்டகமான 'கஸ்வா' எங்கு சென்று நிற்கிறதோ அந்த இடத்தில் தான் நான் தங்குவேன் என்று அவர்களிடம் நபிகளார் சொன்னார்கள். கூட்டத்தின் வழியாகப் பின்நோக்கி நகர்ந்த ஒட்டகம் இரண்டு அநாதைகளுக்குச் சொந்தமான ஒரு நிலத்தருகே போய் நின்று கொண்டது. அந்த இடத்தில் நபிகளார் தங்குவதற்கான வீடும், பள்ளிவாசலும் கட்டும் பணி உடனே தொடங்கியது.

# பள்ளிவாசல்

இந்த மூன்று பள்ளிவாசல்களை கட்டியதன் மூலம் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இறைவனுக்கும், மனித சமுதாயத் திற்குமான உறவின் பின்னணியில் உள்ள முக்கியத்துவத்தைக் கோடிட்டுக்காட்டியுள்ளார்கள். இந்த முழு பூமியும் பள்ளி வாசல்தான்' என்ற நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றார்கள். இப்பூவுலகின் எந்தப் பகுதியும் அசுத்தமானது அல்ல. எனவே எங்கும் தொழுகை நடத்தலாம் என இறைவன் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கு அனுமதி வழங்கியிருக்கிறான். இதன் காரணமாகவே முஸ்லிம்கள் பூங்காக்களிலும், சாலை யோரங்களிலும், ரயில்வே பிளாட்பாரங்களிலும், விமான நிலையங்களிலும் தொழுகை நடத்துகிறார்கள். இந்த முழு உலகமும் முஸ்லிம்களுக்கு தொழுகை புரியும் இடங்கள் தான். குறித்த நேரம் வரும் போது எங்கே இருக்கிறார்களோ, அங்கே தொழுகையினை நிறைவேற்றுகிறார்கள்.

பள்ளிவாசல் ஒரு அமைதியான இடம் என்பதை முஸ்லிம்கள் உணர்ந்துள்ளனர். தூய்மையுடனேயே அவர்கள் பள்ளிவாசலுக்குள் செல்கிறார்கள். அவர்களது உடலும் உடைகளும் சுத்தமாகவே உள்ளன. அவர்களது மனமும் தூய்மையாகவே உள்ளது. இறைவனின் ஒரு எளிய பக்தர்களாகவே அவர்கள் பள்ளியினுள் செல்கிறார்கள். பள்ளிவாசலினுள் நுழையும் முன்னர், ஏற்கனவே அங்கு வந்திருப்பவர்களுக்கு 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) என்று முகமன் உரைக்கிறார்கள். புதிதாக வருபவர்களின் அமைதிப் பிரகடனமே இது. பள்ளிவாசல் அமைதியையும், நல்லிணக்கத்தையும் பரவச் செய்கிறது. ஏக இறைத் தத்துவத்தையும் மனித சகோதரத் துவத்தையும் பற்றிய இந்த இரு செய்திகளையும் அது வழங்குகிறது. மக்காவிலுள்ள கஅபா உலகில் மையப் பள்ளிவாசலாக விளங்குகிறது. இஸ்லாமியச் சட்டப்படி கஅபா

"ஹரம்" புனிதப் பகுதி என அறிவிக்கப்பட்டுள்ளது. கஅபாவிலோ அல்லது அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலோ ரத்தம் சிந்துவது தடுக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசலுடன் தொடர்புடைய 'அமைதி' என்ற சொற்றொடர் மைய இறை இல்லமான கஅபாவைப் பொறுத்த அளவில் மேலும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

பூமியை இறை இல்லத்துடன் ஒப்பிடும் போதே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், இந்தப்பூமி அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தினார்கள். பூமியில் உள்ள மனிதகுலத்தினர் அனைவரும் அவர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும் அமைதியையும் சமாதானத்தையும் பெற வேண்டும் என்பதே நபிகளாரின் குறிக்கோளாக இருந்தது. நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் பேணும் இடமாக ஒரு பள்ளிவாசல் இருப்பதைப் போல, இந்த உலகமும் அவ்வாறே ஒரு பள்ளி வாசலைப் போல் இருந்தால் அமைதியையும், சமாதானத்தையும் அடைய முடியும்.

## அஸ்ஸலாமு அலைக்கும்
## இறைவனின் சாந்தி உங்கள் மீது உண்டாவதாக

குபாவுக்கு வருகை தந்தவுடன் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அங்குள்ள முஸ்லிம்களுக்கு அடிப்படை விஷயமாக அறிவித்த முதல் செய்தி இதுதான். "'அஸ்ஸலாமு அலைக்கும்" என்ற முகமன் வார்த்தைகளைக் கூறி அமைதிச் செய்தியைப் பரப்புங்கள். பதிலளிப்பவர்கள் "வ அலைக்கும் ஸலாம்" (உங்களுக்கும் இறைவனின் சாந்தி உண்டாகட்டும்) என்று கூறுங்கள் என்பதாகும். ஏழைகளுக்கு உணவளியுங்கள். சொந்தபந்த உறவுகளைப் பேணிக் கொள்ளுங்கள். இரவில் வணங்குங்கள். இதன் மூலம் சொர்க்கத்தில் நுழையுங்கள் என்றும் நபியவர்கள் நவின்றார்கள். தங்களுடைய உரையின் ஆரம்பத்திலும் முடிவிலும் இந்த இரு சமாதானச் செய்தியினை

விடுத்த நபிகளார், ஒரு புதிய நகரில் வாழ்க்கை எங்ஙனம் அமைந்திட வேண்டும் எனத் தோழர்களுக்கு உணர்த்திக் காட்டினார்கள். ஏழைகளுக்கு உதவுவது, உறவுகளைப் பேணுவது ஆகிய இந்த இரண்டு பண்புகளும் நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு முஸ்லிமிடமும் நிரந்தரமாக இருக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினார்கள். இரவு நேரத் தொழுகை மேற்சொன்ன ஆன்மீக வாழ்க்கைக்கு இட்டுச் செல்கிறது. உள்ளத்திற்கு வலிமையையும், நம்பிக்கையில் அமைதியையும் ஏற்படுத்தி ஒழுக்க மாண்புகளை மதிக்கவும், சமாதானத்தைப் பரப்பவும் உதவுகிறது. ஏழை எளிய மக்களுக்கு உதவவும், சமாதானத்தைப் பரப்பவும் ஒரு நம்பிக்கையாளருக்கு அவனுள் எழும் அமைதியே வழிகாட்டுகிறது.

மதீனாவில் தங்கியிருந்த ஒவ்வொரு கால கட்டத்திலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இந்தப் போதனைகளைச் செய்து வந்தார்கள். மதீனாவிற்கு வந்தவுடனேயே அந்நகரைச் சார்ந்த பிரமுகர்கள் யாரும் புறக்கணிக்க முடியா வண்ணம், நபிகளாருக்கு ஒரு அடையாளப்பூர்வமான அரசியல் அதிகாரம் கிடைத்தது. பெரும்பாலான மதீனா வாசிகள் இஸ்லாத்தை ஏற்று நபிகளாரை இறைவனின் இறைத் தூதுவராக அங்கீகரித்தார்கள். பல ஆண்டுகளாக மோதலில் ஈடுபட்டிருந்த அவ்ஸ்' மற்றும் கஸ்ரஜ் என்ற இரண்டு இனக் குழுவினரும் இஸ்லாத்தை ஏற்றனர். பல்வேறு பகுதிகளில் உள்ள, பல தரப்பட்ட பல இனக் குழுக்களைச் சார்ந்த ஆண், பெண் அனைவரையும் ஒன்றுபடுத்திய வல்லமை இஸ்லாத்திற்கு இருந்தது.

## யூதர்களுடன் ஓர் உடன்படிக்கை

மதீனாவிற்கு வந்த பிறகு, அங்கிருந்த புதிய முஸ்லிம் சமூகத்தின் நிர்வாக, அரசியல், கொள்கை சார்ந்த விஷயங்களில் ஒற்றுமையை உறுதி செய்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களிடமும் முறையான தொடர்புகளை ஏற்படுத்தினார்கள். அமைதியையும், பாதுகாப்பையும்,

வளத்தையும் ஒட்டுமொத்த மனித குலத்திற்கு அளித்திட வேண்டும் என்கின்ற பொதுவான எண்ணத்துடன் அந்தப் பகுதியில் உள்ள மக்களிடையே பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கிலும் நபிகளார் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டார்கள். பூகோள அடிப்படையில், யூதர்களே மதீனாவிற்கு நெருக்கமான மக்களாக இருந்தனர். தீய எண்ணங்களும் கசப்பான வெறுப்புணர்ச்சியும் கொண்டிருந்த அவர்கள், தங்களது எதிர்ப்பையோ அல்லது பகைமை உணர்வையோ வெளிக்காட்டவில்லை. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் யூதர்களின் நம்பிக்கைக்கும், செல்வத்திற்கும் முழு சுதந்திரம் அளித்திடும் உடன்பாடு ஒன்றினை ஏற்படுத்திட முடிவு செய்தார்கள்.

யூதர்களை வெளியேற்றவோ, அவர்களுடைய சொத்துக்களையோ, நிலங்களையோ பறிமுதல் செய்யவோ அல்லது அவர்கள்பால் பகைமை கொள்ளவோ, நபிகளார் எண்ணவில்லை. முஸ்லிம்களுக்கும் அவர்களுக்குமிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்தும் விதத்திலும் இந்த உடன்பாட்டை நபிகளார் ஏற்படுத்தினார்கள். இந்த உடன்பாட்டிற்குப் பிறகு மதீனாவும் அதன் புறநகர்ப் பகுதிகளும் ஒரு கூட்டணி ஜனநாயக நாடாக மாறியது. மதீனா அதன் தலை நகரானது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அதன் தலைவரானார்கள். அதிகாரம் முஸ்லிம்கள் வசமே இருந்தது. இஸ்லாத்தின் உண்மையான தலைநகராக மதீனா விளங்கியது. சமாதானத்தையும் பாதுகாப்பையும் மேலும் உறுதி செய்திட நபிகளார் அங்குள்ள பிற இனக்குழு மக்களிடமும் இது போன்ற ஒரு உடன்பாடு கொண்டிட முடிவு செய்தார்கள். திருமண ஒப்பந்தம், வியாபார ஒப்பந்தம், சமூக ஒப்பந்தம், மோதல் அல்லது போர்நிறுத்த ஒப்பந்தம், என பல ஒப்பந்தங்கள் இஸ்லாமிய அமைப்பில் உருவாகின. இந்த ஒப்பந்தங்களின் முக்கியத்துவம் பற்றியும், அதன் சரத்துக்களை அனுசரிப்பது பற்றியும் குறிப்பிடும் குர்ஆன்

**"ஒவ்வொரு ஒப்பந்தமும் விசாரிக்கப்படும்"** (*17:34*) என்று கூறுகிறது. நபிகளார் 'முஸ்லிம்கள் ஒப்பந்தத்தில் உள்ள சரத்துக்களின் படி நடந்து கொள்ள வேண்டும்' என்று கூறினார்கள்.

## நயவஞ்சகர்கள் (வேடதாரிகள்)

இது போன்று பல தரப்பு மக்களுடன் உன்பாடு செய்து கொள்வது நபிகளாருக்கு இலகுவான பணியாக அமைந்திட வில்லை. பொறாமையும், ஆசையும், அதிகாரப் பசியும் கொண்ட சிலரையும், ஏமாற்றம் கொண்ட பலரையும் அவர்கள் சமாளிக்க நேர்ந்தது.

மக்காவில் சமய மாற்றம் நிகழ்ந்திடப் பெரும் தியாக உணர்வு தேவைப்பட்டது. நேர்மையும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட வர்களுமே இஸ்லாத்தில் இணைந்தனர். ஆனால், மதீனாவில் முற்றிலும் ஒரு புதிய சூழ்நிலையை நபிகளார் எதிர் கொள்ள நேர்ந்தது. மதீனாவில் இருந்த சமூக அமைப்பு, பலதரப்பட்ட அதிகார மையங்கள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நபிகளார் நிலைமையை மாற்ற வேண்டியதிருந்தது. இஸ்லாத்தில் இணைந்துவிட்டோம் என்று அறிவிப்பதன் மூலம் சிலர் அதனை அதிகாரம் பெறும் ஒரு சந்தர்ப்பமாகக் கருதினர். மதீனாவில் அருளப்பட்ட முதல் இறை வசனத்தில் இறைவன் இந்த நயவஞ்சகர்கள் (முனாபிக்கள்) பற்றித்தான் எச்சரிக்கிறான் (முனாபிக்குகள்) இவர்கள் தான் இஸ்லாத்தை உள்ளிருந்தே தாக்கும் அபாயகரமானவர்கள். திருக்குர்ஆனின் இரண்டாவது அத்தியாயமான அல்பகராவில் காணப்படும் இந்த நீளமான பதிமூன்று வசனங்களுமே இந்த நயவஞ்சகர்கள் போக்கு பற்றியும், அவர்களின் பேச்சு, பொய்த்தன்மை, துரோகம் பற்றியும் பேசுகின்றன.

> இன்னும் அல்லாஹ்வையும், இறுதி(த்தீர்ப்பு) நாளையும் நம்பியிருக்கிறோம் எனக் கூறுவோர் சிலரும் மனிதர்களில் உளர். ஆயினும் அவர்கள்

நம்பிக்கை கொண்டோர் அல்லர். (இப்படிக் கூறி) அவர்கள் அல்லாஹ்வையும், நம்பிக்கை கொண்டோரையும் ஏமாற்றப் பார்க்கின்றனர்.' (திருக்குர்ஆன் *2:8 ,9* )

திருக்குர்ஆன் மேலும் கூறுவதாவது...

இன்னும் இறை நம்பிக்கை கொண்டிருப்போரை அவர்கள் சந்தித்தால் 'நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம்' என்று கூறுகின்றனர் மேலும் தங்கள் ஷைத்தான்களுடன் தனிமையில் இருக்கும் போது 'நிச்சயமாக நாங்கள் உங்களுடன் தான் இருக்கிறோம்' உண்மையில் நாங்கள் அவர்களை பரிகாசம்தான் செய்து கொண்டிருக்கிறோம்' எனக் சொல்கின்றனர். (திருக்குர்ஆன் *2:14* )

உண்மையிலேயே ஆபத்து தொடர்ந்து இருந்து வந்தது. சிலர் அவ்ஸ்,கஸ்ரஜ் இனக்குழுக்களுக்கிடைய இருந்த பழைய பகைமையை கிளப்பி விட்டனர். இந்த முயற்சிகள் வெற்றி பெறுவதுபோல் தோன்றவும் செய்தது. ஆனால் இஸ்லாத்தின் உயரிய 'சகோதரத்துவக் கொள்கை' அவர்களுக்கு நினைவு கூறப்பட்டு அந்த மோதல்கள் தடுக்கப்பட்டன. கஸ்ரஜ் இனக்குழுவைச் சார்ந்த உபய் மகன் அப்துல்லாஹ் என்பவர் இஸ்லாத்தில் இணைந்தார். ஆனால் இவரை ஒரு தகராறுப் பேர் வழியாகவே பல முஸ்லிம்கள் கருதினர்.

'நயவஞ்சகர்கள்' என்று குர்ஆனில் சொல்லப்பட்ட வார்த்தைக்கு ஒரு சரியான உதாரணமாக இவர் திகழ்ந்தார். அவ்ஸ்' இனக் குழுவைச் சார்ந்த அபூ அமீரும் இப்படிப்பட்ட நபராகவே இருந்தார். அவரும் பல பிரச்சனைகளுக்குக் காரணமாக இருந்தார். அவர்களுக்கு எதிராக எந்த விதமான குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. அவர்களின் நடவடிக்கைகள் தங்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி விடாமல் இருக்க முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருந்தார்கள்.

# சகோதரத்துவத்தின் மேன்மை

முஸ்லிம்களுக்கு மத்தியில் குறிப்பாக மதீனா முஸ்லிம்களுக்கும் மக்காவிலிருந்து இடம் பெயர்ந்து வந்து மதீனாவில் குடியிருந்த முஸ்லிம்களுக்குமிடையில் ஒரு சகோதரத்துவ உடன்பாடு மூலம் கண்டிட நபிகளார் முயற்சி செய்தார்கள். இந்த உடன்பாடு, ஒவ்வொரு அன்சாரியும் (மதீனா வாசிகள்) ஒரு முஹாஜிர் (மக்காவிலிருந்து குடி வந்தவர்கள்) தங்கியிருப்பதற்கும், தன்னுடைய சொத்துக்களை அவருடன் பகிர்ந்து கொள்வதற்கும், நல்ல முறையில் மதீனாவில் வாழ்வதற்கும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தது. அவர் களது உறவு சகோதரத்துவத்தின் அடிப்படையிலும், ஒருவருக் கொருவர் உதவுவதன் அடிப்படையிலும், ஆன்மீகக் கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதன் அடிப் படையிலும் அமைந்திருந்தன. (மக்காவிலிருந்து வந்தவர்கள் மதீனாவில் உள்ள முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி தாங்கள் அறிந்தவற்றைச் சொன்னார்கள்) இந்த உடன்பாடு மதீனாவில் இருந்த புதிய முஸ்லிம்களுக்கு வலிமையையும் ஒற்றுமையையும் அளித்தது.

மிக ஆழமான உறவை நம்பிக்கையாளர்களுக்கிடையே ஏற்படுத்தி இறைவனின் மீதான தங்களது அன்பின் ஆழத்தை வெளிப்படுத்திட உறுதுணை புரிந்தது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இதனைச் சகோதரத்துவத்தின் சிகரமாகக் கருதினார்கள். அவர்களுடைய தோழர்களும் தங்களது அன்றாட வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இதனை அடைய முயற்சித்தார்கள். உயிர்த்தெழச் செய்யும் நாளில் இறைவன் இவ்வாறு கூறுவான் "என்னுடைய அருளைப் பெறுவதற்காக ஒருவரோடு ஒருவர் அன்பு பாராட்டிய அவர்கள் எங்கேயிருக்கிறார்கள்? இன்று நான் அவர்கட்கு நிழலாக இருப்பேன். அங்கு என்னைத் தவிர வேறு நிழல் அவர்கட்கு இருக்காது" பல வேதனையான, சிரமமான ஆபத்தான

சூழ்நிலைகளை முஸ்லிம்கள் எதிர் கொண்டபோதெல்லாம் இந்த சகோதரத்துவத்தையும் நம்பிக்கையையும் பெரிதும் கடைப் பிடித்து வந்தார்கள். இதன் காரணமாக எந்தக் கடுமையான சூழ்நிலைகளையும் அவர்களால் சமாளிக்க முடிந்தது.

இந்தப் பிணைப்பு தான் முஸ்லிம் சமுதாயத்தின் ஆன்மீக மற்றும் சமூக வலிமையின் அடித்தளமாக இருந்தது. இறைவன் முன்பும், மனிதர்கள் முன்பும் அவர்கள் பெற்ற வெற்றியின் ரகசியம் இதில் தான் அடங்கியிருந்தது. இறைவன் மேல் விசுவாசம், பெற்றோர் மீது அன்பு, மக்களுக்கிடையே தோழமை உணர்வு ஆகிய அறநெறிகள் மனித சமுதாயத்தில் நிலை பெற்றிட இது துணை செய்தது.

## தொழுகைக்கான அழைப்பு

மாதங்கள் கழிந்தன. ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும், ஜக்காத் வழங்குவதும் (ஜகாத் என்பதற்கு ஒருவர் தன்னுடைய செல்வத்தைத் தூய்மைப்படுத்துவது அதன் மூலம் இறைவனின் அருளைப் பெற்று உயர்வடைவது என்று பொருளாகும்) முஸ்லிம்களுக்குக் கடமையாக்கப்பட்டது. முஸ்லிம்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் பள்ளி வாசல்களில் கூடித் தொழுகை நடத்தினர்.

தொழுகைக்கு மக்களை அழைப்பதற்கான வழிகள் பற்றி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சிந்திக்கலானார்கள். யூதர்கள், கிறிஸ்துவர்கள் போல் மணி அடிப்பதா அல்லது கொம்பு ஊதுவதா என்பது பற்றியும் ஆலோசித்தார்கள். இந்நிலையில் ஒரு நாள் ஸைதின் மகனான அப்துல்லாஹ் என்ற அன்சாரித் தோழர் நபிகளாரிடம் வந்து தான் ஒரு கனவு கண்டதாகவும், அதில் தொழுகைக்கான அழைப்பு எப்படி இருக்க வேண்டு மென ஒருவர் தனக்குச் சொன்னதாகவும் தெரிவித்தார். அவரை உற்று நோக்கிய நபிகளார், அவர் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும் என நம்பினார்கள். நபிகளார் உடனே ஒரு ஆளை அனுப்பி அடிமையாக இருந்து பின்னர் விடுவிக்கப்பட்ட ஹழ்ரத்

பிலால்(ரலி) அவர்களை அழைத்து வருமாறு கூறினார்கள். அவரது குரல் இனிமையாகவும் கம்பீரமாகவும் இருக்கும் என்பது நபிகளாருக்கு ஏற்கனவே தெரியும். அழைத்து வரப்பட்ட பிலால்(ரலி) அவர்களைப் பள்ளி வாசலுக்கு அருகில் இருந்த ஒரு மிகப் பெரிய கட்டிடத்தின் மாடியில் நின்று கொண்டு அன்சாரித் தோழர் கனவில் கண்டபடி தொழுகைக்கான அழைப்பை விடுக்குமாறு கூறினார்கள். பிலால்(ரலி) யின் அழைப்பு இவ்வாறு இருந்தது.

1. அல்லாஹு அக்பர் – இறைவன்மிகப் பெரியவன் (நான்கு முறை)

2. அஷ்ஹது அல் லாயிலாஹ இல்லல்லாஹ் – அல்லாஹ்ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று சாட்சியம் பகர்கிறேன். (இரு முறை)

3. அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் – (முஹம்மது நபி அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சியம் பகர்கிறேன் (இரு முறை)

4. ஹய்ய அலஸ் ஸலாத் – தொழுகைக்கு விரைந்து வாருங்கள் (இரு முறை)

5. ஹய்ய அலல் ஃபலாஹ் – வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள். (இரு முறை)

6. அல்லாஹு அக்பர் – இறைவன் மிகப் பெரியவன் (இரு முறை)

7. லா இலாஹ இல்லல்லாஹ் – அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் ண்மையான இறைவன்.

அல்லாஹ் ஒருவன், அவன் மிகப் பெரியவன்.

அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அவனின் தூதர், இந்த உலகில் வெற்றிபெற தொழுகைக்கு விரைந்து வாருங்கள் என்ற வாசகங்கள் கொண்ட இந்த அழைப்பே என்றும் மாறாமல் கடந்த பதினைந்து நூற்றாண்டுகளாக உலகில் உள்ள அனைத்துப் பள்ளி வாசல்களிலும் ஐவேளைத் தொழுகைக்கு முன்னர் சொல்லப் பட்டு வருகிறது. இந்த அழைப்பில் காணப்படும் அழுத்தம், எதுகை மோனை, குரல், அதனைச் சொல்லும் போது ஏற்படும் ஒருவித இசை நயம் இவை அனைத்தும் நம்பிக்கை, அழகு, ஆன்மீகம், கலை நோக்கு ஆகியவற்றின் சங்கமமாகத் திகழ்கிறது. பிலால்(ரலி) அவர்கள் 'முஅத்தின்' (அழைப்பவர்) ஆகத் தேர்வு செய்யும் போதே, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தொழுகைக்கான அழைப்பு ஏக இறைவனின், அழைப்பை ஏற்று ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் தொழுகையில் ஈடுபட்டு அவனைச் சந்திக்க வேண்டுமென்ற கடமையை நினைவுப் படுத்துவதாக இருந்திட வேண்டுமென்று விரும்பினார்கள்.

## மதீனா ஒரு மக்கள் நல அரசு

மக்காவிலிருந்து மதீனாவிற்கு வந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும், அவர்களது தோழர்களும் மதீனாவில் படிப்படியாக தங்களது வாழ்க்கையை நிலை நிறுத்தி, புதிய சூழ்நிலையில் தங்களது பங்களிப்பைச் செய்திட ஆரம்பித்தார்கள். மிகவும் சிரமமான சூழ்நிலையில் ஒரு சமூகம் கட்டமைக்கப்பட்டது. எனினும் இனக் குழுக்களுக்கிடையிலான அதிகாரப்போட்டிகள் முஸ்லிம்களுக்கும், மற்றவர்களுக்குமிடையில் இருந்த உறவுகளைச் சிக்கலாக்கின. உடன்பாடுகள் இருந்த போதிலும் இந்நிலை ஏற்பட்டது. எனினும் நபித் தோழர்களின் சமய, ஆன்மீகப் பிரச்சாரங்கள் தொடர்ந்தன. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எப்போதும் கொள்கைகளுக்கு விசுவாசமாக இருக்குமாறு தங்களது தோழர்கட்கு அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார்கள். அதே நேரத்தில் மக்காவில் அதிருப்தி

அதிகமாக இருந்தது. நபிகளாரின் மதீனாப் பயணம் வெற்றியடைந்தது குறித்து எதிரிகள் விசனமடைந்தார்கள். இது அரேபிய தீபகற்பத்தில் அதிகாரச் சமநிலைக்கு ஏற்பட்ட பயமுறுத்தல் என்று கருதினார்கள்.

பல ஆண்டுகளாக, குறைஷியர்கள் மக்கா நகரின் எதிர்ப்பில்லாத தலைவர்களாக இருந்தனர். அவர்கள் மக்கா நகரை தங்களது கட்டுக்குள் வைத்திருந்தனர். வர்த்தகத் திற்காகவும், சிலை வணக்கத்திற்காகவும், மக்கள் ஆண்டுக்கு ஒரு முறை அங்கு கூடுவது வழக்கம். நபிகளாரின் வெற்றிகரமான மதீனா வாழ்க்கை பற்றிய செய்திகள் அரேபியத் தீபகற்பம் எங்கும் பரவியதன் காரணமாக, குறைஷியர்களின் பெருமையும், புகழும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. நபிகளாரும் அவரது தோழர்களும் இது பற்றி அறிந்தே இருந்தார்கள். மக்காவிலுள்ள இனக்குழுத் தலைவர்கள் மற்றும் அவர்களது குடும்பத் தினரிடமிருந்து எப்படிப்பட்ட எதிர்வினை உருவாகும் என்பதை அறியக் காத்திருந்தார்கள்.

## குறைஷியர்களுடன் தகராறு

மக்காவிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் மதீனாவிற்கு குடிபெயர்ந்து வரவில்லை. மக்காவில் இருந்த முஸ்லிம்களுக்கு குறைஷியர்கள் தொடர்ந்து பெரும் தொல்லைகள் விளைவித்து வந்தனர். அவர்கள் நபிகளாரின் வெற்றிகண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தனர். மக்காவிலேயே தங்கியிருந்த பல முஸ்லிம்கள் தாங்கள் இஸ்லாத்தில் இணைந்த விஷயத்தை வெளியில் சொல்லாமலேயே இருந்தனர். உண்மை தெரிந்தால் தங்களுக்கு ஆபத்து நேர்ந்திடுமே என்று அஞ்சியே வாழ்ந்து வந்தனர். சில குறைஷியர்கள், தீபகற்பத்தில் தாங்கள் வகுத்துக் கொண்டு கடைப்பிடித்து வந்த சில மரபுகளையும், விதிமுறைகளையும் மீறி மதீனாவிற்குச் சென்ற முஸ்லிம்களின் சொத்துக்களையும், உடமைகளையும் பறிமுதல் செய்யத் திட்டமிட்டனர். மதீனாவிலிருந்து நபிகளாரும் முஸ்லிம்களும்,

குறைஷியர்களின் இந்த கோழைத்தனமான வெட்கங்கெட்ட செயலினை அறிந்து கோபமடைந்தனர்.

ஓராண்டுக்கு மேலாகவே நபிகளார் செங்கடல் வழியாகச் செல்லும் சில வணிகக் குழுவினரிடம் உடன்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள். மதீனாவைத் தாண்டி வடக்கு நோக்கி ஈராக், சிரியா ஆகிய நாடுகளுக்குச் செல்லும் வர்த்தகக் கூட்டம் இந்த மார்க்கமாகவே சென்று கொண்டிருந்தது. இது குறைஷியர் களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தவே அவர்கள் கிழக்குப் பகுதிக்குச் செல்ல புதிய வழி ஒன்றை கண்டுபிடித்தனர். பதற்றம் படிப்படியாக அதிகரித்து வந்தது. மதீனாவில் வாழும் முஸ்லிம்களின் மாண்பினைக் குலைக்கும் வண்ணம், அப்பகுதியிலிருந்த சில இனக்குழுக்களை முஸ்லிம்களுக்கு எதிராகக் குறைஷியர்கள் தூண்டி விட்டனர். இதே கால கட்டத்தில், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் தூதுக் குழுக்களை மக்காவிற்கு அனுப்பி, குறைஷியர்களின் செயல் பாடுகளையும், திட்டங்களையும், அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக ஏற்படுத்தி வரும் கூட்டணி பற்றியும் உளவறிந்து வர ஏற்பாடு செய்தார்கள். குறைஷியர்களின் எதிர்ப்பு பெருமளவு அதிகரித்து வந்ததால், கண்காணிப்பு மிகவும் அவசியமானதாக இருந்தது. அதைத்தான் நபிகளார் செய்தார்கள். கிடைத்த தகவல்களின்படி மோதல் நிச்சயம் ஏற்படும் என நபிகளார் கருதினார்கள்.

# ஜிகாத் தடுத்தல்

எதிரிகளிடமிருந்து தாக்குதல்கள் வந்த போதெல்லாம் நபிகளார் குர்ஆனிலிருந்தே அதற்கான விளக்கத்தைப் பெற்று, தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். இறைவசனங்கள் இதைத்தான் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தன. 'ஜிகாத்' என்ற வார்த்தை அடங்கிய முதலாவது இறைவசனம் இது தான்.

> எனவே(நபியே) நிராகரிப்பாளர்களின் பேச்சை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாதீர். மேலும் இந்த குர்ஆனைக் கொண்டு அவர்களுடன் பெரும் ஜிகாதில் – கடுமையான போராட்டத்தில் ஈடுபடுங்கள். (*25:52*)

எல்லா வகையிலும் நெருக்கடியைச் சந்திக்க நேர்ந்தபோது, அதனைத்தடுப்பதற்கான வழிமுறைகள் அடங்கிய இறை வசனங்கள் நபிகளாருக்கு அருளப்பட்டன. அதில் அவர்கள் செய்ய வேண்டிய ஜிகாத்(தடுப்பது) பற்றியும் கூறப்பட்டிருந்தது. ஜிகாத் என்ற வார்த்தையின் வேர்ச் சொல் அரபு மொழியில் "ஜஹத" என்பதாகும். இதன் உண்மையான பொருள் 'முயற்சி மேற்கொள்வது' 'தடுப்பது' என்பதேயாகும் (அடக்கு முறையையும், தொந்தரவினையும் தடுப்பது) அநீதிக்கும், அடக்குமுறைக்கும் எதிராக ஒருங்கிணைந்து போராடுவதே 'ஜிகாத்' எனப்படும். பிறமக்களை அடக்குவதற்காகவோ, கௌரவத்திற்காகவோ, பெருமைக்காகவோ, அழிப்பதற் காகவோ செய்யப்படும் போர் ஜிகாத் அல்ல. குர்ஆனில் கூறியுள்ளபடி குறைஷியர்களின் கொடுமைகளைத் தடுத் திடுமாறு இறைவன் நபிகளாருக்கு ஆணையிட்டான் அநீதிக்கு எதிரான ஆன்மீக, அறிவார்ந்த ஆயுதமே ஜிகாத் எனப்படும்.

கேலி செய்வோர், அவமரியாதை செய்வோர், அவமானப்

படுத்துவோர், தாக்குதல் நடத்துவோர், கொடுமைகள் புரிவோர், கொலை செய்வோர், அத்தாட்சிகளையும் அற்புதங்களையும் விரும்புவோர் என அனைத்துத் தரப்பினருக்கும் நபிகளார் திருக்குர்ஆனையே ஆயுதமாகவும், பாதுகாப்புக் கவசமாகவும் பயன்படுத்திப் பதிலளித்தார்கள். இந்த இறை வசனங்கள் மனிதர்களுக்கு உலகில் சந்திக்கின்ற அனைத்துத் துன்பங்களி லிருந்தும் விடுபடவும், அதனைத் தடுப்பதற்கான சக்தியையும் அளிக்கிறது. ஏனெனில் இந்த உலக வாழ்வின் மாயைக்கு அப்பால் ஒரு வாழ்வு இருக்கின்றது என்பதை இவை நமக்குச் சொல்கின்றன. குறைஷித் தலைவர்கள் நிலைமை அப்படியே நீடித்திருக்க விரும்பவில்லை. அடுத்தடுத்து வேகமாக இறைவசனங்கள் அருளப்பட்டபோது, அவர்கள் தங்களுடைய அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள். ஓரிறை பற்றியும், மறுமை பற்றியும், இறுதித் தீர்ப்பு நாள் பற்றியும், நன்மையை ஏவுவது பற்றியும் மக்களுக்கு எடுத்துக் கூறி முதலில் இஸ்லாத்தில் இணைந்த தோழர்கள் நபிகளாரைப் போலவே ஜிகாத்தில் ஈடுபட்டனர். திருக்குர்ஆன் அவர்களுக்கு ஆன்மீகத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளக் கூடிய ஆயுதமாகவும், கொடுமைகளிலிருந்து காத்திட்ட கேடயமாகவும் விளங்கியது. இருந்தபோதிலும், தொடர்ந்து வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த வகை ஜிகாத் சில நேரங்களில் பொறுத்துக் கொள்ள இயலாததாக இருந்தது. ஒரு நாள் சில முஸ்லிம்கள் நபிகளாரிடம் வந்து நமக்கு உதவி செய்யும் பொருட்டு இறைவனை வேண்டமாட்டீர்களா?' என்று கேட்டனர். நபிகளார் அதற்கு அளித்த உறுதியான பதில் பின்வருமாறு...

"உங்களின் முன் நிற்கும் நம்பிக்கையாளர்களுள் பலர் அவர்களுக்கென வெட்டப்பட்டுள்ள குழிகளில் வீசப்பட்டு அவர்களது உடல்வேறு, தலைவேறு, கால்வேறாக இரண்டாக அறுக்கப்பட்ட போதும் அவர்கள் மார்க்கத்தை விட்டுச் செல்லவில்லை. அவர்களது சதை எலும்புகள் இரும்புச் சீப்பு கொண்டு பிய்த்து எடுக்கப்பட்டபோதும் அவர்கள் மார்க்கத்தை

விட்டுச் செல்லவில்லை. இறைவன் அருளால் அவர்களது நோக்கம் நிச்சயமாக நிறைவேறும். எனவே ஒரு பயணி சானாவிலிருந்து ஹத்ர மௌத் வரை தனியாக இறைவனையும் ஆட்டு மந்தையைத் தாக்க வரும் ஓ நாய்களையும் தவிர வேறு யாருக்கும் பயப்படாமல் செல்ல முடியும் ஆனால் நீங்கள் மிகவும் பொறுமை இழந்துள்ளீர்கள்."

எனவே அவர்கள் அமைதியா ளர்களாக, பொறுமையுடையவர்களாக, விடா முயற்சியா ளர்களாக இறைவன் மீதும் அவனது அதிகாரத்தின் மீதும் நம்பிக்கை இழக்காதவர்களாக இருந்தனர். நபிகளார் தங்களுடைய தோழர்களுக்கு வேதனைக்கு மத்தியிலும் இறைவன் மீது நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்று போதித்தார்கள். உடல் மற்றும் மன ரீதியாக அடைந்த துன்பங்களை அனுபவித்த ஒருவர், அதனை ஏற்றுக் கொண்டு தன்னைப்பற்றிய சந்தேகம் இருந்த போதிலும் இறைவனைப் பற்றி சந்தேகம் கொள்ளாமல் இருப்பதே விசுவாசத்தின் உன்னத நிலையாகும்.

## கத்ல்
## ஆயுதம் கொண்டு தடுத்தல்

இந்தக் கால கட்டத்தில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட தொடர்ச்சியான இரண்டு இறைவசனங்கள் முற்றிலும் மாறுபட்ட தன்மையில் இருந்ததோடு முந்தைய நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட விளைவை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்திருந்தன. பதின்மூன்று ஆண்டு காலமாக, குறைஷித் தலைவர்கள் நிகழ்த்திட்ட கொடுமைகளையும், வன்முறைகளையும் பொறுத்துக் கொண்டு அமைதியாக இருக்குமாறு முஸ்லிம் களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மோதலை தவிர்ப்பதற்காக அவர்கள் அனைத்துத் துன்பங்களையும், தொல்லைகளையும் பொறுத்துக் கொண்டு பின்னர் மதீனாவுக்கு இடம் பெயர்ந்தனர்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மதீனாவில் குடியேறிய பிறகு, குறைஷியர்கள் தங்களுடைய எதிர்ப்பை மேலும் தீவிரமாக்குவார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்ததுதான். மக்காவின் அதிகாரச் சமநிலையையும் அரேபிய தீப கற்பத்தின் அதிகார மையங்களை தகர்ப்பதாகவும் அமைந்திட்ட நபிகளாரின் பிரச்சாரத்தை எதிர் கொள்ள அவர்கள் மாற்று வழிகளைக் கண்டறிய முயற்சித்தனர். தங்களது சமயமும் இராணுவ நிலைகளும் ஆபத்தில் இருக்கின்றன என்பதை குறைஷியர்களும் மற்ற இனக் குழுவினரும் உணர்ந்து கொண்டனர். ஹிஜ்ரா ஒரு விடுதலையாக மட்டுமல்லாது, வரவிருக்கிற போராட்டங் களையும் மோதல்களையும் அறிவிப்பதாகவும் இருந்தது. பின்னர் வந்த இறை வசனங்கள் இந்த சந்தேகங்களைப் போக்குவதாக இருந்தன.

> எவர்களுக்கு எதிராகப் போர் புரியப்படுகின்றதோ அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு விட்டது. ஏனெனில் அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக் கின்றார்கள். திண்ணமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்ய ஆற்றல் பெற்றவனாக இருக்கிறான். தங்களின் வீடுகளை விட்டு நியாயமின்றி அவர்கள் வெளியேற்றப் பட்டார்கள். அல்லாஹ் தான் எங்கள் இறைவன் என்று அவர்கள் கூறியது தான் அவர்கள் செய்த குற்றம்.' (குர்ஆன் 22:39–40)

இது பற்றி பின்னர் ஒரு முறை குறிப்பிட்ட ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்கள், இந்த இறை வசனங்களைக் கேட்டவுடனேயே வரவிருக்கின்ற மோதலையும், போரையும் தான் உணர்ந்து கொண்டதாகக் குறிப்பிட்டார்கள். இது போலவே நபிகளாரும் அவரது தோழர்களும் தெரிவித்தார்கள். இதன் பின்னர் முஸ்லிம்கள், எதிரிகளின் அடக்கு முறைகளுக்கு எதிராக இனிமேல் தாங்கள் பொறுமையாக இருக்கத் தேவையில்லை என்றும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடவேண்டும் என்றும் முடிவு செய்தார்கள். இந்நிலையில், சுய நலத்திற்கும்

பேராசைக்கும் எதிராகப் போராடும் 'ஜிகாத்' ஒரு புதிய பரிணாம மாற்றம் பெற்றது. ஆயுதம் தாங்கித் தாக்க வரும் எதிரிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள ஆயுதங்களை ஏந்தலாம் என முஸ்லிம்களுக்கு உணர்த்தப் பட்டது. இதற்கு 'அல் கத்ல்' என்று பெயர். ஜிகாத்தின் எல்லா வடிவங்களும் அநீதிக்கு எதிரானவை. இது பற்றி குர்ஆன் குறிப்பிடுவதாவது...

> அல்லாஹ் மக்களில் சிலரைக் கொண்டு சிலரைத் தடுத்துக் கொண்டிராவிடில் மடங்கள், கிறிஸ்துவ ஆலயங்கள், யூத ஆலயங்கள், அல்லாஹ்வின் பெயர் அதிக அளவில் கூறப்படும் மஸ்ஜிதுகள் ஆகியவை தகர்க்கப்பட்டிருக்கும். திண்ணமாக தனக்கு உதவி செய்வோருக்கு அல்லாஹ் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை வாய்ந்தவனும், யாவற்றையும் மிகைத்தவனுமாவான். (குர்ஆன் *22:40*)

ஒரு தனி மனிதனிடம், ஒரு நாட்டிடம் அல்லது ஒரு சாம்ராஜ்யத்திடம் அதிகாரங்கள் குவிந்திருப்பது மக்களிடையே உள்ள பன்முகத் தன்மைகளை அழித்து அது பல்வேறு வழிபாட்டுத் தலங்களின் அழிவிற்கும் வழிவகுக்கும். இது இறைவன் அனுமதித்துள்ள வழிபாட்டு சுதந்திரத்திற்கு எதிரான தாகும் எனவே படைகளின் மோதலும் போருக்கு எதிரான மக்களின் உணர்வும் ஒரு முரண்பட்ட நிலை போல் தோன்றி னாலும் மக்களிடையே சமாதானத்தை உறுதி செய்யவும் இது பயன்படுகிறது. குர்ஆனின் இன்னொரு வசனம் இதனை உறுதிப் படுத்துகிறது.

> இவ்வாறு மனிதர்களில் ஒரு கூட்டத்தைப் பிறிதொரு கூட்டத்தைக் கொண்டு அல்லாஹ் தடுக்காவிட்டால் இந்தப் பூமியே குழப்பத்தால் சீர்குலைந்து போயிருக்கும். (குர்ஆன் *2:251*)

# ஜிகாத்
## முயன்று நல்லதைச் செய்தல்

தன்னுடைய "இஸ்லாமில்லாத ஒரு உலகம்" (*A world without Islam*) என்ற புகழ்பெற்ற நூலில், மிகச் சிறந்த சமூக விஞ்ஞானியும், அமெரிக்காவிலுள்ள தேசிய புலனாய்வுக் குழுவின் தலைவராகப் பணியாற்றியவருமான 'கிரஹாம் *E*. ஃபுல்லர்' என்பவர் கூறியிருப்பதாவது... ஜிகாத் என்ற கொள்கையும், அது தொடர்பான விஷயங்களும் கிறிஸ்துவர்களின் 'நியாயப்போருக்கு' ஒப்பானதாகும். போர்களின் போது முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டிய நெறி முறைகளைப் பற்றி அது கூறுகிறது. ஆனால் தற்போது மேற்கத்திய நாடுகள் இஸ்லாத்துடன் இணைத்துப் பேசும் சர்ச்சைக்குரிய உணர்ச்சிகரமான ஒரு வார்த்தையாக அது மாறிவிட்டது. இஸ்லாத்தைக் குறை கூறுபவர்கள் ஒரு நாள் கூட இந்த வார்த்தையைப் பயன்படுத்தாமல் இருப்பதில்லை.

பெரும்பாலான நோக்கர்கள் 'ஜிகாத்' என்ற வார்த்தையின் தோற்றம் பற்றியும், அதன் பயன்பாடு பற்றியும் ஆராயும் போது பொறுமையிழந்து விடுகிறார்கள். மேற்கத்திய உலகத்தின் அமைதியையும், ஸ்திரத் தன்மையையும் பாதிக்கும் ஒரு பயங்கர வார்த்தையாக அதனைப் பார்க்கிறார்கள். குர்ஆனிலும், ஹதீஸிலும், ஜிகாத் என்ற வார்த்தைக்கு பல அர்த்தங்கள் உள்ளன. 'ஜிகாத்' என்ற அரேபியச் சொல் முயற்சி' அல்லது 'போராட்டம்' என்ற வேர்ச் சொல்லிருந்து வந்ததாகும்.

ஒரு தனி மனிதன் அறநெறியோடு வாழ முயற்சிக்கும் போராட்டமாகவும், ஒருவன் தனது தனிப்பட்ட வாழ்வில் சமயப் பண்புகளைப் பேணும் முயற்சியாகவும் தன்னை முன் மாதிரியாகக் கொண்டு இஸ்லாத்தையும் அதன் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் பிரச்சாரம் செய்வதற்கான ஒரு வழியாகவும் முஸ்லிம்கள் இந்த ஜிகாத்தைப் பார்க்கின்றனர். எனவே இந்த வார்த்தை முஸ்லிம்கள் தங்களுடைய சமய மேம்பாட்டிற்காக

அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்திடும் முயற்சிகளுடன் தொடர்புடையது. இது அரேபியர்களின் பேச்சு வழக்கில் "நான் முயற்சி செய்வேன்". "என்னால் முடிந்த அளவு'" என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது. அது தான் பெரிய ஜிகாத்' என்றும், 'தனிப்பட்ட ஜிகாத்' என்றும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது.

"சிறிய ஜிகாத்" என்ற வார்த்தையை போர்களின் போது செய்ய வேண்டிய இராணுவ முயற்சிகளுக்கே நபிகளார் பயன்படுத்தினார்கள். இந்தப் போர்கள் தற்காப்பையும், இஸ்லாத்தையும், இஸ்லாமிய சமூகப் பாதுகாப்பையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. மதீனாவிலிருந்த முஸ்லிம் சமூகம் முஸ்லிமல்லாதவர்களின் முற்றுகைக்குள் இருந்ததாலும், மக்கா வாசிகள் அடிக்கடி படையெடுப்புகள் நிகழ்த்தியதாலும், முஸ்லிம்களின் தற்காப்பே குர்ஆன் வசனங்களின் மையப் புள்ளியாகவும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கவலையாகவும் இருந்தன. ஆனால் பின்னர் இஸ்லாமிய சமுதாயம் நிலை பெற்று அது பிற பகுதிகளுக்கும் பரவியது. பின்னர் அது பிற அரசுகளுடன் போர் தொடுத்து அவற்றையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

போர் விதிகள் பற்றி இஸ்லாமியச் சட்டங்கள் மிகவும் விரிவானவை. போரின் போது பெண்கள், குழந்தைகள் தாக்கப்படுவதை அது தடுக்கிறது. தேவைக்கு அளவே படைகள் பயன்படுத்தபட வேண்டுமென்றும், பொதுச் சொத்துகளை அழிக்கக் கூடாதென்றும், சட்டபூர்வமான ஆட்சியாளரோ அல்லது அரசின் தலைவரோ தான் ஜிகாதை அறிவிக்க வேண்டுமென்றும், ஜிகாத்திற்குப் புறம்பான போருக்கு அனுமதி இல்லை என்றும் அது வரையறுத்துள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர்களின் போது பெண்கள், குழந்தைகள் முதியவர்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் மடாலயங்களில் உள்ளவர்கள் ஆகியோரை துன்புறுத்தக் கூடாது என தங்களது படையினருக்குக் கட்டளையிட்டார்கள்.

# பெரிய ஜிகாத்

இஸ்லாத்தின் உண்மையை புரிந்து கொள்வதற்காக நாடி வந்த ஆண்கள், பெண்கள் என அனைவரையும் நபிகள் நாயகம்(ஸல்) இன் முகத்துடன் வரவேற்று அவர்கள் சொன்னதைக் கேட்டு, அவர்கள் எழுப்பிய வினாக்களுக்குப் பதில் அளித்து அவர்களின் முன்னேற்றத்தையும் கவனித்து வந்தார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு ஹுனைன் போர் முடிந்து நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் திரும்பிய போது சிறிய ஜிகாத்தை முடித்து விட்டுத் திரும்பியிருக்கிறோம். (சீர் திருத்தத்திற்கான முயற்சிகள், எதிர்ப்புகள், போராட்டங்கள்) என்று கூறினார்கள். இறைவனின் தூதரே 'எது பெரிய ஜிகாத்' என ஒரு தோழர் நபிகளாரிடம் கேட்ட போது அவர்கள். தனக்குள் போராடுவது (தன் மன இச்சையை எதிர்த்து) என்று குறிப்பிட்டார்கள். முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, அனைத்து மனிதர்களுக்கும் 'தன் மனதுடன் போராடுவது' என்பது மிகவும் சிரமமான ஒன்றாகும். ஆனால் அதே நேரத்தில் அது மிகவும் உயர்வானது. ஒருவன் தான் நேர்மையாக இருப்பதோடு மிகவும் புரிதலும், மன்னிக்கும் மனப் பான்மையும் கொண்டவனாக இருக்க வேண்டும். போரும், சிறிய ஜிகாத்தும் இறைவனுக்காக உயிர்துறப்பது எவ்வளவு கடினம் என்பதை காட்டுகிறது. ஆனால் இறைவனுக்காக, அவனது ஒளியில் வெளிப்படையாகவும், பொறுமையாகவும், சுதந்திர மாகவும் ஆன்மீகத் தேடலுடனும் இசைவுடனும் வாழ்வது அதைவிட எவ்வளவு கடினமானது என்பதைப் பெரிய 'ஜிகாத்' சுட்டிக் காட்டுகிறது.

# 10

# முதல் போர் – பத்ர்

குறைஷியர்களின் தலைவரான அபூசுஃப்யானின் தலைமையில் ஒரு வர்த்தகக் குழு வியாபாரத்தை முடித்துக் கொண்டு பெருவாரியான பொருட்களுடன் சிரியாவிலிருந்து வந்து கொண்டிருப்பதை நபிகளார் அறிந்து கொண்டார்கள். அப்போது தங்களது வணிகக் கூட்டத்தை பாதுகாப் பதற்காகவும் முஸ்லிம்களின் எழுச்சியை ஒடுக்குவதற்காகவும் குறைஷியர்கள் மதீனாவிற்கு ஒரு படையை அனுப்பி இருந்தனர்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்த 313 முஸ்லிம் தோழர்களைத் தயாராக வைத்திருந்தார்கள். அவர்கள் போரில் போதிய பயிற்சி இல்லாதவர்களாக இருந்த போதிலும் ஆயுதங்கள் வைத்திருந்தனர். நபிகளார் சுகவீனமுற்றிருந்த தனது மகள் ருக்கையாவை கவனித்துக் கொள்வதற்காக ஹழ்ரத் உஸ்மான்(ரலி) அவர்களை மக்காவிலேயே தங்கியிருக்கும்படி சொல்லியிருந்தார்கள்.

தாக்குதல் பற்றி உளவாளிகள் அபூ சுஃப்யானை எச்சரித் திருந்தார்கள். அவர் மக்காவிலிருந்த குறைஷியர்களுக்கு தனக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து பற்றியும் உதவி கேட்டும் தகவல் அனுப்பியிருந்தார். இந் நிலையில் திடீரென்று அவர் தனது வழியை மாற்றி வேறு வழி செல்ல ஆரம்பித்தார். எனவே தாக்குதலிலிருந்து தப்பி விட்டதாக அவர் உறுதியாக நினைத்து 'ஆபத்து முடிந்து விட்டது இனி உதவி தேவையில்லை' என்று தூதர்கள் மூலமாக குறைஷித் தலைவர்கட்குச் செய்தி அனுப்பினார். இந்த நேரத்தில் குறைஷியர்கள் ஆயிரம் பேர் கொண்ட ஒரு பலம் வாய்ந்த படையைத் தயார் செய்து விட்டனர்.

ஆபத்து இல்லை என்று தகவல் வந்த போதிலும், அதனைப் பொருட்படுத்தாது படையை அனுப்பியே தீர வேண்டுமென்று அபூஜஹ்ல் வற்புறுத்தியதன் பேரில் படையை அனுப்ப முடிவு செய்தனர். மோதலைத் தவிர்க்க முடியும் என்ற சூழ்நிலையிலும், முஸ்லிம்களுக்கு தங்களது வலிமையைக் காட்ட வேண்டும் என்ற நோக்கில் குறைஷியர்கள் செயல்பட்டனர். மதீனாவிலிருந்து 130 கி.மீ தொலைவில் தென் மேற்கில் இருந்த 'பத்ரு' என்ற இடத்தில் முகாமிட்டிருந்த நபிகளாரும் அவரது தோழர்களும் மக்கா விலிருந்து ஒரு சக்தி மிக்க படை வந்து கொண்டிருப்பது குறித்து கேள்வியுற்றனர். தங்களிடம் உள்ள படையை விட மூன்று மடங்கு ஆட்கள் அதிகம் கொண்ட படை மக்காவிலிருந்து சண்டையிட வேண்டும் என்ற நோக்குடன் வந்து கொண்டிருக்கிறது என்பதை நபிகளார் அறிந்து கொண்டார்கள். இந்தப் போருக்கு முஸ்லிம்கள் உண்மையில் தயாராக இல்லை.

## ஆலோசனை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களுடைய தோழர்களுடன் போரை எதிர் கொள்வது குறித்து ஆலோசனை நடத்தினார்கள். அவர்கள் முழு அளவிலான போருக்குத் தாங்கள் தயாராக இருப்பதாக உறுதி அளித்தனர். மிக்தாத்(ரலி) அவர்கள் கூறியதாவது... 'நீங்கள் இறைவனின் துணை கொண்டு முன்னேறிச் செல்லுங்கள். சண்டை புரியுங்கள். நாங்களும் உங்களுடன் சேர்ந்து சண்டையிடுவோம் வலது புறத்திலும், இடது புறத்திலும், உங்களுக்கு முன்னும், பின்னும் நின்று) இது கேட்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மகிழ்ந்தார்கள். இயல்பாகவே முஹாஜிரிகளிடமிருந்து (மக்காவிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள முஸ்லிம்கள்) இந்த ஆதரவை அவர்கள் எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு மதீனா முஸ்லிம்களிடமிருந்து தான் (அன்ஸார்கள்) தெளிவான ஆதரவு தேவைப்பட்டது. ஏனெனில் குறைஷியர்களுடன் அவர்கட்கு

நேரடியாக எந்த விதமான மோதலும் இல்லை. மேலும் அவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி மதீனாவில் போர் நடந்தால் தான் அவர்கள் உதவி செய்ய வேண்டும். மதீனாவிற்கு வெளியே நடைபெற்றால் அல்ல. அன்ஸார்களின் சார்பாகப் பேசிய ஸாத்'(ரலி) அவர்கள் 'நீங்கள் விரும்பியவாறு செய்யுங்கள். நாங்கள் உங்களுடன் இருப்போம். சத்தியத்தை எடுத்துச் சொல்ல உங்களை அனுப்பிய இறைவன் கடலில் குதிக்க வேண்டுமென்று ஆணை இட்டாலும் உங்களுடன் சேர்ந்து நாங்களும் கடலில் குதிப்போம். நாங்கள் யாரும் பின் தங்கி இருக்க மாட்டோம்' என்று உறுதிபடக் கூறினார். இரண்டு குழுவினரின் ஆதரவையும் பெற்ற நிலையில் நபிகளார் குறைஷியர்களின் படையை நோக்கி முன்னேறிச் செல்ல முடிவு செய்தார்கள்.

## அறிவார்ந்த படைப்பாக்கம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கருத்துச் சுதந்திரத்தை எவ்வளவு தூரம் ஊக்குவித்தார்கள் என்பதையும் கூட்டு வாழ்க்கையில் எவ்வளவு தூரம் ஜனநாயக நெறிமுறைகளைக் கடைப்பிடித்தார்கள் என்பதையும் இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும். அரசியல், மற்றும் சமயத் தலைவர்களின் வாழ்க்கை முறை எப்படி அமைந்துள்ளது என்பதை ஆய்வு செய்வது இங்கு பொருத்தமாக இருக்கும். அரசியல் தலைவர்கள் கடவுள்களால் வழி நடத்தப்படுகிறார்கள், அல்லது கடவுளின் அவதாரங்களாக கருதப்படுகிறார்கள். எனவே அவர்கள் யாரிடமும் ஆலோசனை பெறத் தேவையில்லை என்ற நிலை தற்போது உள்ளது. இதுதான் அன்றைய காலத்திலும் இருந்தது. இப்போதும் இருக்கிறது. தங்களின் தூதுத்துவ வாழ்க்கை முழுவதும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது தோழர்களின் ஆலோசனைகளைக் கேட்டுப்பெற்றும், கருத்துக்களைச் சொல்ல அவர்கட்கு வாய்ப்பளித்தும், அவர்கள்

சொன்ன கருத்துக்களை கவனமாகக் கேட்டும் செயல் பட்டுள்ளார்கள். மேலும், நபிகளார் பயிற்சி முறை ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் முஸ்லிம்கள் தங்களது திறமையை மேம்படுத்தவும், அதனை வெளிப்படுத்தவும் வழிவகை செய்திருந்தார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது தோழர்களிடம் பல்வேறு விஷயங்கள் பற்றி அடிக்கடி கேள்வி கேட்பார்கள். ஆனால் அதற்கான பதிலை உடனே அளிக்கமாட்டார்கள். தோழர்களிடமிருந்து மாறுபட்ட பதில்கள் வந்த பின்னரே தமது பதிலைச் சொல்வார்கள். சில சமயங்களில் முரண்பட்ட பதில்களைக் கூறி தோழர்கள் அதற்கு என்ன சொல்கிறார்கள் என்று பரிசோதிப்பார்கள். அவர்கள் அந்த விஷயத்தைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டுமென்பதே நபிகளாரின் நோக்கமாகும். சில உதாரணங்கள்...

"தன்னுடைய எதிரியை வீழ்த்துபவன் பலமானவன் அல்ல" என்று நபிகளார் ஒரு முறை கூறிட, அதற்குத் தோழர்கள் அப்படியானால் பலமானவன் யார்' என்று திருப்பிக்கேட்க, அதற்கு நபிகளார் "கோபம் ஏற்படும் போது யார் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறானோ அவனே பலமானவன்" என்று குறிப்பிட்டார்கள். இன்னொரு முறை நபிகளார் "செல்வம் ஒருவனுடைய செழிப்பான வாழ்க்கையில் இல்லை" என்று கூறியபோது, அதற்குத் தோழர்கள் விளக்கம் கேட்க, "மனநிறைவுதான் உண்மையான செல்வம்" எனப் பதிலளித்தார்கள். ஒரு நாள் நபிகளார் "பொது அறிவுக்கு முரண்பாடான வகையில் "நியாயமாக இருந்தாலும், இல்லா விட்டாலும் நீங்கள் உங்கள் சகோதரனுக்கு உதவுங்கள்" என்று கூறினார்கள். "ஒரு நியாயமற்ற சகோதரனுக்கு எப்படி உதவ முடியும்" என்று தோழர்கள் நபிகளாரிடம் கேட்டதற்கு, "அநீதி இழைப்பதிலிருந்து அவனைத் தடுத்திடுங்கள். அதுவே அவனுக்குச் செய்திடும் உதவியாகும்" என்றார்கள். இப்படிக் கேள்வி கேட்டு, அதற்கு சற்று முரண்பட்ட பதில்களை அளித்து,

நபிகளார் தனது தோழர்கள் சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்றும், எதனையும் குருட்டுத்தனமாக நம்பிவிடக் கூடாது என்றும் கூறினார்கள். இதன் மூலம் தோழர்கள் தங்களது அறிவுத் திறமையினை வளர்த்துச் கொள்ளவும் எப்போதும் துணிவாகவும், சுதந்திரமாகவும் இருந்திடவும், சிக்கலான நேரங்களில் தக்க ஆலோசனை வழங்கிடவும் நபிகளார் கடைப்பிடித்த இந்த முறை துணை புரிந்தது. இதன் மூலம் தோழர்களுக்கு பேசுவதற்கும், சிந்திப்பதற்கும் தங்களது தலைமைப்பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கும் நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

இளைஞரான 'ஹுபாப்'(ரலி) அவர்கள் இதற்குச் சிறந்த உதாரணமாவார். பத்ருப் போர்க்களத்திற்கு வந்தபோது, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முகாமை தாங்கள் கண்ட முதல் கிணற்றருகே நிறுவினார்கள். இதனைக் கண்ணுற்ற ஹுபாப்(ரலி), நபிகளாரிடம் வந்து 'நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள இந்த இடம் உங்களுக்கு இறைவனால் அறிவிக்கப்பட்ட இடமா? அப்படியெனில் இந்த இடத்திலிருந்து முன்னோக்கியோ, பின்னோக்கியோ செல்லக்கூடாதா? அல்லது நீங்கள் மேற்கொள்ளும் போர்த் தந்திரமா?' என வினவினார். நபிகளார் "இது தம்முடைய தனிப்பட்ட முடிவு" என்று உறுதியாகத் தெரிவித்தார்கள். எதிரிகள் வரக்கூடிய வழியில் உள்ள பெரிய கிணற்றின் அருகில் நம்முடைய முகாமை அமைத்துப் பின்னர் அந்தப் பகுதியில் உள்ள மற்றக் கிணறுகளை மூடிவிட்டால் எதிரிகளான குறைஷியர்கட்கு தண்ணீர் கிடைக்காது என்று 'ஹுபாப்' ஆலோசனை கூறினார். ஹுபா(ரலி)யின் இந்த ஆலோசனையைக் கவனத்துடன் கேட்ட நபிகளார், அதனை ஏற்றுக்கொண்டு முகாமை ஹுபாப் சொன்ன இடத்திற்கு மாற்றினார்கள்.

இறைவனால் நபிகளாருக்கு அருளப்பட்ட இறை வசனங்கள் என்றால் அதனை எந்த விதமான ஆலோசனையுமின்றி தோழர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அது

நபிகள் நாயகம்(ஸல்) என்ற மனிதரிடமிருந்து வந்த ஆலோசனை என்றால் அது பற்றி விவாதித்து மாற்றம் செய்ய வேண்டு மானாலோ அல்லது அதனை மேம்படுத்த வேண்டுமானாலோ அதனைச் செய்திட தோழர்கள் தயங்கியதில்லை. இந்த இரண்டிற்குமான வேறுபாட்டை அவர்கள் அறிந்தே இருந்தார்கள். மனித விவகாரங்களைப் பொறுத்த அளவில் நபிகளாரின் அதிகாரங்கள் வரை முறையற்றதாகவோ, ஒடுக்கக் கூடியதாகவோ அமையவில்லை. தம்முடைய தோழர்கள் ஆலோசனையில் ஈடுபட நபிகளார் அனுமதி அளித்தார்கள். நபிகளாரின் போதனைகள், திறமைகளையும் கல்வி ஞானத்தையும் வளர்த்துக் கொள்ள தோழர்கட்கு பெரிதும் உதவின.

தம்முடைய தோழர்களுக்கு அவர்கள் ஆண்களாயினும் சரி பெண்களாயினும் சரி சுயமாகச் சிந்திப்பதற்கும் எதிர்த்துக் கேள்விகள் கேட்பதற்கும் மரியாதைக்குறைவு எதுவும் எற்பட்டுவிடுமோ என்று கருதாமல் தம்முடைய கருத்துக்களுடன் முரண்படுவதற்கும் நபிகளார் உரிமை வழங்கியிருந்தார்கள். இப்படி, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தம்முடைய தோழர்கள் மீது மிகுந்த அன்பும், அவர்களது அறிவுத் திறமையின் பால் நம்பிக்கையும் கொண்டிருந்தார்கள். அது போலவே தோழர்களும் தங்களது தலைவரான நபிகளார் பால் மிகுந்த அன்பும், மரியாதையும் கொண்டிருந்ததோடு, அவர்கள் அளித்திட்ட இந்த அறிவார்ந்த வாய்ப்புக் களையெல்லாம் நன்கு பயன் படுத்திக் கொண்டார்கள்.

## பத்ருப் போர்

குறைஷியர் தலைவர் அபூசுஃப்யானின் வர்த்தகக் கூட்டம் தப்பிச் சென்றுவிட்ட காரணத்தால் ஒரு முழு அளவிலான போர் நிச்சயம் என்று உணர்ந்த நபிகளார், அதனைத் தவிர்க்கும் பொருட்டு குறைஷியர்களுடன் பேச விரும்பினார்கள். குறைஷித் தலைவர்களைச் சந்தித்து திரும்பிச் செல்லும்படியும், போரைத்

தவிர்க்கும்படியும் சொல்லுமாறு உமர்(ரலி) அவர்களிடம் வேண்டினார்கள். சில குறைஷித் தலைவர்கள் போரைத் தவிர்க்கவே விரும்பினர். ஆனால் பல தலைவர்கள் இதனை ஏற்காது, தங்கள் தரப்பில் எண்ணிக்கை அதிகம் இருப்பதால் சாதகம் தங்களுக்குத் தான் என்று கருதி உமர்(ரலி)யின் ஆலோசனையை ஏற்க மறுத்தனர். உமர்(ரலி) அவர்களின் இந்த முயற்சியை அவர்கள் பலவீனத்தின் அறிகுறி என்று எண்ணினர். முஸ்லிம்களை அழிப்பதற்கான நல்ல வாய்ப்பாக இதனைக் கருதினர்.

உளவுத் தகவல்கள் மூலம் அனைத்துச் செய்திகளையும் கிடைக்கப் பெற்ற நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், எதிரிகளை மதீனாவிற்கு 130கி.மீக்கு அப்பாலுள்ள 'பத்ரு' என்ற இடத்தில் (இது மக்காவிலிருந்து 319 கி.மீ தொலைவில் உள்ளது) சந்திக்கத் தயாரானார்கள். 313 தோழர்களை இந்தப் போருக்கு அவர்கள் தயார்படுத்தி வைத்திருந்தார்கள்.

இந்தச் சிறு படையினர் இளைஞரான ஹழ்ரத் அலீ தலைமையில் அணிவகுத்தனர். அதற்கு மறுநாள் 13.3.624 (ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டின் ரம்ஜான் மாதம்) நபிகளார் 313 பேர்கள் கொண்ட இந்தப் படையினரை ஐந்து அணிகளாகப் பிரித்து, ஒவ்வொரு அணிக்கும் ஒரு தலைவரை நியமனம் செய்து அவர்களிடம் பணிகளை ஒப்படைத்து யார் யார் எங்கு நிற்க வேண்டுமென்று அறிவுரை கூறினார்கள். தங்களது தோழர்களின் பாதுகாப்பிற்காக அவர்கள் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். அங்கிருந்த ஒரு குன்றின் மீது குடிசை ஒன்று அமைக்கப்பட்டது. அதிலிருந்து கொண்டு, நபிகளார் போர் நடவடிக்கைகளை கவனித்து, தோழர்களுக்கு தக்க உத்தரவுகள் பிறப்பிக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. படைத் தளபதி என்ற முறையில் போர் நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் நபிகளாரை அம்புகள் தாக்காத வண்ணமும், அவர்களை எதிரிகள் நேரடியாகத் தாக்காத வண்ணமும் இந்த முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

தண்ணீர் எடுக்க வந்த எதிரிப்படையினரை இருவரை முஸ்லிம்கள் பிடித்து நபிகளாரிடம் கொண்டு வந்தனர். அப்போது நபிகளார் தொழுகையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களிடம் முஸ்லிம் வீரர்கள் விசாரித்தபோது, மக்கா படையிலிருந்து வந்திருப்பதாகச் சொன்னார்கள். மீண்டும் விசாரித்த போது அபூசுஃப்யானின் வர்த்தகக் கூட்டத்திலிருந்து தாங்கள் வருவதாக வாக்கு மூலம் கொடுத்தனர். பின்னர் மீண்டும் விசாரணைகள் மேற்கொண்ட போது, தங்களது நிலையிலிருந்து பிறழ்ந்து மக்காப்படையிலிருந்து வந்திருப்பதாகச் சொன்னார்கள். தொழுகை முடிந்தவுடன் நபிகளார் முஸ்லிம் வீரர்களை நோக்கி 'அவர்கள் உண்மையைச் சொன்ன போது நீங்கள் அடித்தீர்கள். பொய் சொன்னபோது விட்டு விட்டீர்கள்' என்று கூறினார்கள்.

பின்னர், நபிகளார் அவர்களிடம் விசாரணை மேற் கொண்டார்கள். 'நீங்கள் யார்' என்று கேட்ட போது நாங்கள் மக்கா படையிலிருந்து வருகிறோம்' என்று பதில் சொன்னார்கள். உங்கள் படையின் எண்ணிக்கை எவ்வளவு என்று நபிகளார் கேட்டபோது 'எங்களுக்குத் தெரியாது' என்று சொன்னார்கள். 'உங்களது ஆட்களின் உணவிற்காக ஒரு நாளைக்கு எத்தனை ஒட்டகங்களை அறுக்கிறீர்கள்?' என்று நபிகளார் வினவியபோது 'ஒரு நாளைக்கு ஒன்பது; இன்னொரு நாளைக்குப் பத்து' என்று பதில் அளித்தார்கள். ஒரு ஒட்டகத்தின் கறி 100 பேர்கள் உண்ணப் போதுமானது என்ற அடிப்படையில், எதிரிப்படையினரின் எண்ணிக்கை 900க்கும் 1000க்கும் இடையில் இருக்கலாம் என நபிகளார் கணித்தார்கள். அவர்கள் கணித்தது சரியே. உண்மையில் எதிரிகள் படையில் 950பேர் இருந்தனர். பின்னர் அவர்களிடம் படையின் அணித் தலைவர்களின் பெயர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். ஒரே ஊர்க்காரர்கள் என்ற முறையில் இவர்களின் பெயர்களெல்லாம் நபிகளாருக்கு ஏற்கனவே தெரிந்தது தான்.

அபூ ஜஹலின் தலைமையில் இருந்த மக்கா படையில் 950 பேர்களும், முஸ்லிம்கள் படையில் 313 பேர்களும் இருந்தனர்.

முஸ்லிம்கள் படையில் இரண்டு குதிரைகளுக்கு மேல் இல்லை. ஆனால் எதிரிகளிடம் நூற்றுக்கும் மேற்பட்ட குதிரைகள் இருந்தன. முஸ்லிம்களிடம் 12 கவச ஆயுதங்களே இருந்தன. எதிரிகளிடம் இரு நூறு கவச ஆயுதங்கள் இருந்தன. எந்த வகையில் பார்த்தாலும் எதிரிகள் பலம் பொருந்தியவர்களாக இருந்தனர். சிறிய குடிசையில் இருந்து கொண்டு நபிகளார் தொழுது, இறைவனின் உதவியை வேண்டினார்கள். அந்தப் பிரார்த்தனை உருக்கமாக இருந்தது.

"நம்பிக்கையாளர்களைக் கொண்ட இந்தச் சிறு படை தோற்கடிக்கப்பட்டால் இறுதி தீர்ப்பு நாள் வரை உன்னை வணங்குவதற்கு யாருமே இருக்க மாட்டார்கள்." போர் துவங்கியது. ஹழ்ரத் ஹம்ஸா(ரலி), அலீ(ரலி), உபைதா(ரலி) ஆகியோர் தலைமையில் முஸ்லிம்கள் சண்டையிட்டனர். ஹம்ஸாவும், அலீயும் எதிரிகளைத் தோற்கடித்தார்கள். ஆனால் உபைதா சண்டையில் கடும் காயமுற்றார். மிக விரைவாக எதிரிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற உறுதியுடன் முஸ்லிம்கள் தீரத்துடன் போரிட்டனர். முஸ்லிம்களை விட மூன்று மடங்கு எண்ணிக்கையினராக இருந்த போதிலும், குறைஷியர்களால் முஸ்லிம்களின் தாக்குதலைச் சமாளிக்க இயலவில்லை.

பாலைவனப் போர்களில் முதல் முறையாக போரில் கலந்து கொண்ட வீரர்களுக்குக் குறிப்பிட்ட பணிகளை ஒதுக்கி நபிகளார் ஒரு புதிய போர் முறையை அறிமுகம் செய்தார்கள். இதற்கு முன்னர் நடைபெற்ற போர்களில் அத்தகைய ஒழுங்கு முறைகள் இல்லை. ஒரு இரும்புச் சுவர் போல படைவீரர்களை நிற்கச் செய்து எதிரிகளுடன் போரிடும் படி செய்தார்கள். இதன் மூலம் அவர்கள் யாரும் பின் வாங்கிச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. நான்கு பேர்கள் கொண்ட அணியாக வீரர்களை ஒருங்கிணைத்து அவர்கள் ஒன்று சேர்ந்து போரிடவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யும் படியும் செய்தார்கள். அவர்கள் எதிரிகளை ஒரே நேரத்தில் வாட்கள், ஈட்டிகள் மற்றும் அம்புகள் கொண்டு

தாக்கியதோடு, கேடயம் கொண்டு தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். இந்த வீரச் செயல் சாதாரணமானது அல்ல. ஒரு வெற்றிகரமான இராணுவத் தளபதிபோல் நபிகளார் படை நடத்தினார்கள். பின்னர் அருளப்பட்ட இறைவசனங்களில் இறைவன் வழங்கிய நீடித்த பாதுகாப்பு குறித்தும் தனது தூதருக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டது குறித்தும் கூறப்பட்டிருந்தன.

> (இதற்கு முன்பு) பத்ருப் போரிலே அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்திருந்தான். அப்போது நீங்கள் மிகவும் வலுவற்றவர்களாக இருந்தீர்கள். எனவே நீங்கள் நன்றி சொல்வதற்காக அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். (குர்ஆன் 3:123)

வலிமைவாய்ந்த குறைஷியர்கள் மீதான முஸ்லிம்களின் இந்த வெற்றி ஒரு திருப்புமுனையாக அமைந்தது. குறைஷியர்கள் தோற்றுப்போன செய்தி அரேபிய தீபகற்பமெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. குறைஷியர்களின் அந்தஸ்தும், தலைமைத்துவமும் பெரும் பாதிப்பிற்குள்ளாகின. முஸ்லிம்கள் தரப்பில் 14 பேர் இறந்தனர். எதிரிகள் தரப்பில் அபூ ஜஹல் உள்ளிட்ட 70 பேர் இறந்தனர். இந்த அபூஜஹல் தான் இஸ்லாத்தின் கொடிய எதிரியாகவும், இந்தப் போர் நடந்தே தீர வேண்டுமென்றும் மிகுந்த ஆவலாக இருந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. சிறைப் பிடிக்கபட்ட 70 குறைஷியர்களில் நபிகளாரின் சிறிய தகப்பனார் அப்பாஸும் ஒருவர்.

## பழிக்குப் பழி – மக்காவில் கேட்ட குரல்

மக்காவிற்கு திரும்பிய குறைஷியர்கள் கடும் வேதனையில் இருந்தனர். போரின் போது ஒவ்வொரு இனக்குழுவிலும் உயிரிழப்பு இருந்தது. 'பழிக்குப் பழி வாங்கியே தீருவோம்' எனச் சிலர் சபதமேற்கொண்டனர். குறிப்பாக போரில் தன்னுடைய தகப்பனார், சகோதரர், சிறிய தந்தையார் ஆகியோரை இழந்த

'ஹிந்தா' என்ற பெண்மணி இவர்களைக் கொன்ற ஹழ்ரத் ஹம்ஸா(ரலி) அவர்களைப் பழி தீர்ப்பேன் என சபதம் மேற்கொண்டார். அண்டை நகரங்களிலுள்ள இனக்குழு மக்களுடன் உடன்பாடு செய்து கொண்டு, மீண்டும் போர் புரிந்து முஸ்லிம்களைத் தோற்கடித்துத் தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்கவும் அரேபிய தீபகற்பத்திலிருந்து முஸ்லிம்களை ஒழிக்கவும் குறைஷியர்கள் முயற்சிகள் மேற்கொண்டனர்.

இஸ்லாத்தின் கொடிய எதிரியான அபூலஹப் உடல் நலமின்மை காரணமாக பத்ருப் போரில் கலந்து கொள்ளாமல் மக்காவிலேயே இருந்தான். அவன் அபூசுஃப்யானிடம் என்ன நடந்தது', ஏன் தோல்வி ஏற்பட்டது என்று விசாரித்தான். சொல்வதற்கு ஒன்றுமில்லை. நாம் போரில் புறமுதுகு காட்டி விட்டோம். அவர்கள் நம்மை விரட்டி சிறைப்பிடித்து விட்டனர். நான் நம்முடைய படையினரைக் குறை சொல்ல மாட்டேன். நாம் முஸ்லிம் படையினரை மட்டுமல்ல, பூமிக்கும் வானத்திற்கும் இடையில் தோன்றிய பல வண்ணக் குதிரைகளில் இருந்த வெள்ளை ஆடை அணிந்திருந்த மனிதர்களையும் சந்திக்க நேர்ந்தது. நம்மவர்களால் அவர்களை ஒன்றும் செய்ய இயலவில்லை. அபூ சுஃப்யான் நடந்ததை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தபோது, அருகிலிருந்து இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அபூ ராஃபி என்ற அடிமை (இவர் ரகசியமாக இஸ்லாத்தைத் தழுவியிருந்தார். அது பற்றி யாரிடமும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை) நபிகளார் பெற்ற வெற்றியால் அடைந்த மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாது, 'பூமிக்கும், வானத்திற்கும் இடையில் தோன்றிய வெண்ணுடை அணிந்து வந்த அந்த ஆட்கள் வானவர்களே' என்று கூறினார். இது கேட்டு கோபமடைந்த அபூலஹப் அவரைக் கீழே தள்ளி முகத்தில் ஒரு குத்து விட்டார். அப்போது அங்கு அபூலஹப்பின் மைத்துனியும், அப்பாஸின் மனைவியுமான உம்முல்பதல் (இவரும் ரகசியமாக இஸ்லாத்தைத் தழுவியிருந்தார்) ஓடிச்

சென்று கூடாரக் கம்பி ஒன்றினை எடுத்துக் கொண்டு வந்து அபூலஹபைத் தாக்கினாள்.

இத்தாக்குதல் காரணமாக அபூலஹப்பிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. சில நாட்களில் இந்தக் காயம் உடலெங்கும் பரவி சில வாரங்களில் அவர் இறந்து போனார். அபூலஹப்பும் அவரது மனைவியும் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் பெரிதும் வெறுப்பு கொண்டிருந்தனர். உண்மையில், சில ஆண்டுகளுக்கு முன்னரே அவரது முடிவும், அவரது மனைவியின் முடிவும் எப்படி இருக்குமென்பதை குர்ஆன் கூறியிருந்தது (குர்ஆன்111). பெயர் சொல்லி குர் ஆனில் கண்டிக்கப்பட்டுள்ள ஒரே நபர் அபூலஹப் என்பது குறிப்பிடத்தக்கது. முதலில் எதிர்ப்புத் தெரிவித்துப் பின்னர், மன மாற்றம் பெற்றவர்களைப் போலல்லாது, அபூலஹப்பும், அவரது மனைவியும் கடைசிவரை இஸ்லாத்தின் எதிரிகளாகவே இருந்தனர். அபூலஹப்பிற்கும் அவனது மனைவிக்கும் குர்ஆனில் கூறிய படியே முடிவு ஏற்பட்டது. கடைசிவரை அவர்கள் நிராகரிப்பாளர்களாகவே இருந்தனர்.

## மதீனாவில் மகிழ்ச்சியும் வருத்தமும்

மதீனாவின் புறநகர்ப் பகுதியான அர்–ராவாவில் கூடியிருந்த மதீனா வாசிகள் இறையருளால் வெற்றிபெற்ற நபிகளாரையும், முஸ்லிம் படையினரையும் மகிழ்ச்சி பொங்க வரவேற்றனர். இராணுவக் களத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒருவராக நபிகளார் புதிய பரிணாமம் பெற்று மதீனாவில் நுழைந்தார்கள். இதன் விளைவாக, மதீனாவைச் சார்ந்த இன்னும் ஆயிரக்கணக்கானோர் இஸ்லாத்தில் இணைந்தனர். இது இஸ்லாத்திற்குப் புதிய தெம்பையும் சக்தியையும் தார்மீக வலிமையையும் அளித்தது. இந்த நேரத்தில் நபிகளாரின் மகளான 'ருக்கையா' இறந்து விட்டார். ஏற்கனவே

போரில் தனது தோழர்களில் சிலரை இழந்திருந்த நபிகளாருக்கு அருமை மகளை இழந்த சோகம் பெரிதும் வாட்டியது. போரில் வெற்றி பெற்றுத் திரும்பிய உடன் கிடைத்த இந்தச் செய்தி, வாழ்க்கை என்பது இன்பமும், துன்பமும் கொண்டது தான் என்பதை அவர்கட்கு உணர்த்தியது. வெற்றியிலும் சரி, துன்பத்திலும் சரி ஏக இறைவனிடம் தான் கொண்டுள்ள நம்பிக்கையும், தொடர்பும் அவசியமானது என உணர்ந்தார்கள். சிறைப் பிடிக்கப்பட்டவர்களை நன்றாக நடத்துமாறு நபிகளார் முஸ்லிம்களுக்கு ஆணையிட்டார்கள். தோழர்கள், சிறைப்பிடிக்கப்பட்டவர்களுக்கு தங்களது ரொட்டியைக் கொடுத்து விட்டு, தாங்கள் பேரீத்தம் பழங்களை மட்டுமே உண்டனர் (அப்போது ரொட்டியின் விலை மிக அதிகமாக இருந்தது) சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் பேச்சுவார்த்தை தொடங்கியது. சிலர் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுப் பணத்தைக் கொடுத்து தங்களது குடும்பத்தினரை மீட்டுச் சென்றனர். சிலர் இழப்பீடு எதுவும் கொடுக்காமல் விடுவிக்கப்பட்டனர். ஏழைகளைப் பொறுத்த அளவில் அவர்களின் பொருளாதரா நிலை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

நட்ட ஈடு கொடுக்க இயலாத, அதே நேரத்தில் எழுதப் படிக்கத் தெரிந்த கைதிகள் பத்து மதீனா முஸ்லிம்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு அது நிறைவேறிய பின்னர் விடுவிக்கப்பட்டனர். இதன் மூலம், போர்க் காலமானாலும், சமாதான காலமானாலும், கல்வி முக்கியம் என்கின்ற தங்களது நிலையினை நபிகளார் வெளிப் படுத்தினார்கள். அறிவு, கல்வி, படிப்பு, எழுத்து ஆகிய இவை மனிதன் கண்ணியமாக வாழத் தேவையான அடிப்படையான திறமைகளாகும். சில கைதிகள் பெற்றிருந்த கல்வியே அவர்களின் செல்வமாக இருந்தது. அதுவே அவர்களின் இழப்பீட்டுத் தொகையாகவும் விளங்கியது.

# மனத்தளவில்

அபூ லுபாபா(ரலி) என்ற தனது தோழர் மீது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். பத்ருப் போரில் கலந்து கொள்வதற்காக மதீனாவை விட்டுச் சென்ற போது, நபிகளார் தனது பொறுப்புகளை அவரிடமே விட்டுச் சென்றிருந்தார்கள். சில காலத்திற்குப் பின், ஒரு அனாதை இளைஞர் நபிகளாரிடம் வந்து தன்னுடைய பேரீத்தமரத்தை அபூலுபாபா எடுத்துக் கொண்டு விட்டதாகப் புகார் தெரிவித்தான். இது பற்றி லுபாபாவை அழைத்து நபிகளார் விசாரித்த போது, அந்த மரம் அவருக்குச் சொந்தமானது எனத் தெரிய வரவே அவ்வாறே தீர்ப்பளித்தார்கள்.

இந்தத் தீர்ப்பு அந்த அனாதை இளைஞனுக்கு ஏமாற்றத்தை அளித்தது. அவன் தனது விலைமதிப்பற்ற சொத்து ஒன்றினை இழந்ததாகக் கருதினான். பின்னர் நபிகளார் அபூலுபாபாவை தனியே அழைத்து, நியாயம் வழங்கப்பட்டு விட்டது. எனினும் நீங்கள் மரத்தை அந்த அனாதை இளைஞனுக்குக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால் அபூலுபாபா மறுத்து விட்டார். தனக்குத் தான் அந்த மரம் சொந்தமானது என உறுதிபடத் தெரிவித்த அவர் நபிகளாரின் கோரிக்கையை ஏற்க மறுத்தார். அவரின் இந்த உறுதியான நிலைப்பாடு நபிகளாரின் மனத்தைப் பெரிதும் பாதித்து. ஒருவரை மன்னிப்பது அல்லது அவருக்கு உரிய பங்கினைக் காட்டிலும் அதிகம் வழங்குவது, தனிப்பட்ட முறையிலும், சமூக அளவிலும், நியாய உணர்வுக்கு அப்பாற்பட்ட மேலான தன்மை வாய்ந்தது என்பதைப் பின்வரும் இறைவசனங்கள் உணர்த்துகின்றன.

நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்தும்படியும் உறவினர்கட்கு ஈந்துதவும்படியும் கட்டளையிடுகிறான். (திருக்குர்ஆன்16:90)

அபூ லுபாபாவின் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியது தான். ஆனால் அதற்கும் அப்பால் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. இது ஒரு மனிதன் தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுப்பது என்பது அல்ல. மாறாக ஒரு மனிதன் தன்னுடைய உடமைகளை இன்னொருவருக்குக் கொடுப்பதும், மன்னிப்பதும் அன்பைப் பகிர்ந்து கொள்ளுவதுமான ஒரு அரிய செயலாகும். தான் மிகவும் மரியாதை கொண்டிருந்த அபூலுபாபாவின் இந்தக் கடுமையான நிலைப்பாடு நபிகளாரை வருத்தமுறச் செய்தது. இஸ்லாம் கூறியுள்ள நியாயம் என்பதற்கு குருட்டுத்தனமான கருத்தையே அபூ லுபாபா கொண்டிருந்தார். பெருந்தன்மை, வழங்கி வாழும் பண்பு, ஆகிய நற்பண்புகளை அவர் இழந்து, அதன் காரணமாக உன்னத நிலை அடைவதினின்றும் தடுக்கப்பட்டுள்ளார் என்றே நபிகளார் கருதினார்கள். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த தாபித்(ரலி) அவர்கள் தன்னுடைய பழத்தோட்டத்தையே இந்த ஒரு மரத்திற்குப் பகரமாகத் தரத் தயாராக இருப்பதாக அபூலுபா பாவிடம் தெரிவித்தார். அதன் பின்னரே அபூலுபாபா அந்த மரத்தினை அனாதை இளைஞனுக்குக் கொடுத்தார். இது கண்டு நபிகளார் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் அபூ லுபாபாவைக் கடிந்து கொள்ளவில்லை. பனூகுரைழா இனத்தினர் சரணடைவதற்கான வழிமுறைகளை அவர்களிடம் சென்று தெரிவிக்கும் பொறுப்பை அபூலுபாபாவிடம் நபிகளார் பின்னர் ஒப்படைத்தார்கள்.

பனூகுரைழா முற்றுகையின் போது அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய அபூலுபாபா, குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே அவர்கள் கொல்லப்படுவார்கள் என்ற ரகசியத் தகவலை எந்த விதமான உள் நோக்கமுமின்றி வெளிப்படுத்தி விட்டார். ஆனாலும் இந்தச் செயல் காரணமாக நாணமுற்ற அவர்,

தனக்குத் தானே தண்டனை வழங்கிக்கொள்ளும் விதமாக பள்ளி வாசலின் தூண் ஒன்றில் 6 நாட்கள் தன்னைக் கட்டிப் போட்டுக் கொண்டார். இறைவனும், இறை தூதரும் தன்னை மன்னிப்பார்கள் என்று கருதியே இவ்வாறு செய்தார்.

ஒரு நாள் காலை உம்மு சலாமா(ரலி) என்ற தோழரின் இல்லத்திற்குச் சென்றிருந்த போது நபிகளார் புன்முறுவல் பூத்த வண்ணம் இருந்தார்கள். இது பற்றி உம்மு ஸலாமா 'உங்களின் புன்னகை என்றும் நீடித்திருக்க இறைவன் உதவட்டும். இந்தப் புன்னகைக்குக் காரணம் என்ன?' என்று நபிகளாரிடம் கேட்டதற்கு அவர்கள், அபூ லுபாபாவின் மன்னிப்பை இறைவன் ஏற்றுக் கொண்டு விட்டான். நீங்கள் விரும்பினால் இந்தச் செய்தியை அவரிடம் சொல்லுங்கள்' என்று பதிலளித்தார்கள். உடனே உம்மு ஸலாமா அவரின் இல்லத்திற்குச் சென்று வாசலில் நின்று கொண்டு' அபூ லுபாபா, வாழ்த்துக்கள்! உங்களது மன்னிப்பை இறைவன் ஏற்றுக் கொண்டு விட்டான்' என்று உரக்கச் சொன்னார்கள். அவரின் இந்தக் குரலைக் கேட்ட மதீனா வாசிகள் அனைவரும் பள்ளிவாசலை நோக்கி விரைந்து வந்தார்கள்.

மன்னிப்புக் கிடைத்தது. தனிமனித அனுபவம் உணர்த்தும் உண்மை என்னவெனில், ஆன்மீகக் கல்வி ஒரு போதும் நிறைவடைவதில்லை. மனச்சாட்சியைத் தொடர்ந்து சுய பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இந்தப் போதனைகளை நபிகளார் ஒழுங்குடனும் உறுதியுடனும், ஆனால் அதே சமயத்தில் கருணையுடனும் செய்து வந்தார்கள்.

11

# பெருந்தன்மை
# கவனிப்பு – அன்பு

பரபரப்பான தங்களது வாழ்க்கைக்கு மத்தியிலும் நபிகளார் சிறு சிறு விஷயங்கள் பற்றியும், அவர்களைச் சுற்றியிருந்த தோழர்களின் எதிர்பார்ப்புகள் பற்றியும் கவனம் செலுத்தி வந்தார்கள். இரவெல்லாம் விழித்திருந்து அவர்கள் தொழுகை நடத்தி வந்ததையும் அதன் மூலம் இறைவனுடனான தொடர்புகளை அவர்கள் பேணிப் பராமரித்து வந்தததையும். அவர்களது மனைவிமார்களும், தோழர்களும் கண்ணுற்று வியப்படைந்தார்கள். நபிகளாரின் மனைவி ஆயிஷா(ரலி) அவர்கள் 'உங்களுடைய கடந்த கால மற்றும் எதிர்காலப் பாவங்களையெல்லாம் இறைவன் மன்னித்து விட்ட பிறகு நீங்கள் ஏன் அதிகமதிகம் தொழுகிறீர்கள்' என்று கேட்டதற்கு நபிகளார் 'இறைவனின் நன்றிக்குரிய அடிமையான நான் வேறு என்ன செய்ய முடியும்' என்று கேட்டார்கள். தாம் ஈடுபட்டது போலவே தம்முடைய தோழர்களும், தொழுகையிலும், நோன்பிலும், தியானத்திலும் ஈடுபட வேண்டு மென்று நபிகளார் எதிர்பார்க்க வில்லை. மாறாக தோழர்கள் தங்களது சிரமத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும் தாம் செய்யும் அளவிற்கு வணக்க வழிபாடுகளில் ஈடுபட வேண்டாமென்று கூறினார்கள். சில தோழர்கள் தங்களது மனைவிமார்களிடம் உறவு கொள்வதைக் கூடத் தவிர்த்து இரவெல்லாம் தொழுகையிலும், பகல் நேரங்களில் நோன்பிலும் ஈடுபட்டிருந்தபோது (மாஊன் மகன் உதுமான், அம்ர் மகன் அப்துல்லாஹ் போன்றோர்) அவர்களிடம் அப்படிச் செய்யாதீர்கள் 'சில நாட்கள் நோன்பிருங்கள், மற்ற

நாட்களில் உண்ணுங்கள். இரவின் ஒரு பகுதியில் தொழுது வாருங்கள். உங்களின் உடலுக்கு உங்கள் மீது உரிமை உண்டு. உங்களுடைய கண்களுக்கு உங்கள் மீது உரிமை உண்டு. உங்களது மனைவியர்க்கு உங்கள் மீது உரிமை உண்டு. உங்களது விருந்தினர்கட்கு உங்கள் மீது உரிமை உண்டு.' என்று நபிகளார் கூறினார்கள். ஒரு தடவை 'அதிகம் செய்கின்றவர்கள் நாசமாகப் போகட்டும்' என்று சப்தமிட்டு மூன்று தடவைகள் கூறினார்கள். பின்னொரு சமயத்தில் 'நிதானம், நிதானம், நிதானம் தான் வெற்றியைத் தரும்' என்று சொன்னார்கள்.

தங்களது பலவீனங்கள் குறித்தும், தவறுகள் குறித்தும் பயந்து கொண்டிருந்த முஸ்லிம்களின் மனச்சாட்சியைச் சாந்தப்படுத்தும் முயற்சியில் நபிகளார் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்கள். ஒரு நாள் ஹன்ழாலா என்ற தோழர் ஒருவர் ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்களைச் சந்தித்து 'முரண்பாடான எண்ணங்களால் நான் குழம்பிப்போயிருக்கிறேன். நபிகளாரைப் பார்க்கும் போது எனக்கு சொர்க்கமும், நரகமும் தெரிகின்றன. வீட்டுக்குச் சென்று மனைவி, குழந்தைகளைப் பார்த்து அன்றாடப் பிரச்னைகளைச் சந்திக்கும் போது நான் எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன்' என்று குறிப்பிட்டார். அபூபக்கர்(ரலி) அவர்கள் தனக்கும் அது போன்ற அனுபவம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அவர்கள் இருவரும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் சென்று தங்களது ஆன்மீக நிலையின் அவலம் குறித்து விளக்கம் கேட்டார்கள். தோழர் ஹன்ழாலா தனது சந்தேகத்தை விளக்கிச் சொன்ன போது நபிகளார் அவரிடம் என்னுடைய ஆன்மா எந்த இறைவனின் கைவசம் உள்ளதோ அந்த இறைவனின் பெயரால் அதே ஆன்மீக நிலையில் என்னுடன் இருந்து இறைவனை எப்போது நினைத்துக் கொண்டிருக்கிறாரோ அவரது படுக்கையிலும், அவரது பாதையிலும் வானவர்கள் வந்து கை குலுக்குவார்கள். ஆனால் நினைப்பதற்கும் தொழுவதற்கும் ஒரு நேரம் இருக்கிறது. ஓய்வெடுப்பதற்கும், மகிழ்ச்சியாக இருப்பதற்கும் நேரம்

இருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள். இது மனிதர்களின் போலியான வாழ்க்கையைக் காட்டவில்லை. மனித சுபாவம் அப்படிப்பட்டது தான். மனிதர்கள் வானவர்கள்(மலக்குகள்) அல்லர். அவர்கள் நினைக்கிறார்கள். பின்னர் மறக்கிறார்கள். மறப்பதாலேயே பின்னர் நினைக்கிறார்கள்.

வேறு சில சந்தர்ப்பங்களில், நபிகளார் தோழர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது உண்மையான தொழுகை ஒரு அறச் செயலாகும். வணங்குவது என்பது மனிதத்தன்மையை அங்கீகரித்து மனித உள்ளங்களின் தேவையை வெளிப்படுத்தும் ஒரு செயலே' என்று கூறுவதுண்டு. 'நன்மைகள் புரிவதும் அறச் செயலே. தீய செயல்களைத் தவிர்ப்பதும் அறச் செயலே' என்றும் நவின்றார்கள். உங்களுடைய மனைவியுடன் உடலுறவு கொள்வது கூட ஒரு அறச் செயலே' என்று நபிகளார் கூறிய போது, ஒரு தோழர் 'எங்களில் ஒருவர் உடல் இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் போது அதற்கும் வெகுமதி உண்டா' என்று வியப்புடன் கேட்டார். நபிகளார் அவரிடம் 'உங்களில் ஒருவர் தவறான முறையில் உடலுறவு கொண்டால் அவர் பாவம் செய்தவராகி விடமாட்டாரா' என்று திருப்பிக் கேட்டார்கள். எனவே தான் சட்டபூர்வமான முறையில் உடலுறவு கொண்டவருக்கு வெகுமதி அளிக்கப்படுகிறது' என்றும் விளக்கமளித்தார்கள். இவ்வாறாக நபிகளார் தங்களுடைய சகாக்களுக்கு சுயக்கட்டுப்பாடுடன் வாழ்வது பற்றியும் இயற்கையான மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொண்டே ஆன்மீக வாழ்க்கையிலும் ஈடுபடலாம் என்றும் அது ஒரு தவறான செயலோ அல்லது போலியான வாழ்க்கையோ அல்ல என்றும் விளக்கமளித்தார்கள்.

எந்த விதமான முகாந்திரமும் இல்லாமல், தன்னுடைய தோழர்கள் குற்ற உணர்வு கொள்வதை நபிகளார் வெறுத்தார்கள். மிகுந்த அன்பும், கருணையும் கொண்ட இறைவனிடம் தொடர்பு கொள்வதை ஒரு போதும் நிறுத்தக் கூடாது என்று அவர்களிடம் சொல்லி வந்தார்கள். ஏனெனில் அவனே குற்றங்களை மன்னித்து ஏற்றுக் கொள்பவன். அவனே நேர்மையான உள்ளங்களை

நேசிப்பவன். தன்னுடைய அன்பாலும், கருணையாலும் அனைவரையும் வரவேற்று அரவணைப்பவன். இது தான் அத்தவாப் என்பதின் உண்மையான பொருளாகும். ஒரு சறுக்கல், ஒரு தவறு, ஒரு பாவம் செய்த பின்னர் மனம் வருந்தி இறைவனிடம் திரும்ப வேண்டும். அப்படி வருபவர்களை இறைவன் மன்னிக்கிறான் தூய்மைப்படுத்துகிறான்.

சாந்த குணமும், அன்பும் நபிகளாரின் போதனைகளில் முக்கியமானவை, 'இறைவன் சாந்தமுடையவன். அவன் எல்லோரிடமும் அமைதியான பண்பையே விரும்புகிறான்' என்று குறிப்பிட்ட நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் 'இறைவன் அமைதியான குணம் கொண்டவர்கட்கே வழங்குகிறான். வன்முறைக்கோ அல்லது பிறவற்றிற்கோ வழங்குவது இல்லை' என்றும் குறிப்பிட்டார்கள்.

ஒரு முறை தனது தோழர் ஒருவரிடம் நபிகளார் 'உங்களிடம் உள்ள இரண்டு குணங்களை இறைவன் விரும்புகிறான். அவை நிதானம், பொறுமை' என்று கூறினார்கள். பெருந்தன்மையுடனும், மன்னிக்கும் மனப்பான்மையுடனும் நடந்து கொள்வது பற்றி தனது தோழர்களிடம் விளக்கிச் சொன்ன நபிகளார் 'உங்களின் சகோதரர் ஒருவர் செய்யும் செயல்களில் உங்களுக்கு உடன்பாடு இல்லை என்றால் அவருக்காக ஒன்று முதல் எழுபது முறை பாவமன்னிப்புக் கேளுங்கள். தவறு ஒன்றும் இல்லை என்றால் உங்களுக்குத் அது பற்றித் தெரியவில்லை என்று திருப்தி கொள்ளுங்கள்' என்று கூறினார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களைப் புரிந்து கொண்டு அன்பும் மரியாதையும் செலுத்தி வருகிறார்கள் என்பதை தோழர்கள் உணர்ந்தேயிருந்தார்கள். இவ்வாறாக நபிகளார், அவர்கட்கு அன்பையும், ஆன்மீக போதனை களையும் சேர்ந்தே வழங்கினார்கள். அந்தப் போதனைகள் அன்பில் தோய்ந்தவைகளாக இருந்ததால், அவை அவர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன.

## அஸ்ஸாஹாபுஸ்ஸுஃப்பா
## திண்ணைத் தோழர்கள்

புதிதாக இஸ்லாத்தில் இணைந்த பலர் வீடற்றவர்கள் ஏழைகள். பல நாட்கள் அவர்கட்கு உணவு கிடைக்கவில்லை. அத்தகையோர், நபிகளாரின் வீட்டிற்கு அருகில் இருந்த பள்ளிவாசலை சுற்றி குடியிருந்து வந்தனர். அவர்கள் பிற முஸ்லிம்கள் அளிக்கும் தர்மம், நன்கொடைகளைக் கொண்டே வாழ்ந்து வந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. அவர்கள் திண்ணைத் தோழர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்களின் நிலை பற்றி கவலையுற்ற நபிகளார். அவர்களுக்கும் தொடர்ந்து ஆதரவாக நின்றார்கள். அவர்களைக் கவனித்து, அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விடை அளித்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள். இந்த மக்களைப் பொறுத்த அளவில் நபிகளாரின் அணுகுமுறை சற்று வித்தியாசமாக இருந்தது. ஆன்மீகம், நம்பிக்கை கல்வி பற்றியோ அல்லது வேறு ஏதாவது விஷயங்கள் பற்றியோ இம்மக்கள் கேள்வி எழுப்பினால் அதற்கு நபிகளார் பதில் அளிப்பார்கள். சில நேரங்களில் ஒரே கேள்விக்கு மாறுபட்ட பதில்களை அளித்தார்கள். அந்தப் பதில்கள் கேள்வி கேட்டவர்களுடைய உள்ளப்பாங்கு, அனுபவம், அறிவுக் கூர்மை ஆகியவற்றைப் பொறுத்து அமைந்திருந்தது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எளிமையாக வாழ்ந்தார்கள். அவர்களுடைய இல்லத்தில் உண்பதற்கு ஒன்றிரண்டு பேரீத்தம் பழங்களைத் தவிர வேறு ஒன்றும் இருக்காது. எனினும் தன்னைச் சுற்றி இருந்தவர்கட்கு குறிப்பாகத் திண்ணைத் தோழர்கட்கு உதவி செய்து கொண்டே இருந்தார்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் எளிமையைக் கடைப்பிடித்தார்கள். அவர்களிடம் சொத்துக்கள் எதுவும் இல்லை. அவர்களை பெண்கள், குழந்தைகள், அடிமைகள், ஏழைகள் என அனைவரும் எளிதில் அணுகலாம். அவர்களில் ஒருவராக வாழ்ந்தார்கள்.

# பாத்திமா(ரலி) மகள்

நபிகளாரின் மகளான பாத்திமா(ரலி) அவர்கள் தனது தந்தையிடம் மிகவும் பாசமாக இருந்தார்கள். நபிகளாரின் பெரிய தகப்பனார் அபூதாலிபின் மகனான ஹழ்ரத் அலீ(ரலி) அவர்களைத் திருமணம் செய்திருந்த பாத்திமா(ரலி) அவர்கள் தனது தந்தையாரின் இல்லத்திற்கு அருகிலேயே வசித்து வந்தார்கள். ஏழைகளின் நலனில் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டார்கள் (அஹ்லுஸ் ஸுஃப்பா ஏழைகள் உட்பட)

நபிகளாருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. ஆனால் அவை அனைத்தும் குழந்தைப் பருவத்திலேயே மரணமடைந்து விட்டன. அவர்களது முதல் மனைவி கதிஜா (ரலி) அவர்களுக்கு பிறந்த நான்கு பெண் குழந்தைகளும் வளர்ந்து பெரியவர் களாயினர். பாத்திமா(ரலி) நபிகளாரின் கடைசிக் குழந்தை. நபிகளார் பாத்திமாவிடம் மிகப் பிரியமாக இருந்தார்கள். எங்காவது பயணம் சென்று விட்டுத் திரும்பியவுடன் நபிகளார் முதலில் பள்ளி வாசலுக்குச் சென்று தொழுது விட்டு பின்னர் பாத்திமாவைச் சந்தித்து அவரது கையிலும், நெற்றியிலும் முத்தமிடுவார்கள். நபிகளார் யாரிடம் மிகுந்த அன்பு காட்டினார்கள் என்று ஒருமுறை உமைர் மகன் ஜுமைஹ் ஆயிஷா(ரலி) அவர்களிடம் கேட்டபோது, அதற்கு அவர்கள் பாத்திமா(ரலி) என்று பதில் அளித்தார்கள். நபிகளார் ஒரு முறை பாத்திமாவை யார் கோபமூட்டினார்களோ அவர் என்னைக் கோபமூட்டிய வராவார்' என்று கூறினார்கள்.

நபிகளார் வீட்டில் இருந்தாலும் சரி, வெளியில் இருந்தாலும் சரி, பாத்திமா(ரலி) வந்தால் எழுந்து நின்று வரவேற்று வாழ்த்துச் சொல்லி தனது அன்பையும், மரியாதையையும் வெளிப்படுத்து வார்கள். மக்கா, மதீனா நகரங்களைச் சார்ந்த மக்கள் நபிகளாரின் இந்தச் செயல் கண்டு வியப்படைவார்கள். ஏனெனில் அங்கு அது போன்று செய்வது அப்போது வழக்கத்தில் இல்லை.

நபிகளார் பாத்திமாவின் கரங்களில் முத்தமிடுவார்கள்

அவருடன் பேசுவார்கள் அருகில் உட்கார்ந்து கொள்வார்கள். இது பற்றிப் பிறர் குறை சொல்வதைப் பொருட்படுத்த மாட்டார்கள். பாத்திமா(ரலி) வின் மகனும், தனது பேரனுமான ஹஸனை நபிகளார் ஒரு முறை முத்தமிட்ட போது அதனைக் கண்ணுற்ற பதூ இனக்குழுவினர் அதிர்ச்சியுற்று, அவர்களில் ஒருவனான ஹாபிஸ் மகன் அல் அஹ்ரா என்பான் 'எனக்குப் பத்துக் குழந்தைகள் உள்ளன. நான் இதுவரை யாரையும் முத்த மிட்டதில்லை' என்று கூறினார். இதற்குப் பதிலளித்த நபிகளார் “யார் ஒருவர் அன்பும், கருணையும் காட்டவில்லையோ அவரிடம் இறைவனும் அன்பும் கருணையும் காட்டுவதில்லை' என்று கூறினார்கள். தங்களுடைய முன்னு தாரணம் மற்றும் கருத்துக்கள் மூலமாக, நபிகளார் மக்களுக்கு நற்குணங்களையும், அன்பையும், பெருந்தன்மையையும், குழந்தைகளிடமும் பெண்களிடமும் மரியாதை காட்டும் பண்பையும் போதித்தார்கள். பின்னர் ஒரு தடவை நபிகளார் 'உன்னதப் பண்புகளைப் போதிக்கவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்' என்று கூறினார்கள்.

தன்னுடைய தகப்பனாரிடமிருந்து அன்பையும், இஸ்லாமிய போதனைகளையும் பெற்ற பாத்திமா(ரலி) அவர்கள், அப் போதனைகளை ஏழை மக்களிடம் பரப்பிடும் பணியில் ஈடுபட்டார்கள். ஒரு நாள் பாத்திமா(ரலி) தனது கணவரான அலீ(ரலி) அவர்களிடம் குடும்பத்தின் அன்றாடச் செலவுகளைச் சமாளிப்பதில் தான் சந்தித்து வரும் சிரமங்கள் பற்றி எடுத்துக் கூறினார்கள். இது கேட்ட அலீ(ரலி) நபிகளாரிடம் சென்று சிரமங்களை எடுத்துக் கூறி உதவி பெற்று வருமாறு பாத்திமா(ரலி) யிடம் சொன்னார்கள். அதன்படி பாத்திமா(ரலி) நபிகளாரின் இல்லத்திற்குச் சென்றார்கள். ஆனால் தந்தையார் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாக உதவி கேட்டிடத் தயங்கி எதையும் கேட்காமலேயே திரும்பி வந்து விட்டார்கள். பின்னர் பாத்திமா(ரலி)வும் அலீ(ரலி)யும் சேர்ந்து நபிகளார் இல்லம் சென்று உதவி கேட்டார்கள். இதனைக் கேட்ட நபிகளார் தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என்றும், உங்களுடைய நிலை

திண்ணைத் தோழர்களின் நிலையை விட நன்றாக உள்ளது என்றும் பதில் அளித்தார்கள். இதனைக் கேட்ட பாத்திமாவும், அலீயும் பொறுமையாக இருந்தார்கள். எனினும் வருத்தத்துடனும் ஏமாற்றத்துடனும் திரும்பிச் சென்றார்கள். இருவரும் நபிகளாரின் மகள், மருமகன் என்ற போதிலும் எந்த விதமான பலனையும் அவர்களால் பெற இயலவில்லை.

அன்றைய மாலைப் பொழுதில் பாத்திமா(ரலி) இல்லத்திற்கு சென்ற நபிகளார் அவர்களின் அருகில் உட்கார்ந்து கொண்டு, நீங்கள் என்னிடம் கேட்டதை விடவும் அதிகமாக நான் உங்களுக்கு வழங்க இருக்கிறேன்' என்று குறிப்பிட்டார்கள். இதனைக் கேட்டு சம்மதம் தெரிவிக்கும் வண்ணம் பாத்திமா(ரலி) நபிகளாரைப் பார்த்தபோது, வானவர் ஜிப்ரீல் என்னிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார். நீங்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் சுப்ஹானல்லாஹ் (பெருமை இறைவனுக்கே) என்று பத்துத் தடவைகளும் அல்ஹம்து லில்லாஹ் (இறைவனுக்கே புகழனைத்தும்) என்று பத்து தடவைகளும், அல்லாஹு அக்பர் (இறைவன் மிகப் பெரியவன்) என்று பத்துத் தடவைகளும் சொல்ல வேண்டும். இரவில் தூங்கச் செல்லுமுன்னர், இந்த மூன்று வார்த்தைகளையும் முப்பத்து மூன்று தடவைகள் சொல்ல வேண்டும்' என்று கூறினார்கள். இந்த ஆன்மீக வார்த்தைகள் காலம் காலமாக அனைத்து முஸ்லிம்களாலும் சொல்லப்பட்டு வருகின்றன. பாத்திமா(ரலி) தனது கணவர் அலீ(ரலி) அவர்களைப் போலவே இறை பக்தியுடையவராகவும், பெருந்தன்மையும் அன்பும் உடையவராகவும் திகழ்ந்தார்கள். தன்னுடைய தகப்பனாரின் ஆன்மீக போதனையின் ஒளியில் வாழ்ந்தார்கள். ஏக இறைவனாகிய அல்லாஹ்விடம் கேட்டுப் பெற்ற அனைத்தையும் ஏழைகளுக்கு வழங்கி வந்தார்கள்.

ஒரு நாள் பாத்திமா(ரலி) நபிகளாரின் இல்லத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது அவர் கேட்ட ஒரு கேள்விக்கு விளக்கமளித்த நபிகளார் 'பாத்திமா! நபிகளாரின் மகளாக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக உனக்குச் சொர்க்கத்தில்

சிறப்பான இடம் கிடைக்கும் என்று எண்ணி விடாதே. உன்னுடைய செயல்களே உனது இடத்தைத் தீர்மானிக்கும்' என்றார்கள். நியாயத் தீர்ப்பு நாளின் போது குலம் அல்லது பரம்பரை சார்ந்து தாம் யாருக்கும் உதவி செய்திட இயலாது என்று விளக்கமளிக்கவே நபிகளார் இவ்விதம் நவின்றார்கள்.

ஒருவருடைய குலமோ, குடும்பமோ அல்லது இனக் குழுப்பெருமையோ அவரைச் சொர்க்கத்திற்கு இட்டுச் செல்லாது; மாறாக அவருடைய செயல்களே அதனைத் தீர்மானிக்கும் என்பதை நபிகளார் உணர்த்தினார்கள். பல ஆண்டுகளுக்குப்பிறகு, மரணிக்கும் தருவாயிலிருந்த போது அருகில் இருந்த பாத்திமாவிடம் நபிகளார் மெதுவாக இறைவன் என்னை அழைக்கவிருக்கிறான். நான் பிரிந்து செல்லும் நேரம் வந்து விட்டது. 'நீ தான் நமது குடும்பத்தில் என்னிடம் வந்து சேர்பவர்களில் முதல் ஆளாக இருப்பாய்' என்று மெதுவாகக் கூறினார்கள். இது கேட்ட பாத்திமா(ரலி) மகிழ்ச்சியுடன் புன்னகை புரிந்தார்கள்.

## ஆயிஷா(ரலி) – மனைவி

நபிகளாரின் மனைவியான ஆயிஷா(ரலி) அவர்களும், நபிகளாரை முன் மாதிரியாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். பின்னாட்களில் அவர்கள் நபிகளாரின் ஆளுமைப்பண்புகள், தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்கள் நடந்து கொண்ட விதம், அவர்களின் பொது வாழ்க்கை பற்றிய அரிய பல தகவல்களை அறிவிப்பவராகத் திகழ்ந்தார்கள். மிகவும் இளைய வயதிலேயே நபிகளாரைத் திருமணம் செய்து கொண்டு மதீனாவிலுள்ள அவர்களின் இல்லத்திற்கு வந்தபோது தனது எதிர்பார்ப்புகளையும், அபிலாஷைகளையும் நபிகளார் எங்ஙனம் நிறைவேற்றினார்கள் என்பதைப் பற்றியும் கூறியுள்ளார்கள். விளையாட்டு அவர்களது வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தது. ஆயிஷா(ரலி) அவர்களின் மகிழ்ச்சிக்கு நபிகளார் ஒரு போதும் தடையாக இருந்ததில்லை. ஒரு தடவை அபிசீனியா

நாட்டைச் சார்ந்த ஒரு தூதுக் குழுவினர் நபிகளாரின் இல்லத்திற்கு வருகை தந்த போது அவர்கள் பல்வேறு விதமான விளையாட்டுக்களையும் பராம்பரிய நடன நிகழ்ச்சிகளையும் வீட்டு முற்றத்தில் நிகழ்த்திக் காட்டினர். வாசலில் நின்று இந் நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற நபிகளாருக்குப் பின்னால், அவர்களது தோள்களைப்பற்றிப் பிடித்துக் கொண்டு ஆயிஷா(ரலி)யும் இந்நிகழ்ச்சிகளைப், பார்த்து ரசித்தார்கள்.

பல தடவைகளில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தன்பால் மிகுந்த கவனம் செலுத்தியது பற்றியும் தான் விரும்பிய பொருட்களை வழங்கியது பற்றியும், அன்றாட வாழ்க்கையில் சுயமாகச் செயல்பட அனுமதித்தது பற்றியும் ஆயிஷா(ரலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள். பின்னாட்களில் நபிகளார் பற்றி ஆயிஷா(ரலி) அவர்கள் கூறிய தகவல்களில் எந்த அளவுக்கு நபிகளார் அவருடன் கலந்துரையாடினார்கள், அவருக்கு வழங்கி மகிழ்ந்தார்கள், அன்பை வெளிப்படுத்தினார்கள் என்பது பற்றிய பல விவரங்கள் இருந்தன.

மற்றப் பெண்களைப் போலவே ஆயிஷா(ரலி) அவர்களும் குடும்பப் பெண்ணாக விளங்கியதோடு பொது வாழ்க்கையில் ஈடுபட்டார்கள். ஆயிஷா(ரலி) மற்றும் தங்களது பிற மனைவிகள் அன்றாட வாழ்விலும், பொது வாழ்க்கையிலும் எங்ஙனம் ஈடுபட்டுச் செயலாற்றுகிறார்கள் என்பதை தனது தோழர்கள், முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென நபிகளார் விரும்பினார்கள். அண்டை வீட்டுக்காரரான பெர்சியர் ஒருவர் ஒருமுறை நபிகளாரை விருந்துண்ண அழைத்தார். எனது மனைவி ஆயிஷாவுக்கு அழைப்பு இல்லையா என நபிகளார் கேட்டதற்கு அவர் உங்களுக்கு மட்டுமே அழைப்பு என்றார். நபிகளார் அவரின் அழைப்பை ஏற்க மறுத்து விட்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு அந்த அண்டை வீட்டுக்காரர் மீண்டும் நபிகளாரை விருந்துக்கு அழைத்தார். அப்போதும் ஆயிஷா (ரலி)க்கு அழைப்பு இல்லை என்றறிந்த நபிகளார், அவரின் அழைப்பை ஏற்க மறுத்து விட்டார்கள். சில நாட்கள் கழித்து மூன்றாவது முறையாக

அழைப்பு விடுத்த அவர், ஆயிஷா(ரலி) அவர்களுக்கும் சேர்த்தே இந்த அழைப்பு என்றார். உடனே நபிகளார், தனது மனைவி ஆயிஷா(ரலி)வை அழைத்துக் கொண்டு அவரது வீட்டிற்குச் சென்று விருந்துண்டார்கள். தங்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து கொண்ட நபிகளார் அதே நேரத்தில் அரபுகளிடமும் பதூயின் இனக்குழு மக்களிடையேயும் இருந்து வந்த பழக்க வழக்கங்களை மாற்றிடவும் முயற்சி செய்தார்கள். இந்த விஷயத்தில் எதிர்மறையான அணுகுமுறையை மேற்கொள் ளாமல் நேர்மறையான அணுகுமுறையையே கடைப் பிடித்தார்கள்.

ஆயிஷா(ரலி) கதிஜா(ரலி) ஆகியோர் மட்டுமின்றி, நபிகளாரின் அனைத்து மனைவிமார்களும், குழந்தைகளும் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் சமுதாய, அரசியல் பொருளாதார ஏன் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் கூட ஒரு போதும் அடக்கத்தையோ, கண்ணியத்தையோ விட்டு விடாது கடைப்பிடித்து வந்தார்கள்.

தங்களை மேம்படுத்திக் கொள்ளவும், சுயமாகக் கருத்துக்களைக் கூறவும், அவர்களுக்கு அனுமதி அளித்த நபிகளார், பொது இடங்களில் பெண்மை சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றியும், தங்களது எதிர்ப்பார்ப்புகள் மற்றும் விருப்பங்கள் பற்றியும் பேசுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு மதீனாவைச் சார்ந்த அன்ஸார் பெண்களின் தைரியம், புத்திக் கூர்மை ஆகியவற்றை மிகவும் புகழ்ந்து பேசிய ஆயிஷா(ரலி) அவர்கள், மக்கா நகர் பெண்களைப் போல் அல்லாமல், அவர்கள் சமய விஷயங்கள் பற்றி நேரடியாகக் கேள்வி கேட்பார்கள். அவர்களின் அடக்க உணர்வு அதனைத் தடுத்திடவில்லை அவர்கள் பாராட்டுக் குரியவர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

ஆயிஷா(ரலி) அவர்களும் இதே முறையில் நபிகளாரால் பயிற்றுவிக்கப்பட்டார்கள். இறைவசனங்கள் அருளப்பட்டபோது,

அவர்கள் நபிகளாரின் பக்கத்திலேயே இருந்தார்கள். அப்போது நபிகளார் இறைவசனங்கள் பற்றி அவர்களிடம் கூறியதோடு அது சம்பந்தமான விளக்கங்களையும் வழங்கினார்கள். தனது கணவரின் விருப்பம், மற்றும் மனநிலை ஆகியவற்றை உன்னிப்பாகக் கவனித்து அதன் காரணகாரியங்கள் பற்றி கேள்விகள் கேட்பதை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந் தார்கள். தனது அபார நினைவாற்றல், புத்திக் கூர்மை காரணமாக அவர்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஹதீஸ்களை (நபிகளாரின் பொன் மொழிகள்) வழங்கியுள்ளார்கள். நபித் தோழர்கள் அறிவித்த பல ஹதீஸ்களுக்கு அவர்கள் திருத்தம் கொடுத்தார்கள்.

நபிகளாரும், ஆயிஷா(ரலி) அவர்களும் ஒருவருக் கொருவர் செலுத்திய அன்பு ஆழமானது. வலிமை மிக்கது. நபிகளார் மீது மிக்க அன்பு செலுத்திய ஆயிஷா(ரலி) நம்பிக்கையில் உறுதியாக இருந்தார்கள். நபிகளார் காட்டிய அன்பின் ஒளியில் அவர்கள் சிறந்த முன் மாதிரியாகத் திகழ்ந்தார்கள். ஆயிஷா(ரலி) அவர்களின் இல்லத்திலேயே தாம் மரணமடைய வேண்டும் என்று நபிகளார் விரும்பினார்கள். அதன்படியே மரணமுற்று அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.

# 12

# நபிகள் நாயகம்(ஸல்) கருணையாளர்

குர்ஆனில் இறைவனுடைய பெயர்கள் அர்ரஹ்மான் (மிகுந்த கருணையாளன்) அர் ரஹீம்(மிகுந்த இரக்க சிந்தனையாளன்) எனக் கூறப்பட்டுள்ளன. இந்த இரண்டு வார்த்தைகளின் பொருள், இரக்கம், அன்பு, கருணை, பரிவு, பெருந்தன்மை என்பதாகும். நபிகளார் சொன்னார்கள்:– உயர்ந்த சொர்க்கத்தில் இருந்து கொண்டு அனைத்துப் பொருட்களையும் இறைவன் படைத்த போது தன்னுடைய புனித நூலில் எனது கடும் கோபத்திற்கு முன்னர் எது கருணையே முன்நிற்கும் என்று எழுதினான். பிறகு இறைவன் "என்னுடைய கருணையை 100 பங்குகளாகப் பிரித்து அதில் 99 பங்குகளை நான் வைத்துக் கொண்டு ஒரு பங்கினை எல்லாப் படைப்பினங்களுக்காகவும் பூமிக்கு அனுப்பியுள்ளேன்" என்று கூறினான். படைப்பினங் களுக்கு இறைவன் அளித்துள்ள இந்தச் சிறிய அளவு கருணையின் மூலம், அவை ஒன்றுக்கொன்று கருணை காட்டி வருகின்றன.

> (நபியே) நாம் உம்மை உலகத்தாருக்கு ஒரு அருட் கொடையாகவே அனுப்பியுள்ளோம். (குர்ஆன்:*21:107*)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு இறைவன் வழங்கியுள்ள இந்தக் கருணை மனித குலத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. மாறாக எல்லாப் படைப்பினங்களும் இந்தக் கருணையைப் பெறுகின்றன. உலகின் கருணையனைத்திற்கும் குர்ஆனே மூல காரணமாக இருக்கிறது, அது முதன்முதலில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டு

அதன் மூலம் ஒட்டு மொத்த மனித குலத்தின் கருணையாளராக அவர்கள் திகழ்வதாக குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகி றார்கள். இவ்வாறாக, அனைத்துப் படைப்பினங்களுக்கும் கருணையாளராகவே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அனுப்பப் பட்டுள்ளார்கள் எனவும், அவர்கள் இல்லாமல் குர்ஆன் இல்லை எனவும் விளக்கம் தருகின்றனர்.

திருக்குர்ஆனும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் பெரும் கருணையாளனாகிய ஏக இறைவனின் இரு பெரும் வெளிப்பாடுகளாகும். எவனொருவன் தன்னுடைய பிறகுணங் களோடு, கருணையும், இரக்கமும் கொண்டுள்ளானோ அவனே சிறந்த மனிதனாவான். நபிகளார் காட்டிய இணையற்ற இரக்கமும் அன்பும் இதற்கு முன் இல்லாதது. இதனை கீழ்க்கண்ட அவர்களின் வாழ்க்கை உதாரணங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடியும்.

## பறவைகள், மிருகங்கள் பால் கருணை

ஒருமுறை தோழர் ஒருவர் பறவைக் கூட்டிலிருந்து ஒரு குஞ்சை வெளியே எடுத்து விட்டார். இதனால் தாய்ப்பறவை பதற்றமடைந்து அந்தத் தோழரைத் தாக்கியது. இதனைக் கண்ணுற்ற நபிகளார் உடனே குஞ்சை கூட்டில் வைத்து விடும்படி அத்தோழரிடம் வேண்டிக் கொண்டதோடு, அங்கு அப்போது இருந்த அனைத்துத் தோழர்களிடமும், இந்தப் பறவை தன்னுடைய குஞ்சிடம் காட்டும் இரக்கத்தைவிட இறைவன் உங்களிடம் காட்டும் இரக்கம் உயர்வானது' என்று குறிப்பிட்டார்கள்.

இங்கு பறவைகள் இறைவன் இருப்பதன் அடையாளமாக கருதப்படுகின்றன. இது பற்றி இறைவன் குறிப்பிடுவதாவது...

> வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்தும், சிறகடித்துப் பறக்கும் பறவைகளும் அல்லாஹ்வை துதித்துக் கொண்டிருப்பதை நீங்கள் பார்க்க

வில்லையா என்ன? ஒவ்வொன்றும் தன்னுடைய தொழுகையையும் துதி முறையையும் அறிந்திருக் கின்றது. மேலும் இவை செய்பவை அனைத்தையும் அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கிறான்.' (குர்ஆன் *24:41*)

நபிகளார், பறவைகள் மற்றும் விலங்குகளின் நலன் பற்றி பெரிதும் கவலை கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைத்து படைப்பினங்களின் மீதும் இரக்கம் காட்டினார்கள். தங்களைச் சுற்றியுள்ள இயற்கையையும், மிகச் சிறிய படைப்பினங்களையும் உற்று நோக்கி அதிலிருந்து படிப்பினை பெறுமாறு தோழர்களை வேண்டினார்கள்.

எந்த விதமான நோக்கமுமின்றி வெறும் மகிழ்ச்சிக்காகப் பறவைகளைக் கொல்வதை தடை செய்தார்கள். நோக்கமின்றி பறவைகளைக் கொன்றவருக்கு எதிராக இறுதித் தீர்ப்பு நாளின் போது அந்தப் பறவைகள் வந்து “ஓ என் இறைவனே, இந்த மனிதன் தனது தேவைக்காக அல்லாமல் வெறும் மகிழ்ச்சிக்காக என்னைக் கொன்றான்” என்று சாட்சியம் அளிக்கும். என்று நபிகளார் எச்சரிக்கை செய்தார்கள்.

விலங்குகள் மீது நபிகளார் காட்டிய இரக்க உணர்வு பற்றிய ஏராளமான நிகழ்ச்சிகளை நாம் அறிய முடியும். தனது தோழர்களும் அது போல் நடந்து கொள்ள வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தினார்கள். சிலரின் இதயங்கள் பறவைகளின் இதயங்களைப் போல் உள்ளன. (அன்பும், பணிவும் கொண்டதாக) அவர்கள் சொர்க்கத்தில் நுழைவார்கள்' என நபிகளார் கூறினார்கள். உயிருள்ளவைகள் எரிக்கப்படுவதை நபிகள் நாயகம்(ஸல்) தடை செய்தார்கள். ஒரு முறை எறும்புகள் எரிக்கப்படுவதைக் கண்ணுற்ற நபிகளார் 'யார் இதை எரித்தது' என்று கேட்டார்கள். இன்னார் தான் இவற்றை எரித்தார் என்று அவர்கட்குத் தகவல் தெரிவிக்கப்பட்டபோது நபிகளார் 'நெருப்பு கொண்டு தண்டனை கொடுக்கும் உரிமை இறைவன் ஒருவனுக்கு

மட்டுமே உண்டு' என்று கூறி இந்த எளிய உயிரினங்களைப் பாதுகாக்குமாறு தனது தோழர்கட்கு அறிவுறுத்தினார்கள். தீங்கு செய்யும் உயிரினங்களைக் கூட அவை இறைவனின் படைப்பில் உள்ள ஒரு அம்சமே என்று கருதினார்கள். ஒரு முறை நபிகளார் தமது தோழர்களுடன் மெக்காவிற்கு அருகிலுள்ள 'மினா' என்ற இடத்தில் இருந்த போது, ஒரு குகையிலிருந்து பாம்பு ஒன்று வந்தது. அதைத் தோழர்கள் கொல்ல முயன்ற போது அது தப்பித்துச் சென்று விட்டது. இதன் பின்னர் நபிகளார் 'அதனுடைய தீங்கினின்றும் இறைவன் உங்களைக் காப்பாற்றி விட்டான். உங்களுடைய தீங்கினின்றும் அவன் அதனைக் காப்பாற்றி விட்டான்' என்று கூறினார்கள். உங்களுடைய தீங்கினின்றும் இறைவன் அதனைக் காப்பாற்றி விட்டான் என்று கூறியதன் மூலம் நபிகளார் இவ்வுலகில் பாம்புகளும் தங்களது பணியைச் செய்கின்றன என்பதனை உணர்த்தினார்கள். எல்லா உயிரினங்–களும் இந்த உலக அமைப்பின் ஒரு அங்கமே என நபிகளார் கருதினார்கள்.

இவ்வுலகில் இன்னொரு பெரிய உயிரினமான ஒட்டகத்தை சரியாக நடத்த வேண்டும் என்பதை நபிகளார் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். குர்ஆன் கேள்வி எழுப்புகிறது. 'நீங்கள் ஒட்டகங்களைப் பார்க்கவில்லையா? அவைகள் எப்படிப் படைக்கப்பட்டுள்ளன? என்று (88:7) பசி காரணமாக, வயிறு மிகவும் சிறுத்துப் போயிருந்த ஒரு ஒட்டகத்தை அவர்கள் ஒரு முறை பார்க்க நேர்ந்த போது தங்களுடன் இருந்தவர்களிடம் நபிகளார் கூறியதாவது 'வாய் பேசாத இந்த உயிரினங்களைப் பார்க்கும் போது இறைவனை நினைத்துக் கொள்ளுங்கள் அவைகள் ஆரோக்கியமாக இருக்கும் போது அவற்றின் மேல் சவாரி செய்யுங்கள். செழிப்பான நிலப்பகுதி வழியாகப் பயணம் செய்ய நேர்ந்தால், அந்த நிலத்தில் கிடைக்கின்ற உணவுப் பொருட்களை ஒட்டகத்திற்குக் கொடுங்கள். ஒரு வறண்ட வெற்று நிலப் பகுதியில் பயணம் செய்யும் போது விரைவாகச் செல்லுங்கள்'

நபித்தோழரான அனஸ்(ரலி) அவர்கள் கூறியதாவது:– 'களைத்துப் போயிருக்கிற அல்லது கர்ப்பமாக இருக்கிற விலங்குகளைச் சுடக் கூடாது என்று நபிகளார் தடுத்துள்ளார்கள்.

தங்களுடைய வாழ்நாள் முழுவதும் நபிகளார் விலங்குகளைக் கருணையுடன் நடத்த வேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளார்கள். மக்காவை நோக்கி படை நடத்திச் சென்ற போது பாதை ஓரத்தில் கிடந்த நாய் ஒன்றின் குட்டிகளைப் பாதுகாக்கும் படி நபிகளார் சொன்னார்கள். ஒரு நாய் தனது குட்டிகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த போது அதனைக் கண்ணுற்ற நபிகளார் தனது தோழர்களில் ஒருவரான சுராகா மகன் ஜுவைல் என்பாரை அந்த நாய்க்குக் காவலாக நின்று படைகளால் அதற்கு ஆபத்து நேராமல் பார்த்துக் கொள்ளும்படி ஆணையிட்டார்கள். படை முழுவது அந்தப் பகுதியைச் கடந்து செல்லும் வரை அவர் அங்கு பாதுகாவலாக நின்றார். இது நபிகளார் எந்த அளவிற்கு விலங்குகளின் மீது கருணையும் இரக்கமும் கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. படை நடத்திச் சென்று கொண்டிருந்த நேரத்திலும் ஒரு நாய்க்கும் அதன் குட்டிகளுக்கும் துன்பம் நேரிடாத வண்ணம் அவை மீது கவனம் செலுத்தினார்கள்.

நபிகளார், பூனைகளை மிகவும் நேசித்தார்கள். ஆனால் பொதுவாக, தனது தோழர்கள் விலங்குகளை அன்புடன் நடத்த வேண்டுமென்று வலியுறுத்துவார்கள். ஒரு முறை தனது தோழர்களிடம் நபிகளார் சொன்ன கதை இது: கொழுத்தும் வெயிலில் ஒருவன் சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு கிணற்றைப் பார்த்த அவன் தாகம் தணிப்பதற்காக அதனுள் இறங்கினான். அவன் மேலே ஏறி வந்த போது, ஒரு நாய் தாகத்துடன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். என்னைப் போலவே இந்த நாயும் தாகமாக உள்ளது என உணர்ந்த அவன், மீண்டும் கிணற்றினுள் இறங்கி தனது செருப்பில் நீரை நிரப்பி, அதனை தனது வாயின் பற்களுக்கிடையில் வைத்துக் கொண்டு மேலே வந்து அந்த நாய்க்கு நீரைக் குடிக்கக் கொடுத்து அதன்

தாகம் தீர்த்தான். இதற்காக இறைவன் அவனுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்தான்' விலங்குகளிடம் நன் முறையில் நடந்து கொண்டால் நமக்கு வெகுமதி கிடைக்குமா என நபிகளாரிடம் கேட்டபோது 'ஒரு உயிரினத்திற்குச் செய்யப்படும் எந்த ஒரு நன்மையான செயலுக்கும் இறைவனின் வெகுமதி உண்டு' என்று பதிலளித்தார்கள்.

இன்னொரு தருணத்தில் நபிகளார் கூறியதாவது:– 'ஒரு பெண் ஒரு பூனையை இறக்கும் வரை அடைத்து வைத்ததற்காகத் தண்டிக்கப்பட்டாள். இதன் காரணமாக அவள் நரகத்திற்கு அனுப்பப்பட்டாள். அதனை அடைத்து வைத்திருந்த போது அதற்கு அவள் எந்த உணவும் கொடுக்கவில்லை. அல்லது அதனை அவிழ்த்து விட்டு இரை தேட அனுமதிக்கவுமில்லை. விலங்குகள் மீது அன்பும், மரியாதையும் செலுத்துவதை நபிகளார் இஸ்லாமியப் போதனைகளின் ஒரு அம்சமாகவே கருதி அதனை வலியுறுத்தி வந்தார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதனை அவர்கள் வலியுறுத்தத் தவறவில்லை. நபிகளார் ஒரு முறை எச்சரித்தார்கள். ஒரு சிட்டுக் குருவியையோ அல்லது அதை விடப் பெரிய ஒரு பறவையையோ அவை வாழ்வதற்கான உரிமையை மறுத்து யார் கொல்கிராறோ அவர் இறுதி தீர்ப்பு நாளின் போது இறைவனிடம் பதில் சொல்லக்கடமைப் பட்டவராவார்.' இதன் மூலம் விலங்குகளின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமென்றும், அவை நன்முறையில் நடத்தப்பட வேண்டும் அதில் எந்த விதமான சமரசத்திற்குத் இடமில்லை என்றும், இவை மனித சமூகத்தின் கடமைகளின் ஒரு பகுதி என்றும், ஒருவன் ஆன்மீக உயர்வினை அடைய இப்பண்புகள் அவசியம் என்றும் நபிகளார் உணர்த்தினார்கள்.

## இயற்கையும் சுற்றுப்புறச் சூழலும்

பூமியும், அதிலுள்ள அனைத்து உயிரினங்களும், பிற படைப்புகளும் அவனது அடக்கமான பணியாட்கள் என்றும், அவைகள் அவனுக்காக தலை தாழ்த்துகின்றன என்றும் இறைவன் கூறுகிறான்.

வானங்களில் உள்ளவர்களும், பூமியில் உள்ளவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங் களும், மலைகளும், மரங்களும், பிராணிகளும் மற்றும் மனிதர்களில் பெரும்பாலோரும், ஏன் அல்லாஹ்வின் வேதனைக்கு இலக்காகிய பலரும் அல்லாஹ்வின் திரு முன் ஸஜ்தா செய்து சிரம் பணிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீர் காணவில் லையா? அல்லாஹ் யாரைக் கேவலப்படுத்து கின்றானோ அவரைக் கண்ணியப்படுத்துபவர் எவருமில்லை. திண்ணமாக, அல்லாஹ் தான் நாடியதைச் செய்கிறான். (திருக்குர்ஆன் 22:18 )

தௌஹீது அல்லது ஓரிறைக் கொள்கை என்பதே குர்ஆனின் அடிப்படைக் கொள்கையாகும். இதில் தான் அனைத்து விஷயங்களும் அடங்கியுள்ளன. திருக்குர்ஆனின் கூற்றுப்படி இறைவன் மட்டுமே இந்த பிரபஞ்சத்தின் ஏக அதிபதி யாவான். அவனே இரக்கமிக்க பாதுகாவலன். கேள்வி கேட்க முடியாத எஜமான். தனது அதிகாரத்தைக் கொண்டே இந்தப் பூமியில் உள்ள அனைத்தையும் அவன் படைத்துள்ளான். மனித சமுதாயத்தின் ஒற்றுமை, மனிதனுக்கும் இயற்கைக்கு மிடையிலான உறவு அறிவிற்கும் மதிப்பீடுகளுக்குமிடையிலான உறவு ஆகிய இவை அனைத்தும் வலியுறுத்தப்படும் போது தௌஹீதின் முழுப் பரிமாணமும் வெளிப்படுகிறது. எனவே இயற்கை வளங்களை மனிதன் சுரண்டவோ, தவறான முறையில் பயன்படுத்தவோ கூடாது. மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள நெருங்கிய உறவினை எண்ணிப் பார்க்கும் போது இயற்கை வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவது மனிதன் தன்னைத்தானே தவறான முறையில் பயன்படுத்துவதற்கு ஒப்பானது. மனித உயிர் எவ்வளவு புனிதமானதோ அது போல் குர்ஆனின் கூற்றுப்படி இயற்கையும் புனிதமானது தான்.

பூமியை அவன் எல்லாப் படைப்புகளுக்காகவும் அமைத்தான். அதில் விதவிதமான சுவைமிகு கனிகள்

ஏராளமாக உள்ளன. பேரீத்தம் பழங்களும் இருக்கின்றன. அவற்றின் பழங்கள் பாளைகளால் மூடப்பட்டிருக்கின்றன. விதவிதமான தானியங்கள் உள்ளன. அவற்றில் உமியும் உண்டு. மணியும் உண்டு.

*(55:10–13)*

அவன் வானத்தை உயர்த்தினான். தராசை நிலை நாட்டினான். நீங்கள் தராசில் நீதி தவறிவிடக் கூடாது என்பதற்காகத் தான் மேலும் நீதியுடன் மிகச் சரியாக நிறுங்கள் தராசில் எடைக் குறைவு ஏற்படுத் தாதீர்கள்.

(திருக்குர்ஆன் *55:7–9*)

பூமிக்கும் அதன் சுற்றுப்புறத்திற்கும் உரிமைகள் உள்ளன. முதல் உரிமை அவை நமக்குச் சொந்தமானதல்ல என்று உணர்ந்து கொள்வதேயாகும். அவற்றை நாம் படைக்கவில்லை. எனவே அவை நமக்குச் சொந்தமானதல்ல. அதனுடைய சட்டபூர்வமான உரிமையாளன் அவற்றை நம்மிடம் ஒப்படைத்துள்ளான். இறைவனின் தொடர்பில்லாமல் இயற்கைக்கு எந்தவிதமான அர்த்தமும் இல்லை. தெய்வீக நோக்கமில்லாமல் அவை இந்த உலகத்தில் படைக்கப்படவில்லை என்பதே ஓரிறைக் கொள்கை வலியுறுத்தும் உண்மையாகும். இதன் காரணமாகவே குர்ஆனில் இவை படைக்கப்பட்டவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மனிதர்கள் பூமியில் இறைவனின் பிரதிநிதிகள்

கலிபா' என்னும் முறையானது திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள இரண்டாவது முக்கிய கருத்துரு வாக்கமாகும். இந்த வார்த்தையை அதிகாரம் பெற்ற பிரதிநிதி' அல்லது 'அறங்காவலர்' என மொழிபெயர்க்கலாம். மனிதர்கள் இறைவனின் பிரதிநிதிகள் அல்லது அறங்காவலர்கள் என்பதைப் பற்றி திருக்குர்ஆனின் இரண்டாவது அத்தியாயம், 30வது வசனத்தில் இறைவன் வானவர்களுக்குச் சொல்வதாக

குறிப்பிடப்பட்டிருப்பதாவது:– 'நான் ஒரு பிரதிநிதியைப் பூமியில் நியமித்துள்ளேன்' மேலாண்மைமிக்க ஒருவரின் பிரதிநிதியே 'கலிபா' எனப்படுவார்.

ஒரு ஆணுக்கோ, பெண்ணுக்கோ எந்தப் பொருளின் மீதும் தனிப்பட்ட அதிகாரம் எதுவும் கிடையாது. இந்த பிரதிநிதிகள் (அல்லது அறங்காவலர்களின்) பணியானது தங்களது பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றி அறக்கட்டளை நீடித்திருக்கவும், வளர்ச்சி பெறச் செய்யவுமான முயற்சிகளில் ஈடுபடுவதுதான்.

இறைவனின் பிரதிநிதிகளாக பூமியில் இருப்பவர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டுப் பொறுப்பு என்ன வென்றால் இயற்கையின் சமபல நிலையை அல்லது இணக்கமான நிலைமையைப் பராமரித்து, அதிலுள்ள தாவரங்களையும் விலங்கினத்தையும் பாதுகாக்கும் வண்ணம் சுற்றுப்புறச் சூழல்களைப் பேணி இறைவனின் படைப்புகளை மரியாதை யுடனும், கண்ணியத்துடனும் நடத்துவதுதான். நாம் இறைவனைச் சாராமல் வாழும் சுயேட்சையானவர்கள் அல்ல. ஆனால் நாம் பூமியில் செய்திடும் விஞ்ஞான, தொழில்நுட்ப, வர்த்தகச் செயல் பாடுகளுக்காக தனிப்பட்ட முறையிலும், கூட்டு முறையிலும் இறைவனுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாகவும் பொறுப்பாளிகளாகவும் இருக்கிறோம். இந்த அறக்கட்டளை பூமியின் ஒருமைப்பாட்டையும், சுற்றுச் சூழலையும் நாம் எப்படிப் பேணிப் பராமரிக்கிறோம் என்பதையறிய இறைவன் நமக்கு வைத்திட்ட ஒரு தேர்வாகும். பிரதிநிதிகள் அல்லது அறங் காவலர்கள் என்ற முறையில் நாம் நமது பொறுப்புகளை எப்படி நிறைவேற்றுகிறோம் என்பதைப் பொறுத்தே நமது தகுதி தீர்மானிக்கப்படுகிறது.

> அவன் தான் பிரதிநிதிகளாக பூமியில் உங்களை ஆக்கியுள்ளான் (அல்குர்ஆன் 6:165)

எனவே இயற்கை நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு

அமானிதமாகும். அது தார்மீக நெறிமுறைகளின் போராட்டக் களமாகும். இயற்கை வளங்களைத் தற்காலிகக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அதனை அனுபவிக்கும் நமக்கு அதன் மீது சர்வ சுதந்திரமான அதிகாரம் எதுவுமில்லை.

திருக்குர்ஆனின் கூற்றுப்படி இயற்கை இறைவனின் ஒரு அத்தாட்சியாகும்.

> திண்ணமாக வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒருங்க மைப்பிலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்குப் பல சான்றுகள் உள்ளன. அவர்கள் எத்தகையவர்களெனில் நிற்கும் போதும் உட்காரும் போதும், படுத்திருக்கும் போதும் ஆக எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வை நினைக்கின்றனர். மேலும் வானங்கள் மற்றும் பூமியின் அமைப்பைக் குறித்துச் சிந்திக்கின்றார்கள். (திருக்குர்ஆன் *3:190–191*)

எனவே இயற்கை நாம் உயிர் வாழ்வதற்கும் மீட்சி பெறுபவதற்கும், புரிதலுக்கும் மிகவும் இன்றியமையாததாகும். எல்லாப் படைப்பினங்களும் புனிதமானவையே. ஒரு மனிதன் என்ற முறையில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து இயற்கைக்கும் மனிதனுக்குமிடையில் ஒரு சமநிலையைப் பேணுவது நமது பணியின் ஒரு பகுதியாகும். 'இயற்கையின் பாதுகாவலன்' என்ற நிலையிலிருந்து நாம் தவறும் போது மனிதன் என்ற நிலையிலிருந்தும் தவறி இப்பூமியில் முற்றிலும் அந்நியர்களாகி விடுகிறோம்.

> மேலும் (மனிதர்களே!) பூமியில் சமாதானமும் அமைதியும் உண்டாகி) அது சீர்திருத்தமான பின்னர் அதில் குழப்பம் செய்யாதீர்கள் (திருக்குர்ஆன் *7:56*)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றதாவது:– 'பூமியில் உள்ள எல்லாவற்றின் மீதும் கருணை காட்டுங்கள் சொர்க்கத்தில் உள்ளவர்கள் உங்களிடம் கருணை காட்டுவார்கள்.

தற்கால முஸ்லிம் சமுதாயம் சுற்றுப்புறச் சூழல் மீதான தனது பாரம்பரியமான விழிப்புணர்வையும், அக்கறையையும் இழந்து விட்டது. காலனியாதிக்கம் காரணமாக இஸ்லாமிய நாகரீகம் வீழ்ச்சியுற்றதும் பின்னர் நவீனத்துவத்தை நோக்கி விரைந்து சென்றதும் இதற்கான முக்கியக் காரணமாகும் தட்ப வெப்ப சூழ்நிலை மாறி வரும் இந்த யுகத்தில் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள சுற்றுப்புறச் சூழலைப் பேணும் கருத்துகளை அப்படியே ஏற்று அதனை வாழ்க்கையில் செயல்படுத்துவது ஒவ்வொரு முஸ்லிமின் தலையாகக் கடமையாகும்.

வியக்கத்தக்க பலதரப்பட்ட தாவரங்களையும், விலங்கினங் களையும் பாதுகாப்பதும் பராமரிப்பதும் அனைத்து முஸ்லிம்களின் சமயக் கடமையாகும். இந்தப் பூமியில் உள்ள தோட்டங்களையும், ஆறுகளையும் பராமரிப்பதில் நாம் நமக்குரிய பங்கினை செலுத்தத் தவறினாலோ அல்லது வரும் நாட்களில் பூமியைப் பாதுகாக்கத் தேவையான கொள்கை களையும் நடைமுறைத் திட்டங்களையும் உருவாக்கிடத் தவறினாலோ நாம் நமது கடமையிலிருந்து தவறியவர்களாகவே கருதப்படுவோம். இதன் காரணமாக நமக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் அழிவுதான் ஏற்படும்.

> அவன் தான் இந்தப்பூமியை விரித்து அதில் மலைகளை நாட்டி ஆறுகளை ஓடச் செய்துள்ளான். மேலும் ஒவ்வொரு கனிவகை (தாவரங்)களின் ஜோடிகளையும் அதில் அவனே படைத்துள்ளான். அவனே இரவைப் பகலின் மீது போர்த்துகிறான். சிந்திக்கும் மக்களுக்கு இவை அனைத்திலும் பல சான்றுகள் உள்ளன. அருகருகே அமைந்துள்ள (தனித் தன்மைகள் கொண்ட) பல பகுதிகள் பூமியில் உள்ளன. வயல்களும் இருக்கின்றன. பேரீச்சம் மரங்களும் இருக்கின்றன. அவற்றில் சில ஒற்றையாகவும், சில இரட்டையாகவும் முளைக்கின்றன. அனைத்திற்கும்

ஒரே விதமான நீரே புகட்டப்படுகின்றது. ஆயினும் அவற்றில் சில சுவை மிகுந்ததாகவும் சில சுவை குறைந்ததாகவும் ஆக்குகின்றோம். திண்ணமாக இவை அனைத்திலும் சிந்திக்கும் மக்களுக்குப் பல சான்றுகள் உள்ளன. (திருக்குர்ஆன் 13:3–4)

## ஹரம்–ஹிமா

இயற்கையை நேசிப்பதும் அதனைப் பாதுகாப்பதும் நபிகள் நாயகம்(ஸல்) மற்றும் அவர்களது தோழர்களின் முக்கியப் பண்பாக இருந்தது.

அமானிதம் அல்லது அறக்கட்டளை, பிரதிநிதி அல்லது அறங்காவலர் இவை வெறும் தத்துவக் கோட்பாடுகளல்ல நபிகளாரின் காலத்திலிருந்து இவை கொள்கைகளாக வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட உண்மை நிகழ்ச்சிகளாகும்.

நகரின் எல்லையைச் சுற்றிய பகுதிகளிலும் நீர்நிலைகளின் எல்லையைச் சுற்றிய பகுதிகளிலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இரண்டு மண்டலங்களை உருவாக்கி இருந்தார்கள். அவை முறையே ஹரம் – ஹிமா என்றழைக்கப்பட்டன. நகரங்களிலும் பெருநகரங்களிலுமுள்ள கிணறுகள், நீர்வரத்துள்ள பகுதிகள் ஹரம் என அழைக்கப்பட்டன. இவை தடைசெய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருந்தன.

கிணறுகளைச் சுற்றி சிறிது இடம் காலியாக விடப்பட்டிருந்தது. இந்த இடம் கால் நடைகள் சற்றுத் தங்கி ஓய்வெடுக்கப் பயன்பட்டது. மேலும் இங்கு கண்காணிப்பு அறைகள் கட்டப்பட்டிருந்தன. இந்த அறைகள் நீர்நிலைகளைப் பராமரிக்கவும், அதில் உள்ள தண்ணீர் அசுத்தம் அடையாமல் பார்த்துக் கொள்ளவும் பாசன வசதிகளை ஏற்படுத்தித் தரவும்

தேவையான கண்காணிப்பை மேற்கொள்ளப் பயன்பட்டன. ஆறுகள் நீர்நிலைகளைச் சுற்றிலும் அதிலுள்ள நீரை அசுத்தமடையச் செய்யும் எந்த ஒரு செயலிலும் மக்கள் ஈடுபடாமல் தடுக்கப்பட்டிருந்தனர். வனவிலங்குகளின் அவற்றிற்குரிய உணவு பெறுவதை உறுதி செய்ய நகரங்க ளிலுள்ள மரங்களை வெட்டுவதும், அவற்றை எடுத்துச் செல்வதும், எரிப்பதும் தடுக்கப்பட்டிருந்தது.

## மதீனாவைச்சுற்றி பசுமைப் பகுதிகள்

ஹிமா மண்டலங்கள் நகரத்திற்கு வெளியே உள்ள காடுகளையும் வன விலங்குகளையும் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தன. மதீனாவின் சுற்றுப்புற பகுதிகளை நபிகளார் ஹிமா மண்டலம் என அறிவித்தார்கள். ஆனால் நகரத்திற்குள் பல ஹரம் மண்டலங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மதீனாவிற்கு வெளியே 20கி.மீ தொலைவிற்கு அப்பால் 'அல்நகீ' என்ற ஹிமா அமைந்திட நபிகளார் உத்தவிட்டார்கள். இவை குதிரைகளின் மேய்ச்சல் நிலங்களாக அறிவிக்கப்பட்டன. ஏராளமான மரங்களை வளர்க்கும்படி நபிகளார் ஆணை யிட்டார்கள். அந்தப் பகுதி வழியாகச் செல்லும் குதிரை ஓட்டிகளால் அடையாளம் காண முடியாத அளவுக்கு அந்த பகுதி வெகு விரைவிலேயே பசுமை பூமியாயிற்று. ஒரு மரத்தின் உச்சியில் நின்று கொண்டு ஒருவனை உரத்த குரலெழுப்பச் சொல்லி அவனது குரல் கேட்காத இடத்தை அதன் வெளிப்புற எல்லையாக நபிகளார் நிர்ணயம் செய்தார்கள். அந்தப் பகுதியில் மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டிருந்தது.

ஒரு முறை அகீக் பள்ளத்தாக்கிற்குச் சென்று திரும்பி வந்த நபிகளார் அதன் அழகைப் பற்றி தங்களது மனைவியார் ஆயிஷா(ரலி) அவர்களிடம் விவரித்துச் சொன்னார்கள். இதனைக் கேள்ளியுற்ற ஆயிஷா(ரலி) அவர்கள் நபிகளாரிடம் வீட்டை அந்தப் பகுதிக்கு மாற்றிவிடலாமே என ஆலோசனை கூறினார்கள். பின்னாட்களில் மதீனா நகரைச் சார்ந்த

செல்வந்தர்கள் பலர் அங்கு தங்களது கோடை கால இல்லங்களைக் கட்டினர். நாளடைவில் அந்தப் பகுதி ஒரு சுற்றுலாத்தலமாகியது. மதீனாவாசிகள் குடும்பத்துடன் சென்று அங்கு பொழுதைப் போக்கி வந்தனர்.

ஹரம் மற்றும் ஹிமா உருவாக்கப்படுவதற்கான சரத்துக்கள் இஸ்லாமிய ஷரிஅத் சட்டத்திலேயே இடம் பெற்றுள்ளன. இவை இஸ்லாமிய நாகரீகத்தின் சிறப்பான அம்சங்களாகும். மேலும் விலங்குகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்களும் இஸ்லாமிய 'ஷரிஅத்'தில் இடம் பெற்றிருந்தன. “மேலும் பூமியில் ஊர்ந்து திரிகின்றதும், தமது இரு இறக்கைகளால் ஆகாயத்தில் பறக்கக்கூடிய பறவைகளும் உங்களைப் போன்ற ஜீவனுள்ள இனங்களேயன்றி வேறில்லை” என்று இறைவன் திருக்குர்ஆனில் குறிப்பிடுகிறான் (*6:138* )

இயற்கையைப் போற்றுவதும், பாதுகாப்பதும் விலங்குகள் மற்றும் பறவைகள் மீது அன்பு செலுத்துவதும் இஸ்லாமியக் கலாச்சாரமாகும்.

## பசுமை பூமி

நபிகளார் சொன்னதாக அனஸ்(ரலி) அவர்கள் குறிப்பிடுவதாவது:– 'யாராவது ஒருவன் ஒரு மரத்தை நட்டு அதன் பழங்களை மக்களோ அல்லது பிற உயிரினங்களோ உண்டால், அவன் செய்திட்ட கொடையாக அது கருதப்படும்.'

இந்த முறையில் ரோடுகளின் இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்களை நட்டு வைப்பதும், சமூக வனக்காடுகளை அமைப்பதும் பூங்காக்கள் மற்றும் பாதுகாப்புக்காடு அமைப்பதும் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. நபிகளார் ஒரு முறை சொன்னார்கள் 'வழிப்போக்கர்களுக்கும் விலங்கு

களுக்கும் நிழல் தருகின்ற மரத்தை ஒருவன் வெட்டினால் நியாயத் தீர்ப்பு நாளின் போது இறைவன் அவனுக்குத் தண்டனை வழங்குவான்.

இதன் மூலம் நபிகளார் இந்த பூமியைப் பசுமையாக வைத்துக் கொள்வதில் எவ்வளவு தூரம் அக்கறை காட்டி யுள்ளார்கள் என்பதை உணரமுடியும். நாம் வாழ்ந்து கொண்டி ருக்கின்ற இந்த உலகத்தை எங்ஙனம் பாதுகாக்க வேண்டும் என்பது பற்றியும் அவற்றின் மீதான நம் உரிமைகள் பற்றியும், அவை இறுதித்தீர்ப்பு நாளின் போது எப்படி நம்முடைய செயல்களை வெளிப்படுத்தும் என்பது பற்றியும் முற்றிலும் புதிய முறையில் விளக்கம் தந்துள்ளார்கள்.

நபிகளார் மேலும் சொன்னதாவது 'இறுதித் தீர்ப்பு நாள் நெருங்கி வரும் போது ஒருவன் தனது கையில் ஒரு மரச் செடியைப் வைத்திருந்தால் உடனே அவன் அதை நடட்டும்'

ஒரு முஸ்லிமின் மனச்சாட்சி கடைசிவரை இயற்கையுடன் நெருங்கிய உறவு கொண்டதாக இருக்க வேண்டுமென்றும், ஒருவனுடைய கடைசி நற்செயல் கூட ஒரு உயிரைப் புதுப்பித் தலோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பதும் இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது..

## இயற்கை வளங்கள்

இயற்கை என்பது இறைவனின் படைப்பு. அதிலுள்ள வளங்கள் அவன் நமக்கு அளித்திட்ட வெகுமதிகள் ஆகும். அவற்றை அழிக்கக் கூடாதென்றும் வீணாக்கக் கூடாதென்றும் அவன் உத்தரவிடுகிறான்.

> ஆதத்தின் மக்களே! ஒவ்வொரு தொழுகையின் போதும் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள். மேலும் உண்ணுங்கள், பருகுங்கள். ஆனால் விரயம் செய்யாதீர்கள். திண்ணமாக அல்லாஹ் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை. (*7:31*)

இயற்கை வளங்களை இரக்கமின்றிச் சுரண்டுவது படைத்தவனுக்கு மட்டுமல்ல, மனித குலத்திற்கே எதிரானது ஆகும். இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் போது மிகுந்த கவனத்துடன் நடந்து கொள்ளுமாறு நபிகளார் தமது தோழர்களிடம் வலியுறுத்தினார்கள். தண்ணீரை எவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு சிக்கனமாகப் பயன் படுத்தும்படி சொன்னார்கள்.

ஒரு முறை ஸைது என்ற முக்கியத் தோழர் ஒலுச் செய்வதை (தொழுகைக்கு முன்னர் தண்ணீர் கொண்டு குறிப்பிட்ட உடல் அவயவங்களை சுத்தம் செய்வதற்கு ஒலு என்று பெயர்) நபிகளார் பார்க்க நேர்ந்தது. அவர் அளவிற்கு அதிகமாகத் தண்ணீரைச் செலவழிப்பதைக் கண்ட நபிகளார் 'ஓ ஸைதே ஏன் வீணாக்குகிறீர்கள் என்று கேட்க அதற்கு அவர் 'ஒலுச் செய்யும் போது தண்ணீர் செலவழிப்பது வீணா?' என்று எதிர் கேள்வி கேட்க, நபிகளார் 'ஆம், ஓடிக்கொண்டிருக்கும் நீரோடையின் தண்ணீரைப் பயன்படுத்தும் போதும் சிக்கனம் அவசியம்' எனக் குறிப்பிட்டார்கள்.

நபிகளாரின் போதனைகளில் தண்ணீர் முக்கியப்பங்கு வகித்தது. ஏனெனில் அது மனிதனின் உடலையும், உள்ளத்தையும் தூய்மைப் படுத்துகிறது. இது சம்பந்தமாக நபிகளார் கூறியிருப்பதாவது:– 'நம்பிக்கையாளர்கள் ஒலுச் செய்யும் போது முகத்தைக் கழுவுகிறார்கள். அப்போது கண்கள் மூலமாக அவர்கள் செய்த பாவங்கள் மறைந்து போகின்றன. கைகளைக் கழவும் போது, அதன் மூலம் செய்த பாவங்கள் மறைந்து விடுகின்றன. கால்களைக் கழுவும் போது, அவை புரிந்திட்ட பாவங்கள் விலகிச் செல்கின்றன.' தண்ணீரையோ அல்லது இயற்கை வழங்கியுள்ள வேறு எந்த ஒரு பொருளையுமோ அற்பமாகக் கருத வேண்டாம் என நபிகளார் ஸைதுக்கும் பிற தோழர்கட்கும் உபதேசித்தார்கள். அதற்கு மாறாக அவற்றை மதித்து, சிக்கனமாகப் பயன்படுத்தி இறைவனின் அருளைப் பெறுமாறு வலியுறுத்தினார்கள்.

நபிகளாரின் வாழ்க்கையிலும், அவரது போதனைகளிலும் இருக்கின்ற இது சம்பந்தப்பட்ட செய்திகளை நாம் புறக்கணிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மனித குலத்தின் பால் கருணை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மனித குலம் முழுமைக்கும் அருளாளராக அனுப்பப்பட்ட முதல் இறை தூதராவார்கள். அவர்கள் தன்னுடைய கருணையை, பரிவை, ஆண்கள், பெண்கள், பெற்றோர், குழந்தைகள், கணவன், மனைவி, எஜமானன், அடிமை, ஏழை, பணக்காரன், நண்பன், பகைவன், அண்டைவீட்டுக்காரர், புதியவர் என மனித சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினர் மீதும் வெளிப்படுத்தினார்கள். ஆண்–பெண், நிறம், கொள்கை போன்ற பேதங்களுக்கு அப்பாற்பட்டு அனைத்து மக்களுக்காகவும் கவலைப்பட்டார்கள். அவர்களின் இதயம் அன்பும், பரிவும், இரக்கமும் வழிந்தோடும் நீரோடையாக இருந்தது. பிறரின் துயரங்களைப் பார்க்கும் போது அவர்களின் கண்கள் கண்ணீர் வடிக்கும். இதயம் ரத்தம் சிந்தும்.

## பெற்றோர்

பெற்றோர்களிடம் இரக்கமும், பரிவும் காட்ட வேண்டுமென்று திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது. பெற்றோர்களுடன் அன்புடனும், இரக்கத்துடனும் நடந்து கொள்வதை குர்ஆன் ஓரிறைக் கொள்கையோடு தொடர்புபடுத்திக் கூறுகிறது.

> உம் அதிபதி விதித்துள்ளான். அவனைத் தவிர வேறெவரையும் நீங்கள் வணங்காதீர்கள். தாய் தந்தையரிடம் மிக கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுங்கள். (குர்ஆன் *17:23*)

இறைவனின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிவதோடு மக்களுடன் அன்போடு நடந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தும் குர்ஆன், இந்த விஷயத்தில் பெற்றோர்களை

முதன்மைப்படுத்துகிறது. 'உங்களது பெற்றோருக்கு நல்லது செய்யுங்கள்' (குர்ஆன் 4:36) என்று கூறுகிறது.

திருக்குர்ஆனின் பல இடங்களில் இறை வணக்கத்திற்கு அடுத்து, பெற்றோர்களை நன் முறையில் நடத்துவது பற்றியே அதிகம் பேசப்படுகிறது. இறைவனுக்குப் பிறகு பெற்றோரின் அன்பைப் பெறுவதே முக்கியமானது என்பது இதன் பொருளாகும். ஒருவனது பிறப்பில் அவனது வளர்ப்பில், அவனுக்கு கல்வி அளிப்பதில், அவனுக்கு ஒழுக்கத்தைப் போதிப்பதில், அவனது உலக முன்னேற்றத்திற்கு உதவுவதில் என அனைத்து நிலைகளிலும் பெற்றோர்களின் பங்களிப்பு மகத்தானது. பெற்றோர்களின் கவனிப்பு இல்லா விட்டால், ஒருவனது முன்னேற்றம் பெரும் சிக்கலுக்கு உள்ளாகிவிடும். படிப்பறிவற்ற ஏழைப் பெற்றோர்கள் கூட தங்களது குழந்தைகளுக்காகப் பெரும் தியாகம் புரிகிறார்கள். அதற்கு ஈடு இணை எதுவுமில்லை.

பெற்றோர்களுடன் நன்முறையில் நடந்து கொள்வதன் மூலம், இறைவனின் அருளை நாம் பெறுகிறோம். இறைவனுக்கு நன்றி செலுத்துவதே தொழுகையில் மெய்ப் பொருளாகும். பெற்றோர்களின் அந்தஸ்து இறைவனுக்கு நிகரானது அல்ல. எனவே நாம் பெற்றோர்களை வணங்க முடியாது. ஆனால் அவர்களை மிகுந்த மரியாதையுடன் நடத்த வேண்டும். அவர்களை அன்பாக நடத்துவதன் மூலமே, நாம் அவர்கட்கு நமது நன்றிக்கடனைச் செலுத்த முடியும். இறைவனுக்கும், பெற்றோருக்கும் நன்றி செலுத்துமாறு குர்ஆன் நமக்குக் கட்டளையிடுகிறது.

> எனக்கு நன்றி செலுத்து; மேலும் உன் பெற்றோருக்கு
> நன்றி செலுத்து (*31:14*)

நவீன நாகரீகம் குடும்ப அமைப்பைச் சீர்குலைத்து விட்டது. இந்த அமைப்பில் இருந்த உயர்ந்த மாண்புகள் சிதைக்கப்பட்டு விட்டன. வயதான பெற்றோர்கள் தற்போது பெரிதும்

பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். அவர்களை என்ன செய்வது என்று மக்கள் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். வருங்காலத்திற்கு எந்தவிதப் பங்களிப்பும் செய்ய இயலாத நிலையில் உள்ள முதிய பெற்றோர்களை எவ்வளவு காலத்திற்குப் பராமரித்துக்காப்பது எனப் பலபேர் நினைக்கிறார்கள். இப்போது உபயோகமற்றவர்கள் எனக் கருதப்படும் பெற்றோர்கள் ஒரு காலத்தில் தங்கள் குழந்தைகளின் பால் அதிக அதிகாரம் செலுத்தியவர்கள் தான். அவர்கள் நினைத்திருந்தால் குழந்தைகளை அந்தப் பச்சிளம் பருவத்திலேயே அழித்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். இன்றைய புதிய தலை முறையினர் தங்களது பெற்றோர்களின் பரிவில் இருந்தவர்கள் தான். பெற்றோர்கள் தான் தங்களது குழந்தைகளை வியர்வை சிந்தி உழைத்து ஆளாக்கியவர்கள். எனவே திருக்குர்ஆன் வயதான பெற்றோர்களை அன்புடனும், கண்ணியத்துடனும் நடத்த வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளது.

> *பெற்றோரில் ஒருவரோ, இருவரோ முதுமை அடைந்து விட்டநிலையில் உம்மிடம் இருந்தால் அவர்களைச் சீ என்று கூடக் கூறாதீர். மேலும் அவர்களைக் கடிந்து பேசாதீர்! மாறாக அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக! மேலும் பணிவுடனும், கருணையுடனும் அவர்களிடம் நடந்து கொள்வீராக! மேலும் நீர் இறைஞ்சிய வண்ணம் இருப்பீராக! என் இறைவனே சிறுவயதில் எவ்வாறு என்னை இவர்கள் பாசத்துடனும் கருணையுடனும் வளர்த்தார்களோ அவ்வாறு இவர்கள் மீது கருணை புரிவாயாக. (குர்ஆன்17:23,24)*

இஸ்லாமியக் கொள்கைகளின்படி, பெற்றோருக்காக நாம் பிராத்தித்தால் மட்டும் போதாது. நாம் குழந்தைகளாக இருந்தபோது எங்ஙனம் நம்மை அன்பு பாராட்டி வளர்த்தார்கள் என்பதை நினைவு கூர்ந்து அவர்கள் மீது பரிவுடன் நாம் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக பெற்ற தாயை பெரிதும் மதிக்க வேண்டும். பெற்றோர்களையும். வயதானவர்களையும்

அவர்களின் சிரமமான காலத்தில் நன்கு கவனித்துக் கொள்வது, மிகப்பெரிய கௌரவமாகவும், ஆசீர்வாதமாகவும், ஆன்மீக வளர்ச்சிக்கான அரிய வாய்ப்பாகவும் கருதவேண்டும்.

இஸ்லாத்தில், பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமை தொழுகைக்கு அடுத்த கடமையாகும். பெற்றோர்கள் அதனை எதிர்ப்பார்ப்பது அவர்களின் உரிமையாகும். வயதானவர்கள் சிரமத்தில் இருக்கின்ற போது (அது அவர்களின் தவறல்ல) அவர்கள் பால் எரிச்சல் அடைவது ஒரு இகழத்தக்க செயலாகவே கருதப்படும்.

## தாயார்

நபிகளார் 'நிச்சயமாக தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கின்றது' என்று சொன்னார்கள். தங்களது ஆறாவது வயதில் இறந்து போன தாயார் ஆமினா அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு செல்வதில் நபிகளார் பெரிதும் ஆர்வம் காட்டினார்கள். ஒருமுறை அவரின் அடக்கஸ்தலத்திற்கு சென்ற நபிகளார் அழுது விட்டார்கள். உடன் இருந்தவர்களும் அழுதனர். பெற்றோர்கள் மீது அன்பும், மரியாதையும் செலுத்துவது மிகப் பெரிய மனிதப் பண்பு என்று நபிகளார் தனது தோழர்கட்கு வலியுறுத்திச் சொன்னார்கள். அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:– ஒரு முறை ஒருவர் நபிகளாரிடம் 'என்னிடமிருந்து அன்பான கவனிப்பைப் பெறத் தக்க நபர் யார்' என்று கேட்டபோது அதற்கு அவர்கள் 'உனது தாயார்' என்று பதிலளித்தார்கள். இரண்டாவது நபர் யார் என்று அவர் கேட்டபோது நபிகளார் அப்போதும் 'உனது தாயார்' என்று பதிலளித்தார்கள். மூன்றாவது நபர் யார் என்று கேட்டபோது, அதற்கும் 'உனது தாயார்' என்றே கூறினார்கள். அதற்கு அடுத்தவர் யார் என்று அவர் இறுதியாகக் கேட்டபோது நபிகளார் 'உனது தந்தை' என்று சொன்னார்கள். ஆகையால், குழந்தைகளின் அன்பு, கருணை, உரிமை ஆகியவற்றின் எழுபத்தைந்து சதவிகிதம் தாய்க்கும், இருபத்தைந்து சதவிகிதம் தந்தைக்கும் சொந்தமாகும். தாய்க்கே தங்கப்பதக்கம்,

வெள்ளிப்பதக்கம், வெண்கலப் பதக்கம் என அனைத்தும் கிடைக்கின்றன. தந்தை ஆறுதல் பரிசுடனேயே திருப்தியுற வேண்டியதுள்ளது.

முஸ்லிம்களும், குறைஷியர்களும் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தபோது, அங்கு இஸ்லாத்தைத் தழுவாத அஸ்மா(ரலி) அவர்களின் தாயார் வந்தார்கள். அஸ்மா(ரலி) நபிகளாரிடம் 'இஸ்லாத்தை இதுவரை ஏற்றுக் கொள்ளாத எனது தாயார் என்னைப் பார்க்க வந்துள்ளார். அவரை நான் பிரியத்துடனும், அன்புடனும் நடத்த வேண்டுமா?' எனக் கேட்டார். இதற்கு நபிகளார் ஆம். அவ்விதமே செய்யுங்கள்! என்று பதில் சொன்னார்கள். பெற்றோர்கள் எத்தகைய நம்பிக்கை சார்ந்தவராக இருந்தாலும், அவர்கள் பால் அன்பு பாராட்டுங்கள் என்று நபிகளார் நவின்றார்கள். ஒரு தோழர் கூறியதாவது:– இஸ்லாத்தில் இணையாத எனது தாயார் என்னைப் பார்ப்பதற்காக மக்காவிலிருந்து மதீனாவிற்கு வந்து என்னிடம் உதவி கேட்டார்கள். அவரது வேண்டுகோளை நான் நிறைவேற்ற வேண்டுமா?' என நபிகளாரிடம் கேட்டபோது, அதற்கு அவர்கள் “ஆம்” உங்கள் தாயாரிடம் அன்பாக நடந்து கொள்ளுங்கள் என பதிலளித்தார்கள்.

## தகப்பனார்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் “தன்னுடைய மகனுக்கு நல்ல பண்புகளை கற்றுக் கொடுப்பதைத் தவிர ஒரு தந்தை தனது மகனுக்குச் செய்யும் பேருபகாரம் வேறு எதுவுமில்லை” என்று நவின்றார்கள். மேலும், “ஒரு தந்தை தனது குழந்தைகளுக்கு நல்ல கல்வியையும், நல்ல பண்புகளையும் சொல்லிக் கொடுப்பதே மிகச் சிறந்ததாகும்” என்றும் கூறினார்கள். நபிகளார் மேலும் கூறியதாவது: மூன்று விஷயங்கள் நீங்கலாக ஒரு மனிதனின் செயல்கள் அவன் இறந்ததும் முடிவுக்கு வந்து விடுகின்றன. அவையாவன:– அவன் செய்த தானதர்மங்கள் பயனளித்துக் கொண்டிருக்கும் கல்வி மற்றும் அவனுக்காகப் பிரார்த்தனை

செய்யும் குழந்தைகள் "தனது தகப்பனாருடைய நண்பர்களுடன் அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொள்வதே ஒருவன் செய்யும் சரியான செயல்களிலேயே உயர்ந்ததாகும்" என்றும் நபிகளார் நவின்றுள்ளார்கள். ஹழ்ரத் உமர்(ரலி) அவர்களின் மகன் அப்பாஸ் நபிகளார் கூறியதாக அறிவிப்பதாவது: "தன்னுடைய தகப்பனாருடைய இறப்பிற்குப் பின்னர் அவரது நண்பர்களுடன் அன்புடன் நடந்து கொள்வதே ஒருவன் செய்யும் நற்செயலாகும்".

## உறவினர்

குர்ஆன் "உறவினர்களை அன்புடன் நடத்துங்கள்" (*4:36*) என்று கூறுகிறது. பெற்றோர்களுக்குப் பிறகு, உறவினர்கள் தாம் நமது மிகுந்த அன்பிற்குப் பாத்திரமானவர்கள். நமது பெற்றோர்கள் மூலமாக உறவினர்கள் நமக்கு சொந்தக் காரர்களாகி விடுகிறார்கள். உறவினர்களுடன் உறவைப் பேணி வருவது நமது சமூக வாழ்க்கையை மகிழ்ச்சியாக்குகிறது. நபிகளார் கூறியதாக ஆமீர் மகன் சுலைமான் அறிவிப்பதாவது:– ஓர் உறவினர் அல்லாத ஏழைக்கு இரக்கப்பட்டு தர்மம் செய்வது வெறும் தர்மமேயாகும். ஆனால் அது உறவினருக்குக் கொடுக்கப்பட்டால், அது தர்மம் மட்டுமின்றி உறவைப் பேணும் ஒரு அத்தாட்சியாகவும் கருதப்படும். உறவினர்களுக்கு வழங்குவது இரட்டை நன்மை தரக்கூடியது என்பதே இதன் பொருளாகும். தன்னுடைய உறவினர்களுடன் ஒரு மனிதனுக்குப் பாசம் ஏற்படுவது இயற்கையான ஒரு உணர்வே. ஆனால் இந்த உறவுகள் எளிதில் அறுந்து போகக் கூடியவைகளே. மிகச் சாதாரணச் சம்பவங்கள் கூட உறவு முறியக் காரணங்களாக அமைந்து விடுகின்றன. இப்படி உறவுகள் முறிந்து போக அனுமதிக்கக்கூடாது. உறவுகளைப் பேண ஒவ்வொருவரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என நபிகளார் வலியுறுத்தியுள்ளார்கள்.

உமர் மகன் அப்துல்லாஹ்(ரலி) நபிகளார் கூறியதாக

அறிவிப்பதாவது:– உறவினர்களுடன் உறவைப் பேணி வருவதென்பது பரஸ்பரம் உறவை வெளிப்படுத்துவது என்பது மட்டும் பொருளல்ல, உண்மையில் சிக்கலுக்குள்ளான உறவுகளை சரி செய்வதும் தான்'.

## பெரியவர்கள்

பெரியவர்கட்கு மதிப்பும், மரியாதையும் அளிக்கப்பட வேண்டும். வாழ்க்கையின் அஸ்தமனத்தில் இருக்கும் அவர்களது நம்பிக்கைகளுக்கும், மனோ பலத்திற்கும் புத்துணர்வு அளிக்க வேண்டுமென்றும் நபிகளார் கூறியுள்ளார்கள். நபிகளார் கூறியதாக அனஸ்(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:– “ஒரு இளைஞன் வயது முதிர்ந்த ஒருவருக்கு உதவி செய்தால், அவன் முதுமையை அடையும் போது இறைவன் அவனுக்கு உதவிட ஆட்களை நியமிப்பான்” முதியவர்களுக்கு மிகுந்த முன்னுரிமை கொடுத்திடுமாறு வானவர் ஜிப்ரீல் தமக்குக் கட்டளையிட்–டுள்ளதாக நபிகளார் ஒரு முறை சொன்னார்கள். விழாக்களின் போதும், உணவு பரிமாறும் போதும் மற்றவர்களை விடப் பெரியவர்கட்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும், உணவு பரிமாறும் போது பெரியவர்களிடமிருந்து ஆரம்பியுங்கள் என்றும் வானவர் ஜிப்ரீல் கூறியதாக நபிகளார் தெரிவித்துள்ளார்கள். மேலும் நபிகளார் கூறியிருப்பதாவது 'மேலும் இளைஞர்கள் மீது இரக்கம் காட்டாதவர்களும், பெரியோர்கள் மீது மரியாதை செலுத்தாதவர்களும் நம்முடைய சமூகத்தின் (முஸ்லிம்) அங்கமாக இருக்கமாட்டார்கள். மதிப்பும் கண்ணியமும் அளிக்கப்பட வேண்டியவர்களில் பெரியவர்களை நபிகளார் உயர்ந்த இடத்தில் வைத்தார்கள். இந்த முன்னுரிமை போரின் போதுகூடக் கடைப்பிடிக்கப்பட்டது. போரின் போது பெரியவர்களையும், குழந்தைகளையும், இளைஞர்களையும், பெண்களையும் கொல்லாதீர்கள் என நபிகளார் கட்டளையிட்டார்கள்.

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று நபிகளார் புனிதப்

பள்ளிவாசலில் நுழைந்தபோது, அபூபக்கர்(ரலி) அவர்கள் பல தெய்வ வழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த தனது தகப்பனாரை அழைத்து வந்திருந்தார்கள். தனது தோழரின் வயதான தந்தையைப் பார்த்த நபிகளார் “அவரை ஏன் நீங்கள் வீட்டில் விட்டு விட்டு வந்திருக்கக் கூடாது. அவரைப் பார்ப்பதற்காக நான் சென்றிருப்பேன்” எனக் குறிப்பிட்டார்கள். இதற்குப் பதிலளித்த அபூபக்கர் “ஓ! இறைவனின் தூதரே, அவர் உங்களை வந்து பார்க்க வேண்டும். நீங்கள் சென்று பார்ப்பதைக் காட்டிலும்” என்று கூறினார்கள். இரக்க சிந்தை கொண்ட நபிகளார் அந்தப் பெரியவரை தனக்கு முன்னால் அமரச் செய்து அவருக்கு மரியாதை செலுத்தினார்கள். பிறகு அவரின் நெஞ்சைத் தொட்டு 'முஸ்லிமாக ஆகி விடுங்கள்' என்று கூறவே அவரும் இஸ்லாத்தில் இணைந்தார்.

## குழந்தைகள்

குழந்தைகளை அவர்களின் களங்கமற்ற, மென்மையான, சமயோசிதமான செயல்களுக்காக நபிகளார் பெரிதும் நேசித்தார்கள். குழந்தைகளை முத்தமிட்டார்கள். தனது தோள்களில் அவர்களைத் தூக்கி வைத்துக் கொண்டு விளையாடினார்கள். குழந்தைகளின் களங்கமற்ற தன்மையை உணர்ந்தறிவதை இறைவனுக்குச் செய்யப்படும் ஒரு வணக்கமாகவே கருதினார்கள். நபிகளாரின் செயல்பாடுகள் இவற்றை நினைவுபடுத்துவதாக இருந்தன. உபரியான தொழுகைகளை மேற்கொண்டிருக்கும் போது (கட்டாய மாக்கப்பட்ட ஐந்து வேளைத் தொழுகைகளைத் தவிர்த்த பிற தொழுகைகள்) குழந்தை அழும் சப்தம் கேட்டால், தங்களது தொழுகையைக் குறைத்துக் கொண்டு, குழந்தையைக் கவனிக்கச் சென்று விடுவார்கள். குழந்தைகள் மீது பெரிதும் அன்பு பாராட்டிய நபிகளார் அவர்களை 'சொர்க்கத்தின் பூக்கள்' என்றும் 'நல்ல குழந்தைகளைப் பெற்றிருப்பது ஒரு மனிதன் பெற்ற பெரும் பேறாகும்' எனவும் நவின்றார்கள்.

பருவகாலத் துவக்கத்தின் போது யாரேனும் புதுப் பழங்கள் கொண்டு வந்தால், நபிகளார் அவற்றை முதன் முதலில் அப்போது அங்கு இருக்கும் குழந்தைகளுக்குத்தான் கொடுப்பார்கள். குழந்தைகளின் கன்னத்திலும், நெற்றியிலும் முத்தமிட்டு வாழ்த்துவது அவர்களின் வழக்கமாகும். ஒரு முறை நபிகளார் சில குழந்தைகளை முத்தமிட்டு வாழ்த்துத் தெரிவித்ததைக் கண்ணுற்ற கிராமப்புற மனிதர் ஒருவர் 'நீங்கள் குழந்தைகளின் மீது மிகவும் பிரியம் கொண்டிருக்கிறீர்கள். எனக்குப் பத்துக் குழந்தைகள் உள்ளன. அவர்களில் யாரையும் நான் முத்தமிட்டது இல்லை' என்று கூறினார். அதற்குப் பதிலளித்த நபிகளார் 'இறைவன் உன்னிடமிருந்து அன்பை எடுத்து விட்டால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்' என்று கூறினார்கள்.

போரில் வீரமரணம் அடைந்த ஒரு தோழரின் குழந்தைகளைக் கொண்டு வருமாறு அவரது மனைவியிடம் நபிகளார் கேட்டுக் கொண்டார்கள். அழுத அக் குழந்தைகளை நபிகளார் அரவணைத்து அவர்களின் தந்தை இறந்த செய்தியைத் தெரிவித்தார்கள். அவர்களுக்கு உணவு சமைத்து வழங்கும்படி தனது குடும்பத்தினரை கேட்டுக் கொண்டார்கள் ஏனெனில் தங்களுக்குரிய உணவைத் தயாரிக்க இயலாத அளவிற்கு அவர்கள் துயரத்தில் இருந்தனர். அவர்களது பிரியமும் அன்பும் முஸ்லிம் குழந்தைகளோடு மட்டும் குறுகிவிடவில்லை. 'அனைத்துக் குழந்தைகளும் பரிசுத்தமான முறையிலேயே பிறக்கின்றன' என்று குறிப்பிட்டார்கள்.

ஒருபோரின் போது, எதிரிப் படைகளுக்கிடையில் சிக்கிக் கொண்ட சில குழந்தைகள் கொல்லப்பட்டனர். இதனைக் கேள்வியுற்ற நபிகளார் மிகவும் துயரமடைந்தார்கள். அப்போது ஒரு மனிதர் 'ஓ ! இறைவனின் தூதரே அவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களின் குழந்தைகள்' என்று கூறினார். அதற்கு நபிகளார் 'முஸ்லிம் அல்லாதாரின் குழந்தைகள் உம்மை விட உயர்ந்தவை' என்று பதில் கூறினார்கள் எச்சரிக்கை! குழந்தைகளைக் கொல்லாதீர்கள்.

ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனாலேயே படைக்கப் படுகின்றது' என்றும், 'பொய் சொல்வது ஒரு மோசமான செயல். அது நல்ல நோக்கத்திற்காகச் சொல்லப்பட்டாலும் தவறுதான். உங்களுடைய குழந்தைகளுக்குப் பொய்யான வாக்குறுதிகளை அளிக்காதீர்கள்' என்றும் நபிகளார் கூறினார்கள்.

## அண்டை வீட்டுக்காரர்கள்

கீழ்க்காணும் குர்ஆன் வசனங்களில், அண்டை வீட்டுக் காரர்களுடன் எங்ஙனம் கண்ணியமாகவும், பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

> மேலும் உறவினராக அண்டை வீட்டார், அந்நியரான அண்டை வீட்டார், பக்கத்தி லிருக்கும் நண்பர் மற்றும் வழிப் போக்கர் உங்கள் கை வசத்திலுள்ள அடிமைகள் ஆகியோருடன் நயமாக நடந்து கொள்ளுங்கள்.' (குர்ஆன் *4:36*)

நாம் அண்டை வீட்டுக்காரர்களுடன் சேர்ந்து வாழ வேண்டியதுள்ளது. எனவே அவர்களுடனான சமூகத் தொடர்புகளை நாம் விட்டுவிட முடியாது. நம்மிடம் தொடர்பு இல்லாத உறவினர்களை விடவும், அண்டை வீட்டுக்காரர்கள் அதிக உரிமைகள் பெற தகுதியுள்ளவர்கள். இவர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர் நமது உறவினர்கள். இரண்டாவது பிரிவினர் நமது உறவினர் அல்லாதவர்கள். மூன்றாவது பிரிவினர் நாம் பணிபுரியும் அலுவலகங்களில், பள்ளிக் கூடங்களில், கல்லூரிகளில் நம்மோடு பணியாற்று பவர்கள் அல்லது பயணத்தின்போது நமக்கு அறிமுகமானவர்கள் (அவர்களும் நமது அண்டை வீட்டுக்காரர்கள் தான்) உலகில் உள்ள அனைத்து சமயங்களும், அண்டை வீட்டுக்காரர்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டுமென்ற விஷயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன. ஆனால், இஸ்லாம் அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், 'அண்டை வீட்டார்' என்ற கருத்தியலுக்கு வேறு எந்த சமயமும் கொடுக்காத அதிக

முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளது. குறுகிய நேரத்திற்கு ஒன்றாகச் சேர்ந்து இருப்பது கூட அவர்களிடையே உரிமைகளை ஏற்படுத்தப் போதுமானதாகும். ஒன்று சேர்ந்து இருப்பது நீடித்தால், உரிமைகள் மேலும் வலுப்பெறுகின்றன.

நபிகளார் சொன்னதாக ஆயிஷா(ரலி) அவர்களும், உமர் மகன் அப்துல்லாஹ்(ரலி) அவர்களும்அறிவிப்பதாவது.

அண்டை வீட்டுக்காரர்களுடன் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வானவர் ஜிப்ரீல் என்னிடம் வலியுறுத்திச் சொன்ன போது எங்கே சொத்தில் அவர்கட்கும் பங்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிடுவாரோ என்று நான் பயந்து விட்டேன்' எந்த விதத்திலும் அண்டை வீட்டுக்காரர்களைப் பாதிக்கும் வண்ணம் நடந்து கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறும் இஸ்லாம், அவர்கள் நமது உதவி பெறத் தகுதியானவர்கள் என்றும் கூறுகிறது. அவர்களைக் கண்ணியமான முறையில் நடத்த வேண்டும் அதன் மூலம் அவர்களுக்கு நாம் சமுதாயத்தில் பாதுகாப்பாக வாழ்கிறோம் என்ற நம்பிக்கையும், நமக்கு உதவி செய்ய எந்த நேரத்திலும் ஆட்கள் இருக்கிறார்கள் என்ற உணர்வும் ஏற்படும். இது சம்பந்தமான இஸ்லாத்தின் அணுகுமுறையை கீழ்க்கண்ட செய்திகளிலிருந்து உணர்ந்து கொள்ள முடியும்.

ஒரு தடவை 'இறைவன் அறியச் சொல்கிறேன். அவன் முஸ்லிம் அல்ல இறைவன் அறியச் சொல்கிறேன் அவன் முஸ்லிம் அல்ல, இறைவன் அறியச் சொல்கிறேன் அவன் முஸ்லிம் அல்ல'. இப்படி மூன்று முறைகள் நபிகளார் சொல்லியபோது, அபூஹுரைரா(ரலி) அவர்கள் குறுக்கிட்டு யாரைப்பற்றி இவ்வாறு சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நபிகளார் 'தனது அண்டை வீட்டுக்காரரைத் தொல்லைக்குள்ளாக்கி அவதியுற வைப்பவனே அவன்' என்று கூறினார்கள். இதிலிருந்து அண்டை வீட்டுக்காரரை அவதிக்குள்ளாக்குவது இறை நம்பிக்கைக்கு முரண்பட்ட செயலே என அறியமுடியும்.

நபிகளார் சொன்னதாக அப்பாஸ் மகன் அப்துல்லா (ரலி) அறிவிப்பதாவது:– "அடுத்த வீட்டுக்காரன் பட்டினி கிடக்கும் போது தன் வயிற்றை நிரப்பிக் கொண்டவன் உண்மையான முஸ்லிம் அல்ல" அண்டைவீட்டுக்காரர்களிடம் சமாதானமாக வாழ வேண்டும். தேவைப்படும்போது அவர்கட்கு உதவிட வேண்டும் என்பதே இஸ்லாமிய மரபாகும் என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

## ஏழைகள்

> ...அவர்கள் குற்றவாளிகளிடம் கேட்பார்கள் உங்களை நரகத்திற்குக் கொண்டு வந்தது எது? அதற்கு அவர்கள் கூறுவார்கள் தொழக் கூடியவர்களில் நாங்கள் இருக்கவில்லை. நாங்கள் ஏழைகளுக்கு உணவளிக்கவில்லை. (குர்ஆன் 74:42–44)

நபித்துவம் வழங்கப்படுவதற்கு முன்னரே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் விருந்தோம்பும் பண்பினராகவும், பெருந்தன்மையாளராகவும் விளங்கினார்கள். மிகவும் ஏழ்மையான ஆதரவற்ற திண்ணைத்தோழர்கள் நபிகளாரின் நிரந்தர விருந்தாளிகளாக அவர்களுடனேயே தங்கியிருந்தார்கள். நபிகளார் ஒரு முறை 'இரண்டு நபர்களுக்குப் போதுமான உணவு வைத்திருப்போர் திண்ணைத் தோழர்கள் மூன்று பேர்களை தங்களது இல்லத்திற்கு உணவு கொடுத்திட அழைத்துச் செல்ல வேண்டும் யாராவது நான்கு நபர்களுக்குப் போதுமான அளவிற்கு உணவு வைத்திருந்தால் அவர்கள் ஐந்து பேர்களை உணவுண்ண அழைத்துச் செல்ல வேண்டும்' என்று கூறினார்கள். அதன்படி நபிகளார் தனது வீட்டிற்குப் பத்துப் பேர்களை உணவுண்ண அழைத்துச் சென்றார்கள். அபூபக்கர்(ரலி) அவர்கள் மூன்று பேர்களை அழைத்துச் சென்றார்கள். நபிகளார் அடிக்கடி இவ்வாறு பிரார்த்தனை செய்வார்கள்:– என் இறைவனே! என்னை ஏழையாகவே வாழச் செய்வாயாக! ஏழையாகவே மரணிக்கச் செய்வாயாக! என்னை

உயிர்ப்பிக்கும்போதும் ஏழைகளுடனேயே இருக்கச் செய்வாயாக! 'இறைவனின் தூதரே' ஏன் இப்படி பிரார்த்தனை செய்கிறீர்கள்? என்று ஆயிஷா(ரலி) கேட்டபோது நபிகளார் 'ஏனெனில் பணக்காரர்கள் சொர்க்கத்தில் நுழைவதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே அவர்கள்(ஏழைகள்) நுழைந்து விடுவார்கள்' என்று பதிலளித்தார்கள். பின்னர் ஆயிஷா(ரலி) பக்கம் திருப்பி 'தேவை என்று கேட்டு வீட்டிற்கு வந்தவர்களை வெறும் கையுடன் திரும்பி அனுப்ப வேண்டாம்' ஏதாவது அவர்களுக்குக்கொடு அது ஒரு அரை பேரீத்தம் பழமாக இருந்தாலும் சரி என்று கூறினார்கள். 'ஓ ! ஆயிஷாவே, ஏழைகளை நேசி. அவர்களோடு நெருக்கமாக இரு. மீண்டும் உயிர்ப்பிக்கும் நாளில் இறைவன் உன்னை தனது அருகில் வைத்துக் கொள்வான்' என்று கூறினார்கள். ஏழைகளை அழைக்காமல், பணக்காரர்களை மட்டுமே அழைத்து நடத்தப்படும் விருந்தில் பரிமாறப்படும் உணவு தான் மிக மோசமான உணவாகும்' என நபிகளார் கூறினார்கள்.

ஒருமுறை ஒரு மனிதர் நபிகளாரைக் கடந்து போய்க் கொண்டிருந்தார் நபிகளார் தனது தோழர்களிடம் 'இந்த மனிதரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் 'ஓ ! இறைவனின் தூதரே அவர் ஒரு கண்ணியமான மனிதர் என்று நாங்கள் கருதுகிறோம். அவர் திருமணத்திற்காக உதவி கேட்டால், மக்கள் உதவுவார்கள். அவர் மத்தியஸ்தம் செய்தால் மக்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள். அவர் பேசினால் மக்கள் அதனை கவனத்துடன் கேட்பார்கள்' என்று கூறினார்கள். சிறிது நேரத்திற்குப் பின் இன்னொரு மனிதர் நபிகளாரைக் கடந்து சென்றார்' இந்த மனிதரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று நபிகளார் தோழர்களிடம் கேட்டார்கள். 'அவர் ஒரு ஏழை. அவர் திருமணத்திற்கு உதவும்படி வேண்டுகோள் விடுத்தால் யாரும் உதவ மாட்டார்கள். அவரது மத்தியஸ்தத்தையும் மக்கள் ஏற்க மாட்டார்கள். அவரது பேச்சையும் காதுகொடுத்துக் கேட்க மாட்டார்கள். என்று

தோழர்கள் கூறினார்கள். அதற்குப் பதிலளித்த நபிகளார் 'முதலில் சொல்லப்பட்ட நபரைப் போன்றவர்களால் இந்த உலகம் நிரம்பியிருந்தாலும், இரண்டாவது சொல்லப்பட்டவரே அனை வரிலும் உயர்ந்தவராவார்' என்று கூறினார்கள். நபிகளாரின் தோழர்களின் ஒருவரான ஜாபர்அலி(ரலி) அவர்கள் ஏழைகளை நேசித்தார். அவர்களோடு உட்கார்ந்து பேசுவார். எப்போதும் ஏழைகளுடனேயே இருப்பார். அவரை நபிகளார் 'ஏழைகளின் தந்தை' (அபுல் மஸாஜுன்) என்று சிறப்புடன் அழைத்தார்கள். இன்னொரு தோழரான 'ஸைது'(ரலி) அவர்கள் அவ்வப்போது கர்வத்துடன் நடந்து கொண்டு, ஏழைகளை விடத் தான் உயர்ந்தவர் என்று எண்ணிக்கொள்வார். நபிகளார் அவரிடம் 'உங்களது வெற்றிக்கும், செல்வத்திற்கும் ஏழைகளின் உழைப்பே காரணம்' என்று கூறுவார்கள்.

## அடிமைகள்
## வேலையாட்கள்

நபிகளார் சொன்னதாக அப்துல்லாஹ்பின் உமர்(ரலி) அறிவிப்பதாவது 'வியர்வை உலருவதற்கு முன் உழைத்த வனுக்கு அவனது கூலியைக் கொடுத்து விடுங்கள்' “நபிகளார் அடிமைகளிடம் மிகவும் அன்பாக இருந்தார்கள் அவர்கள் நம்முடைய சகோதரர்கள், சகோதரிகள். நீங்கள் உண்ணுவதை அவர்களுக்கும் கொடுங்கள். நீங்கள் உடுத்துவதை அவர்கட்கும் உடுத்தக் கொடுங்கள்” என்று கூறினார்கள். அடிமைகள் என்று அழைக்கப்படும்போது அவர்கள் அவமரியாதையாக உணர்ந்தார்கள். எனவே நபிகளார் தன்னுடைய தோழர்களிடம் 'என்னுடைய அடிமை' என்னுடைய அடிமைச் சிறுமி என்று அழைக்காதீர்கள். என்னுடைய மகனே! என்னுடைய மகளே என அழைத்திடுங்கள் என்று கூறினார்கள். அதுபோல் அடிமை களிடமும் அவர்களுடைய எஜமானர்களை 'பிரபு' என்று அழைக்காதீர்கள் என்றும் இறைவன் ஒருவனே 'பிரபு' என்றும் கூறினார்கள். இறப்பதற்கு முன்பு விடுத்த செய்தியில் நபிகளார்

'அடிமைகள் விஷயத்தில் நீங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள்' என்று கூறியிருந்தார்கள். நபிகளார் மேலும் கூறியதாவது 'இந்த அடிமைகள் உங்களின் சகோதர சகோதரிகள். அவர்கள் மீது உங்களுக்குத் தற்காலிகமாகத்தான் அதிகாரம் உள்ளது. உங்களுக்கு அவர்கள் சரிவர பணியாற்றவில்லையென்றால், அவர்களை விற்று விடுங்கள்.

இறைவனின் படைப்புகள் மீது கடுமை காட்டாதீர்கள். நீங்கள் உண்பதையே அவர்களுக்கும் உண்ணக் கொடுத்திடுங்கள். நீங்கள் அணியும் ஆடைகளையே அவர்களுக்கும் அணியக் கொடுத்திடுங்கள். செய்ய முடியாத அளவிற்கு அதிக வேலைகளை அவர்களுக்குக் கொடுக்காதீர்கள். அதிக வேலை கொடுத்தால், அந்த வேலையினை முடிக்க அவர்கட்கு நீங்கள் உதவுங்கள்'

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், தன்னை நடத்திய விதம் பற்றி அவர்களது தனி உதவியாளராக இருந்த அனஸ்(ரலி) கூறியதாவது நான் கடந்த பத்து ஆண்டுகளாக நபிகளாரிடம் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். ஒரு தடவை கூட என்னை அவர்கள் அதட்டியதில்லை. எனது பணிகளை ஒரு போதும் அவர்கள் குறை கூறியதில்லை. ஏதாவது நான் செய்யத் தவறி இருந்தாலும் அதற்காக என்னைக் கண்டித்தது இல்லை. தங்களுடைய பணியாளர்களையும் சார்ந்தவர்களையும் ஒன்று போலவே நடத்தினார்கள். எந்தப் பணியாளர்களையும் அவர்கள் அடித்தது இல்லை.

## ஊனமுற்றோர்
## (மாற்றுத்திறனாளிகள்)

உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டோர் ஆகியோர் மீது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அளவு கடந்த பிரியமும், அன்பும், பரிவும் செலுத்தினார்கள். வரலாற்று நெடுகிலும், ஏன் இப்போது வரை, அவர்கள் புறக்கணிக்கப்

பட்டவர்களாக உள்ளனர். அவர்கள் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்கள் போல் நடத்தப்படுகிறார்கள். சமூகத்திற்குப் பளுவாகக் கருதப்படுகிறார்கள். நபிகளார் அவர்கள் மீது கொண்டிருந்த இரக்கம், அவர்களை துன்பமும் பரிதாபமும் நிறைந்த நரகத்திலிருந்து மகிழ்ச்சி, வெற்றி என்ற உயரங்களுக்குக் கொண்டு சென்றது. நபிகளார் கூறியதாவது:– 'பூமியில் உள்ளவர்களிடத்தில் இரக்கம் காட்டுங்கள். வானத்தில் இருக்கும் இறைவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான்'. நபிகளாரின் இந்தத் தொலைநோக்குச் சிந்தனை, பார்வை யற்றோர், காது கேளாதோர், ஊனமுற்றோர், மனநிலை பாதிக்கப் பட்டோர் என சமூகத்தின் பலவீனமான பிரிவினர்களை உள்ளடக்கியதாகும். அப்துல்லாஹ் பின் மக்தூம் என்ற பார்வையற்ற ஒருவர் ஒரு முறை நபிகளாரிடம் சில விஷயங்கள் பற்றி தெரிந்து கொள்வதற்காக வந்தார். நபிகளார் அப்போது சில குறைஷியர்களிடம் அவர்கள் இஸ்லாத்தில் இணைய வேண்டியதன் தேவையை வலியுறுத்திப் பேசிக் கொண்டி ருந்தார்கள். எனவே அவர்கள் இந்தப் பார்வை யற்றவரைக் கவனிக்கவில்லை. அப்போது அருளப்பட்ட இறை வசனங்கள், நபிகளாரின் இச்செயலைச் சுட்டிக் காட்டும் வண்ணம் அமைந்திருந்தன.

> முகம் சுளித்தார். மேலும் புறக்கணித்தார். அந்தப் பார்வையிழந்தவர் அவரிடம் வந்ததற்காக! அவர் சீர் திருந்தக் கூடும் அல்லது அறிவுரைக்கு செவிசாய்க் கக்கூடும். அந்த அறிவுரை அவருக்குப் பயனளித் திருக்கும் என்பது பற்றி உமக்குத் தெரியுமா? என்ன? எவன் அலட்சியம் செய்கின்றானோ அவன் பக்கம் நீர் கவனம் செலுத்துகின்றீர். அவன் திருந்தாவிட்டால் அதற்கு நீ பொறுப்பாளியா என்ன? மேலும் எவர் (இறைவனை) அஞ்சியவராக உம்மிடம் விரைந்து வருகின்றாரோ அவரைக் குறித்து நீர் பாராமுகமாக இருந்து விடுகின்றீர். (திருக்குர்ஆன் 80:1–10)

பார்வையற்ற ஒருவர் மீது நபிகளார் காட்டிய மிகச் சிறிய ஒரு புறக்கணிப்பைக் கூட இறைவன் அவர்கட்குச் சுட்டிக்காட்டி அதன் மூலம் மனித குலத்திற்கும் அறிவுரை வழங்கியுள்ளான் என்பதை இச்சம்பவம் மூலம் தெரிந்து கொள்ளலாம். இதற்குப் பின்னர், அப்துல்லாஹ் தன்னைச் சந்திக்க வரும் போதெல்லாம், நபிகளார் அவரை நன்முறையில் வரவேற்று, " யாருக்காக என் இறைவன் என்னைக் குறை கூறினானோ அப்படிப்பட்டவரே உங்களுக்கு நல்வரவு" என்று கூறினார்கள். அது மட்டுமல்ல, இந்தப் பார்வையற்ற மனிதரை, நபிகளார் மதீனாவின் கவர்னராக இரு முறை நியமித்தார்கள்.

## அநாதைகள்

> பெற்றோர்கள் மற்றும் உறவினர்களின் உரிமைகள் மிகவும் முக்கியமானவை. இவர்களைத் தவிர, சமுதாயத்தின் பலவீனமான பிரிவைச் சார்ந்த மக்கள் நமது அன்பிற்கு உரியவர்கள் ஆவர். இது விஷயத்தில் முதலில் அனாதைகளும், பின்னர் ஏழைஎளிய மக்களும் குறிப்பிடப்படுகின்றனர். குர்ஆன் கூறுகிறது அநாதைகளையும், ஏழைகளையும் அன்பாக நடத்துங்கள் (திருக்குர்ஆன் *4:36*)

ஒரு தந்தையோ, அல்லது தாயோ இறந்து போனால் குழந்தைகளுக்கு அன்பும், கவனிப்பும் கிடைக்காமல் போய் விடுகிறது. குழந்தைகளின் பொருளாதார நிலையும் கேள்விக் குறியாகி விடுகிறது. எனவே இத்தகைய அநாதைக் குழந்தை களைப் பராமரிக்கின்ற பொறுப்பினை சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் பெற்றோரை இழந்த துயரத்தை அவர்கள் உணர மாட்டார்கள். சமுதாயம் இவர்களைப் புறக்கணித்தால், இவர்களின் உடல் வளர்ச்சி மட்டுமின்றி மன வளர்ச்சியும் பாதிக்கப்படும். அத்தகைய கவனிக்கப்படாத குழந்தைகள் சமுதாயத்திற்கு எதிராக தீவிரவாதக் கருத்துக் களுக்கு தங்களது உள்ளத்தில் இடம் கொடுக்கும் சூழ்நிலையும்

உருவாகலாம். ஒரு நல்ல குடிமகனாக இருப்பதற்குப் பதிலாக அவர்கள் சமூக விரோத சக்திகளாக மாறவும் வாய்ப்புண்டு. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இளம் வயதிலேயே அநாதையாகி விட்டார்கள். அவர்களது தந்தையார் அப்துல்லா நபிகளார் பிறப்பதற்கு முன்பே மரணமடைந்து விட்டார். தாயார் ஆமினா நபிகளார் ஆறு வயதாக இருக்கும்போது மரணமடைந்து விட்டார். ஒரு அநாதை என்ற அவர்களின் நிலை அவர்களின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதுவே அநாதைகளின் நலனில் அவர்களை அக்கறை கொள்ளச் செய்தது. உண்மையில், அநாதைகளைத் தங்களது சொந்தக் குழந்தைகளாகவே நபிகளார் கருதினார்கள். அவர்கட்கு எப்போதும் நிழல் கொடுத்து உதவி செய்தார்கள். அவர்களை கல்வியில் உயர்த்தி அதன்மூலம் அவர்களை சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கமாக மாற்றிட நபிகளார் இடைவிடாது முயற்சிகள் மேற்கொண்டார்கள். அது விஷயத்தில் ஆர்வமூட்டும் குர்ஆன் வசனங்கள் வருமாறு:

> .. ஆனால் அநாதையுடன் நீங்கள் கண்ணியமாக நடந்து கொள்வதில்லை, மேலும் வறியவர்க்கு உணவளிக்க ஒருவரையொருவர் தூண்டுவதுமில்ல மேலும் வாரிசுச் சொத்துக்களை முழுமையாக நீங்களே விழுங்கி விடுகின்றீர்கள். மேலும் செல்வத்தின் மீது அளவு கடந்த மோகம் கொண்டுள்ளீர்கள். (திருக்குர்ஆன் *89:17.20*)

குர்ஆனின் வசனங்களும், நபிகளாரின் உபதேசங்களும் அநாதைக் குழந்தைகளைக் கவனித்து அவர்களின் கல்வி மற்றும் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன. நபிகளார் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: 'அநாதையை வைத்து நன்றாக அவனைப் பராமரிக்கும் வீடே மிகச் சிறந்த முஸ்லிமின் வீடு ஆகும். ஒரு மோசமான முஸ்லிமின் வீடு அநாதை இல்லாத வீடே அல்லது அனாதையை மோசமாக நடத்தும் வீடே'

ஹழ்ரத் அபூ உமாமா(ரலி) அவர்கள் நபிகளார் கூறியதாக அறிவிப்பதாவது: 'யாராவது ஒருவர் ஒரு அநாதையின் தலையைத் வருடினால் அதனை அல்லாஹ்விற்காகவே செய்கிறார். அவரது கைபடும் ஒவ்வொரு முடியும் அவருக்காக ஆசீர்வாதம் செய்யும். யாரொருவர் அவரது பராமரிப்பில் உள்ள அநாதைச் சிறுவனையோ, சிறுமியையோ அன்பாக நடத்துகிறாரோ அவரும் நானும் சொர்க்கத்தில் ஒன்றாக இருப்போம் என தனது இரு விரல்களையும் சேர்த்து வைத்துக் காட்டினார்கள். இயலாமை காரணமாகவும், புரியாமை காரணமாகவும், அநாதைகளால் தங்களது உரிமைகளைப் பாதுகாக்க இயலாது அவர்களது உரிமைகளைப் பறிப்பது மிகவும் எளிது. அத்தகையோரை குர்ஆன் கடுமையாகக் கண்டிக்கிறது.

> அநாதைகளின் சொத்துக்களை யார் அநியாயமாக உண்கிறார்களோ அவர்கள் உண்மையில் தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தான் நிரப்பிக் கொள்கிறார்கள். மேலும், அதிவிரைவில் அவர்கள் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் வீசி எறியப்படுவார்கள். (திருக்குர்ஆன் *4:10*)

அநாதைக் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை சமுதாயமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என் வலியுறுத்தும் இஸ்லாம் இறைவனுக்கு அஞ்சிவாழ்கின்ற பண்பை அவர்களிடையே ஏற்படுத்துவதோடு சமுதாயத்திற்கே சொத்தாக விளங்கும் வண்ணம் அவர்களை நாகரீகமிக்க குடிமக்களாகவும் மாற்றிடவும் வேண்டுகிறது.

## ஆதரவற்ற ஏழைகள்

திருக்குர்ஆனில், ஏழைகளைக்குறித்து, அநாதைகளுடன் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது. உடல் ஊனம் காரணமாகவும், பொருளாதாரச் சீர்கேடு காரணமாகவும் தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாதவர்களே ஏழைகள்,

ஆதரவற்றவர்கள் என அழைக்கப்படுகின்றனர். பொருளாதார நெருக்கடியில் இருப்பவர்கட்கு உதவிபுரிந்திட வேண்டும். அப்படியானால் தான் அவர்கள் தங்களது தேவைகளைப் பூர்த்திசெய்வதோடு பொருளாதார ஸ்திரத்தன்மையும் பெறுவார்கள். குர்ஆனின் வசனங்களும் இறைதூதரின் உபதேசங்களும், ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்களின் தார்மீக மற்றும் சட்டரீதியான உரிமைகள் பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றன.

> எனவே (நம்பிக்கையாளனே) உறவினர்க்கு அவருடைய உரிமையை வழங்கிவிடு. மேலும் வறியவர்க்கும், பயணிக்கும் (அவர்களின் உரிமையையும் தந்து விடும்) அல்லாஹ்வின் திருப்தியைப் பெற விரும்புவோர்க்கு இதுவே மிகச் சிறந்த வழிமுறையாகும். (குர்ஆன் *30:38* )

ஏழை, ஆதரவற்றோர் என்பவர்கள் பொதுவாக யாசகர்கள் (பிச்சைக்காரர்கள்) என அழைக்கப்படுகின்றனர். பிச்சை எடுப்பது உதவியின்மையின் அடையாளம் அல்ல. சிரமமான நேரங்களில், உதவி கிடைக்காத காரணத்தாலேயே சிலர் பிச்சை எடுக்கின்றனர். அவர்கள் ஏழைகள் அல்ல. ஆனால் ஏழ்மையைச் சந்திப்பவர்கள். இதற்கு மாறாக, மிகவும் பணத்தேவை கொண்ட மனிதர்கள் உள்ளனர். தங்களது சுய மரியாதை காரணமாக அவர்கள் பிறரிடம் உதவிகேட்டு கை ஏந்துவதில்லை. அத்தகைய நியாயமான தேவையுடையவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவிட வேண்டும் என்பதை திருக்குர்ஆன் இவ்வாறு வலியுறுத்துகிறது.

> ..பூமியில்(தம் தேவைகளுக்காக) ஓடியாடி உழைக்க முடியாத வண்ணம் அல்லாஹ்வின் பாதையில் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்களான வசதியற்றவர்கள் தாம் உங்களின் தர்மங்களுக்கு மிகவும் உரித்தானவர்கள் ஆவர். (அவர்களைப்பற்றி) அறியாதவர், அவர்களிடமுள்ள தன்னடகத்தைக்

கண்டு அவர்கள் தன்னிறைவு பெற்றவர்கள் என எண்ணுகிறார்கள். ஆனால் அவர்களோ மக்களிடம் வற்புறுத்திக் கெஞ்சிக் கேட்க மாட்டார்கள். (குர்ஆன் *2:273*)

இந்த இறைவசனங்களுக்கு விளக்கமாக நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- பிச்சை எடுக்கும் ஒருவனிடம் இரண்டு கையளவு உணவோ அல்லது ஒன்றிரண்டு திராட்சைப் பழங்களையோ கொடுக்கிறோம். அத்தகையவன் ஏழை அல்ல. யாரொருவன் தன்னுடைய குறைந்தபட்சத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் உதவியின்றி தவிக்கும் நிலையிலும் அவனுக்கு யாரும் உதவி செய்ய முன் வராத நிலையிலும், உதவி கேட்டு பிறரிடம் கை ஏந்தாமல் நிற்கிறானோ அவன் தான் உண்மையான ஏழை'. இப்படி, உண்மையிலேயே உதவி தேவைப்படுகின்ற இத்தகைய மக்களின் பால் நமது கவனம் ஈர்க்கப்படவேண்டும் என நபிகளார் வலியுறுத்தினார்கள்.

## நோயாளிகள்

நோயாளிகளைப் போய்ப்பார்ப்பதும், அவர்களது உடல் நலம் குறித்து விசாரிப்பதும், அவர்களது அருகில் இருந்து கொண்டு அவர்களது நெற்றியில் கை வைத்துப் பார்ப்பதும், தேவைப்பட்டால் அவர்களுக்கு உணவளிப்பதும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பழக்கமாகும். அவர்களுக்காக கவலைப் பட்டு, அவர்களுக்கு ஆறுதல் கூறி 'இறைவன் நாடினால் நீங்கள் சீக்கிரம் குணமடைந்து விடுவீர்கள்' என்றும் கூறுவார்கள். யாராவது ஒருவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, உடல் நலமற்று இருக்கிறார் என்று கேள்விப் பட்டால் நபிகளார் உடனே சென்று அவர்களைப் பார்த்து வருவார்கள். இஸ்லாத்தின் மோசமான எதிரியும், வஞ்சகனுமான அப்துல்லாஹ் பின் உபய் என்பான் உடல் நலமற்று இருந்த போது கூட நபிகளார் அவனைப் போய் பார்த்து விட்டு வந்தார்கள்.

# பெண்கள்

இஸ்லாத்தைக் குறித்து மேற்கத்திய நாட்டு மக்கள் கொண்டுள்ள தவறான கருத்துக்களைப் பரிசீலிப்பதற்கு முன்பாக, கடந்த காலங்களில் பல் வேறு சமூகங்களில் பெண்கள் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பதை அறிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும். உதாரணமாக, ரோமானிய நாகரீக காலத்தின் போது பெண்கள் அடிமைகளாகக் கருதப்பட்டனர். கிரேக்கர்கள் பெண்களை விற்கவும் வாங்கவுமான ஒரு வணிகப் பொருளாகக் கருதினர். கிறிஸ்துவ சமயத்தின் ஆரம்ப காலத்தில் பெண்கள் காம உணர்வு ஊட்டுபவர்களாகக் கருதப்பட்டனர். (ஆண்களை மயக்கு பவர்களாகவும், தவறான வழிக்கு இட்டுச் செல்பவர்களாகவும் பெண்கள் கருதப்பட்டனர்) பெண் தான்; ஆதம் நபி சொர்க்கத்திலிருந்து இறங்கி வருவதற்குக் காரணமாக (அவரது மனைவி ஹவ்வாதான்) இருந்தார் என்றும் சொல்லப்பட்டது. கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறும் 'சதி' என்ற வழக்கம் சில இந்திய இந்து சமூகங்களில் பன்னெடுங்காலமாக நிலவி வந்தது. பின்னர் இந்தப் பழக்கம் பல்வேறு கால கட்டங்களில் தடை செய்யப்பட்டது.

கி.பி.587ல் பிரான்ஸ் நாட்டில் பெண்களை மனிதர்களாகக் கருதலாமா வேண்டாமா என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்காகவே ஒரு மாநாடு நடைபெற்றது. கத்தோலிக்கத் தேவாலயங்கள் பெண்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்திய காரணத்தால், ஹென்றி VIII என்ற இங்கிலாந்து அரசன், பைபிளைப் படிக்க பெண்களுக்கு தடை விதித்தான். மத்திய காலம் முழுமையும் இந்தத் தடை நீடித்தது. கி.பி.1850க்கு முன்னர் இங்கிலாந்தில் பெண்கள் குடி மக்களாகவே கருதப்படவில்லை. கி.பி.1882 வரை ஆங்கிலேயப் பெண்களுக்கு தனிப்பட்ட உரிமைகள் எதுவும் இல்லை. கி.பி1964வரை கேம்பிரிட்ஜ்மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகங்களில் ஆண்களுக்கு நிகரான உரிமைகள் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. இஸ்லாத்திற்கு முந்திய அரேபியாவில் பெண்கள் கீழானவர்களாகக் கருதப்பட்டு மோசமான முறையில் நடத்தப்பட்டனர். சொத்தில் அவர்களுக்கு

மிக அரிதாகவே பங்கு கிடைத்தது. அவர்கள் திருமண விஷயங்களிலோ, சொத்தைப் பராமரிக்கும் விஷயங்களிலோ, அரசியல் நடவடிக்கைகளிலோ பங்கு கொண்டு தங்களது விருப்பப்படி செயல்பட முடியாத நிலை இருந்து வந்தது. பணம் படைத்தவர்கள் எண்ணற்ற மனைவியர்களையும், ஆசை நாயகிகளையும் வைத்திருந்தனர். பெண்கள் அசையும் ஒரு ஜடப் பொருளாகக் கருதப்பட்டு அவர்கட்கு எந்த விதமான மரியாதையையோ, சுய அடையாளமோ இல்லாதிருந்தது. அவர்கள் ஆண்களுக்கு நிகராக மனிதர்களாக நடத்தப்படவில்லை. உலகில் தற்போது நடந்து வருகின்ற பெண்களுக்கு எதிரான கொடுமைகளைப் பார்க்கின்ற போது, நாம் அறியாமைக் காலத்திற்குச் சென்று விட்டோமா? என்ற சிந்தனையையே ஏற்படுகிறது. நபிகளாருக்கு முன்பிருந்த நிலை பற்றிக் குர்ஆன் கூறுவதாவது

> இவர்களில் ஒருவருக்கு பெண் குழந்தை (பிறந்திருப்பது) பற்றி நற்செய்தி சொல்லப்பட்டால் அவரது முகத்தில் கருமை கவ்விக் கொள்கிறது. துக்கத்தால் அவர் தொண்டை அடைத்துக் கொள்கிறது.' – (குர்ஆன் 16:58)

அரேபியாவில் பெண் குழந்தைகளைக் கொல்லும் பழக்கம் வெகுவாக இருந்தது. இதனைச் சட்டவிரோதம் என்று அறிவித்த நபிகளார், இறுதித் தீர்ப்பு நாளின் போது இச் செயலில் ஈடுபடும் பெற்றோருக்குக் கடும் தண்டனை கிடைக்கும் என எச்சரித்தார்கள். அவர்கள் பெண் குழந்தைகளைக் கொன்றதற்கு மூன்று காரணங்கள் இருந்தன. இவை குர்ஆனில் சொல்லப் பட்டுள்ளது. தங்களது கடவுள்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக குழந்தைகளை பலி கொடுத்தனர். இது முதலாவது காரணமாகும்.

> இவ்வாறே இணை வைப்பாளர்களில் பலருக்குத் தங்கள் குழந்தைகளைத் (தாங்களே) கொலை செய்வதை அவர்களுடைய இணைத்தெய்வங்கள் அழகாக்கினார்கள்.' (குர்ஆன் 6:137)

> எவர்கள் தம் குழந்தைகளை அறியாமை யினாலும், மூடத்தனத்தினாலும் கொன்று விட்டார்களோ, மேலும் அல்லாஹ்வின் மீது பழி சுமத்தி அவர்களுக்கு வழங்கி யிருந்தவற்றைத் தாங்களாகவே தடை செய்து கொண்டார்களோ அவர்கள் நிச்சயமாக பேரிழப்புக்கு ஆளாகி விட்டார்கள். திண்ணமாக அவர்கள் வழி தவறிப் போய்விட்டார்கள். அவர்கள் ஒருபோதும் நேர்வழி பெற்றவர்களாக இருக்கவில்லை. (குர்ஆன் 6:140)

ஏழ்மைநிலை காரணமாக பெண்குழந்தைகளைக் கொன்றனர். இது இரண்டாவது காரணமாகும். இச்செயலைச் சட்டவிரோதமானது என அறிவித்த குர்ஆன், அத்தகைய செயலில் ஈடுபட்டோரை எச்சரிக்கையும் செய்தது.

> மேலும் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். நாமே உங்களுக்கும் ஆகார மளிக்கின்றோம். அவர்களுக்கும் அளிப்போம். (குர்ஆன் 6:151)

மீண்டும் அத்தியாயம் 17ல் (இரவுப் பயணம்) இதுபற்றி திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

> வறுமைக்கு அஞ்சி உங்கள் பிள்ளைகளைக் கொலை செய்யாதீர்கள். நாம் தான் அவர்களுக்கும் உண வளிக்கிறோம். உங்களுக்கும் உணவளிக்கிறோம். உண்மையில், அவர்களைக் கொலை செய்வது பெரும் பாவமாகும். (17:31)

இந்த வசனங்கள் புராதன காலத்திலிருந்து, தற்போது வரை கடைப்பிடிக்கப்பட்டு வரும், குடும்பக் கட்டுப்பாட்டின் ஆணி வேரையே அறுத்து விடுகின்றன. தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது என்று கருதிப்பயந்தே, பலர் குழந்தைகளைக் கொல்கின்றனர். அல்லது கருக்கலைப்புச் செய்கின்றனர். நமது காலத்தில் வேறு சில புதிய வழிமுறைகள் வந்துள்ளன.

(உதாரணமாக கருத்தரிப்பைத் தடை செய்யும் செயற்கை முறைகள் கருவிலிருக்கும் போதே ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என கண்டறியும் முறை) பிறந்த பச்சிளம் பெண்குழந்தைகள் உயிருடன் புதைக்கப்பட்டனர். பெண் குழந்தை இருப்பது கௌரவக் குறைவு என்று மக்கள் எண்ணியதே இதற்குக் காரணம். பத்தில் ஒருவர் இந்தக் குற்றத்தை செய்து வந்தார்கள். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இச்செயலுக்கு உறுதுணையாக இருந்தார்கள். தாய்மார்களே தங்களது பெண்குழந்தையை உயிருடன் புதைக்க ஒப்படைத்தார்கள்.

தற்போதைய நவீன உலகிலும் 'சிசுக்கொலை' என்ற பெயரில் இக் கொடுமை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. யூனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள குழந்தைகள் பற்றிய அறிக்கையில் இந்தியாவில் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்துப் பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அதாவது 1000 ஆண்களுக்கு 880 பெண்களே உள்ளனர். உலக அளவில் ஆண், பெண் விகிதம் 1000:954 என்ற அளவில் உள்ளது. சிசுக்கொலை காரணமாகவே, பெண் பிறப்பு விகிதம் குறைந்தள்ளது. ஆண் குழந்தைகளே வேண்டும் என்ற வலுவான எண்ணம் காரணமாக, கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என சோதனை மூலம் கண்டறிந்து, பெண் சிசு என்றால் அதனை கலைக்கும் முயற்சியில் தம்பதியினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். நியாயத் தீர்ப்பு நாளின் போது, பெண் குழந்தையைக் கொன்றவர்களிடம் 'ஏன் நீங்கள் உங்களது பெண் குழந்தைகளைக் கொன்றீர்கள்' எனக் கேள்வி கேட்கப்படும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

> மேலும் இறுதித் தீர்ப்பு நாளின்போது, உயிருடன் புதைக்கப்பட்ட சிறுமியிடம் அவள் எந்தக் குற்றத்திற்காகக் கொல்லப்பட்டாள் என்று கேட்கப்படும். (குர்ஆன் 81:8,9)

ஒரு சமயம், ஒருவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தில் இணைவதற்கு முன்னர் தனது பெண் குழந்தையை கொன்ற கொடூர நிகழ்ச்சியை விவரித்துச் சொன்னார். தன்னுடைய பெண்குழந்தையை பாலை வனப்பகுதிக்கு எடுத்துச் சென்ற அவர் அங்கு பள்ளம் தோண்டி உயிருடன் அடக்கம் செய்தார். ஒன்றுமறியா அந்தப் பச்சிளம் குழந்தை 'தந்தையே, தந்தையே' என்று கதறிய போதும், அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை' இந்த சம்பவத்தைக் கேட்ட நபிகளார், உணர்ச்சி மேலிட்டு அழுது விட்டார்கள். பெற்றோர்களின் இந்த எண்ணப்போக்கினை முற்றிலும் மாற்றிய குர்ஆன், குழந்தைகள் ஆணாக விருந்தாலும், பெண்ணாகவிருந்தாலும் வெள்ளையாக இருந்தாலும், கருப்பாக இருந்தாலும் அவர்கள் சமமாகவே மதிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்துகிறது. நீண்ட நாட்களாக நிலவி வந்த இந்தப் போக்கினை மாற்றுவதற்காக நபிகளார் பெண் குழந்தைகளின் மீது அதிகப்பரிவு காட்டினார்கள். தங்களுடைய மகள் பாத்திமா(ரலி) மீது நபிகளார் கொண்டிருந்த அன்பும், பிரியமும் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

பெண்குழந்தைகளை அன்புடன் கவனித்து வளர்ப்பவர்க்கு இறைவன் பெரும் வெகுமதிகளை வழங்குவான் என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பலமுறை நவின்றுள்ளார்கள். 'யாரொருவர் பெண் குழந்தையை பெற்று அதனை உயிருடன் புதைக்காது, உதாசீனம் செய்யாது, ஆண் குழந்தையை விடவும் பிரியம் காட்டி வளர்த்து வருகிறாரோ அவரை இறைவன் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வான்' என நபிகளார் நவின்றார்கள். நபிகளார் சொன்னதாக, ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:- பெண் குழந்தைகளை நன்முறையில் நடத்தி, அவர்களுக்கு மரியாதை செய்து வளர்த்து வருபவர்கள் துன்பங்களைச் சந்திக்க நேரிட்டால், அவை அவர்களை நரகத்திலிருந்து பாதுகாக்கும் கவசங்களாக அமையும்'

பெண் குழந்தை, குடும்பத்திற்கு அவமானத்தைத் தருபவளல்ல என நபிகளார் கூறினார்கள். அதற்கு

மாறாக, குடும்பத்திற்குப் பெருமை சேர்ப்பவள் அவளே என்று உரைத்தார்கள். தன்னுடைய பெண் மக்களை நன்முறையில் வளர்ப்பவர்கள், நியாயத் தீர்ப்பு நாளின் போது நபிகளாருக்கு மிக அருகில் நிற்பவர்களோடு இருக்கும் பெருமையைப் பெறுவார்கள். இறைவனின் தூதர் சொன்னதாக, அனஸ்(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:'யாரொருவர் இரண்டு பெண்களை அவர்கள் வளரும் வரையில் நன்முறையில் கவனித்துக் கொள்கிறாரோ அவரும் நானும் மீண்டும் உயிர்ப்பிக்கும் நாளில் ஒன்றாக இருப்போம் (தங்களது இரண்டு விரல்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு நபிகளார் அவரும் நானும் இப்படி இருப்போம் என்று குறிப்பிட்டார்கள்)

இஸ்லாத்திற்கு முந்தைய மக்காவில் அடிக்கடி பஞ்சமும் அதன் காரணமாக உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதும் வருடாந்திர நிகழ்வுகாள இருந்தன. இதனால் வில வகை உணவுப்பொருட்களை ஆண்கள் சேமித்து வைத்துக் கொண்டனர். பெண்கள் அதனை எடுத்துப் பயன்படுத்த முடியாது. பெண்கள் கடுமையாக நடத்தப்பட்டனர்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாத்திற்கு முந்தைய அரேபிய சமுதாயத்தில் பல விநோதமான திருமணப் பழக்கங்கள் இருந்தன. ஆண்கள் அடிக்கடி திருமணம் செய்து கொண்டனர். தங்கள் விருப்பப்படி பலரைத் திருமணம் செய்து கொண்டனர். விவாகரத்தும் இலகுவாகவும், அடிக்கடியும் நிகழ்ந்தன. மனைவியர்களிடம் பாலுறவு வைத்துக் கொள்ள மாட்டோம் எனக் கணவன்மார்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டு அவர்களை விட்டு விட்டுச் செல்லும் ஒரு வழக்கமும் அப்போது இருந்தது. அவர்கள் விவாகரத்துச் செய்யப்படமாட்டார்கள். மறுமணம் செய்து கொள்ள முடியாது. முறையான மனைவியராகவும் கருதப்பட மாட்டார்கள். அத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே பல

பெண்களை தங்களது வாழ்நாட்களைக் கழிக்க வேண்டியதிருந்தது. இப்படி மனைவியரை விட்டு விலகிச் சென்றவர்கட்கு குர்ஆன் நான்கு மாதத்தவணை விதிக்கிறது. அதற்குள் அவர்கள் திரும்பி மனைவியர்களிடம் திருமண உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்கள் தங்கள் மனைவியர்களை விவாகரத்துச் செய்ததாகக் கருதப்படும். (திருக்குர்ஆன் 2.224 முதல் 207 )

அப்போது மனைவியரை ஒரு குறிப்பிட்ட குறைந்த காலத்திற்கு விவாகரத்துச் செய்து விட்டு மீண்டும் சேர்ந்து கொள்ளும் பழக்கமும் அப்போது இருந்தது. ஆண்களுக்கு இதனைச் சுட்டிக் காட்டும் திருக்குர்ஆன் வசனங்கள் 'அவர்களோடு சேர்ந்து வாழுங்கள். அல்லது நியாயமான முறையில் அவர்களை விட்டுப் பிரியுங்கள் என கண்டிப்புடன் கூறுகிறது.

இஸ்லாத்திற்கு முந்தைய அரேபியச் சமூகத்தில் பெண்களுக்குப் பரம்பரைச் சொத்தில் பங்கு ஏதும் இல்லை. அதற்கு நேர்மாறாகப் பெண்கள் வாங்கவும், விற்கவுமான ஒரு சொத்தாகவும், கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படும் ஒரு வழிமுறையாகவும் கருதப்பட்டனர். வாள் பலம் உள்ளவர்களே பரம்பரைச் சொத்தைப் பெறும் தகுதியுடையவர்களாக இருந்தனர். இவற்றையெல்லாம் நீக்கிவிட்டு இஸ்லாம் புதிய விதி முறைகளை வகுத்தது. பெண்களுக்கு பரம்பரைச் சொத்தில் மட்டுமல்ல நியாயமுறையில் சொத்துக்களை அடையவும் அவர்கட்கு உரிமை உண்டு எனக் குர்ஆன் குறிப்பிடுகிறது.

கலிபா உமர்(ரலி) அவர்கள் ஒரு முறை கூறியதாவது:– இஸ்லாத்திற்கு முந்திய காலகட்டத்தில் நாம் பெண்களை நாம் மதிக்கவே இல்லை. ஆனால், இஸ்லாம் தோன்றிய பிறகு இறைவனே பெண்களைப் பற்றி கரிசனப்பட்டான். கவலை யுற்றான். அவர்கட்கும் உரிமைகள் உள்ளன என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். 1.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்

தோன்றிய இந்த உலகில் இதுவரை யாரும் செய்திராத ஒரு உயர் நிலைக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பெண்களை உயர்த்தினார்கள். பெண் என்ற முறையில் அவள் மீது சுமத்தப்பட்டிருந்த கறைகளையெல்லாம் துடைத்தெறிந்தார்கள். தனது இறுதி உரையின் போது பெண்களை மரியாதையுடனும் அன்புடனும் நடத்துமாறு வேண்டினார்கள்.

மனைவியரை அன்புடனும், ஆதரவுடனும் நடத்துமாறு ஆண்களை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் கூறியதாவது:- 'தங்களது மனைவியர்கள் மீது அன்பு செலுத்துபவர்களே உங்களில் உயர்ந்தவர்கள்'. இஸ்லாம் பெண்களின் கண்ணியம் மற்றும் மாண்பு பற்றி அதிகம் கவலைப்படுகிறது. அவர்களை ஒரு விளையாட்டுப் பொருளாகவோ, இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு பொருளாகவோ பார்ப்பதையும், பலருடன் தற்காலிகப் பாலியல் உறவு வைத்துக் கொள்வதையும் இஸ்லாம் தடை செய்கிறது.

## பாலுணர்வு வெறி

தற்போது வல்லுறவுக் கொடுமையிலிருந்து பெண்கள். சிறுமிகள், ஒன்று மறியாக் குழந்தைகள் என யாரும் தப்ப வில்லை. அவர்கட்குப் பாதுகாப்பும் இல்லை. பெண்களும், சிறுமிகளும் கடத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டு கொல்லப்படுகின்ற பல சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இது போன்ற அவமான கரமான சில சம்பவங்கள் படமாக்கப்பட்டு பின்னர் அவை அப்பாவிப் பெண்களைப் பயமறுத்தவும், அவதூறு செய்யவும், அவர்களின் நற்பெயரைக் கெடுக்கவும் பயன்படுத்தப் படுகின்றன. சில மோசமான விஷமிகள் இத்தகைய பாலியல் வல்லுறவுக் காட்சிகளை சமூக வலைத் தளங்களில் ஒளிபரப்பி சட்டத்திற்கே சவால் விடுகின்றனர். இதுபோன்ற நிகழ்வுகள் நமது சமயப் பண்பினையும், சமுதாய உணர்வையும் நாகரீகமான வாழ்க்கை முறையையும் கேலிப் பொருளாக்குகின்றன.

இது போன்ற வரைமுறையற்ற பாலியல் உறவுகள் காரணமாக பல நாகரீகங்கள் அழிந்து போனதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. நமது திரைப்படங்களும், வார இதழ்கள் மற்றும் நாளிதழ்களும் பாலியல் உணர்வுகளைத் தூண்டுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. துரதிருஷ்டவசமாக புகழ் பெற்ற தேசிய ஆங்கில இதழ்களும், நாளிதழ்களும் கூட பெண்களின் ஆபாசப்படங்களை வெளியிட்டு அவர்களைப் மோகப் பொருளாகக்காட்ட முயற்சிக்கின்றன. எளிதில் கெட்ட எண்ணங் களுக்குள் போகும் வாய்ப்புகள் கொண்ட இளைஞர்களுக்கு இது போன்ற விஷயங்கள் தற்போது வலைத்தளங்களில் காணக்கி டைக்கின்றன. இத்தகைய வெறியூட்டும் பாலுணர்வுப் போக்கை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரசாங்கம், சமூக விஞ்ஞானிகள், ஊடகங்கள், சமயத்தலைவர்கள் என அனைத்துத் தரப்பினரின் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நமது கலாச்சாரம் மற்றும் குடும்ப வாழ்வு மட்டுமல்ல நமது நாகரீகமே பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இயற்கைக்கு முரணான உறவுகள். திருமணத்திற்கு முந்திய உறவுகள், திருமண பந்தத்திற்கு அப்பாற்பட்ட உறவுகள் ஆகியவற்றை ஆதரித்து எழுதப்படும் கருத்துக்களை இரும்புக்கரம் கொண்டு தடுக்க வேண்டும். இறையச்சம், தார்மீகப் பண்புகளை மதித்தல், பொறுப்புணர்வு ஆகியன சமூகத்தில் முக்கியக் கோட் பாடகளாகப் போதிக்கப்பட வேண்டும்.

சமூகத்தின் சரிபாதியாக உள்ள பெண்களின் உரிமைகளை மறுக்கின்ற எந்த ஒரு சமயமும் மக்களின் ஆதரவைப்பெற முடியாது. இஸ்லாம் பெண்களைச் சமநிலையில் வைத்துள்ளது. அவர்களது உடல் மற்றும் மன ரீதியான அம்சங்களை கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுவதன் மூலமே சமத்துவத்தை உறுதி செய்யமுடியும். அடையாளத்தை விட சம பங்களிப்பே ஆண்களுக்கும், பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்பு களையும் கடமைகளையும் சரியாகச் செய்வதற்கான திறவு கோலாக இருக்க முடியும். குழந்தைப் பேறு மூலம் பெண்கள்

மனித சமுதாயத்தை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியப்பங்கு வகிக்கிறார்கள். அதே நேரத்தில், பொருளாதார உற்பத்தி மூலம் ஆண்கள் மனித சமுதாயத்தை நிலை பெறச் செய்கிறார்கள். எனவே இருதரப்பினருக்குமிடையே ஒரு சிறிய வித்தியாசத்தை நாம் காண முடியும். 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அன்றைய சமூக அமைப்பில் பெண்களின் பாதுகாப்பும், கண்ணியமுமே முக்கியப் பிரச்னைகளாக இருந்தன. இன்றைக்குப் பேசப்படும் 'உரிமைகள் அப்போது பிரச்னையாக இருக்கவில்லை என்பதே உண்மையாகும். இஸ்லாத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இருபத்தொன்றாம் நூற்றாண்டு முஸ்லிம் சமுதாயத்தில் வழங்கியுள்ள உரிமைகளுக்கு சமூகப் பொருளாதார பிரச்னைகளில் நிலவிடும் நடைமுறை உண்மைகளுக்கு மிடையிலான வித்தியாசத்தை நாம் உணர்ந்து அதனைப் பராமரிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

## இஸ்லாம்
## பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள்

இஸ்லாம் பெண்களை உரிய இடத்தில் வைத்துள்ளது. இறைச் சட்டங்களை மீறும் எந்த விதமான முயற்சியிலும் ஈடுபட அவர்களை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. பிற சமயங்களும், மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்களும், பெண்களின் சரியான பங்கை வரையறுத்துச் சொல்லத் தவறி விட்டன. இந்த நவீன யுகத்தில், பெண்கள் அனுபவித்து இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு விளையாட்டுப் பொருளாகக் குறைக்கப்பட்டு விட்டனர். தற்போதையக் கால கட்டத்தில் பெண்கள், உண்மையான அல்லது கற்பனையான சமத்துவம் என்று கருதிக் கொண்டு தங்களது தகுதியினை தாங்களே குறைத்துக்

கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடு கின்றனர். அவர்கள் ஆண்களால் சுரண்டப்படும் பொருட்களாக மாறிவிட்டனர். சுதந்திரம், சமத்துவம் என்ற முழக்கங்கள் விளையாட்டில் ஈடுபடும் வர்த்தகப் பொருட்களாகக் அவர்களை குறுக்கி விட்டன.

செய்தித் தாள்களிலும் மின்னணு ஊடகங்களிலும் வருகின்ற விளம்பரங்களை மேலோட்டமாகப் பார்த்தாலே பெண்கள் வர்த்த நலன்களுக்காகச் சுரண்டப்படுவது தெளிவாகத் தெரிய வரும் பெண்களுக்கு உண்மையில் சுதந்திரமும் கிடைக்கவில்லை. முழு சமத்துவமும் கிடைக்கவில்லை. இல்லங்களிலும் அவர்கள் தங்களது இயல்பான இடத்தை இழந்து நிற்கின்றனர். இயற்கையான சமநிலைமை, நேர்மை, பரஸ்பரத்தன்மை ஆகியன பாதிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக சமூக அமைதிக்கும் அதன் நீடித்த தன்மைக்கும் மிக மோசமான முறையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்டுள்ளவற்றை மனதில் கொண்டு முஸ்லிம் பெண்களின் நிலையினை ஆராய்ந்தால், சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னரே இஸ்லாம் சுய அடையாள மற்றும், பாதுகாப்பற்றும் தெளிவற்றுமிருந்த பெண்களை விடுதலை செய்ததை உணரமுடியும். இஸ்லாம் ஒரு பொது அறிவு மார்க்கமாகும். அது மனித இயல்புகளுடன் ஒத்துப் போகிறது. அது மனித வாழ்க்கையின் எதார்த்தங்களை அங்கீகரிக்கிறது. இஸ்லாத்தில் பெண்கள், மிக வலுவான குடும்ப பரம்பரை உரிமைகளை அனுபவிக்கிறார்கள். இஸ்லாமியச் சட்டப்படி பெண்கள் கீழ்க்கண்ட உரிமைகளைப் பெற்றுள்ளனர்.

1. இஸ்லாம் திருமணத்தை பாலியல் உணர்வை பூர்த்தி செய்யும் வழியாகவும், சட்டபூர்வமான முறையில் சந்ததியை விருத்தி செய்யும் ஒரு முறையாகவும், குடும்பங்களுக் கிடையே ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தும் ஒரு அம்சமாகவும் கருதுகிறது.

2. திருமணமான முஸ்லிம் பெண் தன்னுடைய இயற் பெயரை விட்டுவிட வேண்டியதில்லை. தன்னுடைய தனித்த அடையாளத்தை அவள் தக்கவைத்துக் கொள்ளலாம்.

3. திருமணம் செய்யப்போகும் ஆண் மகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவளுக்குண்டு இந்த விஷயத்தில் அவளது சம்மதம் பெறப்பட வேண்டும்.

4. முஸ்லிம் திருமணத்தில் மணமகன் தான் பெண்ணுக்கு மஹர் பணம் கொடுக்க வேண்டும். (மணப்பெண்ணின் தகப்பனாருக்கு அல்ல) மஹர் தொகையை அவளே நிர்ணயம் செய்து திருமணத்தின் போது கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். இந்த மஹர் பணத்தை அவள் தனது சொந்த சொத்தாகப் பாவித்து அதனை வைத்திருக்கவோ, செலவு செய்யவோ, முதலீடு செய்யவோ அவளுக்கு முழு உரிமை உண்டு. இதில் அவளுடைய ஆண் உறவினர்கள் யாரும் அவளுக்குக் கட்டளை இட முடியாது.

5. முஸ்லிம் வாரிசுரிமைச் சட்டத்தின் படி, தகப்பனாருடைய சொத்தில், சகோதரர்களைப் போலவே, அக்குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் பங்கு உண்டு. (குறிப்பாக மனைவி, மகள், அம்மா, சகோதரி ஆகியோருக்கு).

6. வாரிசுரிமையின்படி தன்னுடைய பெற்றோரிடமிருந்து பெறும் சொத்தை அல்லது பிற அன்பளிப்புப் பொருட்களை அவளே வைத்துக் கொள்ளலாம். அதனைத் தனது கணவருக்கோ, அல்லது கணவரின் சகோதரிகளுக்கோ கொடுக்க வேண்டியதில்லை. பெற்றோர்களின் சொத்திலும், கணவனுடைய சொத்திலும் அவளுக்கு பங்கு உண்டு. சொத்துக்களை அடையவும், அதனை விற்பதற்கும் அவளுக்கு உரிமை உண்டு.

7. பெண்களை அன்புடன் நடத்தும்படி குர்ஆன் முஸ்லிம்களை வலியுறுத்துகிறது (குர்ஆன் 4:19) தங்களுடைய பெண் உறவினர்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் பொறுப்பை

இஸ்லாம் ஆண்களிடம் ஒப்படைத்துள்ளது. மனைவி பணம் படைத்தவளாக இருந்தாலும் கூட கணவனே அவளுக்கும், குடும்பத்திற்கும் ஆகும் செலவிற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். மனைவி தனது சொந்தப் பணத்தை குடும்பத்தைப் பராமரிப்பதற்காக செலவிட வேண்டியதில்லை. இதற்குக் கைமாறாகப் மனைவி கணவனுக்கு விசுவாசமாகவும், கற்புடைய வளாகவும் நடந்து கொள்ள வேண்டும். (குர்ஆன் *4:34* யைப் பார்க்கவும்).

*8.* கணவனுடன் வாழ முடியாத நிலையில், கணவன் விவாகரத்துச் செய்ய மறுத்தால், அவனிடமிருந்து விவாகரத்துப் பெறும் உரிமை(குலா) மனைவிக்கு உண்டு.

*9.* விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம்.

*10.* விவாகரத்துப் பெற்ற பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்

*11.* விரும்பினாலோ, அல்லது சூழ்நிலைகளின் நிர்ப்பந்தம் காரணமாகவோ பெண் வேலைக்குச் சென்று பொருள் ஈட்டலாம்.

*12.* அடிக்கடி சொல்லப்படும் பொதுவான ஒரே மாதிரியான கூற்றுக்கு மாறாக, இஸ்லாம் பெண்களின் செயல்பாட்டை ஒரு வீட்டின் நான்கு சுவர்களுக்குள் குறுக்கிவிடவில்லை. ஏதாவது ஒரு வேலை செய்ய விரும்பும் ஒரு பெண்ணிற்கு இஸ்லாம் எந்த விதமான தடையும் விதிக்கவில்லை. விவசாயம், வியாபாரம், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்த பெண்களை நபிகளார் தடுக்கவில்லை நபிகளாரின் மனைவியர்களில் ஒருவரான ஜைனப்(ரலி) அவர்கள் கைவினைப் பொருட்கள் தயாரிப்பதில் வல்லவராக இருந்தார்.

*13.* அறிவைப் பெறுவதில் ஆண்களும் பெண்களும் சமமானவர்களே என இஸ்லாம் கருதுகிறது. அறிவைப் பெறுவது ஆண்–பெண் இருபாலரின் கடமை என இஸ்லாம்

வலியுறுத்துகிறது. இறை வசனங்கள் அருளப்பட்ட போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முதலில் அவ் வசனங்களை ஆண்களடங்கிய சபையில் ஓதிக் காட்டியதாகவும், பின்னர் பெண்கள் அடங்கிய கூட்டத்தில் ஓதிக் காட்டியதாகவும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆரம்ப நாட்களில் எழுதியவர்களில் ஒருவரான இப்னு இஸ்ஹாக் குறிப்பிடுகிறார்.

நபிகள் நாயம்(ஸல்) அவர்களும் திருக்குர்ஆனும் உருவாக்கித் தந்துள்ள உயரிய கலாச்சாரம் இதுதான். இதுவே மனிதனுக்கு இறைவன் வகுத்தளித்துத் தந்துள்ள வாழ்க்கைத் திட்டமாகும். இவையெல்லாம் பெண்களுக்கு சமூகம் வழங்கியுள்ள சலுகைகள் அல்ல. ஒருவருடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்ப யாரும் இதனை விலக்கிக் கொள்ள முடியாதபடி இவற்றிற்கு இஸ்லாமியச் சட்டத்தில் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இவை நிலையானவை. உலகில் உள்ள எந்த சக்தியாலும் இவற்றை மாற்றவோ, திருத்தவோ முடியாது. இவ்வாறாக இஸ்லாம் பெண்களின் கண்ணியத்தைப் பாதுகாக்கிறது. மேற்கத்திய உலகம் பெண்களை ஒரு நடமாடும் ஜடப் பொருளாகக் கருதி அவர்களுக்கு ஆத்மா உண்டா என்று ஐயம் எழுப்பிய அந்தக் கால கட்டத்திலேயே இஸ்லாம் பெண்களுக்கு இத்தகைய உரிமைகளை வழங்கியிருந்தது.

இஸ்லாம் பெண்களை உயரியவர்களாக மிகவும் மதிக்கத் தக்கவர்களாகக் கருதுகிறது. மதிக்கத் தகுதியற்றவர்களாகவோ, அல்லது இகழத்தக்கவர்களாகவோ கருதவில்லை. சில மத்திய கிழக்கு நாடுகளிலும், சில முஸ்லிம் நாடுகளிலும் ஏன் இந்தியாவிலும் கூட முஸ்லிம் பெண்கள் நன்முறையில் நடத்தப் படாததற்கு சில கலாச்சார ரீதியான பிரச்னைகள் தான் காரணமேயன்றி இஸ்லாம் அதற்குக் காரணமல்ல. இஸ்லாம் ஒரு அடக்குமுறை மதமாக இருந்தால் ஏன் உலகின் பல நாடுகளையும் சார்ந்த பிற மதப் பெண்கள் விருப்பத்துடன் இஸ்லாத்தில் இணைகிறார்கள்?

# இஸ்லாமியச் சட்டப்படி வாரிசுரிமைச் சொத்தில் ஆணின் பங்கில் பாதி பெண்களுக்கு வழங்கப்படுவது ஏன்?

வாரிசுச் சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு என்று இஸ்லாம் உரிமை வழங்கியிருப்பதன் மூலம் அவர்களைப் பொருளாதார ரீதியில் சக்தி பெற்றவர்களாக ஆக்கியுள்ளது. இஸ்லாத்திற்கு முந்திய அரேபியாவில் மகன்களுக்கே தந்தையின் சொத்து முழுவதும் போய்ச் சேர்ந்தது. ஆனால் தகப்பனாரின் சொத்துக்களிலிருந்து மகன்கள் பெறும் சொத்தின் பாதிக்குச் சமமான சொத்து மகள்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. பெண்களே ஒரு சொத்தாகக் கருதப்பட்டு, தந்தையின் இறப்பிற்குப் பின் மகன்களிடம் ஒப்படைக்கப்பட்ட அந்தச் சமுதாயத்தில் இது ஒரு பெரும் புரட்சிகரமான நடவடிக்கையேயாகும். இதற்கு இரண்டு குறிக்கோள்கள் இருந்தன. முதலாவதாக இது பெண்களின் தனித்த அடையாளத்தை அங்கீகரித்து அவர்களும் மனித சமூகத்தின் ஒரு சுயேட்டையான அங்கமே எனக் கருதியது. இரண்டாவதாக பொருளாதார ரீதியில் பெண்களை வலிமையுடன் வைத்திருப்பது.

தகப்பனார்கள், கணவன்மார்கள், மகன்கள், மற்றும் குழந்தைகள் இல்லாத சகோதரர்கள் ஆகியோரின் சொத்துக் களிலும் பெண்களுக்குப் பங்கு உண்டு எனத் திருக்குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. அன் நிஸ்ஸா அத்தியாயத்தில் உள்ள மூன்று வசனங்களில் நெருங்கிய உறவினர்களின் சொத்துக்களில் பெண்களுக்குரிய பங்கு பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன. (11, 12, 176 வசனங்களைப் பார்க்கவும்). இந்த வசனங்களில் வாரிசுச் சொத்தில் குழந்தைகள், பெற்றோர், மனைவிமார்கள் ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டிய பங்கு பற்றி வரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றை மனிதர்களின் முடிவிற்கு அல்லாஹ் விட்டுவிடவில்லை. நெருங்கிய உறவினர்கள் இல்லாத போது,

தூரத்து உறவினர்கட்குப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டிய பங்கு பற்றியும் அதற்கான வழிமுறைகளும் அதில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மனிதனின் தேவைகள் பற்றி இறைவன் கொண்டுள்ள ஞானத்தின் அடிப்படையிலும் பல்வேறு வித்தியாசமான சூழ்நிலைகளில் குடும்ப உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்புகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் இந்த வாரிசுரிமை சொத்து பற்றிய சட்டங்கள் சரியான முறையில் வரையறுக்கப் பட்டுள்ளன.

இப்போதைய நிலவரப்படி பார்த்தால், ஒரு பெண்ணிற்கு தந்தையின் சொத்தில் ஆணுக்கு அளிக்கப்படும் பங்கில் பாதிதான் கிடைக்கும் என்பது நியாயமற்றது போல் தோன்றலாம். ஆனால் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் நிலவிய சூழ்நிலைகளைக் கருத்தில் எடுத்துக் கொண்டு பார்த்தால் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும், இஸ்லாமும் பெண்களுக்கு வாரிசுச் சொத்து கிடைக்கச் செய்வதில் மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னேற்றகரமான பாதையை நோக்கி எடுத்து வைத்த அடிகளாகவே கருத வேண்டும். தங்களுக்கும் சொத்தில் பங்கு கிடைக்கும். அதன் உரிமையாளர்களாக இருக்கலாம் அதனைத் தாங்களே வைத்துக் கொள்ளலாம். செலவு செய்து கொள்ளலாம், முதலீடு செய்து கொள்ளலாம் என்பது பெண்களே கற்பனை செய்து பார்க்க முடியாத ஒரு அற்புத உரிமையாகும். தந்தையின் சொத்தை சமமாகப் பங்கிடுவதற்குப் பதிலாக, தந்தையின் சொத்திலிருந்து ஆண்களுக்குக் கிடைக்கும் பங்கின் பாதியினைப் பெறுவதற்கு பெண்கள் உரிமையுடையவர்கள்.

இனி, குடும்பத்திலும், சமூகத்திலும் பெண்களின் பங்களிப்பு பற்றியும், வாரிசுச் சொத்தில் அவர்கட்கு வழங்கப்பட்டுள்ள பங்கின் நியாயம் பற்றியும் நாம் ஆராய்வோம். சமூகத்தில் பெண்களின் பங்களிப்பைப் பற்றி ஆய்ந்து பார்த்தோமானால், இஸ்லாத்திலும், குர்ஆனிலும் அவர்கட்கு எந்த விதமான அநீதியும் இழைக்கப்படவில்லை என்பது தெரியவரும். ஆண்களைவிடப் பெண்களின் பொருளாதாரப் பொறுப்புகள்

குறைந்தவைதான். எனவே பெண்களின் பொருளாதாரப் பொறுப்புகளுக்குத் தகுந்தவாறு அவர்கட்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. குடும்பத்திற்கு வருமானம் ஈட்டுவதையும் அதனைப் பராமரிப்பதையும் ஆண்கள் வசமே இஸ்லாம் ஒப்படைத்துள்ளது. ஆண்கள் தான் மனைவியையும், குழந்தைகளையும், பெற்றோர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும். ஆண்கள் தான் அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி என அனைத்தையும் வழங்க வேண்டும். தங்களது ஆண், பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பதும் அவர்களின் கடமையே! எனவே ஆண்களோடு ஒப்பிடும் போது, பெண்களின் உண்மையான குடும்பச் செலவு மிகக் குறைவே. இந்தச் சூழ்நிலையில், தனது குடும்பத்தைச் சார்ந்த ஆண்கள் பெறும் சொத்தில் பாதிப்பங்கு அவர்களுக்குக் கிடைத்தாலே அது அவர்களின் நியாயமான பங்கை விட அதிகமாகவும், நியாயமான சம பங்காகவும் இருக்கும். பெண்களின் நிலையைப் பார்த்தோமானால், அவர்கள் திருமணத்திற்கு முன்னர் தங்களது தந்தையர்களாலும், திருமணத்திற்குப் பிறகு தங்களது கணவன்மார்களாலும் அதன் பின்னர் தங்களது மகன்களாலும் பராமரிக்கப்படுகிறார்கள் (அவர்கள் கணவர்களை இழந்தவர்களாக இருந்தால்). அவர்களுக்குப் பொருளாதார ரீதியான கடப்பாடு ஏதும் இல்லாத சூழ்நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்கு போதுமானது தான்.

ஆகையால், பாலினப் பாகுபாடு அல்லது ஒரு தலைச் சார்பு என்ற குற்றச்சாட்டில் எந்த விதமான உண்மையும் இல்லை. இஸ்லாம் பொருளாதார உரிமைகளுக்கும் ஆண்–பெண் ஆகிய இருபாலாரின் கடமைகளுக்குமிடையே ஒரு சம நிலையைப் பேணிட முயற்சி எடுத்துள்ளது என்பதையே இது காட்டுகிறது. பெண்கள் தங்களது சொத்துக்களையும், செல்வங்களையும், சேமிக்கவோ, முதலீடுகள் செய்யவோ முடியும். ஆனால் ஆண்கள் தங்களது சொத்துக்களையும் வருமானத்தையும்

தங்களுடைய மனைவிக்காகவும், பிள்ளைகளுக்காகவும் செலவு செய்வதற்கு கடமைப்பட்டவனாக இருக்கிறார்கள். மேலும் சொத்தில் தாங்கள் பெறும் பங்குக்கு மேலதிகமாக, திருமணம் செய்து கொள்ளும் போது ஆண்கள் மணப் பெண்களுக்கு மஹர் கொடுக்க வேண்டியதுள்ளது. ஒருவர் ஒரு மகனையும் ஒரு மகளையும் விட்டு விட்டு மரணமடைந்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். வாரிசுரிமை மூலம் மகனுக்குக் கிடைக்கும் சொத்து, அவன் தனது திருமணத்தின் போது மனைவிக்குக் கொடுக்கும் மஹர் மூலமாகவும், திருமணம் செய்து கொடுக்கும் வரை தனது சகோதரியை உள்ளடக்கிய குடும்பதைப் பராமரிப்பதன் மூலமாகவும், குறைந்து போவதற்கு வாய்ப்புகள் உள்ளன. வேலை செய்வதன் மூலம் தான் அவனுக்கு கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்புகள் உண்டு. அதே நேரத்தில் அவனது சகோதரியின் பங்கு அப்படியே குறையாமல் இருக்கும். அல்லது அவள் அதனை முதலீடு செய்திருந்தால், அந்தச் சொத்து அல்லது செல்வம் அதிகரிப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. திருமணமாகும் போது அவன் கணவரிடமிருந்து மஹர் பெற்றுக் கொள்வாள். கணவராலேயே பராமரிக்கப்படுவாள். அவளுக்கு எவ்விதமான பொருளாதாரச் சுமையும் இல்லை.

## இஸ்லாத்தில் பெண்களின் கடமைகள்

இஸ்லாம் ஒரு முறையான, சமநிலையான வாழ்க்கை முறையாகும். பெண்களின் உரிமைகளை வரையறுத்துக் கூறியுள்ள இஸ்லாம் அவர்களது கடமைகளையும் வகுத் தளித்துத் தந்துள்ளது. ஒரு முஸ்லிம் பெண், கீழ்க்கண்ட கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

1. ஓரிறைவன் மீது நம்பிக்கை கொண்டு (தௌஹீது) இஸ்லாத்தைக் கடைப்பிடிப்பது அவளது முதன்மைக் கடமையாகும். அவள் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். ரம்ஜான் மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும், ஏழைகளுக்குத் தனது செல்வத்திலிருந்து ஜகாத் கொடுக்க

வேண்டும் (அதற்கான தகுதி பெற்றிருந்தால்) பணவசதி பெற்றவராக இருந்தால் ஹஜ்புனிதப் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

2. அவள் தனது கற்பினை எப்போதும் பாதுகாத்து வரவேண்டும். திருமணமின்றி வேறு யாருடனும் எந்தவிதமான பாலியல் உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது.

3. அவள் கண்ணியமான உடையினை அணிய வேண்டும். வெளியே செல்லும் போதும், நெருங்கிய உறவினர்கள் அல்லாத பிற வயதுக்கு வந்த ஆண்களைச் சந்திக்கும் போது ஹிஜாப் அணிய வேண்டும். (ஹிஜாப் என்பது வெளியில் அணிந்து கொள்ளும் நீளமான ஆடை அல்லது முக்காடு என்று பொருளாகும் *33:59*, *24:30–31* ஆகிய திருக்குர்ஆன் வசனங்களைப் பார்க்கவும்) அவள் ஆண்களைப் போல் உடை அணியக் கூடாது

4. இஸ்லாமிய நெறிகளின்படி குழந்தைகளை வளர்ப்பது அவளது கடமையாகும். வீட்டு விஷயங்களை அவள் கவனித்துக் கொள்ள வேண்டும். குடும்பம், பரஸ்பர ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பின் பேரில் நடந்த போதிலும், குடும்பத்தின் முழுக்கட்டுப்பாடும் அவளிடமே இருக்க வேண்டும். அவளே குடும்பத்தின் தலைவியாவாள்.

5. அவள் தனது கணவருக்கு உதவியாளராக இருக்க வேண்டும். ஒரு விசுவாசமான மனைவி ஆடையைப் போன்றவள். அவளே அமைதி, அன்பு, மகிழ்ச்சி, கணவரின் திருப்தி என அனைத்திற்கும் ஊற்றுக் கண்ணாக இருப்பவள்.

6. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறாக நடக்கும் படி அவளுக்குச் சொல்லப்பட்டால், சொல்லியவர் தனது கணவனாக, தந்தையாக, சகோதரனாக இருந்தாலும் அதனை அவள் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

7. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உதவுபவராக இருக்க வேண்டும் என்றே இஸ்லாம் கூறுகிறது. ஒருவரை

யொருவர் அடக்கியாளக் கூடாது. ஒவ்வொருவருக்கும் பொறுப்புகளும் கடமைகளும் தனித்தனியே உள்ளன. அவர்கள் இணைந்து மகிழ்ச்சியான ஒரு குடும்பத்தை உருவாக்கி அதன் மூலம் வலுவான, நீடித்த, அமைதியான சமூக வாழ்க்கைக்கு தங்களது பங்களிப்பைச் செய்திட வேண்டும்.

## ஹிஜாப் அல்லது முக்காடு

முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அல்லது முக்காடு அணிந்து கொள்வது பற்றி அடிக்கடி விவாதங்கள் நடைபெறுகின்றன. இது பெண்களைக் கட்டுப்படுத்தும் ஒரு முறை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. முஸ்லிம்கள், இதனை உணர்வுப் பூர்வமாக நியாயப்படுத்தியும் முஸ்லிமல்லாதவர்கள் இதனை கடுமையாக எதிர்த்துப் பேசியும், எழுதியும் வருகின்றனர். இந்தப் பிரச்சாரம் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தற்போது இதற்கு ஒரு அடையாளப் பூர்வமான, அரசியல் பூர்வமான முக்கியத்துவமும் கிடைத்து வருகிறது. ஆனால் 'முக்காடு' பற்றி திருக்குர்ஆன் என்ன கூறுகிறது?.

முக்காடு' என்பதற்கு திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை ஹிஜாப் என்பதாகும். இந்த வார்த்தை திருக்குர்ஆனில் எட்டு இடங்களில் வருகிறது. (இறை வசனங்கள் *19:17, 30:32, 17:45, 42:51, 7:46, 33:53, 83:15*) ஹிஜாப் என்பதற்கு திரைத்துணி, பர்தா, பிரித்தல் என்று பொருளாகும். ஆனால் ஹிஜாப் என்பது தலையையும், உடல் முழுவதையும் மூடுகின்ற ஒரு துணி என்றே காலம் காலமாக முஸ்லிம்களால் உணரப்பட்டு வருகிறது. பெண்களின் கற்பையும், கண்ணியத்தையும் பாதுகாத்து ஒரு இறை நெறிமிக்க சமூகத்தை உருவாக்கிட அவர்கள்(பெண்கள்) நெகிழ்வான ஆடைகளையே அணிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இப்போதுள்ள நிலையில், கிமார், பர்தா, சாதோர், அபயா, முக்காடு ஆகியன நெகிழ்வான ஆடைகளாகும். இந்திய உபகண்டத்திலுள்ள முஸ்லிம்

பெண்களை 'புர்கா' எனப்படும் தலை முதல் கால்வரை மறைக்கும் ஆடையை அணிகிறார்கள். மத்தியக் கிழக்கு நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் 'நிகாப்' எனப்படும் முகத் திரையைப் போட்டுக் கொள்கிறார்கள். ஈரானிய முஸ்லிம் பெண்களோ கருப்புத் துணியைப் பயன்படுத்துகிறார்கள். அரேபிய முஸ்லிம் பெண்கள் 'அபயா' என்ற நீண்ட துணியை அணிந்து கொள்கிறார்கள். பிற பகுதிகளிலுள்ள முஸ்லிம் பெண்கள் தலையில் தாவணி போட்டுக் கொள்கிறார்கள்.

> மேலும் (நபியே) இறை நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும். அவர்கள் தங்களது பார்வையைப் பேணிக் கொள்ளட்டும். தங்களுடைய வெட்கத் தலங்களைப் பாதுகாக்கட்டும். தங்களது அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும். மேலும் தங்களுடைய மார்புகள் மீது முந்தானையைப் போட்டுக் கொள்ளட்டும். தங்கள் கணவன்மார்கள், தங்கள் தந்தையர்கள், தங்களது கணவர்மார்களின் தந்தையார். தங்களது மகன்கள், தங்கள் கணவன்மார்களின் மகன்கள், தங்கள் சகோதரர்கள், தங்கள் சகோதரர்களின் மகன்கள், சகோதரிகளின் மகன்கள், தங்களுடன் நெருங்கிப் பழகும் பெண்கள், தங்களின் ஆண், பெண் அடிமைகள் மற்றும் தவறான வேட்கையில்லாத தம்மை அண்டி வாழ்கின்ற ஆண்கள் மேலும் பெண்களின் அந்தரங்க விஷயங்களைப் பற்றி எதுவும் தெரிந்திராத சிறுவர்கள் ஆகிய இவர்கள் முன்னிலையிலன்றி (வேறு எவரிடத்திலும்) தங்களுடைய அழகை அவர்கள் வெளிக்காட்ட வேண்டாம். தாங்கள் மறைத்து வைத்திருக்கும் தங்களின் அழகை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக தங்கள் கால்களைப் (பூமியில்) அடித்துக் கொண்டு நடக்க வேண்டாம். (குர்ஆன் *24:31*).

ஆண்கள், பெண்கள் ஆகிய இரு வகையினரும் தங்களது

நடத்தையில் கண்ணியமாக இருக்கும்படியும் தங்களது பார்வையைத் தாழ்த்திக் கொண்டு தகாதவற்றை செய்யத் தூண்டும் மனப்பான்மையினின்றும் தவிர்ந்து கொள்ள வேண்டு மென்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. கோஷா முறை பெண்களுக்கு எதிரானது என்று சிலர் குறை கூறுகின்றனர். இது பற்றி தவறாகப் பிரச்சாரம் செய்து வரும் நடுநிலையற்ற ஊடகங்களும் ஆண்களைப் பற்றி குர்ஆன் சொல்லி யுள்ளவற்றை வேண்டுமென்றே கவனிக்க மறுக்கின்றன.

> (நபியே) இறை நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தங்கள் பார்வையைப் பேணிக்கொள்ளும் படியும், தங்களுடைய வெட்கத் தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் படியும் நீர் கூறும்! இதுவே அவர்களுக்கு மிகத் தூய்மையான வழிமுறையாகும். அவர்கள் செய்யும் அனைத்தையும் திண்ணமாக அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கிறான். (குர்ஆன்24:30)

தம்பதிகளுக்கிடையே பரஸ்பர அன்பும், நம்பிக்கையும் நிலவி அந்த பந்தம் நிலைத்திட நபிகளார் அனைத்து வழிமுறைகளையும் ஊக்குவித்தார்கள். அதே நேரத்தில் உறவற்றவர்கள் மத்தியில் நிலவிய இச்சையையும் கெட்ட நடத்தையையும் கண்டித்தார்கள்.

பெண்கள் கண்ணிய மானவர்களாக மதிக்கப்படவே இஸ்லாம் அவர்களுக்குக் கோஷா முறையை அனுஷ்டிக்கும்படி அறிவுறுத்தி உள்ளது. பிறரால் தொந்தரவு செய்யப்படு வதினின்றும் அவர்களைப் பாதுகாக்கும். கோஷாமுறை, நெகிழ்வான ஆடைகள், கண்ணியமான உடைகள் ஆகியவற்றின் நன்மைகள் அளப்பரியன.

இன்றைக்கும் கூட மிகவும் இறுக்கமான ஆடைகளை அணிந்து கொண்டு தங்களது உடலைக் காட்டிக் கொள்ளாத பெண்களும், மெல்லிய உடைகள் அணிந்து தங்களது உடல்

அழகை வெளிக்காட்டாத பெண்களும் பெரிதும் மதிக்கப் படுகிறார்கள். மாறாக சினிமாவில் நடிப்பவர்கள், நடனம் ஆடுபவர்கள், உடலை வெளிக்காட்டிக் கொள்பவர்கள், பணத்திற்காக விளம்பரங்களில் தோன்றுவோர் இச்சையுடனே பார்க்கப்படுகின்றனர்.

பலகோடிகள் ரூபாய் முதலீட்டில் செயல்பட்டு வரும் அழகு சாதனப்பொருட்கள், சோப்புகள், சாம்பு, உள்ளாடைகள், ஆடம்பர பைகள், ஆடைகள், பெண்கள் உபயோகிக்கும் சுத்தப்படுத்தும் துணிகள், கருத்தடை மாத்திரைகள்–உறைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் தங்களது விளம்பரங்களில் பெண்களை அலங்கோலமான முறையில் காட்டுகின்றன. குறைவான உடையணிந்த பெண்கள் – நன்றாக உடல் முழுவதையும் மறைக்கும் ஆடையணிந்த ஆண்கள் என்ற மேற்கத்திய உடைக் கலாச்சாரம், அதன் மூலம் பெண்களின் அழகை காசாக்கும் நிலை ஆகியன பெண்களுக்கு எதிரான அவர்களின் மனப்பான் மையைக் காட்டுகின்றன.

முஸ்லிம் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்று மார்பில் அடித்துக் கொள்ளும் மேற்கத்தியர்கள் கோஷாவை, முகத்திரையை தடை செய்வதன் மூலம் தங்களது எண்ணத்தை வெளிப்படுத்துகின்றனர். உண்மையிலேயே பெண்கள் தங்களது அழகை தங்களது கணவர்மார்களைத் தவிர வேறு யாருக்கும் காட்ட மாட்டார்கள்.

பொது நிகழ்ச்சிகளிலோ, திரைகளிலோ தோன்ற மாட்டோம் என்று முடிவெடுத்துச் செயல்பட்டால், 8 பில்லியன் கோடி டாலர் முதலீட்டில் இயங்கிவரும் இந்த அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் நட்டமடைந்து விடும். இந்நிலையில் துருவிப் பார்க்கும் கண்களிலிருந்தும், மீடியாக்களின் வெளிச்சத்திலிருந்தும் பாதுகாப்பு வேண்டி ஏராளமான பெண்கள் இஸ்லாத்தில் இணைந்து வருவதை ஏன் மேற்கத்தியர்கள் கவலையுடன் நோக்க வேண்டும்?

டோனிபிளையர் மனைவியின் சகோதரி லாரன்பூத், மர்யம் ஜமீலா(முன்னாள் மார்க்கரட் மர்க்யூஸ்), பிரிட்டிஸ் பத்திரிகையாளர் ஒன்னோ ரிட்லி, மலையாளக் கவிஞர் கமலா சுரையா போன்றோருக்கு இஸ்லாத்தில் அமைதியும் ஆறுதலும் கிடைக்கிறதென்றால், இது பற்றி மேற்குலகமும், பெண்ணிய வாதிகளும் ஏன் காலத்திற்கு ஒவ்வாத பழமை வாதம் கொண்ட பத்தாம் பசலித்தனமான இஸ்லாத்தில் மேற்குலகைச் சார்ந்த இத்தகைய பெண் விடுதலையாளர்களெல்லாம் இணைகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கட்டும்.

மிகப் பெரும் பொருட் செலவில் ஆடை மற்றும் அழகு சாதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் நடத்தும் அலங்காரப் பேரணிகளில் கலந்து கொள்ளும் பெண்களை ஆடை அணியாமல் வரும்படி ஊக்குவிக்கிறார்களே, இதை பற்றி அவர்கள் கேள்வி எழுப்ப வேண்டாமா? குடும்ப அமைப்பு சிதறவும், தனிப்பட்டவர்கள் அமைதி இழக்கவும் காரணமாக அமைகின்ற இத்தகைய உடல் இச்சையைத் தூண்டும் அணிவகுப்புகளை ஏன் நடத்துகிறார்கள் என்று அவர்களிடம் கேள்விகள் கேட்க வேண்டாமா?

தங்களது விருப்பப்படி நடந்து கொள்ள பெண்களுக்கு முழு சுதந்திரம் உள்ள இன்றைய நவீன சமூக அமைப்பில் தங்களுக்கு விருப்பமான உடையைத் தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ள அவர்களைத் தடுப்பது எந்த வகையில் சரியாகும்? முக்காடோ, புர்காவோ அணியுமாறு ஒருவரைக் கட்டாயப்படுத்துவது ஒடுக்கு முறையென்றால், அதனை நீக்கும்படி கட்டாயப்படுத்துவதும் ஒடுக்கு முறைதானே?

ஏன் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், சகோதரத் துவத்தையும் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள் முஸ்லிம்கள் விஷயத்தில் மட்டும் இந்த உடை தான் அணிய வேண்டும் என்ற உடைக் கோட்பாட்டைக் கட்டாயமாகத் திணிக்க வேண்டும்? முக்காடோ, புர்காவே அணிவது ஒரு முஸ்லிம் பெண்ணின் தனிப்பட்ட விருப்பமாகும். அதனை மற்றவர்கள்

மதிக்க வேண்டும். மற்ற சமயத்தினரின் அடையாளங்களான தலைப்பாகை, தலைத் தொப்பி, சிலுவைச் சின்னங்கள் பதிக்கப்பட்ட பேழைகள் ஆகியவற்றை யாரும் ஆட்சேபிப்பதில்லை. மாறாக மதிக்கின்றனர். கிறிஸ்துவ கன்னியாஸ்திரிகள் அணியும் உடுப்பை ஒத்ததுதான் முஸ்லிம் பெண்கள் அணியும் முக்காடும் புர்காவும். இஸ்லாமியப் பெண்களின் கண்ணியமான நேர்த்தியான உடை விஷயத்தில் மட்டும் ஏன் இந்த இரட்டை அளவுகோல்கள்? என்பது நமக்குப் புரியவில்லை. ஒருவரைப் போலவே மற்றவர்களும் நடந்து கொள்ள வேண்டும். என்று எதிர்பார்ப்பது சகிப்புத் தன்மையல்ல. மாறாக அவர்களைப் புரிந்து கொள்ள முடியாத போதும் அல்லது அவர்களுடன் முரண்படும் போதும் அவர்களின் விருப்பங்களை மதிப்பதே சகிப்புத் தன்மையாகும்.

# கோஷா –
# அறிவு மற்றும் நவீனத்தின் வெளிப்பாடு

2011ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற ஏமன் நாட்டைச் சார்ந்த பெண்ணிய வாதியான தவக்கல் கார்மன் என்பவர் இஸ்லாமியப் பெண்கள் பெற்று வருகின்ற மதிப்பையும், கண்ணியத்தையும் மிகச் சிறந்த முறையில் பட்டியலிட்டுள்ளார். நார்வே நாட்டின் தலைநகர் ஓஸ்லோவில் நடைபெற்ற நோபல் பரிசு வழங்கும் விழாவில் அவர்கள் அபயா உடையணிந்து தலையில் முக்காடிட்டு கலந்து கொண்ட போது சர்வதேச அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் பெரும் வியப்புத் தெரிவித்தன. நீங்கள் அணிந்துள்ள 'கோஷா' உங்களது கல்விக்கும் அறிவுத்தரத் திற்கும் பொருந்தி வரவில்லை என்பதையும், கோஷா அணிவது பெண்களை ஒடுக்கும் ஒரு பிற்போக்கான வழிமுறை என்பதையும் நீங்கள் உணரவில்லையா?' என்று அங்குள்ளவர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு தவக்கல் கார்மன் பதிலளித்ததாவது:– ஆரம்ப காலங்களில் மனிதர்கள் நிர்வாணமாகவே இருந்தனர். அவர்களின் சிந்தனை வளர்ந்த போது உடைகள் அணிய ஆரம்பித்தனர். இப்போது நான் எப்படி இருக்கிறேன், என்ன உடை அணிந் திருக்கிறேன் இது பல்வேறு கால கட்டங்களில் மனிதன் பெற்ற அறிவு மற்றும் நவீனத்தின் வெளிப்பாடாகும். பிற்போக்குத் தனமாகாது 'நிர்வாணம்' பிற்போக்குத் தனமானது. அது மனித சமுதாயத்தை பழங்காலத்திற்கு பின்னோக்கித் தள்ளுகிறது.

# 13

# உஹுது

## எதுவும் முடிவல்ல

தங்களுடைய ஆன்மீக, சமுதாயப் போதனைகளுக்கு மத்தியிலும், மதீனா முஸ்லிம்களின் பாதுகாப்பு பற்றியும், பழிவாங்கக் காத்திருக்கும் குறைஷியர்களின் திட்டம் பற்றியும் நபிகளார் கவனத்துடன் இருந்தார்கள். மூவாயிரத்திற்கும் (3000க்கும்) மேற்பட்டவர்களைக் கொண்ட படையொன்று மதீனாவை நோக்கி வந்து கொண்டிருப்பதாக நபிகளாரின் சிறிய தகப்பனார் அப்பாஸ்(ரலி) அவர்கள் தகவல் கொடுத்திருந்தார். இதனை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றிய திட்டங்கள் வகுத்திட நபிகளாருக்கு ஒரு வார காலமே அவகாசம் இருந்தது.

இது சம்பந்தமாக தனது தோழர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார்கள். அவர்களுக்கு இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று நகருக்குள்ளேயே இருந்து கொண்டு, எதிரிகள் நுழையும்வரை காத்திருப்பது. மற்றொன்று புறப்பட்டுச் சென்று நகருக்கு அப்பால் உள்ள சமவெளியில் அவர்களை எதிர்கொண்டு தாக்குவது. நபிகளாரும் பெரும்பாலான தோழர்களும் (நம்பிக்கைக்குப் பாத்திரமற்ற வேஷதாரியான அப்துல்லாஹ் பின் உபை உட்பட) நகரிலேயே தங்கியிருந்து எதிரிகளை எதிர்கொள்வது நல்லது என்று கருத்துத் தெரிவித்தனர். ஆனாலும் பத்ருப் போரில் கலந்து கொள்ளாத இளைய தோழர்கள் ஆலோசனையின் போது நபிகளாரின் இந்தக் கருத்தை ஏற்கவில்லை. அவர்கள் நகரை விட்டுச் சென்று எதிரிகளை நேருக்கு நேர் சந்திக்க வேண்டுமென்று கூறினார்கள். இந்த முடிவினை ஏற்றுக்கொண்ட நபிகளார், உடனே தனது இல்லம் சென்று போர் ஆயத்தங்களில் ஈடுபட்டார்கள். நாட்கள்

மிகக் குறைவாகவே இருந்தன. நபிகளார் தெரிவித்த யோசனையே சரியானது. அதனையே செயல்படுத்தவேண்டும், எனவே எடுக்கப்பட்ட முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சில தோழர்கள் நபிகளாரிடம் வேண்டுகோள் விடுத்தனர். நபிகளார் இதனை ஏற்க மறுத்து விட்டார்கள். எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவில் இருந்து பின்வாங்கக் கூடாது என்று அவர்களிடம் உறுதிபடத் தெரிவித்த நபிகளார், போர் உடையுடன் நான் வந்து விட்டேன் இதிலிருந்து பின் வாங்கும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறிவிட்டார்கள்.

## உஹதை நோக்கி அணிவகுப்பு

மதீனாவிலிருந்து வடக்கில் 5 கி.மீ தொலைவிலிருந்த உஹது நோக்கி 23.3.625ல் (ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு) முஸ்லிம்கள் படை புறப்பட்டுச் சென்றது முஸ்லிம் படையில் ஆயிரம் பேர்கள் இருந்தனர். இந்தப் படை மூவாயிரம் பேர்கள் கொண்ட எதிரிப்படையை எதிர் நோக்கவிருந்தது. சென்று கொண்டிருக்கும் போதே உபை மகன் அப்துல்லா என்ற நயவஞ்சகன் 300 பேர்களுடன் படையிலிருந்து விலகிச் சென்று விட்டார். அவர் நபிகளாரைச் சந்தித்து சொந்த விருப்பத்தினைச் செயல்படுத்தாது அனுபவமற்ற இளம் தோழர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு படை நடத்திச் செல்வது சரியாக இருக்காது என்றும், மதீனாவிலேயே தங்கியிருந்து எதிரிகளைச் சந்திப்பது தான் சரியான முறை என்றும் மீண்டும் கூறினார். அப்துல்லாஹ் பின் உபையின் முடிவு முஸ்லிம்கள் படைக்கு பின்னடைவை ஏற்படுத்தியது. படையின் எண்ணிக்கை எழுநூறாகக் குறைந்தது. இந்தச் சூழ்நிலையில் பின்வாங்கவோ, போர்த் தந்திரங்களை மாற்றவோ இயலாது. இப்னு உபையின் இந்த கபடத்தனம் தெரிந்ததுதான். பல துரோகங்கள் செய்ததாக அவர் மீது முஸ்லிம்கள் சந்தேகம் கொண்டனர். இது அவரது இரட்டை நிலைப்பாட்டிற்குச் சான்றாக அமைந்திருந்தது. பலவீனப்பட்ட நிலையிலும் முஸ்லிம்கள் படை அணி வகுத்துச் சென்றது.

தங்களுடைய வருகையை கண்டு பிடிக்க இயலாத முறையில், முஸ்லிம்கள் படை யாருக்கும் அதிகம் பரிச்சயமற்ற ஒரு சாலையின் வழியாக உஹுதை நோக்கிச் சென்றது. மீண்டும் நபிகளார் முஸ்லிம் அல்லாத ஒருவரின் வழிகாட்டுதலை நம்பினார்கள். அவர் தான் முஸ்லிம் படையை உஹதை நோக்கி வழி நடத்திச் சென்றார். படையினர் தங்களது நிலைகளில் இருந்தனர். நபிகளார் போர் முறையை அவர்கட்கு விளக்கிச் சொன்னார்கள். விற்போர் வீரர்கள் குன்றுகளின் மேல் நின்று கொண்டிருக்க குதிரைப் படையினரும், பிற வீரர்களும் சமவெளிப்பகுதியில் நின்று கொண்டு எதிரிகளுடன் போரிட்டனர்.

நபிகள் நாயகம்(ஸல்) விற்போர் வீரர்களிடம் கூறியதாவது.

நாங்கள் கொல்லப்படுவது தெரிந்தால், நீங்கள் எங்களுக்கு உதவி செய்ய வரவேண்டாம். நாங்கள் பறவைகளால் துண்டு, துண்டாகக் கிழிக்கப்படுவதை நீங்கள் பார்த்தாலும் நாங்கள் கூப்பிடும் வரை நீங்கள் உங்கள் நிலைகளிலேயே இருக்க வேண்டும். நாம் வெற்றி பெற்றாலும், தோல்வி அடைந்தாலும் நீங்கள் உங்களின் இடத்தை விட்டு நகரக் கூடாது. உங்களது இடங்களிலேயே உறுதியாக நின்று கொண்டிருங்கள்.

உங்கள் பக்கத்திலிருந்து நாங்கள் தாக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். எந்தச் சூழ்நிலையிலும் போரில் வெற்றி பெற்றாலும் சரி தோல்வியுற்றாலும் சரி வில்வீரர்கள் தங்களது நிலைகளிலிருந்து வெளியே வரக் கூடாது என்ற நபிகளார் கூறியதற்குக் காரணம் குறைஷியர்கள் குன்றைச் சுற்றி நின்று கொண்டு பின்னாலிருந்து முஸ்லிம் படைகளைத் தாக்கக் கூடாது என்பதற்காகத்தான்.

போரின் ஆரம்பத்தில் குறைஷிப் படையின் ஒரு பிரிவினர் இவ்வாறு தாக்குதல் தொடுத்த போது முஸ்லிம் வில் வீரர்களின் தாக்குதல் காரணமாக அவர்கள் பின்வாங்க நேர்ந்தது. எனவே நபிகளாரின் இந்தப் போர் யுக்தி நல்ல பலனை அளித்தது.

# உஹது போர்

சமவெளிப் பகுதியில் போர் தொடங்கியது. முஸ்லிம்கள் அதனைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். குறைஷியர்களுக்குத் தோல்வி ஏற்பட்டு பலர் உயிரிழந்தனர். முஸ்லிம்படை குறிப்பிடத்தக்க அளவில் தீரத்துடன் போரிட்டது. முஸ்லிம்கள் தரப்பில், உம்மு சுலைம்(ரலி) என்ற பெண்ணும், நுஸைபா என்ற அன்ஸாரிப் பெண்ணும் உறுதியுடனும், தீரத்துடனும் போரிட்டனர். இவர்கள் ஆரம்பத்தில் படை வீரர்களுக்கு தண்ணீர் வழங்கவும், காயம்பட்டவர்கட்கு உதவி செய்யவுமே அழைத்து வரப்பட்டனர். ஆனால் பின்னர் இந்தப் பெண்மணிகள் வாளை எடுத்துக் கொண்டு குறைஷியர்களுக்கு எதிராகப் போரிட்டனர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு போதும் பெண்களைப் போருக்கு அழைத்ததில்லை. கலந்து கொள்ளுமாறு ஆலோசனையும் அளித்ததில்லை. ஆனால் நுஸைபா தீரத்துடன் போரிடுவதைப் பார்த்த நபிகளார், அவரைப் புகழ்ந்து, அவருக்கு வெற்றி கிடைத்திட வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்தார்கள்.

சில உயிரிழப்புகளால் பின்னடைவு ஏற்பட்ட போதிலும், முஸ்லிம்களின் வெற்றி உறுதியானது. முஸ்லிம்கள் முன்னேறிச் சென்று கொண்டிருந்த வேளையில் குறைஷியர்கள் தங்களுடைய குதிரைகளையும், உடமைகளையும் போர்க்களப் பகுதியிலேயே விட்டு விட்டு பின் வாங்கிச் சென்றனர்.

இந்நிலையில் குன்றுகளின் மேல் நின்று கொண்டிருந்த வில் வீரர்கள் போர்க்களம் முஸ்லிம்களுக்குச் சாதகமாகத் திரும்பியுள்ளதையும், வெற்றி உறுதி என்பதையும் உணர்ந்து கொண்டனர். அதே நேரத்தில் குறைஷியர்கள் விட்டுச் சென்ற பொருட்கள், சமவெளிப்பகுதியில் முன்னணியில் நின்று போர் புரிந்து கொண்டிருப்பவர்கட்கே கிடைக்கும். தங்களுக்குக்

கிடைக்காது என எண்ணிய அவர்கள் நபிகளார் மற்றும் படைப்பிரிவின் தலைவர் சுபைர் மகன் அப்துல்லாஹ்வின் ஆணைகளையும் தடைகளையும் மீறி நாற்பதுக்கும் மேற்பட்டோர் குன்றிலிருந்து கீழே இறங்கி (சிலர் மட்டும் குன்றில் தங்களது நிலைகளிலேயே இருந்தனர்) போரில் கைப்பற்றப்பட்ட பொருட்களில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று உரிமை கோரினர்.

போர்க்கலையில் தேர்ந்த குறைஷிப் படையின் தளபதி காலித் பின் வலீத் என்பார் முஸ்லிம் வில் வீரர்கள் குன்றிலிருந்து இறங்கி வருவதைக் கண்ணுற்று உடனடியாக குன்றைச் சுற்றி பின்னால் நின்று கொண்டு முஸ்லிம்களைத் தாக்குமாறு தனது படைப்பிரிவுக்கு ஆணையிட்டார். அவர்கள் நபிகளாரின் தோழர்கள் மீது கடும் தாக்குதல் தொடுத்தனர். பெருங் குழப்பம் ஏற்பட்டது. முஸ்லிம் படை சிதறிப்போய் செய்வதறியாது திகைத்து நின்றது. சிலர் கொல்லப்பட்டனர். சிலர் ஓடினர் சிலர் மட்டும் சண்டையில் ஈடுபட்டிருந்தனர்.

நபிகளாரும் தாக்குதலுக்கு உள்ளானார்கள் கவன் மூலமாக எறியப்பட்ட கல் ஒன்று அவர்களின் மேல் உதடைத் தாக்கி முன் பற்கள் உடைந்தன. இன்னொரு தாக்குதலில் அவர்களின் நெற்றியில் வெட்டு ஏற்பட்டு அதிலிருந்து ரத்தம் வழிந்தது. அவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். எனினும் தமது உதவியாளர்களால் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அப்படிச் சென்ற உதவியாளர்களில் ஆறுபேர் கொல்லப்பட்டனர். ஒருவர் கடும் காயமுற்றார். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இறந்து விட்டதாக வதந்தி கிளம்பியது. இது முஸ்லிம்களிடையே குழப்பத்தை அதிகரித்தது. இறுதியில், சில தோழர்கள் அவர்களை பாதுகாப்பாக தாங்கள் இருக்கும் குன்றுக்கு அழைத்துச் சென்று காப்பாற்றினார். முஸ்லிம்கள் போர்க்களத்திலிருந்து ஒரு வழியாக வெளியேறிச் சென்றனர். மீண்டும் தேவைப்பட்டால் எதிரிகளைச் சந்திக்கலாம் என்று எண்ணினர். போர் முடிவுற்றபோது, முஸ்லிம்கள் தரப்பில் எழுபது

பேர்களும், குறைஷியர்கள் தரப்பில் 22பேர்களும் கொல்லப்பட்டிருந்தனர்.

## பழிவாங்குதல்

பத்ருப் போரின் போது ஏற்பட்ட தோல்விக்குப் பழிவாங்குவதற்காக, குறைஷியர் தலைவர் அபூசுஃப்யானின் மனைவி ஹிந்தா, நபிகளாரின் சிறிய தகப்பானர் ஹழ்ரத் ஹம்ஸா(ரலி) அவர்களைத் தாக்கத் திட்டமிட்டிருந்தார். வாஹ்ஷி என்ற அபிசீனிய ஈட்டி வீரனிடம் ஹம்ஸா(ரலி)யைக் கொல்லும் பொறுப்பை ஒப்படைத்திருந்தனர். அவனும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டான். ஹம்ஸா(ரலி) அவர்கள் போரில் ஈடுபட்டிருந்த போது, வாஹ்ஷி, ஈட்டியை அவர் மீது எறிந்து கொன்றான். பின்னர், ஹிந்தா போர்க்களத்தில் கிடந்த ஹழ்ரத் ஹம்ஸா(ரலி) அவர்களின் உடலைத் தேடிப்பிடித்து அவர்களின் வயிற்றைக் கிழித்து ஈரலை வெளியே எடுத்து வாயில் போட்டு மென்றாள். பின்னர் அவர்களின் காதுகளையும், மூக்கையும் அறுத்தெடுத்து அவற்றைத் தன்னுடைய கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டாள். இதன் மூலம் பத்ருப் போரில் தனது உறவினர்கள் கொல்லப் பட்டதற்குப் பழி தீர்த்துக் கொண்டாள்.

குறைஷியர்கள் இறந்து போன தங்களுடைய வீரர் களையும், தங்களது உடமைகளையும் எடுத்துச் சென்றனர். ஆனால், முஸ்லிம்கள் போர்க்களத்திற்குச் சென்ற போது, இறந்து போன தங்களது வீரர்களின் உடல்கள் சிதைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். தனது சிறிய தந்தையார் ஹம்ஸா(ரலி) அவர்களது உடலைப் பார்த்து நபிகளார் பெரும் அதிர்ச்சியடைந்தார்கள். உயிரோடு இருப்பவர்களாயினும் சரி, இறந்தவர்களாயினும் சரி அவர்கள் மதிக்கப்பட வேண்டும். இறந்தவர்களின் உடலுக்கு எந்த விதமான கொடுமையோ, சேதமோ விளைவிக்கக் கூடாது என்பதில் நபிகளார் உறுதியாக இருந்தார்கள்.

## வில் வீரர்களின் கீழ்ப்படியாமை

வில் வீரர்களின் கீழ்ப்படியாமை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. செல்வத்திற்கும், பொருட்களுக்கும் ஆசைப் பட்டு, தங்களது பழைய பழக்க வழக்கங்களுக்கு அவர்கள் திரும்பிச் சென்றனர். ஏக இறைவன் பால் நம்பிக்கை நியாயம், உலக ஆசாபாசங்களிலிருந்து விலகி இருத்தல் போன்ற செய்திகள் தொடர்ந்து அவர்கட்குச் சொல்லப்பட்டு வந்த போதிலும், செல்வம் தங்களுக்கு மிக அருகாமையில் இருக்கிறது என்பதைக் கண்ணுற்றதும் அனைத்தையும் மறந்தனர். அவர்களின் பழைய பாரம்பர்ய மரபுப்படி, போரில் எவ்வளவு பொருட்கள் கிடைக்கப் பெறுகின்றன என்பதைப் பொறுத்தே வெற்றியின் தன்மை அளவிடப்பட்டதால், அவர்கள் இதுவரை பெற்று வந்த ஆன்மீக உபதேசங்களையெல்லாம் மறந்து விட்டு இச்செயலில் ஈடுபட்டு விட்டனர். இதன் காரணமாகவே, பெரும் வல்லமை வாய்ந்த காலித் பின் வலீத் என்பாரின் போர்த் தந்திரத்தில் அகப்பட்டுக் கொண்டு அவதியுற்றனர். (இந்த காலித் பின்னர் இஸ்லாத்தைத் தழுவி இஸ்லாத்தின் பெரும் வீரராகத் திகழ்ந்தார்) உஹதுப் போரின் இந்த நிகழ்ச்சி ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறது.

என்ன தான் உபதேசங்கள் பெற்றிருந் தாலும் மனிதர்கள் தங்களது பழைய மரபுகளை ஒரேயடியாக மீறி வெளியே வரமாட்டார்கள். அவர்கள் எதிர்காலத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்பது பற்றி ஒரு தீர்க்கமான முடிவுக்கு யாரும் வந்து விடமுடியாது என்பதே அது. தங்களது பழைய மரபுகள் காரணமாகவே முஸ்லிம்கள் அகப்பட்டுக் கொண்டனர். பின்னர் காலித் இஸ்லாத்தைத் தழுவியபோது அவரது கடந்த காலம் பற்றிக் கொண்டிருந்த முடிவுகள் முற்றிலும் மாறிப்போயின. 'எதுவும் முடிவானதல்ல' என்பதும், எந்த இறுதி முடிவும் எடுக்கக் கூடாது' என்பதும் இதில் அறிந்து கொள்ள வேண்டிய பாடமாகும்.

## ஷூரா – பரஸ்பர ஆலோசனை

சில நாட்களுக்குப் பிறகு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கட்கு

இறைவன் அருளிய வசனங்களில் உஹுதுப்போர் பற்றியும் போர்த் தந்திர வழிகளைச் செயல்படுத்தும்போது ஏற்பட்ட முரண்பாடுகள் பற்றியும், வில் வீரர்களின் கீழ்ப்படியாமை பற்றியும் தோழர்களின் மரணம் பற்றியும், நபிகளாரின் நிலைபற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தன. தனது தோழர்களில் சிலர் பணத்திற்கும், செல்வத்திற்கும் ஆசைப்பட்டு தனது ஆணைகளை மீறியது பற்றி நபிகளார் நன்கு உணர்ந்தேயிருந்தார்கள். இந்த வசனங்களில் இறைவன் நபிகளார் கொள்கைகளுக்கு மதிப்பளித்தது பற்றியும், அவர்கள் கொண்டிருந்த நற்குணங்களின் வலிமை பற்றியும் குறிப்பிடுகிறான்.

> (நபியே) அல்லாஹ்வின் மாபெரும் அருளினாலேயே நீர் இவர்களிடம் மென்மையாக நடந்து கொள்கின்றீர். நீர் கடுகடுப்பானவராகவும், வன்னெஞ்சராகவும் இருந்திருந்தால் இவர்களெல்லாம் உம்மை விட்டு விலகிப் போயிருப்பார்கள். ஆகவே இவர்(களின் தவறு)களைப் பொருத்தருள்வீராக! மேலும் இவர்களுக்காக (இறைவனிடம்) மன்னிப்புக் கோருவீராக! மேலும் தீனுடைய பணிகளில் இவர்களையும் கலந்தாலோசிப்பீராக (ஏதாவது ஒரு விஷயத்தில்) நீர் உறுதியான முடிவிற்கு வந்து விட்டால், அப்பொழுது அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்திருப்பீராக! திண்ணமாக தன்னை முழுமையாகச் சார்ந்திருந்து செயல்படுவோரை அல்லாஹ் நேசிக்கிறான். (குர்ஆன் 3:159)

நபிகளாரின் கருத்திற்கு முரணாக முடிவு எடுக்கப்பட்டதும், வில் வீரர்களின் கீழ்படியாமையும் சம்பவங்களின் போக்கை மாற்றி விட்டன. என்ன முடிவு செய்வதாக இருந்தாலும், எந்தப் பிரச்னையிலும் ஆலோசித்துத் தான் முடிவெடுக்க வேண்டுமென்பதையும் விவாதங்கள் நடத்தப்பட்டு பெரும் பான்மை அடிப்படையில் அந்த முடிவுகள் அமைய வேண்டுமென்பதையும், அந்த முடிவில் தவறுகள் ஏற்பட்டாலும்

அதனைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்பதையும் குர்ஆன் உறுதிப்படுத்துகிறது.

முஸ்லிம்கள் தங்களுக்குள் நன்கு ஆலோசனை நடத்திய பின்னரே எந்த முடிவினையும் எடுக்க வேண்டும். சில நேரங்களில் சில இடங்களில் அந்த முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் தோல்வி ஏற்பட்டாலும் பரவாயில்லை என்பதும் இறைவசனங்கள் உணர்த்தும் செய்தியாகும்.

'வில் வீரர்களின் கீழ்ப்படியாமை' பற்றிக் குறிப்பிடும் குர்ஆன், நபிகளார் தனது நற்குணங்களால் பிரச்னைகளை எதிர்கொண்டு தோழர்களை தக்க வைத்துக் கொண்டது பற்றியும் குறிப்பிடுகிறது. வில் வீரர்கள் தங்களது பழைய மரபுகளின் தாக்கத்தால், செல்வத்திற்கு ஆசைப்பட்டு செயல்பட்டதை நபிகளார் கண்டனம் செய்யவில்லை. அவர் மீது வெறுப்புடனோ, கடுமையுடனோ நடந்து கொள்ளவில்லை. நபிகளாரின் பெருந்தன்மை தோழர்களைச் சாந்தப்படுத்தியது. தாங்கள் செய்த தவறுகளிலிருந்து பாடம் பெற அவர்கட்கு உதவியது. தங்களது நிலைக்கு தாங்களே பொறுப்பாளிகள் என்று அவர்கள் உணரும்படி செய்து விட்டது.

## பணிவு–அடக்கம்

பணிவும், மரியாதையும் இறைவனை வணங்கும் வழிமுறைகளாகும் குர்ஆனில் இறைவன் குறிப்பிடுவதாவது.

> மேலும் பூமியில் செருக்காக நடக்காதீர்கள். ஏனெனில் உம்மால் பூமியைப் பிழந்து விடமுடியாது. மலையளவுக்கு உயர்ந்து விடவும் முடியாது. (குர்ஆன் *17:37*)

*மீண்டும் இறைவன் கூறுகிறான்....*

> மேலும் மக்களை விட்டு முகத்தைத் திருப்பியவாறு பேசாதே! பூமியில் செருக்காக நடக்காதே! அகந்தையும், ஆணவமும் கொண்ட எவனையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (குர்ஆன் *31:18*)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எப்போதும் இறைவனுக்கு பயந்தே வாழ்ந்தார்கள். பணிவின் உருவமாகவே காட்சியளித்தார்கள். மதீனாவில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், மண் செங்கற்களால் கட்டப்பட்ட, முற்றிலும் ஓலைகளைக் கொண்டு வேயப்பட்ட ஒரு வீட்டில் குடியிருந்து வந்தார்கள். இந்த வீட்டை நபிகளாரே கட்டினார்கள். அந்த வீடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்ட்டடிருந்தது. ஒரு பகுதியில் நபிகளாரும், இன்னொரு பகுதியில் அவரது மனைவிமார்களும் இருந்தனர். அந்த வீட்டில் அவர்கட்குத் தனிபடுக்கை அறை எதுவுமில்லை. பின்னர் அங்கு ஒரு திரைச் சீலையைக் கட்டினார்கள். மிக எளிமையாக வாழ்ந்தார்கள். பகல் நேரங்களில் ஒரு அரசின் தலைவர், உயர் நீதிபதி, இராணுவத் தளபதி, போதகர் என எப்போதும் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருப்பார்கள். இரவு நேரங்களில் மிகச் சிறந்த பக்தியாளராகத் திகழ்வார்கள். இரவின் மூன்றில் இரண்டு பங்கு நேரத்தை தொழுவதிலும் தியானம் செய்வதிலும் கழிப்பார்கள். பணிகளைத் திறம்படச் செய்திட தனக்கு வலிமை தருமாறு

கண்ணீர் மல்க இறைவனை வேண்டி இறைஞ்சுவார்கள். அரேபிய தீப கற்பத்தின் மன்னராக அவர்கள் திகழ்ந்த போதிலும், அவர்களிடம் ஓலையால் நெய்யப்பட்ட பாய் ஒன்றும் சில போர்வைகளும், தண்ணீர் குடுவை ஒன்றும் ஆக இவைகளே அவர்களின் உடமைகளாக இருந்தன. அவர்களது வாழ்க்கை மிக எளிமையாக இருந்தது.

உலகத்தில் உள்ள பிறரைப் போல் தங்களுக்கும் வசதி, வாய்ப்புகள் வேண்டும் என்று அவர்களது மனைவிமார்கள் வற்புறுத்திக் கேட்ட போதெல்லாம் நபிகளார் மறுத்து விட்டார்கள். கிராமப்புற மக்களைப் போல தரையில் திறந்த வெளியில் அமர்ந்து தான் உணவருந்தினார்கள். உணவுண்ணக் கரண்டி களைப் பயன்படுத்தவில்லை. கையாலேயே உண்டார்கள். எளிய ஆடைகளையே அணிந்தார்கள். மரணித்தபோது, அவர்கள் அணிந்திருந்த ஆடையில் பல தையல்கள் இருந்தன. உலகத்திற்கு வெளிச்சம் தந்த அவர்களின் இல்லம் இருட்டாக இருந்தது. ஏனெனில் விளக்கெரிக்க எண்ணெய் இல்லை. மிகப் பெரிய அதிகாரம் பெற்றவர்களாக விளங்கிய போதிலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், தங்களது குடும்பத்தினருக்காக எதையும் விட்டுச் செல்லவில்லை. எந்த ஒரு உயிலையும் எழுதி வைத்துவிட்டுச் செல்லவில்லை. 'நபிமார்களாகிய எங்களுக்கு (சொத்துக்குரிய) வாரிசுகள் என்று யாரும் இல்லை. நாங்கள் எதையெல்லாம் விட்டுச் சென்றோமோ அவற்றை தானம் செய்து விடுங்கள்.' என்ற நன்மொழியை மட்டுமே விட்டுச் சென்றார்கள். உலகில் மிகப்பெரிய பேரரசு ஒன்றைத் தோற்றுவித்து ஆசியா, ஆப்ரிக்கா கண்டங்களையும், ஐரோப்பாவின் எல்லைப்புற பகுதிகளையும் வெகு விரைவிலேயே வெற்றி கொள்ளவிருந்த நபிகளாரின் வார்த்தைகளே இவை.

## நான் ஒரு பயணியைப் போல

அரேபிய தீபகற்பத்தின் மன்னராக இருந்த நபிகளார், மனித சமூகம் எப்போதும் கண்டிராத மிகவும் விசுவாசமான தோழர்களைப் பெற்றிருந்தார்கள். ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள்,

நபிகளாரை ஒரு நாள் அவர்களது இல்லத்திற்குச் சென்று சந்தித்தது பற்றிக் குறிப்பிடுவதாவது: 'நான் வீட்டிற்குள் சென்ற போது, நபிகளார் ஈச்சைமரத்து ஓலைப் பாயில் படுத்திருந்தார்கள். அவர்கள் சட்டை அணிந்திருக்கவில்லை. பாயின் அடையாளங்கள் அவர்களது முதுகில் பதிந்திருந்தன. ஒரு மூலையில் மர மேஜை ஒன்றிருந்தது. அதில் மிகக் குறைந்த அளவு பார்லி (வால் கோதுமை) இருந்தது. இதைப் பார்த்து நான் அழுதுவிட்டேன். ஏன் அழுகிறீர்கள் என்று நபிகளார் கேட்டார்கள். அதற்கு நான் ரோம, பாரசீக மாமன்னர்களெல்லாம் உலகிலுள்ள எல்லா வசதி வாய்ப்புக்களுடன் வாழ்கிறார்கள். ஆனால் இறைவனின் தூதராகிய நீங்கள் இப்படி சிரமப்படுகிறீர்களே என்று கூறினேன். நான் இப்படிக் கூறியதும், நபிகளார் உடனே எழுந்து உமரே 'உலகத்திலுள்ள' என்று எதனை நீங்கள் கூறுகிறீர்கள். இந்த உலக வாழ்க்கை மட்டுமே வேண்டும் மறுமை வாழ்வு தேவையில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்று கேட்டார்கள்.

நபிகளார் வாழ்ந்த மதீனா நகர் பின்னாட்களில் செல்வம் கொழித்த நகராக மாறியது. எனினும் நபிகளாரின் வாழ்க்கையில் மாற்றமில்லை பல நாட்களில் அவர்கள் வீட்டின் அடுப்பு எரியவில்லை. பேரீத்தம் பழமும், தண்ணீருமே பல நாட்களில் அவர்கட்கு உணவாக இருந்தது. பல நாட்களில் இரவு நேரங்களில் அவர்கள் உண்பதற்கு ஒன்றுமே இருக்காது. உர்வா(ரலி) என்ற நபித்தோழர், நபிகளாரின் மனைவியரிடத்தில் உணவு இல்லாமல் எப்படி வாழ்கிறீர்கள்? என்று வினவியபோது, எங்களுக்குப் பேரீத்தம் பழமும், தண்ணீருமே உணவு என்று பதிலளித்தார்கள். தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்குத் தேவையான உணவு அவர்களது வீட்டில் சில நேரங்களில் மட்டுமே இருக்கும்.

ஒருமுறை ஆயிஷா(ரலி) அவர்களைக் காண வந்த ஒரு அன்சாரிப் பெண்மணி, நபிகளாரின் படுக்கை மெத்தை துணிகளைக் கொண்டு செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து விட்டு, தனது இல்லத்திற்குச் சென்று உல்லன் படுக்கை ஒன்றைக்

கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனார்கள். 'இது என்ன ஆயிஷா' என்று இல்லம் திரும்பிய நபிகளார் கேட்டபோது 'இறைவனின் தூதரே, ஒரு அன்ஸாரிப் பெண் இங்கு வந்தபோது தங்களது படுக்கையைப் பார்த்து விட்டு இதனைக் கொண்டு வந்தார்' என்று கூறினார்கள். 'அதனை உடனே திரும்பக் கொடுத்துவிடு' என நபிகளார் ஆயிஷா(ரலி) யிடம் கூறினார்கள். ஆனால் ஆயிஷா, அதனைத் திரும்பக் கொடுக்கவில்லை. அது தனது இல்லத்தில் இருப்பது நல்லது என்று கருதினார்கள். இது குறித்து நபிகளார் ஆயிஷா(ரலி)விடம் ஓ! ஆயிஷா நான் விரும்பியிருந்தால் இறைவன் எனக்கு மலையளவு தங்கமும், வெள்ளியும் தந்திருப்பான்' என்று கூறினார்கள்.

ஒரு நாள் நபிகளார் ஒரு சுரசுரப்பான பாயின் மீது படுத்திருந்தார்கள். அந்தப் பாயின் அடையாளங்கள் நபிகளாரின் உடலில் பதிந்திருப்பதைக் கண்ணுற்ற தோழர் ஒருவர் நீங்கள் அனுமதித்தால் உங்களுக்கு ஒரு மென்மையான படுக்கையைக் கொண்டு வருகிறேன் என்று கூறினார். அதற்குப் பதிலளித்த நபிகளார் 'இந்த உலகத்தில் எனக்கு என்ன தேவை இருக்கிறது? சுட்டெரிக்கும் மதிய நேரத்தில் ஒரு மரத்தின் நிழலில் சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு பின் தனது பயணத்தினைத் தொடரும் ஒரு பயணியைப் போன்றவன் நான் என்று கூறினார்கள்.

## மென்மையான குணம்

வீட்டு வேலைகளில் நபிகளார் தனக்குப் பெரிதும் உதவிகரமாக இருந்ததாக ஆயிஷா(ரலி) அவர்கள் குறிப்பிட் டார்கள். தங்களது துணிகளைத் தைப்பது, காலணியைச் சரி செய்வது, ஆடுகளிலிருந்து பால் கறப்பது, கிழிந்த உடைகளையும், தோல் பைகளையும் தைப்பது என அனைத்து வேலைகளையும் அவர்கள் செய்வார்கள். சுமை தூக்குவார்கள் வீட்டு விலங்குகளுக்கு உணவளிப்பார்கள். வேலைக்காரன் இருந்தால், அவனுக்கு உதவி செய்து வேலையைப் பகிர்ந்து கொள்வார்கள். சந்தையிலிருந்து பொருட்களை அவர்களே

வாங்கி அதனைத் துணிப்பையில் வைத்துக் கொண்டு வருவார்கள். வீட்டில் இருக்கும் போது நபிகளார் நீக்குப் போக்குடனும், சிரித்த முகத்துடனும் நேசமாக இருப்பார்கள்' என ஆயிஷா(ரலி) கூறினார்கள். உண்மையில் நபிகளாரைப் போல வேறு யாரும் அந்த அளவுக்கு பிரியமாக இருக்க மாட்டார்கள். பயணம் செய்வதற்குக் குதிரையையே பயன்படுத்துவார்கள். குதிரையின் கண்களையும், மூக்கையும், வாயையும் தங்களது கைகளைக் கொண்டே சுத்தம் செய்வார்கள்.

## தனிச்சலுகை இல்லை

ஒரு பெரிய தலைவர் தொண்டர்களுக்கு முன்னால் செல்வதைப் போல நபிகளார் ஒரு போதும் முன்னால் நடந்து செல்லமாட்டார்கள். வேலைக்காரர்கள், குழந்தைகள் என யாராக இருந்தாலும் அவர்களை முன்னால் செல்லவிட்டுப் பின் தொடர் வார்கள். கூட்டங்களில் தனக்கென ஒரு இடம் ஒதுக்கி வைக்கப் படுவதை விரும்பமாட்டார்கள். எங்கு காலியிடம் இருக்கிதோ அங்கு போய் உட்கார்ந்து கொள்வார்கள். நபிகளார் 'நானும் உங்களைப் போல் ஒரு மனிதனே. நான் உங்களைப் போலவே உணவுண்கிறேன். உங்களைப் போலவே களைப்பு ஏற்பட்டால் உட்கார்ந்து விடுகிறேன்' என்று கூறினார்கள். மக்கள் தன் முன்னால் தலை தாழ்ந்து நிற்பதையோ, தான் வரும்போது எழுந்து நிற்பதையோ நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் விரும்பவில்லை. தான் வந்தபோது மரியாதை நிமித்தமாக சிலர் எழுந்து நின்றதைக் கண்ட நபிகளார், அது வெளிநாட்டவரின் பண்பாடு என அவர்களைத் கடிந்து கொண்டார்கள். எந்த விதமான ஒரு சிறப்புச் சலுகையோ, அல்லது அந்தஸ்தோ பெற நபிகளார் விரும்பவில்லை.

> மேலும் ரஹ்மானின் (உண்மையான) அடியார்கள் எத்தகையவர்களெனில் அவர்கள் பூமியில் பணிவோடு நடப்பார்கள். அறிவீனர்கள் அவர்களுடன் முறைகேடாக உரையாடினால் 'உங்களுக்கு ஸலாம்

(சாந்தி) உண்டாகட்டும்' என்று கூறிவிடுவார்கள். (குர்ஆன் 25:63)

## பாகுபாடு இல்லை

ஒரு முறை பயணத்தின் போது, நபிகளார் தனது தோழர்களை ஆடு ஒன்றினை அறுத்து உணவு சமைத்திடும்படி கேட்டுக் கொண்டார்கள். ஒருவர் ஆட்டை அறுக்கவும், ஒருவர் அதன் தோலை உரிக்கவும், ஒருவர் அதனை சமைக்கவும் முன் வந்தார்கள். நபிகளார் 'நான் விறகு பொறுக்கி வருவேன்' என்றார்கள். இதனை ஏற்காத தோழர்கள் இறைவனின் தூதரே! அனைத்து வேலைகளையும் நாங்களே செய்து கொள்கிறோம்' என்றார்கள். இதற்குப் பதிலளித்த நபிகளார் 'எனக்குத் தெரியும். நீங்கள் அனைத்து வேலைகளையும் செய்து விடுவீர்கள் என்று' ஆனால் அது ஒரு பாரபட்சமான செயலாகி விடாதா? நான் அதனை ஏற்கவில்லை. உங்களை விட அல்லாஹ்வின் பணியாளராகிய நான் பெரியவன் என்று உரிமை கொண்டாடுவதை இறைவன் விரும்பவில்லை' என்று கூறினார்கள். நபிகளார் அந்த அளவுக்கு பணிவாக இருந்தார்கள். 'இறைவன் அறியச் சொல்கிறேன். நான் இறைவனின் தூதராக இருந்தபோதிலும், நான் எப்படியாவேன், நீங்கள் எப்படி ஆவீர்கள் என்று எனக்கு உண்மையிலேயே தெரியாது' என்று நபிகளார் நவின்றார்கள்.

## பொறுமை

ஒரு தடைவை நபிகளார், சானா என்பவரது மகனான ஸைது என்ற யூதரிடம் சிறிது பணம் கடன் வாங்கியிருந்தார்கள். திரும்பத் தருவதாகச் சொல்லப்பட்ட தேதிக்கு முன்னரே அந்த யூதர் நபிகளாரிடம் வந்து கடனைத் திரும்பக் கேட்டான். அவன் நபிகளாரின் சட்டையைப் பிடித்துக் கொண்டு 'முஹம்மதே நீர் ஏன் என் கடனைத் திருப்பித்தரவில்லை' என்று கடுமையாகக் கேட்டான். எனக்குத் தெரிந்த வரையில் முத்தலிப்பின் வாரிசுகள்

கடனைத் திருப்பித்தரமாட்டார்கள் என்றும் அவன் கூறினான். ஹழ்ரத் உமர்(ரலி) அப்போது நபிகளாருடன் இருந்தார்கள். மிகவும் கோபமுற்ற அவர்கள் அந்த யூதனைத் திட்டி அடிக்க முயன்றார்கள். ஆனால் நபிகளார் அமைதியாக இருந்தார்கள். கடனைத் திருப்பிக் கொடுக்க இன்னும் மூன்று நாட்கள் அவகாசம் உள்ளன. என அவனிடம் சொன்னார்கள். பின்னர் ஹழ்ரத் உமர்(ரலி) அவர்களை நோக்கி நபிகளார் நானும் ஸைதும் உங்களிடமிருந்து நல்ல நடத்தையை எதிர்பார்க்கிறோம். கடனைத் திருப்பிச் செலுத்துவது நல்லது என்று நீங்கள் என்னிடம் கூறியிருக்க வேண்டும். ஒழுங்கான முறையில் கேட்கவேண்டு மென்று அவனிடம் சொல்லியிருக்க வேண்டும் அவனை அழைத்துச் சென்று கடனைத் திரும்பக் கொடுங்கள். அவனைப் பயமுறுத்தியதற்காக 40கிலோ பேரீத்தம் பழம் அவனுக்கு அதிகமாகக் கொடுங்கள்' என்று கூறினார்கள். இஸ்லாமிய பேரரசின் தலைவராக நபிகளார் இருந்த போதிலும் சகிப்புத் தன்மையுடனும், பொறுமையுடனும் இந்த விஷயத்தில் நடந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புன்முறுவல் – சுமூகம்

நபிகளார் பிற மக்களுடன் சரிநிகர் சமானமாக வாழ்ந்தார்கள். அவர்களது பண்பை யாரும் மாற்றிட முடியாது. ஒரு தடவை ஒரு பாலைவனவாசி நபிகளாரிடம் வந்து அவர்கள் அணிந்திருந்த மேலங்கியை வேகமாக இழுத்தான். அதன் காரணமாக நபிகளாரின் கழுத்தில் ஒரு சிறிய வடு ஏற்பட்டது. 'முஹம்மதே இரண்டு ஒட்டகைச்சுமை அளவுக்கு எனக்கு பொருட்களைக் கொடுங்கள். உங்களிடம் உள்ள பணம் உங்களு டையதல்ல உங்களது தகப்பனார்களுக்குச் சொந்தமானதுமல்ல. அனைத்துமே இறைவனுக்குச் சொந்தமானவை' என்று கூறினான். அவனிடம் நபிகளார் நான் இறைவனின் பணியாள்' என்று சொல்லிவிட்டு நீ நடந்து கொண்டமுறை பற்றி அச்சமடையவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு அவன் 'இல்லை' என்று கூறவே நபிகளார் ஏன்? என்று கேட்டார்கள்.

அதற்கு அவன் 'நீங்கள் தீய செயலுக்குத் தீய செயலைப் பகரமாகத் தர மாட்டீர்கள் என எனக்குத் தெரியும்' என்று சொன்னான். இதனைக் கேட்டு புன்முறுவல் பூத்த நபிகளார், அவனுக்கு ஒரு ஒட்டகைச்சுமை அளவுக்கு வால் கோதுமையும் (பார்லி) இன்னொரு ஒட்டகைச்சுமை அளவுக்கு பேரீத்தம் பழமும் கொடுத்து அனுப்பினார்கள்.

## கருணை

ஒரு கறுப்புப் பெண் மதீனா பள்ளிவாசலில் துப்புரவு பணியாளராக வேலை பார்த்து வந்தார். ஒரு நாள் அவள் வராததைக் கண்ணுற்ற நபிகளார், அது பற்றி விசாரித்தபோது அவள் இறந்துபோய்விட்டதாக தகவல் கிடைத்தது. இது பற்றி எனக்கு நீங்கள் ஏன் முன்னரே தகவல் தெரிவிக்கவில்லை என்று அங்கிருந்தவர்களிடம் கடிந்து கொண்ட நபிகளார் தனது தோழர்களுடன் அவளது அடக்க ஸ்தலத்திற்குச் சென்று அதன் முன் நின்று கொண்டு அவளுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்.

## அமைதி – கண்ணியம்

எந்தப் பணியைச் செய்தாலும், அங்கு அமைதியும் கண்ணியமும் நிலவிடவேண்டும். இரைச்சலோ குழப்பமோ இருக்கக் கூடாது என நபிகளார் விரும்பினார்கள். தம்முடைய தோழர்கள் பள்ளிவாசலுக்கு வேகமாகச் செல்வதையும் அல்லது ஓடிச் செல்வதையும் நபிகளார் தடை செய்தார்கள். அமைதியும், கண்ணியமும் உங்களிடம் இருக்க வேண்டும் என நபிகளார் அடிக்கடி சொல்வார்கள். ஒருமுறை ஹஜ்பயணத்தின் போது சப்தமும், குழப்பமும் நிலவியதைக் கண்ணுற்ற நபிகளார் அமைதியை ஏற்படுத்திய பிறகு 'அளவுக்கு மீறிய அவசரம் புண்ணியச் செயல் அல்ல' என்று கூறினார்கள்.

## மனித சமூகத்தின் மீட்சி

வெற்றியாளர்களுக்குக் கர்வமும், பழிவாங்கும் எண்ணமும் தோன்றுவது இயல்பு. ஹிஜ்ரி எட்டாம் ஆண்டில் நபிகளார்

மக்காவை வெற்றி கொண்ட போது அவர்கட்கு இந்த இரு உணர்வுகளுமே தோன்றவில்லை. இறைவனின் தூதருக்குக் கிடைத்த வெற்றியாக அது அமைந்திருந்தது. இப்னு இஸ்ஹாக் என்பாரின் கூற்றுப்படி, நபிகளார் மக்கா நகரில் நுழைந்தபோது அவர்களது தலை தாழ்ந்திருந்து. அவர்களது தாடி ஒட்டகத்தின் சேணத்தைத் தொட்டுக் கொண்டிருந்ததை மக்கள் பார்த்தார்கள். வெற்றி பெற்ற நேரத்திலும் நபிகளார் பணிவாக இருந்தார்கள். கஅபாவின் கதவருகில் நின்று கொண்டு உரையாற்றிய நபிகளார் தனது உரையின் போது, இறைவனுக்குப் பணி புரிந்ததைத் தவிர வேறு உயர்வான எதையும் நான் செய்திட வில்லை' அவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டான். தனது அடிமைக்கு உதவி செய்து காப்பாற்றி விட்டான்' என்றும் அவனே எதிரிகளை தாழ்வடையச் செய்து விட்டான்' என்று கூறினார்கள். வெற்றிக்கு தான் காரணம் இல்லை என்றும், இறைவனே அதற்குக் காரணம் என்று நபிகளார் இதன் மூலம் அறிவித்தார்கள்.

## நான் இறைவனின் பணியாளர்

ஒரு முறை ஒரு தோழர், நீங்கள் விரும்பியது அல்லாஹ் விரும்பியது ஆகும் என்று கூறியபோது, நபிகளாரின் முகம் சினத்தால் மாறியது. மிகவும் உணர்ச்சி வயப்பட்டவர்களாக என்னை இறைவனுடன் இணையாக்கிவிடப் பார்க்கிறீர்களா? என்று அவரிடம் கேட்டார்கள். 'இறைவன் மட்டுமே விரும்புகிறான்' என்று கூறுங்கள் என அவருக்கு அறிவுரை வழங்கினார்கள். இது அல்லாஹ் விரும்பியது மட்டுமே என்று கூறுங்கள். நபிகளார் ஒரு முறை 'கிறிஸ்துவர்கள் இயேசுவைப் புகழ்வது போல் நீங்கள் என்னை அளவுக்கதிகமாகப் புகழாதீர்கள்' என்று கூறினார்கள். நீங்கள் என்னை ஒரு அடிமை என்றும், இறைவனின் நபி என்றும் கூறுங்கள் என்றார்கள் (ஒரு போதும் என்னை இறைவனின் மைந்தன் என்றோ, தெய்வீக குணங்கள் உள்ளவர் என்றோ கூறாதீர்கள்) தங்களது நபிமார்களின் கப்ரை (அடக்கப்பட்ட இடத்தை) அவர்கள் வணக்கஸ்தலமாக்கி நாசமடைந்து விட்டார்கள். நீங்கள் என்னுடைய கப்ரை வணங்கும் இடமாக மாற்றி விடாதீர்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

# 14

# அகழி – துரோகம் – சூழ்ச்சி

மதீனா முஸ்லிம்களுக்குச் சிக்கல் அதிகரித்தது. உஹுதுப் போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பின்னடைவு, அருகில் வசித்து வந்த இனக்குழு மக்களிடையே முஸ்லிம்கள் பலவீனமாகி விட்டனர் என்ற உணர்வை ஏற்படுத்தியது. அவர்கள் மீது அவ்வப்போது சிறு சிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மதீனாவின் மீது மீண்டும் ஒரு திட்டமிட்ட தாக்குதல் நடத்தப்படலாம் என தமது தோழர்களை எச்சரித்த நபிகளார் *100* அல்லது *150* பேர்கள் கொண்ட குழுக்களை இனக் குழுத்தலைவர்களிடம் அனுப்பி அவர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சியிலும், ஆக்ரமிப்பைத் தடுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள்.

ஹிஜ்ரியின் நான்காவது ஆண்டில் (கி.பி.*626*) சிறு சிறு உள்ளூர் மோதல்கள் ஏற்பட்டன. இருந்த போதிலும் இவை அதிகாரச் சம நிலையைப் பேணிட ஓரளவு உதவி புரிந்தன. மக்கா குறைஷியர்களுக்கும், மதீனா முஸ்லிம்களுக்குமிடையே இது ஒரு சதுரங்கப் போட்டியாக இருந்தது. இரு தரப்பினரும் ஒரு முழு அளவிலான மோதல் ஏற்படும் என அறிந்தே இருந்தனர். அரேபிய தீபகற்பத்திலிருந்து முஸ்லிம்களை அழித்திட வேண்டுமென்று விரும்பிய மக்கா குறைஷி யர்கள், அதற்காக தங்களுக்கு அருகிலுள்ள இனக்குழு மக்களிடம் பல உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்தனர். கடற்கரை மார்க்கமாக வடக்கே சிரியாவிற்கும், ஈராக்கிற்கும் செல்லும் அனைத்து முக்கிய வர்த்தக வழிகளும் மதீனா முஸ்லிம்களின் கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் இருந்ததால் குறைஷியர்களுக்கு நிலைமை

சிரமமாகவே இருந்தது. எனவே விரைவான அதிரடி நடவடிக்கைகள் மேற்கொண்டு வழித் தடங்களை விடுவித்து தங்களது வர்த்தகக் கூட்டங்கள் சிரியாவிற்கும் ஈராக்கிற்கும் தங்கு தடையின்றிச் செல்ல அவர்கள் முடிவு செய்தனர்.

## கூட்டணியினர்

அரேபிய தீபகற்பத்தில் இருந்த இஸ்லாத்திற்கு எதிரான இனக்குழுவினரும், மக்கா குறைஷியர்களும் முஸ்லிம்களின் மீது பெரும் அளவிலான ஒரு தாக்குதலை நிகழ்த்தத் திட்டமிட்டனர். இதற்காக பல்வேறு இனக் குழுவினரையும் சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர். பனூநஸீர் இனக் குழுவின் தலைவரான 'ஹீயய்' என்பான் கைபரிலிருந்து யூதத் தலைவர்களை உடன் அழைத்துக் கொண்டு மக்கா நகர் வந்து குறைஷித்தலைவர்களுடன் பேசி ஒரு உடன்பாடு கண்டான். இந்த உடன்பாட்டில் பிற இனக் குழுக்களான ஆஸாத், பனூகத்பான், பனூசுலையம் ஆகியவையும் சேர்ந்து கொண்டன. அனைவரின் நோக்கமும் இஸ்லாத்தையும் நபிகளாரையும் ஒழிப்பது தான்.

குறைஷியர்களும், அவரது கூட்டணியினரும் இணைந்த அந்தப்படை அளவில் மிகப் பெரியதாக இருந்தது. முஸ்லிம்படை இதற்கு எந்த விதத்திலும் ஈடு கொடுக்கும் அளவில் இல்லை. தெற்கிலிருந்து வந்த குறைஷி கூட்டணிப்படையில் நான்காயிரத்திற்கும் அதிகமான வீரர்கள் இருந்தனர். கிழக்கிலிருந்து (நஜ்த்) வந்த இன்னொரு முற்றிலும் இனக் குழுவினரைக் கொண்ட படையில் ஆறாயிரத்திற்கும் அதிகமானோர் இருந்தனர். பத்தாயிரம் பேர்கள் கொண்ட இந்தப் பெரும்படை மதீனாவை இரண்டு திசைகளிலிருந்தும் தாக்கி முற்றுகையிடத் தீர்மானித்தது. இந்நிலையில் மதீனா முஸ்லிம்களின் பாதுகாப்பு பெரும் கேள்விக்குறியாகியது. இப்படி குறைஷியர்கள் போர் ஆயத்தம் செய்து கொண்டிருந்த நேரத்தில், நபிகளாரின் சிறிய தந்தையான அப்பாஸ் அவர்கள் மக்காவிலிருந்து ஒரு ரகசிய தூதுக்குழுவினரை அனுப்பி,

எதிரிகளின் போர்த்திட்டம் பற்றி நபிகளாரிடம் தெரிவிக்கச் சொன்னார். அந்த தூதுக்குழுவினர் வந்து செய்தியினைத் தெரிவித்த போது, முஸ்லிம்களுக்கு தங்களது திட்டங்களை வகுத்துக் கொள்ள ஒரு மாதகால அவகாசமே இருந்தது. மூன்றாயிரத்திற்கு மேல் வீரர்களைத் திரட்ட இயலாது என்றே முஸ்லிம்கள் கருதினர் (எதிரிகளின் படையில் மூன்றில் ஒரு பங்கு)

## புதிய கண்டுபிடிப்பும் வெளிநாட்டுப் போர்த்தந்திரங்களும்

இஸ்லாமிய மரபின் அடிப்படையில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தனது தோழர்களை அழைத்து ஆலோசனையில் ஈடுபட்டார்கள். சிலர் பத்ருப் போரின் போது செய்தது போல் மதீனாவிற்கு வெளியே சென்று எதிரிப் படையைச் சந்திக்க வேண்டுமென்றனர். மற்றவர்கள் உஹுதுப் போரில் பெற்ற பாடத்தை மனதில் கொண்டு நகருக்குள் இருந்து கொண்டு எதிரியைச் சந்தித்தால் தான் வெற்றி கிட்டும் என கருத்துத் தெரிவித்தனர். ஆலோசனைக் கூட்டத்தில் சல்மான் (சல்மான் அல் பார்சி) என்ற பெர்சிய நாட்டுத் தோழரும் இருந்தார். அவரது வரலாறு சுவையானது. இஸ்லாத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவர், நபிகளாருக்கு நெருக்கமாக இருந்து வாழ்வதற்காக மக்கா நகர் வந்தார். அவர் நபிகளார் நடத்திய கூட்டங்களில் கலந்து கொண்டு அவர்கள் எடுத்த முடிவுகளுக்குத் துணை நின்றார். இக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய போது அவர் முற்றிலும் இதுவரை அரேபியர்கள் அறிந்திராத ஒரு புதிய திட்டத்தைக் கூறினார். ' ஓ இறைவனின் தூதரே! எங்கள் பெர்சியா நாட்டில் எதிரிப்படையினரால் தரைப்படைத் தாக்குதல் நிகழ்த்தப்படும் போது நாங்கள் நகரைச் சுற்றி ஒரு பெரிய அகழியை அமைத்து விடுவோம். அது போல நாமும் ஒரு அகழியைத் தோண்டுவோம்" என்றார். இந்த யோசனையை அங்கிருந்த தோழர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு அதனைச் செயல்படுத்த வேண்டுமெனக்கோரினர். இன்னும் ஒரு மாத

காலமே இருந்ததால் அவர்கள் விரைந்து செயல்பட்டு ஆழமான அகலமான அகழி ஒன்றைத் தோண்டினர். எதிரிகளின் குதிரைகளால் அந்த அகழியைத் தாண்ட முடியாது. அகழியில் விழுந்தவர்கள் யாரும் வெளியே வர முடியாத அளவுக்கு அது மிகவும் ஆழமாக இருந்தது.

இது எதிரிகளுடன் நடைபெறவிருக்கும் மூன்றாவது போராகும். இந்த மூன்றாவது போரில் ஒரு புதிய போர்த் தந்திரத்தை நபிகளார் அரங்கேற்றவிருந்தார்கள். பத்ருப் போரின் போது கிணறுகளைச் சுற்றி வீரர்களை நிறுத்தினார்கள். உஹுதுப் போரின் போது குன்றுகளின் மேல் வீரர்களை நிறுத்தினார்கள். ஆனால் இந்தப் போரில் கடைப்பிடித்த தந்திரம் முற்றிலும் புதுமையானது. எதிரிகளை தொலை தூரத்தில் நிற்க வைத்து காத்திருக்கச் செய்வதன் மூலம் அவர்களது தாக்குதலை சந்திக்க முடியும் என்றும் முற்றுகை பல நாட்கள் நீடித்தாலும் நகரினுள் உள்ளவர்கள் பல நாட்களுக்குத் தாக்குப்பிடித்து நிற்கமுடியும் என்றும் நபிகளார் நம்பினார்கள். எல்லாச் சூழ்நிலைகளையும் எதிர் கொள்வது எப்படி என்பது பற்றி நபிகளார் தனது தோழர்களுக்குக் கற்றுத் தந்த அறிவுப்பூர்வமான பாடமாக இது அமைந்திருந்தது. நபிகளாரும் அவர்களது தோழர்களும் சல்மான் பார்சி கூறிய வெளிநாட்டுப் போர்த்தந்திர முறையை ஏற்றுக் கொண்டு மதீனாவின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதனைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கவில்லை. நுண்ணறிவு, நாட்டின் நலன், ஆரோக்கியமான மனித ஆளுமை ஆகியன அவர்களது சிந்தனையில் கலந்திருந்தன. நபிகளார் உறுதியாகச் சொன்னார்கள். "ஞானம் நம்பிக்கையாளர்கள் இழந்திட்ட சொத்து. எங்கு கண்டாலும் அதைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்."

## அகழி

மதீனா மூன்று பக்கங்களிலும் வீடுகளாலும், சோலை களாலும் சூழப்பட்டிருந்தது. ஒரு பக்கம் மட்டுமே திறந்த

வெளியாக இருந்தது. அகழியைத் தோண்டிட 3000 பேரை நபிகளார் நியமித்து இருந்தார்கள். ஒவ்வொருவரும் 10 கஜ தூரத்திற்கு குழி தோண்ட வேண்டும் என்பது நிபந்தனை. அகழியின் நீளம் 6 கி.மீ. அகலம் 10 கஜம் ஆழம் 5 கஜம் ஆகும். மூன்று லட்சத்து எட்டாயிரம் சதுர கஜம் கொண்ட அகழி மூன்று வாரத்தில் தோண்டி முடிக்கப்பட்டது. வரலாற்றில் இது ஒரு பெரும் சாதனையாகும். தோண்டுவதற்குத் தேவைப்பட்ட உபகரணங்கள் முஸ்லிம்களிடம் போதுமான அளவில் இல்லை. கோடாரி, கூடைகள் போன்ற உபகரணங்கள் பனூகுரைளா இனக்குழுவினரிடமிருந்து கடனாகப் பெறப்பட்டன. தோழர்கள் காலையிலிருந்து மாலை வரை அகழி தோண்டும் பணியில் ஈடுபட்டனர்.

நானும் ஒரு தொழிலாளி' என்றுரைத்த நபிகளார் மற்றத் தோழர்களுடன் சேர்ந்து குழி வெட்டும் பணியில் ஈடுபட்டார்கள். மண் கூடைகளைத் தங்களது தோள்களில் சுமந்து கொண்டு போனார்கள். ஒரு பெரிய பாறையை உடைத்திடும் போது ஏற்பட்ட சிரமங்கள் பற்றி சல்மான் பார்சி கூறியபோது அவருக்கு நபிகளார் உதவிடச் சென்றார்கள். கோடாரியை தாமே எடுத்துப் பாறையின் மேல் பலமாக அடித்தார்கள். பாறை இரண்டாகப் பிளந்தது. அகழி தோண்டும் பணி மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது, நபிகளார் தங்களுடைய பங்களிப்பைச் செய்திட எப்போதும் தயாராகவே இருந்தார்கள். நபிகளாரின் பணியாளராக இருந்த அனஸ்(ரலி) இது பற்றி பின்பு ஒரு தடவை கூறியதாவது:– 'நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு நான் செய்த பணிகளை விட எனக்கு அவர்கள் செய்த பணிகளே அதிகம். என்னை ஒரு போதும் அவர்கள் கோபித்துக் கொண்டதில்லை. என்னிடம் ஒரு போதும் கடுமையாக நடந்து கொண்டதில்லை'.

மற்றவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது நபிகளார் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். வேலைகளில் தாங்களும் பங்கெடுத்துக் கொள்வார்கள். சில சமயங்களில் தோழர்கள் இறைவனை வேண்டிப் பாடல்களைப்

பாடுவார்கள். அதில் அனைவரும் சேர்ந்து கொள்வார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில், அனைவரும் ஒருவர் என்ற சகோதரத்துவ உணர்வு ஏற்பட்டு அதன் மூலம் தங்களது ஒட்டு மொத்த உணர்வுகளையும், விருப்பங்களையும் நம்பிக்கை களையும் வெளிப்படுத்துவார்கள். இவ்வாறாக, தோழர்களின் சக்தியை ஒரு முகப்படுத்தும் முயற்சியில் நபிகளார் ஈடுபட்ட போது, சமூகத்தின் ஒற்றுமையையும், ஓரிறைக் கொள்கையின் மீது கொள்ள வேண்டிய ஆழ்ந்த விசுவாசத்தையும், தோழர்களின் உணர்வுகளையும், அவர்களின் உணர்வுப்பூர்வமான பாடல்களில் வெளிப்படும் கவி நயத்தையும் நெறிப்படுத்துவார்கள். இறைவனின் பணியில் ஈடுபட்டுள்ள போதிலும் நபிகளார் தோழர்களுடன் இணைந்து அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொண்டு அவர்களில் ஒருவராக வாழ்ந்தார்கள். அகழி தோண்டும் பணி வெற்றிகரமாக முடிவடைந்தது. எதிரிக் குதிரைப் படையினர் அதன் எந்தப் பகுதியிலும் கடந்து வர முடியாத அளவில் அது அமைந்திருந்தது. முஸ்லிம் விற்படையினர் எந்த விதமான சிரமமுமின்றி எதிரிகளின் எந்த விதமாக தாக்குதலையும் தடுத்து நிறுத்திடும் வகையிலும் அது அமைந்திருந்தது.

## அற்புதமான படைத் தளபதி

அகழி போருக்கான ஆயத்தப் பணிகள் நபிகளாரின் போர்த் தந்திரங்களுக்குக் கட்டியம் கூறும் வகையில் அமைந்திருந்தன. போர் துவங்குவதற்கு முன்னர் நபிகளார் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். நபிகளார் ஒரு குதிரையின் மீதேறி சில தோழர்களை உடன் அழைத்துக் கொண்டு நகரை வலம் வந்து எந்தந்தப் பகுதிகள் பலவீனமாக உள்ளன, எங்கு அகழி தோண்டப் பட வேண்டும் என்பன பற்றி ஆய்வு மேற்கொண்டர்கள். ஒரு பொறியாளரைப் போல் நபிகளார் செயல்பட்டார்கள். எதிரிகளின் தாக்குதல் துவங்கும் முன்னரே அனைத்துப் பணிகளும் முடிவடைய வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினார்கள்.

அகழி தோண்டுவது அரேபிய தீபகற்பத்திலேயே ஒரு புதிய

போர்த்தந்திர முறை என நபிகளார் நன்றாகத் தெரிந்திருந்த போதிலும், அது பற்றியத் தகவல்கள் குறைஷியர்களுக்கும், அவர்களது ஆதரவுப் படையினருக்கும் தெரிந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். எதிரிகளுக்கு அது ஒரு புதிராக இருக்க வேண்டும் என விரும்பிய நபிகளார், இந்தச் செய்தி கசிந்து விடக்கூடாது என்பதற்காக மதீனாவிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப் படுத்தினார்கள். அலீ(ரலி) அவர்களையும் வேறு சில தோழர்களையும் மதீனாவின் எல்லையில் 24மணி நேரமும் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தார்கள். எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க கண்காணிப்புக் கோபுரங்களை நிறுவுமாறு ஆணையிட்டார்கள். நபிகளாரின் உத்தரவுப்படி, தோழர்கள் மதீனாவிற்கு வெளியில் இருந்த பண்ணை–களிலிருந்தும், பழத்தோட்டங்களிலிருந்தும் உணவுப் பொருட்களை வாங்கி கையிருப்பு வைத்துக் கொண்டார்கள். உணவிற்கு எதிரிகள் தங்களின் கையிருப்பை மட்டுமே நம்பி இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை. எதிரிகள் நெருங்கிவரும் போது, முஸ்லிம்கள் படையில் மூவாயிரம் பேர்கள் மட்டுமே இருந்தனர். அவர்கள் மதீனாவில் அகழிக்கு அப்பால் காத்திருந்தார்கள்.

கான்ஸ்டன்டைன் விர்ஜில் கோர்கி என்ற ரோமானிய எழுத்தாளர் தன்னுடைய 'முஹம்மது' புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

ஜெர்மெனிக்கு எதிரான போரில் சோவியத் படைகள் இது போன்ற முறையை கடைப்பிடித்தனர். விளைந்த உணவு தானியங்களையோ அல்லது சேதமடைந்த தானியங்களையோ பண்ணைகளிலிருந்தும், பழத்தோட்டங்களிலிருந்து சேகரித்து அவற்றை முன்னேறிவரும் ஜெர்மன் படைகள் வரும் வழியில் போட்டு வைத்திருந்தனர். அதனை அவர்கள் பயன்படுத்தினாலும் சரி, அல்லது நாசப்படுத்தினாலும் சரி என்ற எண்ணத்திலேயே இவ்வாறு செய்தனர். இது இருபதாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட

ஒரு தந்திரமான செயல் திட்டம். ஆனால் நபிகளார் ஏழாம் நூற்றாண்டிலேயே இதனை நடைமுறைப் படுத்தினார்கள்.' குறைஷியப் படைகள் மதீனாவின் எல்லைக்கு வந்த போது அவர்களுக்குப் பெரும் ஆச்சரியமும், அதிர்ச்சியும் காத்திருந்தது. அகழி தோண்டி அதன் மூலம் நேரடியான மோதலைத் தவிர்த்த ஒரு எதிரியை அவர்கள் இதுவரை சந்தித்ததில்லை. அது போலவே உணவுப் பொருட்கள் தங்களுக்குக் கிடைக்காமல் செய்த எதிரிகளையும் அவர்கள் சந்தித்தது இல்லை. எனவே குறைஷியர்களின் படை வீரர்களுக்கும், குதிரைகள், ஒட்டகங்கள் ஆகிய வற்றுக்கும் கடும் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டது.

## முற்றுகை

மதீனாவின் கிழக்கிலும், தெற்கிலும் 10,000 வீரர்கள், 600 குதிரைகள், சில ஒட்டகங்கள் கொண்ட குறைஷி மற்றும் அவர்களின் ஆதரவுப் படைகள் வந்து நிலை கொண்டன. சோலைகளில் உள்ள உணவு தானியங்கள் அனைத்தும் ஏற்கனவே அறுவடை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்த குறைஷியர்கள் ஏமாற்றமும், வருத்தமும் அடைந்தனர்.

தாங்கள் கொண்டு வந்த தீவனப் பொருட்கள் தவிர, குதிரைகளுக்கு வேறு உணவுப் பொருட்கள் எதுவும் அங்கு இல்லை. எனவே எவ்வளவு சீக்கிரம் முஸ்லிம்களைத் தாக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அதனைச் செய்து முடித்திட வேண்டிய கட்டாயம் அவர்கட்கு ஏற்பட்டது. அகழியினை கண்ணுற்ற அவர்கள், மதீனாவை முற்றுகையிட்டு அனைத்துப் பக்கங்களிலிருந்தும் தாக்குதல் நடத்த வேண்டுமென்ற தங்களது திட்டத்தை செயல்படுத்த முடியாது என உணர்ந்து கொண்டனர். அரேபியர்களுக்கு அகழி இதுவரை அறிந்திராத ஒரு புதிய போர்த்தந்திரமாக இருந்தது. எனவே குறைஷியர்கள் வேறு வழிகளில் முஸ்லிம்களைத் தோற்கடிக்கத் திட்டங்கள் தீட்ட வேண்டியதிருந்தது. தங்களுக்குள் அவர்கள் ஆலோசனை செய்து கொண்டார்கள். பெரும்பாலான படைவீரர்களை நகரின்

வடக்குப் பகுதியில் குவித்து அங்கிருந்து தாக்குதல்களைத் தொடரத் திட்டமிட்டனர். இன்னொரு சிறிய படை பாதுகாப்பு அதிகமற்ற தெற்குப்பகுதி வழியாக அகழியைக் கடக்க வேண்டுமெனத் திட்டமிட்டனர்.

## துரோகம்

பனூகுரைளா என்ற யூதக் கூட்டத்தினர் அந்தப் பகுதியில் தான் வசித்து வந்தனர். அவர்கள் உதவி செய்வதாக நபிகளாரிடம் ஏற்கனவே உடன்பாடு ஒன்று செய்திருந்தனர். எனினும் மதீனாவின் ஒற்றுமைக்கு அவர்கள் ஆதரவாக இல்லை. பனூநளீர் குழுவின் தலைவரான 'ஹுயை' பனூகுரைளா குழுவின் தலைவரான ஆஸாத் மகன் கஅப் என்பவரைச் சந்தித்து, நபிகளாருடன் செய்து கொண்ட உடன்பாட்டை முறித்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்க விரும்பினான். முதலில் ஹுயை யை வரவேற்க மறுத்த கஅப் பின்னர் சந்திக்க ஒப்புக் கொண்டான். அவனைச் சந்தித்த பனூநளீர் குழுவின் தலைவன், அவனுடன் பேசி, நம்பச் செய்து நபிகளாருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை முறிக்கச் செய்தான். இது முஸ்லிம்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது. அவர்களின் திட்டதைச் சீர்குலைத்தது. குறைஷியப் படைகள் மதீனாவிற்குள் நுழைந்து முஸ்லிம்களுக்கு பெருத்த உயிர்ச் சேதத்தையும், தோல்வியையும் ஏற்படுத்திட இது உதவும்.

இந்நிலையில் வடக்குப் பகுதியில் எதிரிகளின் நடமாட்டத்தைக் கவனித்த நபிகளார், ஏதோ ஒரு சூழ்ச்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கலாம் என உணர்ந்தார்கள். எனவே தெற்கிலுள்ள பனூகுரைளா குழுவினரின் நம்பகத் தன்மையைப் பரிசோதிக்க வேண்டுமென்று எண்ணினார்கள். இதற்கிடையில், பனூகுரைளாத் தலைவர், ஒரு தரப்பாக உடன்பாட்டை முறித்துக் கொண்டு, எதிரிகளுடன் சேர்ந்து விட்டதாக நபிகளாருக்குச் செய்தி சொல்லப்படுகிறது. இது உண்மையாக இருந்தால், முஸ்லிம் படையினரின் மன உறுதி குலைந்து, அவர்களின் வெற்றி

கேள்விக்குறியாகி விடுமென நபிகளார் கருதினார்கள். எனவே நபிகளார் இரண்டு வீரர்களை அனுப்பி, இந்தச் செய்தி உண்மைதானா என விசாரித்து அறிந்து வரும்படி சொன்னார்கள். செய்தி உண்மைதான் என்பதை விசாரித்து விட்டு வந்த வீரர்கள் உறுதி செய்தனர். உடனே நபிகளார் செயலில் இறங்கினார்கள். ஸைது(ரலி) அவர்களை 300 வீரர்களுடன் தெற்குப்பகுதிக்கு அனுப்பி எதிரிகளின் ஊடுருவலைத் தடுக்கும் படி உத்தரவிட்டார்கள். முற்றுகை, பொறுத்துக் கொள்ள இயலாத அளவிற்கு பல நாட்கள் நீடித்தது. முஸ்லிம்கள் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டியதாயிற்று. ஒரு நாளில் தாக்குதல் அதிகமாக இருந்தது. அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தாக்குதல்கள் வந்தன. முஸ்லிம்களால் லுஹர், அஸர், மஃரிப் தொழுகைகளைக் (மதியம், பிற்பகல், மாலை தொழுகைகள்) கூட நிறைவேற்ற இயலவில்லை. நபிகளார் சஞ்சலமடைந்தார்கள். முற்றுகை தோழர்களின் மன உறுதியைக் குலைப்பதாக இருந்தது. அப்போது இறங்கிய இறை வசனங்கள் அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்திருந்தன.

> பகைவர்கள் மேலிருந்தும், கீழிலிருந்தும் படையெடுத்து வந்த நேரத்தில் உங்கள் கண்கள் பீதியினால் மருண்டு விட்டன. இதயங்கள் தொண்டைகளை அடைத்துக் கொண்டன. மேலும் நீங்கள் அல்லாஹ்வைப் பற்றி விதவிதமான சந்தேகங்கள் கொள்ளத்தலைப் பட்டீர்கள். அந்த(க் கடினமான) நேரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் நன்கு சோதிக்கப்பட்டார்கள். மேலும் கடுமையாக அலைக்கழிக்கப்பட்டார்கள். (குர்ஆன் 33–10,11)

சிரமமான காலமாக அது இருந்தது. தனி நபர்கள் மற்றும் இனக்குழுக்களின் நேர்மையையும், நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்துவதாக அது அமைந்திருந்தது. பனூகுரைளா இனக்குழுவினரின் இரட்டை நிலைப்பாட்டை மட்டுமல்ல, சில

நயவஞ்சகர்களின் உண்மையான மனப்போக்கையும் அது வெளிப்படுத்தியது. அவர்கள் சரணடைய எண்ணினர்.

திருக்குர்ஆன் கூறுகிறது...

மேலும் அந்த நேரத்தை நினைவு கூருங்கள். 'அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நம்மிடம் செய்திருந்த வாக்குறுதிகள் யாவும் ஏமாற்று வேலையே தவிர வேறொன்றுமில்லை' என்று நயவஞ்சகர்களும், எவர்களின் உள்ளங்களில் பிணி இருந்ததோ அவர்களும் வெளிப்படையாகக் கூறிக் கொண்டிருந்தார்கள். (திருக்குர்ஆன் *33:12*)

அவர்களில் மற்றொரு பிரிவினர் 'எங்களது வீடுகள் ஆபத்திற்குள்ளாகி இருக்கின்றன' என்று கூறினார்கள். (*33:13*)

வேறு சிலர் போரிலிருந்து விலகி தங்களைப் பாதுகாத்துக் கொள்ள எண்ணினர். முஸ்லிம்களின் எதிர்ப்பு நீடிக்காது என்றும் அவர்கள் நம்பினர். ஆனால் பெரும்பாலான முஸ்லிம்கள் நபிகளாருக்கு விசுவாசமாக இருந்தனர். இந்தச் சிக்கலின் தொடர்பாக அப்போது அருளப்பட்ட இறை வசனங்கள் நம்பிக்கையின் நேர்மையையும், இறைவனின் மீதான உறுதிப்பாட்டையும் தெளிவுபடுத்தும் வண்ணம் அமைந் திருந்தன. இவை நபிகளாரை எச்சரிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது.

உண்மை யாதெனில், உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது. உங்களில் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்புகின்றவராகவும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுபவராகவும் இருக்கின்ற ஒவ்வொரு வருக்கும் (திருக்குர்ஆன் *33:21*)

போர்ச் சூழ்நிலையில், இந்த வசனங்கள் தனித்துவம் பெற்றவையாகத் திகழந்தன. இவை நபிகளாரின் பங்கு பற்றியும்,

ஒவ்வொரு தனிமனித முஸ்லிமின் வாழ்வு பற்றியும் பேசுகின்றன. அவை அருளப்பட்ட சூழ்நிலையை எண்ணிப் பார்க்கும் போது, இந்த இறைவசனங்கள் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இறை நம்பிக்கையாளர்கள், எதிரிப்படைகளைப் பார்த்த போது சொன்னதாக இறைவன் குறிப்பிடுவதாவது,

> அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் நம்மிடம் வாக்களித்தது இதுதான் அல்லாஹ் மற்றும், அவனுடைய தூதரின் வாக்கு முற்றிலும் உண்மையாக இருந்தது. இந்நிகழ்ச்சி நம்பிக்கையையும், அடிபணிதலையும் அவர்களுக்கு இன்னும் அதிகப்படுத்தி விட்டது. (குர்ஆன் *33:22*)

## ஒரு திறமையான சூழ்ச்சி

முஸ்லிம்கள் பெரும் சிரமத்தில் இருந்தனர். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, உணவுப் பொருட்கள் இல்லாததாலும், இரவு நேரங்களில் குளிர் மிக அதிகமாக இருந்ததாலும், குறைஷிப் படையினரும் சிரமப்பட்டனர். அந்த நேரத்தில் அரேபிய தீபகற்பத்தில் அனைத்து இனக்குழு மக்களாலும் மதிக்கப்பட்ட குறைஷியர் குலத்தைச் சார்ந்த நுஐம் பின் மஸ்ஊத் என்பவர் நபிகளாரைச் சந்தித்து, தான் இஸ்லாத்தில் இணைந்து விட்டதாகவும், ஆனால் இது யாருக்கும் தெரியாது என்றும் தன்னுடைய சேவைகளை எந்த விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர் நபிகளாரிடம் கூறினார். இப்னு ஷிஷாம்(ரஹ்) கூறியதாவது: தங்களது படையினருடன் மதீனாவைச் சூழ்ந்து முற்றுகையிட்டுள்ள அனைத்து குலக்குழுத் தலைவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர் நுஐம். இதனை அறிந்திருந்த நபிகளார் அவரிடம் குறைஷியர்களுக்குள் பிரச்னையை ஏற்படுத்த ஏதாவது செய்யுங்கள். எங்களின் மீதான அவர்களின் பிடியைத் தளர்த்த நீங்கள் ஏதாவது இயன்றதைச் செய்யுங்கள். போர் நேர்மையற்றது' என்று கூறினார்கள். நுஐம்

ஒரு பெரும் சூழ்ச்சித் திட்டத்தை வகுத்தார். முதலில் அவர் பனூகுரைளா குலக் குழுவைச் சார்ந்த யூதர்களிடம் சென்று உங்களை குறைஷியர்கள் கைவிட்டு விடக் கூடாது. அதற்கு உத்திரவாதமளிக்கும் வகையில் அவர்களிடம் சில பிணை ஆட்களை கேளுங்கள் என்று ஆலோசனை கூறினார். இதனைச் சரியென ஏற்றுக் கொண்ட பனூகுரைளா குழுவினர், தங்களது கோரிக்கையை குறைஷியர் தலைவர்களிடம் எடுத்துக் கூறுவதற்காக ஒரு பிரதிநிதியை அனுப்பினர்.

பின்னர் நுஐம் குறைஷியர் தலைவர் அபூ சுஃப்யானிடம் சென்று பனூகுரைளா குலக் குழுவினர் உங்களை ஏமாற்றி கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முஹம்மதுவுடன் உடன்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருங்கள் என்று கூறினார். விசுவாசத்தை வெளிப்படுத்தவேண்டும் என்ற சாக்கில் அவர்கள் உங்களிடம் சிலரை பிணை ஆட்களாகக் கேட்கவிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் தங்களது நன்நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்காக அந்த பிணை ஆட்களை அவர்கள் முஹம்மதுவிடம் ஒப்படைக்கவிருக்கிறார்கள் என்றும் சொன்னார்.

பனூகுரைளாகுலக் குழுவின் பிரதிநிதி ஒருவர் அபூ சுஃப்யானிடம் வந்து பிணை ஆட்களைத் தருமாறு கேட்டபோது நுஐம் சொன்னது உண்மைதான் என அவன் எண்ணி, அவர்கள் (பனூகுரைளாவினர்) உண்மையில் நம்மை ஏமாற்ற நினைக்கிறார்கள் என்று எண்ணினார். அபூசுஃப்யான் பனூநளீர் தலைவர் 'ஹுயய்'யை உடனடியாக அழைத்து இந்த துரோகச் செயல் பற்றி கேள்வி எழுப்பினார். இது கேட்டு 'ஹுயய்' வியப்படைந்தான். அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. இது ஒரு துரோகச் செயலின் வெளிப்பாடுதான் என அபூசுஃப்யான் கருதினார். முதல் தடையாக குறைஷியர்கள் அணியில் பிளவு தோன்றிவிட்டதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அவர்களுக்குள் பரஸ்பர அவநம்பிக்கை ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் முரண்பட ஆரம்பித்தார்கள். இந்தச் செய்தி

குறைஷியர்களுடன் அணி அமைத்துக் கொண்டவர்களின் மத்தியில் பலவீனத்தை ஏற்படுத்தியது. இரண்டு வாரங்கள் கழிந்தன. குறைஷியப் படை வீரர்களுக்கான உணவுப் பொருட்களின் இருப்பு தீர்ந்து கொண்டு வந்தது. குதிரைகளும் ஏன் ஒட்டகங்களும் கூட உணவின்றி இறந்தன. சோர்வும், உணவுப் பற்றாக்குறையும் குறைஷியர் அணியிடையே ஊக்கமின்மையை ஏற்படுத்தியது. பின்னர் பலமான காற்று சமவெளிப்பகுதியில் வீசியது. இது குறைஷிப் படையினரை மேலும் பலவீனப் படுத்தியது. மதீனா வெற்றி கொள்வதென்பது அவர்கட்கு இயலாத காரியமாகி விட்டது.

எதிரணியின் மன உறுதி முற்றிலும் குலைந்து போன செய்தியறிந்த நபிகளார், ஹழ்ரத் ஹுதைபாவை(ரலி) அனுப்பி, அவர்களின் நிலை பற்றி அறிந்து வருமாறு வேண்டினார்கள். நபிகளாரின் ஆணைப்படி சென்ற ஹுதைபா(ரலி) எதிரிகள் முற்றிலும் நிலைகுலைந்து போயுள்ளனர் என்றும், அவர்களது படையில் பெரும் குழப்பம் தோன்றியுள்ளது என்றும், கடுங்குளிரும் காற்றும் அவர்களை சீரழித்து விட்டது என்றும், எதிரிகள் தங்களது முகாம்களை அழித்துவிட்டனர், படை வீரர்கள் ஏற்கனவே பின்வாங்கிச் சென்று விட்டனர் என்றும் நபிகளாரிடம் தெரிவித்தார். அன்று காலை நேரத் தொழுகைக்குப்பின்னர் நபிகள் நாயகம்(ஸல்) எதிரிகள் பின் வாங்கிச் சென்று விட்டதை உறுதி செய்தார்கள். ஹிஜ்ரி நான்காம் ஆண்டில் நடந்த இந்த முற்றுகை இருபத்து ஐந்து நாட்கள் நீடித்தது. (627 கி.பி) குறைஷியரின் கூட்டணிப்படைகள் போர் புரியாமலேயே (அடி வாங்கி தோற்றுப் போய்) பின்வாங்கிச் சென்று விட்டன. முஸ்லிம்களின் இந்த இரு முனை வெற்றிச் செய்தி அரேபிய தீபகற்பம் முழுவதும் பரவி அதன் அதிகாரச் சமநிலையைப் பெரிதும் மாற்றியது. பத்தாயிரம் பேர்கள் கொண்ட ஒரு வலுவான படையை தடுத்து நிறுத்தியதோடு மட்டுமல்லாது, முஸ்லிம்கள் தங்களது உறுதியினையும் உலகிற்கு வெளிப்படுத்தினர்.

# முஸ்லிம்களின் பெருந்தன்மை

நபிகளாரின் மகளான ஜைனப்(ரலி) அபுல்–அல்–ஆஸ் என்பவரை மணம்புரிந்தார். அவர் இஸ்லாத்தில் இணையவில்லை. ஜைனப் ஆரம்பத்தில் தனது கணவருடனேயே மக்காவில் வசித்து வந்தார். பின்னர் நபிகளார் அவரை தனது பெண் குழந்தை உமாமாவுடன் மதீனாவிற்கு வந்து தம்முடன் வசிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். ஜைனப் தனது கணவர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். வாழ்க்கைச் சூழ்நிலைகள் காரணமாகவே அவர்கள் பிரிய நேர்ந்தது. எனினும் அவர்கள் மறுமணம் செய்து கொள்ளவில்லை.

அகழிப்போர் முடிந்து சில மாதங்களுக்குப் பிறகு, அபுல்–அல்–ஆஸ் தலைமையில் வர்த்தகக் கூட்டம் ஒன்று ஏராளமான பொருட்களுடன் சிரியாவிலிருந்து சென்று கொண்டிருப்பதாகவும், அதில் பல குறைஷியர் குலத் தலைவர்கட்கு பங்கு இருப்பதாகவும் நபிகளார் அறிந்தார்கள். இந்த வர்த்தகக் கூட்டத்தை தடுத்து நிறுத்தித் தாக்குதல் நடத்தி அவர்கள் கொண்டு செல்லும் பொருட்களை பறிமுதல் செய்வதற்காக ஸைது தலைமையில் படை ஒன்றை நபிகளார் அனுப்பி வைத்தார்கள். மக்காவிலிருந்து மதீனாவிற்கு இடம் பெயர்ந்து வந்த முஸ்லிம்களின் சொத்துக்களைக் கைப்பற்றிய குறைஷிகளின் நடவடிக்கைகளுக்குத் தக்க பதிலடி கொடுக்கும் விதத்திலேயே நபிகளார் இத் தாக்குதலைத் தொடுத்தார்கள். இது முதற் காரணம். மதீனாவிற்கு எதிராகத் தொடர்ந்து சதித்திட்டங்களில்

ஈடுபட்டிருந்த மக்கா வாசிகளுக்கு தங்களது வலிமையைக் காட்ட நபிகளார் தீர்மானித்தார்கள் இது இரண்டாவது காரணமாகும். முஸ்லிம்களின் குதிரைப் படைக்குத் தலைமை வகித்துச்சென்ற ஸைது(ரலி) வர்த்தகக் கூட்டத்தின் பெரும்பான்ரி மையினரைப் பிடித்து, அவர்கள் கொண்டுவந்த பொருட்களையும் கைப்பற்றினார். சிலர் மட்டும் தப்பிவிட்டனர். அப்படித் தப்பியவர்களின் அபுல்– அல் ஆஸ்ஸும் ஒருவர். அவர் மக்காவிற்குச் செல்லும் வழியில் மதீனாவில் உள்ள தனது மனைவியையும் மகளையும் பார்ப்பதற்காகச் சென்றார். அவரின் இந்த முடிவு பைத்தியக்காரத்தனமானது தான். மனைவியையும் மகளையும் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் இவர் அதில் உள்ள ஆபத்தை உணரவில்லை. தனது மனைவியின் வீட்டுக் கதவை சாமத்தில் அவர் தட்டிட, அவரது மனைவி ஜைனப் (ஜைனப் நபிகளாரின் மகள்) வந்து கதவைத் திறக்க, அன்று இரவு அங்கேயே தங்கினார்.

மறுநாள் அதிகாலை வழக்கம் போல் காலைத் தொழுகையை நிறைவேற்ற பள்ளிவாசலுக்குச் சென்ற ஜைனப், ஆண்களுக்குப் பின்னாலிருந்த பெண்களுக்கான வரிசையில் நின்றார். தொழுகைக்கு முன்னர் செய்ய வேண்டிய வழக்கமான நடைமுறையினை நபிகளார் ஆரம்பிப்பதற்கு முன்பு, அந்தச் சிறிய இடைவெளி நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜைனப்(ரலி), உரத்த குரலில் "ஓ! எனது மக்களே! நான் ராபிஃ மகன் அபுல்–அல்–ஆஸ்க்கு பாதுகாப்பு அளித்து விட்டேன்." என்று கூறினார். தொழுகை முடிந்ததும் தனது மகளுக்கும், அவரது கணவருக்குமிடையில் நடந்தது என்ன என்பது பற்றித் தெரியாத நபிகளார், தோழர்களுடன் பேசி ஜைனப்பின் அறிவிப்பை உறுதி செய்து கொண்டார்கள்.

தனது மகளாக இருந்தாலும் சரி அல்லது வேறு ஒரு சாதாரண முஸ்லிமாக இருந்தாலும் சரி, அவர்கள் அளித்த பாதுகாப்பு மதிக்கப்பட வேண்டும் என நபிகளார் வலியுறுத்தினார்கள். நபிகளார் தனது மகளிடம் சென்று என்ன

வென்று விசாரித்தார்கள். அதற்கு அவர், தனது கணவர் அபுல்–அல்–ஆஸின் பொருட்கள் முழுவதும் சண்டையின் போது கைப்பற்றப்பட்டு விட்டதாகவும், மக்காவாசிகளால் ஒப்படைக் கப்பட்ட இந்தப் பொருட்களுக்கு அவர் பொறுப்பாக வேண்டிய நிலையில் உள்ளார் என்றும் தனது கணவருக்கு நேர்ந்துள்ள பிரச்னைகளை விளக்கினார். உடனே நபிகளார், அபுல்–அல்–ஆஸின் பொருட்களை வைத்திருப்பவர்கள் விரும்பினால் அவற்றை அவரிடமே திரும்ப ஒப்படைத்து விடலாம் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். நபிகளாரின் வேண்டுகோளை ஏற்றுத் தோழர்கள் பொருட்களைத் திரும்ப ஒப்படைத்தனர். சில தோழர்கள் அபுல் அல் ஆஸ் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு, பொருட்களை அவரே வைத்துக் கொள்ளலாம் என ஆலோசனை கூறினார்கள். ஆனால் அதற்கு ஆஸ் தன்னுடைய மக்களின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து இஸ்லாத்தில் இணைவது பொருத்தமாக இருக்காது என்று கூறினார். அனைத்துப் பொருட்களையும் திரும்பப் பெற்றுக் கொண்ட அவர், மக்காவிற்குச் சென்று உரியவர்களிடம் அவற்றை ஒப்படைத்தார். பின்னர் அவர் மதீனாவிற்கு வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு தனது மனைவி ஜைனப்(ரலி)புடனும், மகள் உமாமாவுடனும் மீண்டும் சேர்ந்து கொண்டார்.

இவ்வாறாக முஸ்லிம்களின் முதல் பெருந்தன்மையான வெளிப்படையான இந்த நிகழ்ச்சியினை மக்கள் அனைவரும் கண்டனர். அபுல்–அல்–ஆஸ் முஸ்லிமல்ல. அவர் எதிரிகளின் இனக்குழுவைச் சார்ந்தவர். அவர் இஸ்லாத்தில் இணைய மறுத்து விட்டார். எனினும் அவர் செல்ல அனுமதிக்கப்பட்டார். எப்போது அவர் இஸ்லாத்தில் இணைய வேண்டும் என்பதை அவரே முடிவு செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டார். ஒரு முக்கியமான சிக்கலான காலகட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பு அவருக்குக் கிடைத்தது.

# பேச்சு உரிமை

ஜைனப்(ரலி) தனது கணவருக்கு ஆதரவாக வெளிப்படையாகவும், உறுதியாகவும் பேசினார். அவர் அடிக்கடி பள்ளிவாசலுக்குச் சென்று ஆண்களும், பெண்களும் இருக்கக்கூடிய திறந்த வெளியில் நின்று கொண்டு அறிவிப்புகளை வெளியிடுவார். அதனை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். முஸ்லிம் பெண்கள் இப்படி வெளிப்படையாக பேசுவது அப்போது வழக்கத்தை மீறிய செயலாகக் கருதப்படவில்லை. மதினாவிலுள்ள நபிகள் பள்ளிவாசலுக்கு ஒரு பெண் வந்து நபிகளாரிடம் தனது கணவர் தன்னை அடிப்பதாகவும், திட்டுவதாகவும், துன்புறுத்துவதாகவும் புகார் கூறினாள் (அவள் தலாபாவின் மகளும் அவ்ஸ் பின் தாபித்தின் மனைவியுமான (கௌலா) என்று சொல்லப்படுகிறது) அவரது புகார் சாதாரணமானதாக இல்லை. அப்போது ஆட்சித் தலைவ ராகவும் இருந்த நபிகளார் முன்பு அவர் உரத்த குரலில் தனது தரப்பு வாதத்தை உறுதியாகவும், வெளிப்படையாகவும் எடுத்துரைத்தாள். அவள் உண்மையில் வெளிப்படையாகப் பேசுபவளாக இருந்தாள். இந்தச் சம்பவம் பற்றி குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> தன்னுடைய கணவர் விஷயத்தில் உம்மிடம் விவாதித்துக் கொண்டும், அல்லாஹ்விடத்தில் முறையிட்டுக் கொண்டும் இருக்கின்ற பெண்ணின்

சொல்லை திண்ணமாக அல்லாஹ் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறான் (குர்ஆன் *58:1*)

இந்தப் பிரச்னை முஸ்லிம் அல்லாத பலதெய்வ வழிபாட்டில் ஈடுபட்டிருக்கின்ற ஒரு சமுதாயத்தைச் சார்ந்த பெண் ஒருவர் சம்பந்தப்பட்டதாகும். அவளது திருமண உறவுகள் துண்டிக்கப்பட்டு, அதே நேரத்தில் அவள் வேறொருவரைத் திருமணம் செய்ய முடியாத நிலையில் விடப்பட்டிருந்தாள். அவள் திருமணமானவள் என்றோ, திருமணமாகாதவள் என்றோ சொல்ல இயலாத ஒரு நிலையில் இருந்தாள். குர்ஆனின் அதே அத்தியாயத்தில் வரும் இரண்டாவது வசனம் இது பற்றிக் குறிப்பிடுவதாவது.

உங்களில் எவர்கள் தம்முடைய மனைவியரை ளிஹார்' செய்கின்றார்களோ அவர்களின் மனைவியர் அவர்களுக்கு அன்னையராகி விடமாட்டார்கள். அவர்களைப் பெற்றெடுத்தவரே அவருக்கு அன்னையாவர். அவர்கள் கடும் வெறுப்பிற்குரிய பொய்யான சொல்லைக் கூறுகின்றார்கள். மேலும் உண்மையாதெனில் அல்லாஹ் பெரிதும் பிழை பொறுப்பவனாகவும்,மன்னிப்பவனாகவும் இருக்–கின்றான். (குர்ஆன் *58:2*)

குர்ஆனின் இந்த வசனங்கள் பெண்களுக்கு ஆதரவாக அமைந்துள்ளன. முஸ்லிமல்லாதவரின் விவாகரத்துப் பற்றிய சட்டங்களை மாற்றி மனைவியர்கட்கு அவரது கணவன்மார்கள் புரிந்திட்ட கொடுமைகளைத் தடுத்திட இந்த வசனங்கள் துணைபுரிந்தன. வெளிப்படையாகவும், சுதந்திரமாகவும் சொல்லப்படுகின்ற தெளிவான கருத்துக்கள் நீதி வழங்கிடத் துணைபுரிவதோடு சட்ட விதிகள் பற்றிய அறிவு மேம்படவும் உதவுகின்றது என்பதே இந்த நிகழ்ச்சி தரும் பாடமாகும். பள்ளிவாசலினுள் பெண்கள், ஆண்களுக்குப் பின்னால் வரிசையாக நின்று கொண்டு தொழுகையில் ஈடுபடுவார்கள். ஆனாலும் அவர்களின் கண்ணியமும், ஒழுங்கும், மரியாதையும்

பாதுகாக்கின்ற விதத்தில் அங்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் பெண்கள் தொழுதார்கள். படித்தார்கள். ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பறிமாறிக் கொண்டார்கள். சிரமமில்லாமல் பெண்கள் முதலில் செல்லும் பொருட்டு ஆண்கள் தங்களது இருப்பிடத்திலேயே இருந்து கொண்டு அவர்கட்டு வழிவிட வேண்டுமென்று நபிகளார் கூறினார்கள். பெண்களுடனான அணுகுமுறையில் எப்போதும் கண்ணியமும், அன்பும் நிலவிடவேண்டும் என்பதை வலியுறுத்திய நபிகளார் அவர்கள் தங்களது கருத்துக்களையும் வாதங்களையும் சுதந்திரமாக வெளியிட உரிமை வழங்கியிருந்தார்கள்.

## இறைவன் என்னை மன்னிக்கட்டும்

ஒரு கட்டத்தில் மதீனாவில் பெண்களின் செல்வாக்கு அதிகரித்து பெற்றோர்கள் தங்களது பெண்களைத் திருமணம் செய்து கொள்பவர்களிடமிருந்து பெருந்தொகையை மகராகப் பெற்றார்கள். இது ஒரு பெரும் சமூகப் பிரச்னையாக உருவெடுத்தபோது, ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள், இஸ்லாமியப் பேரரசின் கலீபா என்ற முறையில் யாரும் நானூறு திர்ஹமிற்கு அதிகமாக மஹராகக் கேட்கக் கூடாது என்றும், இதற்கு அதிகமாகக் கொடுக்கப்படும் மஹர் தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசாங்க கருவூலத்தில் சேர்க்கப்படும் என்றும் ஆணையிட்டார்கள்.

இந்தச் சட்டத்தைப் பிறப்பித்து விட்டு கலீபா உமர்(ரலி) அவர்கள் பிரசங்க மேடையிலிருந்து இறங்கி வந்த போது ஒரு வயதான பெண்மணி எழுந்து நின்று நம்பிக்கையுடன் 'குர்ஆன் இது விஷயத்தில் எந்த விதமான கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. எனவே இதற்கு உச்சபட்ச வரம்பு எதையும் நிர்ணயம் செய்ய உமருக்கு அதிகாரம் இல்லை என்று கூறினார். தன்னுடைய கூற்றுக்கு ஆதாரமாக கீழ்க்கண்ட இறைவசனத்தை அவர் மேற்கோள் காட்டினார்.

நீங்கள் ஒரு மனைவிக்குப் பதிலாக வேறொருத்தியை மனைவியாக்கிக் கொண்டு வர நாடினால், நீங்கள் அவளுக்கு பணக் குவியலையோ (மகராகக்) கொடுத்திருந்தாலும் கூட அதிலிருந்து கொஞ்சம் கூட திரும்பப் பெறாதீர்கள். நீங்கள் அவதூறு கூறியும், வெளிப் படையாகக் கொடுமை இழைத்தும் அதனைத் திரும்பப் பெறுவீர்களா? (குர்ஆன் 4:120)

உடனே கலீபா உமர்(ரலி) அவர்கள் தமது தவறை உணர்ந்து "இறைவன் என்னை மன்னிப்பானாக! ஒவ்வொருவரும், இந்தப் பெண்மணி கூட உமரை விட நன்கு தெரிந்தவர்களாக உள்ளனர்" என்று குறிப்பிட்டார்கள்.

# மனித குலத்திற்குச் சேவை

அடிப்படையான நம்பிக்கை தவிர, மேலும் இரண்டு விஷயங்களை திருக்குர்ஆன் பெரிதும் வலியுறுத்துகிறது. இறைவனுடனான மனித உறவுகள் உறுதியாக இருக்க வேண்டும். இறைவனை மட்டுமே மனிதன் வணங்க வேண்டும். பிறர் யாரையும் வணங்கக் கூடாது. இது முதலாவது விஷயமாகும். இரண்டாவதாக, பிற மக்களுடன் அவன் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். தகுதியுள்ள மக்களின் உரிமைகளை அவன் மதித்து நடக்க வேண்டும்.

பெற்றோர், உறவினர்கள், அண்டை வீட்டுக்காரர்கள், அநாதைகள், ஆதரவற்றோர் ஆகியோருக்கான தனது கடமைகளை அவன் நிறைவேற்ற வேண்டும். அவன் வலிமை யுள்ளவனாக இருந்தால் பலவீனமானவனுக்கு எதிராகத் தனது கரங்களை உயர்த்தக் கூடாது. அதே நேரத்தில் அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். தன்னைப் பாதுகாப்பது போல அவன் பிறரின் உயிர், மரியாதை, சொத்து என அனைத்தையும் பாதுகாக்க வேண்டும். அவன் யாரையும் ஏமாற்றக்கூடாது. அவனுடைய நடவடிக்கைகளில் நேர்மை இருக்க வேண்டும். அவன் இருப்பது சமுதாயத்திற்குத் தொல்லையாக அமைந்து விடக்கூடாது. அவன் அமைதியையும், ஆறுதலையும் அளிக்க வேண்டும். இந்த விஷயங்களுக்கு திருக்குர்ஆன் மிகுந்த முக்கியத்துவம் அளித்து பல இடங்களில் வலியுறுத்திக் கூறுகிறது. இதற்கு திருக்குர்ஆனின் 17 வது அத்தியாயமான அல்–இஸ்ரா (மிஃராஜ்பயணம்) மிகச் சிறந்த உதாரணமாகும்.

# இறைவனின் அருள்

இந்த உலகத்தில் சிலருக்கு அனைத்து வசதிகளும் அருளப்பட்டுள்ளன. சிலருக்கு இந்த வசதிகள் மறுக்கப் பட்டுள்ளன. வசதி உள்ளவர் வசதியற்றவருக்கு உதவ வேண்டும் எனத் திருக்குர்ஆன் வலியுறுத்துகிறது. வாழ்க்கையில் நல்ல நிலையில் உள்ளவர்கள் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்திட வேண்டும். தேவையுள் ளோருக்கு உதவி செய்வதே இறைவனுக்குச் செலுத்தும் மிகச் சிறந்த நன்றியாகும். நமக்கு இறைவன் அளித்துள்ள எல்லாவற்றிலும், நமது சக மனிதர்கட்கும் பங்கு இருக்கிறது. இந்த பங்களிப்பு இல்லாமல், இறைவனுக்கு நன்றி செலுத்துவதென்பது அரை குறையாகவே இருக்கும். இவ்வளவு அதிகமாக இறைவன் நமக்கு வழங்கியுள்ள போதிலும், நாம் அதனை பிறருக்கு வழங்கி வாழ வில்லையெனில், அது நமது தெளிவற்ற மனநிலையே காட்டும்.

இஸ்லாத்தில், மனித சமூகத்திற்குச் சேவை செய்வது இறைவனுக்குச் செய்யும் சேவையாகவே கருதப்படுகிறது. தேவைப்படும் மனிதர்கட்கு உதவிசெய்வது இறைவனுக்குச் செய்யும் உதவியே ஆகும். உதவி வேண்டி வந்த ஒருவனை வெறுங்கையுடன் திருப்பி அனுப்புவது இறைவனுக்கு உதவி செய்ய மறுப்பதற்குச் சமம். இறைவனைத் திருப்திப்படுத்தும் மிகச் சிறந்த வழி, அவனது படைப்புகளைத் திருப்திப் படுத்துவவேயாகும். பூமியில் உள்ள மனிதர்கள் ஒருவருக் கொருவர் அன்பு செலுத்தி வரவில்லையென்றால், சொர்க்கம் பூமியின் பால் அன்பு பாராட்டாது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் உபதேசங்கள் இந்த விஷயங்களை மிகவும் வலியுறுத்துகின்றன.

நபிகளார் சொன்னதாவது: நியாயத் தீர்ப்பு நாளின் போது இறைவன் சொல்வான் "ஓ! ஆதமின் மகனே! நான் நோயுற்றிருந்தேன். யாரும் என்னை வந்து பார்க்கவில்லை. அநேகர் அதற்குப் பதில் சொல்வார்கள். ஓ! இறைவனே! நீயே

அனைத்து உலகங்களையும் நிலை பெற்றிருக்கச் செய்பவன். நீ எப்போது நோயுற்றாய். நாங்கள் எப்படி உன்னைப் பார்க்க முடியும்." அதற்கு இறைவன் சொல்வான். ஒரு குறிப்பிட்ட மனிதன் உடல் நலமற்று இருந்தான். ஆனால் நீ அவனைப் போய்ப் பார்க்கவில்லை. நீ சென்றிருந்தால் அங்கு என்னைப் பார்த்திருக்க முடியும். மீண்டும் இறைவன் கூறுவான். ஆதமின் மகனே ! நான் உன்னிடம் உணவு கேட்டேன், ஆனால் நீ எனக்கு உணவு தரவில்லை. மனிதன் கேட்பான் "ஓ! இந்த உலகத்தைக் காப்பவனே நீ எப்போது பசியுடன் இருந்தாய்?" என்று அதற்கு இறைவன் 'ஒரு மனிதன் உன்னிடம் உணவு கேட்டான். நீ அவனுக்கு உண்ண உணவளிக்கவில்லை. நீ அவனுடைய தேவையைப் பூர்த்தி செய்திருந்தால், இங்கு உனக்கு அதற்குரிய கூலி கிடைத்திருக்கும்.

மீண்டும் இறைவன் கூறுவான். ஓ என் ஆதமின் மகனே ! நான் உன்னிடம் தண்ணீர் கேட்டேன். ஆனால் நீ எனக்குத் தண்ணீர் தரவில்லை. மனிதன் சொல்லுவான் ! இந்த உலகத்தைக் காப்பவனே ! நீ எப்போது தாகமாக இருந்தாய். நான் எப்படி உனக்குத் தண்ணீர் கொடுக்க முடியும்? இறைவன் கூறுவான் அன்றொரு நாள் ஒருவன் உன்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்டான் ஆனால் நீ கொடுக்க மறுத்துவிட்டாய். நீ அவனது தாகத்தைப் போக்கியிருந்தால் இங்கு உனக்கு அதற்குரிய கூலி கிடைத்திருக்கும். மனித சமூகத்திற்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவை என்பதற்கு இதுவே போதுமான விளக்கங்களாகும். இதனைப் புறக்கணித்து வாழ்வது மிகப் பெரிய குற்றமாகும்.

## அனைவருக்கும் சேவை புரிய வேண்டும்

சேவையைப் பொறுத்தவரையில், முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல இவ்வுலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் அது பொருந்தும் என்று இஸ்லாம் கூறுகிறது. மதவெறி வெறுப்பையும், பகைமையையும் உண்டாக்குகிறது. தேசிய

வெறி கொண்ட ஒரு மனிதன், மற்ற நாடுகள் விஷயத்தில் சகிப்புத்தன்மையுள்ளவனாகவும், பரிவுள்ளவனாகவும் நடந்து கொள்ள மாட்டான். இஸ்லாம் இதனை எதிர்க்கிறது. உலகிலுள்ள படைப்புகள் அனைத்தையும் ஒரே குடும்பமாக இஸ்லாம் கருதுகிறது. நபிகளார் சொன்னதாக அனஸ்(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: 'இறைவனின் குடும்பத்தில் எல்லாப் படைப் புகளும் உள்ளன. இவைகளுக்கிடையில் தன்னுடைய குடும்பத்திற்கு நற்சேவை புரிகின்றவன் இறைவனால் விரும்பப்படுகிறான்'

தேவையுள்ளோர், ஏழைகள், ஊனமுற்றோர், அநாதைகள் என அனைவருக்கும் உதவுமாறு திருக்குர்ஆன் ஆணை யிடுகிறது. முஸ்லிம்களுக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவிற்கோ சேவை செய்ய வேண்டும் என்று அது ஒரு போதும் கொன்னதில்லை. மனித சமூகம் முழுமைக்கும் சேவை செய்ய வேண்டும் என்றே அது வலியுறுத்துகிறது. அவர்கள் நமக்கு உறவினர்களாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, நம்முடன் கருத்து உடன்பாடு கொண்டவர்களாயினும் சரி, அல்லாதவர்களாயினும் சரி, நமது மொழி பேசுபவர்களாக இருந்தாலும் சரி, அல்லாதவர்களாக இருந்தாலும் சரி எந்த விதமான பாகுபாடுமின்றி அனைவரும் நமது சேவையினைப் பெறத் தகுதியானவர்களே.

மனிதர்கள், அவர்கள் எந்த நிறத்தினராயினும் சரி, எந்த நாட்டினராயினும் சரி, எந்தப் பகுதியினராயினும் சரி அவர்கள் அனைவரும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். இந்தப் பாகுபாடுகளின்றி ஒரு மனிதனுக்கு அவனது கஷ்டங்களிலிருந்தும், தொல்லைகளிலிருந்தும் மீண்டிட உதவிட வேண்டும்.

1. நபிகளார் கூறியதாக ஜாபிர்(ரலி) அறிவிப்பதாவது: 'பிறரிடம் இரக்கம் காட்டாதவன் மீது இறைவன் இரக்கம் காட்டமாட்டான்'
2. உமர்(ரலி) மகன் அப்துல்லாஹ்(ரலி) நபிகளார் கூறியதாக

அறிவிப்பதாவது:– 'யார் இரக்கமுடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களிடம் இறைவன் இரக்கம் காட்டுகிறான். பூமியிலுள்ள மனிதர்களிடம் இரக்கம் காட்டுங்கள். வானிலுள்ள இறைவன் உங்களிடம் இரக்கம் காட்டுவான்.'

3. மஸ்ஊத் மகன் அப்துல்லா(ரலி) நபிகளார் கூறியதாக அறிவிப்பதாவது: 'நீங்கள் இரக்கமுள்ளவர்களாக இருந்தாலொழிய, நம்பிக்கை கொண்ட மக்களாக ஒருபோதும் ஆகமாட்டீர்கள்' அப்போது தோழர்கள் சொன்னார்கள். ஓ! இறைவனின் தூதரே, நாங்கள் ஒவ்வொருவரும் இரக்கமுடையவர்களே! பிறகு நபிகளார் சொன்னார்கள். 'உங்களது சொந்த உறவினர்கள் பால் மட்டும் நீங்கள் இரக்கம் காட்டுவதோடு நின்று விடக்கூடாது. அனைவர் மீதும் இரக்கம் காட்டவேண்டும்.

4. சில தோழர்கள் உட்கார்ந்திருந்தபோது நபிகளார் அங்கு வந்தார்கள். நபிகளார் அவர்களிடம் 'யார் நல்ல மனிதர். யார் கெட்ட மனிதர் என்று நான் உங்களுக்குக் கூறட்டுமா.. என்று கேட்டார்கள். அதற்கு தோழர்கள் யாரும் பதிலளிக்காது அமைதியாக இருந்தனர். இந்தக் கேள்வியையே மூன்று முறை நபிகளார் கேட்டபோது ஒரு தோழர் 'இறைவனின் தூதரே, எங்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்பதை நீங்களே தெளிவு படுத்துங்கள்' என்று கூறினார்கள். அதற்கு நபிகளார் 'உங்களில் யாரொருவரிடமிருந்து மக்கள் நற்செயல்களை எதிர்பார்க்கிறார்களோ அவரே நல்லவர். அவர் இறைவனின் கோபத்திலிருந்து தப்பித்து விடுவார்கள். உங்களில் யாரொருவரிடமிருந்து மக்கள் நற்செயல்கள் எதையும் எதிர்பார்க்கவில்லையோ அவர் தான் கெட்டவர். அவர்கள் இறைவனின் கோபத்திலிருந்து தப்பமுடியாது'.

இந்த உபதேசங்கள், எந்தவிதமான வித்தியாசமுமின்றி இறைவனின் படைப்புகளுக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகின்றன. நம்முடைய இரக்கமும்,

உதவியும் தேவைப்படும் ஒருவருக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதே இஸ்லாத்தின் கொள்கை ஆகும். மனித சமுதாயத்தை, சொந்தக்காரர்கள், மற்றவர்கள் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், சொந்த மதத்தினர், பிறமதத்தினர் என்று சமூக சேவை விஷயத்தில் பாகுபடுத்திப் பார்ப்பது இஸ்லாத்தின் கொள்கைகளுக்கும் போதனைகளுக்கும் எதிரானதாகும்.

## சேவையும் ஒரு வணக்கமே

வாழ்க்கையின் முக்கியக் குறிக்கோள் வணக்கமே (தொழுகையே) என்று குர்ஆன் கூறுகிறது. தொழுகை இறைவனிடம் நெருக்கத்தை ஏற்படுத்தி அவனை ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. தொழுகை உடல் சார்ந்தது மட்டுமல்ல உள்ளம் சார்ந்ததும் கூட. உடலை இயக்கச் செய்வதும், ஓதுவதும் உடல் சார்ந்த தொழுகையாகும். ஆனால் இவற்றைச் சடங்குகள் என்றே கருத முடியும். ஒருவன் தனது செல்வத்தை சேவைக்காகச் செலவு செய்வது கூட ஒரு தொழுகைதான் (வணக்கம் தான்) ஒரு தேவையுள்ள மனிதனுக்கு உதவி செய்யும் போது அதன் மூலம் இறைவனின் நெருக்கத்தை அடைகிறோம் என்பது தான் உண்மையாகும். நற்செயல்கள் புரியும் போது ஒரு மனிதன் வணக்கத்தின் பரவசத்தை அடைய முடியும். இஸ்லாத்தில் மனிதனுக்குச் சேவை செய்வது இம்மைக்குரிய ஒரு செயலே ஆயினும் அது உண்மையான வணக்கமுமாகும்.

# நன்றியுணர்வு

நன்றியுணர்வு திருக்குர்ஆன் வலியுறுத்தும் முக்கிய அறநெறியாகும். இதுவே குர்ஆனின் அறநெறிகளுக்கு அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

> நீங்கள் நன்றி செலுத்துபவர்களாய் இருந்து இறை நம்பிக்கையின் வழியில் நடப்பீர்களாயின் உங்களை அல்லாஹ் ஏன் தண்டிக்கப் போகின்றான். மேலும் அல்லாஹ் நன்றியை மதிப்பவனாகவும், அதனை நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் *4:147*)

நன்றியுணர்வு இதயத்திலிருந்தும், உள்ளத்திலிருந்தும் வெளிப்படுகிறது. இறைவனது படைப்பின் அதிசயங் களிலிருந்து வெளிப்படுகின்ற உணர்வுகளின் பிரதிபலிப்பாக அது அமைந்துள்ளது.

> எனவே என்னை நினைவு கூருங்கள். நானும் உங்களை நினைவு கூர்கின்றேன். எனக்கு நன்றி செலுத்துங்கள். (என்னுடைய அருட் கொடைகளை மறுத்து) நன்றி கொல்லாதீர்கள். (திருக்குர்ஆன் *2:152*)

> என் இறைவனே! நீ எங்களுக்குச் செய்திட்ட உதவி களுக்காக உனக்கு நன்றி செலுத்த எங்களுக்கு உதவுவாயாக என நம்பிக்கையாளர்களே கூறுங்கள். (திருக்குர்ஆன் *46:15*)

> குர்ஆன் சில நேரங்களில் நன்றி மறந்த கருணையற்ற மனிதர்களின் நடத்தையைக் கண்டிக்கிறது. பெரும் பாலோர் நன்றி தெரிவிப்ப தில்லை என்றும் (திருக்குர்ஆன் *10:60*) இறைவன் மனிதர்கள் விஷயத்தில் மிகத் தாராளமாக நடந்து கொண்ட

போதிலும் அவர்கள் நன்றி மறந்தவர்களாக இருக்கின்றனர். (திருக்குர்ஆன் 27:73)

என்றும் இறைவன் குர்ஆனில் கூறுகிறான்.

நன்றி தெரிவிப்பதும், நன்றி மறப்பதும் ஒருவர் மனித சமுதாயத்திற்குச் சேவை செய்வதன் மூலம் அல்லது செய்யாமல் இருப்பதன் மூலம் வெளிப்படுகிறது. நன்றியுணர்வு வெளிப் படையான உள்ளார்ந்த தனிப்பட்ட பரிணாமங்களைக் கொண்ட தாகும். பிற மக்களின் நலனிற்காகவும் நாம் வாழுகின்ற பகுதியின் சுற்றுச் சூழலைப் பராமரிக்கவும் பாடுபடுவதன் மூலம் அது வெளிப்படையாக உலகிற்குத் தெரிய வருகிறது.

திருக்குர்ஆன் தானதர்மங்கள் செய்வதற்கும், அனாதைகட்கும், தேவையுள்ளவர்கட்கும், முதியவர் கட்கும் உதவி செய்வதற்கும், நற்செயல்களுக்காக மக்கள் தங்களுடைய செல்வத்தைச் செலவு செய்வதற்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். வசதி வாய்ப்பற்றவர்கட்கு உதவுவது ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல. அது நம்பிக்கையாளர்களின் கவலையின் ஒரு பகுதியாகும். சமத்துவத்தையும், மனித சமூகத்தின் கண்ணியத்தையும், சமாதானத்தையும், நல்லிணக் கத்தையும் பேணுவதற்கும், சுற்றுப் புறச் சூழலை பராமரித்துப் பாதுகாப்பதற்கும் ஒருவர் ஏதாவது ஒரு வகையில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இதுவே நன்றியுணர்வின் வெளிப்பாடாக அமையும். மனிதாபி மானத்தை வளர்த்து இறைவன் உருவாக்கிய படைப்பினங்களின் தோட்டத்தை அழகு படுத்துவதே அவனுக்கு நாம் செலுத்துகின்ற மிகப் பெரிய நன்றியாக இருக்கும். மனித மாண்பினையும், சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும், நீதியையும், சமத்துவத்தையும் முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதவர்கள் எனப் பாகுபாடின்றி அனைவரிடமும் உருவாக்குவதற்கான பணிகளில் ஈடுபடுவதே மிகப் பெரிய நன்றியுணர்வாகும்.

15

# ஹுதைபிய்யா
# அமைதியே போரில் வெற்றியைத் தந்தது

குறைஷி கூட்டணிப் படையினரை வெற்றி கொண்டதன் மூலம், நபிகளார் மற்றும் அவர்களது தோழர்களின் வல்லமைக்கு அங்கீகாரம் கிடைத்தது. இது அரேபிய தீபகற்பத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. பாரசீக, ரோமானியப் பேரரசர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினர். அந்தப் பிராந்தியத்தில் ஒரு பெரும் சக்தியாக நபிகளார் உருவெடுத்ததை அவர்கள் கவனிக்கத் தவறவில்லை.

## ரம்ஜானும் ஒரு கனவும்

ரம்ஜான் மாதம் துவங்கியது. நபிகளார் வழக்கம் போல் இரவு நேரத் தொழுகையில் முனைப்புடன் ஈடுபட்டார்கள். எளியோர், தேவையுற்றோர் பால் மிகுந்த பரிவு காட்டினார்கள். ரம்ஜான் ஆன்மீக மாதமாக விளங்கியது. வழக்கமான தொழுகைகளின் போதும், இம் மாதத்தில் நடைபெற்ற விசேடத் தொழுகையான 'தராவீஹ் தொழுகையின் போதும் நபிகளார் அதுவரை அருளப்பட்ட இறை வசனங்களை வானவர் ஜிப்ரீல்(அலை) அவர்களுக்கு ஓதிக் காட்டினார்கள். (தராவீஹ் தொழுகை என்பது ரம்ஜான் மாதம் முழுமையும், இரவு நேரத் தொழுகைக்குப் பின்னர் நடைபெறும் தொழுகையாகும். இதில் குர்ஆன் முழுமையாக ஓதப்படுகிறது. அவரவர்கள் ஏற்றுக் கொண்ட இஸ்லாமியச் சிந்தனைக் கோட்பாட்டின்படி 8 முதல் 20 ரக் அத்துகள் இத்தொழுகை நடத்தப்படுகிறது.) உண்பது, பருகுவது, உடலாசையைப் பூர்த்தி செய்வது போன்றவற்றைத் தவிர்த்து பகல் முழுவதும் ஆண்களும், பெண்களும் இம்மாதத்தில் நோன்பு நோற்கின்றனர். பிரார்த்தனையில்

ஈடுபடுகின்றனர். இயற்கையான தேவைகளைக் கட்டுப் படுத்துவதன் மூலம், முஸ்லிம்கள் ஆன்மீகப் பண்புகளுக்கு நெருக்கமானவர்களாக ஆவதோடு, தியானத்தின் மூலமாக இறைவனின் இருப்பையும் உணர்கிறார்கள்.

உடல் ரீதியான நோன்பு தவிர, பொய் பேசுதல், ஆபாச கெட்ட வார்த்தைகளைப் பேசுதல் ஆகியவற்றினின்றும் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென முஸ்லிம்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். தீய எண்ணங்களை, சிந்தனைகளைத் தவிர்த்திட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளனர். இப்போது கூறப்பட்ட ஆன்மீக ஒழுக்கங்கள் தவிர, ஏழை எளியவர்கள் மீது கவனமும் கருணையும் காட்டவேண்டும். அவர்களுக்குத் தேவைப்பட்டதை வழங்க வேண்டும். ரம்ஜான் மாதத்தில் இறுதியில் கொண்டா டப்படும் பெருநாளின் போது ஏழை எளிய மக்களுக்கு வழங்கி வாழ வேண்டும் என்றெல்லாம் முஸ்லிம்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். ஏழைகளுடன் நெருங்கி, அவர்களை மதித்து, அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கிப் பணி செய்வதன் மூலமே எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைந்திட முடியும்.

அந்த ரம்ஜான் மாதத்தில் நபிகளாருக்கு ஒரு கனவு தோன்றியது. அது குழப்பமானதாவும், ஆனால் ஒரு வெகுமதியாகவும் அமைந்திருந்தது. அவர்கள் கஅபாவினுள் நுழைவதுபோல், தலையை மழித்து அப்புனித இடத்தின் சாவியை வலது கையில் வைத்திருப்பது போல அந்தக் கனவு இருந்தது. பொதுவாக தனக்குத் தோன்றும் கனவுகளில் ஒரு செய்தி இருப்பதாகவே நபிகளார் நினைப்பார்கள். இப்போதும் அப்படியே நினைத்தார்கள். மறுநாள், தனது தோழர்களிடம் இக்கனவு பற்றிக் கூறிய நபிகளார், மக்காவிற்குச் சென்று உம்ரா செய்யத் தயாராக இருக்கும்படி அவர்களிடம் சொன்னார்கள் (உம்ரா என்பது எப்போது வேண்டுமானாலும் செய்யக்கூடிய வணக்கம். ஹஜ் என்பது குறிப்பிட்ட காலத்தில் செய்ய வேண்டியது)

சுமார் 1200 முதல் 1400 வரை மிக விசுவாசமான தோழர்கள் கொண்ட குழுவினருடன் நபிகளார் மக்கா நோக்கிப் பயணமானார்கள் அங்கு செல்வது ஆபத்தானது என நபிகளார் உணர்ந்திருந்த போதிலும், தனது தோழர்கள் ஆயுதங்கள் கொண்டு செல்வதை அனுமதிக்கவில்லை. நபிகளார் தன்னுடன் தனது மனைவி உம்மு சல்மாவையும் அழைத்துச் சென்றார்கள். உம்ராவின் போது பலி கொடுக்க வேண்டிய ஒட்டகங்களையும் நபிகளார் ஓட்டிச் சென்றார்கள். கஅபாவை காண்பதற்காக முஸ்லிம்களின் பெரிய குழு ஒன்று மக்காவை நோக்கி வருவதாக, மக்கா வாசிகளுக்குத் தகவல் கிடைத்தது. இந்தப் புனிதத் தலத்தைக் காண்பது தீபகற்பத்திலுள்ள குலக்குழு மக்களின் முக்கியமான உரிமையாக இருந்து வந்தது.

## குறைஷியர்களின் குழப்பம்

குறைஷியர்கள் பெரும் மனக்குழப்பத்தில் ஆழ்ந்தனர். வருகின்ற முஸ்லிம்களைத் தடுத்து நிறுத்துவது சரியா இருக்குமா? என்றும் அதே நேரத்தில் அவர்கள் வருவதை அனுமதித்தால் அவர்களுக்கு மரியாதை அளித்தது போலாகி விடுமே என்றும் குழப்பமடைந்தனர். காலித் பின் வலீதை இரு நூறு வீரர்களுடன் அனுப்பி மக்கா நோக்கி வந்து கொண்டிருந்த முஸ்லிம்களைத் தடுத்து நிறுத்திட முடிவு செய்தனர். மதீனாவிலிருந்து 310 கி.மீ தொலைவு தெற்கில் மக்காவிற்கு வடக்கே 18 கி.மீ தொலைவில் ஹுதைபிய்யா என்ற சமவெளிப்பகுதி உள்ளது. அந்த இடத்திற்கு வந்த போது நபிகளாரின் ஒட்டகம் கஸ்வா நின்று கொண்டு அதற்கு மேல் செல்ல மறுத்து விட்டது. இதே போல் தான் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, நபிகளார் மதீனாவுக்குச் சென்ற போதும் நிகழ்ந்தது. அதனை ஒரு அறிகுறியாக நபிகளார் எடுத்துக் கொண்டார்கள். எனவே அங்கேயே தங்களது பயணத்தை நிறுத்திக் கொண்ட நபிகளார் குறைஷியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தத் திட்டமிட்டார்கள். நபிகளாரின் இந்த நடவடிக்கை குறித்து

குறைஷியர்கள் வியப்படைந்தார்கள். அவர்களது சமய, கலாச்சார, போர் முறைகளில் எந்த ஒரு அம்சத்துடனும் இது பொருந்தி வரவில்லை. புதிய அதிகார உச்சியில் இருக்கும் போது, நபிகளார் நிராயுதபாணியாக மக்காவிற்கு வருகிறார்கள். புதிய சூழ்நிலைகள் காரணமாக எதிரிகளை விட இன்னும் உயர் நிலையை அடைய முடியும் என்ற நிலையிலும் எளிதில் தாக்குதலுக்கு உள்ளாகும் வகையில் ஆயுதமுமின்றி வருகிறார்கள்.

நபிகளார் ஒரு புதிய சமயத்திற்கு மக்களை அழைத்தார்கள். ஆனால் அதே நேரத்தில் அரேபிய மக்களின் பாரம்பர்யமான விதிமுறைகளுக்கு மதிப்பளிக்கவும் அவர்கள் தயங்கவில்லை. இதனால் குறைஷியர்கள் குழப்பத்திற்கு உள்ளானார்கள். தங்களது பழம் பெருமைகளைப் பாதுகாக்கவேண்டிய அதே நேரத்தில், மக்காவிற்குள் நபிகளாரை அனுமதிப்பதன் மூலம் ஏற்படவிருக்கும் அந்தஸ்து இழப்பு பற்றியும் சிந்தித்தார்கள். இந்த இரண்டிற்குமிடையில் அவர்கள் முடிவெடுக்க வேண்டிய திருந்தது. நபிகளாரின் சமயோசிதமான முயற்சிகள் பலன் அளித்தன.

## பேச்சு வார்த்தைகள்

பிரார்த்தனை நடத்துவதற்காக மக்கா வரவிருக்கும் நபிகளாரையும் அவர்களுடன் வந்த முஸ்லிம்களையும் அனுமதிக்க குறைஷியர்கள் விரும்பவில்லை. ஏனெனில் அவர்களது கௌரவம் அதில் அடங்கியிருந்தது. மேலும் நபிகளாரின் உள்ளார்ந்த நோக்கம் பற்றி அவர்களுக்குத் தெரிய வில்லை. அவர்கள் பனுகுஸாஆ இனக்குழுவைச் சார்ந்த புதைல் என்பவரை மத்தியஸ்தராக அனுப்ப முடிவு செய்தனர். இவர் எந்த இனக்குழுவினரிடமும் தகராறு செய்தது இல்லை. எனவே இவரே தகுதியானவர் என முடிவு செய்தனர். அவர் நபிகளாரிடம் சென்று பேச்சு வார்த்தை நடத்தினார். அவரிடம் நபிகளார் தாங்கள் போர் புரியும் நோக்கத்துடன் வரவில்லை என்றும் உம்ரா செய்து

விட்டு உடன் திரும்பிப்போய் விடுவோம் என்றும் தெரிவித்தார்கள். எனினும் மக்காவிற்கு வந்து புனித இடங்களுக்குச் செல்லவிருக்கும் தங்களை யாரேனும் தடுத்தால் அவர்களுடன் சண்டையிடத் தயாராக இருக்கிறோம் என்றும் குறைஷியர்களுக்கு கால அவகாசம் தேவைப்பட்டால், ஹுதைப் பியாவிலேயே காத்திருக்கத் தயார் என்றும் மத்தியஸ்தரிடம் தெரிவித்தார்கள். மக்காவிற்குத் திரும்பிய புதைல் முஸ்லிம்களை உள்ளே அனுமதிக்க வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தார். ஆனால் அவரின் இந்த ஆலோசனைக்கு குறைஷியர் தலைவர் களிடமிருந்து குறிப்பாக அபூஜஹ்ல் மகன் இக்ரிமாவிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. நான்கு முறை பேச்சு வார்த்தைகள் நடைபெற்று தோல்வியில் முடிந்தன. முன்பை விட குறைஷியர்கள் கடுமையான நிலை எடுத்தனர். மக்கா வாசிகளால் நன்கு மதிக்கப்படும் இன்னொரு பிரதிநிதியை அனுப்பி கடைசியாக ஒரு முயற்சியில் நபிகளார் ஈடுபட்டார்கள்.

நபிகளார் தன்னுடைய மருமகனும், மக்காவில் உள்ள இனக் குழுக்களுடன் நல்ல தொடர்பும் கொண்டவரான உஸ்மான்(ரலி) அவர்களை பிரதிநிதியாக அனுப்பமுடிவு செய்தார்கள். உஸ்மான்(ரலி) மக்கா சென்ற போது அவர்களுக்கு அங்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஆனால் குறைஷியர்கள் தங்களது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள மறுத்தனர். உஸ்மான்(ரலி) விரும்பினால், அவர்கள் மட்டுமே கஅபாவை சுற்றி வந்து கிரியைகளில் ஈடுபடலாம் என்றும், நபிகளாரையும், அவர்களுடன் வந்துள்ள முஸ்லிம்களையும் அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தனர். உஸ்மான்(ரலி) யின் இந்த பேச்சுவார்த்தை மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தது. ஆயினும் இது பற்றிய தகவல்கள் எதுவும் நபிகளாருக்குத் தெரிவிக்கப்படவில்லை. இதற்கிடையில் உஸ்மான்(ரலி) அவர்கள் கொல்லப்பட்டதாக வதந்தி கிளம்பியதால் நபிகளார் பெரும் துயரத்திற்கு ஆளானார்கள். புனித மிக்க ரம்ஜான் மாதத்தில் சமாதானத்திற்காகச் சென்ற பிரதிநிதியைக் கொன்றது,

தங்களின் நியாயமான உரிமையான கஅபாவை பார்வையிட அனுமதி மறுப்பது ஆகிய குறைஷியர்களின் இச் செயல்களைத் தங்கள் மீது தொடுக்கப்படும் போர்ப் பிரகடனம் என்றே முஸ்லிம்கள் கருதினர். எனவே அதற்கான தயாரிப்புகளில் அவர்கள் ஈடுபட வேண்டியதாயிற்று.

## விசுவாசத்தை உறுதி செய்தல்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் ஒரு கருவேலமரத்தின் நிழலில் இருந்து கொண்டு ஆலோசனை நடத்தினார்கள். அங்கிருந்த ஒவ்வொரு முஸ்லிமிடமும் தங்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பதாகவும், விசுவாகத்துடன் இருப்பதாகவும் உறுதி மொழி வாங்கினார்கள். முடிவுகள் எப்படி இருந்தாலும் அவர்கள் அனைவரும் நபிகளாரின் பக்கம் இருப்பார்கள் என்பதையே இந்த உறுதிமொழிகள் காட்டின. அவர்கள் புனித யாத்திரை வந்துள்ளனர். அவர்களிடம் ஆயுதங்கள் எதுவுமில்லை. போரில் ஈடுபடுவதற்கான எந்த விதமான தயாரிப்பும் அவர்களிடமில்லை. இறப்பைச் சந்திக்க நேர்ந்தாலும் விட்டு விட்டு ஓடிப்போக மாட்டோம் என்பதே தோழர்கள் அளித்தட்ட உறுதி மொழியின் பொருளாகும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது வலது கரத்தின் மேல் இடது கரத்தை வைத்து அங்கு கூடியிருந்த தோழர்களிடம் இறந்து போனதாக கருதப்பட்ட உஸ்மான் (ரலி)யின் பெயரால் உறுதி மொழி எடுத்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். இப்படி ஒவ்வொருவராக உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். இருந்த போதிலும், கடைசித் தோழர் உறுதிமொழி எடுக்கும் தருவாயில் உஸ்மான்(ரலி) திடீரென்று வந்தார்கள். எனவே நபிகளார் பெரும் மகிழ்ச்சியடைந்தார்கள். புனித மாதத்தில் ஒருவரைக் கொல்லும் மோசமான செயலில் குறைஷியர்கள் ஈடுபட வில்லை என அறிந்து நிம்மதி அடைந்தார்கள். இதனால் போர்ச் சூழ்நிலை விலகியது. பேச்சுவார்த்தை நடத்தி புதிய உடன்பாடு ஒன்றை கண்டிட குறைஷியர்கள், சுஹைல் என்ற பிரதிநிதி ஒருவரை

அனுப்பவிருப்பதாக நபிகளாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவரை வரவேற்று அவர் கொண்டுவரவிருக்கும் புதிய திட்டத்தைப் பரிசீலிக்க நபிகளார் எண்ணினார்கள்.

முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில், குறைஷியர்களுடன் நடத்தவிருக்கும் பேச்சு வார்த்தையின் அம்சங்கள் பற்றி நபிகளார் சிந்திக்க ஆரம்பித்தார்கள். தோழர்கள் அனைவரும் போர் தவிர்க்க இயலாது எனக்கருதி தங்களது விசுவாசத்தை நபிகளாரிடம் ஏற்கனவே தெரிவித்திருந்த சூழ்நிலையில் பேச்சு வார்த்தையைத் துவக்க வேண்டிய திருந்தது. இந்நிலையில், சமாதானப் பேச்சு வார்த்தை அவர்களின் விசுவாசத்திற்கு ஒரு பரிசோதனையாக அமைந்தது. இது பற்றி அருளப்பட்ட வசனத்தில் இறைவன் குறிப்பிடுவதாவது,

> இறை நம்பிக்கையாளர்கள் உம்மிடம் அந்த மரத்திற்குக் கீழே சத்தியப் பிரமாணம் செய்து கொண்டிருந்தபோது அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தி கொண்டான். (குர்ஆன் *48:18*)

முஸ்லிம்கள் தங்களது உரிமையை நிலைநாட்ட விரும்புகின்றனர். சமீபத்தில் நடந்து முடிந்துள்ள போர்களுக்குப் பின் அவர்களின் கௌரவம் பெருமளவு உயர்ந்துள்ளது. எனவே பணிந்து போகும் பேச்சுக்கே இடமில்லை.

## படைப்பாளனும், படைப்பினங்களும்

தமது தோழர்களிடம் கருவேலமரத்தின் நிழலில் இருந்து கொண்டு நபிகளார் உறுதி மொழி பெற்ற இந்த நிகழ்வு பின்னாளில் பெரும் முக்கியத்துவம் பெற்றது சிலர் கருவேல மரத்தைப் புனித மரமாகக் கருதினர். நோயாளிகள் இந்த மரத்தின் அடியில் வந்திருந்து நிவாரணம் பெற்றனர். இப்படி இந்த மரத்தின் அடியில் உட்கார்ந்து தங்களது நோய்களுக்கு நிவாரணம் பெறும் வழக்கம் நாளடையில் அதிகரித்தது. இந்த மரத்தைச் சிலர் புனிதமாகக் கருதி ஜியாரத் செய்ய ஆரம்பித்தனர். இது

இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கைக்கும், நபிகளாரின் போதனை களுக்கும் எதிராக இருந்தது. இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கையைக் காப்பாற்றவும், அதிலிருந்து யாரும் விலகிச் செல்லாமல் இருக்கவும், ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள் இந்த மரத்தை வெட்டி வீழ்த்தினார்கள். மக்கள் தங்களைப் படைத்தவனைத்தான் வணங்க வேண்டும். அவனது படைப்பினங்களை அல்ல என்றும் ஹழ்ரத் உமர்(ரலி) குறிப்பிட்டார்கள். நபிகளாரின் ஞாபகச் சின்னங்களோ, விட்டுப்போன பொருட்களோ இறைவனுக்கு இணையாகாது என்பதை இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது.

## ஹுதைய்பிய்யா உடன்படிக்கை

இந்த உடன்படிக்கை மதீனா அரசிற்கும் மக்கா நகர் குறைஷியர்கட்கும் கி.பி.628 மார்ச்சில் (ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு) ஏற்பட்டது. குறைஷியர்களின் பிரதிநிதி சுஹைலையும் அவருடன் வந்த மிக்ராஸ், ஹுவாயித் ஆகியோரையும் நபிகளார் வரவேற்றார்கள். தோழர்கள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து சிறிய தூரம் தள்ளி பேச்சு வார்த்தைகள் தொடங்கின. உடன்படிக்கை பற்றி ஆழமான விவாதங்கள் நடைபெற்றன. உடன்பாட்டிற்கான அம்சங்கள் பேசி முடிக்கப்பட்ட பின்னர், அதனை எழுதும்படி நபிகளார் தனது மருமகன் அலீ(ரலி) அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். வழக்கம்போல், அலீ(ரலி) அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹுவின் திருநாமத்தால் (பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்) என்று எழுதி ஆரம்பித்தபோது, சுஹைல் அப்படி எழுதுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 'அர்ரஹ்மான்' என்பது தனக்குத் தெரியாது என்றும், பிஸ்மிகல்லாஹும்ம (யா அல்லாஹ் உனது பெயரில்) என்று தான் எழுத வேண்டு மென்றும் சொன்னார். அப்போது குறுக்கிட்டுப் பேசிய நபித் தோழர்கள், அப்படி மாற்றி எழுதுவது (குறைஷியர்கள் சொல்வது போல்) சரியல்ல என்று கூறினார்கள். ஆனால் நபிகளார் குறிக்கிட்டு 'இறைவனே உனது பெயரால்' என்றே எழுதுமாறு அலீயிடம்

சொன்னார்கள். பின்னர் நபிகளார் அலீயை நோக்கி 'இந்த ஒப்பந்தம் அல்லாஹ்வின் தூதர் முஹம்மதுவுக்கும், அம்ர் மகன் சுஹைலுக்குமிடையே செய்து கொள்ளப்பட்டது' என்று எழுதுமாறு கூறினார்கள். இதனையும் ஏற்க மறுத்த சுஹைல் உங்களை அல்லாஹ்வின் தூதராக நாங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் உங்களுடன் சண்டை புரிந்திருக்க மாட்டோமே, எனவே அப்துல்லாஹ் மகன் முஹம்மது' என்றே எழுத வேண்டும் எனக் கூறினார். இதனை ஏற்கனவே எழுதிவிட்ட அலீ(ரலி) அவர்கள் தான் அப்படி மாற்றி எழுத முடியாது எனத் தெரிவித்தார். இதனைக் கேட்ட நபிகளார் அலீயிடம், எழுதப்பட்ட அந்த வார்த்தைகளை தன்னிடம் காண்பிக்கும்படி சொல்லி அவற்றை தாமே தம் கைப்பட அழித்து விட்டு சுஹைல் சொன்னபடி எழுதும்படி கூறினார்கள். (அதாவது அப்துல்லாஹ் மகன் முஹம்மது என்று) அலீ(ரலி)யும் மற்ற தோழர்களும் நபிகளாரின் இந்தச் செயல் குறித்து அதிர்ச்சி அடைந்தனர்.

நபிகளாரின் இச்செயலை அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. ஒப்பந்தத்தின் அம்சங்களைப் படித்த போது, அதில் முஸ்லிம்களுக்குப் பாதகமாக பல அம்சங்கள் இடம் பெற்றிருந்தன. இதனை அறிந்த தோழர்கள் அதிர்ச்சிக் குள்ளானார்கள்.

## உடன்படிக்கையின் ஐந்து அம்சங்கள்

1. இந்த ஆண்டு முஸ்லிம்கள் புனிதப் பயணம்(உம்ரா) செய்ய இயலாது. அடுத்த ஆண்டு அவர்கள் உம்ரா செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அதுவும் மூன்று நாட்கள் மட்டுமே
2. பத்தாண்டு காலம் போர் நிறுத்தம் அனுஷ்டிக்கப் படவேண்டும். அனைவரும் எவ்விதத் தடையும் இல்லாமல் அந்தப் பிரதேசத்தில் பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ளலாம்.

3. இந்த உடன்படிக்கையின் அம்சங்கள் அனைத்தும் தங்களுக்குள் உடன்பாடு செய்து கொண்டுள்ள எந்த ஒரு இனக் குழுவிற்கும் பொருந்தும்.
4. மக்காவிலிருந்து மதீனாவுக்குச் செல்லும் முஸ்லிம்களை ஏற்றுக் கொள்ளாமல் அவர்களை மக்கா குறைஷித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் மதீனாவிலிருந்து மக்கா வருபவர்களை திருப்பி அனுப்ப வேண்டியதில்லை. அவர்கட்கு அடைக்கலம் கொடுக்க வேண்டும்.
5. உறையிலிருந்து வாளை எடுக்கக்கூடாது. துரோகம் செய்யக் கூடாது.

இப்படி பல அம்சங்கள் உடன்பாட்டில் முஸ்லிம் களுக்குப் பாதகமாகவும், அவமரியாதை செய்யும வண்ணமும் இருந்தன. ஆனால் நபிகளார் அவற்றை ஏற்றுக் கொண்டார்கள். சமாதானத்தை உருவாக்கும் நோக்கத்துடனேயே மக்கா வாசிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் இந்த உடன்படிக்கையைச் செய்திருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

## மதீனா இரு எதிரிகளுக்கிடையில்

புகழ் பெற்ற நீதிபதி சர்கோஷி ஒரு முக்கிய அம்சத்தை குறிப்பிடுகிறார். கைபர் மதீனாவிற்கு வடக்கிலும், மக்கா அதற்கு தெற்கிலும் உள்ளன எனக்குறிப்பிடும் அவர் இந்த இரண்டு எதிரிகளுக்கும் நடுவில் மதீனா சிக்கியுள்ளது என்கின்றார். கைபரிலுள்ள யூதர்களும், மக்காவிலுள்ள குறைஷிகளும் மதீனாவிலிருந்த முஸ்லிம்களுடன் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். அவர்கள் இருவரும் கூட்டாளிகள். முஸ்லிம்கள் தாக்குதல் நடத்தும் போது ஒருவருக்கொருவர் உதவி செய்ய அவர்கள் உடன் பட்டிருந்தனர். நபிகளார் கைபர் மீது போர் தொடுத்தால் மக்கா குறைஷியர்கள் மதீனா வைத்தாக்குவர். நபிகளார் மக்காவின் மீது போர் தொடுத்தால்

கைபர் யூதர்கள் மதீனாவைத் தாக்க முயற்சிப்பர். இந்தச் சூழ்நிலையில், ஒரு அறிவு கூர்மை கொண்ட தளபதியும், சிறந்த அரசியல்வாதியுமான ஒருவர், அறிவார்ந்த முடிவுகள் மேற்கொண்டு, யாராவது ஒரு எதிரியுடன் சமாதானம் மேற்கொள்வார். அதற்குப்பின் வரும் தாக்குதல்களைச் சமாளிப்பது இலகுவானதாகும்.

குறைஷியர்களின் நிபந்தனைகளை ஏற்பது ஒன்று தான் அப்போதைய சூழ்நிலையில் புத்திசாலித்தனமாக இருந்தது, அதைத்தான் நபிகளார் செய்தார்கள். யாருடன் சமாதானம் கொள்ள வேண்டும் என்பது தான் முக்கிய அம்சமாகும். கைபருடனா அல்லது மக்காவுடனா? கைபர் முக்கியப் பிரச்னை இல்லை. பனூநாளீர் இனக்குழுவைச் சார்ந்த யூதர்கள் மதீனாவிலிருந்து வெளியேறி விட்டனர். மீண்டும் மதீனா விற்குத் திரும்புவதே அவர்களின் முதல் கோரிக்கையாகும். அவர்கள் நன்கு வசதி படைத்தவர்கள். பொருளாதார இழப்பீடு பெறுவது அவர்கட்குத் தேவையில் லாததாக இருந்தது.

அதே நேரத்தில் மக்காவாசிகள் நபிகளாரின் நெருங்கிய உறவினர்கள் நபிகளாருடன் மதீனா வந்த தோழர்கட்கு மக்காவில் சகோதரர்களும், பெரியப்பா, சித்தப்பாமார்களும், மருமகன்–களும், இருந்தனர். இந்த உறவினர்களின் மீது தாக்குதல் தொடுக்காது அவர்களை மீட்பதுதான் அப்போதைய தேவையாக இருந்தது. தவிரவும், பத்ர், உஹுது, அஹ்ஸாம் ஆகிய போர்களில் தோல்வியுற்று மிகுந்த பலவீனத்தில் மக்காவாசிகள் இருந்தனர். அவர்களது பொருளாதார நிலைமை சீர்–கெட்டிருந்தது. வர்த்தகம் பாதிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக, முஸ்லிம்களுடன் சமாதானம் செய்து கொள்ளுமாறு அவர்களை இலகுவாகச் சரிகட்ட முடிந்தது. பல்வேறு காரணங்களுக்காக மக்காவாசிகள் முஸ்லிம்களுடன் சுமூக உறவுகள் கொண்டிட விரும்பினர். பஞ்சத்தின் போது அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற நபிகளார் முயற்சிகள் மேற் கொண்டிருந்தார்கள்.

அவர்களது கௌரவத்தையும் பெருமையையும் பாதுகாக்கும் பொருட்டே அவர்களின் பிற நிபந்தனைகள் அனைத்தையும் ஹுதைபிய்யாவில் நபிகளார் ஏற்றுக் கொண்டார்கள். அதில் அரைவரியில் எழுதப்பட்ட ஒரு விதி இருந்தது. இது ஒரு மிக முக்கியமான அம்சமாகும். ஆயுதங்களை உறைகளிலிருந்து வெளியே எடுக்கக் கூடாது. துரோகம் செய்யக்கூடாது என்பதே அந்த அம்சமாகும். மக்காவாசிகளும், மதீனா முஸ்லிம்களும் ஒருவரையொருவர் தாக்கக்கூடாது. துரோகம் புரிந்தோ, சதிசெய்தோ, ஒருவரை யொருவர் காட்டிக் கொடுக்கக் கூடாது.வேறு முறையில் சொல்ல வேண்டுமானால், முஸ்லிம்கள் ஒரு மூன்றாவது நாட்டுடன் போர் புரியும் போது மக்கா வாசிகள் நடுநிலை வகிப்பார்கள். துரோகமோ, காட்டிக் கொடுத்தலோ இருக்காது. தன்னுடைய இந்த ஒரே ஒரு நிபந்தனையை மட்டும் குறைஷியர்களை ஏற்கச் செய்த நபிகளார், அவர்கள் விதித்த மற்ற நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டார்கள். பத்தாண்டு காலத்திற்குப் போர் நிறுத்தம் செய்ய உடன்பட்டார்கள். மக்காவிலிருந்து செல்லும் வர்த்தகக் குழுவினர் மதீனா வழியாகச் செல்ல அனுமதியளித்தார்கள். இதற்கு மாற்றாக, மூன்றாவது நாடு ஒன்றுடன் போர் புரியும் போது, மக்காவாசிகள் நடுநிலை வகிப்பதை உறுதி செய்தார்கள். மக்காவிற்குச் செல்வதைத் தவிர்த்து ஹுதைபிய்யாவிற்கு வந்ததையே புனிதப் பயணமாகக் கருதுமாறு உற்சாகம் குன்றிக் காணப்பட்ட தம்முடைய தோழர்களுக்கு நபிகளார் ஆணையிட்டார்கள். அவர்கள் (தோழர்கள்) பெரிதும் ஏமாற்ற மடைந்த போதிலும், நபிகளாரின் ஆணைக்குக் கட்டுப்பட்டார்கள்.

## அமைதியின்மை

இந்த ஒப்பந்தத்தை 'வஞ்சகமான ஒப்பந்தம்' என நபித்தோழர்கள் கருதிய போதிலும், கஅபாவை தரிசிக்–காமலேயே அவர்கள் திரும்ப வேண்டியதாயிற்று. ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள் நபிகளாரைச் சந்தித்து ஒப்பந்தத்திற்கு தமது

கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததோடு, பல்வேறு கேள்விகளையும் எழுப்பினார்கள். நீங்கள் இறைவனின் தூதர் இல்லையா? நமது பக்கம் நியாயம் இல்லையா? நமது எதிரிகள் தவறானவர்கள் இல்லையா? எதற்காக நாம் நம்முடைய சமயத்தின் மாண்பைக் குலைக்கும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும்' என்றெல்லாம் ஹழ்ரத் உமர்(ரலி) கேள்வி எழுப்பினார்கள். உமர்(ரலி) அவர்களின் கேள்விகளுக்கு நபிகளார் அமைதியாகப் பதில் சொன்னார்கள். ஆனால் இந்தப் பதில்களால் திருப்தி அடையாத உமர்(ரலி) ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) பக்கம் திரும்பினார்கள். அவரை அமைதியாக இருக்கும்படி கூறிய ஹழ்ரத் அபூபக்கர்(ரலி), நபிகளார் செய்தது சரியாகத்தான் இருக்கும் என நம்பிக்கை கொள்ளுமாறு கூறினார்கள். உமர்(ரலி) தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியானார்கள். எனினும்,'இந்த ஒப்பந்தம் அவமானகரமானது' என்பதில் உறுதியாக இருந்தார்.

இந்த நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற முஸ்லிம்கள் பெரும் வருத்தமடைந்தனர். இதற்குப் பின்னால் இருந்த நபிகளாரின் தீர்க்க தரிசனத்தை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. நபிகளார் முஸ்லிம்களுக்கு தைரியத்தையும், மரியாதையையும் கற்பித்துக் கொடுத்திருந்தார்கள். ஆனால், இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம், அவர்கள் ஆதரவற்ற நிலையில் இருப்பது போன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், பலியிடுவதற்காக கொண்டு வரப்பட்ட ஒட்டகங்களை அங்கேயே (ஹுதைபியாவில்) பலி கொடுக்குமாறு தோழர்களிடம் கேட்டுக்கொண்ட போது, அவர்கள் அதனைச் செய்திட மறுத்தார்கள். அந்த அளவுக்கு தோழர்களின் மனதில் கசப்புணர்ச்சியும், காயங்களும் இருந்தன. நபிகளார் மூன்று முறை உத்தரவிட்ட பின்னரும், தோழர்களிட மிருந்து பதில் இல்லை. இப்போதுதான் முதல் தடவையாக முஸ்லிம்கள் நபிகளாரின் ஆணைகளுக்கு ஒட்டு மொத்தமாக கீழ்படிய மறுக்கிறார்கள். இதனால் வியப்பும், வருத்தமும், ஏமாற்றமும் அடைந்த நபிகளார் தமது கூடாரத்திற்குச் சென்று

அங்கிருந்த தமது மனைவி உம்மு சல்மாவிடம் நடந்ததை விளக்கிச் சொன்னார்கள். இதனைக் கேட்ட உம்மு சல்மா அவர்கள் நபிகளாரிடம் அமைதியாகவும், அறிவுப்பூர்வமாகவும் செயல்படுமாறு கூறினார்கள். எந்த ஒரு வார்த்தையும் பேசாமல் அமைதியாகச் சென்று முதலில் நீங்கள் உங்களது ஒட்டகத்தை அறுத்துப் பலி கொடுத்திடுங்கள் என்று நபிகளாருக்கு ஆலோசனை கூறினார்கள். "'ஓ இறைவனின் தூதரே, இந்த 1500 பேர்களும் நீங்கள் விரும்பியவாறு செய்வார்கள் என்று எதிர்பார்க்க வேண்டாம். அல்லாஹ் உங்களுக்கு விதித்துள்ள கடமையை நீங்கள் செய்யுங்கள்'. உடனே சென்று அந்தப் பரந்த வெளியில் எல்லோரும் பார்க்கும் வண்ணம் உங்களது கிரியைகளைச் செய்திடுங்கள் அது போதுமானது' என்றும் சொன்னார்கள்." இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்ட நபிகளார் அதன்படி ஒட்டகத்தை அறுத்துப் பலி கொடுத்தார்கள். இதனைக் கண்ணுற்ற தோழர்களும், ஒருவர் பின் ஒருவராக வந்து தங்களது கிரியைகளை நிறைவேற்றினர். பின்னர் நபிகளார் தனது தலையை மொட்டை அடித்துக் கொள்ள, தோழர்களும் அவ்வாறே செய்தார்கள்.

## உணர்ச்சி வயப்பட்ட குருட்டுத்தனமும் – அறிவும்

ஒப்பந்தம் பற்றிய தங்களது முடிவு முற்றிலும் தவறானது என்பதை நபித்தோழர்கள் விரைவிலேயே உணர்ந்து கொண்டனர். நபிகளாரின், அசாதாரணமான அறிவு பகுத்தறியும் பண்பு, சமயோசிதமான செயல், ஆழ்ந்த ஆன்மீகப் பண்பு ஆகியவற்றை நபித்தோழர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. ஒட்டகம் ஹுதைபியாவில் ஒரு இடத்தில் நின்று கொண்டு அப்பால் போக மறுத்த அந்த நிகழ்வினை இந்த ஆண்டு இதற்கு மேல் செல்ல வேண்டாம் என்று தனக்கு வந்திட்ட ஓர் அத்தாட்சியாகவே நபிகளார் கருதினார்கள். குறைஷியர்களிடம் நடைபெற்ற நான்கு சுற்றுப் பேச்சு வார்த்தைகளும்

தோல்வியடைந்தபோதும், நபிகளார் அமைதியாகவே இருந்தார்கள். கஅபாவில் நுழைவதாக தான் கண்ட கனவு நிச்சயம் நனவாகும் என்று உறுதியாக நம்பிய நபிகளாருக்கு அது எப்போது நிகழும் என்பதை மட்டும் தீர்க்கமாகச் சொல்ல இயலவில்லை. எதிரிகளுக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்க வேண்டுமென உறுதிமொழி எடுத்துக்கொண்ட முஸ்லிம்களுக்கு, இந்த சமாதான உடன்படிக்கையின் அம்சங்களை மதித்து நடக்க வேண்டுமென்ற உறுதிமொழியினை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

குறைஷியர்களின் பிரதிநிதியாக வந்த 'சுஹைல்' இறைவனின் பெயரால் என்ற சொற்றொடரையும், 'நபிகளார் இறைவனின் தூதர்'என்ற சொற்றொடரையும் ஒப்பந்தத்தில் எழுத மறுத்தபோது, அவரது வார்த்தைகளைப் பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த நபிகளார், அவரது (சுஹைல்) கொள்கையின் படி அவரது நிலைப்பாடு சரிதான் என்பதை உணர்ந்து கொண்டார்கள். குறைஷியர்கள், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை இறைவனின் தூதர் என்று ஏற்றுக் கொண்டு விட்டால், பின் ஏன் அவர்கள் முஸ்லிம்களிடம் போர் செய்ய வேண்டும். பிரச்னை எதுவும் இல்லையே. இப்படி ஒரு தரப்பு உண்மை என்று நம்பும் ஒன்றை இன்னொரு தரப்பு நிராகரிக்கும் போது, சமநிலையில் நின்று ஒரு உடன்படிக்கையை உருவாக்க இயலாது. நபிகளாரின் பால் மாறாத அன்பும், மரியாதையும் கொண்டிருந்த தோழர்கட்கு அந்தத் தருணத்தில் குறைஷியர்கள் கூற்றில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ள இயலவில்லை. ஆனால் நபிகளாரின் நிலைப்பாடு நியாயத்தின் அடிப்படையிலும், ஆன்மீக, அறிவார்ந்த சிந்தனைகளின் அடிப்படையிலும் அமைந்திருந்தது.

இதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில் உண்மையும், ஆழ்ந்த ஆன்மீகமும் ஒரு குருட்டுத்தனமான உணர்வுப்பூர்வமான நிலைக்கு இட்டுச் செல்லக்கூடாது. சூழ்நிலையின் தன்மையை உணர்ந்து அதற்கேற்றாற்போல் மற்றவர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த சமாதான உடன்பாட்டை ஏற்க முடியாது என்று முஸ்லிம்கள் கருதியது சரியானதே. ஆனால் உடன்பாடு செய்து கொள்ளும் இருதரப்பாரும் தங்களது கருத்துக்கள் சரியானதே என்ற நிலை எடுத்தனர். முஸ்லிம்களின் மரியாதையையும், கௌரவத்தையும் பாதுகாப்பதற்காக, குறைஷியர்களை அவமானப்படுத்த நபிகளார் விரும்பவில்லை. அகழிப் போரில் பெற்ற வெற்றியை தமக்கு சாதகமாக்கிக் கொள்ளவும் அவர்கள் நினைக்க வில்லை. அந்த ஆண்டு மக்காவிற்குள் வரக்கூடாது என்று குறைஷியர்கள் விதித்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டதன் மூலம் நீண்ட கால சமாதானத்திற்கு நபிகளார் வித்திட்டார்கள். இரு தரப்பு நலன்களையும் பாதுகாக்கும் அந்த சமாதான உடன்படிக்கை விரைவிலேயே முஸ்லிம்களுக்குச் சாதகமாக அமையும் என்பதையும் நபிகளார் உணர்ந்திருந்தார்கள். மக்காவிலிருந்து மதீனாவிற்கு வரும் முஸ்லிம்களை மக்காவிற்கே திருப்பி அனுப்ப வேண்டும். ஆனால் மதீனாவிலிருந்து பாதுகாப்புக் கருதி மக்கா வருபவர்கட்கு புகலிடம் அளிக்க வேண்டும்' என்ற உடன்பாட்டின் இந்த அம்சம் மட்டுமே முஸ்லிம்களின் நலன்களுக்குப் பாதகமாக இருந்தது. மதீனாவை விட்டுச் செல்லும் முஸ்லிம் அல்லாதவரால் முஸ்லிம் சமுதாயத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் இஸ்லாத்தின் மீது நம்பிக்கை கொண்ட ஒரு மக்கா வாசி அவரது இனக் குழுவினரிடமே ஒப்படைக்கப்பட்டால் அது அவர்கட்குப் பெரும் துன்பத்தை விளைவிக்கக் கூடும்.

## தெளிவான வெற்றி

இறைவன் பால் நம்பிக்கை வைத்து நபிகளார் மேற்கொண்ட இந்த உடன்பாடு பத்து ஆண்டுகள் போர் நிறுத்தத்திற்கு வழி வகுத்ததோடு, அடுத்த ஆண்டு கஅபா விற்குச் செல்ல முடியும் என்ற வாய்ப்பினையும் நல்கியது. ஹழ்ரத் உமர்(ரலி) உள்ளிட்ட பெரும்பாலான தோழர்கள் உடனடியான பலன்களை எதிர்பார்த்து, இந்த உடன்படிக்கையைத் தோல்வியாகக் கருதினர்.

பெரும்பாலான தோழர்களைப் போலவே நபிகளாரின் முடிவிற்குக் கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்த ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள், அதற்காக வருத்தம் தெரிவித்த போதிலும், சரணாகதி அம்சங்கள் கொண்ட ஒரு ஆவணமே இந்த உடன்பாடு என்பதில் உறுதியாக இருந்தார்கள். திரும்பிச் செல்கின்ற போது அவர் நபிகளார் தன்னை அழைத்துள் ளதாகவும், பொருத்தமற்ற நடவடிக்கைகளுக்காக தன்னை குறை கூறுவார்கள் என்றும் அதற்கும் மேலாக தம்முடைய நடவடிக்கைகளைக் குறை கூறி இறைவசனங்கள் அருளப் பட்டுள்ளதாக கூறுவார்கள் என்றும் ஹழ்ரத் உமர்(ரலி) தெரிவித்தார்கள். மிகவும் மலர்ந்த முகத்துடன் காட்சியளித்த நபிகளார் உமர்(ரலி) யிடம் நீங்கள் எதிர்ப்பார்த்ததற்கு மாறாக இறை வசனங்கள் வெளிப்பட்டுள்ளன' என்று தெரிவித்தார்கள்.

> (நபியே!) நாம் உமக்கு பகிரங்கமான வெற்றியை அளித்து விட்டிருக்கிறோம். (குர்ஆன் *48:1*)

விசுவாச உறுதிப் பிரமாணம் பற்றி குர்ஆன் கூறியிருப்பதாவது

> இறை நம்பிக்கையாளர்கள் உம்மிடம் அந்த மரத்திற்குக் கீழே சத்தியப் பிரமாணம் செய்து கொண்டிருந்த போது அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தி கொண்டான். விரைவில் கிடைக்கும் வெற்றியையும் அவர்களுக்கு வெகும தியாக வழங்கினான். (குர்ஆன் *48:18*)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் ஆரம்ப கட்டக் கனவை மெய்ப்பிக்கும் விதத்திலேயே இவை அமைந்துள்ளன.

> உண்மையாதெனில், அல்லாஹ் தன் தூதருக்கு உண்மையான கனவையே காட்டியிருந்தான். அதுவோ, முற்றிலும் சத்தியத்திற்கு ஏற்பவே இருந்தது. அல்லாஹ் நாடினால் நிச்சயம் நீங்கள் சங்கை மிகு பள்ளிவாசலில் முழு அமைதியுடன்

நுழைவீர்கள். உங்களது தலை முடியை மழிப்பீர்கள் அல்லது குறைப்பீர்கள். மேலும் உங்களுக்கு எந்த அச்சமும் இருக்காது. நீங்கள் எதை அறியா திருந்தீர்களோ அதனை அவன் அறிந்திருந்தான். எனவே அந்தக் கனவு நிறைவேறுவதற்கு முன்பாக அண்மையிலுள்ள இந்த வெற்றியை அவன் உங்களுக்கு வழங்கியுள்ளான். (குர்ஆன் *48:27*)

நடைபெற்ற சம்பவங்கள் தோழர்களின் எண்ணத்திற்கு முற்றிலும் மாறாக அமைந்திருந்தன. போர் புரிவதற்காக விசுவாசப் பிரமாணம் எடுத்தவர்கள், சமாதானத்திற்காக விசுவாசப் பிரமாணம் எடுக்க நேர்ந்தது. தோல்வி என்று வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று தெளிவான வெற்றியாக மாறிப் போனது. நிறைவேறாது என்று கருதப்பட்ட கனவு, வருங்காலத்தில் நிச்சயம் நடக்கும் என்ற நிலையைத் தோற்றுவித்தது. நீங்கள் புனித ஸ்தலத்திற்குள் நுழைய முடியும்' என்ற நம்பிக்கையை அளித்தது பெரும்பான்மையான முஸ்லிம்கள் இந்த உடன்படிக்கை அளித்துள்ள நல்வாய்ப் புகளையும், நம்பிக்கைகளையும் உணர்ந்து கொள்ளவில்லை.

இந்த உடன்பாடு, நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கூர்ந்த மதியையும், ஞானத்தையும் வெளிப்படுத்திய ஒரு நடவடிக்கை என்றே கருத வேண்டும். இதன் மூலம் தான் ஒரு சிறந்த முன்மாதிரி என்பதை நபிகளார் மெய்ப்பித்துக் காட்டினார்கள்.

# உம்மு சல்மா வழங்கிய தீர்வு

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தமது வாழ்க்கையின் இன்னொரு பரிணாமத்திலும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். ஹுதைபியாவில் தோழர்கள் ஒட்டகங்களை பலியிட மறுத்த போது, நபிகளார் தனது மனைவி உம்மு சல்மாவிடம் சென்று இது பற்றிக் கூறியபோது, அவர்கள் நபிகளாருக்கு ஆறுதல் கூறினார்கள். நபிகளார் மீது நம்பிக்கை வைத்து பிரச்னை தீர ஆலோசனை வழங்கினார்கள். இது நபிகளார் தமது மனைவிமார்களிடத்தில் கொண்டிருந்த மதிப்பையும், அன்பையும் வெளிப்படுத்தியது. முன்பு கதீஜா(ரலி) அவர்களுடன் அனைத்து விஷயங்கள் பற்றியும் கலந்தாலோசித்தவாறே நபிகளார் பெண்களிடம் ஆலோசனை கேட்பதிலோ, அவர்களுடன் பேசுவதிலோ, அவர்களது கருத்தை ஏற்றுக் கொள்வதிலோ ஒரு போதும் தயக்கம் காட்டியதில்லை.

ஒரு சமயத்தில் எதிர்காலமே பிரச்னைக்குரியதான போது, ஒரு சாதாரண மனிதரைப் போல அவர்கள் தங்களது மனைவியைச் சந்தித்து ஆலோசனை செய்து அதன்படி செய்தார்கள். அதன் மூலம் ஒட்டுமொத்த மனித சமூகத்திற்குமே முன்னுதாரணமாக விளங்கினார்கள். உம்மு சல்மா(ரலி) அழகுமிக்கவராகவும், இறை பக்தி மிக்கவராகவும் துணிவுள்ள–வராகவும் திகழ்ந்தார்கள். நபிகளாரின் வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகித்தார்கள். நபிகளார் உம்மு சல்மா(ரலி) அவர்களிடமே

அதிக ஈடுபாடு கொண்டு, அவர்களது கருத்துக்களை ஏற்று செயல் படுவதைக்கண்டு தானே பொறாமை கொண்டதாக ஒரு முறை ஆயிஷா(ரலி) அவர்கள் தெரிவித்தார்கள்.

மதீனாவிற்குத் திரும்பிய முஸ்லிம்கள் தங்களது அன்றாட வாழ்க்கையைத் தொடர்ந்தனர். ஆனால் முன்பை விட சற்று பதற்றமில்லாமல் வாழ்ந்தனர். போர் நிறுத்த உடன்பாடு காரணமாக அவர்கள் பாதுகாப்பைக் குறைத்துக் கொண்டு, தங்களது சமுதாயப் பிரச்னைகளிலும், இஸ்லாத்தைப் பரப்புவதிலும் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

# இஸ்லாம் வேகமாகப் பரவுகிறது

அரேபிய தீபகற்பத்தின் நான்கு மூலைகளிலும் இஸ்லாத்தின் செய்தி ஊடுருவிவிட்டது. ஒவ்வொரு இனக்குழுவில் உள்ளவர்களின் இதயங்களிலும் நபிகளார் இடம் பிடித்தார்கள். நபிகளாரின் ஆளுமைக்கு அத்தனை பெரிய சக்தி இருந்தது. பல்வேறு காரணங்களால் இஸ்லாமிய நீரோட்டத்தில் இணைந்திட மக்கள் தயக்கம் காட்டினர். பல இனக்குழுவினரும் இஸ்லாத்தின் செய்தியை உண்மை என உணர்ந்த போதிலும். குறைஷியர்களுக்குப் பயந்தே அதனை வெளிப்படுத்தாமல் இருந்தனர். அவர்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமே என அஞ்சி வாளாவிருந்தனர். குறைஷியர்களுடனான உறவு சீர் கெட்டால், தங்களது வியாபாரம் பாதிக்கப்படும் என்றும் பயந்தனர்.

ஹுதைபிய்யா உடன்படிக்கை அனைத்து இனக் குழுவினருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. போர் நிறுத்தம் ஏற்பட்டதன் காரணமாக தீபகற்பத்தில் ஒரு புதிய சகாப்தம் உருவாகியது. தங்களுக்கிடையே உள்ள விரோதங்களுக்கு முடிவுகட்ட பத்து ஆண்டுகளுக்கு அமைதியைப்பேண வேண்டு–மென்று இரு தரப்பினருமே உடன்பட்டிருந்தனர். இது அவர்களிடையே இருந்த அச்ச உணர்வைப் போக்கியது. இஸ்லாத்தில் இணைபவர்கள் மீது குறைஷியர்கள் இனி எந்த விதமான அடக்குமுறைகளையும் மேற்கொள்ள இயலாது இஸ்லாத்தில் இணைபவர்களைத் தடுத்து நிறுத்த அப்போது யாருமில்லை மூடப்பட்டிருக்கும் ஒரு கோட்டை வாசலின் முன்னால் ஒரு பெருங்கூட்டம் நிற்பதைப் போன்ற நிலைமை

முன்பு இருந்தது. இப்போது கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டு விட்டன. எனவே எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு உள்ளே நுழைகிறார்கள்.

மற்ற எல்லாவற்றையும் விட ஹுதைபிய்யா உடன்படிக்கை காரணமாகவே முஸ்லிம்கள் பெரும்பயன் அடைந்தனர். உடன்படிக்கை ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிவதற்–குள்ளாகவே முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் இஸ்லாத்தில் இணைந்தனர். 'மதில்மேல் பூனை' போல இருந்தவர்களும் இஸ்லாத்தில் இணைந்திடக் காத்திருந்தனர். ஹுதைபிய்யாவுக்கு நபிகளார் சென்ற போது 1400 பேர்கள் உடன் சென்றனர். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு மக்காவை விடுவிக்க அவர்கள் வழிநடத்திச் சென்ற படையில் 10,000 பேர் இருந்தனர். இதுவே இஸ்லாத்தின் வளர்ச்சியைப் பறை சாற்றும் சான்றாகும்.

புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கட்கு இஸ்லாத்தின் கொள்கை, கோட்பாடுகள் பற்றி பயிற்சி அளிக்க வேண்டியதிருந்தது. இதற்கு முறையான திட்டமிடுதலும், அமைப்பும் தேவைப்பட்டது. அரேபிய தீபகற்பத்திலுள்ள செல்வாக்கும், சக்தியும் கொண்ட பலர், இஸ்லாத்தில் இணைந்தனர்.

# பெரிய பாடம்

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் முக்கியமான படிப்பினை என்னவென்றால், பொறுமையின்மையைத் தவிர்க்கவேண்டும் தோற்றத்தை வைத்துக் கொண்டு எந்த விதமான முடிவுக்கும் வரக்கூடாது என்பதேயாகும். சாதகமற்ற உடன்பாடு என்று வர்ணிக்கப்பட்ட ஹுதைபிய்யா உடன் படிக்கை முஸ்லிம்களுக்கு பெரும் வாய்ப்புகளை அளித்தது. இதனை நுண்ணறிவு உள்ளவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அது ஒரு புதிய பாடத்தைக் கற்றுத் தந்தது. தமது தோழர்களிடையே பொறுமை உணர்வை ஊட்டிடும் ஒரு நல்ல வாய்ப்பாக அதனை நபிகளார் பயன்படுத்திக் கொண்டார்கள்.

இப்னு அசாகிர் என்பார் ஹுதைபிய்யா உடன் படிக்கை பற்றி ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்–களைப் பதிவு செய்துள்ளார். அபூபக்கர்(ரலி) அவர்கள் கூறியதாவது:– 'அது ஒரு மாபெரும் வெற்றியாகும். இறை வனுக்கும் நபிகளாருக்குமிடையே இருந்த ரகசியங்களை உணரக்கூடிய தொலைநோக்குப் பார்வை அன்றைய தினம் தோழர்களுக்கு இல்லை. தோழர்கள் பொறுமை இழந்தனர். ஆனால் இறைவன் பொறுமை இழக்கவில்லை. அதுவரை விஷயங்களை தன் போக்கில் நடந்திட விட்டு விட்டான். உலகில் மக்கள் உடனடி வெற்றியை எதிர்பார்க்கிறார்கள். உண்மையே உலகில் வெற்றியைத் தேடித்தரும். ஆனால் உடனடி வெற்றியை விரும்பும் மக்கள், அதனை அடைவதற்கான நெடிய பயணத்தை மேற்கொள்ள விரும்புவதில்லை.

# அனைத்து மன்னர்களின் எல்லைகளுக்கும் அப்பால்

உடன்படிக்கை செய்து கொண்ட அந்த ஆண்டில் முஸ்லிம்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியது. அப்போது நபிகளார் அண்டை நாடுகளின் மன்னர்களுக்கு இஸ்லாத்தில் இணையும்படி வேண்டி கடிதங்கள் அனுப்பினார்கள். தங்களுடைய நபித்துவத்தை உறுதிப்படுத்தும் சான்றாக 'முஹம்மது இறைவனின் தூதர்' என்று எழுதப்பட்டிருந்த வெள்ளியிலான முத்திரை ஒன்றினையும் கடிதங்களுடன் இணைத்து அனுப்பியிருந்தார்கள்.

இவ்வாறு கடிதம் கிடைக்கப்பெற்ற அபிசீனிய மன்னர் நஜ்ஜாஷி, இஸ்லாத்தில் இணைவதற்கு முன்னர், நபிகளாருக்கும் உம்மு ஹபீபா(ரலி) வுக்கும் நடைபெறவிருந்த திருமணத்திற்கு வருவதாக சம்மதம் தெரிவித்திருந்தார். நபிகளார், பாரசீக நாட்டு அரசர் கோஸ்ரோஸுக்கும், பைஜாண்டியப் பேரரசர் ஹெர்குலி–ஸுக்கும் எகிப்தின் அரசர் முகவ்கிஸ், பக்ரைன் மன்னர் சாவாவின் மகன் முந்திருக்கும், அரேபியாவின் ஒரு பகுதியை ஆண்டு வந்த (சிரியாவின் புறப்பகுதிகள் வரை) அபி சிமிர் அல் கஸ்ஸானி மகன் அல்ஹாரித்திற்கும் கடிதங்கள் எழுதினார்கள். இந்தக் கடிதங்–களிலுள்ள செய்திகள் ஒன்று போலவே இருந்தன. இந்தக் கடிதங்களில் நபிகளார் தான் இறைவனின் தூதர் என்றும்,ஓரிறைக் கொள்கையை வலியுறுத்தியும், இஸ்லாத்தில் இணையுமாறு வேண்டியும் எழுதியிருந்தார்கள். இதனை ஏற்க மறுத்தால், மக்களைத் தவறான வழியில் வைத்திருந்ததற்காக இறைவனிடம் பதில் சொல்ல வேண்டியதிருக்கும் என்பதையும் நினைவுபடுத்தி

இருந்தார்கள். இந்தக் கடிதங்களுக்கு மன்னர்களின் பதில்கள் மாறுபட்டதாக இருந்தன. மன்னர்கள் நஜ்ஜாஷியும் சாவா மகன் முந்திரும் இஸ்லாத்தின் செய்தியை ஏற்றுக்கொண்டனர். ஆனால், ஹெர்குலிஸ், முகவ்கிஸ் ஆகியோர் கடிதங்களுக்கு மதிப்பளித்த போதிலும் இஸ்லாத்தில் இணையவோ அல்லது எதிர்ப்புத் தெரிவிக்கவோ செய்யவில்லை.

அபிசிமிர் அல் கஸ்ஸானி போன்றோர், இஸ்லாத்தின் செய்தியை நிராகரித்துத் தாக்குதல்கள் நடத்தப் போவதாகப் பயமுறுத்தினர். இருந்த போதிலும், செய்தி எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டு விட்டது. மதீனாவில் இருந்த முஸ்லிம் சமூகத்தினரின் சமய அடையாளம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்கள் அந்தப்பகுதியில் ஒரு பெரும் சக்தியாக மதிக்கப்பட்டனர்.

உண்மையில் ஹுதைபிய்யா உடன்படிக்கை ஒரு பெரும் வெற்றியாக அமைந்தது. நிலைமை இப்போது முற்றிலும் மாறி விட்டது. ஒரு அமைதியான சூழலில் இஸ்லாத்தின் செய்தியான ஓரிறைக் கொள்கையை பரப்புவதில் நபிகளார் முனைப்புடன் ஈடுபட் டார்கள். அப்போது நிலவிய அமைதியான சூழ்நிலையில் மேலும் மேலும் அதிகமான இனக்குழு மக்கள் இஸ்லாத்தின் கொள்கைகளை அறிந்து கொண்டனர். சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். சிலர் ஏற்றுக் கொள்ளாத போதிலும் அதற்கு மதிப்பளித்தனர். சிலர் சண்டையிட்டனர்.

# நபிகளார் காலத்தில்
# இந்தியர்களிடையே ஏற்பட்ட தாக்கம்

**பாதான்**

பாரசீக மன்னரின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்டு பலூசிஸ்தான் கடற்கரைப் பகுதியை ஆண்டு வந்த இந்திய வம்சா வழியைச் சார்ந்த மன்னரொருவர் (அவரது ஆளுகை அரபிக் கடலில் உள்ள சில தீவுகளையும் உள்ளடக்கி இருந்தது) கி.பி. 628ல் பாரசீக மன்னர் கொல்லப்பட்டதையறிந்து இஸ்லாத்தில் இணைந்தார். அவருடைய படையினர் முழுவதும் இஸ்லாத்தில் இணைந்தனர். பல்கேசன் அரசகுமாரர்களில் ஒருவராக அவர் இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

**கன்னோஜ்மன்னன் சர்பாதிக்**

கன்னோஜ்மன்னர் 'சர்பாதிக்' என்பார் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை தான் மூன்று முறைகள் சந்தித்ததாகக் கூறியுள்ளார் என்று ஹஜ்ஹம் மகன் ஹபீஸ் தெரிவித்ததாக அபூஸயித் முஜஃப்பர் கூறியுள்ளார். (இரண்டு முறைகள் மக்காவிலும் ஒரு முறை மதீனாவிலும்) அவர் இஸ்லாத்தில் இணைந்தார். நபிகளார் மிகவும் அழகுடன் திகழ்ந்ததாக அவர் கூறினார்.

**பாபாரத்ன்**

பஞ்சாபிலுள்ள பதிண்டாவைச் சார்ந்த இந்தத் துறவி நபிகளாரைச் சந்தித்து இஸ்லாத்தில் இணைந்ததாகச் சொல்லப்படுகிறது.

**மலபார் நாட்டு மன்னர் சாம்ரி**

மலபாரை ஆண்டு வந்த 'சாம்ரி' என்ற மன்னர், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சந்திரனை இரண்டாகப் பிளந்த காட்சியை கண்டதாகச் சொல்லப்படுகிறது. இதன் காரணமாக அவர் நபிகளாரைப் பற்றி அறிய ஆவல் கொண்டார். அரேபியா– விற்குச் சென்று அவர் நபிகளார் முன்னிலையிலேயே இஸ்லாத்தைத் தழுவியதாகவும், அங்கிருந்து இந்தியா வரும் வழியில் இறந்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. அவரது வழிகாட்டுதல் காரணமாக இந்தியாவில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் இஸ்லாத்தைத் தழுவினர்.

## அறநெறியுள்ளவன்

மனிதனை இஸ்லாம் ஒரு அறநெறியுள்ளவனாகக் கருதுகிறது. அவன் சிந்திக்கவும், சுய பரிசோதனை செய்து கொள்ளவும், சிறந்த அறப்பண்புகளைத் தேர்வு செய்யவும் வல்லமை பெற்றுள்ளான். ஒரு அறநெறியாளன் எனும் முறையில் அவன் சமுதாயத்திற்கு நேரான வழிகாட்டவும் சகோதரத்துவம், ஒப்புரவு, நல்லிணக்கம் ஆகிய அற நெறிகளை சமுதாயத்தில் ஏற்படுத்தவுமான ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கி தீமைகளையும், கொடுமைகளையும், தீய சூழ்நிலைகளையும் எதிர்த்துப் போராட வேண்டும். இதற்கு மாறுபட்ட நிலை எடுப்பது சமுதாயத்தில் அறப்பண்புகளைக் குறைத்து மனிதனின் நல்ல மதிப்பீடுகளின் அடிப்படையையே பலவீனமாக்கிவிடும். இது பற்றி நபிகளார் கூறியிருப்பதாவது: ஒருவன் ஒரு தீய செயலைக் கண்டால், அதனைத் தனது கரம் கொண்டு தடுக்க வேண்டும். அது முடியவில்லை என்றால், தனது நாவால் தடுக்க வேண்டும் இந்த இரண்டையும் செய்ய முடியாவிட்டால், மனத்தளவில் அத்தீமையினை அவன் வெறுக்க வேண்டும். இது தான் நம்பிக்கையின் மிகப் பலமான நிலையாகும்.

## திவாலானவர்(ஆதரவற்றவர்)

மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் ஒருவனை அவன் செய்திட்ட வணக்க வழிபாடுகள் பொறுப்பிலிருந்து விடுவிக்காது. மன்னிப்பும் அளிக்காது. நபிகளார் ஒரு முறை தனது சகாக்களிடம் ஆதரவற்றவர் என்பவர் யார் என்று கேட்டபோது அவர்கள் 'தன்னிடம் பணமோ அல்லது வேறு பொருளே இல்லாதவர் ஆதரவற்றவர்' எனப்பதில் கூறினார்கள்.

நபிகளார் சொன்னதாவது:– இறுதித் தீர்ப்பு நாளின் போது என்னைப் பின்பற்றியவர்களில் ஒருவர் அவர் தொழுகை,

நோன்பு, ஜக்காத் ஆகிய கடமைகளை நிறைவேற்றியிருந்த போதிலும் அவர் ஆதரவற்றவராகக் கருதப்படுவார். அவர் யாரெனில் பிறரைத் திட்டியவர், பொய்யான குற்றச்சாட்டுகள் ஒருவர் மீது சுமத்தியவர். இன்னொருவருடைய பணத்தை அபகரித்தவர். பிறர் ரத்தம் சிந்தக் காரணமாக இருந்தவர். பிறரை அடித்துத் துன்புறுத்தியவர். அத்தகையோர் இறுதித் தீர்ப்பு நாளின் போது அழைக்கப்படுவார்கள். அவர்கள் செய்திட்ட நற்செயல்கள் அவர்களது கணக்கில் வரவு வைக்கப்படும் பின்னர் அவர் செய்திட்ட பாவங்கள் அவர் மேல் ஏற்றிவைக்கப்பட்டு, அவர் நரகத்தில் தூக்கி எறியப்படுவார்.

## தன்னையே தியாகம் செய்தல்

தார்மீகப் பொறுப்பையும் பதில் சொல்லும் கடமையையும் இஸ்லாம் பெரிதும் வலியுறுத்துகிறது. இதுவே மனித உரிமைகளையும் பொறுப்புகளையும் அடைவதற்கான வழிமுறைகளாகும். மனித உரிமைகள் பற்றிப் பேசுவது மிகவும் எளிதானது. ஆனால் அதைச் செயல்படுத்திக் காட்டுவது மிகவும் கடினமானது. தன்னுடைய தேவைகளைப் போலவே அடுத்தவர்களின் தேவைகளையும் உணர வேண்டும். இதற்கு சுயநலமற்ற தன்மையும், நேர்மையும், பரிவும் அதிக அளவில் இருக்க வேண்டும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் குறிப்பிட்டதாவது. 'தான் எதை விரும்புகிறானோ அதனையே தனது சகோதரனுக்கும் விரும்பாத வரையில் ஒரு முஸ்லிம் உண்மை முஸ்லிமாக இருக்க முடியாது'

## புன்னகையே தர்மம்

"ஒவ்வொரு நாளும் தான தர்மம் செய்யும்படி ஆதமின் ஒவ்வொரு வாரிசுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது" என நபிகள் நாயம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். ஒவ்வொரு நாளும் நாங்கள் என்ன தர்மம் செய்ய வேண்டுமென நபிகளாரிடம் கேட்ட போது, அதற்கு அவர்கள் கூறியதாவது:– 'ஏராளமான

நற்செயல்கள் உள்ளன. நல்லவற்றை நேசித்தல், தீமையைத் தடுத்தல், சாலைகளிலுள்ள தீங்கு விளைவிக்கும் பொருட்களை அகற்றுதல், காது கேளாதவர்களைக் கவனித்தல், கண்ணிழந்–தவர்கட்கு வழி காட்டுதல், ஒருவருடைய தேவையை நிறைவேற்–றுவதில் உதவி செய்தல், துன்பத்திலுள்ளோர்கட்கு உதவி புரிதல், பலகீனமானவர்கட்கு உதவிக்கரம் நீட்டுதல் இவை போன்ற விஷயங்களும் தர்மங்களே. நபிகளார் மேலும் நவின்றார்கள்:– 'ஒரு அன்பான வார்த்தையும் தர்மம் தான். புன்னகை புரிவதும் தர்மம் தான் உனது சகோதரனை நோக்கி நீ புரியும் புன்னகையும் ஒரு தர்மம் தான்'

## சமூக நீதி

இஸ்லாமியக் கொள்கையின்படி, உலகிலுள்ள வளங்கள் அனைத்தும் மனிதர்களுக்காகவே இறைவனால் படைக்கப்பட்டுள்ளன. (குர்ஆன் *31:20*, *57:7*) இந்த வளங்கள் அனைத்தும் ஒட்டு மொத்த மனித குலத்திற்கேயன்றி எந்த ஒரு தனிப்பட்ட நபருக்கோ, குடும்பங்களுக்கோ அல்லது குழுக்களுக்கோ அல்ல. (குர்ஆன் *2:29*) எனவே இறைவன் அளித்த வளங்களை மனிதன் பகிர்ந்து கொள்ளவே முடியும். மனித ஜீவனம் இறைவனின் கொடை என்று குர்ஆன் கூறுகிறது. (குர்ஆன் *2:198*, *5:4*, *17:66*, *28:2*, *62:10*)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சோம்பேறித்தனத்தையும் சார்ந்து வாழ்வதையும், பிச்சை எடுப்பதையும் கடுமையாகக் கண்டித்துள்ளார்கள். சொந்த உழைப்பின் மூலமே ஒருவன் தனக்குத் தேவையானவற்றை சம்பாதிக்க வேண்டு மெனக் கூறினார்கள்.

## தானமும் வள்ளல் தன்மையும்

இஸ்லாமிய மரபுகள் பரிவு, பிறர் நலம் பேணல், தியாகம், தானதர்மம் ஆகிய பண்புகளுக்கு மிகுந்த

முக்கியத்துவம் அளிக்கின்றன. ஏழைகளுக்கும், தேவையுள்ளவர்களுக்கும் வாரி வழங்கிடுமாறு குர்ஆன் முஸ்லிம்களை வலியுறுத்துகிறது. (குர்ஆன் வசனங்கள் *2:195, 219, 254, 264, 267, 274, 3:92, 14:31, 57:10, 11, 76:8, 9*)

மனித குலம் முழுமையுமே இறைவனின் குடும்பம் தான். இதில் இறைவனின் பார்வையில் மிகவும் நெருக்கமானவர் யாரென்றால் இறைவனின் அக் குடும்பத்தின் பால் மிகுந்த அன்பும், பரிவும் காட்டுபவரே' என்று நபிகள் நாயம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபிகளார் மேலும் கூறியதாவது: ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் சேவை செய்பவன் இறைவழியில் ஜிகாத் செய்வதற்கும் அல்லது நாள் முழுவதும் நோன்பு நோற்று இரவெல்லாம் வணக்கத்தில் ஈடுபடுவதற்கும் ஒப்பானதாகும்.

# 16

# முஸ்லிம் அல்லாதவர்களுடன் நபிகளார் கொண்டிருந்த உறவு

மனித சமுதாயத்தில் சகிப்புத்தன்மையும், கூட்டுறவும், பரஸ்பரம் விவாதித்து முடிவு காணும் தன்மையும் நிலவிட வேண்டுமென்று இஸ்லாம் பரிந்துரைக்கின்றது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், முஸ்லிம் அல்லாதவர்களிடம் சமூகம், கலாச்சாரம், பொருளாதாரம், அரசியல் ஆகிய அம்சங்களில் ஒத்துழைப்பைப் பேணினார்கள். முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் என அனைவரிடமும் நபிகளார் இரக்கமும் கருணையும் காட்டினார்கள். மனித சமுதாயத்தில் பல்வேறு பிரச்னைகளில் இஸ்லாத்தின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது என்பது பற்றி ஆராய்வோம்.

## மக்காவிலுள்ள முஸ்லிம் அல்லாதவர்களுடன்

இளமையிலிருந்தே நபிகளார் பிறருடன் பங்குதாரராகச் சேர்ந்து வணிகம் புரிந்து வந்தார்கள். மக்கா நகர வணிகர்களிடமிருந்து பொருட்களைப் பெற்று, சிரியா, யேமன் ஆகிய நாடுகளுக்குக் கொண்டு சென்று விற்று அதன் மூலம் அவர்கட்கு லாபத்தில் பங்கு கிடைத்தது. வசதி படைத்த கதீஜா(ரலி) அவர்களைத் திருமணம் செய்த பிறகு நபிகளார், அவருடன் சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். நபித்துவம் பெற்ற பிறகு முழுக்க முழுக்க இஸ்லாமியப் பரப்புரையில் ஈடுபட்டதன் காரணமாக வியாபாரத்தில் ஈடுபட அவர்கட்கு நேரம் கிடைக்கவில்லை. அதனால் தங்களது வணிகப் பொருட்களை முன்னணி குறைஷிய வணிகர்கள் மூலமாகவும், முஸ்லிம் அல்லாத தரகர்கள் மூலமாகவும் சந்தைக்கு அனுப்பினார்கள்.

இது அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தியது. தங்களது வியாபாரத்தில் ஒரு பகுதியாக வணிகப் பொருட்களை முஸ்லிமல்லாத அபூசுஃப்யான் மூலம் சிரியாவுக்கு அனுப்பி நல்ல வருவாய் ஈட்டினார்கள். ஒரு வர்த்தகர் என்ற முறையில் அபூசுஃப் யானின் நேர்மையின் மீதும் அவரது தொழில் திறமை மீதும் நபிகளார் நம்பிக்கை வைத்திருந்தார்கள். நபிகளாரின் இஸ்லாமியப் பணிகளை அறிந்த பின்னரும் அபூசுஃப்யான் அவர்களுடனான வணிகத் தொடர்பையும் சமுதாயத் தொடர்பையும் கைவிடவில்லை.

இப்னு கதீர்(ரஹ்) என்பார் கூறுவதாவது: ஒரு முறை அபூசுஃப்யான் வியாபார விஷயமாக உமய்யா என்ற தனது நண்பருடன் ஏமன், சிரியா ஆகிய நாடுகளுக்குச் சென்று விட்டு ஐந்து மாதங்களுக்குப் பிறகு மக்காவுக்குத் திரும்பினார். வியாபாரத்தில் தாங்கள் செய்துள்ள முதலீடுகளுக்குக் கிடைக்கவிருக்கும் பங்கு பற்றி அறிந்து கொள்ள மக்கள் அவரைச் சந்தித்தனர்.

நபிகளார் அபூசுஃப்யானைச் சந்திப்பதற்காக அவரது இல்லத்திற்குச் சென்ற போது அவரது மனைவி ஹிந்தா குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தார். நபிகளார் அபூசுஃப்யானுக்கு வாழ்த்துத் தெரிவித்து பயண அனு பவங்கள் பற்றி விசாரித்தார்கள். ஆனால் வியாபாரத்தில் தனக்குக் கிடைக்கவிருக்கும் பங்கு(லாபம்) பற்றி நபிகளார் அவரிடம் எதுவும் கேட்க வில்லை. நபிகளார் சென்ற பிறகு அபூசுஃப்யான் தனது மனைவியிடம் 'நான் இந்த மனிதரைப் பார்த்து வியப்படைகிறேன். அவரை விரும்புகிறேன் என்னிடம் பொருட்களை ஒப்படைத்திருந்த ஒவ்வொரு குறைஷியரும் அது பற்றி என்னிடம் விசாரித்தார்கள். ஆனால் முஹம்மது(ஸல்) என்னிடம் எதுவுமே கேட்கவில்லை' என்று தெரிவித்தார். சிறிது நேரத்திற்குப்பின் அபூசுஃப்யான் கஅபா சென்று அங்கிருந்த நபிகளாரைச் சந்தித்து வியாபாரத்தில் கிடைத்த லாபத்தை எடுத்துச் சொல்லி அவர்களுக்குரிய பங்கைப் பெற்றுக்

கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். மேலும் வழக்கமாகத் தனக்குத் தரும் தரகுத் தொகையையும் தரவேண்டாம் என நபிகளாரிடம் கூறினார். ஆனால் நபிகளார் அதனை ஏற்க மறுத்து, அவருக்குரிய தரகுத் தொகையை அவரிடம் வழங்கினார்கள். ஒரு நாள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இஸ்லாமியப் பரப்புரையில் ஈடுபட்டிருந்த போது, அபூசுஃப்யான் சிரியாவிலிருந்து தனது வர்த்தகப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருந்தார். அவர் தன்னுடன் நபிகளாரின் பொருட்களையும், மற்றவர்களின் பொருட்களையும் கொண்டு சென்றிருந்தார். அவர் திரும்பி வந்ததை அறிந்து கொண்ட நபிகளார் வியாபார விஷயங்களில் அபூசுஃப்யான் நாணயமாக நடந்து கொள்வார் என கருத்துத் தெரிவித்தார்கள்.

## வணிகத் தொடர்புகள்

சமூக வாழ்க்கையில் பொருளாதாரத்தின் பங்கு மிக முக்கியமானது. முழு சமுதாயத்தையும் நிலைக்கச் செய்யும் இரத்த ஓட்டம் போன்றது செல்வம். மக்கள் பொருளாதார ரீதியில் வலுவாக இல்லை என்றால் அல்லது பிறரைச் சார்ந்து இருக்க வேண்டியதிருந்தால், அவர்களது வாழ்க்கை சிரமம் நிறைந்ததாகி விடும். நபிகளாரும், சில மக்கா முஸ்லிம்களும் வர்த்தகர்களாக இருந்தனர். எனவே அவர்கள் பொருளாதார, சமூக வாழ்க்கையில் செல்வத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தனர். நபிகளாரும் அவர்களுடைய வர்த்தகத் தோழர்களும் தங்களது சொந்தக் கால்களிலேயே நின்று வாழ்க்கையை மேம்படுத்த முயற்சித்தனர். அவர்கள் தங்களது வர்த்தக நடவடிக்கைகள் பற்றி தெளிவான திட்டங்கள் தீட்டி அதன்படி முறையாகச் செயல்பட்டனர்.

அபூ சுஃப்யானைத் தவிர, நபிகளார் வேறு சில குறைஷியர் களிடமும், அரேபிய இனக்குழுத் தலைவர்களிடமும் வர்த்தக உறவு கொண்டிருந்தார்கள். வர்த்தகத்தில் அவர்களின் கூட்டாளிகளாக இருந்த முஸ்லிமல்லாதவர்களில், ஹக்கீம், அப்துல்லா (அப்ஹம்ஸா மகன்) அல்தாயிமி, அல்ஸைப்,

ஹுயிஸ் ஆகியோர் அடங்குவர். நபிகளாரின் வர்த்தக வாழ்க்கை பற்றியும் அவர்களது குறைஷியக் கூட்டாளிகள் குறித்தும் அல் பக்தாதியும், வேறு சில எழுத்தாளர்களும் விரிவாக எழுதியுள்ளனர். 58 பேர்கள் முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத கூட்டாளிகள் இருந்ததாக அல் பக்தாதி குறிப்பிடுகிறார். தோழர்களில், அப்துர்–ரஹ்மான் இப்னு அவ்ப் என்பார் முஸ்லிம் அல்லாதவரை வர்த்தகக் கூட்டாளியாகக் கொண்டிருந்தார். அவருடைய நெருங்கிய நண்பராகவும், வர்த்தகக் கூட்டாளி யாகவும் இருந்தவர் இஸ்லாத்தை எதிர்த்த உமய்யா இப்னு கலாஃப் என்ற முன்னணி மக்கா வர்த்தகராவர். குறைஷியத் தலைவர் உத்பாவின் மகன் அல்வாலித் அப்பாஸின் நண்பராகவும், வர்த்தகக் கூட்டாளியாகவும் இருந்தார். உதுமானும் ராபியாஇப்னு ஹரிதாவும் நண்பர்களாகவும், வர்த்தகக் கூட்டாளிகளாகவும் இருந்தனர். அப்பாஸும், அபூசுஃப்யானும் நல்ல கூட்டாளிகள். அவர்கள் இறக்கும் வரை நல்ல நண்பர்களாகவும், கூட்டாளிகளாகவும் இருந்தனர். போர்கள் அவர்களது உறவைப் பிரிக்கவில்லை. சமய வித்தியாசங்களும் அவர்களது உறவைப் பாதிக்கவில்லை.

## திருமண உறவுகள்

மக்காவில் முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் அல்லாத குறைஷியர்கட்குமிடையே திருமண உறவுகள் இருந்து வந்தன. இதில் குறிப்பிடத்தக்கது நபிகளாரின் மூத்த மகள் ஜைனப்(ரலி)க்கும், அபுல் அல் ஆஸுக்கும் நடந்த திருமணமாகும். அபுல் அல் ஆஸ், கதிஜா(ரலி) அவர்களின் ஒன்று விட்ட சகோதரராவார். இப்னு ஹிஸ்ஸாம் கூற்றுப்படி, அறியாமைக் காலத்தில் (இஸ்லாத்திற்கு முன்பு) இத்திருமணம் கதிஜா(ரலி) அவர்களால் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதற்கு நபிகளாரும் விருப்பம் தெரிவித்து இருந்தார்கள். இந்த காலகட்டத்தில் முஸ்லிம் பெண்கள் முஸ்லிமல்லாதவர்களை திருமணம் செய்ய தடை விதித்து இறைவசனங்கள் அருளப்பட–

வில்லை.  இப்னு ஸஅத் தரும் இன்னொரு சுவையான தகவல்:– ஆரம்பத்தில் ஆயிஷா(ரலி) அவர்களை மக்கா நகரத் தலைவராக இருந்த 'முத்யிம்' என்பார் மகன் ஸுபைர் அவர்கட்கே திருமணம் செய்து கொடுப்பதாக இருந்தது. அபூதாலிப் அவர்களின் இறப்பிற்குப் பின்னர், இந்த முத்யிம் தான் நபிகளாரைப் பாதுகாக்கும் பொறுப்பேற்றிருந்தார். ஆனால் முத்யிமும் அவரது குடும்பத்தினரும் ஒரு முஸ்லிம் சிறுமியை தங்களது வீட்டு மருமகளாக ஏற்றுக் கொள்ள மறுத்தனர். குடும்பத்திற்குள்ளேயே அவர் இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபடக்கூடும் என்ற பயமே இதற்குக் காரணமாகும். இதுவும் இரண்டு சமூகங்களுக்கிடையே நிலவிய திருமணப் பந்தங்களைக் குறிக்கிறது.

## பெரும்பான்மை குறைஷிகளும், சிறுபான்மை முஸ்லிம்களும் இணைந்து நடத்திய கூட்டணி ஆட்சி

நபிகளார் பிறந்த அந்தக் கால கட்டத்தில் குறைஷியர்கள் அரசியல் மற்றும் சமுதாய நிலைகளில் பனிரெண்டு முக்கியப் பொறுப்புகளில் இருந்தனர். இப் பொறுப்புகள் பனிரெண்டு குறைஷிக் குடும்பங்களால் பரம்பரையாக அனுபவிக்கப்பட்டு வந்தது. அவர்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றனர். இவர்களில் ஆரம்பகால கட்டத்தில் இஸ்லாத்தில் இணைந்தவர் ஹழ்ரத் அபூபக்ர்(ரலி) அவர்கள். பின்னர் உமர்(ரலி) அவர்கள் இணைந் தார்கள். அப்பாஸ்(ரலி), உதுமான்(ரலி) காலித்(ரலி) ஆகியோரும் ஆரம்ப கால கட்டத்தில் இஸ்லாத்தில் இணைந் தவர்கள். இப்படியாக இந்தக் குறைஷித் தலைவர்களில் பாதிப்பேர் தங்களது பழைய நம்பிக்கைகளைத் துறந்து இஸ்லாத்தில் இணைந்தனர். எனினும் தாங்கள் வகித்து வந்த பதவிகளை அவர்கள் விட்டு விடவில்லை.  பிற மக்கா குறைஷித் தலைவர்களும் அவர்களை பதவியிலிருந்து விலக்கி

வைக்கவில்லை. முஸ்லிம்களாக இருந்து கொண்டே அவர்கள் தங்களது பணிகளைக் கவனித்துக் கொண்டு, குறைஷித் தலைவர்களுக்கு ஒத்துழைப்பும் அளித்தனர். மதீனாவிற்கு அவர்கள் செல்லும்வரை இது நீடித்தது. எனவே மக்காவின் அரசியல் நிர்வாகம் முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதாரும் சேர்ந்து நடத்திய ஒரு கூட்டணி அமைப்பாகவே இருந்தது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சமூக, கலாச்சார, பொருளாதார விஷயங்களில் முஸ்லிமல்லாத–வர்களுடன் நல்லுறவையும், ஒத்துழைப்பையுமே கடைப்பிடித்து வந்தார்கள். குறைஷி–யர்களும் தங்களது நலன் கருதி இதே கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

## சமூக உறவுகள்

இஸ்லாத்தின் செய்தியைப் பரப்புமாறு இறைகட்டளை வந்த பிறகு நபிகளார், சமூக உறவுகளைப் பேணுவதற்காகவும் இஸ்லாத்தின் செய்தியை எடுத்துச் சொல்வதற்காகவும், குறைஷியர்களை அழைத்து விருந்து நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இது அரேபியர்களின் பாரம்பர்யப் பண்புகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது. தோழர்கள் இதனைத் தொடர்ந்து செய்து வந்தார்கள். இஸ்லாத்தின் செய்தியை பரப்ப ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சிகள் வலுவான சமூக உறவின் அடித்தளமாக இருந்தன. உதுமான்(ரலி) ஸுபைர்(ரலி), தல்ஹா(ரலி), அப்துல் ரஹ்மான், ஸஅத் ஆகியோர் இஸ்லாத்தில் இணைவதற்கு முன்னர் அபூபக்கர்(ரலி) அவர்கள் இது போன்ற விருந்து நிகழ்ச்சியினை நடத்தினார்கள்.

## அடிமைகளை வாங்கி விடுதலை செய்தல்

முஸ்லிமல்லாத அடிமைகளை அவர்களின் நேர்மையற்ற எஜமானர்களிடமிருந்து வாங்கி நபிகளார் விடுதலை செய்தார்கள். அப்படி விடுவிக்கப்பட்ட அடிமைகளைச் சமமாக நடத்தினார்கள். நபிகளாரின் கருணையால் அவர்களின்

வேதனை குறைந்தது. செல்வாக்குப் பெற்றிருந்த சில தோழர்களும் தங்களது அடிமைகளை விடுதலை செய்தனர். இது அவர்களின் இரக்க உணர்வைப் பறை சாற்றியது. கொடுமைகள் புரிந்திட்ட எஜமானர்களிடமிருந்து அடிமைகளை விலைக்கு வாங்கி அவர்களை விடுதலை செய்வதே நபிகளாரின் அணுகு முறையாக இருந்தது. இதன் மூலம் அடிமைகள் சுரண்டப்படுவதினின்றும் விடுதலை பெற்றனர். இது போல் பல பணக்கார முஸ்லிம்களும் செய்திட நபிகளார் தூண்டு கோலாக இருந்தார்கள். நபிகளாரின் முதல் மனைவியான கதீஜா(ரலி) அவர்கள் இந்தப் பணிக்கு பெருமளவு நன்கொடை அளித்தார்கள். நபிகளாரும் அதனை ஏற்றுக் கொண்டார்கள். அபூபக்ர்(ரலி) அவர்கள் ஏராளமான அடிமைகளின் விடுதலைக்கு உதவினார்கள். மக்காவிலிருந்த காலத்தில் ஹழ்ரத் அபூபக்ர்(ரலி) அவர்கள், தன்னிடமிருந்து நாற்பதாயிரம் திர்ஹத்–தையும், ஏராளமான சொத்துக்களையும் பொருட்களையும் அடிமைகளை விடுவிப்பதற்காகச் செலவு செய்தார்கள். மதீனாவிற்கு அவர்கள் சென்ற போது அவர்களிடம் ஐந்து ஆயிரம் திர்ஹம்கள் மட்டுமே இருந்தன. இதையும் முஸ்லிம்களுக்காகவே பயன்படுத்தினார்கள். ஹழ்ரத் உமர்(ரலி) அவர்களும் அவ்ப் மகன் அப்துல் ரஹ்மான் அவர்களும் தங்களது செல்வத்தின் பெரும் பகுதியை அடிமைகளை வாங்கி விடுவிப்பதற்காகப் பயன்படுத்தினார்கள்.

அப்துல்லாஹ் அல்–நஹ்ஹாம் முஸ்லிமல்லாத ஏழை அடிமைகளுக்குப் பெரிதும் துணை புரிந்தார். வெறி பிடித்த மக்கா குறைஷித் தலைவர்கள் கூட அவர் மதீனா செல்வதற்குத் தடை விதித்தார்கள். அவர் சென்று விட்டால், மக்காவிலிருந்து ஏழை அடிமைகளுக்கு உதவி செய்ய யாருமிருக்கமாட்டார்கள் என்று அவர்கள் எண்ணியதே அதற்குக் காரணமாகும். ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற இஸ்லாமியக் கோட்பாட்டை அவர் பெரிதும் பேணி வந்தார்.

## பெரும் மரியாதை

இஸ்லாத்தில் இணையாத பல்வேறு இனக்குழுவினரிடமும், தங்களது பெரிய தந்தையார் அபூதாலிப் உள்ளிட்ட இஸ்லாத்தில் இணையாத உறவினர்களிடமும் நபிகளார் தொடர்ந்து நல்லுறவைப் பேணி வந்தார்கள். இறக்கும் அந்த கடைசி நிமிடம் வரை நபிகளார் அபூதாலிப்பைச் சந்தித்து வந்தார்கள். நியாயமும், பெருந்தன்மையும் கொண்ட தமது ஒன்று விட்ட மகனைப் பாதுகாப்பதில் தான் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக அபூதாலிப் குறிப்பிட்டார்கள். அபூதாலிப் அவர்கள் மரணமுற்ற போது நபிகளார் அருகில் இருந்தார்கள். நபிகளாருக்குப் பாதுகாப்பாக இருந்த அபூதாலிப் அவர்கள் கடைசி வரை இஸ்லாத்தில் இணையவில்லை. நபிகளார் தங்களது பெரிய தந்தையார் அபூதாலிப் மீது மிகுந்த மரியாதையும், பிரியமும் கொண்டிருந்தார்கள். அன்னார் இறந்த போது பெரிதும் துயருற்றார்கள்.

## ஆழ்ந்த நம்பிக்கை

இன்னொரு சிறிய தந்தையான அப்பாஸ்(ரலி) அவர்கள், நபிகளாருக்கும் உற்ற துணையாக இருந்த போதிலும், இஸ்லாத்தில் இணையவில்லை. நபிகளார் அவர்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். முஸ்லிம்கள் மட்டுமே கலந்து கொண்ட கூட்டங்களில் அவரையும் கலந்து கொள்ள அனுமதித்தார்கள். பின்னர், அல் அக்பாவில் இரண்டாவது ஒப்பந்தம் ஏற்பட்டபோது அவரும் உடனிருந்தார். மதீனாவிற்கு ரகசியமாகச் செல்லவிருந்த தங்களது பயண ஏற்பாடு பற்றியெல்லாம் நபிகளார் அவரிடம் தெரிவித்தார்கள். பல தெய்வ வழிபாட்டாளராக இருந்த அப்பாஸ்(ரலி) அவர்கள் மீது நபிகளார் பெரிதும் மதிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்கள். பின்னர் அவர் இஸ்லாத்தில் சேர்ந்தார்.

## நேர்மை

தங்களுடைய நம்பிக்கைக்கு மாறுபட்டவர்களிடம் கூட நபிகளார் நீதமாக நடந்து கொண்டார்கள். நபிகளார் மக்காவில் இருந்த காலகட்டத்தில் முஸ்லிமல்லாத வணிகர்கள் பலரும் தங்களது பொருட்களை நபிகளாரிடம் நம்பிக்கையுடன் கொடுத்து விட்டுச்செல்வது வழக்கம் மதீனாவுக்குப் புறப்படு வதற்கு முன்னால், பிறர் கொடுத்து விட்டுச்சென்ற அனைத்துப் பொருட்களையும் அவரவர்களிடமே ஒப்படைத்து விடுமாறு நபிகளார் ஹழ்ரத் அலீ(ரலி) அவர்களிடம் சொல்லி விட்டுச் சென்றார்கள்.

## நம்பிக்கை

முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, அல்லாதவராக இருந் தாலும் சரி, நீதியுடனும், நேர்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற இஸ்லாத்தின் போதனைகளை நபிகளார் மிகக் கவனமாகக் கடைப்பிடித்து வந்தார்கள். நபிகளாரும், ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்களும் தங்களை இறைவனிடம் முழு மையாக ஒப்படைத்துவிட்டே மதீனாவிற்கு இடம் பெயர்ந்து சென்றார்கள். அப்போது முஸ்லிமல்லாத பல தெய்வ வழி பாட்டில் நம்பிக்கை கொண்ட வழிகாட்டி ஒருவரின் உதவியைப் பெற அவர்கள் தயங்கவில்லை. அந்த வழிகாட்டி திறமையும், நம்பகத் தன்மையும் கொண்டவராக இருந்தார். ஒரு வழிகாட்டி என்ற முறையில் நபிகளார் செல்லவிருந்த அதிகம் புழக்கத்தில் இல்லாத ஒரு குறுக்குப் பாதையைப் பற்றி மற்றவர்களைக் காட்டிலும் அவர் நன்கு அறிந்திருந்தார். அந்த நேரத்தில் நபிகளாரைப் பிடித்துக் கொண்டு வருபவர்கட்கு 100 செந்நிற ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும் என குறைஷியர்கள் அறிவித்து இருந்தனர். முஸ்லிமல்லாத அந்த வழிகாட்டி இந்த வெகுமதி அறிவிப்புப் பற்றி அறிந்திருந்த போதிலும் நபிகளாரைக் காட்டிக் கொடுக்க முன்வரவில்லை. தனது வாக்கைக் காப்பாற்றி நபிகளார் மதீனா செல்ல உறுதுணை புரிந்தார்.

## மேன்மை

ஒவ்வொரு நாளும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தனது இல்லத்திலிருந்து கஅபா செல்லும் போது ஒரு மூதாட்டி அவர்கள் சென்ற பாதையில் குப்பை கூளங்களை வீசி எறிந்து வந்தார். நபிகளார் இஸ்லாத்தின் செய்தியை எடுத்துச் சொல்வதை விரும்பாத அவர், அவர்களை அவமதிக்கும் விதத்திலே இச் செயலில் ஈடுபட்டார். ஒரு நாள் நபிகளார், தாங்கள் வழக்கமாகச் செல்லும் பாதையில் குப்பைகள் எதுவும் இல்லாதது கண்டு, அப்பெண்ணின் இல்லத்திற்குச் சென்று அவளைச் சந்தித்தார்கள். நபிகளாரைக் கண்ட அவள், அதிர்ச்சியுற்றாள். எதற்காக என்னைத்தேடி வந்தீர்கள் என்று அம்மூதாட்டி கேட்டதற்கு, நான் சென்ற பாதையில் குப்பைகள் எதுவும் இல்லை. எனவே நீங்கள் உடல் நலமற்று இருப்பீர்கள் என்றெண்ணி தங்களைப் பார்க்க வந்தேன் என நபிகளார் பதிலளித்தார்கள். இது கேட்ட அம்மூதாட்டி தனது குற்றத்தை உணர்ந்து தனது நடத்தைக்காக வருந்தினார். நபிகளாரின் இந்தச் செயல் கடி மனமுடைய அம் மூதாட்டியை மனமிரங்கச் செய்து நபிகளார் உண்மையிலேயே இறைவனின் தூதர் தான் என்பதை உணரச் செய்தது. அவள் இஸ்லாத்தைத் தழுவினாள்.

## தன்னையே அர்ப்பணித்தல்

மக்கா வெற்றிக்குப் பின்னர் அந்நகர மக்களைப் பாதுகாக்கும் விதமாக நகரை வலம் வருவதை நபிகளார் வழக்கமாக் கொண்டிருந்தார்கள். அப்படிச் செல்லும் போது ஒரு நாள் ஒரு வயதான பெண், அந்நகரை விட்டு வெளியே செல்வதைக் கண்டார்கள். நபிகளார் அப்பெண்ணுக்கு உதவி செய்யும் பொருட்டு அவளது மூட்டைகளை தனது தோளில் சுமந்து கொண்டு சென்று அவள் மக்காவின் எல்லையினைக் கடந்து செல்ல உதவி செய்தார்கள். அப்பெண்ணுடன் சென்று கொண்டிருக்கும் போது எதற்காக அவள் அந்த இரவு நேரத்தில் மக்காவை விட்டுச் செல்கிறாள் என நபிகளார் கேட்டபோது,

அதற்கு அவள் முஹம்மது மக்காவை வெற்றி கொண்டு விட்டார், தான் ஒரு முஸ்லிமல்லாதவள் என்பதால் முஹம்மதுவின் படையினர் தன்னைப்பிடித்து துன்புறுத்தக் கூடும் என்றும், வெற்றி பெற்ற அவர் மக்காவைச் சிதைத்து விடுவார், எனவே அதனைத் தான் பார்க்க விரும்பவில்லை என்றும் கூறினாள். தன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்த முஹம்மதுவை சபித்து விட்டு அவள் தனக்கு உதவி செய்தவருக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டார். நபிகளாரை யார் என்று வினவிய அவள், தன்னை முஸ்லிம்கள் பிடித்துக் கொள்வார்கள் என்றும் பயத்துடன் கூறினாள். நபிகளார் "நான் தான் முஹம்மது'" என்று கூறவே அந்தப் பெண் வியப்படைந்து அதனை நம்ப முடியாமல், மக்காவை வெற்றி கொண்ட அதே முஹம்மதுவா இவ்வளவு அன்பாக நடந்து கொண்டு மக்காவை பாதுகாத்து வருகிறார்' என எண்ணினார். நபிகளாரின் இந்தச் செயல் அவளது உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நபிகளாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்ட அவள் உடனே இஸ்லாத்தைத் தழுவினாள்.

## மதீனாவிலிருந்த முஸ்லிமல்லாதாருடன் உறவு

## பொறுமையும், சமாதான சக வாழ்வும்

மதீனாவிற்கு வந்த நபிகளார் அங்கு நிர்வாகம், அரசியல், கொள்கை அடிப்படையில் வலுவான ஒரு புதிய முஸ்லிம் சமுதாயம் உருவாகி விட்டது என்பதை உறுதி செய்த பின்னர், அங்கிருந்த முஸ்லிமல்லாதவர்களுடன் நல்லுறவைப் பேணும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இந்த அனைத்து முயற்சிகளுமே, சமாதானத்தையும், பாதுகாப்பையும், வளத்தையும், மனித சமுதாயம் பெற்றிட வேண்டுமென்ற பொதுவான அடிப்படையில் நல்லிணக்கத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டன. பூகோள அடிப்படையில் பார்த்தால், மதீனா முஸ்லிம்களுக்கு அருகில் வசித்தவர்கள் யூதர்களே. அவர்களின் சமய நம்பிக்கையையும்

பொருளாதாரத்தையும் பாதுகாக்கும் வகையில் அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்த நபிகளார் முடிவு செய்தார்கள். இஸ்லாத்தில் இணையும் படி யாரையும் அவர்கள் வற்புறுத்தவில்லை. அப்புதிய சமுதாயத்தில் உறவுகள் சமத்துவ அடிப்டையிலேயே இருக்க வேண்டுமென விரும்பினார்கள்.

நபிகளார், தனி மனிதர்களின் மீதும் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் மீதும் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார்கள். பல ஆண்டுகளாக ஒரு யூத இளைஞனே அவர்களுக்கு உறுதுணையாக இருந்தான். அவன் நபிகளோடு இருப்பதைப் பெரிதும் விரும்பினான். அவனுடைய சமயத்தையும், நம்பிக்கை–களையும் விட்டு விடும்படி நபிகளார் ஒரு போதும் அவனிடம் சொன்னதில்லை. இறுதியாக மரணப் படுக்கையில் இருந்த அவன், தன்னை இஸ்லாத்தில் இணைந்திட அனுமதி–யளிக்கும்படி தனது தகப்பனாரிடம் வேண்டுகோள் விடுத்தான். அதற்கு அவனது தகப்பனார் சம்மதம் தெரிவிக்கவே அவன் இஸ்லாத்தில் இணைந்தான். ஆனால் நபிகளாரோடு இருந்த காலத்ததில் அவன் ஒரு யூதனாகவே இருந்து நபிகளாரின் அன்பையும் மரியாதையையும் பெற்றிருந்தான். நபிகளார் வாழ்ந்த காலத்தில் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் நல்லுறவு நிலவி வந்தது. நபிகளாரின் மனைவி ஆயிஷா(ரலி) அவர்கள் தனது சகோதரி மகன் உர்வாவிடம் கூறியதாகச் சொல்லப்–படுவதாவது:– 'பால் தரும் கால் நடைகள் வைத்திருந்த சில கிறிஸ்துவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அண்டை வீட்டுக்காரர்களாக இருந்தனர். அவர்கள் சில சமயங்களில் வெகுமதியாக பாலைக் கொடுத்தனுப்புவார்கள். அதனை நாங்கள் வாங்கிப் பருகுவோம்'

## பரஸ்பர நம்பிக்கை

முஸ்லிமல்லாதவர்களின் மீது நபிகளார் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அதன் காரணமாகவே முஸ்லிமல்லாத ஒரு அரசரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அபிசீனியாவுக்கு செல்லும்படி

முஸ்லிம்களைப் பணித்தார்கள். நபிகளாரின் வாழ்க்கை முழுவதிலும் இது போன்ற பல சம்பவங்களைக் காண முடியும். சமயப் பற்றின் அடிப்படையில் இல்லாமல், நம்பிக்கை மற்றும் நியாய அடிப்படையில் நபிகளார் இந்த உறவுகளை அமைத்துக் கொண்டார்கள். நபித் தோழர்களும் இதனை முற்றிலும் உணர்ந்து கொண்டு பரஸ்பர நம்பிக்கை அடிப்படையில் முஸ்லிமல்லாத–வர்களிடம் மிக இக்கட்டான சூழ்நிலைகளிலும் உறவைப் பேணி வந்தார்கள்.

உம்மு ஸலாமா(ரலி) அவர்களின் கணவர் மக்கா விலிருந்து மதீனாவிற்குச் சென்ற போது அவருடன் சென்றிட உம்மு ஸலாமாவையும் அவரது சிறு குழந்தைகளையும் குடும்பத்தினர் அனுமதிக்கவில்லை. வீட்டிலிருந்த அவரது மதினிமார்கள். குழந்தைளை அவரிடமிருந்து பிரித்து விட்டனர். ஓராண்டாக, உம்மு ஸலாமா இந்த துயரமான நிலையைச் சந்தித்து வந்தார். ஒவ்வொரு நாளும் மதீனாவை நோக்கிச் செல்லும் சாலையில் நின்று கொண்டு காலையிலிருந்து மாலை வரை அழுது கொண்டிருப்பார்.

அவரது கொழுந்தன்களில் ஒருவர் இரக்கம் கொண்டு குழந்தைகளை அவருடன் சேர்த்து வைத்தார். பின்னர் அவர் மதீனா செல்லவும் அனுமதிக்கப்பட்டார். அவரது பயணத்தின் போது தல்ஹாவின் மகனான உதுமான் என்ற முஸ்லிமல்லாத ஒருவர் அவருக்குத் துணையாக மதீனா செல்ல முன் வந்தார். அவரை நம்ப உம்மு ஸலாமா(ரலி) தயங்கவில்லை. மதீனாவரை அவருடன் துணையாகச் சென்ற உதுமான் அவரது கணவரிடம் உம்மு ஸலாமாவை ஒப்படைத்த பின்னரே திரும்பிச் சென்றார். உம்மு ஸலாமா(ரலி) இந்த சம்பவத்தை அடிக்கடி நினைவு கூர்ந்து உதுமானின் நேர்மையான நடத்தையைப் பற்றி புகழ்ந்துரைப்பார். மக்காவின் இன்னொரு நேர்மையான தலைவரான அபூ சுஃப்யான் நபிகளாரின் குடும்பத்தினர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். நபிகளாரின் மூத்த மகளார் ஜைனப்(ரலி) மதீனா செல்வதற்கு அவர் துணை புரிந்தார். பத்ருப் போரின் போது அவரது கணவர்

அபுல்– அல் ஆஸ், ஜைனப்(ரலி) பை மதீனாவிற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டார். இதனைக் கேள்வியுற்ற அபூசுஃப் யானின் மனைவி ஹிந்தா உதவி செய்ய முன் வந்தார். ஆனால் ஜைனப்(ரலி) அவரை நம்பவில்லை.

முடிவில் ஜைனப்(ரலி) தனது கணவரின் சகோதரரான கினானுடன் மதீனா சென்று கொண்டிருந்தபோது சில குறைஷியத் தலைவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்களைச் செல்ல விடாமல் தடுத்தனர். கினான் சண்டையிட முடிவு செய்தார். இதன் காரணமாக ஏற்படவிருந்த மோதலைத் தவிர்ப்பதற்காக குறைஷியத் தலைவர்களுடன் அங்கு வந்த அபூசுஃப்யான், ஜைனப்பும், கினானும் மக்காவிற்குத் திரும்பும்படி செய்தார். பதற்றம் தணிந்த பிறகு அவர்கள் மதீனாசெல்ல அபூசுஃப்யானே உதவி செய்தார். இது போன்ற ஏராளமான சம்பவங்கள் உள்ளன. நபிகளாரும் அவர்களது தோழர்களும் இத்தகைய சமூக மனிதாபிமான உறவுகளை முஸ்லிம்களோடு மட்டும் வைத்திருக்கவில்லை. பிற சமய மக்களுடனும் நல்லுறவு கொண்டிருந்தனர். பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் உருவாக வேண்டிய இத்தகைய உறவுகள் பற்றிக் கீழ்க்கண்ட இறை வசனங்கள் வலியுறுத்துகின்றன.

> தீன்(இறைமார்க்கம்) தொடர்பான விஷயத்தில் எவர்கள் உங்களுடன் போர் புரியவில்லையோ, உங்களை உங்களது வீடுகளிலிருந்து வெளியேற்ற வில்லையோ, உங்களை அவர்களிடம் நீங்கள் நல்ல விதமாகவும், நீதியுடனும் நடப்பதிலிருந்து அல்லாஹ் உங்களைத் தடுப்பதில்லை. திண்ணமாக அல்லாஹ் நீதி செலுத்துவோரை நேசிக்கிறான். அவன் தடுப்பதெல்லாம் எவர்கள் தீன் தொடர்பாக உங்களுடன் போர் புரிந்தார்களோ, உங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றினார்களோ, மேலும் உங்களை வெளியேற்றுவதில் ஒருவருக்கொருவர்

உதவி செய்து கொண்டார்களோ அவர்களுடன் நீங்கள் நட்புக் கொள்வதைத்தான். அவர்களுடன் எவரேனும் நட்புக் கொண்டால் அவர்களே கொடுமையாளர்கள் ஆவர்.(திருக்குர்ஆன் 60:8–9)

இந்த உபதேசங்கள், போர்கள், கஷ்டங்கள், துயரங்கள் என எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தக் கூடியன. மதம் மாறும் படி யாரும் கட்டாயப் படுத்தப்படவில்லை. கருத்து வேறுபாடுகள் சகித்துக் கொள்ளப்பட்டன. எல்லோரும் நியாயமாக நடத்தப்–பட்டனர். போர்கள், கொலைகள், மோதல்கள் ஆகியன பற்றிய இறை வசனங்கள் எந்தச் சூழ்நிலையில் அருளப்பட்டன என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் அவற்றிற்குப் பொருள் கொள்ள வேண்டு மேயல்லாது, அவை அருளப்பட்ட நோக்கத்திற்கு முற்றிலும் மாறாகப் பொருள் கொள்ளக் கூடாது. (போரில் ஈடுபட்ட முஸ்லிம்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வது பற்றி) இவையே இறைவசனங்களின் முக்கியச் செய்தியாகும்.

## நம்பிக்கை – விசுவாசம்

முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்களிடம் அன்புடனும், ஒத்துழைப்புடனும் நடந்து கொண்டனர். முஸ்லிமல்லாத–வர்களும் அவ்விதமே நம்பிக்கையுடனும், விசுவாசத் துடனும் நடந்து கொண்டனர். ஹிஜ்ரி 2ம் ஆண்டில் பத்றுப் போரில் முஸ்லிம்கள் வெற்றிபெற்ற பிறகு, குறைஷித் தலைவர்கள் மீண்டும் ஒரு தூதுக்குழுவை அபிசீனியாவிற்கு அனுப்பினர். அபிசீனிய மன்னர் நஜாஜியை இந்தத் தூதுக் குழுவினர் சந்தித்து அங்கு தஞ்சமடைந்துள்ள முஸ்லிம்களை மக்காவிற்குத் திருப்பி அனுப்புமாறு வேண்டினர். இதனைத் தடுக்கும் முகமாக நபிகளார் நஜ்ஜாஷி மன்னரின் அவைக்கு உமையாவின் மகன் அம்ர் என்ற முஸ்லிமல்லாத ஒருவரை தூதுவராக அனுப்பி வைத்தார்கள். இவர் குறைஷித் தலைவர்களின் இந்தத் தீய நோக்கத்தை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றார்.

# நபிகளாருக்கு ஆதரவு தெரிவித்த முஸ்லிமல்லாதவர்கள்

நபிகள் நாயகம்(ஸல்) ஒரு எதார்த்தவாதியாகத் திகழ்ந்தார்கள். போர் முன்னேற்பாடுகளைப் புறக்கணிக்கவோ, தளர்த்தவோமாட்டார்கள். ஆன்மீகத்திற்கும், லௌகீகத்திற் குமிடையே ஒரு வியக்கத் தக்க சமநிலையைப் பராமரித்தார்கள். தங்களுடைய தோழர்களிடம் அறப்பண்புகளைப் போதித்திட ஆன்மீக ஆயுதத்தைப் பயன்படுத்திய நபிகளார், அதே நேரத்தில் வரலாற்றில் இணையில்லாத அளவுக்கு அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்துப்போருக்குத் தயார்படுத்தவும் தயங்க வில்லை. அவர்கள் எதையும் விட்டு வைக்கவில்லை. தங்களிடமுள்ள அனைத்துச் சக்திகளையும் திரட்டி தயார் நிலையில் இருந்தார்கள்.

ஹுனைன் போரின்போது நபியவர்களின் தரப்பில் பனிரெண்டாயிரம் பேர்கள் கொண்ட மிக வலுவான படை இருந்தபோதிலும் படை பலத்தை மேலும் பெருக்கிக் கொள்வதற்காகவும், தாக்குதல்களைத் தீவிரப் படுத்துவதற்காகவும் ஸப்வான் என்ற முஸ்லிமல்லாத வரிடமிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதங்களைக் கடன் வாங்கினார்கள்.

இவ்வாறாக ஸப்வான் என்ற முஸ்லிமல்லாத ஒருவர் ஹுனைன் போரின் போது நபிகளாருக்கு உதவினார். ஸப்வான், சுஹைல் என்ற இரு முஸ்லிமல்லாதவர்களும் ஹுனைன் போரின்போது முஸ்லிம்களுடன் சேர்ந்து போரிட்டார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு தக்க அங்கீகாரமும் மதிப்பும் அளித்தார்கள்.

போரில் கைப்பற்றப்பட்ட பொருட்களைப் பங்கிடும் போது, அந்த இருவருக்கும் மிக அதிக அளவில் கொடுத்தார்கள். ஆனால் அவர்களை இஸ்லாத்தில் இணையும்படி கூறவில்லை.

உஹதுப்போரின் போது, முஸ்லிம்களின் படை எதிரி குறைஷிப் படையினரால் எளிதில் கண்டுபிடிக்க முடியாத ஒரு புதிய யாருக்கும் அவ்வளவு தெரியாத மார்க்கமாக உஹுதுக்குச் சென்றது. இதற்காக நன்கு திறமை வாய்ந்த முஸ்லிமல்லாத ஒரு வழிகாட்டியை நபிகளார் நியமித்துக் கொண்டார்கள். அவர் முஸ்லிம்படையை உஹதுக்கு வழிகாட்டிச் சென்றார்.

## பகிரங்கமான பாவம்

மதீனாவில் நபிகளார் வாழ்ந்த போது, இஸ்லாத்தில் இணையும் படி யாரையும் கட்டாயப்படுத்த வில்லை. புதிய சமூக அமைப்பு ஒரு ஜனநாயகப் பூர்வமானதாக இருக்க வேண்டும் எனத் தான் விரும்புவதாக நபிகளார் தெளிவு படுத்தினார்கள். பின்னர் துரோகச் செயல்கள் காரணமாக பிரச்னைகள் உருவாகி கூட்டணியில் சிக்கல் ஏற்பட்ட போது யூத இனக்குழுக்களுடனான உறவுகள் மோசமடைந்தன. சில ஆண்டுகளுக்குப் பிறகு, யூத இனக்குழுவினரின் இரட்டைவேடம், துரோகம், விசுவாசமின்மை ஆகியவற்றின் காரணமாக முஸ்லிம்கள் அவர்கள் மேல் சந்தேகம் கொண்டு மோதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கால கட்டத்தில் ஒரு முஸ்லிம் தான் செய்திட்ட திருட்டை ஒரு யூதன் மீது சுமத்தி தப்பிக் முயற்சித்தார். நபிகளார் இது சம்பந்தமாக உடனடி விசாரணைக்கு ஆணையிட்டார்கள். விசாரணையின் முடிவில் திருட்டில் ஈடுபட்டது அந்த முஸ்லிம் தான் என்றும், அவர் தான் உண்மையான குற்றவாளி என்றும் தனது தவறை மறைக்க பழியை யூதன் மீது போட்டு விட்டார் என்றும் நிரூபணம் ஆனது.

> அப்போது அருளப்பட்ட எட்டு இறை வசனங்கள் அந்த முஸ்லிம் செய்திட்ட மோசமான செயலைக் கண்டித்ததுடன் யூதன் ஒன்றுமறியாத அப்பாவி என்றும் கூறின. (திருக்குர்ஆன் 4:108–116)

எல்லாம் வல்ல அல்லாஹ். திருக்குர்ஆனில் கீழ்க்கண்டவாறு கூறுகின்றான்:–

> மேலும் ஒருவன் ஒரு தவறை அல்லது பாவத்தைச் செய்து விட்டு ஒரு நிரபராதி மீது அதனைச் சுமத்தி விட்டால் அவன் பெரும் அவதூறையும், வெளிப்–படையான பாவத்தையும் நிச்சயம் சுமந்து கொள்பவனாவான். (திருக்குர்ஆன் 4:112)

ஒரு மோதல் அல்லது போரினால் ஏற்படக் கூடிய வெறுப்புணர்வு காரணமாக ஒரு முஸ்லிம் தனது அடிப்படை

இஸ்லாமியக் கொள்கைகளிலிருந்து பிறழ்வதை அனுமதிக்க முடியாது என்பதையும், ஒரு முஸ்லிம் எப்போதும் இஸ்லாமியக் கொள்கைகளுக்கு விசுவாசமாக இருக்க வேண்டு மென்பதையும் கீழ்க்கண்ட இறை வசனங்கள் தெளிவு படுத்துகின்றன.

> இறை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப் போராயும், நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்து விடக்கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிகவும் பொருத்தமானது. அல்லாஹ்வுக்கே அஞ்சிச் செயலாற்றுங்கள். நீங்கள் செய்வனவற்றை முழுமையாக அல்லாஹ் அறிந்தவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் *5:8* )

## உயரிய குணமும் பொறுமையும்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் போதனைகளில் பெருந்தன்மையும், அன்பும் மிக முக்கிய இடம் பெறுகின்றன. இறைவன் பெருந்தன்மையுடையவன். அவன் எல்லா வற்றிலுமுள்ள பெருந்தன்மையான அம்சங்களை நேசிக்கிறான் என நபிகளார் நவின்றார்கள். உங்களிடமுள்ள நிதானம், பொறுமை என்ற இரு பண்புகளை இறைவன் பெரிதும் நேசிக்கிறான் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். பல்வேறு சூழ்நிலைகளில், நபிகளார் சமயப் பொறுமைக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். ஒருமுறை பதூயின் ஒருவன் பள்ளிவாசலில் சிறுநீர் கழித்து விட்டான். அவனை அடிக்கத் தோழர்கள் பாய்ந்தார்கள். ஆனால் அவனை விட்டு விடும்படி நபிகளார் ஆணையிட்டார்கள். அந்த கிராமப்புற மனிதர் சிறு நீர் கழித்த இடத்தை தண்ணீரை ஊற்றி சுத்தம் செய்யும்படி ஏவினார்கள். அதன் பிறகு அந்த மனிதரிடம் இது

வணங்கும் இடம். இறைவனை வணங்கும் இடம், குர்ஆன் ஓதும் இடம்' என்று அமைதியாகக் கூறினார்கள்.

அவன் இடத்தை விட்டுச் சென்ற பிறகு நபிகளார் தோழர்களிடம் 'பிரச்னைகளை இலகுவாக்குவதற்காகவே நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்கள். பிரச்னைகளைச் சிக்கலாக் குவதற்காக அல்ல என்று கூறினார்கள். இந்த நிகழ்ச்சியிலிருந்து தெரிவது என்னவென்றால் அநாகரீகமாக நடந்து கொண்ட அந்த கிராமத்து பதூயினிடம் பொறுமையாக நடந்து கொள்ளுமாறு நபிகளார் தங்களது தோழர்களிடம் கேட்டுக் கொண்டதோடு அந்தச் சம்பவத்தின் போது பெருந்தன்மையோடு நடந்து கொண்டு அவனை மன்னித்தார்கள்.

## பிற சமயங்கள் பால் சகிப்புத்தன்மை

திருக்குர்ஆனில், இறைவன் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:–

> மேலும் (முஸ்லிம்களே) அவர்கள் அல்லாஹ்வை விடுவித்து யாரிடம் பிரார்த்தனை புரிகின்றார்களோ அவர்களின் கடவுள்களை நீங்கள் ஏசாதீர்கள். பிறகு அவர்கள் அறியாமையினால் எல்லை மீறி அல்லாஹ்வையே திட்ட ஆரம்பித்து விடுவார்கள். (திருக்குர்ஆன் 6:108 )

பிறரைப் பற்றி, பிறருடைய சமயங்களைப் பற்றிப் பேசும் போது நாகரீகமான வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டுமென நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் விடுத்த செய்தி தெளிவுபடக் கூறுகிறது. பிற மத நம்பிக்கையாளர்களின் தெய்வங்களையும் சிலைகளையும் அவமதிக்கக்கூடாது என நபிகளார் எப்போதுமே கூறி வந்துள்ளார்கள். பிற மதத்தினரின் தெய்வங்களை மோசமான பெயர்களைச் சொல்லி அழைக்க வேண்டாமெனவும் அப்படிச் செய்தால் அவர்கள் பதிலுக்கு அல்லாஹ்வை மோசமான பெயரால் அழைப்பார்கள் என்றும் நபிகளார் எச்சரித்தார்கள்.

கைபரிலிருந்து மதீனாவுக்கு நபிகளாரும் அவர்களுடைய தோழர்களும் சென்று கொண்டிருந்த போது நிகழ்ந்த ஒரு சம்பவம் பிற சமயத்தினர் மீது நபிகளார் எங்ஙனம் நடந்து கொண்டார்கள் என்பதைக் காட்டும் மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. சில முஸ்லிம்கள் போரில் கைப்பற்றிய பொருட்களுடன் தெளராத் வேத நூலின் பிரதிகளையும் கொண்டு செல்வதைக் கண்ணுற்ற ஒரு யூத மதகுரு இது பற்றி நபிகளாரிடம் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். இதை அறிந்த நபிகளார் பெரிதும் அதிர்ச்சியுற்று அந்த வேத நூலின் பிரதிகளை அவரிடம் கொடுத்து விடுமாறு ஆணையிட்டதோடு, அவரிடம் தங்களது தோழர்களின் தவறுக்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்கள்.

இது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த டாக்டர் இஸ்ரேல் வெல்பென்சன் என்ற புகழ் பெற்ற யூத அறிஞர் யூதர்களின் வேதநூலுக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எவ்வளவு பெரிய மரியாதை அளித்தார்கள் என்பதையே இச்சம்பவம் காட்டுகிறது எனக்குறிப்பிடுகிறார். நபிகளாரின் இந்தப் பொறுப்பான செயல் யூதர்களைப் பெரிதும் கவர்ந்தது. இச் சம்பவம் அவர்களுக்கு மறக்க வொண்ணா அனுபவமாக இருந்தது. கி.மு.70ல் ரோமர்கள் ஜெரூசலத்தைக் கைப்பற்றிய போது யூதர்களின் வேத நூல்களை எரித்தும், காலில் போட்டு மிதித்தும் அவமரியாதை செய்தார்கள். இதனை யூதர்கள் நன்குணர்ந்திருந்தனர். இதுபோல், வெறி பிடித்த கிறிஸ்துவர்கள் ஸ்பெயினில் யூதர்களின் வேத நூல்களை தீயிட்டுக் கொளுத்தினார்கள். இந்த வெறி பிடித்த வெற்றியாளர்–களுக்கும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கும் இடையே–யுள்ள மிகப் பெரிய வித்தியாசம் இது தான்.

## சமயத்தில் கட்டாயமில்லை

மதத்தில் எந்த விதமான கட்டாயமும் இல்லை' எனத் திருக்குர்ஆன் தெளிவுபடக் கூறுகிறது (2:256) மக்களை நேர்வழியின் பக்கம் அழைப்பதற்கு பயமுறுத்தலோ, கட்டாயமோ இருக்கக் கூடாது,

மாறாக நிதானமும் சமூகமான அணுகுமுறையுமே தேவை என நபிகளாருக்கு இறைவன் அறிவுரை வழங்கியுள்ளான். குர்ஆன் கூறுவதாவது... '(நபியே) விவேகத்துடனும், அழகிய அறிவுரைகள் மூலமாகவும், உம் இறைவனின் மார்க்கத்தின் பக்கம் அழைப்பீராக! மேலும் மிகச் சிறந்த முறையில் மக்களிடம் விவாதம் புரிவீராக (குர்ஆன்16:125)

நஜ்ரான் (ஏமன்) நாட்டிலிருந்து வந்த பதினான்கு பேர்களைக் கொண்ட கிறிஸ்துவத் தூதுக்குழுவினர் நபிகளாரைச் சந்தித்து இஸ்லாத்தைப் பற்றியும், அதன் கோட்பாடுகள் பற்றியும் கேள்விகள் எழுப்பி விளக்கம் பெற்றனர். அப்போது அவர்கள் இஸ்லாத்தில் ஏசு கிறிஸ்துவின் (ஈசா நபி) நிலை பற்றியும் கேள்வி எழுப்பி விளக்கம் பெற்றனர். அவர்களுக்குப் பதிலளித்த நபிகளார், இஸ்லாத்திற்கும், கிறிஸ்துவ சமயத்திற்கும் உள்ள தொடர்புகளைச் சுட்டிக்காட்டி ஏசு கிறிஸ்துவின் செய்தியையே இஸ்லாம் தொடர்ந்து பரப்பி வருகிறது என்றும் அதே நேரத்தில் பிதா–மகன் பரிசுத்த ஆவி என்ற கிறிஸ்தவர்களின் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், அந்த கிறிஸ்துவர்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு ஓரிறைவனான அல்லாஹ்வையே வணங்குமாறு அழைப்பு விடுத்தார்கள். மனித சமூகத்திற்கு நபிமூசா(அலை) மூலமாகவும், நபி ஈசா(அலை) மூலமாகவும் அருளப்பட்ட முந்திய வேதங்களை அங்கீகரிக்கும் திருக்குர்ஆனும் அதே ஓரிறைக் கோட்பாட்டின் அடிப்படையில் வந்த இறை வேதமே என்றும் கூறினார்கள்.

கிறிஸ்துவத் தூதுக்குழுவினர் இஸ்லாத்தின் கொள்கை களைக் கேட்டறிந்து அதற்குத் தங்களது பதில் வாதங்களை எடுத்து வைத்தார்கள். ஆனால் அவர்கள், நபிகளாரின் செய்தியை ஏற்க மறுத்தார்கள். திரும்பச் செல்லுவதற்கு முன் அவர்கள் பள்ளிவாசலின் உட்புறம் தங்களது வணக்கக் கிரியைகளை நடத்திட விரும்பினார்கள். அப்போது அங்கிருந்த

தோழர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் நபிகளார் குறுக்கிட்டு 'அவர்கள் தங்களது வழிபாடுகளைச் செய்யட்டும்' என்று கூறினார்கள். கிறிஸ்துவர்கள் கிழக்கு நோக்கி நின்று தங்களது வணக்க வழிபாடுகளை நடத்தினார்கள்.

அந்தத் தூதுக் குழுவினர் செல்வதற்கு முன்னர் நபிகளாரிடம் இரண்டு தூதுவர்களை தங்களுடன் அனுப்பும் படியும், தாங்கள் அவர்களிடம் மேலும் சில கேள்விகள் கேட்டு விளக்கம் பெற விரும்புவதாகவும் கேட்டுக் கொண்டார்கள். அதன்படி நபிகளார் அபூஉபைதா(ரலி)யை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். கிறிஸ்துவ தூதுக் குழு திருப்பிச் சென்றது. கிறித்துவர்கள் மதீனாவிற்கு வந்து நபிகளாரைச் சந்தித்தார்கள். இஸ்லாத்தின் கொள்கைகளைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். தங்களுடைய வாதங்களையும் எடுத்து வைத்தார்கள். பள்ளிவாசலின் உள்ளேயே தங்களது வழிபாடுகளையும் நடத்தினார்கள். எந்தவிதமான தொல்லை களையும் அனுபவிக்காமல் கிறிஸ்துவர்களாகவே திரும்பிச் சென்றார்கள்.

நபிகளாரின் இந்த அணுகுமுறையை தோழர்கள் மறக்கவில்லை. இஸ்லாம் பிற சமயங்களுக்கும் நம்பிக்கை களுக்கும் அளித்த மரியாதையையும், மற்றவர்களின் கண்ணியத்தைக் காத்திடும் விதமாக அவர்கள் கூறுவதைப் பொறுமையுடன் கேட்டு அறிந்து கொள்ளும் மனப்பான் மையையும் அவர்கள் இதன் மூலம் கற்றுத்தந்தார்கள். கிறிஸ்துவர்களுடனும், மற்ற நம்பிக்கை கொண்டோருடனும் சந்திப்பது, விவாதிப்பது, ஒற்றுமையாக வாழ்வது என்ற இந்த நிலை மூன்று காரணங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. மற்றவர்களைப் பற்றி அறிந்து கொள்ள முயற்சிப்பது, விவாதங்களின் போதும், நேருக்கு நேர் உரையாடும் போதும் நேர்மையுடன் நடந்து கொள்வது இறுதியாக உண்மை குறித்த ஒருவரது நிலைப்பாட்டை பணிவுடன் தெரிந்து கொள்வது, பிற சமயத்தினருடன் நபிகளார் கொண்டிருந்த உறவின் செய்தி

இதுதான். கிறிஸ்துவர்களின் நம்பிக்கை பற்றி அவர்கள் கேள்விகள் கேட்கத் தயங்கவில்லை. அவர்கள் சுதந்திரமாக புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களுடன் நபிகளாரின் தூதரும் உடன் சென்றார். குர்ஆன் கூறும் 'சமயத்தில் கட்டாயமில்லை' என்ற இந்தச் சொற்றொடர் வேற்றுமைகளை மரியாதையுடன் எதிர் கொள்வதையே குறிக்கிறது.

## சமயப் பன்முகத் தன்மை

சமயங்களின் பன்முகத் தன்மை பற்றிய திருக்குர்ஆனின் அணுகுமுறை உண்மையிலேயே வியப்பூட்டுவதாகும். பிற சமயங்கள் பால் எதிர்ப்புணர்வைக் காட்டாத திருக்குர்ஆன் சமயங்களின் பன்முகத்தன்மையை ஏற்றுக் கொள்வதோடு, பிற சமயங்களைச் சமமாகவும் கருதுகிறது. இறைவனின் விருப்பம் காரணமாகவே இந்த உலகில் பலதரப்பட்ட நம்பிக்கைகளும், பல தெய்வ வணக்க முறைகளும், வழிபாட்டுத் தலங்களும் தொடர்ந்து இருந்து வந்துள்ளன.

அனைத்து நம்பிக்கையாளர்களுக்கிடையேயும், சமயங்–களுக்கிடையேயும் வேறுபாடுகள் இருக்கின்றன. அவை தொடர்ந்து இருந்து வரவே செய்யும் என்பதை அங்கீகரிக்க வேண்டும். தங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும். நற்செயல்களை புரிவதற்கான பொதுவான ஒருதளம் கண்டறியப்பட்டு அதன் மூலம் நன்மையும், அறமும், அமைதியையும் மேம்படப் பாடுபட வேண்டும் என குர்ஆன் வலியுறுத்துகிறது.

> (நபியே) நீர் கூறும் வேதம் அருளப்பட்டவர்களே! எங்களுக்கும் உங்களுக்குமிடையிலுள்ள பொதுவான ஒரு விஷயத்தின் பக்கம் வாருங்கள் (குர்ஆன் 3:64)

யூத, கிறிஸ்துவ சமயங்களைப் பற்றிய குறிப்புகள் திருக்குர்ஆனில் அதிகம் காணப்படுகின்றன. ஏனெனில் அவ்விரு

சமயங்களும் அரேபிய தீபகற்பத்தில் அப்போது முக்கிய சமயங்களாக இருந்தன. ஆனால் குர்ஆன் "ஸாபியீன்கள்"'என்ற இன்னொரு சமூகத்தாரைப் பற்றியும் குறிப்பிடுகிறது. இவர்கள் நட்சத்திரங்களை வணங்கியவர்கள். சமரச மறையியல் ஞானக்கோட்பாட்டைப் பின்பற்றியவர்கள். இறை தூதர் அனுப்பப்படாத எந்த ஒரு பகுதியும் பூமியிலில்லை எனத் திருக்குர்ஆன் அறிவிக்கிறது. ஒவ்வொரு சமயச் சமுதாயமும் தெய்வீக உண்மையின் சில அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதே இதன் பொருளாகும். இந்தியா–விலிருந்த சூஃபி அறிஞர்கள் இந்து சமய மக்களால் பெரிதும் மதிக்கப்படும் இராமனும், கிருஷ்ணனும் இறை தூதர்களாக இருக்கக்கூடும் என்றும் இந்துக்களுக்கும் வேதங்கள் இருப்பதால் அவர்களும் வேதங்கள் அருளப்பட்ட மக்களாக இருக்கக் கூடும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்து வேதங்களில் சொல்லப்படும் இறைக் கோட்பாடு (ஈஸ்வர்) இஸ்லாமிய இறைக் கோட்பாட்டுடன் ஒத்துப் போகிறது. வேதங்களில் சொல்லப்பட்டுள்ள கடவுளுக்கு (ஈஸ்வர்) உருவமோ மனித அடையாளங்களோ இல்லை. பாவா பஃரீத் மற்றும் குருநானக் ஆகியோரின் போதனைகளின் அடிப்படையில் உருவான சீக்கிய சமயம், இஸ்லாமிய ஓரிறைக் கொள்கை–யையும், இந்து கலாச்சாரத்தையும் கொண்ட ஒரு தொகுப்பே–யாகும். சீக்கியர்களின் வேத நூலான 'குரு கிரந்த சாஹிபில்' இந்தியாவிலும் பாக்கிஸ் தானிலும் மிகவும் அறியப்பட்ட பாபா பரீதுத்தீன் கஞ்ஸஹர் என்ற துறவியின் துதிப்பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. இத்தகைய போக்குகளே 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த சீர்திருத்தவாதி ஷாஹ் வலீயுல்லாவின் சமயங்களின் ஒருங்கிணைப்பு (வாதுல் அல்தீன்) என்ற கோட்பாட்டிற்கு வழி வகுத்தது.

இவ்வாறாக குர்ஆன், தெய்வீக மெய்யியலின் வேறுபட்ட அம்சங்களையும் வேறுபட்ட சமூகங்களையும் கொண்ட ஒரு பன்முகச் சமய உலகத்தையே தீர்க்கதரிசனமாகக் கூறியது.

ஒவ்வொரு சமயமும் அதனதன் நம்பிக்கைகளில் கிரியைகளில், வணக்க முறைகளில் தனித்துவம் கொண்டவை. ஆனால் இந்த வெளிப்படையான வித்தியாசங்களுக்கு அடியில் ஒரு மெல்லிய ஒற்றுமைக் கோடு இருக்கின்றது. அந்த ஒற்றுமைக்கு குர்ஆன் மிகுந்த அழுத்தம் கொடுத்துள்ளது.

பன்முகச் சமயத்தன்மை கொண்ட இவ் உலகில் சமய ஒற்றுமையைப் பேணுவதற்காகக் குர்ஆன் கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. முதலாவதாக நம்பிக்கை கொண்ட சமூகத்தினர் மிகக் கடுமையான நிலை எடுக்க வேண்டாமென குர்ஆன் அறிவுறுத்துகிறது.

> வேதம் அருளப்பட்டவர்களே! உங்களது தீனில்– மார்க்கத்தில் (எதையும்) மிகைப்படுத்தாதீர்கள் மேலும் நீங்கள் அல்லாஹ்வின் விஷயத்தில் சத்தியத்தைத் தவிர வேறு எதையும் கூறாதீர்கள் (குர்ஆன் *4:171*)
>
> இரண்டாவதாக... (நபியே) விவேகத்துடனும், அழகிய அறிவுரைகள் மூலமாகவும் உம் இறைவனின் மார்க்கத்தின் பக்கம் அழைப்பீராக! மேலும் மிகச் சிறந்த முறையில் மக்களிடம் விவாதம் புரிவீராக! (குர்ஆன் *6:125*) மேலும் (நபியே! நம்பிக்கை–யாளர்களான) என் அடியார்களிடம் அவர்கள் மிகச் சிறந்த பேச்சைத் தான் பேச வேண்டும் என்று நீர் கூறுவீராக (குர்ஆன்*17:53*)
>
> மூன்றாவதாக... 'மேலும் (முஸ்லிம்களே) அவர்கள் அல்லாஹ்வை விடுத்து யாரிடம் பிராத்தனை புரிகின்றார்களோ அவர்களை நீங்கள் ஏசாதீர்கள். அவர்கள் பல தெய்வ வழிபாட்டாளர்களாக இருந்தாலும் சரி (குர்ஆன் *6:108*)
>
> நான்காவதாக.... மேலும் ரஹ்மானின் (உண்மையான) அடியார்கள் எத்தகையவர்களெனில் அவர்கள்

பூமியில் பணிவோடு நடப்பார்கள். அறிவீனர்கள் அவர்களுடன் முறைகேடாக உரையாடினால் 'உங்களுக்குச் சாந்தி உண்டாகட்டும் என்று கூறிவிடுவார்கள் (குர்ஆன் 25:63)

அடிப்படையான சமய வேறுபாடுகள் என்று வரும் போது ஒருவரையொருவர் மதிப்பது, மென்மையாகவும் அன்பாகவும் நடந்து கொள்வது, இவை மட்டும் போதாது. மேலும் வித்தியாசங்கள், மோதலாக உருவாகும் சூழ்நிலை ஏற்படும்போது, வாழு, வாழவிடு என்ற அடிப்படையில் சண்டையை நிறுத்தி தங்களது வழியில் பயணத்தைத் தொடருமாறு குர்ஆன் முஸ்லிம்களை அறிவுறுத்தியுள்ளது.

கூறி விடுவீராக! ஓ! நிராகரிப்பாளர்களே நீங்கள் எவற்றை வணங்குகின்றீர்களோ அவற்றை நான் வணங்குவதில்லை. நான் யாரை வணங்குகின்றேனோ அவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர். மேலும் நீங்கள் வணங்கியவற்றை நான் வணங்குபவன் அல்லன். நான் யாரை வணங்குகின்றேனோ அவனை நீங்கள் வணங்குகின்றவர்கள் அல்லர். உங்களுக்கு உங்களுடைய மார்க்கம், எனக்கு என்னுடைய மார்க்கம். (குர்ஆன் 109:1–6)

அனைத்துவிதமான நம்பிக்கையாளர்களையும் மதிக்க வேண்டுமென்பதே குர்ஆன் குறிப்பிட்டுள்ள முக்கியமான வழிகாட்டுதலாகும். அனைத்தையும் இறைவனே நன்கறிந்தவன்.

# 17

# கைபர்

மதீனாவிற்கு வடக்கே 150 கி.மீ தொலைவில் உள்ள கைபர் நகரம் யூதர்களின் கோட்டையாக இருந்தது. அதன் கோட்டை, கொத்தளங்கள், ஆயுத பலம், வளம் ஆகியவை காரணமாக எதிரிகள் அந்நகரைத் தாக்க அஞ்சினர். மதீனாவும் இதற்கு விதிவிலக்கு அல்ல. யூத இனக்குழுக்களான பனூகைனுகா, பனூநளீர், பனூகுறைழா ஆகியவற்றின் ஆலோசனை காரணமாக கைபர் ஆட்சியாளர்கள், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு எதிரான நிலை எடுத்து வந்தனர். முஸ்லிம்களின் நலனிற்கு எதிராகச் செயல்பட்டதோடு, தங்களது நிலையை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவும் அவர்கள் தயங்கவில்லை.

கைபர் தலைவர்கள் மக்காவிலுள்ள குறைஷியர் களுக்கும், பிற இஸ்லாமிய எதிர்ப்பு இனக் குழுவினருக்கும் (கத்ஃபான், ஹவாஸின் இனக்குழுக்கள்) விசேடத் தூதர்களை அனுப்பி மதீனாவிலுள்ள முஸ்லிம்களுக்கு எதிராகத் தாக்குதல்கள் நடத்திடத் தூண்டியதோடு அவர்கட்குப் பண உதவியும் செய்தனர். அவர்களின் இந்த சதிச் செயல்கள் காரணமாக அகழிப்போரின் போது' முஸ்லிம்களுக்கு எதிராக பல புதிய எதிரிகள் கிளம்பினர். அவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களையும் கொல்ல திட்டம் தீட்டினர். எனவே ஹுதைபிய்யாவிலிருந்து திரும்பிய பதினைந்து நாட்களுக் குள்ளாகவே, நபிகளார் முதலில் கைபர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு திட்டம் தீட்டினார்கள். ஹுதைய்பிய்யா உடன் படிக்கைக்குப் பின்னர், மக்கா குறைஷியர்களுடன் சமாதானம் ஏற்பட்டு விட்டது. எனவே, அவர்கள் மதீனாவைத் தாக்குவார்கள் என்ற பயம் இல்லாமல், கைபர் விவகாரத்தை கவனிக்க முடியும் என நபிகளார் நம்பினார்கள். நபிகளார் கைபருக்கு தொடர்ந்து

தூதர்களை அனுப்பி வைத்து சமாதான உன்பாடு காண முயற்சித்தார்கள். ஆனால் பலன்இல்லை. இறுதியில் கைபருக்கு எதிராகப் படை நடத்திச் சென்றிட முடிவு செய்தார்கள். எனினும் எதிரி விழிப்படைந்து விடக் கூடாது என்று கருதி இத்திட்டதை நபிகளார் ரகசியமாக வைத்திருந்தார்கள். கைபர் மற்றும் அவர்களது கூட்டணிப் படையில் பதினான்காயிரம் வீரர்கள் இருந்தனர். ஆனால், நபிகளார் வெறும் ஆயிரத்தி நானூறு பேர்களுடனேயே படை நடத்திச் செல்ல முடிவு செய்தார்கள். இன்னும் அதிக அளவுப் படையை திரட்டியிருக்க முடியும். ஆனால் இதுவே போதுமென நபிகளார் நினைத்தார்கள். இரவு நேரத்தில் கைபருக்கு அருகே வந்த போது, அந்நகரைப் பற்றி நன்கு தெரிந்த ஒரு வழிகாட்டியை நியமித்துக் கொண்ட நபிகளார் தன்னுடைய முகாமை அங்கிருந்த இரண்டு கோட்டைகளுக்கு இடையே அமைத்துக் கொண்டார்கள். இது கைபர் மக்களுக்கும், அவர்களது கூட்டணிப் படையான கத்ஃபான்களுக்கு–மிடையிலான தொடர்பை துண்டித்திட உதவியது.

பொழுது விடிந்த போது, இதனைக் கண்ணுற்ற இரண்டு கோட்டைகளிலுமிருந்த வீரர்கள் பயமும் வியப்பும் அடைந்தனர். இந்த முற்றுகை பல நாட்கள் நீடித்தது. அதேவேளையில், நபிகளாரும் அவர்களது படையினரும் எதிரிகளை தோற்கடிக்கக் கூடிய போர்த் தந்திரங்களை வகுத்துக் கொண்டனர். கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தாக்கும் எண்ணத்துடன் அவர்கள் முதலில் எளிதில் தாக்குதலுக்கு இலக்காகும் கோட்டைகளைத் தாக்கினர். இந்தப் போர்த் தந்திரம் நன்கு வேலை செய்தது. முதல் கோட்டை எளிதில் வீழ்ந்தது. சரணடைவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டன. தோற்கடிக்–கப்பட்டவர்கள் தங்களது உடைமைகளை விட்டு விட்டு பெண்களுடனும், குழந்தைகளுடனும் நாட்டை விட்டுச் சென்று விடவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. கடைசிக் கோட்டையான கமூஸ் பதினான்கு நாட்களுக்குப் பின்னர் முஸ்லிம்கள் வசமாகியது. முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் முற்றுகை சற்று திணறலையே ஏற்படுத்தியது. கடைசி இரண்டு

கோட்டைகளும் பின்னர் சரணடைந்தன. எதிரிகள் சரணடைவதற்கான நிபந்தனைகள் பற்றிய பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

## விஷமும் ஒப்பந்தமும்

கைபர் யூதர்கள் அங்கேயே தங்கியிருந்து தங்களது பண்ணை நிலங்களையும் பழத்தோட்டங்களையும் பார்த்துக் கொள்ளலாம் என்றும், அதற்காக அவர்கள் முஸ்லிம்களுக்கு நிரந்தரமாக வரிசெலுத்த வேண்டும் என்றும் நபிகள்(ஸல்) நிபந்தனை விதித்தார்கள்.

யூதர்கள் அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு நபிகளாரையும் அவரது தோழர்களையும் அந்த நிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக விருந்துண்ண அழைத்தனர். ஆட்டின் தோள்பட்டை இறைச்சித் துண்டு ஒன்றை அவர்கள் நபிகளாருக்கு வழங்கினர். அதனை உட்கொண்ட நபிகளாருக்கு அதன் சுவை சற்று வித்தியாசமாகத் தெரியவே அதனை உடனே வெளியே துப்பி விட்டார்கள். தம்முடனிருந்து அந்த இறைச்சியைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த பிஷர்(ரலி) என்ற தோழரை அதனை உண்ண வேண்டாம் என நபிகளார் எச்சரித்தார்கள். எனினும் அவர் ஏற்கனவே அதை உட்கொண்டு விட்டதால், நபிகளாரின் எச்சரிக் கையால் பலன் இல்லை. அந்த தோழர் மரணமடைந்து விட்டார். ஆட்டி றைச்சியைச் சமையல் செய்த பெண் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது இறைச்சியில் விஷம் கலந்து விட்டதை ஒப்புக்கொண்டார். நீங்கள் மன்னராக இருந்தால் உங்களைக் கொல்வதன் மூலம் அமைதி பெற முடியுமென்றும், நபியாக இருந்தால் இது பற்றி நீங்கள் முன்னரே அறிந்து கொண்டிருக்க முடியும் என்றும் அவள் கூறினாள். நபிகளார் முதலில் அவளது துரோகச் செயலைப் பொருட் படுத்தாத போதிலும், பின்னர் தன்னுடைய தோழர் பிஷர்(ரலி) விஷம் காரணமாக மரண மடைந்தது கண்டு, அவளைக் கொல்லும் படி உத்தர விட்டார்கள். முஸ்லிம்கள்

ஆத்திரமடைந்து, உடன் பாட்டை முறித்து விட்டு மீண்டும் போரைத் துவக்க வேண்டுமென்று கோரினர். ஆனால் நபிகளார் யூதர்களை மன்னித்து உடன்படிக்கைக்கு மதிப்பளித்தார்கள்.

## இறைவனையும், அவனது தூதரையும் தேர்வு செய்த ஸபிய்யா(ரலி)

சிறைப்பிடிக்கப்பட்டவர்களில், பனூ நளீர் மற்றும் பனூஹுறைழா யூத இனக்குழுக்களின் தலைவரான ஹுயய்யாவின் மகள் ஸபிய்யாவும் ஒருவர். ஸபிய்யா தனது தகப்பனாரைப் போலல்லாது, நபிகளாரின் இறைச்செய்தியின் சாராம்சத்தை அறிந்து கொள்ளும் ஆவலில் இருந்தார். அவர் பக்தியாளராக இருந்தார். தன்னுடைய ஆட்கள் நபிகளாருடன் பகைமை பாராட்டுவதை அவர் விரும்பவில்லை. நபிகளார் இந்தப் பெண்ணைப்பற்றியும் அவரது ஆன்மீக ஈடுபாடு பற்றியும் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தார்கள்.

தனது விதி மதீனா முஸ்லிம்களுடன் சம்பந்தப்பட்டிருப்பது போன்று கனவு ஒன்று தான் கண்டதை அவர் நபிகளாரிடம் தெரிவித்தார். இதனைச் செவிமடுத்த நபிகளார் அவளிடம் "'யூதராகவே இருந்து அவர்களிடமே திரும்பிச்செல் அல்லது முஸ்லிமாக ஆகிவிடு'" என்று கூறினார்கள். வியப்புற்ற அவர் 'நான் அல்லாஹ்வையும் அவன் தூதரையுமே தேர்வு செய்கிறேன்' எனக் கூறினார். அவரது விருப்பத்தினை ஏற்று நபிகளார் அவரை இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு நபிகளார் அவரை (ஸபிய்யா ரலி) திருமணம் செய்து கொண்டார்கள். வெற்றி கொண்ட நாட்டு மன்னரின் மனைவியையோ அல்லது மகளையோ திருமணம் செய்து கொள்ளும் அப்போதைய மரபினை ஏற்றும், தோல்வியுற்றவர்களின் துன்பத்தினைப் போக்கி அவர்களின் மாண்மைப் பாதுகாக்கும் வகையிலும் நபிகளார் ஸபிய்யாவைத் திருமணம் செய்து கொண்டார்கள். ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டின்

போது, அனைத்துக் கோட்டைகளும் கைப்பற்றப் பட்டன. நபிகளார் அந்தப் பகுதியில் இருந்த தங்களுடைய முக்கிய கடைசி எதிரியையும் வெற்றி கொண்டு விட்டார்கள். அரேபியத் தீபகற்பத்தில் தற்போது அமைதி நிலவியது. வடக்கிலிருந்து இனி எந்த எதிர்ப்பும் வராது என்று முஸ்லிம்கள் கருதினர். இனக்குழுக்களினுடனான உறவுகள் பற்றிய ஒப்பந்தம், வர்த்தக ரீதியான ஒப்பந்தம் ஆகியவை மதீனாவில் மிகுந்த பாதுகாப்புடன் வாழ முஸ்லிம்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

நபிகளார் செய்து கொண்ட திருமணங்களும் நிலைமையை மாற்றிட துணை புரிந்தன. சில மனைவியர்கள் இனக் குழுக்களைச் சேர்ந்தவர்களாகயிருந்தனர் அதன் காரணமாக அந்த இனக் குழுவினர் நபிகளாரின் உறவினர்கள் ஆனதோடு, தாங்கள் நபிகளாரின் அணியில் இருப்பதாகக் கருதிப் பெருமை கொண்டனர். ஆகையால், மதீனாவிலிருந்த முஸ்லிம் சமூகம் எளிதில் தாக்கப்படமுடியாத ஒரு சமூகமாக மாறியது. எட்டு ஆண்டுகளுக்குள்ளாகவே, இஸ்லாம் மதீனாவில் நிலை பெற்றதோடு, அப்பகுதியில் இணையற்ற அந்தஸ்தையும், கௌரவத்தையும் பெற்றது.

# பெருந்தன்மையான அணுகுமுறை

மக்காவில் இந்தக்கால கட்டத்தில் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அங்கு விவசாயம் இல்லாததால் பிற இடங்களிலிருந்தே உணவுப்பொருட்கள் வர வேண்டியதிருந்தது. ஆனால் மக்காவிற்கு உணவு தானியங்களை வழங்கி வந்த பகுதிகளிலும் பஞ்சம் எற்பட்டிருந்தது. நஜ்த்' தேசம் மட்டுமே பஞ்சத்திற்கு ஆட்படாமல் அப்போது இருந்தது. அங்கிருந்து தான் மக்காவிற்கு உணவு தானியங்கள் போய்ச்சேர வேண்டும்.

ஒருநாள் இப்னு முஸ்லிமா என்பவரின் தலைமையிலான முஸ்லிம்களின் ரோந்துப்படை சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஒரு நபரைக்கைது செய்து மதீனாவிற்குக் கொண்டு வந்தது. நபிகளாருக்கு அவர் நன்கு தெரிந்தவர் தான். அவர் நஜ்த் பிரதேசத்தின் தலைவரா ஸுமாமாஎன்பார். அவர் ஹிஜ்ராவுக்கு முன்னர் மக்காவிற்கு வந்து நபிகளாரைச் சந்தித்துள்ளார். அப்போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வழக்கம்போல் அவருக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்தியம்பினார்கள். ஆனால் அவர் நபிகளாரைக் கொன்று விடப்போவதாகப் பயமுறுத்தினார். அதே நபர் தான் தற்போது கைதியாக நபிகளார் முன்பு நிறுத்தப் பட்டுள்ளார். நபிகளார் அவரிடம் சிலை வணக்கத்தைக் கைவிட்டு விட்டு இறைவன் மீது விசுவாசம் கொண்டு அவனுக்குப் பணிய உனக்கு இன்னும் நேரம் வரவில்லையா என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'ஓ! முஹம்மதே நீங்கள் என்னைக் கொன்றால் ஒரு கொலைகாரனைக் கொன்றதாகும். நீங்கள் என்னிடம் அன்பும், கருணையும், பரிவும் காட்டினால் அது ஒரு நன்றி மறவாதவனிடம் காட்டியதற்கு ஒப்பானதாகும். உங்களுக்குப் பொருள் நஷ்ட ஈடு வேண்டுமென்றால் என்னிடம் கேளுங்கள் தருகிறேன்' என்று சொன்னார். இதனைக் கேட்ட நபிகளார் அமைதியாகி விட்டார்கள்.

அவரது கரங்களில் இரத்தக்கறை படிந்திருந்தது. அந்தக் காரணத் திற்காகவே அவர் ஒழிக்கப்பட வேண்டியவர். அவர் சில முஸ்லிம்களைக் கொன்றிருக்கக்கூடும். அவரை விருந்தினர் கைதியாக நடத்த வேண்டுமென்றும், அதன் மூலம் அவர் பள்ளிவாசலில் இருந்து கொண்டு முஸ்லிம்களின் அன்றாட வாழ்க்கை முறையினை பார்க்க முடியும் என்றும் நபிகளார் ஆணையிட்டார்கள். இரண்டாவது நாளும், மூன்றாவது நாளும் முதலில் தான் சொன்ன பதிலையே திரும்பத்திரும்ப அவர் சொல்லிக் கொண்டிருந்தார். மூன்றாவது நாள் அவரை விடுவிக்க ஆணையிட்ட நபிகளார் 'ஸுமாமா, உன்னை விடுவித்து விட்டேன். நீ இப்போது எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்'. என்று கூறினார்கள்.

நபிகளார் தன்னிடம் இப்படி கருணையுடன் நடந்து கொண்டதை அவர் எதிர்பார்க்கவில்லை. நபிகளாரின் பெருந்தன் மையான சமிக்ஞை காரணமாக அவனது உள்ளத்தில் பெருந்தாக்கம் ஏற்பட்டது. பள்ளிவாசலிலிருந்து வெளியே சென்ற அவர் அருகிலிருந்த கிணற்றுக்குச் சென்று குளித்து விட்டு மீண்டும் பள்ளி வாசலுக்கே திரும்பினார். நபிகளாரிடம் தன்னை ஒப்படைத்துக் கொண்ட அவர் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அவனின் தூதர் என நான் சாட்சியம் பகர்கிறேன்' என்று கூறினார். அவர் தொடர்ந்து "சில நிமிடங்களுக்கு முன்பு வரை நீங்கள் என்னால் பெரிதும் வெறுக்கப்பட்டவராக இருந்தீர்கள். இப்போது இந்த உலகில் என்னால் மிகவும் நேசிக்கப்படுபவராக ஆகிவிட்டீர்கள்" என்று கூறினார்.

உங்களது சமயமே எனக்கு மோசமான சமயமாகத் தெரிந்தது. ஆனால் இப்போது அதுவே எல்லாவற்றையும் விட எனக்கு மிகவும் பிடித்த சமயமாக ஆகிவிட்டது. எனக்குப் பிடிக்காதிருந்த மதீனா இப்போது நான் மிகவும் நேசிக்கும் ஒரு நகராக ஆகி விட்டது என்றும் கூறினார். ஸுமாமா இஸ்லாத்தில் இணைந்த நிகழ்வானது, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த 'நஜ்த்'

பிரதேசத்தில் இஸ்லாத்தின் செய்தி பரவிட வாசல்களைத் திறந்துவிட்டது. அதற்குப் பின்னர் அவர் நபிகளாரிடம் பேசிக் கொண்டிருந்த போது நஜ்த் நகரிலிருந்து மக்காவிற்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதை தடுத்து நிறுத்துவேன் என்றும், உங்களது உத்தரவில்லாமல் ஒரு மணி தானியம் கூட அங்கு செல்வதை அனுமதிக்க மாட்டேன் என்றும் கூறினார்.

ஏற்கனவே பஞ்சத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த மக்காவில், ஸுமாமாவின் அறிவிப்புக் காரணமாக மேலும் நிலைமை மோசமாகியது. கடைசியில் மக்காவாசிகள் மதீனாவிற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்தித்து தங்கள் பால் கருணை காட்டிப் பட்டினிச்சாவிலிருந்து தங்களைக் காப்பாற்றும்படி வேண்டினர். நபிகளார் உடனே ஸுமாமாவிற்குச் செய்தி அனுப்பி, மக்காவிற்கு உணவு அனுப்ப விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு வேண்டினார்கள். அப்போது நபிகளார் சொன்னதாவது:– "தனது எதிரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் அல்லாஹ்வே உணவளிக்கிறான்.

முன்பு நீங்கள் என்ன செய்தீர்களோ, அதை மீண்டும் செய்யுங்கள் (உணவுப் பொருட்கள் வழங்குதல்) ஆனால் அதை விடவும் கொஞ்சம் அதிகமாக வழங்குங்கள்." அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்கட்கும் வழங்கும் பொருட்டு 500 தங்க நாணயங்களை குறைஷிகளின் தலைவர் அபூசுஃப்யானுக்கு நபிகளார் அனுப்பி வைத்தார்கள். இஸ்லாத்தின் கடும் எதிரியான அபூசுஃப்யான் கோபமும் எரிச்சலும் கொண்டு 'முஹம்மது நமது இளைஞர்களை வழிக்கெடுக்க விரும்புகிறார்' என்று சொன்னார். ஆனால் நபிகளாரின் உதவியை மறுக்கும் நிலையில் அவர் இல்லை. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த காலத்தில் அவர்கட்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அவர்களைப் பின்பற்றியோருக்கும் சொல்லவொண்ணா கொடுமைகள் இழைக்கப்பட்டன.

நபிகளாரையும் அவர்களது குடும்பத் தினரையும் மூன்று ஆண்டுகள் 'சமூகப் புறக்கணிப்புச்' செய்தனர். ஆனால் நபிகளார் இந்த மனிதாபிமானமற்ற செயல்களுக்குப் பதிலாக மக்காவாசிகள் பஞ்சத்தின் காரணமாக உண்ண உணவின்றி வாடியபோது அவர்களைக் காப்பாற்றிட யமாமாவிலிருந்து மக்காவிற்கு உணவுப் பொருட்கள் சென்றிட அனுமதி அளித்தார்கள். பின்னரும், இதுபோன்ற சம்பவங்கள் பல நடந்தன. இதன் காரணமாக நபிகளாரை எதிரிகளாகப்பாவித்து வந்த மக்காவாசிகளின் உள்ளத்தில் மாறுதல் ஏற்பட்டது. அவர்களைத் தங்களுடைய சகோதரர்களில் ஒருவராக நினைத்துப் பெருமைப்பட ஆரம்பித்தனர். இதனை வெளிப் படையாகத் தெரிவிப்பதற்கு அவர்கள் தயங்கிய போதிலும், நபிகளார் பாலும், இஸ்லாத்தின் பாலும் அவர்களின் உள்ளம் திரும்பியது.

## ஒழுக்கமும், அறநெறிகளும்

ஒரு வழி காட்டும் நூல் என்பது ஒழுக்கம் பற்றியும் அறநெறிகளைப் பற்றியும் பேசுகின்ற நூலாக இருக்க வேண்டும். திருக்குர்ஆனில் ஒழுக்கம் மற்றும் அறநெறிகள் பற்றிய ஏராளமான வசனங்களும் மேற்கோள்களும் கூறப்பட்டுள்ளன. வேதநூல்களில் உள்ள வழிகாட்டுதல்களின் பொருள் இறை நம்பிக்கை கொண்டோருக்கு மட்டுமே விளங்கும் அல்லது இறைவனின் அத்தாட்சிகளை உணர்ந்து இந்த உலகம் படைக்கப்பட்டுள்ளதற்கு ஒரு தார்மீக நோக்கம் உள்ளது எனப் பகுத்துணர்ந்து கொள்ளுபவர்கட்கு மட்டுமே புரியும்.

## புறங்கூறல்

எல்லாம் வல்ல அல்லாஹ், திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்.

> இறை நம்பிக்கை கொண்டவர்களே! அதிகம் சந்தேகம் கொள்வதைத் தவிர்த்திடுங்கள். ஏனெனில் சில

சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன. மேலும் துப்பறிவதில் ஈடுபடாதீர்கள். இன்னும் உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றிப் புறம் பேச வேண்டாம். உங்களில் எவரேனும் இறந்து விட்ட தன் சகோதரனின் இறைச்சியை உண்ண விரும்புவரா என்ன? பாருங்கள் நீங்கள் அதனை அறுவெறுப்பாகக் கருதுகிறீர்கள். அல்லாவுக்கு அஞ்சுங்கள். திண்ணமாக அல்லாஹ் பாவமன்னிப்புக் கோரிக்கையை பெரிதும் ஏற்றுக் கொள்பவனாகவும் கிருபையாளனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 49:12)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாவது:– யாராவது என்னிடம் வந்து 'எனது நாவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பேன், என்னுடைய மர்மஸ் தலத்தைப் பாதுகாப்பேன், அடுத்தவர்களைப் பற்றி தவறாகப் பேசமாட்டேன், அவதூறு பேச மாட்டேன், புறம் கூற மாட்டேன், விபச்சாரம் மற்றும் அதுபோன்ற பாவச் செயல்களில் ஈடுபடமாட்டேன் என்று வாக்குறுதி அளித்தால் நான் அவர்கட்குச் சொர்க்கம் உண்டு என்று உத்தரவாதம் அளிக்கிறேன்'

## சந்தேகம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாவது:–

சந்தேகம் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். தவறான தகவல்களின் அடிப்படையில் சந்தேகம் ஏற்படக்கூடும். அடுத்தவரை உளவு பார்க்காதீர்கள் மற்றவர்களுடைய மறைவான குறைகளை பகிரங்கப்படுத்தாதீர்கள்.

## பொய்யுரைத்தல்

இறைவன் குர்ஆனில் கூறுகிறான்:

விக்கிரகங்கள் எனும் அசுத்தத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பொய்யுரைப்பதையும் நிறுத்தி விடுங்கள் (திருக்குர்ஆன் 22:30) என்றும்..

அவன் பொய்யுரைப்பவர்களில் ஒருவனாக இருந்தால் நிச்சயமாக அல்லாஹ்வின் சாபம் அவன் மீது உண்டாகும் (திருக்குர்ஆன் *24:7*) என்றும் கூறுகிறான்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "உங்களுடைய சகோதரனிடமோ, சகோதரியிடமோ நீங்கள் ஒன்றைக் கூறி அது உண்மை என்று அவர்கள் ஏற்றுக் கொள்ளும் போது, நீங்கள் பொய்யுரைத்தால் அது மிகப் பெரிய துரோகமாகும்" என்று கூறினார்கள். மேலும் "மக்கள் சிரிப்பதற்காகப் பொய்யு–ரைப்பவன் நாசமாகப் போகட்டும் நாசமாகப் போகட்டும், நாசமாகப் போகட்டும்' என்றும்" கூறினார்கள்.

## யூகங்கள் பாவமேயாகும்

தவறான யூகங்களும், மற்றவர்களைப் பற்றிக் காரணமின்றித் தவறாகப் பேசுவதும் தடுக்கப்படவேண்டும். நம்பிக்கையாளர்கள் யூகமாகப் பேசுவதைத் தவிர்த்திட வேண்டும். சில யூகங்கள் பாவகரமானவை. மற்றவர்களை உளவு பார்க்க வேண்டாம். இல்லாத போது பிறரைப் பற்றித் தவறாகப் பேச வேண்டாம். மேலும் வாய்மொழியாகச் சொல்லப்படும் செய்திகளையோ, வதந்திகளையோ, கிசுகிசுக்களையோ நம்ப வேண்டாம். ஏனெனில் அவை பெரும்பாலும் பொய்யாகவும், உண்மையும் மெய்யும் கலந்ததாகவும், உண்மைக்கு முற்றிலும் மாறானதாகவும் இருக்கின்றன. பிறரைப் பற்றியோ அல்லது சம்பவங்களைப் பற்றியோ கூறுகின்ற போது, நம்பிக்கை யாளர்கள் முழு உண்மைகளையும் விசாரித்துத் தெரிந்து கொண்டபின்னரே கூற வேண்டும். மற்றவர்களைப் பற்றி கருத்துச் சொல்கின்ற போது, மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். இது பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுவதாவது.

இறை நம்பிக்கை கொண்டவர்களே! அதிகம் சந்தேகம் கொள்வதைத் தவிர்த்திடுங்கள். ஏனெனில் சில சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன. (குர்ஆன் *49:12*)

இறை நம்பிக்கை கொண்டவர்களே! தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தி உங்களிடம் கொண்டு வந்தால், அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்துத் தெளிவுபடுத்திகக் கொள்ளுங்கள். நீங்கள் தெரியாத்–தனமாக ஏதேனும் ஒரு கூட்டத்தினருக்குத் தீங்கிழைத்து விட்டு பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது. (குர்ஆன்: *49:6*)

நல்ல வார்த்தைக்கு (கலிமா தய்யிபாவு)க்கு அல்லாஹ் எவ்வாறு உவமை கூறுகிறான் என்பதை நீர் கவனிக்க–வில்லையா? அது ஒரு நல்ல மரத்தைப் போன்றதாகும். அதன் வேர் பூமியில் ஆழப் பதிந்திருக்கின்றது. அதன் கிளைகள் வானளாவ உயர்ந்து நிற்கின்றன. எந்நேரமும் அம்மரம் தன் இறைவனின் ஆணைக்–கேற்ப, கனிகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. (திருக்குர்ஆன் *–14:24–25*)

மேலும் கெட்ட வார்த்தைக்கு உவமை, ஒன்றுக்கும் உதவாத கெட்ட மரத்தைப் போன்றதாகும். அந்த மரம் பூமியின் மேல் மட்டத்திலிருந்து பிடுங்கி எறியப்படுகிறது. அதற்கு எந்த விதமான நிலையான தன்மையும் கிடையாது. (திருக்குர்ஆன்*14:26*)

இறை நம்பிக்கையாளர்களே! எந்த ஆண்களும், பெண்களும் மற்றெந்த ஆண்களையும், பெண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்த வர்களாக இருக்கலாம். நீங்கள் ஒருவரை யொருவர் குத்திப்பேசாதீர்கள். ஒருவருக் கொருவர் மோசமான பட்டப்பெயர்களைச் சூட்டி அழைக்காதீர்கள். (திருக்குர்ஆன் *49:11*)

# பொழுது போக்கும் ஓய்வும்

பொழுது போக்கும் ஓய்வும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான ஒன்றாகும். சோர்வைப் போக்கி மனத்தில் புத்துணர்ச்சியையும், தெம்பையும் ஏற்படுத்த அவை உதவும். இதன் காரணமாகவே மக்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை விரும்புகிறார்கள்.

தொல்லைகள் விளைவிக்காத தீங்கற்ற பொழுது போக்குகளில் ஈடுபட ஒரு வரையறைக்கு உட்பட்டு நபிகளார் தங்களது தோழர்கட்கு அனுமதி வழங்கினார்கள். சில நேரங்களில் நபிகளார் தோட்டங்களுக்குத் தனியாகச் சென்று அங்கு பொழுதைப் போக்குவார்கள். சில நேரங்களில் தோழர்களையும் உடன் அழைத்துச் சென்று மரங்களின் கீழ் உட்கார்ந்து கொண்டு பல விஷயங்கள் பற்றி விவாதிப்பார்கள். சில நேரங்களில், தோழர்களுக்கிடையே நீச்சல் போட்டிக்கு ஏற்பாடு செய்வார்கள். அது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்கள் நபிகளாருடன் இருந்தார்கள். நீண்ட நாட்களுக்குப்பிறகு ஒருசமயம் மழை பெய்த போது நபிகளார் மழையில் நனைந்து கொண்டு குளித்தார்கள். அவர்கள் ஓட்டப்பந்தயங்களிலும், மல்யுத்தங்களிலும், வில்வித்தைப் போட்டிகளிலும் பார்வையாளராகக் கலந்து கொண்டு அவற்றை ரசித்து மற்றவர்களுடன் சேர்ந்து மனம் விட்டுச் சிரிப்பார்கள்.

மகிழ்ச்சியான தருணங்களில் கொட்டு(தப்ஸ்) அடிக்கப்படுவதை நபிகளார் விரும்புவார்கள். ஒரு ஈத் பெருநாளின் போது இரண்டு அன்ஸாரிச் சிறுமிகள் ஆயிஷா(ரலி) அவர்களின் அருகில் உட்கார்ந்து கொண்டு பாட்டுப் பாடினார்கள். இதனைக் கண்டு அபூபக்கர்(ரலி) அவர்கள் கோபமுற்றார்கள். ஆனால் நபிகளார் தலையிட்டு சிறுமிகளைத் தொடர்ந்து பாட அனுமதித்தார்கள்.

திருமணங்களின் போது கொட்டு(தப்ஸ்) அடிப்பதை நபிகளார் அனுமதித்தார்கள். ஆயிஷா(ரலி) அவர்களுடன்

இருந்த ஒரு அன்ஸாரிப் பெண்ணுக்குத் திருமணம் நடந்தபோது, அவளைச் சுற்றி நின்று கொண்டு சிறுமிகள் சிலர் இசையுடன் பாட்டுப்பாடினார்கள். நபிகளார் அதனை அனுமதித்தார்கள். அன்ஸாரிகள் இசையை நேசிப்பவர்கள். எனவே மணப்பெண்ணுடன் பாடல் பாடிய சிறுமிகளையும் கூடவே அனுப்பிவைக்க வேண்டுமென்றார்கள்.

இன்னொரு சந்தர்ப்பத்தில், சில பெண்கள் பாடிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த ஹழ்ரத் உமர்(ரலி) அவர்களைக் கடிந்து கொண்டார்கள். அப்போது அங்கிருந்த நபித்தோழர்கள் "நீங்கள் பாடலைக் கேட்கவிரும்பினால் உட்கார்ந்து கேளுங்கள். இல்லையெனில் போய் விடுங்கள். நபிகளார் எங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள்" என்று அவரிடம் கூறினார்கள்.

ஒரு பெருநாளின் போது, அபிசீனியா நாட்டிலிருந்து வந்த ஒரு குழுவினர் நபிகளாரின் வீட்டு முற்றத்தில் நின்று கொண்டு பல்வேறு விதமான பாரம்பரியமிக்க விளையாட்டுகளிலும், ஆட்டத்திலும் ஈடுபட்டார்கள். வீட்டுக் கதவருகே நபிகளார் நின்று கொண்டிருக்க தமது தோள்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு பின்னாலிருந்து அதைப் பார்ப்பதற்கு ஆயிஷா(ரலி) அவர்கட்கு அனுமதி அளித்தார்கள். ஒருமுறை பயணம் மேற்கொண்டிருந்த போது, நபிகளாருக்கும் ஆயிஷா(ரலி)வுக்கும் ஓட்டப்பந்தயம் நடந்தது. இதில் ஆயிஷா(ரலி) வெற்றி பெற்றார்கள். ஆனால் பின்னொரு சமயம் நடந்த ஓட்டப்பந்தயத்தில் உடல் பருத்து விட்டதன் காரணமாக ஆயிஷா(ரலி) தோற்றுப் போனர்கள். நபிகளார் வெற்றி பெற்றார்கள்.

# 18

## உம்ரா எனும் புனிதப் பயணம்

ஹுதைபிய்யா உடன்படிக்கை ஏற்பட்டு ஓராண்டு முடிந்துவிட்டது. அந்த உடன்பாட்டில் உள்ளபடி மக்காவிற்குச் செல்ல வேண்டிய நாள் நெருங்கி விட்டது. இரண்டாயிரம் முஸ்லிம்கள் நபிகளாருடன் மக்காவிற்கு 'உம்ராவுக்காகச் செல்லத் தயாராக இருந்தனர். அவர்களுள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு வந்து திண்ணைத் தோழர்களில் ஒருவராக இருந்த ஒரு ஏழை முஸ்லிமும் இருந்தார். பூனைக்குட்டிகள் மேல் அவர் பிரியம் கொண்டவராயிருந்ததால் 'பூனைக்குட்டியின் தந்தை' என அழைக்கப்பட்டார். அவர் தான் அபூஹுரைரா என்பவர். மிகவும் தாமதமாக இஸ்லாத்தில் சேர்ந்த அவர் நபிகளாரின் நம்பிக்கைக்குரியவராகவும் மரியாதைக்குரியவராகவும் விளங்கினார். பின்நாட்களில் நபிகளாரின் பல பொன்–மொழிகளை(ஹதீஸ்கள்) அவர் அறிவித்தார்.

மக்காவிலிருந்து சென்ற முஸ்லிம்கள் புனிதப்பகுதியின் எல்லையிலேயே நின்று கொண்டனர். குறைஷியர்கள் அந்த இடத்தை விட்டுச் சென்ற பின் தங்களுடைய கிரியைகளை நிறைவேற்றலாம் எனக்காத்திருந்தனர். முஸ்லிம்கள் அப்போது புனிதப் பயணத்திற்குத் தேவையான எளிய உடைகளையே அணிந்திருந்தனர். அவர்கள் மக்காவினுள் நுழைந்த போது குறைஷியர்கள் குன்றுகளின் மேல் நின்று கொண்டு அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கஅபாவை ஏழுமுறை வலம் வந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், ஸபா, மருவா குன்றுகளுக்கிடையே ஏழுமுறை ஓடினார்கள். பின்னர் ஒரு ஒட்டகத்தைப் பலிகொடுத்துவிட்டு, தங்களது தலையை மொட்டை அடித்துக் கொண்டார்கள். இத்துடன் 'உம்ரா' கடமைகள் நிறைவுபெற்றன. நபிகளாருடன் வந்திருந்த முஸ்லிம்களும் இதே போல் தங்களது உம்ராவை நிறைவேற்றினார்கள். கஅபாவிற்குள் செல்ல நபிகளார் விரும்பினார்கள். ஆனால், அது ஒப்பந்தத்தில் இல்லை என்று கூறி குறைஷியர்கள் அனுமதியளிக்க மறுத்து விட்டார்கள். நபிகளார் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. இறையில்லத்தின் வேலியிடப்பட்ட இடத்திலேயே (பைத் அல்லாஹ்) இருந்து கொண்டார்கள். அங்கிருந்து தான் ஹழ்ரத் பிலால் தன்னுடைய அழகான வலிமையான குரல் மூலம் மக்களை தொழுகைக்கு அழைக்கும் பாங்கினை ஒலித்தார்கள். இதனைக் குன்றுகளிலிருந்த குறைஷியர்கள் பார்த்தார்கள். முஸ்லிம்களின் சமய வழிபாட்டு முறைகளில் உள்ள எளிமையையும், கண்ணியத்தையும் கண்ணுற்றுத் தாங்கள் பெரிதும் வியப்புற்றதாகப் பின்னர் பல குறைஷியர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கால கட்டத்தில் நபிகளாரின் சிறிய தந்தையார் அப்பாஸ்(ரலி) அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தார்கள்.

## உள்ளொளி

மதீனாவிற்குத் திரும்பிய நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களுடைய வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்த போது, அவர்களை வழியில் சந்தித்த மூன்று பேர்கள் இப்போது அங்கு வந்திருப்பதாகக் கேள்வியுற்றார்கள். உஸ்மான்–பின் தல்ஹா(ரலி), காலித்–பின் வலீத்(ரலி), அம்ர்–பின் ஆஸ்(ரலி) ஆகிய இம்மூவரும் இஸ்லாத்தில் இணைந்து நபிகளாரிடம் தங்களது விசுவாசத்தைத் தெரிவித்திட வந்திருந்தனர். இவர்கள் பல ஆண்டுகள் இஸ்லாத்திற்கு எதிராக மூர்க்கமாகப் போராடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நபிகளாரும்,

அவர்களது குண நலன்களைப் பற்றி நன்கு அறிந்திருந்த தோழர்களும் அவர்கள் இஸ்லாத்தில் இணைவது குறித்து மகிழ்ச்சி அடைந்தனர். அபூஹுரைரா சில காலத்திற்கு முன்பு இஸ்லாத்தில் இணைந்ததைப் போல இந்த மத மாற்றங்களிலும் சில படிப்பினைகள் இருந்தன. இஸ்லாத்தின் எதிரிகளாக இருந்த இவர்கள் ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொண்டதும் அவர்களின் கடந்த காலச் செயல்பாடுகள் அனைத்தும் மறக்கப்பட்டன. இவர்களது நேர்மை, அறப் பண்புகள், சமுதாயத்தில் இவர்களது வருங்கால நிலை ஆகியன எதுவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமல், இறைவனின் பாதையில் தேவை, தகுதி கருதி இவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

நபிகளாருக்கும் அவர்களது கொள்கைகளுக்கும் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக எதிராக இருந்தவர்கள், அவர்களது வாழ்க்கையின் கடைசி இரண்டு ஆண்டுகளில் பெரும் மாற்றத்திற்கு உள்ளாயினர். நம்பிக்கைக்குக் கட்டுப்பட்ட வர்களாகவும், தியாக மனப்பான்மையுடையவர்களாகவும் நேர்மையான தோழர்களாகவும் அவர்கள் காலம் முழுவதும் விளங்கினார்கள். எனவே நம்பிக்கையின் ஆழத்தை, உள்ளத்தில் அது ஏற்படுத்திடும் மாற்றங்களைப் பகுத்தறிவு கொண்டோ, காலத்தைக் கொண்டோ அளவிடமுடியாது. இதன் காரணமாகவே புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்கள் ஏற்கனவே பல ஆண்டுகளாக இஸ்லாத்தில் இருப்பவர்களைக் காட்டிலும் ஆழமான பற்றும் உள்ளொளியும் பெற்றுத் திகழ்கிறார்கள்.

## சிரியாவுடன் மோதல்

சில மாதங்களுக்குப் பின்னர், நபிகளார் அப்போதுள்ள அணிகளின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யவும், சிரியாவிற்கு சென்று வர்த்தகத்தை மேற்கொள்ளவும் கருதி, வடக்கே தங்களது பிரதிநிதிகளை அனுப்பி வைத்தார்கள். அப்படி அனுப்பபட்ட பதினைந்து பேர்களில் பதினான்கு பேர்கள் கொல்லப்பட்டனர்.

பஸ்ராவுக்கு அனுப்பப்பட்ட இன்னொரு பிரதிநிதி காஸன் இனக்குழுத் தலைவரால் தடுத்து நிறுத்தி கொல்லப்பட்டார். எனவே சிரியாவின் பயமுறுத்தல்கள் அதிகமாக இருந்தது. பிரதிநிதிகள் கொல்லப்பட்டதற்கு பரிகாரம் தேடவேண்டிய தேவையும் ஏற்பட்டது. பிரதிநிதிகளையும் தூதுவர்களையும் கொல்வது மிகப் பெரிய குற்றச் செயலாக கருதப்பட்டு அது ஒரு போர்ப்பிரகடனமாகவே எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனைக் கேள்வியுற்ற நபிகளார், முன்னாள் அடிமை ஸைது(ரலி) அவர்களின் தலைமையில் மூவாயிரம் பேர்கள் கொண்ட படையினை அனுப்பத் திட்டமிட்டார்கள். இது பலருக்கு வியப்பை ஏற்படுத்தியது. போரில் ஸைது(ரலி) கொல்லப்பட்டால், அபிசீனியாவிலிருந்து அப்போது தான் திரும்பியிருந்த ஜாபர்(ரலி) தளபதிப் பொறுப்பை ஏற்க வேண்டுமெனக் கூறிய நபிகளார் அவரும் கொல்லப்பட்டால் அப்துல்லா–பின் ரவாஹா(ரலி) பொறுப்பேற்பார் எனவும் அறிவித்தார்கள். சிரியாவுடனான போர் நபிகளாரின் வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. கிறிஸ்துவர்களை வெற்றி கொள்வதற்கு அது ஆரம்பமாக அமைந்தது. இப்போர் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டில் (கி.பி.629ல்) பாலஸ்தீனுக்கு அருகில் சிரியா நாட்டு எல்லைக் கிராமமான முஃதாவில் நடைபெற்றது.

முஸ்லிம்படை முன்னேறிச் சிரியாவிற்கு அருகில் சென்ற போது, அந்நாட்டிலுள்ள அனைத்து இஸ்லாமிய எதிர்ப்புக் குலக்குழுக்களும் ஒன்று சேர்ந்து விட்டதாகவும், அவர்கட்கு ரோமானியப் பேரரசின் ஆதரவு கிட்டியிருப்பதாகவும் அப்பேரரசைச் சார்ந்த ஒரு லட்சம் படையினர் அவர்கட்கு ஆதரவாக நிற்பதாகவும் தகவல் கிடைத்தது. மூன்று ஆயிரம் பேர்களை மட்டுமே கொண்ட முஸ்லிம்படைக்கு வெற்றி பெற வாய்ப்பே இல்லை. அவர்கள் முஃதாவை அடைந்ததும்(சிரியா) அந்தப் பகுதியின் நில அமைப்பு சாதகமாக இருந்த காரணத்தால், ஸைது(ரலி) தனது படையினருக்குத் திடீர்த்தாக்குதல்

நடத்தும்படி உத்தரவிட்டார். இந்தத்திட்டம் எதிரிகளை அந்த நேரத்தில் தடுமாற்றம் கொள்ளச் செய்தபோதிலும் அதிக எண்ணிக்கை பலம் கொண்டிருந்த எதிரியைத் தோற்கடித்து வெற்றி கொள்ள அது போதுமானதாக இல்லை. முஸ்லிம்படைத் தளபதிகள் ஸைது(ரலி), ஜாபர்(ரலி) அப்துல்லாஹ்(ரலி) ஆகிய மூவரும் போரில் கொல்லப்பட்டனர். காலித் தளபதியாகப் பொறுப்பேற்கும் வரை முஸ்லிம் படை ஒழுங்கற்ற நிலையிலேயே இருந்தது. பின்னர் காலித் முஸ்லிம் படையினரை ஒருங்கிணைத்து புதிய தாக்குதல்களிலிருந்து பாதுகாத்தார். முஸ்லிம்கள் எட்டுப்பேரை மட்டுமே இழந்திருந்த போதிலும், அவர்கள் பின்வாங்க வேண்டியதாயிற்று. இது முஸ்லிம் களுக்குத் தோல்வியே எனினும் காலித் பெரும் மோதலைத் தவிர்த்து முஸ்லிம் படையினரைப் பெரும் அழிவிலிருந்து காத்தார்.

## பிரியமுள்ளவர்களுக்காக அழுதல்

அந்த நேரத்தில் நபிகளாருடன் மதீனாவில் இருந்த முஸ்லிம்கள் சில புதுமையான அனுபவங்களைச் சந்திக்க நேர்ந்தது. நபிகளாருக்கு நிறைவேற்ற வேண்டிய கனவுகளும், செயல்திட்டங்களும் உள்ளன என்பதை அவர்கள் அறிந்தி ருந்தனர். இறை வசனங்கள் அவர்கட்கு இடைவெளி விட்டு விட்டு அருளப்பட்டபோது தோழர்கள் அவர்களைப் பின்பற்றி நடந்துள்ளார்கள். எனவே அவர்கள் நபிகளாரின் புதுமையான வாழ்க்கைப் படித்தரங்களுக்குப் பழக்கப்பட்டிருந்தார்கள்.

போர்க்களத்திலிருந்து எந்த ஒரு தூதுவரும் வந்து அங்குள்ள நிலைமை பற்றி தெரிவிக்காத நிலையில், நபிகளார் ஒரு நாள் தோழர்களிடம் போர்க்களத்திற்குச் சென்று பார்த்து வந்தது போல் அங்கு நடந்த நிகழ்ச்சிகள் பற்றிச் சொன்னார்கள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட, தளபதிகள் ஸைது, ஜாபர், அப்துல்லாஹ் ஆகியோர் கொல்லப்பட்டதாக அவர்கள் வேதனையுடன் குறிப்பிட்டார்கள். காலிதின் வீரத்தைப் புகழ்ந்த

நபிகளார், அவரை இஸ்லாத்தின் வாள்(ஸைபுல் இஸ்லாம்) என்று சிறப்பித்துக் கூறி அதே நேரத்தில் போரில் இறந்து போன நெருங்கிய தோழர்களுக்காக தங்களது ஆழ்ந்த துக்கத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

ஜாபரின் இல்லத்திற்குச் சென்ற நபிகளார் அவரது மனைவி அஸ்மாவிடம் அவரது கணவர் போரில் மரணமடைந்த செய்தியை சொல்லி ஆறுதல் கூறினார்கள். இச் செய்தியைச் சொல்வதற்கு முன்னர் நபிகளார் அழுது விட்டார்கள். செய்தியைக் கேட்ட அஸ்மாவும் கதறி அழுதார். பின்னர் நபிகளார் ஸைதின் மனைவி உம்மு அய்மன் இல்லத்திற்குச் சென்று அவரது கணவர் ஸைது(ரலி) இறந்த செய்தியை அழுதவாறே கூறினார்கள். நபிகளார் ஸைதை தனது மகனாகவே கருதி அன்பு செலுத்தியவர்கள். அவரின் குடும்பத்தோடு நெருக்கமாக இருந்தவர்கள். நபிகளார் அந்த வீட்டை விட்டுச் செல்லுமுன், ஸைதின் இளைய மகள் ஓடோடி வந்து நபிகளாரின் கரங்களில் சாய்ந்தார். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட நபிகளார் அவளுக்கு ஆறுதல் கூறினார்கள்.

உபாதா(ரலி) மகன் ஸஅத் என்ற தோழர் நபிகளார் கண்ணீர் விட்டு அழுதது பற்றி விளக்கம் கேட்டபோது அதற்குப் பதிலளித்த நபிகளார் 'இது அன்பு கொண்டவர்களுக்காக அழும் அழுகை' என்று பதிலளித்தார்கள். இறப்பின் காரணமாகப் பிரிவு நிகழும் போது அன்பையும், பரிவையும் வெளிப்படுத்த வேண்டுமென்றும் கண்ணீர் விடுவது அன்பை வெளிப்படுத்தும் ஒரு செயல் என்றும் தோழர்களிடம் கூறினார்கள். சிரியாவிலிருந்து காலித்தின் தலைமையில் திரும்பிய முஸ்லிம் படை ஏற்கனவே நபிகளார் தோழர்களிடம் சொல்லியிருந்த செய்திகளை உறுதிப்படுத்தியது. (மூன்று தளபதிகள் போரில் கொல்லப்பட்டதை) இந்தச் சம்பவம் நபிகளாரின் தூதுத்துவத்தை உறுதிப்படுத்தும் கூடுதல் அத்தாட்சியாக விளங்கியது. நபிகளார் அசாதாரணமானவராக இருந்தார்கள். அவர்களைப் போல் அறிவும், குணநலன்களும் அமையப் பெற்றவராக வேறு யாரும் இருந்திடவில்லை. எனினும்

அவர்கள் பணிவு கொண்டவராகவும் இரக்கமுடையவராகவும் விளங்கினார்கள். துயர நேரங்களில் அழுதார்கள்.

வடக்கில் சூழ்நிலை சிரமமாகவே இருந்தது. முஃதாவில் (சிரியா) முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தோல்வியைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முடியும் என எதிரிகள் எண்ணினர். சில இனக்குழுவினர் மதீனாவிற்கு எதிராக முழு அளவிலான போரைத் துவக்கிடத் திட்டம் தீட்டியுள்ளதாக நபிகளாருக்கு உளவுத் தகவல்கள் கிடைத்தன. அம்ர்(ரலி) அவர்களின் தலைமையின் கீழ், சிரியாவிற்கு ஒரு வலுவான படையை அனுப்பிட நபிகளார் முடிவு செய்தார்கள். முஸ்லிம்படை, அப்போதைய அணிகளை ஒருங்கிணைத்து, புதிய அணிகளைச் சேர்த்து சிரியாவிற்குள் நுழைந்து முடிவில் வெற்றி பெற்று அந்நாட்டையும் கைப்பற்றியது.

## ஒப்பந்தம் முறிந்தது

ஏற்கனவே குறிப்பிட்டிருந்த படி, ஹுதைபிய்யா உடன்படிக்கை மதீனா முஸ்லிம்கள் மக்கா குறைஷியர்கள் தவிர பிற ஆதரவு அணிகளையும் கட்டுப்படுத்தியிருந்தது. பனூகுஸாஆ குழுவினர் நபிகளாரின் அணியில் இருந்தனர். இந்த இனக் குழுவிலுள்ள இன்னொரு பிரிவினரான பனூகஅப் குழுவினரை குறைஷி அணியில் இருந்த பனூபக்ர் என்ற குழுவினர் கடுமையாகத் தாக்கி அதனால் ஒருவர் மரணமடைந்தார். பனூகஅப் குழுவினர் இத் தாக்குதல் பற்றி ஒரு தூதுவர் மூலம் நபிகளாருக்குத் தெரியப்படுத்தினர். இது உடன்படிக்கைக்கு எதிரானது. எனவே எதிராகச் செயல் பட்டவர்களைத் தண்டிக்காமல் விடக்கூடாது எனக் கருதிய நபிகளார் பனூகஅப் அணியினருக்கு உதவ முடிவு செய்தார்கள். நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து கொண்ட குறைஷியர்கள், ஒரு செல்வாக்குமிக்க நபரை நபிகளாரிடம் தூதுவராக அனுப்பி, இந்த தனித்த ஒரு பிரச்னையைப் பெரிது படுத்த வேண்டாம் எனக்கேட்டுக்கொண்டனர். ஆனால், உடன்படிக்கை கையெழுத்தான நாளிலிருந்தே குறைஷியர்கள்

அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில அம்சங்களுக்கு எதிராகச் செயல்பட்டு பிற இனக் குழுக்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் இப்போது நிலைமை கைமீறிப் போய் விட்டது. அதன் காரணமாக குறைஷியர்கள் நபிகளாருடன் பேச அபூசுஃப்யானை மதீனாவிற்கு அனுப்பினர். அபூ சுஃப்யான் முதன் முதலில் தனது மகளும், நபிகளாரின் மனைவியுமான உம்மு ஹபீபா மற்றும் ஹழ்ரத் அலீ(ரலி) ஆகியோரின் ஆதரவைப் பெற முயன்றார். ஆனால் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புகள் ஏற்படவில்லை. நபிகளார் அமைதி காத்தார்கள். தோழர்களும் அப்படியே இருந்தார்கள். அபூ சுஃப்யானுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நபிகளார் உடன்பாட்டிற்கு வர மறுத்ததால், அபூசுஃப்யான் வெறுங்கையுடன் மக்கா திரும்ப வேண்டிய தாயிற்று. மக்காவை வெற்றி கொள்ள வேண்டும் என்ற எண்ணம் முஸ்லிம்கள் மனத்தில் ஏற்பட்டதற்கு இந்தச் சம்பவமே காரணமாகும்.

## மக்கா வெற்றி

சில வாரங்களுக்குப் பிறகு, நபிகளார் மக்கா நோக்கிப் படை நடத்திச் சென்றிடத் தயாராகும்படி தனது தோழர்களைக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இது ரகசியமாகவே வைக்கப் பட்டிருந்தது. நெருங்கிய ஒரு சில தோழர்களுக்கு மட்டுமே இந்த விஷயம் தெரியும். அரேபிய தீப கற்பம் முழுவதும் ஒரு நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் சிரியா நோக்கிப் படையெடுக்க வேண்டும் அல்லது தாயிப் அல்லது ஹவாஸின் நோக்கிப் படை செலுத்த வேண்டுமென வதந்திகள் கிளப்பி விடப்பட்டன.

படையெடுப்பு ரம்ஜான் மாதத்தில் நடைபெற்றது. நோன்பு இருப்பதா, வேண்டாமா என்பதை தோழர்களே முடிவு செய்து கொள்ள வேண்டும் என நபிகளார் கூறினார்கள். மார்–அஸ்–ஸக்ரம் செல்லும் வரை நபிகளார் நோன்பு மேற்கொண்டி ருந்தார்கள். அங்கு முகாமிட்டிருந்த போது போரில் முழு

பலத்தையும் செலவிட வேண்டியதிருப்பதால், நோன்பை விட்டு விடுமாறு தோழர்களை நபிகளார் கேட்டுக் கொண்டார்கள்.

மார்–அஸ்–ஸக்ரம் முகாம் இரண்டு ரோடுகள் சந்திக்குமிடத்தில் இருந்தது. அங்கிருந்து கிழக்கில் நஜ்த், தாயிப், மக்கா ஆகிய இடங்களுக்குச் செல்ல முடியும். மக்காவிலிருந்து மதீனாவிற்கு நிரந்தரமாகத் தங்கும் எண்ணத்துடன் வந்த அப்பாஸ் முஸ்லிம்கள் படையில் சேர்ந்து கொண்டார். முகாமில் தங்கியிருந்தபோது, ஒவ்வொரு வீரரையும் எதிரிகளின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் தீப்பந்தங்களை கொண்டு வருமாறு நபிகளார் கேட்டுக் கொண்டார்கள். இப்படி பத்தாயிரம் தீப்பந்தங்கள் கொண்டு வரப்பட்டன. இது ஒரு மிகப்பெரிய இராணுவம் வந்து கொண்டிருக்கிறது என்ற உணர்வை ஏற்படுத்தியது. ஏனெனில் ஒவ்வொரு தீப்பந்தத்திற்கும் ஐந்து முதல் பத்து வீரர்கள் வரை இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டது. குறைஷியர்களும், பிற இனக்குழுவினரும் தாக்குதல் நடை–பெறக்கூடும் எனப்பயந்து நபிகளாரின் நோக்கத்தை அறிந்து கொள்வதற்காக தூதுவர்களை அனுப்ப முடிவு செய்தனர்.

## அபூசுஃப்யான்

மீண்டும் அபூசுஃப்யானே தன்னுடன் ஹக்கீம், புதைல் என்ற இரு தூதுவர்களை அழைத்து கொண்டு குறைஷியர்கள் சார்பாக பேச்சுவார்த்தை நடத்த நபிகளாரிடம் வந்தார். மக்காவைத் தாக்க வேண்டாம் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். பேச்சுவார்த்தை நீண்டநேரம் நடந்தது. ஆனால் நபிகளார் தங்களது நிலையில் உறுதியாக இருந்தார்கள். குறைஷியத் தூதுவர்கள் அந்த முகாமிலிருந்த தோழர்களின் நடத்தை, அங்கு நிலவிய அமைதிச் சூழ்நிலை ஆகியவற்றை பார்த்தறிந்து கொண்டார்கள். ஹக்கீமும், புதைலும் இஸ்லாத்தில் இணைய முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தனர். அபூசுஃப்யான் இறை நம்பிக்கையின் முதல் பகுதியான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார்.

நபிகளாரின் அந்தஸ்து பற்றி அவருக்கு இன்னும் சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. எனவே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் என்று நம்பிக்கை கொள்ள இன்னும் கொஞ்சம் கால அவகாசம் அவருக்குத் தேவையாகயிருந்தது. அவர் இரவில் முகாமிலேயே தங்கினார். அப்போது முஸ்லிம்களின் அர்ப்பணிப்பு உணர்வையும், நபிகளார் பால் அவர்கள் கொண்டுள்ள பாசத்தையும் கண்ணுற்ற அபூசுஃப்யான் அப்பாஸ்(ரலி) அவர்களின் ஆலோசனையினை ஏற்று இஸ்லாத்தின்பால் தனது முழு நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்.

அபூசுஃப்யானின் இந்த மனமாற்றம் உறுதியானதல்ல என எண்ணிய நபிகளார், அப்பாஸ்(ரலி) அவர்களிடம் அபூசுஃப்யானை அந்தப் பள்ளத்தாக்கின் படுகைவரை அழைத்துக் கொண்டு போகும்படியும், அதன் மூலம் அவர் முஸ்லிம்படைகள் அணி வகுத்துச் செல்வதைப் பார்க்க முடியும் என்றும் கூறினார்கள். அது எதிர்பார்த்த விளைவை ஏற்படுத்தியது. அபூசுஃப்யான் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதற்கு முன்னால் அப்பாஸ்(ரலி) அவர்கள் நபிகளாரிடம் அபூசுஃப்யானின் அன்பும், நல்லெண்ணமும் மதிக்கப்பட வேண்டுமென்றும், அதனை மறந்துவிடக் கூடா தென்றும் மெல்லிய குரலில் தெரிவித்தார். நல்ல உளவியல் நிபுணரான நபிகளார் "மக்காவில் யார் அபூசுஃப்யானிடமோ அல்லது கஅபாவின் உட்புறத்திலோ தஞ்சம் அடைந் தார்களோ, அவர்கள் தாக்கப்பட மாட்டார்கள்" என்ற செய்தியைப் பரப்பி னார்கள். முஸ்லிம் படைகள் மக்கா நகருக்குள் வருவதற்கு முன்னரே அங்கு விரைந்து சென்ற அபூசுஃப்யான் அனைவரும் சரணாகதி அடைந்து விட வேண்டுமென்றும் நபிகளாரின் அசாதாரணமான படைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடா தென்றும் மக்களுக்கு ஆலோசனை கூறினார். (அவருடைய மனைவி ஹிந்தா, குறைஷியர்களின் தலைவர்களான அபூஜஹ்ல் மகன் இக்ரிமா ஆகியோர் அபூசுஃப்யானைப் பைத்தியக்காரர் என்றும்,

கோழை என்றும் பரிகாசம் செய்தனர்). அபூ சுஃப்யானை நபிகளார் தம்முடன் சேர்த்துக் கொண்டதற்கு அவர் இஸ்லாத்தில் இணைந்து விட்டது மட்டும் காரணமல்ல. அவருடைய பண்புகளையும் ஆளுமையையும் பார்த்த பின்னரே இந்த முடிவுக்கு வந்தார்கள். அபூசுஃப்யான் முதன் முதலில் ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொண்டார். ஆனால் தான் சரி சமமாக நின்று எதிர்த்துப் போராடிய நபிகளாரை இறைவனின் தூதர் என்று ஏற்றுக் கொள்வதில் அவருக்குத் தயக்கம் இருந்தது. நபிகளார் அவசரப்படவில்லை. அவராக நிலைமையைப் புரிந்து கொண்டு நல்ல முடிவிற்கு வரட்டும் என கால அவகாசம் அளித்தார்கள். அபூசுஃப்யான் இஸ்லாத்தில் இணைந்த பின்னரும், அவர் பதவிக்கும் பெருமைக்கும் ஆசைப்படுபவர் என்பதை நபிகளார் உணர்ந்தே இருந்தார்கள், அதன் காரணமாகவே தனது படையின் வலுவை அவருக்குக் காண்பித்து, போரைத் தவிர்க்கும் முடிவினை அவர் எடுக்கும்படி செய்தார்கள்.

பொதுவான நியதிகளை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வலியுறுத்திய போதிலும், ஒருவருடைய தனிப்பட்ட குண நலன்களை கணக்கில் எடுத்துக் கொண்டு அவரை திருத்த விரும்பினார்கள். இந்த விஷயத்தில் ஒவ்வொரு தனி மனிதனுக்குமுள்ள பண்புகள் அபிலாஷைகள், குறிப்பிடத்தக்க விசேட குணங்களை அவர்கள் புறக்கணிக்கவில்லை. அவர்கள் விடுத்த செய்தி சமத்துவம் என்ற உயரிய கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்திருந்த போதிலும் தனி மனிதன் கொண்டுள்ள நம்பிக்கையின் மன ரீதியான வேறுபாடுகளை அவர்கள் கவனிக்கத் தவறவில்லை.

## 19

# பெருமைக்குரிய வெற்றி

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் கி.பி.630 ரம்ஜான் மாதம் பத்தாம் நாள் மக்கா வெற்றி கொள்ளப்பட்டது (ஹிஜ்ரி 9ஆம் ஆண்டிற்குப் பிறகு) மக்காவிற்குச் சென்ற நபிகளாரின் படையில் மதீனா முஸ்லிம்கள் மூவாயிரம் பேரும், வழியில் சேர்ந்து கொண்ட ஆதரவுப் படையினர் ஏழாயிரம் பேரும் என ஆக மொத்தம் பத்தாயிரம் பேர் இருந்தனர். நபிகளார் இஸ்லாமியப் படையை பல பிரிவுகளாகப் பிரித்தார்கள் அவை மக்கா நகரை சூழ்ந்து கொண்டன.

மக்காவில் நுழைவதற்காக படைகள் காதா வழியாக அணிவகுத்துச் சென்ற போது, நபிகளாரின் ஆலோசனையின் பேரில், அப்பாஸ்(ரலி) அவர்கள் அபூசுஃப்யானை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்துச் சென்று இஸ்லாமியப் படையின் வலுவினை அவருக்குக் காட்டினார். ஒவ்வொரு இனக்குழுவின் தலைவர்களும் அணி அணியாகத் தங்களது படைப்பிரிவின் பதாகைகளுடன் அணிவகுத்துச் சென்றதை அபூசுஃப்யான் பார்வையிட்டார். ஸாத்(ரலி) அவர்கள் அபூசுஃப்யானை கடந்து சென்ற போது, அவரது மனக் கண் முன்னால் குறைஷியர்கள் கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மீது இழைத்திட்ட கொடுமைகள் தோன்றின. அவர் உரத்த குரலில் "அபூசுஃப்யானே இன்று (தப்பிக்க முடியாத) மாபெரும் யுத்த நாள். இன்று கஅபாவி(ன் புனித எல்லையி)னுள்ளே கூட யுத்தம் அனுமதிக்கப்படும்" என்று கூறினார். இந்தக் குரல் கேட்டு நபிகளாரின் முகம் கோபத்தால் சிவந்தது. மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் அவர்கள் ஸைதின் இந்தக் கூற்றை ஏற்க மறுத்து அவரிடமிருந்து பதாகையை எடுத்து விடுமாறு ஆணையிட்டார்கள். அதே நேரத்தில் நபிகளார் சொன்னதாவது:– 'இன்று கஅபாவிற்கு ஒரு சிறப்பான நாள். புண்ணியமும், பெருமையும் கொண்ட நாள்'. குன்றுகளில் நின்று ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்து வந்த

சுஹைல், இக்ரிமா, ஸப்வான் ஆகியோர் தலைமை யிலான சில குறைஷியர்கள் பின்னர் எதிர்த்துப் போராடுவதில் பயன் ஒன்றுமில்லை என்று முடிவு செய்தனர். சுஹைல் தனது வீட்டிற்குச் சென்று ஒளிந்து கொண்டார். இக்ரிமாவும் ஸப்வானும் ஓடிச் சென்று விட்டனர். அந்த நாளில் எந்த விதமான சண்டையோ, போரோ கூடாது என நபிகளார் அறிவித்து அது 'கருணைக்குரிய நாள்' என குறிப்பிட்டார்கள். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் நபிகளார் மக்காவை விட்டு இரகசியமாகச் சென்றார்கள். எனினும் தலையை உயர்த்திக் கண்ணியத்துடன் சென்றார்கள். ஆனால் இன்று நபிகளார் பட்டப்பகலில் வெற்றியாளராக மக்காவில் நுழைந்த போதிலும் இந்தத் தடவை தலை பணிந்து இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக குர்அனின் 'அல்பத்ஹ்' அதிகாரத்திலிருந்து கீழ்க்க கண்ட இறை வசனத்தை ஓதினார்கள்.

> (நபியே!) நாம் உமக்குப் பகிரங்கமான வெற்றியை அளித்து விட்டிருக்கிறோம். உம்முடைய முந்தைய, பிந்தைய குறைகளை அல்லாஹ் மன்னிப்பதற்காகவும் அவன் தனது அருட்கொடையை உம்மீது நிறைவு செய்து உமக்கு நேர்வழி காட்டுவதற்காகவும் மகத்தான உதவியை அவன் உமக்கு வழங்குவ–தற்காகவும் தான். அவன் தான் இறை நம்பிக்கை யாளர்களின் இதயங்களில் 'ஸகீனத்' நிம்மதியை இறக்கினான். அவர்கள் தங்கள் நம்பிக்கையுடன் இன்னும் அதிகமான நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்காக.' (குர்ஆன் *48:1–4*)

மக்காவில் நுழைந்த நபிகளார் தங்களுடைய பணிவையும், ஆழமான அன்பினையும் முஸ்லிம்களின் பழைய எதிரிகளுக்குத் தெரிவித்தார்கள். அவர்கள் ஒலுச் செய்து எட்டு ரக்ஆத்துகள் விருப்பத் தொழுகையினை நிறைவேற்றி விட்டு பின்னர் சிறிது நேரம் ஓய்வெடுத்தார்கள். பின்னர் தனது கஸ்வா ஒட்டகத்தின் மீது ஏறி, கஅபா சென்று அந்தப் புனித ஆலயத்தை ஏழு முறை வலம்

வந்தார்கள். பின்னர், தனது தடியால் அங்குள்ள விக்ரகங்களை அகற்றி விட்டு, கீழ்க்கண்ட குர்ஆன் வசனங்களை ஓதினார்கள்...

மேலும் பிரகடனம் செய்வீராக! சத்தியம் வந்து விட்டது. அசத்தியம் அழிந்து விட்டது. திண்ணமாக அசத்தியம் அழியக் கூடியதே. (குர்ஆன் *17:81*)

அந்தப் புனிதத்தலத்தின் அனைத்துச் சாவிகளையும் கொண்டுவரச் செய்து அதனை பெற்றுக் கொண்ட நபிகளார், கஅபாவினுள் இருந்த வடிவங்களை அழித்துவிட்டு இறைவனுக்கு எந்த விதக் கற்பனை உருவமும் இல்லை என்ற இஸ்லாத்தில் கோட்பாட்டினை அங்கு ஒளிரச் செய்தார்கள்.'

எந்தப் பொருளும் அவனுக்கு ஒப்பானதாய் இல்லை. அவன் அனைத்தையும் செவியுறுபவனும் பார்ப்பவனு மாவான்.' (குர்ஆன் *42:11*)

நபிகளாரின் இந்தச் செயல் (விக்ரகங்களை நீக்கியது) மக்காவை விட்டு அவர்கள் சென்ற பிறகு செய்து வந்த செயல்களுக்கு நேர் மாற்றமாகத் தோன்றலாம். ஏனெனில் அவர்கள் எந்த விதமான உருவமும் இல்லாமல் ஓரிறைவனைத் தொழுவதற்காகப் பல பள்ளி வாசல்களை கட்டியிருக்கிறார்கள். அந்த நிலையில் வைத்துப் பார்த்தால், இதுவும் அதே ரீதியில் செய்யப்பட்ட ஒன்றேயாகும். விக்ரகங்களை கஅபாவிலிருந்து நீக்கியதன் மூலம் இஸ்லாத்தின் செய்தி திரித்துக் கூறப்படுவதை நபிகளார் தடுத்துள்ளார்கள். இதன் மூலம் புனித கஅபாவை ஒரு உண்மையான பள்ளிவாசலாக மாற்றி ஓரிறைவனான அல்லாஹ் மட்டுமே வணங்கத்தக்கவன் என்பதை உலகறியச் செய்தார்கள்.

குறைஷியர்கள் மெதுவாகத் தங்கள் இல்லங்களிலிருந்து புறப்பட்டு கஅபாவின் உட் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். விக்ரகங்களை அகற்றிய பிறகு நபிகளார் அறிவித்ததாவது:– "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையாள் யாரும் இல்லை. அவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றி தனது அடியானுக்கு

உதவிபுரிந்து விட்டான். எதிரிகளை நிர்மூலமாக்கிவிட்டான். அவனே அதைச் செய்து முடித்துள்ளான்'

பின்னர் குறைஷியர்கள் பக்கம் திரும்பிய நபிகளார், அவர்களிடம் இஸ்லாத்தின் சட்டதிட்டங்களைச் சொல்லி, குர்ஆனிலிருந்து கீழ்க்கண்ட வசனங்களை ஓதிக் காட்டினார்கள்

> மனிதர்களே! நாம் உங்களை ஒரு ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும், கோத்திரங் களாகவும் அமைத்தோம். உண்மையில் அல்லாஹ் விடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர்கள் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர் தாம். திண்ணமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும் தெரிந்த வனாகவும் இருக்கிறான். (குர்ஆன் 49:13)

பின்னர் அவர்களிடம் "உங்களை நான் எப்படி நடத்துவேன்' என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு குறைஷியர்கள் கண்ணியமிக்க ஒரு சகோதரராக அல்லது கண்ணியமிக்க சகோதரரின் மகனாக' அன்புடன் நீங்கள் நடத்துவீர்கள் என்று கூறினார்கள். அப்போது தன்னைக் கொல்ல நினைத்த சகோதரர்களுடன் மீண்டும் ஒன்று சேர்ந்த யூசுப் நபியின் வரலாற்றைக் கூறும் இறைவசனத்தை நபிகளார் ஓதிக் காட்டினார்கள்.

> இன்று உங்கள் மீது எந்தக் குற்றமும் இல்லை. அல்லாஹ் உங்களை மன்னிப்பான். அவன் எல்லோரையும் விட அதிகக் கருணை புரிபவனாவான். (குர்ஆன்12:92)

பிறகு 'உங்கள் மீது எந்த விசாரணையுமில்லை நீங்கள் செல்லுங்கள்' என்று நபிகளார் கூறி, தன்னைக் காணவந்த ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மன்னிப்பு அளித்தார்கள்.

# இரக்கம் காட்டும் நாள்

நபிகளார் மக்காவினுள் வெற்றிகரமாக நுழைந்த போது, அங்கு விழா எதுவும் நடத்தப்படவில்லை. கொட்டு மேளங்கள் இல்லை. பாட்டாசுகள் வெடிக்கப்படவில்லை. இறைவனுக்கு நன்றி செலுத்தி தலை தாழ்த்திய வண்ணமே மக்கா நகருக்குள் நுழைந்தார்கள். நபிகளார் தங்களுடைய தோழரான பிலால்(ரலி) அவர்களை அழைத்து கஅபாவின் கூரை மீதேறி, தொழுகைக்கான பாங்கினைக் கூறும்படி (அழைப்பு) ஆணையிட்டார்கள்.

நபிகளார் தொழுகையினை முன்நின்று நடத்தினார்கள். பின்னர் உரையாற்றிய அவர்கள் கடந்த இருபது ஆண்டுகளில் மக்காவாசிகள் தனக்கு விளைவித்த கொடுமைகளை நினைவூட்டி இப்போது அவர்கள் தன்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் எனக் கேட்டார்கள். நபிகளார் நினைத்திருந்தால், மக்கா வாசிகள் அனைவரையும் தனது வாளுக்கு இரையாக்கியிருக்க முடியும். அப்படிப்பட்ட நிலைக்கு அவர்கள் தகுதியானவர்கள் தான். நபிகளாரிடம் படை வலிமை இருந்தது. அந்த நகரை வெற்றி கொண்டிருக்க முடியும். முஸ்லிம்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்ததற்காக அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்திருக்க முடியும். அவர்களை அடிமைகளாக ஆக்கியிருக்க முடியும். ஆனால் இறுதி நபி முஹம்மது(ஸல்) அவர்கள், இவற்றில் எதனையுமே செய்யவில்லை. அவர்கள் 'இப்போது உங்கள் மீது எந்தக் குற்றமும் இல்லை. பழிக்குப் பழி இல்லை. நீங்கள் சுதந்திரமாகச் செல்லலாம்' என்று மட்டுமே சொன்னார்கள். அவர்கள் காட்டிய பெருந்தன்மை, மிகக் கொடிய விரோதிகளைக் கூட வியப்படையச் செய்தது. குறைஷியர்களில் பலர் நபிகளாரை அவமதித்து இருந்த போதிலும், அவர்களுக்கு எதிராகச் சண்டையிட்டு வந்த போதிலும், அவர்களது குடும்ப உறுப்பினர்களையும், நெருங்கிய தோழர்களையும் கொன்றிருந்த போதிலும், நபிகளார் அவர்கட்கு மன்னிப்பும் பாதுகாப்பும் வழங்கினார்கள்.

## அத்தாப்

ஹழ்ரத் பிலால்(ரலி) அவர்கள் தொழுகை அழைப்பான பாங்கினைச் சொன்ன போது (அஸான்) அதனைக் கேட்ட இஸ்லாத்தின் எதிரியான அத்தாப் அருகிலிருந்த தனது நண்பன் அல் ஹாரித் என்பானிடம், "இறைவனின் இல்லத்தின் உச்சியிலிருந்து இந்தக் கருங்குரங்கு கத்துவதை எனது தந்தையார் உயிருடன் இருந்து கேட்டிருந்தால் மிகுந்த சிரமப்படுவார். "என்று கேலி பேசினார். சிறிது நேரத்திற்கு முன்னால் ஹழ்ரத் பிலால்(ரலி) அவர்களைக் கடுமையாகக் குறை கூறிப் பேசிய அந்த நபர், நபிகளாரின் இந்த அறிவிப்பைக் கேட்டு உடனே எழுந்து வந்து நபிகளார் முன்பு வந்து நின்று கொண்டு 'நான் தான் அத்தாப், ஆசித் மகன். உங்களுடைய எதிரி. நான் இப்போது அறிவிக்கிறேன். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. முஹம்மது(ஸல்) அவர்கள் அவனின் தூதர்' என்று கூறினார். நபிகளாரின் மன்னிப்பு பற்றிய அறிவிப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது அத்தாப் மட்டுமல்ல, மக்காவின் அனைத்து மக்களும் ஒரே இரவில் இஸ்லாத்தைத் தழுவினர். இஸ்லாத்தின் எதிரியாக இருந்த அத்தாப் இஸ்லாத்தில் இணைந்தபோது, நபிகளார் அவரை மக்காவின் கவர்னராக நியமித்து அவரது ஊதியத்தை ஒரு நாளைக்கு ஒரு திர்ஹம் என நிர்ணயித்தார்கள். நபிகளாரின் சிறிய தந்தையார் ஹம்ஸா(ரலி) அவர்களைக் கொன்ற 'வாஹ்ஸி'யும் மன்னிக்கப்பட்டார். ஆனால் அவர் இனிமேல் தம் முன்னால் வரக்கூடாது என்று நபிகளார் ஆணையிட்டார்கள். '"என் முன்னால் வராதீர் நீர் வருவது எனது சிறிய தந்தையை எனக்கு நினைவுபடுத்தும்"' என நபிகளார் கூறினார்கள்.

## ஸப்வான்

இஸ்லாத்தின் எதிரியும் மக்காவாசிகளின் தலைவரும், நபிகளாரைக் கொல்ல 'உமைர்' என்பவரை அனுப்பியவருமான ஸப்வான் ஜித்தாவுக்கு ஓடி, அங்கிருந்து கடல் மார்க்கமாக

யேமன் செல்ல திட்டமிட்டிருந்தார். உமைர் நபிகளாரிடம் வந்து "ஓ அல்லாஹ்வின் தூதரே, மக்கா சமூகத்தின் தலைவரான ஸப்வான் உங்களுக்குப் பயந்து ஓடி கடலில் குதித்து விட எண்ணி அங்கு சென்றுள்ளார்' என்று கூறினார். இதனை ஏற்கனவே அறிந்திருந்த நபிகளார், '"அவருக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது." எனக் கூறினார்கள். அதற்கு அவர் அல்லாஹ்வின் தூதரே, அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பிற்கான அத்தாட்சிகளை எனக்குச் சொல்லுங்கள் அப்படியானால் தான் அவர் (ஸப்வான்) என்னை நம்புவார்' என்று கூறினார். உடனே நபிகளார் அவரிடம் தனது தலைப்பாகையைக் கொடுத்தார்கள். அதை எடுத்துக் கொண்டு அவர் ஸப்வானிடம் சென்றார். தன்னுடைய வாழ்வு முடிவுக்கு வந்து விடும் என்று தான் அஞ்சுவதாக ஸப்வான் கூறினார். அவரிடம் உமைர், 'நீர் நபிகளாரின் அடக்க உணர்வையும், மன்னிக்கும் மனப்பான்மையையும் பற்றி தெரியாமல் இருக்கிறீர்' என்று கூறினார் இதைக் கேள்வியுற்ற ஸப்வான் நபிகளாரிடம் சென்று நீங்கள் எனக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளதாக உமைர் சொன்னார்' என்று கூறவே அதற்கு நபிகளார் ஆம் அது உண்மை தான் எனப் பதிலளித்தார்கள்.

ஸப்வான் நபிகளாரிடம் '"நான் சிந்திப்பதற்கு இரண்டு மாத கால அவகாசம் வேண்டும்"' என்றார். அதற்கு நபிகளார் 'உமக்கு நான்கு மாதங்கள் தருகிறேன்' என்று கூறினார்கள். நபிகளார் மதம் மாறும்படி அவரை வற்புறுத்தவில்லை. அதற்கு அவசரம் காட்டவுமில்லை.

## ஹாபர்

இஸ்லாத்தின் இன்னொரு எதிரியான 'ஹாபர்' என்பான் நபிகளாரின் மகள் ஜைனப் மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற போது அவரைத் தாக்கி பெரும் காயத்தை ஏற்படுத்தியவன். அப்போது ஜைனப் கருவுற்றிருந்தார். ஒட்டகத்தில் சென்று கொண்டிருந்த அவரை ஹாபர் கீழே இழுத்துத் தள்ளினான். அதில் காயமடைந்த ஜைனப்பின் கருவும்

கலைந்தது. நபிகளாரின் மன்னிக்கும் பண்பை அறிந்து அவர்களிடம் வந்த ஹாபர் 'ஓ இறைவனின் தூதரே! நான் பாரசீகத்திற்கு ஓடத் திட்டமிட்டிருந்தேன். ஆனால் தங்களுடைய மன்னிக்கும் பண்பு பற்றிக் கேட்டறிந்து பெரிதும் மனக் கிளர்ச்சியடைந்து விட்டேன். இஸ்லாத்தில் என்னை இணைத்துக் கொள்ள விரும்புகிறேன்' என்று கூறினார். அவர் செய்த கொடுஞ் செயலை மன்னித்த நபிகளார், அவரை இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டார்கள்.

## அபூசுஃப்யான்

பத்ருப் போரிலிருந்து அபூசுஃப்யானின் செயல்பாடுகள் வெளிப் படையாகவே இருந்தன. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட அனைத்துப் போர்களும் அவராலேயே திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டன. மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று அப்பாஸ்(ரலி) அவரை அழைத்து வந்த போது நபிகளார் அவரை பிரியத் துடனும் அன்புடனும் நடத்தினார்கள். அவர் இழைத்திட்ட குற்றங்களுக்காக ஹழ்ரத் உமர்(ரலி) அவரைக் கொல்லத் திட்டமிட்டிருந்தார். ஆனால் நபிகளார் அதனைத் தடுத்து விட்டார்கள். நபிகளார் அபூசுஃப்யானை மன்னித்ததோடு மட்டுமின்றி, அவரது வீட்டை சமாதானச் சரணாலயம் என அறிவித்தார்கள். 'யாரொருவர் அபூசுஃப்யான் இல்லத்தினுள் நுழைகிறாரோ அவரது குற்றங்கள் மன்னிக்கப் படுகின்றன. அவருக்கு உரிய பாதுகாப்பும் உண்டு' என நபிகளார் கூறினார்கள்.

## ஹிந்த்

அபூசுஃப்யானின் மனைவி ஹிந்த், இஸ்லாத்தை பெரிதும் வெறுத்தவர். உஹதுப் போரின் போது ஹம்ஸா(ரலி) அவர்களின் ஈரலை உருவி அதை மென்று துப்பியவர். அவர் நபிகளார் முன்பு வந்து, மன்னிப்புக் கோரி இஸ்லாத்தில் இணைந்தார். பின்னர், அவர் தன்னுடைய இல்லத்திற்கு சென்று அங்கு வைக்கப் பட்டிருந்த விக்ரகங்களையெல்லாம் 'நீங்கள் என்னை வழி

கெடுத்து விட்டீர்கள்' என்று கூறிக் கொண்டே உடைத்தெறிந்தார். நபிகளாரைப் பற்றி பல அவதூறுக் கவிதைகள் இயற்றிய கவிஞரான அப்துல்லாஹ் பின் கிஃபாரி என்பார் நஜ்ரானுக்கு ஓடிப்போய் விட்டார். பின்னர் அவர் நபிகளாரைச் சந்தித்து மனம் வருந்தி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். நபிகளார் அவரது தவறுகளை மறந்து மன்னிப்பளித்தார்கள்.

## இக்ரிமா

அபூஜஹ்ல் மகன் இக்ரிமாவும், தன்னுடைய தகப்பனாரைப் போன்றே இஸ்லாத்தின் கொடிய எதிரியாக விளங்கினார். மக்காவில் தனக்கு நிச்சயம் முடிவு ஏற்பட்டு விடும் என்று பயந்து அவர் யேமனுக்கு ஓடிப்போனார்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அவரது மனைவி உம்மு ஹகீம், தனது கணவருக்கு அடைக்கலம் அளிக்குமாறு நபிகளாரிடம் வேண்டினார். அவளது கோரிக்கையை நபிகளார் ஏற்றுக் கொள்ளவே. அவள் யேமன் சென்று தனது கணவரை நபிகளாரிடம் அழைத்து வந்தாள். அவர் தம்மை நோக்கி வருவதைக் கண்ணுற்ற நபிகளார் தனது தோழர்களிடம் "'அபூ ஜஹ்ல் மகன் இக்ரிமா இஸ்லாத்தில் சேர வருகிறார். அவரது தந்தையாரை அவமதிக்காதீர்கள்.

இறந்தவர்களை அவமதிப்பது, உயிருடன் இருப்பவரையே காயப்படுத்துகிறது. இறந்தவரை அல்ல" என்று கூறினார்கள். பரபரப்புடனும், மகிழ்ச்சியுடனும் நபிகளார் எழுந்து தனது தோளில் கிடந்த துண்டு கீழே விழும் அளவுக்கு அவரை நோக்கி வேகமாகச் சென்று 'ஓ இடம் பெயர்ந்து வரும் சவாரிக்காரரே! உங்கள் வருகை நல் வருகையாகுக' எனக் கூறினார்கள். இதன் மூலமாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், தனது தோழர்களிடம் மன்னித்து விடும்படியும், அதே நேரத்தில் வேறு யாரோ ஒருவர் செய்த தவறுக்கு அது அவருடைய தகப்பனாராக இருந்தாலும் சரி இன்னொருவர் பொறுப்பேற்க முடியாது என்பதையும் கீழ்க்கண்ட இறைவசனங்களை ஓதி நினைவுபடுத்தினார்கள்.

> 'சுமையைச் சுமக்கும் எவரும் மற்றவரின் சுமையைச் சுமக்க மாட்டார்'. (திருக்குர்ஆன் *17:15*)

வேதனைக்குள்ளான மக்கள் (அதாவது நபிகளாரும் அவர்களுடைய தோழர்களும்) வெற்றியடைந்த போது எப்படி மனித மாண்பினைப் பாதுகாத்து நடந்திட வேண்டும் என்பதை குர்ஆன் ஏற்கனவே கீழ்க்கண்ட இறைவசனங்கள் மூலம் வழிகாட்டியிருந்தது.

> அவர்கள் எத்தகையவர்களெனில், நாம் அவர்களுக்குப் பூமியில் ஆட்சி அதிகாரத்தை வழங்கினால் அவர்கள் தொழுகையை நிலை நிறுத்துவார்கள். ஜகாத் வழங்குவார்கள். மேலும் நன்மை புரியுமாறு ஏவுவார்கள். தீமையிலிருந்து தடுப்பார்கள். மேலும் எல்லா விவகாரங்களின் முடிவும் அல்லாஹ்வின் கையில் உள்ளது. (திருக்குர்ஆன் *22:41*)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நற்குணங்களின் உதாரணமாக விளங்கினார்கள். பழிவாங்குவதிலோ, அதிகாரத்திலோ அல்லது செல்வத்தின் மீதோ அவர்கள் நாட்டம் கொள்ளவில்லை. மக்காவினுள் நுழைந்த அவர்கள் தலை தாழ்த்தி பிராத்தனை செய்தார்கள். கஅபாவிற்குச் சென்று அங்கும் தலைசாய்த்து வழிபட்டார்கள். இறை வசனங்களை ஓதி ஓரிறைவன் பால் தாம் கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள். மக்காவில் அமைதியை நிலை நாட்டினார்கள்.

# உள்ளங்களைச் சீர்திருத்திய இஸ்லாமியத் தலைமை

பொதுவாக வெற்றி பெற்றவர்கள் கொடுமைகள் புரிவது இயல்பான ஒன்றேயாகும். ஆனால் நபிகளார் அப்படிச் செய்யவில்லை. தங்களால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளிடம் அவர்கள் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்கள்.

குறைஷியர்கள் இருபது ஆண்டுகளாக நபிகளாரையும், அவர்களது வழிமுறைகளையும் எதிர்த்தார்கள். நபிகளாரை கேலி செய்தார்கள். அவர்களது தோழர்களையும் கொடுமைப் படுத்தினார்கள். நபிகளாரைக் கொல்ல முயற்சித்தார்கள். அவர்களது குடும்பத்தினரையும், தோழர்களையும் சிறையில் அடைத்தார்கள். மூன்று ஆண்டுகள் காலம் அவர்கள் சமூக விலக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். தோழர்கள் செய்திட்ட ஒரே தவறு நபிகளாரைத் தங்களது தலைவராக ஏற்றுக் கொண்டு இஸ்லாத்தில் இணைந்தது தான். இஸ்லாத்தை ஒழிக்க குறைஷியர்கள் அனைத்து விதமான தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் மேற்கொண்டிருந்தனர். ஆனால் மூன்று போர்களுக்குப்பின் மக்கா கைப்பற்றப்பட்ட பிறகு, குறைஷியர்கள் தோல்வியுற்று நிலை குலைந்து போய் இருந்தனர். முஸ்லிம்களுக்கு எதிராக அவர்கள் இழைத்திட்ட கொடுமைகளுக்குப் பழிவாங்கும் வாய்ப்பு இப்போது நபிகளாருக்கு இருந்தது. எனினும் அவர்கள் 'இன்றைக்கு உங்களைப் பழிக்குப் பழி வாங்கப் போவதில்லை' என்று கூறினார்கள். மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற முஸ்லிம்களின் சொத்துக்களை அபகரித்து வைத்திருந்த மக்காவாசிகளிடமே அந்தச் சொத்துக்கள் இருக்கட்டும் என விட்டு விட்டார்கள். புனிதத்தலங்களின் பாதுகாவலர்களாக அவர்கள் வகித்து வந்த பொறுப்புகளையும் மக்கா நகரின் நிர்வாகப்

பொறுப்பினையும் அவர்களே தொடர்ந்து வகித்து வர அனுமதி அளித்தார்கள். மக்கா வெற்றிக்குப்பின் நபிகளார் சமாதானம் – மன்னிப்பு என்ற அறிவார்ந்த கொள்கையைக் கடைப்பிடித்து வரலானார்கள். நீக்குப்போக்கான தன்மையும், பரந்த மனப்பான்மையும் ஆரம்ப நிலையில் இருக்கும் இஸ்லாமிய அரசிற்கு பெரும் நன்மைகளைக் கொண்டு வரும் என நபிகளார் அறிந்திருந்தார்கள். பழிவாங்கலும் தண்டனையும் தொடர்–கதையாகவே இருக்கும். எனவே உண்மையான மனமாற்றம் நிகழ வேண்டுமென நபிகளார் விரும்பினார்கள். நீக்குப் போக்குடன் நடந்து கொண்டு தாங்கள் செய்திட்ட குற்றங்–களுக்காக மனம் வருந்துகின்ற வாய்ப்பினை அவர்களுக்கு அளிப்பதன் மூலம் இதைச் சாத்தியமாக்க முடியும் என நபிகளார் நம்பினார்கள்.

மக்காவின் நிர்வாகப் பொறுப்பில் குறைஷியர்கள் இருந்தார்கள். அவர்கள் மக்களுக்கு நன்கு தெரிந்த பிரமுகர்கள். அவர்கள் அதிமேதாவிகளாவும் எதனையும் செய்து முடிக்கின்ற ஆற்றல் உள்ளவர்களாகவும், செல்வாக்கும் கௌரவமும் மிக்கவர்களாகவும், ஆளவும், ஆணையிடவும் அனுபவம் பெற்றவர்களாகவும், பிறரைக் கொண்டு புத்திசாலித்தனமாகக் காரியங்கள் ஆற்றுவதில் வல்லவர்களாகவும், மனித உளவியல் தெரிந்தவர்களாகவும் இருந்தனர். இவை அனைத்திற்கும் மேலாக அவர்களின் மேம்பட்ட தன்மை மக்கள் மன்றத்தில் ஏற்கனவே அங்கீகாரம் பெற்றிருந்தது. அவர்களின் இந்தக் குண நலன்களை நபிகளார் உணர்ந்தே இருந்தார்கள். வரலாற்றின் குப்பைக் கூடையில் அவர்களை எறிவதை விட அவர்களுடைய ஆற்றல்களைப் பயன்படுத்தி சீர்திருத்தங்களை மேற் கொள்ளலாம் என எண்ணினார்கள். அவர்கள் அரேபியாவின் தலைமைப்பதவியை ஏற்க மிகவும் பொருத்தமானவர்கள் என்றும், இஸ்லாத்தின் சுடரை ஏந்திக் கொண்டு ஒரு புதிய நாகரீகத்தை நோக்கி அவர்கள் செல்வார்கள் என்பதையும் நபிகளார் அறிந்திருந்தார்கள்.

அறியாமைக் கால தங்களது வாழ்க்கை முறையினைப் பாது காத்திட அவர்கள் தீரமுடன் போராடினார்கள். அவர்களது மதிப்பும் கண்ணியமும் சீர்குலையாமல் பாதுகாக்கப்பட்டால் இஸ்லாத்தின் மீது அதே அளவு மன உறுதியுடன் நிலைத்திருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு நபிகளாரிடம் இருந்தது. இறை நம்பிக்கையும் பக்தியும் இஸ்லாத்தின் அடிப்படையாக விளங்கிய போதிலும் இஸ்லாமியத் தலைமைக்கு அறிவார்ந்த மனோதிடமும், சுய மரியாதையும், செல்வாக்கும், பெரும் எண்ணிக்கையிலான மக்களை மதியூகத்துடன் ஆளுகின்ற திறமையையும் அமையப்பெற்றிருக்க வேண்டும் என்பதிலும் நபிகளார் உறுதியாக இருந்தார்கள். அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட குறைஷியர்கள் ஒன்றுக்கும் உதவ மாட்டார்கள். வெற்றி பெற்ற ஒரு படையின் தலைவராக நபிகளார் மக்காவில் நுழைந்தபோது மக்கா வாசிகள் மனமுருகி தங்களது ஆதரவை வேண்டி நிற்பவர்களாக இருக்க வேண்டுமே தவிர தங்களது கோபத்தைச் சந்திப்பவர்களாக இருந்து விடக்கூடாது என்பதே நபிகளாரின் நோக்கமாக இருந்தது. நபிகளாரின் இந்தப் பெருந்தன்மையான அணுகு-முறை தான் அரேபிய தீபகற்பத்தில் பெரும்மாற்றத்தினை ஏற்படுத்தி இஸ்லாத்தின் இரக்கமற்ற எதிரிகளை வருங்காலத்தில் இஸ்லாமிய நம்பிக்கைப் பதாகைகளை ஏந்திச் செல்பவர்களாக மாற்றியது.

# இறைவனே! நான் ஒன்றுமறியாதவன்

மக்காவை வெற்றி கொண்ட பின்னர் நபிகளார் அங்கு பத்தொன்பது நாட்கள் தங்கியிருந்தார்கள். நிலைமை அங்கு மேம்பாடு அடைந்தது. மதீனாவிற்குக் திரும்பும் முன்னர் அவர்கள், தங்களது கூட்டணியினரும், பிற இனக் குழுவினரும் உறுதியாக உள்ளனரா என்பதையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அவர்கள் விக்ரக ஆராதனைகளை விட்டு விட்டார்களா என்பதையும் உறுதி செய்து கொண்டார்கள். பனூஜாதிமா இனக் குழுவினருக்கு நேர்வழி காட்டும் பொறுப்பு காலித்(ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிந்தது. அவர்கள் காலித்திடம் சரணடைந்தார்கள். ஆனால் காலித், அப்துர் ரஹ்மான்(ரலி) அவர்களின் ஆலோசனையையும் மீறி தனக்குப் பிடிக்காத கைதிகள் சிலரைக் கொல்ல முடிவு செய்தார். சிலரைக் கொன்ற பிறகு அப்துர் ரஹ்மான் வலியுறுத்தியதன் காரணமாக தனது மேல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டார். காலித்தின் நடவடிக்கைகள் உள் நோக்கம் கொண்டவை என்றும் இறை நம்பிக்கைக்கோ, நியாயத்திற்கோ கட்டுப்பட்டவையல்ல என அப்துர் ரஹ்மான் தெளிவாக தெரிவித்தார்.

காலித்தின் நடத்தை குறித்துக் கேள்விப்பட்ட நபிகளார் மிகவும் கோபமுற்றார்கள். இறந்த அனைவருக்கும் நபிகளார் ஈட்டுத் தொகை வழங்க முடிவு செய்தார்கள். "ஓ! என் இறைவனே! காலித் செய்தது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்று அடிக்கடி கூறினார்கள். ஒரு தனி மனிதரோ ஒரு குழுவோ, ஒரு அரசோ ஒன்றுமறியாத மக்களைக் கொன்றாலோ, கொடுமையில் ஈடுபட்டாலோ, சமயத்தின் பெயரால் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டாலோ, அதனை நபிகளாருடன் சம்பந்தப்படுத்தினாலோ, அத்தகைய நடவடிக்கைகள் இஸ்லாத்திற்கு விரோத

மானவைகள் என்றும், அவை இஸ்லாத்தின் பாற்பட்டவையாகக் கருத முடியாது என்றும் நபிகளார் தெளிவுபட அறிவித்தார்கள்.

மக்கா மற்றும் மதீனா முஸ்லிம்களின் இதயங்களைப் பக்குவப்படுத்த இன்னும் பல முயற்சிகள் செய்ய வேண்டிய திருந்தன. இஸ்லாமிய கொள்கைகளுக்கு விரோதமாக புரையோடிப் போயிருந்த பழைய பழக்கவழக்கங்கள் அம்மக்களிடம் அவ்வப்போது தலை காட்டின. பெருமளவில் இஸ்லாத்தில் இணைந்த மக்கா முஸ்லிம்களுக்கு மார்க்கக் கல்வி அளித்திட விசேட முயற்சிகள் தேவைப்பட்டன. அம்மக்களுக்கு இஸ்லாத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்கிச் சொல்ல வேண்டியதிருந்தது. இந்தப் பொறுப்பினை முஆத் பின் ஜபல்(ரலி) என்பவரிடம் நபிகளார் ஒப்படைத்தார்கள். இதுவரை நிலவி வந்த வேற்றுமையில் ஒற்றுமையானது இனி ஏற்படவிருக்கும் நம்பிக்கை, அன்பு மரியாதை ஆகியனவற்றின் ஒற்றுமையை அடைவதற்கான வழிமுறைகளை இலகு–வாக்கியது. சாதாரண மனித வாழ்க்கைப் பாதையை விடவும், இது இதயத்தையும், மனச்சாட்சியையும் ஜிகாதின் பல்வேறு படித்தரங்கள் மூலமாக மாற்றக் கூடிய ஆரம்பகட்டப் பணியாக அமைந்திருந்தது. இது மனிதனுடைய வழக்கமான பதற்ற நிலையிலிருந்து அவனை அமைதியான ஆன்மீகக் கல்விக்கு இட்டுச் சென்றது.

## உண்மையான சீர்திருத்த வாதி

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் தம்முடைய தோழர்களுக்கு அவர்கள் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி முழு சுதந்திரம் வழங்கியிருந்தார்கள். அவர்களிடம் தோழர்கள் யாரும் எந்தவிதமான தயக்கமுமின்றிப் பேசலாம். அதே போல் தோழர்களும் தங்களது தலைவரான நபிகளாரைப் பெரிதும் நேசித்தார்கள். தோழர்கள் தங்களது கருத்துக்களை சுதந்திரமாகத் தெரிவிக்க வாய்ப்பளித்ததன் மூலம் நபிகளார் அவர்களின் திறமைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். மனித சமுதாயத்தைச் சீர்திருத்தி மேன்மையின் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதே நபிகளாரின் முக்கிய நோக்கமாக இருந்தது. நபிகளார் இந்த நோக்கத்தை நிறைவேற்றிப் பிறருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தங்களது தோழர்களைச் சீர்த்திருத்தி அவர்களை ஒளி உமிழும் விண்மீன்களாக விளங்கச் செய்தார்கள். எனவே நபிகளாரின் நடைமுறை இணையற்றதாகவும், கடைப்பிடிக்கத்–தக்கதாகவும் மனித உளவியலுடன் பொருந்தி வரக் கூடியதாகவும் அமைந்திருந்தது.

அவர்கள் மக்களைச் செம்மைப்படுத்திய சில சம்பவங்களை இனி பார்ப்போம்.......

## மன்னர்களையும், பொதுமக்களையும் சமமாகப்பாவித்தல்

நபிகளாரின் இரக்கமும், கருணையும் அனைத்து மனிதர் களின் மேலும் பொங்கி வழிந்தது. அவர்களது கூட்டத்தினர் அனைவர்கட்கும் அது சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ரோமர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், எகிப்தியர்கள், சூடானி யர்கள், அபீசீனியர்கள் என எந்த விதமான பாகுபாடின்றி அனைத்து மக்களும் அவர்களால் சமமாக நடத்தப்பட்டனர். சல்மான் பார்ஸி, சுஹைப் ரூமி, ஐந்தால் அரசரான உத்மா நஜ்தி, ஹாமிர் நாட்டு அரசர், யேமன் நாட்டு தலைமை குருவான தூமத் என அனைவரும் நபிகளாருடன் இருக்கும்போது சாதாரணப் பொதுமக்களுக்குச் சமமாகவே நடத்தப்பட்டனர். ஒரு மனிதருக்கும் இன்னொரு மனிதருக்குமிடையே சமூக, பொருளாதார அந்தஸ்து காரணமாகவோ அல்லது சமூகத்தில் அவர் பெற்றிருக்கும் மதிப்பு காரணமாகவோ நபிகளார் அவர்களிடம் வேறுபாடு காட்டவில்லை. யார் அவர்களிடம் வந்தாலும் சரி இரக்கத்துடனும், கருணையுடனும் அனைவரும் சமமாகவே நடத்தப்பட்டனர்.

## பக்தி வாழ்க்கையும் நடைமுறை வாழ்க்கையும்

தங்களைப் பின்பற்றுபவர்கள் கடைப்பிடிக்கத்தக்க வகையில் நபிகளார் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள் ஒரு முறை ஒரு தோழர் நபிகளாரிடம் தான் மிகுந்த பயபக்தியுடன் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டார். தான் திருமணம் செய்து கொள்ளவில்லையென்றும், இறைச்சி சாப்பிடு வதில்லையென்றும், வெறுந்தரையில் படுத்து உறங்கு வதாகவும், எப்போதும் நோன்பிருப்பதாகவும் பெருமையுடன் தெரிவித்தார். இதனைக் கேட்ட நபிகளார் அவரிடம், புகழனைத்தும் இறைவனுக்கே! நான் திருமணம் செய்து கொண்டவன். இறைச்சி உண்பவன் நோன்பு நோற்பவன், நான்

தூங்குகிறேன், விழித்திருக்கிறேன் என்று கூறினார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு சமபல நிலையைக் கடைப்பிடித்துச் சமயச் செயற்பாடுகள் உலக விஷயங்களுடன் இணைந்தே இருக்க வேண்டுமென வலியுறுத்தினார்கள். அவர்கள் உலக விஷயங்களுக்கு அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சமய விஷயங்களின் முக்கியத்துவத்தையும் குறைக்கவில்லை. பெருமளவு செல்வம் சேர்ப்பதை அவர்கள் கண்டனம் செய்தார்கள். அதே நேரத்தில் கடுமையாக நடந்து கொள்வதையோ, துறவு நிலை போன்ற ஒரு வாழ்க்கையையோ ஆதரிக்கவில்லை.

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் வாழ்வை அவர்கள் பிரிக்கவில்லை. மனித வாழ்க்கையில் தீவிரத்தன்மையை இஸ்லாம் ஊக்குவிக்கவில்லை. உடலை வருந்தச் செய்வதையோ அல்லது மிதமிஞ்சிய இன்ப நுகர்வையோ அது ஆதரிக்கவில்லை. ஒருதாரத் திருமணத்தை இஸ்லாம் ஆதரிக்கிறது. ஆனால் அதனை வலியுறுத்தவில்லை. சில சூழ்நிலைகளில் அது போரை ஆதரிக்கிறது. ஆனால் அதன் மையச் செய்தி இறைவனுக்குப் பணிதலும், அமைதியைப் பேணுதலுமே ஆகும். சுருக்கமாக, அது மனிதனின் இயல்பான ஆற்றல், தேவை, வரையறை ஆகியவற்றிற்குத் தகுந்தாற் போல் அவனது நடத்தையைக் கட்டுப்படுத்துகிறது. ஆனால் மனிதனின் இயற்கைப்பண்பு முற்றிலுமாக மாற்றப்படுவதை அது தடுக்கிறது. ஏனெனில் இது உலக ரீதியில் சாத்தியமற்றது. ஆன்மீக ரீதியில் விரும்பத்தகாதது.

## ஆட்சியாளர்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அவையில் கடைப்–பிடிக்கப்பட்ட ஒழுங்கும், நடைமுறையும் என்னவென்றால் யாராவது ஒருவர் கேள்வி எழுப்பினால் அதற்கு நபிகளார் அவர் திருப்தியுறும் வண்ணம் விரிவான பதிலளிப் பார்கள். இந்த நடைமுறை தெரியாத பதூயின் ஒருவர் நபிகளாரின் அவைக்கு

வந்து அவர்களிடம் கியாமத் நாள் (உலகம் அழியும் நாள்) எப்போது வரும் என்று கேள்வி எழுப்பினார். அவர் கேள்வி கேட்டு முடித்ததும் நபிகளார் கேள்வி கேட்டவர் எங்கே என்று வினவினார்கள். அதற்கு அவர் நான் இங்கிருக்கிறேன் என்று குறிப்பிட்டார். உடனே நபிகளார் மக்கள் நம்பிக்கை இழக்கும் போது கியாமத் நாள் வரும் எனப் பதிலளித்தார்கள். பிறகு அவர் எப்படி நம்பிக்கை இழந்து போகும்' என்று மீண்டும் கேள்வி எழுப்பவே அதற்கு நபிகளார் அரசாங்கம் தகுதியற்ற அரசர்களின் கரங்களுக்கு வரும் போது என்று பதிலளித்தார்கள். பின்னர் நபிகளார் மக்களின் நடத்தையைப் பொறுத்தே அவர்களின் ஆட்சியாளர்கள் அமைகிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள்.

## ஏழையும், பணக்காரனும்

தோழர்கள் குழுமியிருக்கும் அவையில் பேசும் போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், தோழர்களைக் குறிப்பாக அவர்களுள் ஏழைகளை கோழிப்பண்ணைகள் துவக்கி அதன் மூலம் வருமானம் ஈட்டுமாறு ஊக்குவித்தார்கள். ஏனெனில் கோழிப் பண்ணைகளை மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்கள் கூட எளிதில் தொடங்கிட முடியும். வசதிபடைத்த தோழர்களை ஆடுகள், ஒட்டகங்கள் வளர்க்குமாறு வேண்டினார்கள். பணக்காரர்கள் மிக அதிக அளவு மூலதனம் தேவைப்படும் தொழில்களிலும், ஏழைகள் குறைந்த அளவு மூலதனம் தேவைப்படும் தொழில்களிலும் ஈடுபட வேண்டுமென்பதே நபிகளாரின் நோக்கமாகும். சமுதாயத்தில் ஒரு ஆரோக்கியமான சமநிலை இருக்க வேண்டும் பல்வேறு குழுக்களுக்கிடையே இந்த சம நிலை நியாயமாக இருக்கவேண்டும். பெருமூலதனக்–காரர்கள், சிறிய தொழில்களைத் தொடங்கினால், அது சிறு மூலதனக்காரர்களை பெரிதும் பாதித்து அவர்களது வாழ்வாதா–ரங்களை அழித்து விடும். இது, இந்த இரு பிரிவினருக்கிடையே வர்க்கப் போராட்டங்களை உருவாக்கி, சமுதாயத்தில் அமைதியின்மையையும், ஸ்திரமற்ற நிலையையும் உருவாக்கி–விடும் என்பதை நபிகளார் உணர்ந்திருந்தார்கள்.

# தூய்மை இறை நம்பிக்கையின் பாதி

தூய்மை ஈமானின் (நம்பிக்கையின்) பாதியாகும் என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். இஸ்லாமிய மார்க்கம் தூய்மையின் அடிப்படையில் உருவான மார்க்கம்' என நபிகளார் நவின்றதாக ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்–கின்றார்கள்.

நபிகளார் எப்போதும் தங்களது உடலையும், ஆடைகளையும் தூய்மையாக வைத்திருந்தார்கள். அடிக்கடி குளிப்பார்கள். தங்களுடைய தோழர்களும் அது போல் தூய்மையாக இருந்திட வேண்டுமென்று வலியுறுத்துவார்கள். நபிகளார் ஒரு முறை எங்களைப் பார்க்க வந்த போது எங்களுடன் இருந்த ஒருவர் மிகவும் அழுக்கான ஆடைகளை அணிந்தி–ருந்ததைப் பார்த்து 'துணிகளை வெளுக்க இவரிடம் எதுவுமே இல்லையா?' எனக் கேட்டதாக ஜாபிர்(ரலி) என்ற தோழர் அறிவிக்கிறார்.

உமர்(ரலி) அவர்களின் மகன் அப்துல்லாஹ் அறிவிப்பதாவது:–

ஒரு முறை நான் அல்லாஹ்வின் தூதரிடம் ஓ! இறைவனின் தூதரே! நான் நேர்த்தியான அழகான ஆடைகளை அணிந்தால் அதன் காரணமாக என்னுடைய பெருமையையும், ஆணவத்–தையும் காட்டிய குற்றத்திற்கு ஆளாவேனா எனக் கேட்ட போது நபிகளார் 'அழகான ஆடைகளை அணிவது சிறப்பானது. அது இறைவனை மகிழ்விக்கும்' என நவின்றார்கள்.

உமர்(ரலி) அவர்களின் மகன் அப்துல்லா நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாக மேலும் அறிவிப்பதாவது:–

தொழுகையின் போது மிகச்சிறந்த ஆடைகளை அணியுங்கள். (முழுமையான உடைகள் அணிந்திருக்க வேண்டும்) வேறு எதனையும் விட மனிதன் அல்லாஹ்விற்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளான். எனவே அவன் இறைவனின் முன்பு மிக நன்றாக உடையணிந்து வர வேண்டும். சிறந்த உடையணிவது ஆணவத்தை வெளிப்படுத்துவதாகாது. மற்றவர்களை அற்பமாகவும், இழிவாகவும் கருதி அவர்களது உரிமைகளை மறுப்பது தான் ஆணவமாகும்.

## மதுவிலக்கு – சூதாட்டம் – தடை

இஸ்லாத்திற்கு முந்தைய அரேபிய நாட்டில் குடிப்பழக்கம் மிக அதிக அளவில் இருந்து வந்தது. மது பானங்கள் வீட்டுப் பொருட்களில் ஒன்றாக இருந்தன. குடிப்பது உயர்ந்த கலாச்சாரமாகவும், போதையுடனிருப்பது செல்வம் மற்றும் கௌரவத்தின் அடையாளங்களாகவும் கருதப்பட்டன. சூதாட்டம் குடிப்பழக்கத்திற்கு அடுத்த நிலையில் இருந்தது. இந்தச் சூதாட்டங்களின் போது, கூரிய அம்புகளைக் குறி பார்த்து எய்துவது வெற்றியைத் தீர்மானிக்கும் முறையாக இருந்தது. ஒவ்வொரு அம்பு எய்வதற்கும் பூஜ்யத்திலிருந்து மூன்று அல்லது நான்கு புள்ளிகள் வரை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. பூஜ்யம் புள்ளி எடுத்தவன் ஒரு ஒட்டகத்தை விலைக்கு வாங்கி அதனை அறுத்து அதன் இறைச்சியை கலந்து கொண்ட மற்றவர்கட்கு அவர்கள் பெற்ற புள்ளிகளுக்குத் தகுந்தாற்போல் விநியோகிக்க வேண்டும். குடிப்பழக்கத்தைப் போலவே சூதாட்டமும் பெருமையாகவும் கௌரவமாகவும் கருதப்பட்டது. அரபியர்கள் குலப்பெருமை மிக்கவர் களாகவும், கௌரவ மிக்கவர்களாகவும் தங்களை கருதிக் கொண்டதால் குடியும், சூதாட்டமும் அவர்களிடையே மிக அதிக அளவில் இருந்தது. இந்தப் பழக்கங்கள் காரணமாக அவர்களிடையே அடிக்கடி இனச் சண்டைகளும், போர்களும் ஏற்பட்டன. அரேபிய சமுதாயத்தில் ஒரு பெரும் சீர்திருத்தத்தை ஏற்படுத்த விரும்பிய குர்ஆன், இந்தப் பழக்கங்களுக்குத் தடை விதித்தது. இது பற்றி குர்ஆனில் கூறப்பட்டிருப்பதாவது.

> *மது மற்றம் சூதாட்டம் (இவற்றிற்குரிய கட்ட ளைகள்) பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறுவீராக! அவ்விரண்டிலும் பெரும் கேடு இருக்கிறது. அவற்றில் மக்களுக்குச் சிறிது பயன் இருப் பினும் அவற்றினால் ஏற்படும் பாவம் அவற்றின் பயனை விட அதிகமாக இருக்கிறது. (குர்ஆன் 2:219 )*

முதன் முதலாக குடியைப் பற்றியும், சூதாட்டம் பற்றியும் குறிப்பிடும் இந்த இறை வசனங்கள் அவற்றில் சில நன்மைகள்' இருப்பதாகவும் குறிப்பிடுவதை கவனிக்க வேண்டும். ஆனால் சமூக ஒழுங்கு மிக முக்கியமானதாகும். ஒரு சமூகம் வளமும், வளர்ச்சியும் பெற வேண்டுமானால் அந்தச் சமூகத்தில் குடியும், சூதாட்டமும் இருக்கக் கூடாது. இதன் பின்னர், இந்தப் பழக்கங்களை முற்றிலும் தடை செய்து இறை வசனங்கள் அருளப்பட்டன.

> இறை நம்பிக்கை கொண்டவர்களே! மது, சூதாட்டம், பலி பீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அறுவெறுக்கத்தக்க ஷைத்தானியச் செயல்களாகும். அவற்றைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். அதன் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம் (குர்ஆன் *5:90*)

வாழ்க்கையில் வெற்றியடைய எதை விட்டொழிக்க வேண்டும் என்பதைப் பற்றி முஸ்லிம்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தவிர்க்கப்பட வேண்டியது மது மட்டுமல்ல, மனநிலையையும் சரியான முடிவுகள் எடுத்திடும் திறனையும் பாதிக்கின்ற அனைத்து வகையான மதுபானங்களும், போதை மருந்துகளும் தவிர்க்கப்பட வேண்டியவைகளே. அது போல், சூதாட்டம் என்று வரும் போது அது அரசாங்கம் நடத்துகின்ற லாட்டரிகளையும் உள்ளடக்கியது தான். இது சம்மபந்தமான இறை வசனங்கள் பின் வருமாறு கூறுகின்றன.

> மது மற்றும் சூதாட்டத்தின் வாயிலாக உங்களுக் கிடையில் பகைமையையும், வெறுப்பையும் ஏற்படுத்தி அல்லாஹ்வை நினைவுகூர்வதிலிருந்தும், தொழுகை யிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடவே ஷைத்தான் விரும்புகிறான். இதற்குப் பிறகாவது நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் (குர்ஆன் *5:91*)

எனவே இந்தப் பழக்கங்கள் வளர்ச்சியையும், உண்மையான வளத்தையும் தடுத்து விடுகின்றன. இஸ்லாத்தின்

வருகைக்குப் பின்னர் ஏற்பட்ட இந்தத் தடைகள் காரணமாக அரபகத்தில் ஒரு பெரும் சமூக மாற்றம் ஏற்பட்டது. அரேபியர்களின் உன்னதப் பண்புகளான கடின உழைப்பு, துணிச்சல், தைரியம், வெளிப்படைத்தன்மை ஆகியன முன்னணிக்கு வர இந்தத் தடை பெரிதும் பயன்பட்டது. மனித சமுதாயத்தின் நன்மைக்காக இஸ்லாம் வழங்கியுள்ள பங்களிப்பில் மிகவும் முக்கியமானது, போதை தரும் பானங்களையும் (ஆல்கஹால் கலந்தது) மருந்துகளையும் உட்கொள்ளக் கூடாது என்று தடை விதித்ததும், அனைத்து வகையான சூதாட்டங்களையும் தடை செய்ததுமேயாகும். குடிப் பழக்கமும், சூதாட்டமும் நன்மை விளைவிப்பவை அல்ல. மிகுந்த தீமை விளைவிப்பவையே என்று திருக்குர்ஆனில் இறைவன் எச்சரிக்கிறான். சூதாட்டப் பழக்கம் சமுதாயத்தில் பெரும் தீய விளைவுகளை ஏற்படுத்துகிறது. அது மனிதனை தொழிலில் ஈடுபடுவதைத் தடுத்து, தவறான முறையில் பணம் சேர்க்க ஊக்குவிக்கிறது. அது குடும்பங்களின் பொருளாதாரத்தைச் சீர் குலைத்து, கடன் தொல்லையில் மூழ்கச் செய்து, வறுமையில் தள்ளுகிறது. மேலும் சமுதாயத்தின் தார்மீக நெறிகளைச் சிதைக்கிறது. புகழ் பெற்ற பிரிட்டீஸ் வரலாற்றாசிரியர் அர்னால்டு J.டாய்ன்பீ (*Amold J.Toynbee* ) என்பார், இஸ்லாம் மனித குலத்திற்கு வழங்கிய பெரும் அருட்கொடை மது அருந்துதலை தடை செய்ததேயாகும் எனக்குறிப்பிடுகிறார்.

## பேராசை

போதுமென்ற மனமே' வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி வகுக்கும். பேராசை பெருநட்டத்தை ஏற்படுத்தும். நம்மில் பல பேர் பொருட்செல்வம் மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் என நினைக்கிறோம். இது நமக்கு வசதிகளைத் தருமே தவிர, மகிழ்ச்சியைத் தராது. பொருட் செல்வத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஒருவன் மன ரீதியான மகிழ்ச்சியைப்பெற முடியாது. உண்மையில், போதுமென்ற மனமே நம்மை மகிழ்ச்சிக்கு இட்டுச்

செல்லும். உள்ளத்தில் அமைதியை ஏற்படுத்தும். நமது ஆத்மாவை பேராசை என்ற பிணியிலிருந்து விடுவிக்கும். பேராசைக்கும், இச்சைக்கும் முடிவே கிடையாது. ஒன்றை நிறைவேற்றினால் இன்னொன்றின் மீது அவாவை ஏற்படுத்தி அது பெருகிக் கொண்டே போகும். மனிதனின் இயற்கையான குணம் பற்றி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாவது. ஆதமுடைய மகனுக்கு ஒரு பள்ளத்தாக்கு அளவிற்குத் தங்கம் கொடுக்கப்–பட்டாலும் அவன் அதை விட இரண்டு மடங்கு விரும்புகிறான். அவனது வாயை எதுவும் நிரப்புவதில்லை. மண்ணைத் தவிர யார் தனக்காக வருந்து கிறானோ, அவனுக்கு இறைவன் மன்னிப்பு வழங்குகிறான்.

மனிதன் எப்போதுமே செல்வத்தையும், பொருளாதார வளமையையுமே விரும்புகிறான். மேலும் மேலும் விரும்புவது அவனது இயற்கைக் குணம். மனிதன் எப்போதுமே வாய்ப்புக்–களைத் தேடியே அலைகிறான். செல்வந்தனாக வேண்டும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். கார் வாங்க வேண்டும். எழிலார்ந்த வீடுகள் கட்ட வேண்டும் என்ற கனவு–களிலேயே வாழ்கிறான். சுருக்கமாகக் கூறினால், ஒரு தனிமனிதனின் விருப்பப் பட்டியல் முடிவற்றது. தன்னுடைய ஆசைகளையும், கனவுகளையும் நிறைவேற்றிக்கொள்ள அவன் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுகிறான்.

உலகாதாய வளங்களைப் பெறுவதற்காக மனிதன் எப்போதும் ஆவலாக இருக்கிறான். அதை அடையும் முயற்சியில், நியாயங்களையும், மரபுகளையும் புறக்கணிக்–கிறான். இந்த உலகத்தின் மீதான பற்றும், அதை அனுபவிக்க வேண்டுமென்ற ஆவலும், மறுமை வாழ்க்கையை அடைவதினின்றும் நம்மை பின்னுக்குத் தள்ளும். வாழ்வதன் நோக்கமே படைத்த இறைவனை வணங்குவதற்காகத்தான் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இது சம்பந்தமான கீழ்க்கண்ட இறை வசனம் நம்மை நெறிப்படுத்த உதவுகிறது.

உங்கள் செல்வங்களும், உங்கள் பிள்ளைகளும் உங்களை நம்மிடத்தில் மிகவும் நெருக்கமாக்கி வைக்கக் கூடியவை அல்ல. ஆயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிந்தவர்களைத் தவிர. அத்தகையவர்களுக்கே அவர்கள் செய்த செயல்களின் கூலி இரு மடங்கு இருக்கிறது. மேலும் அவர்கள் உயர்ந்த மாளிகையில் நிம்மதியோடு இருப்பார்கள். (குர்ஆன் *34:37*)

## லஞ்சம் (கையூட்டு)

பேராசைக்கான காரணங்களை நாம் இதுவரை அலசி ஆராய்ந்துள்ளோம். பொருட்செல்வத்தினைப் பெற வேண்டும் என்ற பேரவா காரணமாகவே, பிறருடையப் பொருளைக் கவர்ந்திடும் முயற்சியில் ஈடுபடுகிறோம். நம்முடைய பேராசையைப் பூர்த்தி செய்திட சட்டத்திற்கு அப்பாற்பட்ட வழிகளில் ஈடுபடுகிறோம். இதன் காரணமாக சமுதாயத்தில் சமத்துவமும் நீதியும் மறுக்கப்படுகின்றன. பொதுவாக இதனை லஞ்சம் (கையூட்டு) என்று குறிப்பிடுகிறோம். இந்த லஞ்சம் என்ற நோய் நம்முடைய சமுதாயத்தில் புரையோடிப் போயுள்ளது. பணம் சேர்ப்பதற்காக தவறான வழிகளை மேற்கொள்வது பற்றி நபிகள் நாயம்(ஸல்) அவர்கள் தங்களுடைய தோழர்கட்கும் பின்பற்றுபவர்கட்கும் எச்சரிக்கை செய்துள்ளார்கள். ஒருமுறை ஒரு வரி வசூல் அதிகாரி, தனது பணியை முடித்து விட்டு நபிகளாரிடம் வந்து 'இது அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய வரிப்பணம். இது எனக்குக் கிடைத்த அன்பளிப்புப் பணம்' என்று கூறினார். சில பொருட்களை வரிப்பணம் என்றும், சில பொருட்களை தனக்குரிய அன்பளிப்புப் பணம் என்றும் அவர் பாகுபடுத்திக் காட்டினார். இதில் ஊழல் இருக்கிறது என நபிகளார் கருதினார்கள். உடனே அவையிலிருந்த தனது தோழர்களிடம் நபிகளார் கூறியதாவது 'இந்த வரிவசூல் அதிகாரியைப் பாருங்கள். இவர் ஒரு பகுதி ஜகாத்'

(பணக்காரர்களிடமிருந்து பெற்ற நிதி) என்றும், இன்னொரு பகுதி தனக்கு அன்பளிப்பாகக் கிடைத்தது என்றும் சொல்கிறார். இவர் தனது வீட்டில் இருந்து கொள்ளட்டும். அப்போது இவருக்கு அன்பளிப்புப் பொருட்கள் வருகின்றதா என்று பார்ப்போம்'

## பயங்கர வாதம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொன்னதாவது:– நற்செயல்களுக்கே இறைவன் கூலி வழங்குகிறான். வன்முறைக்கோ அல்லது வேறு எதற்கும் அவன் கூலி வழங்குவது இல்லை.

நபிகளார் மேலும் சொன்னதாவது....

மறுமை நாள் நெருங்கும் போது கணக்கற்ற கொலைகள் நிகழும் கொல்பவனுக்கு தான் யாரைக் கொல்கிறோம் என்று தெரியாது. கொல்லப்பட்டவனுக்கு தான் எதற்காகக் கொலை–யுண்டோம் என்பது பற்றியோ தன்னைக் கொன்றது யார்? என்பது பற்றியோ தெரியாது. 1400 ஆண்டுகளுக்கு முன்னரே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொன்ன இந்த முன்னறிவிப்புகள் இப்போது நிகழக் காண்கிறோம். தீவிரவாதிகளின் தாக்குதல்–களினாலும் எதிரி நாடுகளின் இராணுவத் தாக்குதல்கள் காரணமாகவும் கட்டுப்பாடுகள், பொருளாதாரத் தடைகள் காரணமாகவும் எண்ணற்ற அப்பாவி மக்கள் கொல்லப் படுகின்றனர். தாங்கள் யாரால் எதற்காகக் கொல்லப்படுகிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. கொல்பவர்கட்கு தங்களின் செயல்களால் பாதிக்கப்படுபவர்கள் பற்றித் தெரியாது. இப்படிப்பட்ட சம்பவங்களில் கொல்பவர்கட்கும், கொல்லப்–படுபவர்கட்கும் எந்த விதமான பகையும் இருக்காது.

## 20

# ஹுனைன்

இஸ்லாமிய சமுதாயத்தை பயமுறுத்துகின்ற இன்னும் பல சக்திகளை சமாளிக்க வேண்டியதிருக்கிறது என்பதை நபிகளார் உணர்ந்தே இருந்தார்கள். அனைத்து இனக் குழுக்களும் நபிகளாரின் மேலாண்மையை அங்கீகரிக்கவில்லை. சிலர் நபிகளாரை அதிகாரத்திலிருந்து வீழ்த்திடத் தக்கநேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். மக்காவிற்குக் கிழக்கே ஹவாஸின் என்ற இனக்குழுவினர் முஸ்லிம்களின் மீது தாக்குதல் தொடுத்திட இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட படைகளைத் திரட்டி வருவதாக தொடர்ந்து வதந்திகள் பரவி வந்தன. நபிகளார், உளவாளிகளை அனுப்பி அந்த வதந்திகள் உண்மையே என்பதை அறிந்து கொண்டார்கள். இந்நிலையில் முஸ்லிம்கள் தங்களை விரைவாகத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியதிருந்தது. மதீனாவிலிருந்து வந்த முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று திரட்டப்பட்டனர். அவர்களுடன் இரண்டாயிரம் குறைஷியர்களும் சேர்ந்து கொண்டனர். (இவர்களில் பலர் சமீபத்தில் தான் இஸ்லாத்தில் இணைந்து கொண்டவர்கள். சுஹைல், ஸப்வான் போன்றோர் இஸ்லாத்தில் இணையாத போதிலும் ஹுனைனில் வைத்து முஸ்லிம் படையுடன் சேர்ந்து கொண்டனர்.)

ஹுனைன் போரின் போது, மிகவும் உக்கிரமான ஹவாஸின் ஸகீஃப் இனக்குழுக்களும் ஒன்று சேர்ந்து கொண்டன. கி.பி 630ல் ஹிஜ்ரி ஒன்பதாவது ஆண்டில், மக்காவிலிருந்து 16கி.மீ தொலைவில் உள்ள ஹுனைன் என்ற இடத்தில் கடும் போர் நடைபெற்றது. நபிகளார் இதுவரை இல்லாத அளவில் பனிரெண்டாயிரம் வீரர்கள் கொண்ட பெரும் படைக்குத் தலைமை தாங்கிச் சென்றார்கள். அபூபக்ர்(ரலி) போன்றோர் முஸ்லிம்

படையின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக் கொண்டு வெற்றி நிச்சயம் என எண்ணினர். ஆனால் நபிகளாருக்கு இந்த நம்பிக்கை மகிழ்ச்சி அளிக்கவில்லை.

ஹவாஸின் படையை தலைமை ஏற்று நடத்தியவர் மிகச் சிறந்த வீரரான அவ்ப் மகன் மாலிக் என்பார். இவருக்கு அரேபிய தீபகற்பத்தில் நல்ல மதிப்பு இருந்தது. இவர் குழந்தைகளையும் தங்களுடன் அழைத்துச் செல்லுமாறு தனது படையினருக்கு ஆணையிட்டார். இது எண்ணிக்கையைக் கூட்டிக் காட்டி எதிரிகளை பீதியடையச் செய்யும் என நம்பினார். மக்காவுக்கு கிழக்கே 16 கி.மீ தொலைவில் உள்ள ஹுனைன் பள்ளத்தாக்கில் தாயிப் நகருக்குச் செல்லும் ரோட்டில் தனது முகாமை அமைத்தார். இரவு நேரத்தில் மலைகளுக்கு இடை யேயுள்ள பள்ளத்தாக்கில் உள்ள ரோட்டின் இரு மருங்கிலும் பெரும்பான்மையான படை வீரர்களை நிறுத்தினார்.

ஹலாஸின் படைவீரர்கள் நின்றது யாருக்கும் தெரியாது. (இந்த ரோட்டைத் தாண்டித்தான் மக்காவிலிருந்து வரும் முஸ்லிம் படை வீரர்கள் செல்ல வேண்டும்) மீதிப்படை வீரர்களை மலை இடுக்குகளின் எதிரில் நிறுத்தி வைத்தார். பள்ளத்தாக்கின் அடியிலிருந்து வரும் முஸ்லிம் வீரர்களை இவர்களால் தெளிவாகப் பார்க்க முடியும். முஸ்லிம்கள் அதிகாலை வெளிச்சத்தில் முன்னேறிக் கொண்டு வரும் போது அவர்களை இரண்டு பக்கங்களிலிருந்தும் தாக்குமாறு குன்றுகளுக்கிடையில் நின்று கொண்டிருந்த தனது படை வீரர்களுக்கு மாலிக் உத்தரவிட்டார். திடீரென்று கிளம்பிய இந்தத் தாக்குதலை காலித்(ரலி) யால் தடுக்க முடியவில்லை. பின்னர் முஸ்லிம் படையினர் அணிவகுத்து முன்னேறிச் சென்று மாலிக் எதிர்பார்க்காத வண்ணம் பெரும் எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டார்கள். உம்மு சுலைம் என்ற பெண்மணியும் தமது கணவருடன் முஸ்லிம்படையில் சேர்ந்து மிகுந்த உறுதியுடன் போரிட்டார். முஸ்லிம் படையின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் எதிரிப்படைகள் பின்வாங்கி ஓடின. முஸ்லிம்படை

அவர்களை விரட்டிச் சென்றது. இறுதியில் மாலிக், பனூஸகீஃப் குலத்தாருடன் தாயிப் நகரில் தஞ்சம் புகுந்தார். மற்றவர்கள் மலைகளில் ஒளிந்து கொண்டனர். எதிரிப்படையில் உயிர்ச்சேதம் மிக அதிகமாக இருந்தது. அவர்கள் எதிர்பாராத வகையில் பெரும் தோல்வியைச் சந்தித்தனர். பின்னர் அருளப்பட்ட இறை வசனங்கள் முஸ்லிம் வீரர்களுக்கு உண்மையான உணர்ச்சிப் பூர்வமான, ஆன்மீக அம்சங்களை நினைவுபடுத்தின.

> (இதற்கு முன்னர்) பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்துள்ளான். (இப்போது) ஹுனைன் (போர் நடைபெற்ற) நாளிலும் (அவனன் உதவி செய்வதை நீங்கள் பார்த்திருக் கிறீர்கள்) அன்று உங்களின் படைப்பெருக்கம் உங்களை இறுமாப்பில் ஆழ்த்தியிருந்தது. ஆயினும் அது உங்களுக்கு எத்தகைய பலனுமளிக்கவில்லை. மேலும் பூமி இவ்வளவு விரிவாயிருந்தும் உங்களைப் பொறுத்து குறுகிப் போய்விட்டது. பின்னர் நீங்கள் புறங்காட்டி ஓடி விட்டீர்கள். பின்னர் அல்லாஹ் தன் தூதர் மீதும், நம்பிக்கை கொண்டோர்மீதும் தனது சாந்தியை இறக்கி அருளினான். (குர்ஆன் *9:25,26*)

## போரில் கிடைத்த பொருட்கள்

போரின் போது கைது செய்யப்பட்ட ஹவாஸின் இனக்குழுவைச் சார்ந்த பெண்களும், குழந்தைகளும் ஒரு பெரிய இடத்தில் வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. நபிகளார் வரும் வரை அவர்கள் அங்கேயே வைக்கப் பட்டிருந்தனர். நபிகளார் வந்து பார்த்தபோது, கைது செய்யப் பட்டவர்கள் அணிந்திருந்த உடைகள் மோசமாக இருப்பதைக் கண்டார்கள். போரில் கைப்பற்றப்பட்ட பொருட்களிலிருந்து பணத்தை எடுத்து சந்தைக்குச் சென்று ஒவ்வொரு கைதிக்கும் ஒரு புதிய ஆடை வாங்கி வருமாறு ஆணையிட்டார்கள். பின்னர் போரில் கைப்பற்றப்பட்ட நாற்பதாயிரம் அவுன்ஸ் வெள்ளி,

இருபத்து நான்காயிரம் ஒட்டகங்கள், நாற்பதாயிரம் ஆடுகள் ஆகியவற்றை பகிர்ந்தளிக்க முடிவு செய்தார்கள். ஆனால் ஆறாயிரம் போர்க் கைதிகளைத் திரும்ப ஒப்படைக்கவில்லை. இவர்களை விடுவிப்பதற்காக ஹவாஸின்கள் நிச்சயம் ஒரு தூதுக் குழுவை அனுப்புவர் என் நபிகளார் எண்ணினார்கள்.

போரில் கைப்பற்றப்பட்ட பொருட்களை நபிகளார் குறைஷியர்களுக்கு குறிப்பாக அபூசுஃப்யான், ஹக்கீம் ஆகியோருக்கு (ஹக்கீம் புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர், கதிஜா(ரலி) அவர்களின் ஒன்று விட்ட சகோதரர்) பங்கிட்டுக் கொடுத்தார்கள். இது அன்ஸாரிகளுக்கு (மதீனா முஸ்லிம்கள்) பெரும் வியப்பை ஏற்படுத்தியது. ஹுனைன் போரின் போது முஸ்லிம் படையில் இணைந்து சண்டையிட்ட ஸப்வான், சுஹைல் ஆகியோர் இஸ்லாத்தில் இணைந்திடத் தயக்கம் காட்டிய போதிலும் நபிகளார் அவர்கட்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். புதிதாக இஸ்லாத்தில் இணைய விரும்புபவர்கட்கு கொடுப்ப–தற்காக போரில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் ஒரு பகுதியை வைத்திருக்குமாறு நபிகளாருக்குக் குர்ஆன் கட்டளை யிட்டிருந்தது.'

> இன்னும் இறை நம்பிக்கையின் பக்கம் மனம் திரும்பாதவர்களுக்காக' (குர்ஆன் 9:60) என்று இறை வசனங்கள் கூறின.

இது மதமாற்றத்தை ஊக்குவிப்பதற்காகச் செய்யப்பட்டது அல்ல. இஸ்லாத்தில் இணைவதற்கு விருப்பம் கொண்ட பிறகும் இணையாமல் தயக்கம் காட்டி வந்தவர்களின் இறை நம்பிக்கையை வலுப்படுத்தவே இந்த வெகுமதிகள் வழங்கப்பட்டன. ஸப்வானும், சுஹைலும் இறை நம்பிக்கையை எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். ஹுனைன் போரின் போது முஸ்லிம்களுடன் இணைந்து போரிட்ட அவர்களுக்கு ஏராளமான பொருட்களை நபிகளார் கொடுத்தார்கள். மக்கா வெற்றியின் போது நபிகளார் காட்டிய மன்னிக்கும் தன்மையும், போரின் போது அவர்கள் காட்டிய

தைரியமும், உறுதியும் போர் முடிந்த பிறகு அவர்கள் காட்டிய பெருந்தன்மையும், நபிகளார் உண்மையிலேயே ஒரு இறை தூதர் என்று குறைஷியர்களை நம்பச் செய்தது. அபூசுஃப்–யானுக்கு எத்தகைய சமூக அங்கீகாரமும், மரியாதையும் இருந்தது என்பதை நபிகளார் அறிந்திருந்தார்கள். எனவே அவருக்கு உரிய அங்கீகாரத்தை அளித்தார்கள்.

## தாழ்ந்த கரத்தை விட உயர்ந்த கரம் மேலானது

போரில் கைப்பற்றப்பட்ட பொருட்களிலிருந்து தனக்குக் கணிசமான பங்கு கிடைத்தது குறித்து ஹக்கீம் பெருமைப்பட்டுக்–கொண்டார். வேறு எதை விடவும், பொருட்கள் மூலம் லாபம் கிடைத்தது பற்றி அவர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். செல்வம் அடைந்திருப்பது குறித்து அதிகம் பெருமை கொள்ளத் தேவையில்லை என்பதை ஹக்கீமிற்கு உணர்த்திய நபிகளார், வெகுமதிகளை விடவும் ஆன்மீக அறிவு பெறுதலே முக்கியமானது என்பதை அவருக்கு புரிய வைக்கும் விதமாக தாழ்ந்த கரத்தை விட உயர்ந்திருக்கும் கரமே மேலானது' என்று குறிப்பிட்டார்கள்.

தாங்கள் பெற்றிருக்கும் செல்வத்தைக் கொண்டு திருப்தி யடைந்து ஏழைகள் பால் கவனம் செலுத்தி தங்களிடமுள்ளதை வழங்கி வாழ்பவர்கள் யாசிக்கின்ற அல்லது கேட்டுப் பெற்றுக் கொள்பவர்களைக்காட்டிலும் ஆன்மீக ரீதியில் உயர்ந்த அந்தஸ்து உடையவர்கள் என்பதை நபிகளார் ஹக்கீமிற்கு நினைவுபடுத்தினார்கள். கிடைத்த பொருட்களில் சிலவற்றை அவரது குடும்பத்தினருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் வழங்குமாறு நபிகளார் அவருக்கு ஆலோசனை கூறினார்கள். மேலும் நபிகளார் ஹக்கீமிடம் 'கண்ணியமான முறையில் பெற்றுக் கொள்ளுமாறும், பணிவான முறையில் வழங்குமாறும்' புத்திமதி கூறினார்கள்.

## விசுவாசத்தின் அறிகுறிகள்

போரில் கைப்பற்றப்பட்ட அனைத்துப் பொருட் களையுமே மக்காவாசிகளுக்குப் பகிர்ந்தளித்த நபிகளாரின் இச் செயலை அன்ஸாரிகள் (மதீனா முஸ்லிம்கள்) வியப்புடன் பார்த்தனர். மிகவும் இக்கட்டான கால கட்டங்களில் பெரும் உதவிகள் செய்திட்ட தங்களைப் புறக்கணித்து விட்டு நபிகளார் மக்காவிலுள்ள தனது உறவினர்களுக்கு அதிகச் சலுகை காட்டு வதாக மதீனாவாசிகள் சிலர் கருதி தங்களது ஏமாற்றத்தையும், ஏற்பின்மையையும் வெளிப்படுத்தினர். அன்ஸாரிகள் சார்பாக இது பற்றி புகார் செய்ய வந்த ஸைது(ரலி) அவர்களிடம் நபிகளார், அன்ஸாரிகள் அனைவரையும் அழைத்து வருமாறும், இதுபற்றித் தான் அவர்களுடன் பேச விருப்பதாகவும் தெரிவித்தார்கள். தனக்கு உதவி செய்ததற்காகவும், மிகவும் சோதனையான கால கட்டத்தில் தனக்கு அடைக்கலம் கொடுத்த தற்காகவும் தான் பெரிதும் நன்றிக் கடன்பட்டிருப்பதாக அவர்களிடம் நபிகளார் கூறினார்கள்.

தான் எதையும் மறந்து விடவில்லை என்றும், போரில் கைப்பற்றிய பொருட்களைப் பகிர்ந்தளித்த முறை பற்றி வருத்தமடையத் தேவையில்லையென்றும், சிலரின் இறை நம்பிக்கையை வலுப்படுத்துவதற்காகவே தாம் அவ்வாறு செய்ததாகவும், வேறு நோக்கமில்லை யென்றும் அவர்களிடம் நபிகளார் கூறினார்கள். அடைந்த பொருட்களின் எண்ணிக் கையைக் கொண்டு தனது அன்பை எடை போட வேண்டா மென்றும் நபிகளார் அவர்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். உலகப் பொருட்களின் மீதான உங்களது பிரியம் இறைவனின் மீதான உண்மையான அன்பை மறக்கச் செய்து–விடக் கூடாது என்றும் நபிகளார் கூறினார்கள்.

குறைஷியர்கட்கு ஆடுகளும், ஒட்டகங்களும் கிடைத்தன. ஆனால் அன்ஸாரிகளுக்கு நபிகளார் தங்களையே வழங்கி–னார்கள், மதீனாவிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட முடிவு செய்த

நபிகளார் அன்ஸாரிகளுடன் திரும்பிச் சென்றார்கள். எல்லோரும் ஒரு பாதையில் செல்ல முடிவு செய்து, அன்ஸாரிகள் வேறொரு பாதையில் சென்றால், நான் அன்ஸாரிகளின் பாதையிலேயே செல்வேன்' என நபிகளார் கூறினார்கள். இந்த உதவியாளர்கள் மீதும் (அன்ஸாரிகள்) அவர்களது மகன்கள், மகன்களின் மகன்கள் மீதும் தன்னுடைய கருணை மழையை இறைவன் பொழியச் செய்வானாக! என்று பிரார்த்தித்தார்கள். இது கேட்டு அன்ஸாரிகள் உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டு அழுதனர். நபிகளாரின் செயற்பாடுகள் பற்றியும், விசுவாசத்திற்கான அத்தாட்சிகள் குறித்தும் எவ்வளவு தூரம் தவறாக எடைபோட்டு விட்டோம் என்று அவர்கள் வருந்தினர். நபிகளார் தங்களுடன் இருப்பதே அன்பின் அடையாளமாகும் என அவர்கள் கருதினர். அவர்கள் பங்கிட்டு வழங்கிய பொருட்கள் சில மனிதர்கள் உலகின் பொய்த் தோற்றங்களின் பால் இன்னும் அதிக ஆர்வம் கொண்டு வாழ்கிறார்கள் என்பதை உணர்த்திடும் சான்றுகளாக அமைந்திருந்தன.

# முன்னறிவிப்புகள்

மறுமை நாளைப் பற்றி சரியாக யூகித்துச் சொல்வது சாத்தியமற்றது. இதனை அல்லாஹ் ஒருவனே அறிவான். எனினும் சிந்திக்கும் மக்கள் இது பற்றி ஓரளவேனும் யூகிக்க முடியும். விஞ்ஞானிகள் தங்களது ஆய்வின் மூலமும், கணக்கின் மூலமும் மந்திரவாதிகளும் ஆன்மீக வாதிகளும் தங்களுடைய ஞான அறிவு மூலமாகவும் யூகிக்க முடியும். ஆனால் சாமானிய மக்கள்? இறைவனின் இந்த வாக்கு நடந்தே தீரும் என்பதை உணர்ந்தே இருக்கிறார்கள். எனினும் மக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு இறைவனின் இறுதித் தூதரான முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கியாமத் நாள் நெருங்கும் போது உலகில் ஏற்படும் சம்பவங்களையும், நிகழ்வுகளையும், அறிகுறிகளையும் மிகத் தெளிவாக அறிவித்துச் சென்றுள்ளார்கள். இவை பொதுவான கணிப்புகளே. இதற்கு விஞ்ஞானிகளின் மூளையோ அல்லது ஆன்மீகவாதிகளின் கண்களோ தேவை இல்லை. நாம் அனைவரும் ஒரு சேர இதனைக் காணலாம். முக்கியமான விஷயம் என்ன வென்றால், இதிலிருந்து நாம் பாடம் பெற்றுக் கொள்ளப் போகிறோமா அல்லது இறுதி வரை நமது கண்களை மூடிக் கொண்டிருக்கப் போகிறோமா? என்பது தான் .

மறுமை நாள் நெருங்கும் போது தோன்றும் சில நிகழ்வுகள் பற்றி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது ஹதீஸ்கள் மூலம் வெளிப்படுத்திய சில முன்னறிவிப்புகளை கீழே கொடுத்துள்ளோம். இப்போது உலகில் நடைபெற்று வரும் சம்பவங்களை உற்று நோக்கிக் கவனித்தால் 'மறுமை நாள்' நெருங்கி விட்டது என்றே கருத முடியும்.

பெருமானாரின் நெருங்கிய சகாபாக்களான இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களும், அபூ ஹுரைரா(ரலி) அவர்களும் மறுமை நாள் பற்றி நபிகளார் கூறியதாகக் குறிப்பிடுவதாவது.

- மனித ரத்தத்திற்கு மதிப்பு இருக்காது.
- ஆக்ரமிப்பாளர்களும், சட்டத்தை மீறுபவர்களும் தலைவர்களாக உருவெடுப்பார்கள்.
- ஒரு குலத்தின் மிகக் கொடூரமானவன் அந்தக் குலத்தின் தலைவனாவான்.
- ஒரு சமுதாயத்தில் எதற்கும் உதவாதவன் அதன் தலைவனாவான்.
- பாவங்கள் மிக எளிதாக எடுத்துக் கொள்ளப்படும்.
- சிற்றின்பம் – மிருகங்களைப் போன்ற பாலுணர்வு மேலோங்கும்.
- ஆண்கள் ஆண்களுடனும், பெண்கள் பெண்களுடனும் தகாத உறவு கொள்வார்கள்.
- பாட்டுப்பாடும் இளம் பெண்கள் தோன்றுவர் உணர்ச்சியைத் தூண்டும் இசைக் கருவிகளும் (பாப் மியூசிக் போல) தோன்றும்
- பாட்டுப் பாடும் இளம் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.
- மது குடிக்கும் பழக்கம் அதிகமாகும்
- வட்டி வாங்குவது அதிகரிக்கும்
- பொய் சொல்வது விரும்பப்படும்
- மெய்க்கும், பொய்க்கும் வேறுபாடு காண இயலாத நிலை தோன்றும்
- பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள்.
- நண்பர்களை மோசமாக நடத்துவார்கள்.
- இறை வணக்கம் புறக்கணிக்கப்படும்
- சமயம் தவிர்த்து பிறவற்றிற்கே கல்வி பயன்படும்

- ·நல்ல மழைப்பொழிவு இராது. காலம் தவறி மழை பெய்யும். நில நடுக்கங்கள் அதிகரிக்கும்
- பெரிய கட்டிடங்களைக் கட்டுவதில் மக்கள் ஒருவருக்கொருவர் போட்டி போடுவார்கள்.
- தீங்கு செய்வான்' என்ற பயம் காரணமாகவே ஒரு மனிதன் மதிக்கப்படுவான்.

பயங்கரக் காற்று, பூகம்பம், உருவ மாற்றம், குணமாற்றம், கொட்டும் மழை என பல அறிகுறிகள் கியாமத் நாளுக்கு முன்னர் தோன்றுமென்றும் நபிகள் நாயம்(ஸல்) அவர்கள் எச்சரித்–துள்ளார்கள். ஒரு மணிமாலையின் கயிறு அறுந்து போனால் அதிலுள்ள மணிகள் எப்படி உதிருமோ அப்படி உலகம் சிதறுண்டு போகும் எனவும் எச்சரித்துள்ளார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொன்னதாக அனஸ்(ரலி) அவர்கள் அறிவிப்பதாவது....

மறுமை நாள் நெருங்கும் போது அறிவு மறையும் உலகெங்கும் அறியாமை மேலோங்கும். பின்னர் பெரும் அளவில் ஒழுங்கீனம் ஏற்படும். மது அதிக அளவில் பயன்படுத்தப்படும்'.

இன்றைய கால கட்டத்தில் மேற்கண்ட சில முன்னறி–விப்புகள் நிகழக் காண்கிறோம். உலகளாவிய அளவில் மதுப்பழக்கமும், வரைமுறையற்ற பாலுறவு நடவடிக்கைகளும் அதிகரித்தே வருகின்றன.

அப்துல்லாபின் ஸலாம்(ரலி) அவர்கள், கியாமத் நாளின் கடைசி நேரத்தில் தோன்றும் முதல் அறிகுறி என்ன என்று கேட்டபோது, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாவது...

நெருப்பு தோன்றும். அது மக்களை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி விரட்டும். இதுவே கடைசி நேரத்தில் தோன்றும் முதல் அறிகுறியாகும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு பற்றி இருபதாம் நூற்றாண்டின் சீர்திருத்தவாதியும், பத்திரிகை–

யாளரும், சமூக, அரசியல் அறிஞரும் இராஜ தந்திரியுமான ஆஸ்திரேலியாவைச் சார்ந்த லீபோல்டு வெய்ஸ் (*Leo Pold Weiss*) என்ற யூதர் (இவர் இஸ்லாத்தில் இணைந்து தனது பெயரை முஹம்மது ஆஸாத் என்று மாற்றிக் கொண்டார்) பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

கிழக்கு நாடுகளின் கலாச்சாரத்தை அழித்துவிட்டு மேற்கத்தியக் கலாச்சாரத்தை காப்பியடிக்க மக்களைத் தூண்டும் ஒரு சமுதாயப் பேரழிவு நிகழ்ந்து கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. இது ஒரு நெருப்புப் போல பரவும். கிழக்கு நாடுகளில் வசிக்கும் மக்களின் கலாச்சாரத்தை உள் வாங்கும் மேற்கத்தியர்கள் பின்னர் அதனை மடியச் செய்வார்கள் தற்போதைய கலாச்சாரத்துடன் தொடர்பற்ற ஒரு முடிந்து போன வரலாறாக அது மாறும்.

கியாமத் நாள் நெருங்கும் போது எதிர்பாராத இறப்புகள் திடீர் திடீர் என்று ஏற்படும் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொன்னார்கள். திருக்குர்ஆனிலும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களாலும் 1500 ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்டுள்ள இந்த அறிகுறிகளில் சில தற்போது நிகழ்ந்து வருவதை நாம் பார்த்து வருகிறோம். இப்போதுள்ள மிகுந்த தொழில் நுட்பமும் பரபரப்பும் கொண்ட நாகரீகம், தீவிரவாதம், பிரிவினைவாதம், அமைதியின்மை, கொலைகள், விபச்சாரம், குடிப்பழக்கம் இவை அனைத்தும் எந்த நேரத்திலும் உலகை அழிவிற்கு இட்டுச் செல்லும் என்பதே உண்மை. இதன் பொருள் என்ன? கடைசி நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்த்தும் எச்சரிக்கைகளே இவை. முடிவு நிச்சயம். இந்த ஆபத்தை உணர்ந்து, மறுமை நாளின் சோதனையிலிருந்து பாடம் பெறுபவர் யார்? நிகழவிருக்கும் சம்பவங்களை நாம் தடுக்க முடியாது. ஆனால் நம்மை மாற்றிக் கொள்ள முடியும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொன்னார்கள். 'எண்ணங்களின் அடிப்படையிலேயே செயல்கள் தீர்மானிக்கப்படும்.' குறைந்தபட்சம் நாம் நேரிய எண்ணங்களைக் கொண்டிருப்போமாக!

## நபிகளாரின் பொன் மொழிகள்

காலித் பின் வலீத்(ரலி) கீழ்க்கண்ட நபிமொழியினை அறிவிக்கிறார்:–

பாலைவனத்தில் வசிக்கும் கிராமப்புற மனிதர் (பதூயின்) ஒருவர் ஒரு நாள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைச் சந்தித்து 'ஓ இறைவனின் தூதரே! இவ்வுலக வாழ்க்கை பற்றியும் மறு உலக வாழ்க்கை பற்றியும் நான் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்க வந்துள்ளேன்' என்றார். அவர் கேட்ட கேள்விகளும் அதற்கு நபிகளார் அளித்த பதில்களும் பின் வருமாறு.....

பதூயின் : நான் மனிதர்களுள் மிகவும் கற்றுணர்ந்த மனிதனாக இருக்க விரும்புகிறேன்

நபிகளார் : அல்லாஹ்வுக்கு அஞ்சி நட. நீ மனிதர்களுள் மிகவும் கற்றுணர்ந்த மனிதனாக ஆவாய்.

பதூயின் : இந்த உலகிலுள்ள மனிதர்களுள் மிகுந்த செல்வந்தனாக இருக்க நான் விரும்புகிறேன்.

நபிகளார் : போதுமென்ற மனத்துடன் திருப்தியாக இரு. நீதான் இந்த உலகிலுள்ள மனிதர்களுள் மிகப் பெரிய செல்வந்தன்.

பதூயின் : நான் மனிதர்களுள் சிறந்த நீதிமானாக இருக்க விரும்புகிறேன்.

நபிகளார் : நீ எதனை விரும்புகிறாயோ அதனையே மற்றவர்கட்கும் கிடைத்திட விரும்பிடு. அதுவே நீ சிறந்த நீதிமானாக ஆகும் வழியாகும்.

பதூயின் : நான் மனிதர்களுள் மிக நல்ல மனிதனாக இருக்க விரும்புகிறேன்.

நபிகளார் : மற்றவர்கட்கு நன்மை செய். நீ நல்ல மனிதனாக இருப்பாய்

பதுாயின் : நான் மனிதர்களுள் மிக்க வலிமை வாய்ந்தவனாக இருக்க விரும்புகிறேன்.

நபிகளார் : அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வை. நீ மனிதர்களுள் மிக்க வலிமையுடையவனாக இருப்பாய்

பதுாயின் : நான் இறைவனால் மிகவும் விரும்பப் படுபவனாக இருக்க விரும்புகிறேன்.

நபிகளார் : அல்லாஹ்வை எப்போதும் அதிகமாகப் புகழ்ந்து கொண்டிரு. நீ அல்லாஹ்வால் மிகவும் விரும்பப்படுவாய்.

பதுாயின் : நான் எனது நம்பிக்கையை முழுமையாக்க விரும்புகிறேன்.

நபிகளார் : உன்னிடம் நற்பண்புகள் இருந்தால் உனது நம்பிக்கை முழுமையடையும்.

பதுாயின் : நற்செயல்கள் புரிபவர்களுள் ஒருவராக இருக்க நான் விரும்புகிறேன்.

நபிகளார் : இறைவனைப் பார்த்தால் அவனை நீ வணங்கு. நீ பார்க்கவில்லையென்றால் அவன் உன்னைப் பார்க்கிறான். இந்த முறையில் நீ நற்செயல் புரிபவர்களுடன் இருக்க முடியும்.

பதுாயின் : நான் அல்லாஹ்வுக்கு கீழ்ப் படிந்திருக்க விரும்புகிறேன்.

நபிகளார் : அல்லாஹ்வின் கட்டளைகளை நீ ஏற்று நடந்தால் அதுவே அவனுக்குக் கீழ்படிதலாகும்.

பதுாயின் : நான் என்னுடைய தேவைகளை அதிகரிக்க விரும்புகிறேன்.

நபிகளார் : உன்னைத் தூய்மையாக வைத்துக் கொள். அல்லாஹ் உனது தேவைகளை அதிகமாக்குவான்.

பதூயின் : நான் அல்லாஹ்வாலும், அவனுடைய தூதராலும் அன்பு செலுத்தப்படுவதை விரும்புகிறேன்.

நபிகளார் : அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நேசித்தால் நீ அவர்களால் நேசிக்கப்படுபவர்களில் ஒருவனாக இருப்பாய்.

பதூயின் : இறுதித் தீர்ப்பு நாளின் போது அல்லாஹ்வின் கோபப் பார்வையிலிருந்து நான் பாதுகாப்பாக இருக்க விரும்புகிறேன்.

நபிகளார் : நீ உன்னுடைய சக படைப்பினங்களுடன் கோபம் கொள்ளாதிருந்தால், இறுதித் தீர்ப்பு நாளின் போது நீ அல்லாஹ்வின் கோபப் பார்வை யிலிருந்து தப்பிக்க முடியும்.

பதூயின் : இறுதித் தீர்ப்பு நாளின் போது அல்லாஹ் என்னை அவமானப் படுத்தாமலிருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

நபிகளார் : நீ உன் தூய்மையை (கற்பை) பாதுகாத்துக் கொண்டால் இறுதித் தீர்ப்பு நாளின் போது அல்லாஹ் உன்னை அவமானப் படுத்த மாட்டான்.

பதூயின் : இறுதித் தீர்ப்பு நாளின் போது அல்லாஹ் எனக்குப் பாதுகாப்புக் கவசம் வழங்க வேண்டுமென விரும்புகிறேன்.

நபிகளார் : உன்னுடைய சக மனிதர்களின் குறைகளை நீ வெளிப்படுத்தாமலிருந்தால், இறுதித் தீர்ப்பு நாளின் போது அல்லாஹ் உனக்குப் பாதுகாப்புக் கவசம் வழங்குவான்.

பதூயின் : அல்லாஹ்வின் பார்வையில் நற்செயல்கள் எவை?

நபிகளார் : இனிய பண்புகள், அடக்கம், பொறுமை

பதூயின் : அல்லாஹ்வின் பார்வையில் தீயசெயல்கள் எவை?

நபிகளார் : கடுங்கோபம், பேராசை.

## 21

# மதீனா நகரத்தின் மீது நபிகளார் கொண்டிருந்த அன்பு

மக்காவில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்த நபிகளார், மதீனாவுக்குத் திரும்பிச் செல்ல முடிவு செய்தார்கள். அதற்கு முன்னர் உம்ரா செய்து கொண்டார்கள். மதீனாவுக்கு அடைக்கலம் தேடி வந்த நபிகளாருக்கு, அந்நகரமே சொந்த ஊர் போலாகி விட்டது. இத்தனைக்கும் மதீனாவின் கலாச்சாரம், மக்களின் பழக்க வழக்கங்கள் முற்றிலும் மக்காவுடன் ஒப்பிடுகையில் மாறுபட்டிருந்தன. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மக்காவில் வாழ்ந்து வந்த நபிகளார் சூழ்நிலைகள் காரணமாக அந்நகரத்தை விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. மதீனாவில் தங்கிவிட்ட அவர்கள் அங்குள்ள சூழ்நிலைகள், பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டு. அங்குள்ள மக்களில் ஒருவராக மாறி விட்டார்கள். மதீனாவிலுள்ள பல்வேறு பிரிவு மக்களையும் அவர்கள் மிகவும் நேசித்தார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல, முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்தது. நபிகளார் இஸ்லாத்தின் போதனைகளை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டியதிருந்தது. மிகவும் விசுவாசமான, தகுதியுள்ள தோழர்கள் சிலரிடம் நபிகளார் இப்பணியை ஒப்படைத்திருந்தார்கள். அங்கும் இங்குமாக சில எதிர்ப்புகள் இருந்தன. நபிகளார் சிறு சிறு தொண்டர் குழுக்களை அங்கெல்லாம் அனுப்பி நிலைமையைச் சரிசெய்தார்கள். எனினும், மதீனாவின் மேலாண்மையை ஏற்க மறுத்த இனக் குழுவினரிடம் சண்டையிட்டு அவர்களை வழிக்குக் கொண்டு வர வேண்டிய திருந்தது.

## இதயங்களின் இரகசியம்

இஸ்லாமிய அரசின் கட்டுப்பாட்டில் இருந்த ஃபதக் பாலைவனச் சோலையில் பணியாற்றிக் கொண்டிருந்த யூத விவசாயிகளை பானு முர்ரா என்ற வடக்குப் பகுதியிலுள்ள பதூயின் இனக் குழுவினர் அடிக்கடி தாக்கி வந்தனர். எனவே அவர்கட்கு எதிராக நபிகளார் படை ஒன்றை அனுப்பி வைத்தார்கள். ஆனால் முஸ்லிம் படையினர் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது. மோதலில் 30 பேர் கொல்லப்பட்டனர். எனவே நபிகளார் 200 பேர்கள் கொண்ட இன்னொரு படையை அனுப்பிவைத்தார்கள். இதில் நபிகளார் தனது வளர்ப்பு மகனாகக் கருதிய ஸைது(ரலி) அவர்களின் மகனான 17 வயதே நிரம்பிய உஸாமாவும் இருந்தார். போர் கடுமையாக இருந்தது.

பல்வேறு இனக் குழுக்களும் ஒன்று சேர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராகத் தாக்குதல்கள் தொடுத்து, ஃபதக் சோலையை கைப்பற்ற முயன்றனர். இருந்த போதிலும் நிலைமை முஸ்லிம்களுக்குச் சாதகமாகத் திரும்பியது. பனூமுர்ரா குழுவினர் உஸாமாவை 'சிறுவன்' என்று கேலி பேசினர். இதனைப் பொறுக்க இயலாத உஸாமா, தன்னைக் கேலி செய்தவனுடன் சண்டையிட்டுத் தக்க பாடம் புகட்ட முடிவு செய்தார். வெற்றி முஸ்லிம்கள் பக்கம் திரும்பியது. தாக்குதலை எதிர் கொள்ள இயலாமல் புதூயின் படையினர் தப்பி ஓடினர். கோபத்தில் இருந்த உஸாமா, படைத் தலைவரின் கட்டளையையும் மீறி, தன்னைக் கேலி செய்தவரைத் துரத்திச் சென்று பிடித்து அவரைத் தாக்கினார். அவர் 'அல்லாஹ்வைத் தவிர இறைவன் வேறு யாருமில்லை (லாயிலாஹா இல்லல்லாஹு) என்று சாட்சி பகர்கிறேன் என்று கூறிய பின்னரும் உஸாமா அவரைக் கொன்றார். பின்னர் உஸாமா திரும்பி வந்து நடந்த விஷயங்களைக் கூறியதும், படைத் தலைவரும், மற்றவர்களும் அவரின் நடத்தையை அறிந்து அதிர்ச்சியடைந்தனர். உஸாமாவும் தனது தவறை உணர்ந்து கொண்டார்.

மதீனாவிற்குத் திரும்பி வந்ததும், உஸாமா(ரலி) நபிகளாரைச் சந்தித்தார். வெற்றி பெற்றதற்காக அவருக்குத் தனது அன்பான வாழ்த்துக்களை நபிகளார் தெரிவித்தார்கள். எனினும் அவர் எதிரியைத் துரத்திச் சென்று கொன்ற செய்தியை அறிந்த நபிகளார் பெரிதும் கோபமுற்று அவரிடம் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை என்று அவர் கூறிய பின்னரும், அவரைக் கொன்றீர்களா? என வினவினார்கள். அதற்கு உஸாமா கொல்லப்படுவதிலிருந்து தப்பிக்கவே அவர் இவ்வாறு கூறினார்' எனப் பதிலளித்ததும் நபிகளார் கோபத்துடன், 'அவர் பொய் சொல்கிறாரா அல்லது உண்மை பேசுகிறாரா என்று நீங்கள் அவரது இதயத்தைத் திறந்து பார்த்தீர்களா?' என்று கேட்டார்கள். இது கேட்டு தன்னுடைய தவறு மன்னிக்கப்படாது என உஸாமா பயந்தே போய் விட்டார். எனினும் நபிகளார் அவரை மன்னித்து, போராயினும் சரி, சமாதான காலமாயினும் சரி, மனிதர்களுடனும் அவர்களின் இதய இரகசியங்களைப் பொறுத்த வரையிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென அவருக்குப் புத்திமதி கூறினார்கள்.

அந்த பதூயின் தனது விசுவாசத்தை வெளிப்படுத்திய பிறகு உஸாமா அவரைக் கொன்றிருக்கக் கூடாது. அவரது விசுவாசம் உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவர் தண்டிக்கப்படக் கூடாது. உண்மையில்லை என்றால் அவனது வார்த்தைகள் சமாதானத்தையும், மன்னிப்பையும் வேண்டிச் சொல்லப்பட்ட வார்த்தைகளாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கீழ்க்கண்ட இறை வசனங்கள், இது போன்ற சமயங்களில் முஸ்லிம்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பதை விளக்குகிறது.

> ‘இறை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் வழியில் (ஜிகாத் செய்யப்) புறப்படுவீர்களாயின் (பகைவனையும் நண்பனையும்) தெளிவாகப் பிரித்தறிந்து கொள்ளுங்கள். மேலும்

> உங்களுக்கு ஸலாம் (சாந்தி உண்டாகட்டும் என்று) சொன்னவரைப் பார்த்து 'நீ இறை நம்பிக்கை கொண்டவன் அல்லன்' என்று கூறாதீர்கள். நீங்கள் இவ்வுலக வாழ்க்கைக்குரிய பொருள்களைத் தான் தேடுகிறீர்கள் என்றால் அல்லாஹ்விடம் ஏராளமான செல்வங்கள் உள்ளன. இதற்கு முன்பு நீங்களும் இதே நிலையில் தான் இருந்தீர்கள். பிறகு அல்லாஹ் உங்களுக்குப் பேருதவி புரிந்தான். எனவே நீங்கள் தெளிவாகப் புரிந்து செயல்படுங்கள். நீங்கள் செய்கின்றவற்றை அல்லாஹ் திண்ணமாகத் தெரிந்திருக்கிறான். (குர்ஆன் *4:94*)

தனக்கு மரணம் நிச்சயம் என்பதை அறிந்து கொண்ட அந்த பதூயின் சமாதானத்திற்காக வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் உஸாமா தனது கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் (அவர் கேலி செய்யப்பட்டதால்) தனது பழைய இனக்குழு முறைக்குத் திரும்பி விட்டார். இஸ்லாமியப் போதனைகள் அவரைப் பக்குவப் படுத்தவில்லை என்பதையே இச்சம்பவம் காட்டியது. எதிரி தனது விசுவாசத்தை வெளிப்படுத்திய பின்னரும், அவர் மீது சந்தேகம் கொண்டு அவரைக் கொன்றது ஏற்புடைய செயல் அல்ல. இனிமேல் இது போல் நடந்து கொள்ள மாட்டேன் என்று உஸாமா உறுதி அளித்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இந்த உஸாமாவிடம் தான் போரின் போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றிய விரிவான பரிந்துரைகள் கொண்ட குறிப்பினை ஒப்படைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மனித மனங்களில் என்ன உள்ளது என்பதை யாரும் அறிய இயலாது. இது மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாகும். தனி நபர்களின் நோக்கமும் நேர்மையும் சந்தேகத்திற்கு உள்ளான போது, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை நாம் இந்த நிகழ்ச்சியிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. நபிகளாரைச்

சுற்றி பல கபட வேடதாரிகள் இருந்தனர். ஆனால் அவர்கள் மீது நபிகளார் குறிப்பிடத்தக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. சில நேரங்களில் எச்சரிக்கையாக இருந்தார்கள். சில நேரங்களில் விழிப்பாக இருந்தார்கள். ஆனால் இறுதி முடிவு எடுப்பதைத் தவிர்த்தார்கள்.

## தபூக்

வடக்கிலிருந்து வந்த செய்தி பயமுறுத்தக் கூடியதாக இருந்தது. ஹெராக்கிளிஸின் பைஸாண்டியப் பேரரசின் (ரோமப் பேரரசு) படைகள், அவருக்கு ஆதரவான அரபுப் படைகளுடன் இணைந்து நபிகளார் தோற்றுவித்த புதிய அரேபிய சாம்ராஜ் யத்திற்கு எதிராக அணி திரண்டிருப்பதாக தகவல்கள் கிடைத்தன. இந்த விஷயத்தில் உடனடி நடவடிக்கை தேவைப்பட்டது. ஆபத்தை முற்றிலும் உணர்ந்திருந்த நபிகளார் தங்களுடைய தோழர்கள் அனைவர்கட்கும் இது பற்றி தகவல் தெரிவித்தார்கள். எதிரிப் படையினரின் முன் கூட்டிய தாக்குதலை எதிர்பார்த்து முற்றிலும் ஒரு தடுப்பு நடவடிக்கையாக வடக்கே நோக்கிப் படையை நடத்தி எதிரிகள் பகுதியிலேயே அவர்களைச் சந்திக்க வேண்டுமென நபிகளார் திட்டமிட்டார்கள். தட்ப வெப்ப நிலை அப்போது சாதகமாக இல்லை. வடக்குப் பகுதியை அடையும் வரை படையினர் கடும் வெயிலை சந்திக்க நேர்ந்தது. படைச் செலவிற்கு தங்களால் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு பங்களிப்புச் செய்திடுமாறு நபிகளார் தோழர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

உமர்(ரலி), அபூபக்கர்(ரலி), உஸ்மான் (ரலி) என அனைவரும் நபிகளாருக்கு உறுதுணையாக இருப்போம் என வாக்குறுதி அளித்தனர். அப்பகுதியிலிருந்த அனைத்து குதிரைகளும், ஒட்டகங்களும் கொண்டு வரப்பட்டன. ஆனால் அவை, வீரர்களுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்குப் போதுமானதாக இல்லை. எனவே நபிகளார், படையினரின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியதாயிற்று, போரில் கலந்து

கொள்ள வாய்ப்பு மறுக்கப்பட்ட சிலர் வாய்விட்டுக் கதறி அழுதனர். ஏனெனில் அவர்கள் இப்போரின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர். இந்தப் போரில் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலமே அடங்கியிருந்தது.

கி.பி.630ல் ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டில், முஸ்லிம்படை சிரியாவுக்குச் செல்லும் வழியில் மதீனாவிலிருந்து 500 கி.மீ தொலைவிலுள்ள குன்றுப் பகுதியான தபூக்கை நோக்கிப் பயணமானது. நபிகளாரின் தலைமையில் 30,000 போர் வீரர்கள் ரோம சாம்ராஜ்யத்திற்கு எதிராக அணிவகுத்துச் சென்றனர். அரேபிய தீபகற்பம் இதுவரை பார்த்திராத பெரும் படையாக அது திகழ்ந்தது. ரோமர்கள், சுமார்1லட்சம் பேர்கள் கொண்ட வலுவான ஒரு படையைத் திரட்டி வைத்திருந்தனர். ஒரு அந்நிய ஆட்சிக்கு எதிராக முஸ்லிம்கள் நடத்திய முதல் போர் இது தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால் முஸ்லிம்களின் படை மிகச் சிறியது. இருந்த போதிலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் மன உறுதியை நன்கு அறிந்திருந்த எதிரிகள் போர்க்களத்தில் அவர்களைச் சந்திக்க அஞ்சவே செய்தனர்.

நபிகளாரின் இந்த துணிச்சலும், உறுதிப்பாடும் அண்டை நாடுகளுடன் அரசியல் மற்றும் நட்பு ரீதியான ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் அரபு நாட்டிலிருந்த இனக் குழுவினரையும், இஸ்லாத்தின் பிற எதிரிகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரத் துணை புரிந்தது. இந்தப் போர் நடவடிக்கை சலிப்பூட்டுவதாக அமைந்திருந்த போதிலும் நல்ல பலன்களை அளித்தது. நபிகளாரின் வல்லமையையும், படைதிரட்டும் ஆற்றலையும் அரபு உலகம் இதன் மூலம் தெரிந்து கொண்டது. அந்த அளவுக்கு முஸ்லிம் வீரர்கள் சிறந்த முறையில் போரிட்டனர். இதன் காரணமாக நபிகளாரின் கௌரவம் பெருமளவு உயர்ந்தது. ஏமன் மற்றும் பல தொலை தூரப் பகுதிகளைச் சார்ந்த பல இனக்குழுவினர் நபிகளாரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்று இஸ்லாத்தில் இணைந்தனர்.

தபூக் போருக்குப் பிறகு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கிறிஸ்துவ மற்றும் யூத இனக்குழுக்களுடன் உடன்பாடு செய்து கொண்டார்கள். அதன்படி அவர்கள் தங்களது சமயங்களைப் பின்பற்றி நடக்கலாம் என்றும், தாக்கப்படுவதிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்காக அவர்கள் ஜிஸ்யா வரி செலுத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. ஜிஸ்யா வரி என்பது இனக்குழு மக்கள் செலுத்திய இராணுவ வரியே ஆகும். முஸ்லிம்களின் படையில் பங்கு பெறாத அவர்கள் இந்த வரியைச் செலுத்தி அதற்குப் பதிலாக முஸ்லிம்களிடமிருந்து பாதுகாப்புப் பெற்றனர்.

பின்னர், நபிகளார் காலித்(ரலி) அவர்களை அனுப்பி வடக்கிலுள்ள இனக்குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தி இராக் மற்றும் சிரியாவுக்குச் செல்லும் வழியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு ஆணையிட்டார்கள். இந்த நடவடிக்கைகள் எல்லாம் வெற்றிகரமாக முடிந்தன. நபிகளார் முஸ்லிம் படையுடன் மதீனா திரும்பினார்கள்.

## தூதுக்குழுக்கள்

ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு தூதுக்குழு ஆண்டு என அறியப்பட்டது. அரேபிய வளைகுடாவின் பல்வேறு பகுதி களிலிருந்தும் தூதர்கள் வந்து முஸ்லிம்களுடன் ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் செய்து கொண்டனர். பனூஸகீஃப் இனக் குழுவினர் தான் முதன் முதலில் நபிகளாரைச் சந்தித்தனர். இந்தக் குழுவினர் அப்து யாலீல் இப்னு அமர் என்பவர் தலைமையில் (குழுவில் இவர் தவிர மாலிக் குடும்பத்தைச் சார்ந்த மூன்று பேர்களும் நட்புக் கோத்திரங்களைச் சார்ந்த இருவரும் இருந்தனர்) சென்று நபிகளாரைச் சந்தித்து இஸ்லாத்தில் இணைய விருப்பம் தெரிவித்தனர். ஆனால் அதற்கு முன்னால் இஸ்லாமிய நம்பிக்கை மற்றும் நடை முறைகள் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த விரும்பினர். அவர்கள் தங்களது கடவுளான அல்லாத் விக்ரகத்தை தொடர்ந்து வைத்திருக்க விரும்பியதோடு,

தொழுகையிலிருந்தும் விலக்கு அளிக்க வேண்டுமென்று கோரினர். ஆனால் இது சம்பந்தமாக நபிகளார் எந்த விதமான பேச்சு வார்த்தைக்கும் இடமில்லை என்று உறுதியாக அறிவித்து விட்டார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதென்பது அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது என்பதையும் ஏற்றுக் கொள்வது தான் என நபிகளார் தெரிவித்தார்கள்.

இறுதியில் அவர்கள் உடன்படிக்கை செய்து கொண்டனர். கிறிஸ்துவ, யூத சமயங்களிலிருந்தும் தூதுவர்கள் வந்தனர். ஆனால் இஸ்லாத்தில் சேரும்படி நபிகளார் அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. வடக்குப் பகுதியிலுள்ள இனக் குழுவினரிடம் நபிகளார் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் போலவே அவர்களும் ஜிஸ்யா என்ற இராணுவ வரியை செலுத்த வேண்டுமென்றும், அதற்குப் பதிலாக முஸ்லிம்கள் அவர்கட்குப் பாதுகாப்பு வழங்குவார்கள் என்றும் ஒப்பந்தம் போடப்பட்டது. இவ்வாறாகத் தீபகற்பம் முழுமையும் பரவிய செய்தி தெளிவாக அமைந்திருந்தது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் வேறு எந்த விதமான மாறுபட்ட நம்பிக்கையும் கொண்டிருக்கக் கூடாது என்பதே அது.

அடிப்படையான இஸ்லாமிய நம்பிக்கை சார்ந்த விஷயங்களில் நபிகளார் எந்த விதமான சமரசத்திற்கும் தயாராக இல்லை. இஸ்லாத்தின் பால் நம்பிக்கையை வெளிப்படுத்திய உடனேயே அவர்கள் தங்களது பழைய சமயத்தை முற்றிலும் மறந்து விட வேண்டும். இஸ்லாமியக் கடமைகளான தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ்புனிதப் பயணம் என அனைத்தையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இனக் குழுவினர்கள் தங்களது அடையாளங்களைப் பாதுகாக்க விரும்பிய போது, அவர்கள் ஜிஸ்யா வரி செலுத்தி பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தெளிவாக அறிவுறுத்தப்பட்டனர். இந்த இரண்டு வாய்ப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என தபூக்கிலிருந்து திரும்பிய பின்னர் நபிகளார் அறிவித்தார்கள்.

# மனித உரிமைகள் பற்றி நபிகளாரின் கொள்கைகள்

இங்கிலாந்தின் "மக்னா கார்டா" சாசனத்தின் மூலம் தான் உலகம் மனித உரிமையின் அடிப்படையிலான விஷயங்களை அறிந்து கொண்டது என்று மேற்கத்தியர்கள் உரிமை கொண்டாடுவதுண்டு. இஸ்லாம் இவ்வுலகில் தோன்றி 600 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் மேற்கண்ட சாசனம் நடை–முறைக்கு வந்தது என்பதை அவர்கள் வசதியாக மறந்து விடுகின்றனர்.

இனம், நிறம், குலம், சமயம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு, மனித உரிமையின் அடிப்படைக் கொள்கைகளை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தான் உலகிற்கு வழங்கினார்கள். என்பது தான் உண்மை. திருக்குர்ஆனில் கூறியுள்ளபடி ஒரு மனிதன் அவனது நடத்தையைக் கொண்டே மதிப்பிடப்பட வேண்டும் என்று நபிகளார் கூறினார்கள்.

> மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணிய–மானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன். (குர்ஆன் 49:13)

குர்ஆனின் இந்த வசனங்கள் முஸ்லிம்களுக்கு மட்டும் உரியதல்ல. மனித சமூகம் முழுமைக்கும் பொருந்தக் கூடியது. மனித சமூகத்தின் சமத்துவத்தை வலியுறுத்தும் இந்த வசனங்கள், மனிதர்கள் அனைவரும் ஒரு பெற்றோரிடமிருந்து வந்தவர்கள் தான் என்பதையும், இனங்கள், குலங்கள், குடும்பங்கள் ஆகிய

பிரிவுகள் அனைத்தும் மனிதர்களை அடையாளப்படுத்தவும் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் தெரிந்து கொள்ளவுமே உதவுகின்றன. தங்களுடைய இறுதி உரையின் போது (கி.பி.632) நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். "'ஓ மக்களே! நிச்சயமாக உங்களது இறைவன் ஒருவனே. உங்களுடைய தந்தையும் ஒருவரே! நீங்கள் எல்லோரும் ஆதமின் மக்கள். ஆதம் மண்ணால் உருவாக்கப்பட்டவர். நினைவு கூருங்கள் ஒரு அரபி ஒரு அரபியல்லாதவரை விட உயர்ந்த வரல்லர். அது போல் ஒரு அரபியரல்லாதவர் ஒரு அரபியைக் காட்டிலும் உயர்ந்தவரல்லர் அது போல் ஒரு வெள்ளையர் கருப்பரை விட உயர்ந்தவரல்லர். அல்லாஹ் விடத்தில் அதிகக் கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் உடையவரே."

மனித சமூகத்தின் உடல் ரீதியான ஒற்றுமை உண்மையே என்பது பற்றி நபிகளார் ஓ! இறைவனே எல்லா மனிதர்களும் சகோதரர்களே என நான் சாட்சியம் கூறுகிறேன்' என்று குறிப்பிட்டார்கள். இந்த ஒற்றுமையைக் காட்டும் பல உதாரணங்களை நாம் நபிகளாரின் வாழ்க்கையில் காணலாம். ஒரு முறை நபிகளார் தனது தோழர்களுடன் உட்கார்ந்து கொண்டிருந்த போது, அவ்வழியே ஒரு பிரேத ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. நபிகளார் அந்த இறந்த உடலுக்கு மரியாதை அளிக்கும் முகமாக எழுந்து நின்றார்கள். இது கண்டு வியப்படைந்த தோழர்கள் "அது ஒரு யூதரின் இறுதி ஊர்வலம்" என நபிகளாரிடம் தெரிவித்தார்கள். நபிகளார் தெளிவாகவும், உறுதியாகவும்' அது ஒரு மனித ஆத்மா இல்லையா?' எனப்பதிலளித்தார்கள்.

மனித உயிர்களுக்கு இஸ்லாம் அத்தகைய பெரும் மதிப்பை அளித்தது. இது சம்பந்தமாக குர்ஆன் ஆணையிட்டுக் கூறுவதாவது.

> எவனொருவன் ஒரு மனிதனைக் கொலை செய்ததற்குப் பகரமாக அன்றி வேறு காரணத்திற்காக

மற்றவனைக் கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் எல்லோரையும் கொலை செய்தவன் போல் ஆவான். (திருக்குர்ஆன் *5:32*)

ஒரு இஸ்லாமியக் குடியரசில் உள்ள முஸ்லிமல் லாதவர்களை யார் துன்புறுத்தினாலும், இறுதித் தீர்ப்பு நாளின் போது நானே அவர்கள் மீது வழக்குத் தொடுப்பவராக இருப்பேன்' என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் உறுதிபடக் கூறியுள்ளார்கள்.இஸ்லாமிய வரலாற்றில் சிறுபான் மையினருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புக்கும், உரிமை களுக்கும் வரலாற்றில் ஈடு இணை ஏதுமில்லை.

## குர்ஆனும், மனித மாண்பும்

திருக்குர்ஆனின் கூற்றுப்படி இடைத்தரகர்கள் யாருமில்லை. ஒரு தனி மனிதன் இறைவனோடு நேரடி தொடர்பு கொள்ளலாம். அவனது செயல்களுக்கு அவனே முழுப் பொறுப்பாளியாவான். இது திருக்குர்ஆனின் அடிப்படைக் கொள்கையாகும்.

> மேலும் எவரெவர் எதைச் சம்பாதிக்கின்றார்களோ அதற்கு அவரவர்களே பொறுப்பாளிகள் ஆவர். மேலும் ஒருவரின் சுமையை மற்றவர்கள் சுமக்க மாட்டார்கள். (திருக்குர்ஆன் *6:164*)

இருந்த போதிலும் இறைவனின் அளப்பரிய இரக்கம் கருணை காரணமாக மற்றவர்களை மன்னிக்க வேண்டி நாம் அவனிடம் இறைஞ்சலாம். நம்மைப் பொறுத்தவரை தனி மனிதர்கள் என்ற ரீதியிலும் ஒரு சமுதாயம் என்ற ரீதியிலும் நமக்குச் சில உரிமைகளும், கடமைகளும் உள்ளன. மனித உரிமைகள் பற்றி திருக்குர்ஆனில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மனித மாண்பை அடிப் படையாகக் கொண்டவை. மனித சமுதாயத்தின் மாண்பினை திருக்குர்ஆன் எந்த சமரசமுமில்லாமல் நேரடியாக உறுதி செய்கிறது.

> மேலும் நாம் ஆதத்தின் வழித்தோன்றல்களுக்கு கண்ணியம் அளித்தோம். மேலும் நாம் படைத்த பெரும்பாலான படைப்புகளை விட அவர்களுக்கு அதிகச் சிறப்புகளை வழங்கினோம். இவை நமது கொடைகளாகும் (திருக்குர்ஆன் *17:70*)

இந்தப் பெருமை ஒருவர் சம்பாதித்துப் பெற்றதுமல்ல அவரது நேரிய நடத்தைக்காக வழங்கப்பட்டதுமல்ல. அவர்கள் இறை அச்சமுடையவர்களாக இருந்தாலும் சரி, பாவமிழைத் தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களின் இனம், நிறம், குலம்,

தேசியம் என்னவாகயிருந்தாலும் சரி, இந்தக் கண்ணியம் இயற்கையாகவே இறைவன் அவர்களுக்கு அளித்திட்ட வெகு மதியாகும். மனித மாண்பு என்ற கருத்தாக்கம் திருக்குர்ஆன் வலியுறுத்திடும் நீதி, சமத்துவம் ஆகிய பண்புகளுடன் இணைந்த ஒரு அம்சமாகும்.

> இறை நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப் போராகவும் நீதிக்குச் சான்று வழங்குவோராகவும் திகழுங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்து விடக் கூடாது (திருக்குர்ஆன் 5:8 )

குர்ஆனில் கூறப்பட்டுள்ள இந்த முக்கியமான மனித உரிமை, 1948ல் வெளியிடப்பட்ட சர்வதேச மனித உரிமை சாசனத்தின் முதல் பிரிவில் இடம் பெற்றுள்ளது. அனைத்து மனிதர்களும் சுதந்திரத்துடனேயே பிறக்கிறார்கள். அவர்களது மாண்பும், உரிமைகளும் சமமே என்பதே அது. சகோதரத்துவ மனப்பான்மையுடன் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு விவேகமும், மனச்சாட்சியும் வெகுமதியாக வழங்கப்பட்டுள்ளன. மனித உரிமை சாசனத்தின் வேறு பல அம்சங்களும் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாக குர்ஆனின் 17 வது அத்தியாயம் 33 வது வசனத்தில் 'இறைவன் புனிதமாக ஆக்கியுள்ள எந்த ஒரு உயிரையும் கொல்லாதீர்கள்' என்று கூறப்பட்டுள்ளது. இந்த இறை வசனத்திற்கு ஒவ்வொருவருக்கும் வாழுகின்ற உரிமையும், சுதந்திரமும், பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது என்பது பொருளாகும்.

> மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் நீதமாகவே தீர்ப்பளிக்க வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. (4:58 )

சட்டத்தின் முன்னால், ஒரு மனிதனுக்கு எல்லா இடங்களிலும்

அங்கீகாரம் பெறும் உரிமை உள்ளது என்பதும், சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்பதும் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்புப் பெற எந்த விதமான வித்தியாசமுமின்றி அனைவருக்கும் உரிமை–யுள்ளது என்பதும் இந்த இறை வசனங்களின் உட்கருத்தாகும். (மனித உரிமைகள் சாசனம் பிரிவுகள் 6,7)

> உங்களுடைய செல்வங்களை உங்களுக்கிடையில் உரிமையின்றி உண்ணாதீர்கள். நீங்கள் அறிந்து கொண்டே பிற மனிதர்களின் செல்வங்களிலிருந்து ஒரு பகுதியைப் பாவமான முறையில் எடுத்துக் கொள்ளாதீர்கள் திருக்குர்ஆன் (*2:188*)

ஒவ்வொருவருக்கும் சுயமாக சொத்துக்கள் வைத்துக் கொள்ள உரிமையுள்ளது. ஒருவனுடைய சொத்தை நியாயமின்றிப் பறிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்பது இந்த இறைவசனங்கள் உணர்த்தும் செய்தியாகும். (மனித உரிமை சாசனம். பிரிவு*17*)

> ஒருவர் மற்றவரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவரையொருவர் குறைகூறிப் பேச வேண்டாம். பட்டப் பெயர்கள் இட்டு அழைத்து அவமரியாதை செய்ய வேண்டாம் எனவும், (*4:11,12*) ஒருவரை வேவு பார்க்க வேண்டாமெனவும் (*49:12*) வீட்டுக்காரர்கள் உள்ளனர் என்பதை உறுதி செய்து கொள்ளாமல் எந்த வீடுகளுக்குள்ளும் நுழையாதீர்கள். (*24:27*)

எனவும் இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான். ஒருவருடைய தனிமையிலோ, குடும்பத்திலோ, வீட்டிலோ, செய்திகள் பரிமாற்றத்திலோ வரம்பு மீறிக் குறிக்கிடக் கூடாது என்பதும், ஒருவருடைய மதிப்பையும், பெருமையையும் குலைத்திடும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பதும் குறுக்கீடுகள் மற்றும் தாக்குதல்களிடமிருந்து பாதுகாப்புப் பெற ஒவ்வொருவருக்கும் சட்டப் பூர்வமான உரிமையுள்ளது என்பதும்

இந்த இறை வசனங்கள் உணர்த்தும் செய்தியாகும். (மனித உரிமைகள் சாசனம் பிரிவு 12) சமூகங்களின் இடப் பெயர்ச்சியையும், மக்கள் நாடு கடத்தப்படுவதையும் குர்ஆன் தடை செய்துள்ளதை ஏற்கனவே பார்த்தோம். தஞ்சமடைந்–தவர்கட்கும், அகதிகளுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டு–மெனவும் திருக்குர்ஆன் வலியுறுத்துகிறது (மனித உரிமை சாசனம் 17). மேற்கத்திய நாடுகளில் தனி மனிதனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதற்கு மாறாக குர்ஆன் சமூகத்திற்கும் குழுஉரிமைக் கோட்பாட்டிற்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கிறது.

மேற்கத்திய நாடுகள் கடைப்பிடிக்கும் தாராள மரபுகளின் படி, ஒருவன் செயல்படும் திறமையை கணக்கில் எடுத்துக் கொண்டு தனி மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்–படுகிறது. குர்ஆனில் திறமைக்கும் உயிர் வாழ்வதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் உயிர் வாழ்வது மட்டும் சமூகத்தின் தேவையாக இருக்க முடியாது. ஒரு தனி மனிதன் தனது திறமைகளை உணர்ந்து கொள்ளத் தக்க வகையில் சமூக கலாச்சார, ஆன்மீகச் சூழ்நிலைகளை அவனுக்கு உருவாக்கித் தருவதும் சமூகத்தின் கடமையாகும். தனிமனித உரிமைகள் மட்டுமல்ல, மனித சமூகத்தின் ஒட்டுமொத்த உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே திருக்குர் ஆனின் கோட்பாடாகும்.

> மனித உரிமைகள் பற்றி ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள பல சாசனங்கள் குர்ஆனில் கூறப்பட்டுள்ளன என்பதை மேற்கண்ட வற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் குர்ஆன் இதுபற்றி மேலும் அதிகமாகப் பேசுகிறது. குர்ஆனின் கூற்றுப்படி, மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியன இருந்தால்தான் அவன் கண்ணியமான வாழக்கையை நடத்திட இயலும். ஆகையால் பசித்தவன் உணவு பெறுவதும்,

> ஆடையற்றவன் அணிந்திட ஆடை பெறுவதும், வீடற்றவர்கள் வசிக்க வீடு பெறுவதும் அடிப்படை உரிமையாகும். 'தேவையுள்ளவர்கட்கும் ஆதரவற்ற–வர்கட்கும் அவர்களின் செல்வத்தில் பங்கு உள்ளது' (குர்ஆன் *51:19*)

என்று இறைவன் கூறுகிறான். தனி மனிதர்களின் சொத்து, சமுதாயத்தின் பொதுச் சொத்தே என்பது இதன் பொருளாகும்.

> வாழ்வதற்குத் தேவையான அத்தியாவசியமான–வற்றைப் பெறுவதற்கான முழு உரிமை தனி மனிதர்களுக்கும், சமூகங்களுக்கும் உள்ளன. அதுவே மனித மாண்பாகும் என்று திருக்குர்ஆன் உணர்த்திடும் மிக முக்கியமான உள்ளடக்கம். இறைவனின் தாராள குணத்திற்கு வரையறை இல்லை (திருக்குர்ஆன் *17:20*)

எனவே ஒவ்வொருவரும் தங்களுக்கு தேவையான வற்றைப் பெறுவதற்கும் மனித மாண்பினைக் குலைத்திடும் வறுமையிலிருந்து பாதுகாப்புப் பெறவும் முழு உரிமை உள்ளது. சர்வதேச பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள மாற்று மனித உரிமை சாசனத்தின் சரத்துக்களை தங்களது மனித உரிமைச் சாசனத்துடன் இணைத்துக் கொண்டதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபை அரசியல் மற்றும் கொள்கை ரீதியில் வேறுபட்டு நிற்கும் நிலையினை திருக்குர்ஆன் சமநிலைப்படுத்துகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் கருத்த–ரங்குளில் விவாதிக்கப்பட்டுள்ள விஷயங்களுக்கும் அப்பாற் சென்று குர்ஆன் மனித உரிமைகள் பற்றிய பல தெளிவான அம்சங்களை வலியுறுத்திச் சொல்லியுள்ளது. மனித உரிமைகள் பற்றிய குர்ஆனின் கருத்துக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பல கருத்தரங்குகளில் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு–மிடையிலான வித்தியாசம் என்னவென்றால் குர்ஆனில் உரிமைகள் கடமைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு அவை ஒன்றையொன்று சார்ந்தவை என்று கூறப்பட்டி ருப்பதேயாகும்.

## மனித குலத்தின் சமத்துவம்

உலகளாவிய சகோதரத்துவம் என்ற கோட்பாடும், மனிதர்கள் அனைவரும் சமமே என்ற தத்துவமும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மானுட சமூகத்தின் மேம்பாட்டிற்காக வழங்கிய அருட்கொடைகளாகும். உலகில் உள்ள சமயங்கள் அனைத்தும் இந்த கொள்கைகளைப் போதித்துள்ள போதிலும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இவற்றைத் தங்களது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள்.

இக்கொள்கைகள் இனிவரும் காலங்களில் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டு சர்வதேச சமுதாயம் விழிப்புற்று, இன ரீதியிலான வேறுபாடுகளை மறந்து, சமத்துவமும், சகோதரத்துவமும் நிறைந்த ஒரு வலுவான சமூகம் உருவாகும் என்பது திண்ணம்.

## குடியானவனும், மன்னரும் இறைவன் முன் சமமானவர்களே

இந்தியாவின் மிகப் பெரிய கவிஞரான சரோஜினி நாயுடு இஸ்லாத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:– உலகத்தில் ஜனநாயகத்தைப் பற்றி பேசியதும் அதனை நடைமுறைப்படுத்தியதும் இஸ்லாம் ஒன்றேயாகும். பள்ளி வாசல்களில் தொழுகைக்கான அழைப்பு விடுக்கப்பட்டதும் (பாங்கு) தொழுகையாளர்கள் அனைவரும் அங்கு வந்து ஒன்று சேர்ந்து குடியானவனும், மன்னரும் அருகருகே நின்று இறைவன் ஒருவனே அவன் மிகப் பெரியவன் எனப் பிரகடனம் செய்கிறார்கள்.

இஸ்லாமியர்கள் நாளொன்றுக்கு ஐந்து தடவைகள் இந்த ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுகின்றனர்.' அவர் மேலும் கூறியதாவது:– இஸ்லாத்தின் இந்தப் பிரிக்க முடியாத

ஒற்றுமையை நான் பார்த்து வியந்துள்ளேன். ஒரு எகிப்தியரையோ, அல்ஜீரியரையோ, இந்தியரையோ, துருக்கியரையோ இலண்டனில் நீங்கள் சந்திக்க நேருகின்ற போது, எகிப்து ஒருவரின் தாய் நாடாகவும், இந்தியா இன்னொருவரின் தாய் நாடாகவும் இருந்தாலும் அவர்கள் இஸ்லாமியர்கள் எனும் போது நாடுகளுக்கிடையிலான வேற்றுமை நீங்கி மனதளவில் ஒன்றாகி விடுகிறார்கள். இந்த ஒற்றுமை மனிதனை சகோதரனாகப் பாவிக்க வைக்கிறது. இஸ்லாம் அனைவரையும் ஒன்றிணைக்கிறது.

## ஹஜ்புனிதப் பயணம்
## ஒரு வாழும் அத்தாட்சி

ஒவ்வொரு ஆண்டு, ஹஜ்காலத்தின் போதும் அது அனைத்து இன, நிற, தகுதிகளைக் கொண்ட மக்களின் சகோத ரத்துவக் கண்காட்சியாக விளங்குவதை உலகம் வியந்து பார்க்கிறது. ஐரோப்பியர்கள் மட்டுமல்ல, அமெரிக்கர்கள், ஆப்ரிக்கர்கள், பாரசீகர்கள், ரஷ்யர்கள், ஆஸ்திரேலியர்கள், இந்தியர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள் இன்னும் பல தேசிய இனத்தவர்கள் அனைவரும் மக்காவில் ஒன்று கூடி ஒரே தெய்வீகக் குடும்பத்தின் உறுப்பினர்களாக, ஒரே விதமான உடையணிந்து (ஒவ்வொருவரும் தைக்கப்படாத இரண்டு வெள்ளை நிறத் துண்டுத் துணிகளை அணிகின்றனர். ஒரு துண்டை இடுப்பைச் சுற்றியும், இன்னொன்றை தோளைச் சுற்றியும் போட்டுக் கொள்கின்றனர்) தலையில் முடி இல்லாமல் மொட்டை அடித்து, எந்த விதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல் நான் இங்கிருக்கிறேன் ஓ இறைவனே! உன்னுடைய ஆணையை ஏற்று! இதோ இங்கு ஆஜராகி இருக்கிறேன். நீ மட்டுமே இறைவன்... "நான் இங்கிருக்கிறேன்' என்று முழங்கி ஹஜ் கடமையை நிறைவேற்றுகின்றனர். எனவே ஹஜ்ஜின் போது யார் உயர்ந்தவன், யார் தாழ்ந்தவன் என்று பகுத்துப் பார்த்திட எந்த ஒரு

வழியுமில்லை. இந்த ஒற்றுமை எண்ணத்துடனேயே ஹஜ் கடமையை முடித்து விட்டு ஒவ்வொருவரும் வீடு திரும்புகின்றனர்

இது பற்றிப் பேராசிரியர் ஹர்குரோன்ஜி குறிப்பிடுவதாவது:– 'நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கண்டு பிடித்துள்ள இந்த உலக நாடுகளின் ஒருங்கிணைப்பு (*The League of Nations*) சர்வதேச ஒற்றுமையையும், சர்வதேச சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தி அதன் மூலம் பிற நாடுகளுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக விளங்குகிறது.' அவர் மேலும் கூறுகிறார்." இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள இந்த உலக நாடுகளின் ஒருங்கிணைப்பிற்கு நிகரான ஒன்றினை உலகின் வேறு ஒரு எந்தப் பகுதியிலும் காண இயலாது என்பதே உண்மையாகும்.'

## இனவெறி–வெள்ளையர்கள் கருப்பர்களை

# விட உயர்ந்தவர்கள் அல்லர்

அபிசீனிய நாட்டைச் சார்ந்த ஒரு கருப்பு முஸ்லிம், இஸ்லாமிய அரசின் மன்னராக இருந்தாலும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று நபிகளார் அறிவித்தார்கள். நபிகளார் இனம், நிறம் சம்பந்தப்பட்ட பாகுபாடுகளை வெற்றிகரமாக அழித்தொழித்தார்கள். இதோ சில உதாரணங்கள்...

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இரண்டாவது கலீபாவான ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள், நீக்ரோ அடிமையான ஹழ்ரத் பிலால்(ரலி) அவர்களைப் பார்த்தபோதெல்லாம், உடனடியாக எழுந்து நின்று அவரை வரவேற்று 'இதோ நமது தலைவர் வருகிறார், இதோ நமது எஜமான் வருகிறார்' என்று கூறுவது வழக்கம். திருக்குர்ஆனும், நபிகளாரும் அரேபியர்கள் மத்தியில் நிகழ்த்திக் காட்டிய மாற்றங்கள் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை இச்சம்பவம் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்.

ஸைது (ரலி) (ஹரிதா மகன்) அடிமையாக இருந்தவர். நபிகளார் அவரை ரோம சாம்ராஜ்யத்திற்கு எதிராகப் போரிட அனுப்பப்பட்ட முஸ்லிம் படையின் தளபதியாக நியமித்தார்கள். உஸாமாவும் அடிமையாக இருந்தவரே. நபிகளார் அவரை முஸ்லிம்படையின் தளபதியாக நியமித்தார்கள்.

ஒரு நாள் அபூ–தர்ருல் கிஃபாரி(ரலி) அடிமையாக இருந்த ஒரு முஸ்லிமின் அருகில் உட்கார்ந்திருந்தார். அபூதர்ருல் அவரை "கருப்பியின் மகனே" என்று அழைத்தார். இதனைக் கேட்ட நபிகளார் பெரிதும் வருத்தமுற்று, அவரிடம் மன்னிப்புக் கேட்குமாறு வேண்டினார்கள். 'வெள்ளையர்கள் கருப்பர்களை விட உயர்ந்தவர்கள் அல்லர்' என்று நபிகளார் கூறினார்கள். நபிகளார் கண்டித்தவுடன், அபூதர்ருல் தனது தவறை உணர்ந்து கொண்டார். குற்ற உணர்ச்சியால் உந்தப்பட்டு தரையில் உட்கார்ந்து கொண்ட அவர், தன்னால் அவமானப் படுத்தப்–

பட்டவரிடம், "எழுந்திருங்கள், எனது முகத்தில் உங்கள் கால்களைக் கொண்டு மிதியுங்கள்"' என்று கூறினார்.

இன்றைக்கும் கூட கருப்பு நீக்ரோக்களும் பிற பின்தங்கிய மக்களும் நாகரீகம் பெற்றதாகச் சொல்லப்படும் வெள்ளை இன மக்களாலும் உயர் சாதியினராலும் எவ்வாறு நடத்தப் படுகின்றனர் என்பதை நாம் அறிவோம். பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னால், நபிகளாரின் காலத்தில் பிலால்(ரலி) அவர்களின் நிலையை எண்ணிப்பாருங்கள். இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைக்கும் பணி மிகுந்த கவுரவமான பொறுப்பாகக் கருதப்பட்டது. அந்தப் பணி இந்த நீக்ரோ அடிமைக்கு வழங்கப்பட்டது. மக்கா வெற்றிக்குப் பிறகு இந்த நீக்ரோ அடிமையை (பிலாலை) உலக முஸ்லிம்களால் புனிதமான இடமாகக் கருதப்படும் வரலாற்றுப் பாரம்பர்யம் வாய்ந்த கஅபாவின் உச்சி மீதேறி நின்று மக்களை தொழுகைக்கு அழைத்திடுமாறு நபிகளார் ஆணையிட்டார்கள்.

இத்தகைய ஒரு வியக்கத்தக்க மாற்றத்தை நபிகளார் உருவாக்கினார்கள். இதன் காரணமாகப் பிறப்பால் அரேபியர்களாக இருந்த பலர் தங்களது புதல்விகளை நீக்ரோ அடிமைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். இதன் காரணமாகத்தான் 'கோதே' என்ற மிகப் பெரிய ஜெர்மானியக் கவிஞன் குர்ஆனைப் பற்றிக் கூறும் போது "எல்லாக் காலத்திலும் மக்களுக்கு வழிகாட்டும் நூலாக இது விளங்கும்" என்று குறிப்பிடுகிறான். அறிஞர் பெர்னாட்சா கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார், "'இங்கிலாந்தையோ அல்லது ஐரோப்பாவையோ வரும் நூற்றாண்டுகளுக்குள் ஆட்சி புரியும் வாய்ப்பு எந்த சமயத்திற்காவது கிடைக்குமென்றால் அது இஸ்லாமிய சமயமாகத்தான் இருக்கும்'.

## இளைஞர்களை ஊக்குவித்தல்

மதீனாவிற்குத் திரும்பி வந்த சில மாதங்களுக்குப் பின்னர், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், ஹிஜ்ரி 11ஆம் ஆண்டு) சிரியாவுக்கு அண்மையிலுள்ள வடக்குப் பகுதிக்கு படை எடுக்க முடிவு செய்தார்கள். இங்கு தான் சில வருடங்களுக்கு முன்னர் அவர்களது தோழர்களான ஜாபர்(ரலி) அப்துல்லாஹ்(ரலி) ஸைது(ரலி) ஆகியோர் கொல்லப்பட்டனர். இந்தப் படையின் தளபதியாக இருபது வயதே நிரம்பிய ஸைது(ரலி) அவர்களின் மகனான உஸாமாவை நபிகளார் நியமித்தார்கள். 3000 பேர்கள் கொண்ட இந்தப் படையில் ஹழ்ரத் உமர்(ரலி), ஹழ்ரத் அபூபக்ர்(ரலி), ஹழ்ரத் உஸ்மான்(ரலி) ஆகிய அனுபவமும், வயதும் நிறைந்த தோழர்களும், வேறு பல தோழர்களும் இருந்தனர். நபிகளாரின் இந்த நியமனம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இது பற்றிப் பலரும் குறை கூறினர். ஆனால் நபிகளார் இந்த வாதங்களை ஏற்க மறுத்து அவருடைய தகப்பனார் ஸைது(ரலி) நியமிக்கப்பட்ட போது குறை கூறியதைப் போலவே இப்போதும் அவரது மகன் உஸாமா நியமிக்கப்–பட்டதைக் குறை கூறுகிறீர்கள். அவருடைய தந்தை அவர் முன்னால் இருப்பதாக எண்ணி, உஸாமாவிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்துள்ளேன் என நபிகளார் பதிலளித்தார்கள்.

முன்பு, ஸைது(ரலி) நியமிக்கப்பட்டதை சில முஸ்லிம்கள் குறை கூறினார்கள். ஸைது(ரலி) அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவரைச் சில முஸ்லிம்கள் இன்னும் அடிமை என்றே எண்ணினர். ஆனால் அவரது மகன் நியமனத்தை எதிர்த்ததற்கு அவர் மிகவும் குறைந்த வயதினராக இருந்தார் என்பதே முக்கியக் காரணமாகும். இப்படிச் செய்ததன்

மூலம் ஒரு மனிதனின் கடந்த கால சமூகப் பின்னணியோ, அல்லது அவரது வயதோ உயர் பதவி வகித்திடத் தடையாக இருக்கக் கூடாது. அவரிடம் ஆன்மீகப் பண்பும், அறிவும், நற்குணங்களும் இருந்தால் போதும் என நபிகளார் உணர்த்தினார்கள். சமுதாயத்தில் திறமை வாய்ந்த ஒரு இளைஞருக்கு அதுவும் ஒரு ஏழைக்கு தக்க வாய்ப்புகளை அளிப்பதன் மூலம், அவரது திறமையையும், அறிவையும் வெளிப்படுத்த முடியும். அதே நேரத்தில் மூத்த தோழர்களுக்கும் இது ஒரு தகுந்த பாடமாக இருந்தது. தங்களது மகனைப் போலுள்ள ஒரு இளைஞரின் தலைமையை ஏற்று அவரது ஆணைக்குக் கட்டுப்படுவதன் மூலம் ஒரு பெரிய ஜிகாத்திற்கு அவர்கள் தங்களை உட்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் அவர்களது காலம் குறுகியது என்பதையும் அவர்களுக்கு இந்தப் பாடம் உணர்த்தியது. காலம் ஒருவரது சக்தியை இயற்கையாகவே குறைவுறச் செய்துவிடும். அப்போது அவர் ஒதுங்கிக் கொண்டு இளைஞர்களுக்கு வாய்ப்பினை நல்கி அவர்கள் செயல்பட வழிவகுக்க வேண்டும் என்பதையும் நபிகளார் இந்த நியமனத்தின் மூலம் தோழர்களுக்கு உணர்த்தினார்கள்.

## போர் நெறிகள்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இளைஞரான உஸாமாவுக்கு வாய்ப்பளித்து அவரைத் தயார்படுத்தினார்கள். எனினும் நபிகளாருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாகப் படை புறப்பட்டுச் செல்வதில் காலதாமதம் ஏற்பட்டது. மதீனாவிற்கு அருகே முஸ்லிம் படையினர் காத்திருந்தனர். பெருமானாரின் விருப்பப்படி அபூபக்ர்(ரலி) அவர்கள் உஸாமாவிடம் படை நடத்திச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள். போரில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றி நபிகளார் கூறியுள்ளவற்றை அபூபக்ர்(ரலி) அவர்கள் உஸாமாவுக்கு நினைவுபடுத்தி, எதிரிகளுடன் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்கள். 'பெண்களையோ, குழந்தை களையோ, முதியவர்களையோ கொல்லாதீர்கள்' என அபூபக்ர்(ரலி) அவர்கள் அவருக்கு அறிவுறுத்தினார்கள். நேரான பாதையை விட்டு விலகிச் செல்லாதீர்கள். சேதம் விளைவிக் காதீர்கள். இறை நம்பிக்கைக்கு மாறான செயல்களில் ஈடுபடாதீர்கள். மரங்களை வெட்டாதீர்கள். வீடுகளையும் வயல்களையும் தீக்கிரையாக்காதீர்கள். பழ மரங்களை வெட்டாதீர்கள். உணவுக்காகத் தேவைப்பட்டாலொழிய கால் நடைகளை கொல்லாதீர்கள்' தனியாக மடங்களில் இருந்து கொண்டு இறைவனுக்குச் சேவை செய்யும் துறவிகளை ஒன்றும் செய்யாதீர்கள். அவர்களைக் கொன்று விடாதீர்கள். அவர்களின் மடாலயங்களை அழித்து விடாதீர்கள்.' என்றும் அறிவுறுத் தினார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தனக்குப் பல்வேறு காலகட்டங்களில் இயற்கையை மதிப்பது பற்றியும், கால் நடைகளை நடத்தும் விதம் பற்றியும், போர் நெறி முறைகள் பற்றியும் அறிவித்த உபதேசங்களையே உஸாமாவுக்கு(ரலி) அபூபக்ர்(ரலி) அவர்கள் தெரிவித்தார்கள்.

## 22

# போர் பற்றிய நபிகளாரின் கொள்கைகள்

இஸ்லாத்திற்கு முந்திய காலங்களில் நடைபெற்ற போர்களிலும், முஸ்லிமல்லாதவர்கள் நடத்திய போர்களிலும், கொல்வதும், கொள்ளையடிப்பதும், அழிப்பதும் வழக்கமான செயல்களாக இருந்தன. அந்தப் போர்களில் வெற்றி பெற்றவர்கள் தோல்வியுற்ற நாடுகளில் உள்ள பலவீனமான–வர்களைத் துன்புறுத்துவதும், வீடுகளையும் சொத்துக்களையும், வயல்களையும், பண்ணைகளையும், ஏன் கிராமங்களையும் நகரங்களையும் அழிப்பதும் கூட இயல்பான நடவடிக்கைகளாக இருந்தன. போர் என்றாலே பெண்களைக் கற்பழிப்பதும், களங்கப்படுத்துவதும், பெரியவர்கள், குழந்தைகள், பெண்கள் ஆகியோருக்கு எதிராகக் கொடுமைகள் இழைப்பதுமே நியாயம் என்று கருதிய காலங்களும் இருந்தன. தோற்கடிக்கப் பட்டவர்களின் வழிபாட்டுத் தலங்களும், அவரது வரலாற்றுச் சின்னங்களும் அழிக்கப்பட்டன. அறநெறிகளுக்கு உட்பட்டுப் போரிட வேண்டுமென்ற சித்தாந்தம் மனித மனச்சாட்சியிலிருந்து முற்றாக விடுபட்டுப் போயிருந்தது.

இஸ்லாத்திற்கு முந்திய போர்கள் மற்றும் முஸ்லிமல் லாதவர்களின் போர்கள் ஆகியவற்றை விட்டும் இஸ்லாமியப் போர்கள் முற்றிலும் மாறுபட்டது. மனித சமூகத்தை கொடுமை யிலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும், ஆக்ரமிப்பிலிருந்தும் விடுவித்து நீதியையும், நியாயத்தையும் நிலை நாட்டச் செய்வதற்கு நடத்தப்படுவதே இஸ்லாமியப் போராகும். இஸ்லாத்திற்கு முந்திய போர்களிலும் முஸ்லிமல்லாதவர்கள் நிகழ்த்திய போர்களிலும் கடைப்பிடிக்கப்பட்ட வழி முறைகளையும், நோக்கங்களையும் நபிகளார் பெருமளவு

மாற்றினார்கள். போரின் போது கடைப்பிடிக்க வேண்டிய பல தார்மீக நெறி முறைகளை நபிகளார் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். போர்கள் பற்றிய புரிதலையும், கருத்துருவாக்கம் பற்றிய அடிப்படையான விஷயங்களை மறுவரையறை செய்தார்கள்.

## ஜிகாத்ஃபி–சபி–லில்லாஹ்

இறை வழியில் போர்செய்தல் (ஜிகாத்–ஃபி–சபீ–லில்லாஹ்) என்ற ஒரு புதிய கோட்பாட்டைப் புகுத்தி, சுயநலப் போக்கும் உலகாதாயப் போக்குமற்ற ஒரு பரிசுத்தமான யுத்த களத்தை நபிகளார் கட்டமைத்தார்கள். ஜிகாத் என்பதற்கு போராட்டம் அல்லது எதிர்த்தல் என்று பொருள்கள் உண்டு. அதாவது பிறரால் நிழ்த்தப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராடுவதாகும். இறைவனின் வழியில் போர்புரிதல் என்ற வார்த்தைகளைச் சேர்த்துள்ளதன் மூலம் சுயநலத்திற்காகவோ, கொள்ளையடிப் பதற்காகவோ, பெருமைக்காகவோ, அந்தஸ்துக்காகவோ அடக்கி ஆள்வதற்காகவோ போர் புரியக்கூடாது என நபிகளார் அறிவித்தார்கள். இந்தக் கொள்கைகள் தெளிவாக எந்தவிதமான குழப்பமுமின்றி நபிகளாரால் சொல்லப்பட்டுள்ளன.

போர் தொடர்பான இந்தப் புதிய கோட்பாட்டின் அடிப்படையில் நபிகளார் போர் செய்வது பற்றியும், அதில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும், அதன் அமைப்பு, உரிமைகள், கடமைகள் பற்றியும், சண்டையில் ஈடுபடுவோர், ஈடுபடாதவர்களுக்கிடையிலான வேறுபாடுகள் பற்றியும் தூதுவர்கள், போர்க் கைதிகள், வெற்றி கொள்ளப்பட்ட நாட்டைச் சார்ந்த மக்களின் உரிமைகள் பற்றியும் புதிய விதிமுறைகளை வகுத்தளித்தார்கள். இந்த விதிமுறைகள் அனைத்தும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

முஸ்லிமாக இருந்தாலும் சரி, அல்லாத வராயினும் சரி மனித உயிரின் மாண்பினை நபிகளார் உணர்ந்திருந்தார்கள்.

ஒவ்வொரு இறை தூதருக்கும் அவர்களுக்கென சொந்தமான ஒரு அணுகு முறையும், செயல்படும் தன்மையும் இருந்தன. ஏனெனில் இறை தூதர்கள் பல்வேறு கால கட்டங்களில் பலதரப்பட்ட மக்களிடையே தோன்றியவர்கள். ஒரு நபியை இன்னொரு நபியுடன் ஒப்பிடுவது சரியல்ல, இதனை குர்ஆன் தடை செய்துள்ளது. ஈஸா நபி (ஜீசஸ்) அவர்கள் எந்தப் போரிலும் ஈடுபடவில்லை. அதற்கான தேவையும் அவர்கட்கு இருக்கவில்லை. ஆனால் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது இருப்பைக் காப்பதற்காகப் போராட வேண்டிய–திருந்தது. நபித்துவம் பெற்ற பிறகு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்கா நகர் குறைஷியர்களை அமைதி வழிக்கு அழைத்தார்கள். ஆனால் அவர்கள் நபிகளாரை எதிர்த்தார்கள். அவதூறு பேசினார்கள். பல ஆண்டுகளாக தொடர்ந்து அவர்கட்குத் தொல்லைகள் அளித்து வந்தார்கள். அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து மக்காவை விட்டே விரட்டினார்கள்.

மதீனாவில் தஞ்சம் புகுந்த பின்னரும் முஸ்லிம்களுக்குத் தொல்லை கொடுத்தார்கள். மதீனா மக்களிடம் நபிகளாரை வெளியேற்றுமாறும், அல்லது அவர்களையும், அவர்களது ஆதரவாளர்களையும் அழித்து விடுமாறும் வலியுறுத்தினார்கள். இந்தக் கோரிக்கைகளை ஏற்காத மதீனா மக்களை அவர்கள் பயமுறுத்தினார்கள்.

மக்காவின் தலைவர் அப்துல்லாஹ் பின் உபை அனுப்பிய செய்தியில் ஒரு குற்றவாளிக்கு அபயம் அளித்திருப்பதாகவும், எனவே அவரைக் கொல்ல வேண்டுமெனவும், அப்படிச் செய்யா விட்டால், தாங்களே மதீனாவைத் தாக்கி நபிகளாரையும், அவர்களுடைய ஆதரவாளர்களையும் கொன்று விடுவோம் என்றும் கூறியிருந்தார். அவர்களின் தாக்குதலுக்கு ஆளாகி இறப்பதா அல்லது தற்காப்புக்காக போரிடுவதா என்ற நிலை வந்தபோது நபிகளார் போரைத் தேர்ந்தெடுத்தார்கள். எனவே எதிரிகளால் போர் அவர்கள் மீது திணிக்கப்பட்டது. அவர்கட்குப்

போர் செய்யும் எண்ணம் இல்லை. எனவே அவர்கள் நடத்திய போர்களை ஒரு பரந்த வரலாற்றுப் பார்வையுடன் அணுக வேண்டும். அவர்கள் நடத்திய போர்கள் சமயம் சார்ந்தவைகளே. ஏனெனில் அவர்கள் சார்ந்திருந்த இஸ்லாமிய சமூகம் தான் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது.

“இராணுவ நடவடிக்கை"' என்ற பயமுறுத்தலை எந்த ஒரு பொறுப்புணர்வு மிக்க தலைவராலும் எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக அரசர்களும், இராணுவ அதிகாரிகளும் போரில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைப் பற்றிய விரிவான வழி காட்டுதல்களை (எதிர்வரும் சந்ததியினர் அறிந்து கொள்ளும் முறையில்) நபிகளார் வகுத்துத் தந்துள்ளார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் போர்களை இயல்பான ஒரு செயலாகக் கருதவில்லை. அவற்றைத் தவிர்க்க இயலாது என்பதையும் அறிந்திருந் தார்கள். ஆனால் ஒரு சீர்திருத்தவாதியாலோ அல்லது ஒரு ஆன்மீகத் தலைவராலோ அதன் கொடுமைகளைக் குறைக்க முடியும். அதைத்தான் நபிகளார் செய்தார்கள். இறைவனின் ஆணையின் பேரில் போர்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறி முறைகளை வகுத்துத் தந்து அமைதியையும், விலை மதிப்பற்ற மனித உயிர்கள் கொல்லப்படுவதையும் பெருமளவு தவிர்த்தார்கள்.

இவ்வாறாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், தங்களது திறமை, சாதுர்யம் காரணமாக மிகச் சிறிய படைகளைக் கொண்டு, பெரும் எண்ணிக்கை கொண்ட எதிரிப்படைகளைத் தோற்கடித்துப் பெரும் வெற்றி ஈட்டினார்கள். ஏழு, எட்டு ஆண்டுகளுக்குள்ளாகவே, எதிரிகளின் வலிமையை முறித்து அவர்களைப் பலவீனப் படுத்தினார்கள். தாக்குதல்களை முறியடித்தார்கள். நபிகளார் நடத்திய 28 போர்கள் மற்றும் 38 போர் ஆயத்த நடவடிக்கைகளில் அவர்கள் தரப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை 255 மட்டுமே. எதிரிகள் தரப்பிலோ 759 பேர்கள் இறந்தனர். முஸ்லிம்களால் சிறைப்பிடிக்கப்பட்ட

எதிரிகளின் எண்ணிக்கை 6564. ஆனால் அவர்களில் கிரிமினல் குற்றம் புரிந்த இருவரைத் தவிர மற்ற அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். எட்டாண்டுகள் நடந்த போர்களில் ஏற்பட்ட மொத்த உயிரிழப்பு 1014 மட்டுமே. இவ்வளவு சிறிய எண்ணிக்கையிலான உயிரிழப்பின் மூலமே நபிகளார் அரேபிய தீப கற்பத்தில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டினார்கள். தீமையும், அடக்கு முறையும் கொண்ட அரசு மறைந்து நேர்மையும், நியாயமும், அறவழியும் கொண்ட ஒரு புதிய அரசு மலர்ந்தது. மிகக் குறைந்த ஆயுத பலத்தைப் பிரயோகித்து மிக அதிகமான நல் விளைவுகளை ஏற்படுத்தியதன் மூலம் நபிகளார் பெரும் அற்புதத்தையே நிகழ்த்திக் காட்டினார்கள்.

மிகப்பெரும் வரலாற்றாசிரியரான H. லேமன்ஸ் என்பவர், "'மத்திய காலத்தில் நடந்த போர்களின் போது இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் மடிந்த போது, நபிகளார் நடத்திய போர்களில் வெறும் 1014 பேர்கள் மட்டுமே இறந்தனர் என்ற செய்தியானது நபிகள் நாயம்(ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு கட்டுப்பாட்டுடனும் பரிவுடனும் நடந்து கொண்டு மனித உயிர்களுக்கு மதிப்பளித்துள்ளார்கள் என்பதை உணர்த்துகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே அவர்களை ஒரு போர் வீரர் என குறிப்பிட இயலாது. அவர்கள் உயிர்களை புனிதமானதாகக் கருதி நியாயமான நோக்கத்திற்காக அன்றி வேறு எதற்காகவும் ரத்தம் சிந்தக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்கள். அவர்களின் வாழ்க்கை அமைதிக்காகவே அர்ப்பணிக்கப்பட்டிருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.' போர்கள் மூலம் ஏற்பட்ட புரட்சிகளையும், பல ஆண்டுகளாக நீடித்து பல இலட்சக்கணக்கான அப்பாவி மக்களின் இறப்பிற்குக் காரணமான போர்களோடு இதனை ஒப்பிட்டுப் பாருங்கள். மேற்சொன்ன புரட்சிகளிலும், போர்களிலும் இறந்தோர் எண்ணிக்கை மிக மிக அதிகம்.

அனைத்து சமாதான வழிகளையும் மேற்கொண்டு பயனில்லாத பிறகே போரை கடைசி ஆயுதமாக பயன்படுத்த

வேண்டும் என ஹிந்து சமயம் போதிக்கிறது. ஆனால் போர் என்று வரும் போது அதனை தனிப்பட்ட மற்றும் சமயம் சார்ந்த முக்கிய விஷயமாகக் கருதி சத்திரிய சாதியைச் சார்ந்த ஒவ்வொருவரும் தங்களின் உயிரைக் கொடுத்தாவது கடமையை ஆற்ற வேண்டும் என அச்சமயம் வலியுறுத்துகிறது. விக்கி பீடியாவின் படி தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டும் பொருட்டு நடத்தப்பட்ட போர்களே மிக மோசமான போர்களாக ஹிந்து மரபில் கருதப்படுகிறது. குருசேத்திரப் போரின் போது இறந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. 18 நாட்கள் நடந்த போரில் 40 லட்சம் வீரர்கள் மடிந்தனர். ஒரு நாளைக்கு இரண்டு லட்சத்து இருபதாயிரம் பேர்கள் என்ற அளவில் இறப்பு ஏற்பட்டுள்ளது பேரழிவை உண்டாக்கக்கூடிய இரசாயான, அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படாமலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. வில்களையும், அம்புகளையும், கதாயுதங்களையும் பயன்படுத்தியே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

## இருபதாம் நூற்றாண்டு மோசமான வன்முறை நூற்றாண்டு

மிகவும் பிரசித்தி பெற்ற வில்லியம் கோல்டிங் என்பவர், இருபதாம் நூற்றாண்டை மிக மோசமான வன்முறை நூற்றாண்டு என வர்ணித்துள்ளார். Z . பெர்சின்ஸ்கி என்பார் தனது "கட்டுப்படுத்த இயலாத இருபத்து ஒன்றாம் நூற்றாண்டு உலகக் குழப்பம்" – என்ற நூலில், இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த போர்கள், மனிதப் பேரழிவுகள், இடப் பெயர்ச்சிகள், மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள் போன்றவை காரணமாக 18 கோடியே 70 லட்சம் மக்கள் மடிந்ததாக கணக்கிட்டுள்ளார். இங்கிலாந்து ராயல் சொசைட்டியின் தலைவராக இருந்த லார்டு மார்டின் ரீஸ் என்பார் தனது புகழ் பெற்ற 'நமது இறுதி நூற்றாண்டு' (*Our Final Century* ) என்ற நூலில் '21ஆம் நூற்றாண்டில் மனித குலம் இருக்குமா? வரலாற்று காலம் தொட்டு முதல் முறையாக

மனித சமுதாயம் இந்த உலகத்தையே அழிக்கக்கூடிய ஆயுதங்களைக் கண்டு பிடித்து வைத்துள்ளது. இதனால் மனித நாகரீகம் சரிசெய்ய முடியாத பின்னடைவைச் சந்திக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அணு மற்றும் ரசாயன ஆயுதங்களையும், உயிர்க்கொல்லி ஆயுதங்களையும் வாங்கிக் குவித்து வைப்பது அதிகரித்து வருகிறது. அறுபது சதவிகிதத்திற்கும் மேற்பட்ட இத்தகைய ஆயுதங்களை அமெரிக்கா உலக நாடுகளுக்கு வழங்கி வருகிறது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்டர் அமெரிக்கா 12000க்கும் அதிகமான அணு ஆயுதங்களை வைத்திருப்பதாக மேமாதம் 2008ல் குறிப்பிட்டார். சோவியத் யூனியனும் இதே எண்ணிக்கையில் அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளது. பிரான்ஸூம், இங்கிலாந்தும் நூற்றுக்கு மேற்பட்ட அணு ஆயுதங்களை வைத்துள்ளன. இஸ்ரேல்150 அணு ஆயுதங்களை வைத்துள்ளதாக ஜிம்மி கார்டர் குறிப்பிட்டுள்ளார். (ஆனால் இதனை அந்த நாடு மறுத்து வருகிறது) மற்ற நாடுகள் அணு ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதாகக் கூக்கிரலிடும் அமெரிக்கா தான் சேர்த்து வைத்துள்ள அளவுக்கு அதிகமான அணு ஆயுதங்கள் பற்றி வாய் திறப்பதில்லை.

முதல் உலகப் போரின் போது, ஒருகோடிப் பேர் இறந்ததாகவும், இரண்டு கோடியே பத்து லட்சம் பேர் காயமுற்றதாகவும், 77 லட்சம் பேர் காணாமல் போய்விட்டதாக அல்லது சிறைப்பிடிக்கப்பட்டதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது 3.8 கோடியிலிருந்து 6 கோடி பேர்கள் வரை கொல்லப்பட்டதாகவும், லட்சக்கணக்கானோர் காயமுற்றதாகவும், வீடுகளை இழந்ததாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில் ஜப்பானில் உள்ள ஹிரோசிமா நாகசாகி ஆகிய இரு நகரங்களின் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியது. இதில் இரண்டு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். லட்சக்கணக்கானோர் காயமுற்றனர். வீடிழந்தனர். இப் போரின் போது 60 லட்சம்

யூதர்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். இதுவே இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த மிகப் பெரிய இனப்படு கொலையாகும். ரஷ்யப் புரட்சியின் போது பதின்மூன்று லட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

பிரஞ்சுப் புரட்சியின் போது இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் பேர்கள் கொல்லப்பட்டனர். சீன கம்யூனிஸ்ட் புரட்சியின் போது 14லிருந்து 20 லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டனர். இத்தாலி நாட்டின் முசோலினி அல்ஜீரியா, லிபியா, துனிஷியா ஆகிய வட ஆப்பிரிக்க நாடுகளின் மீது ஆக்ரமிப்புப் போர்கள் நடத்தி நான்கு லட்சம் பேரைக் கொன்றான்.

ஸ்டாலின் காலத்தில் நடந்த ரஷ்ய உள்நாட்டுப் போரின் போது இரண்டு கோடி மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள். அடால்ப் ஹிட்லர் ஒரு கோடிக்கும் அதிகமான மக்களைக் கொன்றான். போஸ்னியா–ஹெர்சகோவினா போரின் போது இரண்டு லட்சம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். தி ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றம் போஸ்னியாப் போரின் போது நடைபெற்ற குற்றங்கள் மனித சமுதாயத்தின் மீது இழைக்கப்பட்ட கொடூரம் என தீர்ப்பளித்தது. இது போன்ற கொலைகள் தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்ற பேரிலும் பூகோள மற்றும் அரசியல் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் இன்றைக்கும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## ஒப்பீடு

இந்த எண்ணிக்கையை மனித வரலாற்றில் நிகழ்ந்த பிற போர்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது போரில் கலந்து கொண்டவர்கள் ஒரு கோடியே ஆறு லட்சம் பேர். ஆனால் இப்போரின் போது இறந்தவர்களின் எண்ணிக்கை ஐந்து கோடியே நாற்பத்து எட்டு லட்சம் பேர். கலந்து கொண்டவர்களுக்கும்– கொல்லப்பட்டவர்களுக்கு மிடையிலான விகிதாச்சாரம் 517 சதவிகிதமாகும்.

நபிகளார் நடத்திய போர்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை வெறும் 1014 மட்டுமே அதற்கு மேல் இல்லை. இது போர்களில் கலந்து கொண்ட வீரர்களின் எண்ணிக்கையில் வெறும் 1.5 சதவிகிதம் மட்டுமே. பெரும்பாலான போர்களில் நபிகளாரே வெற்றி பெற்றிருந்தார்கள். இறப்பு எண்ணிக்கையை ஒப்பிடும் போது பிற வெற்றியாளர்கள், காட்டு மிராண்டித்–தனமான போர்த் தலைவர்கள், இராணுவத் தளபதிகள் ஆகியோருடன் நபிகளாரைச் சேர்க்க முடியாது. உண்மையில் அவர்கள் இத்தகையோரிடமிருந்து வெகு தொலைவில் இருந்தார்கள். எதிரிகளும், காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை போர் வெறியர் என்றும் இரத்த வெறி பிடித்தவர் என்றும் போர் செய்வதே அவருடைய முதன்மைப் பணியாக இருந்தது என்றும் சித்தரிக்கின்றனர். ஆனால் உண்மையில், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மதீனாவில் வாழ்ந்த பத்து ஆண்டுகள் காலத்தில் 795 நாட்களில் மட்டுமே போர்களிலும், போர் ஆயத்தங்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். மீதியுள்ள காலத்தில் (2865 நாட்கள்) மக்களை நல்வழிப் படுத்துகின்ற முயற்சியிலும், சமுதாயத்தைச் சீர்திருத்தும் பணியிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

இந்த வரலாற்று உண்மையை மறைத்து விட்டு சில காழ்ப்புணர்ச்சி கொண்ட எழுத்தாளர்களும், மேலை நாட்டு வரலாற்று ஆசிரியர்களும் நபிகளாரை ஒரு போர் வெறியர் என சித்தரிக்க முயலுகின்றனர். போர்களின் போது நபிகளார் கடைப்பிடித்த போர்த் தந்திரங்கள் அனுபவம் வாய்ந்த இராணுவத் தலைவர்களே வியப்புறும் வண்ணம் அமைந்திருந்தன. மிக நேரிய முறையில் திட்டமிட்டு, போர் யுக்திகளை ரகசியமாக வைத்திருந்து ஒவ்வொரு போரையும் வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்கள். அவர்கள் மேற்கொண்ட வியக்கத்தக்க, விரைவான போர் ஆயத்தங்கள் தயார் நிலையில் இல்லாத எதிரிகளை திக்கு முக்காட வைத்தது. எதிரிகள் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு மனோ ரீதியான பல யுக்திகளை மிகத் திறமையாகப் போரின் போது

மேற்கொண்டார்கள். இந்தக் குறிக்கோள்களை அடைவதற்காக ஒற்றர் பிரிவையும் அதிரடிப் படைப்பிரிவையும் நபிகளார் வைத்திருந்தார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது தோழர்களுக்குப் போர்த்தந்திரங்களையும், போரில் கடைப்பிடிக்க வேண்டிய யுக்திகள், கையாள வேண்டிய ஆயுதங்கள், உபகரணங்கள் என அனைத்து விஷயங்கள் பற்றியும் பயிற்சி அளித்தார்கள். இறுதியாக, படையெடுப்புகளின் உண்மையான நோக்கம் பற்றியும், தங்களது தோழர்கட்கு விளக்கமளித்து அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். தோழர்களின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். நபிகளாரின் ஆணையை ஏற்று கடலிலும் தீயிலும் குதிக்க அவர்கள் தயாராக இருந்தனர். எந்தத் தியாகம் செய்யவும் அவர்கள் அஞ்சவில்லை. எதிரிகளின் அணிக்குள் புகுந்து விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் சண்டை–யிட்டார்கள். தாங்கள் அடைய வேண்டிய இலக்கை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். முஸ்லிம்களை அடிப்படைவாதிகள் என்றும், தீவிரவாதிகள் என்றும் இஸ்லாத்தின் எதிரிகள் சிலரும், அறியாமை காரணமாக வேறு சிலரும் கருதுகின்றனர். இதற்கு இஸ்லாத்தின் மீது கடந்த காலங்களில் அவர்கள் கொண்டிருந்த தவறான கருத்தோட்டமே காரணமாகும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முஸ்லிம் அல்லாதவர்கட்கு இரண்டு வாய்ப்புகளையே வழங்கியதாகவும் ஒன்று குர்ஆன் இன்னொன்று வாள் என்றும் வாள் மூலமாகவே இஸ்லாம் பரப்பப்பட்டதாகவும் பல ஆண்டுகளாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

முன்னணி பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியரான சர்தாமஸ் ஆர்னால்டு என்பவர், உண்மைகளையும், புள்ளி விவரங்–களையும் சேகரித்து பெரும் ஆராய்ச்சிக்குப் பின்னர் எழுதியுள்ள "இஸ்லாத்தின் உபதேசங்கள்' (*The Preaching of Islam*) என்ற நூலில் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்ட மார்க்கம் இல்லை–யென்றும், குர்ஆனின் போதனைகள் மற்றும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் உன்னத முன்னுதாரணமான செயல்

பாடுகள் காரணமாக வளர்ச்சியடைந்த மார்க்கம்தான்" என்றும் எழுதியுள்ளார்.

இத்தகைய பெருந்தன்மையுடன் போர்களை நடத்தி வெற்றிகண்ட இராணுவ தளபதிகள் உலக வரலாற்றில் உள்ளனரா? மனிதாபிமானத்துடனும், மனித நேயத்துடனும் நடந்து கொண்டு வெற்றிக்குப் பின்னர் மன்னிக்கும் மனப் பான்மையுடன் நடந்து கொண்ட இராணுவத் தலைவர்கள் வேறு யாரேனும் உள்ளனரா? மிகக் குறைந்த உயிரிழப்புகளுடன் போர் நடத்தி பல வெற்றிகளை ஈட்டிய தளபதி வேறு எவரேனும் உள்ளனரா? மிகக் குறுகிய காலத்தில் ஒரு பரந்த நிலப்பரப்பில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டிய வேறு தலைவர்கள் யாரேனும் உண்டா? வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் மாற்றங்களைக் கொண்டு வரச் செய்து மனித சமுதாயத்தின் போக்கையே மாற்றி ஒரு பெரும் பாரம்பர்யத்தை விட்டுச் சென்றுள்ள இராணுவத் தலைவர் வரலாற்றில் வேறு யாரேனும் உண்டா? நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு சமயத்தைத் தோற்றுவித்தவர் என்ற குறுகிய கண்ணோட்டத்திலேயே பார்க்கப்படுகிறார்கள். இது ஒரு வருந்தத்தக்க நிலையே! மனித நாகரீகத்தை செழுமைப்படுத்தியதில் அவர்கள் வகித்த மிக முக்கியமான பங்கு பற்றி மிகச் சிறிதளவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஒரு கற்பிப்பவராகவும், மனித சமுதாயத்தின் அளப்பரிய சொத்தாகவும் நபிகளார் விளங்கினார்கள் இதற்கு ஒட்டு மொத்த மனித சமுதாயம் குறிப்பாக முஸ்லிம்கள் நபிகளாருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். மனித சமுதாயம் எதிர்கொள்ளும் பல்வேறு விதமான பிரச்னைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நபிகளாரின் உன்னதப் பண்புகளை வெளிக்–கொணர்வதே அவர்கட்கு நாம் செய்யும் சிறந்த நன்றிக்கடனாக இருக்க முடியும். அப்படிச்செய்வதன் மூலம், மனித சமுதாயம் அமைதியாக நியாயமான ஆரோக்கியமான முறையில் செயல்பட நாம் உறுதுணை புரிய முடியும்.

வாஷிங்டன் இர்வின்' என்ற புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளர் தனது "முகம்மதுவின் வாழ்க்கை" (*Life of Mohamed*) என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். முஹம்மது(ஸல்) அவர்களின் போர் வெற்றிகளில் எந்தவிதமான பெருமையோ வீண் புகழ்ச்சியோ இல்லை. ஏனெனில் அவை சுயநல காரணங்களுக்காக நடத்தப்பட்டவை அல்ல. துயரமான நாட்களில் எப்படி எளிமையாக இருந்தார்களோ, அதே போன்றுதான் மிகப் பெரும் அதிகாரம் படைத்தவராக இருந்த போதிலும் நடந்து கொண்டார்கள்." புகழ் பெற்ற அமெரிக்க வரலாற்று எழுத்தாளரான *H*.லாமன்ஸ் என்பார் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். மக்காவை வெற்றி கொண்டு புகழின் உச்சியில் இருந்த போதும் நபிகளார் மிகவும் அடக்கத்துடனும், பணிவுடனும் நடந்து கொண்டார்கள். மக்கா அவர்களின் காலடியில் கிடந்தபோது தோல்வியுற்ற குறைஷியர்கள் ஒவ்வொ–ருவராக வந்து இஸ்லாத்தின் பக்கம் தங்களது விசுவாசத்தைத் தெரிவித்த போது, தன்னை நோக்கித் தள்ளாடியபடி வந்து கொண்டிருந்த ஒரு முதியவரைப் பார்த்த நபிகள் நாயகம்(ஸல்) அவரை ஆசுவாசப்படுத்தி மிக அடக்கத்துடன் 'நான் அரசனல்ல, நானும் உங்களைப் போல் பணிவு கொண்ட ஒரு சாதாரண மனிதனே. நீங்கள் எதை உண்கிறீர்களோ அதனையே நானும் உண்கிறேன். எனக்கு வெளிச்சம் தரும் சூரியன் தான் உங்களுக்கும் வெளிச்சம் தருகிறது' என்று குறிப்பிட்டார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இந்த உலக வாழ்வை நீத்த போது, 30 லட்சம் சதுர மைல் பரப்பளவு கொண்ட ஒரு மிகப் பெரிய பேரரசின் அதிபராகவும், பாதுகாவலராகவும் விளங்கி னார்கள். மதீனாவில் அவர்கள் தங்கியிருந்த பத்தாண்டுகள் காலத்தில் சராசரியாக ஒரு நாளைக்கு 845 சதுரமைல் பரப்பளவு கொண்ட நிலப்பகுதி இஸ்லாமிய அரசில் சேர்ந்து கொண்டே இருந்தது. இந்த மிகப்பெரிய மனித சமுதாயத்தின் பாதுகாவலர் இவ்வுலகை விட்டுச் சென்ற போது, அவர்களது வீட்டிலிருந்த விளக்கை ஏற்ற எண்ணெய் கூட அப்போது இல்லை.

23

# திருமணங்கள்
# ஒருதார மணம், பலதார மணம்

ஒரே நேரத்தில் ஒருவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால், அது பலதாரமணம் என அறியப்படுகிறது. ஒரு நேரத்தில் ஒரு மனைவியை மட்டுமே கொண்டிருப்பது ஒரு தார மணம் என்பதாகும்.

## மேற்கத்திய ஆயுதம்

காரணங்களையோ, நோக்கத்தையோ தெரிந்து கொள்ளாமல் இஸ்லாத்தின் எதிரிகளும், அறியாமை கொண்ட சிலரும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் புரிந்திட்ட பலதார திருமணம் பற்றி குறை கூறி வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகள் வரலாற்றுப் பின்னணியற்றவை. பகுத்தறியும் தன்மையற்றவை. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மனித சமுதாயத்தின் நாகரீகத்திற்கும் கலாச்சாரத்திற்கும் அளித்திட்ட பெரும் பங்களிப்பை கவனத்தில் கொள்ளாது அறியாமை காரணமாகவும், சமயக் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் நபிகளார் மீதும், இஸ்லாத்தின் மீதும் கொண்ட வெறுப்புணர்ச்சி காரணமாகவும் கூறப்படும் குற்றச் சாட்டுகளே இவை.

ஒரு தாரமணம் ஒரு அறநெறிப் பண்பெனக் கூறும் மேற்கத்தியச் பிரச்சாரம் ஒரு புதிய கண்டுபிடிப்பே என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மத்திய காலத்தில் பலதார மணம் உலகெங்கும் இருந்து வந்தது. சமூக அந்தஸ்து எனக்கருதி நூற்றுக்கணக்கான மனைவியரைக் கொண்டிருந்தவர்கள் மேற்கத்திய சமூகத்தில் இருந்தனர். ஈஸா நபியைத் தவிர (ஜீஸஸ்) பெரும்பாலான நபிமார்கள் திருமணம் செய்து

கொண்டவர்களே. துறவிகள் கூட ஆசை நாயகிகளை வைத்திருந்தனர். அரேபியாவில் கால் நடைகளைக் காட்டிலும் பெண்கள் மோசமாக நடத்தப்பட்டனர். பிறந்த பெண் குழந்தைகளை தந்தைமார்களே கொன்றனர். சமூக வசதிக்காகவே திருமண உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. விவாகரத்துக்கள் பெருமளவில் இருந்தன. இன்றைய மேற்கத்திய நாகரீகத்தில் வரைமுறையற்ற பாலுறவுகள் (ஒருவர் பல பெண்களுடன் உறவு வைத்துக் கொள்வது) ஒரு விதியாகவே மாறிவிட்டன.

இன்றைக்கும் கூட உலகின் மேற்கு நாடுகளிலும் சரி கிழக்கு நாடுகளிலும் சரி, பலதாரமணம் முஸ்லிம்கள், முஸ்லிமல்லா தவர்கள் என அனைவரிடமும் உள்ளது. இவற்றில் சில சட்டப்பூர்வமானவை. சில சட்டத்திற்குப் புறம்பானவை. சில வெளிப்படையாகவும், சில ரகசியமாகவும் உள்ளன. திருமணமான பெரும் எண்ணிக்கையிலானோர் தனிப்பட்ட முறையில் ஆசை நாயகிகளை வைத்திருப்பதும், விரும்புகிற–வர்களின் இல்லங்களுக்குச் செல்வதும், பிற பெண்களுடன் வெளியே வலம் வருவதும் இன்றைக்கு வாடிக்கையான நிகழ்வுகளாகி விட்டன. இதனை அறிந்து கொள்ள ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை. அறநெறியாளர்கள் விரும்பு கிறார்களோ, இல்லையோ முறையற்ற பலதாரமணங்கள் இன்றைக்கு அங்கிங் கெனாதபடி எங்கும் உள்ளன.

## ஜூடிஸம்

பைபிள் மற்றும் தல்மூதிக் காலகட்டங்களில் இஸ்ர வேலர்கள் பலதார மணம் புரிபவர்களாகவே இருந்துள்ளனர். சிலருக்கு நூற்றுக்கும் மேற்பட்ட மனைவியரும் உண்டு. தல்முதீக் மொசைக் சட்டங்கள் பலதாரமணத்தை ஊக்குவித்துள்ளன அவர்களிடம் தோன்றிய பெரும்பாலான நபிமார்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர்கள் உண்டு.

விக்கி பீடியா தகவல்களின் படி, நபி இப்ராகிம்(அலை)

அவர்களுக்கு சாரா, ஹாஜிரா என இரு மனைவிமார்களும், நபி சுலைமான் (அலை) அவர்கட்கு 700 மனைவியர்களும், 300 ஆசை நாயகிகளும், யாகூப் நபியவர்களுக்கு நான்கு மனைவி யர்களும், தாவூத் நபியவர்களுக்கு எட்டு மனைவியர்களும், நபி மூஸா(அலை) அவர்களுக்கு நான்கு மனைவிகளும் (சஃபைர், கிப்சியா, பின்ட்கினி, பின்ட் ஹுபாப்) இருந்தனர். பிப்ளிகா கலைக் களஞ்சியத்தின் படி, ஒரு சாதாரண யூதன் நான்கு மனைவியரைத் திருமணம் செய்யலாம் எனும் நிலையும், ஒரு யூத மன்னர் பதினெட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் எனும் நிலையும் இருந்து வந்தது.

இந்த பலதார மண முறை ராபி ஜெர்ஷோம் பின் யாஹுதா காலம் வரை தொடர்ந்தது (கி.மு. 630 – 1030) அவர் தான் இந்த முறைக்கு எதிராக ஒரு பிரகடனம் வெளியிட்டார். யூத ஆடு மேய்க்கும் கூட்டத்தினர் கி.பி 1950 வரை இந்தப் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். பின்னர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்து கொள்ளக் கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டு பலதாரமணம் தடை செய்யப்பட்டது.

எனினும் கிறிஸ்துவ, யூத சமயங்கள் எப்போதும் ஒருதார மணக் கொள்கையையே கொண்டிருந்தன என்றோ, பலதார மணத்தை எதிர்த்து வந்தன என்றோ கூறுவது சரியாக இருக்காது. இப்போதும் இதே நிலைதான் என்று எஸ்.டி.கோய்டியன், (நூல் யூதர்களும் அரபிகளும்) எல்.டி.ஹாப்ஹவுஸ் (நூல் பரிணாம நெறி முறைகள்), ஈ.ஏ.வாஸ்டர்மார்க் (நூல்: திருமணம் பற்றிய வரலாறு) போன்ற யூத அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இடம் பெயர்ந்து வந்து இஸ்ரேலில் குடியேறிய யூதர்களின் பலதார மணம் காரணமாக அந்நாட்டு வீட்டு வசதி வாரிய அதிகாரிகளுக்குப் பெரும் தொல்லைகளும், பிரச்னைகளும் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்துவ அறிஞர்களின் நிலை நன்கு தெரிந்தது தான். ஆப்ரோ ஆசிய கிறிஸ்துவப் பாதிரிமார்களும் விபச்சாரம், மணமாகாத ஆண்–பெண் உறவு, படுக்கையைப் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றிற்கு மாற்றாகப்

பலதார மணத்திற்கு முன்னுரிமை கொடுத்தனர். கடுமையான ஒரு தாரமணத்திற்கும், விபச்சாரம், ஒருபால் உறவு, களவு வாழ்க்கை, துரோக வாழ்க்கை, பாலுறவு விருப்பமின்மை ஆகியவற்றுக்கு–முள்ள தொடர்புகளையும் சம்பந்தங்களையும் ஆராய்ந்தால் பல விஷயங்கள் வெளிப்படும். கிரேக்க–ரோம் மற்றும் யூத–கிறிஸ்துவ நாகரீகம் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் இது சம்பந்தமாக மேலும் பல தெளிவான விளக்கங்கங்களை நமக்குத் தருகின்றன.

## கிறிஸ்துவம்

பைபிள் அருளப்பட்ட காலத்தில், பலதார மணம் புழக்கத்தில் பெருமளவு இருந்து வந்தது. நபி ஈஸா (அலை) அவர்கள் பலதாரமணத்தை எதிர்த்துப் பேசியதாகத் தெரியவில்லை. அது சமய, சமுதாய, தார்மீக ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பழக்கமாகவே இருந்து வந்துள்ளது. அதற்குத் தடை எதுவும் இல்லை. இதனால் பைபிளில் இது பற்றி எதுவும் கூறப்படவில்லை. பைபிள் இதனைத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ, முறைப்படுத்தவோ இல்லை. பைபிளில் கூறப்பட்டுள்ள பத்து கன்னிப் பெண்களின் கதையை, ஒரே நேரத்தில் பத்துப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதற்கான அனுமதி எனச் சிலர் எடுத்துக் கொண்டுள்ளனர். இது சம்பந்தமாக பைபிளில் கூறப்பட்டுள்ள நபிமார்கள், அரசர்கள், குலத்தலைவர்கள் ஆகியோரின் கதைகள் நம்ப முடியாதவைகளாக உள்ளன.

ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொண்ட கிறிஸ்துவ அரசர்களின் கதைகள் ஏராளமாக உள்ளன. பிரடெரிக் வில்ஹெல்ம் II, மற்றும் பிலிப் ஆகியோர் சர்ச் மற்றும் செயின்ட் லூதர் அனுமதி பெற்று ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொண்டனர். கி.பி.1650ல் நூரம்பர்க்கில் நடைபெற்ற மாநாட்டில், மக்கள் தொகை குறைவுப் பிரச்சனையைச் சமாளிக்க ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ளலாம் என்று

அனுமதி வழங்கப்பட்டது. 17ம் நூற்றாண்டு வரை, கிறிஸ்துவ சர்ச்சுகளால் பலதார மணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறையில் இருந்தது. மார்மோன்ஸ் (ஜீஸன் கிறிஸ்துவின் பிந்தைய கால துறவிகளின் சர்ச்) பலதார மணத்திற்கு அனுமதி வழங்கியது. அவர்களும் பலதார மணம் புரிந்தனர். இதிலிருந்து பலதாரமணம் ஒரு சட்டப்பூர்வமான முறையாக அனைத்து நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதையும், யூதர்களின் நபிமார்களும் பலதார மணம் புரிந்துள்ளனர் என்பதும், நபி ஈஸா (இயேசு கிறிஸ்து) அதனை எதிர்க்கவில்லை என்பதும் தெரியவருகிறது.

ஒரு தார மணம், புனித பால் காலத்தில் தான் கிறிஸ்துவ சமுதாயத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. அப்போது தான் கிறிஸ்துவ சமயத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. கிரேக்க ரோமானியக் கலாச்சாரத்திற்கேற்ப இந்த மாற்றம் செய்யப்–பட்டது. இந்தக் கலாச்சாரத்திற்குட்பட்டிருந்த மக்கள் ஒருதார மணத்தைக் கடைப்பிடித்த போதிலும் தங்களிடமிருந்த அடிமைப் பெண்களை தங்கள் விருப்பம் போல் அனுபவித்தனர். சுருங்கச் சொன்னால், அவர்கள் வரைமுறையற்ற பலதார மணத்தைக் கடைப்பிடித்தனர். ஆரம்பகாலக் கிறிஸ்துவர்கள் பெண்களைப் பாவம் நிறைந்தவர்கள்' என்றும், திருமணம் செய்யாமலிருப்பதே ஆண்களுக்கு நல்லது என்றும் கருத்துக் கொண்டிருந்தனர். இது, மனித சமுதாயத்தின் முடிவுக்கு வழிவகுக்கும் என்பதால், தங்களது கருத்துக்களோடு சமரசம் செய்து கொண்டு, ஒருவரை மட்டும் மணந்து கொள்ளுங்கள் என்று கூற ஆரம்பித்தனர்.

## ஹிந்துயிஸம்

புராதன காலத்திலிருந்து, பலதார மணம் என்பது மனித சமுதாயத்தில் நடைமுறையிலிருந்த ஒரு பழக்கமாகவே இருந்து வந்துள்ளது. உலகில் தோன்றிய எந்த நாகரீகமும் இந்தப் பழக்கத்திற்கு விதிவிலக்காக இல்லை. புராதன இந்தியாவில் பல பெண்களை மணப்பது ஒரு அனுமதிக்கப் பட்ட பழக்கமாக

இருந்ததோடு மட்டுமல்லாது பலரும் அப்பழக்கத்தைக் கடைப்பிடித்தனர். பல ஹிந்து கடவுள்களும், அவதாரங்களும் பலதார மணம் புரிந்து கொண்டிருந்ததாக ஹிந்துப் புராணங்களும், ரிக்வேதம் போன்ற வேத நூல்களும் கூறுகின்றன. இராமனின் தந்தையான தசரத மகாராஜாவுக்கு கௌசல்யா, சுமத்ரா, கைகேயி என மூன்று மனைவியர்கள் இருந்தனர். ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு 16100 மனைவியர்கள் இருந்தனர் அவர்களில் ராதை, ருக்மணி, சத்யபாமா, ஜம்பாவதி, சத்யா, லக்ஷ்மணா, காளிந்தி, பத்ரா, மித்ரவிந்தா ஆகியோர் முக்கியமானவர்கள்.

ஹிந்து சமய நூல்களான வேதங்களிலும் சரி மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களிலும் சரி, பகவத் கீதையிலும் சரி ஒருவர் எத்தனை பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று எந்த வரையறையும் சொல்லப்படவில்லை. இந்த வேத நூல்களின் படி ஒருவர் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். 1955 ஆம் ஆண்டு ஹிந்து திருமணச் சட்டம் நடை முறைக்கு வந்த பிறகுதான், ஹிந்துக்களிடையே பலதாரமணம் தடை செய்யப்பட்டது. தற்போது, இந்தியச் சட்டத்தின் படி தான் ஹிந்துக்களிடையே பலதார மணம் தடை செய்யப்பட்டுள்ளதே தவிர, ஹிந்து வேதங்களில் கூறப்பட்டுள்ள உபதேசங்களின் அடிப்படையில் அல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## மேற்கத்திய சமூகம்

மேற்கத்திய சமூகத்தில், கணவன் – மனைவி உறவில் சிக்கல் நேரிடுகின்ற போது, கணவன், மனைவியை விட்டு விலகிச் சென்று விடுகிறான். பிறகு வேறொரு பெண்ணுடன் திருமணம் செய்து கொள்ளாமலேயே சேர்ந்து வாழ்கிறான். மேற்கு நாடுகளில் மூன்று வகையான பலதார மணம் கடைப்பிடிக்கப்படுகிறது.

1) தொடர் பலதார மணம்: இது, திருமணம் – விவாகரத்து பின்னர் திருமணம் – மீண்டும் விவாகரத்து எனும் நிலையில்

அமைந்தது. 2) ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டுள்ள ஒரு ஆண், ஒன்றுக்கு மேற்பட்ட பிற பெண்களுடன் உறவு கொண்டிருப்பது (3) திருமணம் ஆகாத ஒருவன் பல பெண்களுடன் தொடர்பு கொண்டிருப்பது.

மேற்கு நாடுகள் இதனை அனுமதிக்காத போதிலும், நடைமுறையில் அது ஒரு பலதாரமண சமூகமாகவே உள்ளது. இது பற்றி டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் மேற்குலகில் ஒரு தார மணமே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நடைமுறையில் எந்தப் பொறுப்பையும் ஏற்காத ஒரு பலதார மணச் சமூகமே உள்ளது. சலித்துப் போனவுடன் பெண்ணைக் ஆண் கைவிட்டு விடுகிறான். அவள் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அவளது எதிர்காலத்திற்கு முதல் காதலன் எந்தப் பொறுப்பும் ஏற்பதில்லை.

ஒரு பலதார மணக் குடும்பத்தில் வாழ்கின்ற பெண்ணை விட அவளது நிலைமை நூறு மடங்கு மோசமாக உள்ளது. அத்தகைய ஆயிரக்கணக்கான அபலைப் பெண்கள் மேற்கு நாடுகளின் வீதிகளில் இரவு நேரத்தில் குவிந்து கிடக்கின்ற காட்சியினை நாம் பார்க்கின்ற போது, பலதார மணத்தைப் பற்றி நிந்தித்துப்பேச மேற்கு நாடுகளைச் சார்ந்தவர்கட்கு எந்தத் தகுதியும் இல்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

தெருக்களில் அலைந்து கொண்டு சட்டத்திற்கு புறம்பான குழந்தையை வைத்துக் கொண்டு வீடின்றி கவனிப்பாரற்று தெருவில் வருவோர் போவோரெல்லாம் இகழத் தக்க வாழ்க்கை வாழ்வதைக் காட்டிலும், பலதார மணக் குடும்பம் ஒன்றில், குழந்தைகளுடன் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் வாழ்வது தான் ஒரு பெண்ணுக்கு நல்லதாகும்'" என்று கூறியுள்ளார்.

சம்மதத்தின் பேரில் வயதுக்கு வந்தவர்கள் வரைமுறையற்ற பாலியல் உறவுகளில் ஈடுபடுவதை அனுமதிக்கும் மேற்கத்திய சமூகத்தில் தகப்பனற்ற குழந்தைகளும், திருமணமாகாத இளம்

தாய்மார்களும் நிறைந்து காணப்படுகின்றனர். இவர்கள் சமூகத்தில் பெரும் சுமையாகக் கருதப்படுகின்றனர். சில மேலை நாட்டுக்காரர்கள், ஒரு தார மணம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது என்று கூறுகின்றனர். ஆனால், இவர்கள் உண்மையிலேயே பெண்களின் உரிமைகளைப் பற்றிக் கவலைப் படுகிறார்களா? பெண்களைச் சுரண்டுகின்ற, நசுக்குகின்ற பல நடைமுறைகள் இன்றைய சமூக அமைப்பில் உள்ளன. இதன் காரணமாகப் பெண் விடுதலை இயக்கங்கள் தோன்றியுள்ளன. பல பெண்ணிய வாதிகளும் உருவாகியுள்ளனர்.

மேற்கத்திய சமூக அமைப்பில் ஒருதார மணம் ஆண்களைப் பாதுகாத்து அவர்கள் எந்த விதமான பொறுப்புணர்வுமின்றி சுற்றிலும் 'மேய்ந்திட' வழி வகுக்கிறது, எளிதான, சட்டரீதியான கருக்கலைப்பு, முறையற்ற பாலியல் உறவுக்கான கதவுகளைப் பெண்களுக்குத் திறந்து விட்டுள்ளது இதனையே பாலுறவுப் புரட்சி என அழைக்கின்றனர். ஆனால் அவளோ குடும்பக் கட்டுப்பாட்டு முறையின் தொல்லை களையும், கருக்கலைப்–பினால் ஏற்படும் பின்விளைவுகளையும் சந்திக்க வேண்டியுள்ளது.

பால்வினை, எய்ட்ஸ் போன்ற நோய்களால், பெண்கள் பாதிக்கப்படும் நிலையில், ஆண்கள் எந்த விதமான கவலையுமின்றி சுதந்திரமாக இருக்கிறார்கள். ஒரு தார மணம் காரணமாக ஆண்கள் பாதுகாப்புப் பெறும் போது, பெண்கள் தொடர்ந்து ஆண்களின் ஆசைக்குப் பலியாகிக் கொண்டிருக்–கிறார்கள். பலதார மணம் ஆணாதிக்க சமுதாயத்தால் பெரிதும் எதிர்க்கப்படுகிறது. இதற்குக் காரணம் அது ஆண்களைப் பொறுப்பாளிகளாகவும், நன் நடத்தையாளர்களாகவும் இருக்கும்படி கட்டாயப்படுத்துகிறது.

பலதார மணம் செய்து கொண்ட ஆண்களுக்கு தங்களது மனைவிகளையும், குழந்தைகளையும் பராமரித்துப் பாதுகாக்கின்ற பெரும் பொறுப்பு உள்ளது. இதிலிருந்து அவர்கள் தப்பிக்க இயலாது.

# இஸ்லாம்

மேற்குலகிலும் சரி, கிழக்குலகிலும் சரி, ஒரு முஸ்லிம் உடல் இச்சை உள்ளவன் என்றும், முஸ்லிம்கள் வரையறைக்குட்பட்டோ அல்லது வரையறையின்றியோ பெண்களைத் திருமணம் செய்து கொள்பவர்களென்றும் ஒரு கருத்து நிலவி வருகிறது. கணக்கற்ற மனைவியர்களைக் கொண்டிருக்க முஸ்லிம்கள் முழு சுதந்திரம் பெற்றுள்ளனர் என்றும், அது ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு மாறுவது போல் எளிதானதென்றும் அவர்கள் நினைக்கின்றனர். உணர்ச்சியைக் கிளறக்கூடிய சில திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கதைகள், மலிவு விலைக் கதைகள், ஊடகங்களின் தவறான சித்தரிப்பு, சில முஸ்லிம் தனி நபர்களின் பொறுப்பற்ற போக்கு ஆகிய காரணங்களாலேயே இது போன்ற கருத்துக்கள் வேரூன்றியுள்ளன.

துரதிருஷ்டவசமாக, குர்ஆன் கற்பித்துள்ளதற்கும், நபிகளாரின் வழிகாட்டுதலுக்கும் மாறாக சில முஸ்லிம் அரசர்கள் எந்த விதமான குற்ற உணர்வுமின்றி நடந்து கொண்டு அதன் மூலம் நபிகளாரின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தி இதுபோன்ற ஒரு தவறான பிரச்சாரம் செய்யப்பட வழிவகுத்து விட்டனர். இதன் விளைவு என்ன வென்றால், இது போன்ற பிரச்சாரம் காரணமாக பல லட்சக்கணக்கான மக்கள் இஸ்லாத்தின் பிரகாசமான ஒளியை அதன் தத்துவார்த்தமான கொள்கைகளைப் பார்ப்பதினின்றும் தடுக்கப்பட்டுள்ளனர். அத்தகைய எண்ணம் கொண்டவர் களுக்காகவே கீழ்க்கண்ட விளக்கங்கள் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. இதனை நன்கு படித்து சுயமாக ஒரு முடிவுக்கு வரலாம்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இஸ்லாத்தை மக்களிடம் எடுத்துரைத்த போது, அந்த சமூகத்தில் பலதார மணம் பரவலாக இருந்தது. அந்தப் பழக்கம் ஆழமாக வேர் விட்டிருந்தது. குர்ஆன் இந்தப் பழக்கத்தை புறக்கணித்து. அதனைக் கைவிடச்

சொல்லவில்லை. அல்லது அதனை எந்த விதமான வரை முறையுமின்றி தொடரச் சொல்லவும் இல்லை. பலதார மணத்திலுள்ள குழப்பங்களையோ, பொறுப்பற்ற தன்மைகளையோ குர்ஆன் கண்டு கொள்ளாமலில்லை. பொறுத்துக் கொள்ளவும் இல்லை.

ஏற்கனவே அப்போது நிலவி வந்த சமுதாயம் பழக்க வழக்கங்களையும் நடை முறைகளையும் நெறிப்படுத்தியது போல் இந்த முறையையும் செம்மைப்படுத்தி அதிலுள்ள தீமைகளை அகற்றி நன்மைகளை உறுதி செய்திட குர்ஆன் வழிவகை செய்தது. சமூகத்தின் அடித்தளமாக இருக்கும் குடும்ப அமைப்பில் எந்த விதமான குழப்பமும் நேராது பாதுகாத்து அதனை நேர் செய்யவே குர்ஆன் இந்த விஷயத்தில் தலையிட்டது. ஒருவரை மட்டுமே மணந்து கொள்ளுங்கள் என்று சொன்ன ஒரே சமய வேதநூல் திருக்குர்ஆனே ஆகும்.

திருக்குர்ஆனின் மூன்றாவது அத்தியாயமான அந்–நிஸாவில் வரும் கீழ்க்கண்ட இறைவசனங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

> ‘உங்கள் மனதிற்கு விருப்பமான இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு பெண்களைத் திருமணத் செய்து கொள்ளுங்கள். அவர்களிடம் நீதமாக நடந்து கொள்ளமுடியாது என்று நீங்கள் அஞ்சும் பட்சத்தில் ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளுங்கள்.’

குர்ஆன் வசனங்கள் அருளப்படுவதற்கு முன்னர், பலதார மணத்திற்கு எந்தவிதமான அதிகபட்ச வரம்பும் இல்லை. ஆண்கள் பல மனைவியரைத் திருமணம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் குர்ஆன், நான்கு மனைவியர்கட்கு மேல் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று உச்சவரம்பு விதித்தது. அதற்கும் பல நிபந்தனைகளை விதித்துள்ளது. ஒரு மனிதன் தனது அனைத்து மனைவியர்களையும் சமமாக நடத்த வேண்டும்.

அவர்களிடம் பிரியம் காட்டுவதிலும் சமமாக நடந்து கொள்ள வேண்டும். ஆனால் அப்படி மனிதர்களால் நடந்து கொள்ள முடியாது என்பதையும் குர்ஆன் தெளிவுபடுத்தியுள்ளது.

> மனைவியர்களுக்கிடையே முழுக்க முழுக்க நீதியாக நடந்து கொள்ள நீங்கள் விரும்பினாலும், அது உங்களால் முடியாது. எனவே நீங்கள் (ஒரு மனைவியின் பக்கமே) முற்றிலும் சாய்ந்து மற்றவளை அந்தரத்தில் விடப்பட்டவள் போல் ஒதுக்கிவிடாதீர். (திருக்குர்ஆன் *4:129*)

நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்பதையே இது வலியுறுத்துகிறது. ஆனால் சில விசேட சூழ்நிலைகளில் இஸ்லாம் பல தார மணத்தை அனுமதிக்கிறது அவையாவன.

1. மனைவி குழந்தை பெற இயலாத மலட்டுத் தன்மை கொண்டவளாக இருக்கிறாள். ஆனால் கணவன் குழந்தை வேண்டுமென விரும்புகிறான். இந்தச் சூழ்நிலையில் மலட்டுத் தன்மை கொண்ட மனைவியை விவாகரத்துச் செய்வதை விட, இரண்டாவதாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் கணவனின் இந்த இரண்டாம் திருமணம் காரணமாக, முதல் மனைவி அவனிடமிருந்து பிரிந்து செல்ல விரும்பினால் அவள் அவ்வாறு செல்லலாம்.

2. முதல் மனைவி கடும் நோயால் பாதிக்கப்பட்டு தன்னுடைய திருமண உறவுகளையோ, குடும்பக் கடமைகளையோ நிறைவேற்ற இயலாத நிலை இருக்குமானால் குடும்பத்தின் ஸ்திரத்தன்மையை கருத்தில் கொண்டு கணவன் இரண்டாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம்.

3. ஆண்களை விடப் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடிய ஒரு சமூகத்தில் பலதாரமணம் ஒரு தீர்வாக இருக்கக்கூடும். சாதாரணமாக இந்தச் சூழ்நிலை ஒரு போருக்குப் பின்னர் தான் ஏற்படும். உஹதுப்போரின் போது

முஸ்லிம் ஆண்கள் பலர் கொல்லப்பட்டதன் காரணமாக அவர்களது மனைவியர் விதவைகளாயினர். குழந்தைகள் அனாதைகளாகினர். எனவே அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் பிற முஸ்லிம்கட்கு ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் தான் பலதாரமணம் பற்றிய இறைவசனங்கள் அருளப்பட்டன. அந்த விதவைகளையும், குழந்தைகளையும் பாதுகாத்திட திருமணம் ஒரு சிறந்த வழியாக இருந்தது.

4. முதலாம், இரண்டாம் உலகப் போர்களில் கலந்து கொண்ட நாடுகளில் பெண்களின் விகிதாச்சாரம் ஆண்களை விட அதிகமாக இருந்தது. அனைத்து மனைவியர்களையும் நியாயமாக நடத்துவதற்குரிய தகுதியும், திறனும் பெற்றிருக்கக் கூடிய ஆண்கள், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர்களை மணந்து கொள்வதே இந்தச் சூழ்நிலையில் ஒரு சிறந்த தீர்வாக இருக்க முடியும். திருமணம் என்ற பந்தமில்லாமல் மிக அதிக எண்ணிக்கையிலான பெண்களைத் அப்படியே விட்டு விடுவது நல்லதல்ல.

5. திருமணத்திற்கு அப்பாற்பட்ட பாலுறவை இஸ்லாம் தடுக்கிறது. 'ஆசை நாயகிகள்' என்ற வார்த்தைக்கு இஸ்லாத்தில் இடம் இல்லை. இஸ்லாம் ஆண்களுக்கு கண்ணியத்தை அளித்துள்ளது. அதிகமான ஆசை நாயகிகளை வைத்திருப்பதைவிட, ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருப்பது ஒரு கண்ணியமான முறையாகும் நம்முடைய செயல்களுக்கு நாம் தான் பொறுப்பேற்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. பெண்களை அனுபவித்து விட்டுத் தந்தைக்குரிய கடமைகளைச் செய்யாமல் தவிர்ப்பது மனிதத் தன்மைக்கு எதிரானது. நியாயமற்றது.

6. இரண்டாவது மனைவியாக வரப்போகிற பெண், அவனுக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருக்கிறாள் என்ற காரணத்தைக் காட்டி திருமணம் செய்து கொள்ள மறுக்கலாம். ஆனால் ஒருவனின் முதல் மனைவி தனது கணவனின் இரண்டாவது

திருமணத்திற்கு ஒப்புதல் கொடுத்து, இரண்டாவது மனைவியாக வரப்போகிறவளும் சம்மதம் தெரிவித்து விட்டால், மற்றவர்கள் ஏன் அதனை ஆட்சேபிக்க வேண்டும்?

இரண்டு மனைவியர்களை மணந்து கொண்ட ஒருவன், ஒரு மனைவி மீது மட்டும் அதிகப் பிரியம் காட்டினால், இறுதித் தீர்ப்பு நாளின் போது அவன் ஒரு பக்க புஜம் சாய்ந்தவனாக வருவான் (ஊனமுற்றவன் போல) என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். இஸ்லாம் ஒரு தார மணத்தை விதியாகவும், பலதார மணத்தை சில அசாதாரணமான சூழ்நிலைகளில் செய்ய வேண்டிய ஒரு விதிவிலக்காகவும் கருதுகிறது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாக இமாம் அபூ ஹனிபா அவர்கள் கூறுவதாவது:–'ஒரு மனைவியுடையவன் மகிழ்ச்சியாக, திருப்திகரமாக வாழ்கிறான். இரண்டு மனைவிகள் உடையவன் பிரச்னைகளிலும், சிக்கல்களிலும் உழன்று தவிக்கிறான்'. பொதுவாக, ஒரு தார மணம் தான் உலகெங்கி–லுமுள்ள முஸ்லிம்களிடம் வழக்கில் உள்ளது. எனவே இஸ்லாத்தில் பலதார மணம் என்பது ஒரு விதியல்ல. அது ஒரு விதி விலக்கே. நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஒரு அனுமதியே அது. நம்பிக்கை சார்ந்த தன்று. தேவை சார்ந்ததுமன்று.

முஸ்லிம்கள் நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்வது கட்டாயம் என்று அநேகர் தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமான இறை வசனங்கள் உஹதுப் போருக்குப் பின்னர் அருளப்பட்டன. இப்போரில் ஆண்கள் அதிகம் கொல்லப்பட்டதால், விதவைகளும், அநாதைகளும் உருவாகினர். அவர்களைப் பாதுகாப்பது வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் கடமையாக இருந்தது. அத்தகைய விதவைகளையும், அநாதைகளையும், பாதுகாக்கவே திருமணம் ஒரு வழியாகக் கருதப்பட்டது.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது, பலதார மணத்தை இஸ்லாம் அறிமுகப்படுத்தவில்லை என்பதையும், இஸ்லாத்தில்

கூறப்பட்டுள்ள பலதார மணம் ஒரு கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு விதியாக வலியுறுத்தப் படவில்லை என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும். இஸ்லாம் அதனை ஒழிக்கவில்லை. ஒழித்திருந்தால் அது பெயரளவில் இருக்குமே தவிர நடைமுறைக்கு வராது. இன்றைக்கும் கூட, தங்களது அரசியல் சட்டமோ அல்லது சமூக நிலையோ அங்கீகரிக்கா விட்டாலும் கூட பலர் பலதார மணம் புரிந்து கொண்டுள்ளதை நாம் பார்க்கமுடிகிறது. கடைப்பிடிக்க வேண்டியவற்றை மட்டுமே இஸ்லாம் கூறியுள்ளது. வெறும் தாளில் மட்டும் இருந்து கொண்டு நடை முறைக்கு ஒவ்வாத எந்தக் கொள்கையையும் இஸ்லாம் சொல்லவில்லை. எதார்த்தமான, நடைமுறைக்குச் சாத்தியமான வாழ்க்கை முறையையே இஸ்லாம் வலியுறுத்துகிறது. எனவே தான் அது நிபந்தனைகளுக்கு உட்பட்ட பலதார மணத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மனித சமுதாயத்திற்கு நன்மை பயக்காது என்ற நிலை இருக்குமானால், இறைவன் நிச்சயம் பலதார மணத்திற்கு அனுமதி வழங்கியிருக்கமாட்டான். இறைவனைத் தவிர வேறு யார் இதனை அதிகம் அறிவார்கள்?

# விதவைகள் மற்றும் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களின் மறுமணம்

ஏன் இஸ்லாம் பல தார மணத்தை அனுமதித்துள்ளது. ஏன் விதவைகள் மற்றும் விவாக விலக்கான பெண்களின் மறு மணத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதற்கான காரணங்களை யாரும் கற்பனை செய்ய இயலாது. காரணங்கள் உண்மையானவை. எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும் அவற்றை நாம் காணமுடியும்.

என்சைக்ளோ பிரிட்டானிகா கூற்றுப்படி பொதுவாக எந்த ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திலும் பெண்களின் இறப்பு ஆண்களின் இறப்பை விடக் குறைவாகவே உள்ளது. சமுதாய, அரசியல் காரணங்களினால், விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. போர்கள், விபத்துக்கள், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் சிறை வாசம் ஆகியனவே இதற்கு முக்கியக் காரணங்களாகும். முதல் உலகப் போரின் போது 80 லட்சம் வீரர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும் பான்மையோர் ஆண்களே. இரண்டாம் உலகப் போரின் போது 6 கோடிப்பேர் கொல்லப்பட்டனர். பலர் அங்கஹீனமாயினர். இவர்களில் பெரும் பான்மையோர் ஆண்களே.

ஈராக் – ஈரான் போரின் போது (1979 – 1988) பத்தாண்டுகள் கால இடைவெளியில் 82,000 ஈரானியப் பெண்களும், ஒருலட்சம் ஈராக் பெண்களும் விதவைகளாயினர்.

தெருக்களில் ஒவ்வொரு நாளும் விபத்து நடக்காத நாளே இல்லை என்று சொல்லாம். இந்தியாவில் 2009 ஆம் ஆண்டில் மட்டும் 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் சாலை விபத்துக்களில் மரணமடைந்ததாக சமீபத்திய அறிக்கையில் சொல்லப்–பட்டுள்ளது. இவற்றில் 77 சதவிகிதம் பேர் ஆண்கள். இருபத்து மூன்று சதவிகிதம் பேர் பெண்கள்.

சிறைக் கைதிகளில் பெரும்பாலோர் ஆண்களே. இது இன்னொரு முக்கியப் பிரச்னையாகும். அமெரிக்க அரசின் புள்ளி விவரத்துறையின் கணக்கின்படி அந்நாட்டில் உள்ள சிறைக் கைதிகள் 16 லட்சத்து 13ஆயிரத்து 740 பேரில் 15லட்சத்து 278பேர் ஆண்களே (அதாவது 92 சதவிகிதம்) பெண் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து13ஆயிரத்து 462பேர்கள் (அதாவது 8 சதவிகிதம் மட்டுமே) ஆதாரம்: 2009ஆம் ஆண்டு அமெரிக்க நீதி மற்றும் சிறைக்கைதிகள் துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரம். – ஹூதர் சி.வெஸ்ட்) சில குற்றவாளிகளுக்கு மரண தண்டனை, ஆயுள் தண்டனை உள்ளிட்ட தண்டனைகள் வழங்கப்படுகின்றன. ஒரு ஆரோக்கியமான சமுதாய அமைப்பில் பெண்களின் உரிமையை நிலை நாட்டிட முறையான, மனிதாபிமானமான தீர்வுகள் தேவைப்படுகின்றன.

இது போன்ற அசாதாரணமான சூழ்நிலைகளில் திருமண உறவுகளை முறித்துக் கொள்வதை இஸ்லாம் பரிந்துரைக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை வழங்கப்படும் சூழ்நிலைகளில் திருமண உறவு தானாகவே முறிந்து விடுகிறது. இது போன்று பாதிக்கப்பட்ட பெண்கள், புதிய கணவரை சட்டப்படி மணந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். இவ்வாறு பலதார மணம் இத்தகைய பெண்களைக் காப்பாற்றி அவர்களின் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க உதவுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உள்ள ஒரு சமுதாய அமைப்பில், பலதார மணம் தடை செய்யப்பட்டு ஒருவருக்கு ஒருத்தி என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், விதவைகள் மற்றும் விவாகரத்துப் பெற்ற பெண்களின் நிலை என்னவாகும்? எப்படி

எவ்வாறு அவர்கள் தாங்கள் விரும்பும் துணையைத் தேர்ந்தெடுக்க முடியும்? எப்படி அவர்கட்குப் பரிவும், புரிதலும், ஆதரவும், பாதுகாப்பும் கிடைக்கும்? இந்தப் பிரச்னையின் விளைவுகள் உடல் சார்ந்தவை மட்டுமல்ல. அவை தார்மீக நெறிமுறைகள், உணர்வுகள், இயற்கை விதிமுறைகள் சார்ந்தவைகளாகவும் உள்ளன. ஒரு சராசரிப் பெண், அவள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாலும், வெளிநாட்டில் பணி புரிந்தாலும், புலனாய்வுத் துறையில் பணியாற்றினாலும் அவளுக்குச் சொந்தமாக ஒரு வீடும், குடும்பமும் தேவை. தன்னைக் கவனித்துக் கொள்ள அவளுக்கு ஒருவர் நிச்சயம் தேவை. உடல் சார்ந்த நிலையில் இதனை நாம் அணுகினாலும் விளைவுகள் மிகவும் சிக்கலாகவே தென்படுகின்றன. அவற்றை நாம் புறக்கணிக்க முடியாது. இல்லையென்றால், மனரீதியிலான பிரச்னைகள், நரம்புத் தளர்ச்சி சமூகத்தின் மீது வெறுப்பு, மனத் தடுமாற்றம் போன்ற பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

இத்தகைய இயற்கையான விருப்பங்களையும், உணர்வுபூர்வமான அபிலாஷைகளையும் நாம் புரிந்து கொண்டாக வேண்டும். சொந்தம் என்று உரிமை கொண்டாடிட, கவனிக்கப்பட, கவனித்துக் கொள்ளப்பட அவளுக்கு ஒருவர் தேவைப்படுகிறார். ஒரு பெண் இது போன்ற ஒரு சூழ்நிலையில் தனது இயல்பை மாற்றிக் கொள்வதில்லை. அல்லது தேவதூதர்கள் வாழ்வது போன்ற ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில்லை.

வாழ்க்கையை அனுபவிப்பதற்கும், அதில் உரிய பங்கினைப் பெறவும் தங்களுக்கு உரிமை இருப்பதாகவே அவர்கள் நினைக்கிறார்கள். இவற்றை சட்டப்பூர்வமான, நெறி சார்ந்த முறையில் பெற முடியவில்லை என்றால், அவர்கள் தற்காலிகமான ஆபத்துக்கள் நிறைந்த வேறு வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிய திருக்கிறது. நிரந்தரமான, உறுதியான துணையின்றி வாழ்வது பெண்களுக்கு சிரமமான தாகவே இருக்கும். இது போன்ற சூழ்நிலைக்கு இலக்காகும்

பெண்கள், பதற்றமடைபவராகவோ அல்லது ஒரு கிளர்ச்சி யாளராகவோ அல்லது நெறிமுறைகளை மீறுபவராகவோ மாறி விடுகிறார்கள். கடந்த காலங்களில், கணவரை இழந்த பெண், கணவரின் சகோதரருக்கோ அல்லது அவளது வளர்ப்பு மகனுக்கோ வாரிசுச் சொத்துப் போல் வழங்கப் பட்டாள். அவர்கள் அவளை கொடூரமாக நடத்தினர். இந்திய சமூக அமைப்பில் கணவன் இறந்ததும், அவனது சிதையிலேயே மனைவியும் விழுந்து உயிர் துறப்பது வழக்கமாக இருந்தது. அவள் உயிர் வாழ வேண்டும் என்றால் உலக ஆசாபாசங் களிலிந்து விலகியிருந்து காலமெல்லாம் துன்பத்திலேயே உழல வேண்டும்.

ஆனால் இஸ்லாம், கணவனை இழந்த அல்லது விவாகரத்துப் பெற்ற பெண்கள், நான்கு மாதம் 10 நாட்கள் இத்தா (எனப்படும் 'காத்திருப்பு காலம்') இருக்க வேண்டும் என வரையறுத்துள்ளது. அதற்குப் பிறகு அவள் தன்னை அலங்கரித்துக் கொள்ளலாம். அவள் மறுமணம் செய்து கொள்ளலாம். இதற்கு குர்ஆன் அனுமதி வழங்கியுள்ளது.

# பெண்ணின் சம்மதம் இஸ்லாத்தின் நிலை

திருமணம் புரிந்து கொள்ள பெண்ணின் சம்மதம் கட்டாயத் தேவையாகும். பெண்ணின் சம்மதமின்றிச் செய்யப்படும் திருமணம் இஸ்லாத்தில் சட்டப்படியான திருமணமாக இருக்கமுடியாது. வற்புறுத்தி ஒரு பெண்ணை ஒரு ஆண் திருமணம் செய்து கொள்வதை இஸ்லாம் தடுத்துள்ளது. இஸ்லாமிய வரலாற்றில் ஒரு ஆண் ஒரு பெண்ணை அவளது விருப்பத்திற்கு மாறாக வற்புறுத்தித் திருமணம் செய்து கொண்ட எந்த ஒரு நிகழ்ச்சியையும் காண முடியாது. பெண்ணின் சம்மதத்தைப் பெறாமல் ஒருவன் அவளைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பெண்ணின் சம்மதத்தை பெறாமல் அவளது திருமணத்தை நடத்தி வைக்கக்கூடாது என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். ஒரு முறை ஒரு இளம் பெண் நபிகளாரிடம் வந்து தனது விருப்பத்திற்கு மாறாக தன்னுடைய தகப்பனார் தனக்கு திருமணம் செய்து வைத்ததாகப் புகார் கூறிய போது நபிகளார் அவளிடம் 'நீ இந்தத் திருமணப் பந்தத்திலேயே இருக்கலாம். அல்லது அதிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இருக் கலாம் அது உனது விருப்பம்' என்று தெரிவித்தார்கள். இதனை நபித் தோழர்களில் ஒருவரும், குர்ஆன் விரிவுரையாளருமான அப்துல்லாஹ் பின் அப்பாஸ்(ரலி) என்பவர் தெரிவிக்கிறார்.

அப்துல்லாஹ் தெரிவிக்கும் இன்னொரு நிகழ்ச்சி பரீரா என்ற

பெண்மணியையும் அவரது கணவர் 'முகீத்' என்ற ஒரு கருப்பு அடிமையையும் பற்றிதாகும். இந்தச் சம்பவம் பற்றி அவர் விவரிப்பதாவது:– 'முகீத்' மதீனா வழியாக பரீராவைப் பின் தொடர்ந்து வந்தார். அவர் அழுது கொண்டிருந்தார். அவரது தாடியின் வழியே கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. இதனைக் கண்ணுற்ற நபிகளார் அப்துல்லாஹ்வை நோக்கி "ஓ அப்துல்லாஹ், நீங்கள் பரீரா மீது முகீத் கொண்டிருக்கிற அன்பையும், முகீத் மீது பரீரா கொண்டிருக்கும் வெறுப்பையும் கண்டு வியப்படையவில்லையா?" என்று கேட்டார்கள். பின்னர் பரீராவை நோக்கி நீ முகீத்தை உன்னுடன் அழைத்துக் கொண்டு போ எனக் கூறிய போது அதற்கு அவள் 'இது இறைவனின் கட்டளையா?' எனக் கேட்க நபிகளார் 'இல்லை' இது ஒரு பரிந்துரை தான் என்று பதிலளித்தார்கள். இதனைக் கேட்ட பரீரா இந்தப் பரிந்துரை எனக்குத் தேவை இல்லை எனப் பணிவுடன் கூறி மறுத்து விட்டார்.

ஒரு சுவாரஸ்யமான பலதாரத் திருமணம் கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது. உத்பாவின் மகளான உம்மு அபன் என்பவரைத் திருமணம் செய்து கொள்ள நான்கு பேர்கள் விரும்பினர். உமர்(ரலி), அலீ(ரலி), சுபைர்(ரலி) மற்றும் தல்ஹா(ரலி) ஆகியோரே இந்த நால்வர். இவர்கள் ஏற்கனவே திருமணமானவர்கள். எனினும் உம்மு அபன், தல்ஹா(ரலி) அவர்களை திருமணம் புரிந்து கொண்டு மற்றவர்களை நிராகரித்து விட்டார்.

இஸ்லாத்தின் தலைநகராக விளங்கிய மதீனாவில் நடந்த இந்தச் சம்பவத்தில் கலீபா உமர்(ரலி) அவர்களும் அப் பெண்ணால் நிராகரிக்கப்பட்டவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இது குறித்து யாரும் வியப்படைய வில்லை, கோபமடையவில்லை. ஏனெனில் இஸ்லாத்தில் ஒரு பெண்ணுக்கு தனது விருப்பப்படி முடிவெடுக்க உரிமை உண்டு. இந்த உரிமையை அரசர் உள்ளிட்ட யாரும் அவளிடமிருந்து தட்டிப் பறிக்க முடியாது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளிலிருந்து அதிகபட்சமாக ஒருவர் நான்கு பெண்களை மணந்து கொள்ளலாம் என்று இஸ்லாம் வழங்கியுள்ள அனுமதியை ஒருவர் நான்கு பெண்களை மணந்து கொண்டு அனைவரையும் ஒரே வீட்டில் வைத்துப் பூட்டிக் கொள்ளும் உரிமையாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை உணர முடியும். திருமணம் பரஸ்பரம் சம்மதத்தின் அடிப்படையில் செய்ய வேண்டிய ஒன்றாகும். இரண்டாவது, மூன்றாவது மனைவியாக வர விரும்பும் பெண்ணையே அவளது விருப்பப்படி இரண்டாவது மூன்றாவது மனைவியாக ஏற்றுக் கொள்ள முடியும். இது பெண்ணின் சம்மதத்திலேயே அடங்கியிருக்கும் போது, யாரும் அது பற்றி ஆட்சேபம் கிளப்ப முடியாது.

விருப்ப உரிமைக்கு தற்போது மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இஸ்லாமியச் சட்டம் இதற்கு முழு ஆதரவு அளிக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பெண்ணியம் பற்றிப் பேசுபவர்கள் விருப்ப உரிமையைக் கட்டுப்படுத்தப்பட்ட உரிமையாக மாற்ற விரும்புகிறார்கள்.

# 24

# பலதார மணமும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பெயர் சொல்லப்படும் போதெல்லாம் அவர்கள் பல மனைவியரைக் கொண்டிருந் தவர்கள் என்ற பிம்பமே பலரது மனங்களில் உள்ளது. இந்த எண்ணம்தான் நபிகளாரைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்ளத்தடையாக இருக்கிறது. அதுவே பொறுப்பற்ற, முதிர்ச்சியற்ற முடிவுகளுக்கு சிலரை இட்டுச் செல்கிறது. இது நபிகளாருக்கோ, இஸ்லாத்திற்கோ பெருமை சேர்க்கவில்லை. இது பற்றிய சில உண்மைகளை தெரிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

திருமண முறைக்கு இஸ்லாத்தில் மிகுந்த மரியாதை அளிக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் வலுவான நிலைப்பாட்டிற்கு அது மிகவும் தேவையானது என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.

தங்களது 25 வயதில் முதல் திருமணம் செய்கின்ற வரை நபிகளார் எந்த ஒரு பெண்ணையும் தொட்டதில்லை. அப்போதைய மக்கா சமூகத்தில் உண்மையானவர் (அல் சாதிக்) நம்பிக்கையாளர் (அல்அமீன்) என்று புகழ் பெற்றிருந்த நபிகளார் மிகச்சிறந்த ஒரு வர்த்தகராகவும், பிரியமும் அன்பும் கொண்ட சிறந்த ஒரு நண்பராகவும், ஏழைகளையும், அநாதைகளையும் விதவை- களையும் பாதுகாப்பவராகவும் விளங்கினார்கள்.

## கதீஜா(ரலி)

நபிகளாரின் முதல் திருமணம், அவர்களை விட பதினைந்து வயது மூத்த நாற்பது வயது நிரம்பப் பெற்ற பாரம்பர்யப் பெருமை கொண்ட விதவைப் பெண்மணி கதீஜா(ரலி) அவர்களுடனேயே நிகழ்ந்தது. கதீஜா(ரலி) அவர்களே இந்த திருமணத்தை பிரேரித்-

தார்கள். கதீஜா(ரலி) தன்னை விட வயதில் மூத்தவராகவும், விதவையாகவும் இருந்த போதிலும் நபிகளார் அவரை ஏற்றுக் கொண்டார்கள். உடல் இச்சைக்கு முக்கியத்துவம் கொடுத் திருந்தால் நபிகளார் கதீஜாவுக்குப் பதிலாக வேறொரு ஒரு அழகிய இளம் பெண்ணை அந்த நேரத்தில் திருமணம் செய்திருக்க முடியும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், கதீஜா(ரலி) அவர்களுடன் மிகவும் மகிழ்ச்சியாக, திருப்திகரமாக சுமார் 25 ஆண்டுகள் காலம் வாழ்ந்தார்கள். ஒரு குழந்தையைத் தவிர அவர்களின் பிற குழந்தைகள் அனைவரும் கதீஜா(ரலி) அவர்கள் மூலமாக பிறந்தவர்களே. அவர் உயிரோடு இருந்த வரை நபிகளார் வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ளவில்லை. கதீஜா(ரலி) அவர்கள் பால் நபிகளார் கொண்டிருந்த அன்பு மிக ஆழமானது. அவர்கள் இறந்த போது நபிகளார் பெரிதும் துயரமடைந்தார்கள். அவர்களின் துயரத்தையும், வருத்தத்தையும் கண்ணுற்ற தோழர்களில் சிலர் மறுமணம் செய்து கொள்ள ஆலோசனை வழங்கிய போது நபிகளார் கதீஜாவுக்குப் பிறகு திருமணம் செய்வது பற்றி யார் எண்ணிட முடியும்' எனப் பதிலளித்தார்கள்.

## கதீஜா(ரலி) அவர்களின் பிணியும், இறப்பும்

குறைஷியத் தலைவர்களால் மூன்று ஆண்டு காலம் சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளான நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் வெளியுலகத் தொடர்பு இல்லாமல் வாழ நேர்ந்தது. அவை துயரம் மிகுந்த நாட்களாக இருந்தன. அப்போது விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் குழந்தைகள் மற்றும் பெண்களின் உடல் நலத்திற்குப் பெரிதும் ஊறு விளைவித்தன. புறக்கணிப்பு காரணமாகப் பெரிதும் பாதிக்கப்–பட்டிருந்த கதீஜா(ரலி) அவர்கள் சுகவீனமுற்றார்கள். கி.பி.619 டிசம்பர் மாதத்தில் மூன்று நாட்கள் உடல் நலமற்று இருந்த கதீஜா(ரலி) அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றார்கள். தனது மிகுந்த அன்பிற்குரிய துணைவியாரின் மரணம்

நபிகளாரைப் பெரிதும் துயரத்திற்குள்ளாக்கியது. வெறிபிடித்த குறைஷித் தலைவர்களால் நபிகளார் பெரும் சோதனை–களுக்கும், இன்னல்களுக்கும் ஆளானார்கள். அவர்களின் குடும்ப வாழ்க்கையும் சீர்குலைந்து போயிருந்தது. குழந்தைகள் மிகவும் இளையவர்களாக இருந்தார்கள். அவர்களைக் கவனித்துக் கொள்ள யாருமில்லை அவர்களது துயரத்தைக் கண்ணுற்ற தோழர்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள ஒரு விதவையும் சுகத்தையும், அன்பையும் கொடுக்க ஒரு கன்னிப் பெண்ணையும் திருமணம் செய்து கொள்ளுமாறு ஆலோசனை கூறினார்கள். அந்த ஆண்டிலேயே நபிகளார் சௌதா(ரலி) அவர்களையும் ஆயிஷா(ரலி) அவர்களையும் திருமணம் செய்து கொண்டார்கள்.

அவர்களது நண்பர்களால் முன் மொழியப்பட்ட இந்தத் திருமணங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும் அவர்கட்கு உறுதுணையாக இருந்து உதவி செய்திடவும் ஆக இந்த இரு தேவைகளுக்காகவும் செய்யப்பட்டன. இதில் எந்த வித அசாதாரணமான செய்தியும் இல்லை. அவர்களின் அப்போதையத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் சொல்லப்பட்ட ஆலோசனைகளை நபிகளார் ஏற்றுக் கொண்டார்கள்.

## சௌதா (ரலி)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் இரண்டாவது மனைவி சௌதா(ரலி) அவர்களும் ஒரு விதவையே. நபிகளாரின் ஆரம்ப காலத் தோழர்களாக அவரும் அவரது கணவரும் இருந்தனர். நபிகளாரின் ஆலோசனையின் பேரில் அவர்கள் இருவரும் அபிசீனியாவிற்கு இடம் பெயர்ந்து சென்றனர். நாடு திரும்பியவுடன் அவரது கணவர் மரணமடைந்து விட்டார். அவருக்கு ஒரு பாதுகாப்பு தேவைப்பட்டது. இஸ்லாத்திற்காகவே அவரது கணவர் உயிர் துறந்தார். எனவே அவர் புகலிடம் தேடி நபிகளாரிடம் வந்தார். அது ஒரு இயல்பான செயலே எனலாம்.

நபிகளார் அவரைத் திருமணம் செய்து புகலிடம் அளித்தார்கள். அப்போது சௌதா(ரலி)க்கு வயது நாற்பதைக் கடந்து விட்டிருந்தது. முதல் கணவர் மூலமாக அவருக்கு ஒரு மகன் இருந்தான். ஆனால் நபிகளார் மூலமாக அவருக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை.

## ஆயிஷா (ரலி)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் மூன்றாவது மனைவியான ஆயிஷா(ரலி), நபிகளாரின் நெருங்கிய தோழரான ஹழ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்களின் புதல்வியாவார். எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்ததில் முக்கியப் பங்கு வகித்த அபூபக்கர்(ரலி) அவர்களுடனான உறவு வலுப்படுத்தும் முகமாகவே நபிகளார் ஆயிஷா(ரலி) அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். தவிரவும், ஆயிஷா(ரலி) அவர்கள் புத்திக் கூர்மை மிக்கவராக இருந்தார். திருமணத்தின் போது ஆயிஷா(ரலி) அவர்களின் வயது எத்தனை என்பது பற்றி சர்ச்சை இருந்து வந்தது. ஆனால் தற்போதைய ஆய்வின் படி அவரது வயது15 அல்லது11 என்று தெரியவந்துள்ளது.

ஆயிஷா(ரலி) அவர்களுடன் நபிகளார் கொண்டிருந்த உறவு, பிற மனைவியர்கள் பால் அவர்கள் கொண்டிருந்த உறவிலிருந்து மாறுபட்டிருந்தது. அது உணர்வுப் பூர்வமாக இருந்ததை விடவும் அறிவுப் பூர்வமாக இருந்தது. ஏனெனில் அவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் அன்புடன் பேசுவார். விவாதங்களில் ஈடுபடுவார். விஷயங்களை அறிய விரும்பும் ஒரு மாணவரைப் போல் அவர் நடந்து கொண்டார். அதன் காரணமாகவே நபிகளார். ஆயிஷா(ரலி) அவர்களுடன் பிரியமாக நடந்து கொண்டார்கள். ஆயிஷா(ரலி) அவர்கள் மதீனாவில் நபிகளாருடன் இருந்தபோதுதான் மிக அதிகமான இறைவசனங்கள் அருளப்பட்டன. இதற்காக ஆயிஷா(ரலி) அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். இது இறைவன் தனக்கு அளித்த விசேட அந்தஸ்து என்றும் கருதினார்கள். பிறர்

அறிந்திராத தங்களது தனிப்பட்ட குண நலன்கள் பற்றியும், குடும்ப விஷயங்கள் பற்றியும் ஆயிஷா(ரலி) அவர்களால் தான் உலக மக்களுக்கு அதிகச் செய்திகளைத் தெரிவித்திட முடியும் என்பதை நபிகளார் அறிந்திருந்தார்கள்.

உண்மையில் இஸ்லாத்தைப் பற்றி பாதியளவேனும் தெரிய வேண்டுமானால், அதனை நீங்கள் ஆயிஷாவிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்று நபிகளார் தன்னுடைய தோழர்களிடம் கூறினார்கள். நபிகளாரின் இந்த தீர்க்கதரிசனம் உண்மை யாகிப்போனது. நபிகளாரின் இறப்பிற்குப் பின்னர் நாற்பத்தைந்து ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த ஆயிஷா(ரலி) அவர்கள், நபிகளாரின் ஞானமிக்க , அறிவுப்பூர்வமான பல செய்திகளை அறிவிப்பவராக விளங்கினார்கள். ஆயிஷா(ரலி) அவர்கள் 2210 ஹதீஸ்களை (நபிகளாரின் பொன்மொழிகளை) இவ்வுலகிற்கு வழங்கினார்கள். கொள்கை மற்றும் நீதி சார்ந்த விஷயங்களில் பலரும் அவர்களை அணுகி ஆலோசனை பெற்றார்கள். நபிகளார் 5 முதல் 6 ஆண்டுகள் வரை அதாவது தங்களது 56வது வயது வரை, சௌதா(ரலி), ஆயிஷா(ரலி) ஆகிய இரு மனைவியர்களிடமே வாழ்ந்தார்கள். இந்தக் கால கட்டத்தில் அவர்கள் வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ளவில்லை. 56வது வயதிலிருந்து 60வது வயதிற்குள் நபிகளார் பல்வேறு காரணங்களுக்காக 9 திருமணங்கள் செய்து கொண்டார்கள்.

## ஹப்ஸா (ரலி)

நபிகளாரின் நான்காவது மனைவியான ஹப்ஸா(ரலி) அவர்கள், அவர்களின் நெருங்கிய தோழர்களில் ஒருவரான உமர்(ரலி) அவர்களின் மகளாவார். அவரது முதல் கணவர் பத்றுப் போரில் மரணமடைந்து விட்டார். தனது மகளின் மீது அதிகப் பாசம் கொண்டிருந்த உமர்(ரலி) அவர்கள், உஸ்மான்(ரலி) அவர்களிடம் தனது மகளை மணந்து கொள்ளுமாறு வேண்டினார்கள். ஆனால் அவர் மறுத்து விட்டார். பின்னர் அவர் அபூபக்கர்(ரலி) அவர்களைக் கேட்டுக் கொண்டார், அவரும்

மறுத்து விட்டார். ஒரு வேளை ஹப்ஸா(ரலி) அவர்களின் சிடு குணம் காரணமாக அவரைத் திருமணம் செய்து கொள்ள உதுமான்(ரலி)அவர்களும், அபூபக்கர்(ரலி) அவர்களும் தயங்கியிருக்கக் கூடும். இதன் காரணமாக உமர்(ரலி) அவர்கள் மிகவும் வருத்தமுற்ற நிலையில் இருந்ததைக் கண்ணுற்ற நபிகளார், ஹப்ஸா(ரலி) அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

ஹப்ஸா(ரலி) அவர்கள் எளிதில் கோபமடையும் இயல்புடையவராக விளங்கினார். இந்த உண்மையை உமர்(ரலி) அவர்களே பதிவு செய்துள்ளார்கள். இது பற்றி உமர்(ரலி) குறிப்பிட்டதாவது:– 'ஒரு முறை எனது மனைவி ஏதோ விஷயம் பற்றி என்னிடம் தர்க்கித்துக் கொண்டிருந்தார். அதற்கு 'எனக்கு ஆலோசனை கூற நீ யார் என்று கேட்டேன். உடனே அவர் ஒரு சிறிய விஷயம் பற்றிக் கூட நான் பேசுவதற்கு நீங்கள் அனுமதிப்பதில்லை. ஆனால் உங்கள் மகள் ஹப்ஸா(ரலி) எல்லா விஷயங்களிலும் நபிகளாருடன் கடுமையாக விவாதம் செய்து கொண்டிருக்கிறாள் என்று கூறினார். உடனே நான் அங்கிருந்து கிளம்பிச் சென்று ஹப்ஸாவிடம் போய் 'நீ நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் கோபத்துடன் பேசுவது உண்மைதானா? என்று கேட்டேன். அதற்கு அவள் 'ஆம்' என்று பதிலளிக்கவே, நான் 'இது பற்றி உன்னை எச்சரிக்கிறேன். இறைவன் உன்னைத் தண்டிப்பான்' என்று கூறினேன்.

## ஜைனப் (ரலி)

நபிகளாரின் ஐந்தாவது மனைவியான ஜைனப்(ரலி) செல்வாக்கு மிக்க ஹவாஸின் இனக்குழுவைச் சார்ந்த 'குஸைமா' என்பவரின் மகளாவார். இவரும் ஒரு விதவையே. நபிகளார் அவரைத் திருமணம் செய்த போது அவரின் வயது60. ஜைனப்(ரலி) பெருந்தன்மையுடையவராகவும், தயாள சிந்தனை யுடையவராகவும், ஏழைகளுக்கும், தேவைப்பட்டவர்கட்கும் உணவளிப்பவராகவும் விளங்கினார். ஏழைகளின் தாய் என அவர்

அழைக்கப்பட்டார். ஆனால் திருமணமான மூன்று மாதங்களிலேயே அவர் மரணமடைந்து விட்டார்.

## உம்மு சல்மா (ரலி)

நபிகளாரின் ஆறாவது மனைவியான உம்மு சல்மாவும் ஒரு விதவையே அவர் பனூஃபிராஸ் என்ற சிறப்பிற்குரிய ஒரு குடும்பத்தில் பிறந்தவர். ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர். ஆனால் அவரது கணவர் மதீனாவிற்குச் சென்ற போது அவரையும், அவரது குழந்தையையும் உடன் செல்ல குறைஷியர்கள் அனுமதிக்க வில்லை. குறைஷியர்கள் முஸ்லிம்கள் மீது நிகழ்த்திய கொடுமைகளில் இதுவும் ஒரு முறையாகும். சில காலத்திற்குப் பிறகு அவர் மதீனாவிற்குத் தப்பிச் சென்றார். ஆனால் அவர் மதீனா சென்ற சில நாட்களிலேயே அவரது கணவர் இஸ்லாத்திற்காக மரண மடைந்து விட்டார். ஏற்கனவே அவருக்கு நான்கு குழந்தைகள் இருந்தனர். கணவர் இறந்த போது அவர் கர்ப்பமாக இருந்தார். கணவரின் இறப்பு காரணமாக உம்மு சல்மா மிகுந்த துயரமும் வேதனையும் கொண்டிருந்தார். அவர்பால் பரிவு கொண்ட நபிகளார், அவரைத் திருமணம் புரிந்து கொண்டார்கள். குழந்தைகள் இருந்ததால் உம்மு சல்மா முதலில் திருமணம் செய்து கொள்ள மறுத்தார். நபிகளார் அவரது குழந்தை–களைத்தன் குழந்தைகள் போல் பார்த்துக் கொள்வதாக உறுதியளிக்கவே உம்மு சல்மா(ரலி) அவர்கள் திருமணத்திற்கு இசைவு தெரிவித்தார்கள்.

56 வயது நிரம்பிய ஒருவர், நான்கு குழந்தைகளுக்குத் தாயான ஒரு விதவையை மணந்து கொண்டதற்கு அன்பு, இரக்கம், கருணை இவற்றைத் தவிர வேறு என்ன நோக்கம் இருக்க முடியும்? வேறொரு முக்கிய அம்சமும் இத்திருமணத்தில் இருந்தது. அப்போது இஸ்லாத்திற்கு எதிரிகளாக விளங்கிய மக்காவிலிருந்த வலிமை மிக்க 'பனூ மக்ஸூம்' இனக் குழுவைச் சார்ந்த ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர் உம்மு சல்மா அவர்கள்.

இந்தத் திருமணத்தின் மூலம் அத்தகைய வலிமை மிக்க ஒரு இனக்குழுவை நபிகளார் இஸ்லாத்திற்கு மிக நெருக்கமாக்கிக் கொண்டார்கள். உம்மு சல்மா(ரலி) அவர்கள் மிகுந்த இறைபக்தி யுடையவர்கள். மாதத்தின் மூன்று நாட்களில் அவர்கள் நோன்பிருப்பார்கள். இரவு முழுமையும் தொழுது கொண்டே இருப்பார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சொல்வதைக் கவனமுடன் கேட்டு அதன்படி நடந்து கொண்டார்கள்.

## ஜைனப் (ரலி)

நபிகளாரின் ஏழாவது மனைவி ஜைனப்(ரலி) அவர்களாவார். மதீனாவிற்கு இடம் பெயர்ந்து வந்த போது அவர் ஒரு விதவையாக இருந்தார். அவரைத் தனது வளர்ப்பு மகன் ஸைது(ரலி) அவர்கட்கு நபிகளார் திருமணம் செய்து வைத்தார்கள். பின்னர் ஸைது(ரலி) ஜைனப்பை விவாகரத்துச் செய்த போது, நபிகளாரே அவரை மணந்து கொண்டார்கள். அப்போது ஜைனப்பிற்கு வயது 38. இந்தத் திருமணம் பற்றி நபிகளாரின் எதிர்ப்பாளர்கள் பெரிதும் விமர்சனம் செய்தார்கள். இரண்டு விஷயங்களை அவர்கள் எடுத்து வைத்தார்கள். ஒன்று தனது வளர்ப்பு மகனின் மனைவி என்பதால் ஜைனப் நபிகளாருக்கு மருமகள் போன்றவர். இரண்டாவது, தாம் மணந்து கொள்வதற்காக நபிகளார் இந்த மணவிலக்கு ஏற்பட (ஸைது–ஜைனப்) காரணமாக இருந்தார்கள். ஆனால் மிக ஆழமாக அலசிப் பார்க்கும் போது இந்த இரண்டு குற்றச்சாட்டுகளும் உண்மையற்றவை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஸைது(ரலி) நபிகளாரிடம் ஒரு அடிமையாகவே வந்து சேர்ந்தார். அவரை நபிகளார் விடுதலை செய்து தனது வளர்ப்பு மகனாக ஆக்கிக் கொண்டார்கள். அவரிடம் மிகவும் பிரியம் கொண்டிருந்த நபிகளார், அவருக்குத் தனது பெரிய தந்தையார் அபூதாலிப்பின் சகோதரி மகளான ஜைனப்(ரலி)யை திருமணம் செய்து வைத்தார்கள். ஆனால் ஜைனப் இந்தத் திருமணத்தில் மகிழ்ச்சியடையவில்லை. சமூக அந்தஸ்த்தில் இருவருக்கு

மிடையே உள்ள ஏற்றத் தாழ்வே இதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது.

இந்த மண முறிவுக்கு நபிகளாரே காரணமாக இருந்தார்கள் என்று சொல்லப்படுவதில் எந்த விதமான உண்மையுமில்லை. ஜைனப்(ரலி) நபிகளாருக்கு அன்னியரல்ல. அவர் தமது அத்தை மகளாக இருந்த காரணத்தால் குழந்தைப் பருவத்திலிருந்தே நபிகளார் அவரை அறிவார்கள். அவரது முதல் கணவர் இறந்த போது, அவருக்கு மறுவாழ்வு ஏற்படுத்தித் தரும் முயற்சியில் நபிகளார் ஈடுபட்டார்கள். அவரது அழகில் நபிகளார் ஈர்க்கப் பட்டிருந்தால், அவரை ஸைது(ரலி)க்கு திருமணம் செய்து வைத்திருக்கமாட்டார்கள்.

ஜைனப்(ரலி) ஸைது(ரலி)யுடன் சந்தோசமாக வாழ வில்லை. தான் ஒரு அடிமைக்கு மணமுடித்து வைக்கப்–பட்டுள்ளதாக எண்ணிய அவர், ஸைதிடம் நன் முறையில் நடந்து கொள்ள வில்லை. ஸைது(ரலி) பல தடவைகளில் ஜைனப்(ரலி) பற்றி நபிகளாரிடம் புகார் தெரிவித்தார். ஆனால் நபிகளார் அவரைப் பொறுமையுடனிருக்குமாறு வேண்டிக் கொண்டார்கள். இந்நிலையில் ஒரு நாள், ஜைனப்(ரலி)யின் நடத்தையால் கோபமுற்ற ஸைது(ரலி) அவரை விவாகரத்துச் செய்வதாக அறிவித்தார். இந்தச் சூழ்நிலையில் கீழ்க்கண்ட இறை வசனங்கள் அருளப்பட்டன.

> (மக்களே!) முஹம்மது உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையல்லர். ஆனால், அவர் அல்லாஹ்வின் தூதராகவும் இறுதி நபியாகவும் இருக்கின்றார். அல்லாஹ் ஒவ்வொன்றையும் அறிந்தவனாக இருக்கிறான் (குர்ஆன் *33:40*)

ஜைனப்(ரலி)யை திருமணம் செய்து கொள்ளுமாறு அவரது உறவினர்கள் நபிகளாரை வலியுறுத்தினார்கள். ஆனால் நபிகளார் இதற்குச் சம்மதிக்கவில்லை. அதைப் பற்றி எண்ணிப் பார்க்கக்கூட முடியாது என்று சொன்னார்கள். அவர் தனது

மகனின் மனைவி. முஸ்லிமல்லாத அரேபிய சமூகத்தைப் பொறுத்த அளவில் வளர்ப்பு மகனும் சொந்த மகனுக்குச் சமமானவரே. இந்தச் சூழ்நிலையில் தான், வளர்ப்பு மகன் சொந்த மகனல்ல என்ற இறைவசனங்கள் இறங்கின. இவ்வாறாக ஜைனப்பை மணந்து கொள்ள நபிகளாருக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஜைனப்புடனான இந்தத் திருமணம் வளர்ப்பு மகன்கள் உண்மையான மகன்களே என்று காலம் காலமாக நிலவி வந்த அரேபியப் பழக்கத்தை செல்லாததாக்கியது. இந்தத் திருமணம் இறைவனால் அனுமதிக்கப்பட்ட ஒன்று என்பதைக் கீழ்க்கண்ட இறைவசனம் உணர்த்துகிறது.

> ஸைது அவளுடைய விஷயத்தில் தம் நோக்கத்தை நிறைவேற்றிய போது, (விவாகரத்துச் செய்யப்பட்ட) அவளை உமக்கு நாம் மண முடித்து வைத்தோம்) (திருக்குர்ஆன் *33:37*)

பின்னர் ஜைனப்(ரலி) மண்டியிட்டு பிரார்த்தனை செய்தார்கள் 'ஓ இறைவனே! நான் அவருக்கு தகுதியானவராக இருந்தால் என்னை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்துவிடு. இந்த இறைவசனம் அருளப்பட்ட போது, இந்தத் திருமணத்திற்கு இறைவன் அனுமதி வழங்கி விட்டான் என்ற செய்தியை நபிகளார் ஜைனப்(ரலி) அவர்களுக்கு தெரிவித்தார்கள். இச் செய்தியைக் கேள்வியுற்ற ஜைனப்(ரலி) அவர்கள் மிக்க மகிழ்ச்சியுற்று, செய்தியைக் கொண்டு வந்த ஸலாமா' என்ற அடிமைச் சிறுமிக்குத் தான் அணிந்திருந்த நகை முழுவதையும் வழங்கினார்கள். பின்னர் மண்டியிட்டு இரண்டு மாதங்கள் நோன்பு நோற்கப் போவதாக உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

ஜைனப்(ரலி)யைத் திருமணம் செய்து கொண்டபோது, நபிகளார் மிகச் சிறந்த வரவேற்பு விருந்து வழங்கினார்கள். சுமார் *300*க்கும் மேற்பட்ட தோழர்களும் அவர்களது குடும்பத்தினரும் இந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

# ஜுவைரிய்யா(ரலி)

நபிகளாரின் எட்டாவது மனைவியான ஜுவைரிய்யா(ரலி) அவர்கள், செல்வாக்கு மிகுந்த பனூமுஸ்தலிக் இனக் குழுவைச் சார்ந்த 'ஹாரிஸ்' என்பவரின் மகளாவார். இதே கிளையைச் சார்ந்த ஒருவரை அவர் திருமணம் செய்திருந்தார். ஜுவைரிய்யா(ரலி) அவர்களின் கணவரும், தந்தையும் இஸ்லாத்திற்கு எதிராக இருந்தார்கள். ஜுவைரிய்யா போர்க் கைதியாக இருந்தார். அவரது தந்தையார் ஹாரிஸ் தயக்கத்துடன் நபிகளாரிடம் சென்று "'ஓ முஹம்மதே ஒரு குலத்தலைவராக இருக்கும் என்னுடைய மகள் ஒரு பணியாளராக இருப்பது என்னுடைய தகுதிக்கு ஏற்புடையதன்று. அவளை விடுதலை செய்யும்படி நான் உங்களைப் பணிந்து வேண்டுகிறேன். அதற்குரிய ஈட்டுத் தொகையை நான் செலுத்தத் தயாராக இருக்கிறேன்." என்றார் இதற்குப் பதிலளித்த நபிகளார், "இது சம்பந்தமாக முடிவெடுப்பதை ஜுவைரிய்யாவிடமே விட்டு விடலாமே" என்று குறிப்பிட்டார்கள். உடனே ஹாரிஸ் தனது மகளிடம் சென்று 'முஹம்மது எல்லாவற்றையும் உனது முடிவிற்கே விட்டு விட்டார் என்றார். எனவே அவரை அவமதிக்கும் விதத்தில் நீ எதுவும் செய்ய வேண்டாம் என்று குறிப்பிட்டார்.

நபிகளாருக்குச் சேவை செய்வதையே விரும்புகிறேன். எனவே என்னை அவர்கள் திருமணம் செய்து கொள்வதே நன்றாக இருக்கும் என ஜுவைரிய்யா(ரலி) கூறினார்கள். தனது மகளின் இந்தப் பதிலைக் கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்த 'ஹாரிஸ்' ஈட்டுத் தொகையை உடனடியாக செலுத்தினார். பின்னர் நபிகளார் ஜுவைரிய்யா(ரலி)யைத் தனது மனைவியாக ஏற்றுக் கொண்டார்கள். இந்தத் திருமணம், ஜுவைரிய்யா(ரலி) அவர்களின் இனக் குழுவினருக்கும், முஸ்லிம்களுக்குமிடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்தியது. பிற போர்க் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆயிஷா(ரலி) அவர்கள் ஜுவைரிய்யா (ரலி)யிடம் மிகவும்

பிரியமாக நடந்து கொண்டு, இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளை அவருக்கு விளக்கிச் சொன்னார்கள். மிகக் குறுகிய காலத்தில் இஸ்லாத்தைப் பற்றி நன்கு அறிந்து கொண்ட அவர், புதிய மார்க்கத்தின் மிகப் பெரிய இறைப்பற்றாளராக மாறினார். 'அவர் மிகுந்த வசீகரமிக்கவராக விளங்கினார்' என அவரது ஆளுமை பற்றி ஆயிஷா(ரலி) குறிப்பிட்டார்கள்.

## உம்மு ஹபீபா(ரலி)

உம்மு ஹபீபா(ரலி) நபிகளாரின் ஒன்பதாவது மனைவியாவார். அவர் இஸ்லாத்தின் மிகக் கொடிய எதிரியும், மக்காவிலுள்ள முஸ்லிமல்லாதவர்களின் தலைவருமான அபூசுஃப்யானின் மகளாவார். (கொடூர குணமிக்க ஹிந்த்தா அபூசுஃப்யானின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது) உம்மு ஹபீபாவும், அவரது கணவரும் தங்களது பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களது தொல்லையிலிருந்து தப்பிக்க, இத் தம்பதியினர் அபீசீனியாவிற்கு இடம் பெயர்ந்து சென்றார்கள். அங்கு அவரது கணவர் கிறிஸ்துவ சமயத்தில் சேர்ந்து விட்டார். ஆனால் உம்மு ஹபீபா இஸ்லாத்தை விட்டு விட மறுத்து விட்டார். நாளாவட்டத்தில் அவரது கணவர் மது அருந்துதல் போன்ற கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி முடிவில் மரணமடைந்து விட்டார். உம்மு ஹபீபாவின் நிலை கண்டு வருந்திய நபிகளார் அவரைத் திருமணம் செய்து கொண்டார்கள். பிற திருமணங்களைப் போலவே, இந்தத் திருமணமும் உம்முஹபீபாவின் குடும்பத்தைச் சார்ந்த பலரது உள்ளங்களை வென்றிட நபிகளாருக்கு உதவி புரிந்தது. அவரது இனக் குழுவான பனூ அப்துல் ஸம்ஷ்–ஐச் சார்ந்த பலர் இஸ்லாத்திற்கு வந்தனர். இந்தத் திருமணம் பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. காலித்(ரலி) இஸ்லாத்திற்கு வந்ததும் இந்தத் திருமணத்திற்குப் பிறகே.

நபிகளார் பால் அபூசுஃப்யான் கொண்டிருந்த பகைமையும் பெரிதும் குறைந்து போய்விட்டது நபிகள் நாயகம்(ஸல்)

அவர்கள் தங்களது எதிரியல்ல என்பதையும் தங்களது நலனில் நாட்டம் கொண்ட ஒருவர் எனவே, அத்தகைய பெருந்தகை யாளரிடம் பகைமை பாராட்டுவது தேவையற்றது என்றும் குறைஷிகள் உணரத் தலைப்பட்டனர். திருமணத்தின் போது உம்மு ஹபீபாவின் வயது 38. தமது வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் அவர் நபிகளாருக்கு அர்ப்பணித்தார். நபிகளாரை விட இருபது ஆண்டுகளுக்கும் மேலாக உயிர் வாழ்ந்த அவர் தனது 73ம் வயதில் மரணமடைந்தார். முதல் கணவர் மூலமாக அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். நபிகளார் மூலமாக அவருக்குக் குழந்தைகள் இல்லை.

## ஸஃபிய்யா (ரலி)

நபிகளாரின் பத்தாவது மனைவியான ஸஃபிய்யா(ரலி) கைபர் போரின் போது போர்க்கைதியாக சிறைப் பிடிக்கப்பட்டவர். அவரது தந்தையும், தாயாரும் யூதர்கள் செல்வாக்கு மிக்க யூதக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். 'பின் மிஸ்காம்' என்ற புகழ் பெற்ற யூதக் கவிஞரை ஸஃபிய்யா(ரலி) மண முடித்திருந்தார். ஆனால் அவர்களுக்குள் ஒத்துப்போக வில்லை. எனவே அவரது கணவர் ஸஃபிய்யா(ரலி)யை விவாகரத்துச் செய்து விட்டார். ஸஃபிய்யா மீண்டும் ஒரு பெரிய யூதப் போர் வீரரை மணந்து கொண்டார். ஆனால் கைபர் போரின் போது அவரது கணவரும், அவரது தந்தையும், அவரது குடும்பத்தைச் சார்ந்த ஆண்களும் இறந்து விட்டனர். போர்க் கைதியாகச் சிறைப் பிடிக்கப்பட்ட ஸஃபிய்யா(ரலி), நபித்தோழர் ஒருவரின் பணியாளராக ஆக்கப்பட்டார். இதனை ஆட்சேபித்த பிற தோழர்கள் ஸஃபிய்யா(ரலி) ஒரு இனக் குழுவைச் சார்ந்த தலைவரின் மகள் என்றும், எனவே அவரை நபிகளாரிடம் தான் ஒப்படைக்க வேண்டுமென்றும் கூறினார்கள். ஸஃபிய்யா(ரலி) அவர்களும் இஸ்லாத்தில் இணைந்து அதன் தலைவரையே திருமணம் செய்ய விரும்பினார். அது ஒன்றே தனது கௌரவத்திற்கு உகந்த செயல் எனவும் அவர் நம்பினார்.

ஸஃபிய்யா(ரலி)யின் முகத்தில் அவரது கண்ணுக்கு அருகே ஒரு பச்சைக் குறியை கண்ணுற்ற நபிகளார் இது பற்றி அவரிடம் 'இது என்ன' என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'ஒரு முறை நான் மதீனாவிலிருந்து வந்த ரோஜாப்பூ ஒன்று எனது தொடையில் வந்து விழுந்தது போல் கனவு ஒன்று கண்டேன் இந்தக் கனவு பற்றி நான் எனது கணவர் கினானாவிடம் சொன்னேன். அதற்கு அவர் 'நீ மதீனாவிலிருந்து வரும் ஒரு மன்னரைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாயா? என்று கேட்டு விட்டு எனது கன்னத்தில் அறைந்தார். அதுவே இந்தக் குறி என்று குறிப்பிட்டார்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கம்பீரமான தோற்றத்தையும் அவர்களது வாய்மைப் பண்பையும், அன்பான நடத்தையையும் கொள்கையின் மீது அவர்கள் கொண்டுள்ள உறுதியையும் கண்ட ஸஃபிய்யா(ரலி) பெரிதும் அப்பண்புகளால் கவரப்பட்டார். எனவே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். இஸ்லாத்தின் மனித மாண்புகளை அவர் பெரிதும் நேசித்தார். அவர் ஆழ்ந்த இறை பற்றாளராக மாறினார். இஸ்லாமியக் கடமைகளை தவறாது நிறைவேற்றியதோடு, அதன் மரபுகளையும் குன்றாது பேணினார். இஸ்லாத்தில் இணைந்ததற்காக அவர் பெரிதும் பெருமையுற்றார்.

நபிகளாரின் ஆயுட்காலத்தில் ஒரு முறை உமர்(ரலி) அவர்கள், ஸஃபிய்யா(ரலி) அவர்களிடம் நீங்கள் இன்னும் யூத சமய அனுஷ்டானங்களை நினைவில் வைத்துள்ளீர்களா என்று கேட்டபோது அதற்கு அவர் 'நான் வெள்ளிக்கிழமையைத்தான் கடைப்பிடிக்கிறேன். சனிக்கிழமையை அல்ல' ஆனாலும் என்னுடைய யூத உறவினர்களுடன் தொடர்ந்து பிரியமுடன் இருந்து வருகிறேன் இஸ்லாம் அதனை அனுமதிக்கிறது என்று குறிப்பிட்டார்.

இது கேட்ட உமர்(ரலி) அவர்களால் மேற்கொண்டு பேச இயலவில்லை. தனது 60வது வயதில் மரணமடைந்தார் அவருக்கு குழந்தைகள் இல்லை.

## மாரிய்யா (ரலி)

மாரிய்யா(ரலி) அவர்கள் அலெக்ஸாண்டிரியாவின் ஆர்ச் பிஷப் அவர்களால் நபிகளாருக்குப் பரிசளிக்கப்பட்ட ஒரு அடிமை. மாரிய்யாவை ஒரு அடிமையாக வைத்திருப்பது உகந்த செயலாக இருக்காது எனக்கருதிய நபிகளார் அவரைத் திருமணம் செய்து கொண்டார்கள். கதீஜா(ரலி)வுக்குப் பின்னர், ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த நபிகளாரின் ஒரே மனைவி மாரிய்யா(ரலி) தான். அந்த ஆண் குழந்தையின் பெயர் இப்ராஹீம். ஆனால் இரண்டு வயதாக இருக்கும் போது அக் குழந்தை இறந்து விட்டது. இந்தத் துயரத்தைத் தாங்க இயலாத மாரிய்யா(ரலி) சில ஆண்டுகளுக்குப் பின்னர் இறந்து விட்டார்.

## மைமூனா (ரலி)

நபிகளாரின் இறுதித் திருமணம் விவாகரத்தான, இன்னொரு பெண்மணி மைமூனா(ரலி) அவர்களுடன் நிகழ்ந்தது. அவர் ஏற்கனவே இரு முறை திருமணமானவர். வயதானவர். நபிகளாரின் 57வது வயதில் இத்திருமணம் நடைபெற்றது. மைமூன்(ரலி) அவர்கள் சார்ந்துள்ள ஹிலாலிய்யீன்' இனக் குழுவினரை இஸ்லாத்தின் பால் கொண்டு வருவதற்காக அப்பாஸ்(ரலி) அவர்களின் ஆலோசனையின் படி நபிகளார் இத்திருமணத்திற்கு இசைவு தெரிவித்தார்கள். திருமணத்திற்குப் பின்னர் அந்த இனக் குழுவினரில் பெரும் பான்மையோர் இஸ்லாத்தில் இணைந்தனர். மேற்கூறியவற்றிலிருந்து, தங்களது விருப்பத்தையும், ஆசையையும் பூர்த்தி செய்வதற்காக நபிகளார் இத்திரு மணங்களைச் செய்யவில்லை யென்பதையும், இறைவனின் நாட்டப்படியே இவை நிகழ்ந்தன என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம். மைமூனா(ரலி)யை மணந்த பின் வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ள வேண்டாமென இறைவன் தனது தூதருக்குக் கட்டளையிட்டிருந்தான். ஏனெனில் அச்சமயத்தில் இந்தத் திருமணங்களுக்கான நோக்கம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருந்தது. நபிகளாரின் தூதுத்துவமும்

முழுமையடையும் நிலையில் இருந்தது. இந்த மனைவியர்களில் பெரும்பாலோர் 40 அல்லது 50 வயதைக் கடந்தவர்கள். நபிகளாரைத் திருமணம் செய்து கொண்ட போது அவர்களது வாழ்க்கையின் வசந்த காலம் முடிந்து போயிருந்தது. அவர்களில் யாரும் வனப்போ அழகோ உடையவர்களல்ல.

அவர்கள் விதவைகள் அல்லது விவாகரத்துப் பெற்றவர்கள். அவர்களில் பலருக்கு அவர்களது முதல் கணவன்மார்கள் மூலமாகக் குழந்தைகள் இருந்தன. அவர்கள் அனைவரும் நபிகளாரிடம் உதவி கேட்டு வந்தவர்கள். அல்லது அடைக்கலம் தேடி வந்தவர்கள், அல்லது வெகுமதியாக அளிக்கப்பட்டவர்கள். ஆனால் அவர்களை நபிகளார் சட்டப் பூர்வமான மனைவி–யர்களாக ஆக்கிக் கொண்டார்கள். கதீஜா(ரலி) யையும், மாரிய்யா(ரலி)யையும் தவிர பிற மனைவியர்கட்குக் குழந்தைகள் இல்லை.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள், அரசியல் நோக்கங் களுக்காகவும் மனிதாபிமான அடிப்படையிலுமே நபிகளார் இத் திருமணங்களை செய்து கொண்டார்கள் என்பதை நிலை நிறுத்துகின்றன.

நபிகளார் செய்திட்ட திருமணங்களின் பின்னணி இது தான். உடல் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகச் செய்யப்பட்ட திருமணங்கள் அல்ல இவை என்பதை இதன் மூலம் நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். சுயவிருப்பத்தினைப் பூர்த்தி செய்வதற்காக அல்லது உடல் தேவைக்காக இந்தத் திருமணங்களைச் செய்து கொண்டார்கள் என்று எண்ணுவதும் தவறு.

நண்பரோ எதிரியோ யாராகயிருந்தாலும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் தார்மீக ஒழுக்கத்தின் பால் அல்லது அவர்களின் ஆன்மீகப் பண்பின்பால் ஐயப்பாடு கொள்வோர், கீழ்க்கண்ட கேள்விகளுக்குத் திருப்திகரமான பதிலை நிச்சயம் தர வேண்டும். எந்த ஒரு பெண்ணுடனும் தொடர்பு கொண்டிராத

நபியவர்கள் ஏன் தனது 25 வயதில் தன்னைவிட 15 வயத மூத்த ஒரு பெண்மணியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? அந்தப் பெண்மணியுடனே அவர் இறக்கும் வரை (தனது 50 வயது வரை) ஏன் அவர்கள் வாழ வேண்டும்? எந்த விதமான ஈர்க்கும் தன்மைகள் இல்லாத விதவைகளையும், கைவிடப்பட்டவர் களையும் ஏன் அவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? ஏன் வசதியாக வாழ வாய்ப்புகளிருந்தும் சிக்கனமான, சிரமமான வாழ்வை அவர்கள் மேற்கொண்டார்கள்? பெரும்பாலான இத் திருமணங்களை அவர்கள் தனது பணிகளில் சுறுசுறுப்பாக இருந்த ஐந்து ஆண்டு கால கட்டத்தில் ஏன் செய்திட வேண்டும்? உணர்வுகள் மேலோங்கிய அந்தப்புர வாழ்க்கையில் தான் அவர்கள் ஈடுபாடு காட்டினார்கள் என்று சொன்னால், பின் எப்படி அவர்கள் தங்களது இயல்பான குணத்தை மாற்றிக் கொள்ளாது அப்படியே இதே ரீதியில் இருந்தார்கள்? இதே போன்ற மேலும் பல கேள்விகளை எழுப்பிட முடியும். பெண்களின் மீது அவர்கள் ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்று அவ்வளவு எளிதில் குற்றம் சாட்ட முடியாது. இது பற்றி மிகத் தீவிரமாக நேர்மை உணர்வுடன் சிந்திக்க வேண்டும்.

இது பற்றிப் புகழ் பெற்ற மேற்கத்திய எழுத்தாளரான கேரன் ஆம்ஸ்டிராங் என்பவர் தான் எழுதியுள்ள 'முஹம்மது "நமது காலத்திய தீர்க்கதரிசி" என்ற நூலில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பலதாரத் திருமணங்கள் பற்றி எழுதியி ருப்பதாவது:– திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள பலதாரத் திருமணம் ஒரு சமூகச் சட்டமாகும். அவை ஆண்களின் உடல் பசியைத் தீர்ப்பதற்காகச் சொல்லப்பட்டவையல்ல மாறாக சமூகத்தின் பலவீனமான பிரிவினராக உள்ள பெண்கள் குறிப்பாக விதவைகள், அநாதைகள், ஆதரவற்றவர்கள் ஆகியோருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் களையும் வகையில் அவை சொல்லப்பட்டுள்ளன. நேர்மையற்ற மனிதர்கள் எல்லா–வற்றையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு பலவீனமான மக்களை ஒன்றுமில்லாமல் செய்து விடுகிறார்கள். பலதாரமணம்,

பாதுகாப்பற்ற பெண்கள் கண்ணியமான முறையில் திருமணம் செய்து கொண்டு வாழ்வதை உறுதி செய்கிறது. பழைய வரைமுறையற்ற பாலியல் உறவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து,

ஒருவன் நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் அதே நேரத்தில் அவர்கள் அனைவரையும் சமமாக நடத்த வேண்டு மென்பதையும் வரையறுத்துள்ளது. அவர்களின் சொத்துக்களை அபகரிப்பது ஒரு கொடூரமான செயலாகும். மேலை நாட்டுப் பெண்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரை பெற்றிராத பல உரிமைகளை குர்ஆன் பெண்களுக்கு வழங்கியுள்ளது. பெண்களின் மறுமலர்ச்சி நபிகள்நாயகம்(ஸல்) அவர்களின் மனத்திற்குகந்த ஒரு அம்சமாகும்.

## பலதார மணத்திற்கான காரணங்கள்

உடல் வேட்கைக்காகவே நபிகள் நாயகம்(ஸல்) பல பெண்களைத் திருமணம் செய்துள்ளார்கள் என்று குறை கூறும் எதிரிகள் அவர்களது ஆன்மீக இலக்கின் மேன்மை பற்றியோ, திருமணத்திற்கு முன்னரும் பின்னரும் அவர்களின் மக்கா வாழ்க்கை பற்றியோ பின்னாட்களில் அவர்கள் மதீனாவில் வாழ்ந்த விதம் பற்றியோ தீவிரமாக சிந்திக்காமல் அத்தகைய ஒரு முடிவிற்கு வருகிறார்கள். மதீனாவில் இருந்த போது, நபிகளார் பல பெண்களைத் திருமணம் செய்தார்கள். இவை தனிப்பட்ட காரணங்களுக்காகவும், அரசியல் நலன் மற்றும் இனக்–குழுக்களுடன் சுமூக உறவைப் பேணுதல் ஆகிய காரணங்களுக்காகவும் செய்யப்பட்டன. பல தார மணங்கள் செய்த போது அவர்கட்கு வயது ஐம்பது. மணம் புரிந்து கொண்ட பெண்களில் இருவரைத் தவிர பிற அனைவரும் 36 வயதைத் தாண்டியவர்கள். அனைவரும் விதவைகள்.

உயிர் வாழ்வதற்கே கடும் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபிகளார் பெண் பித்தராக இருந்தார்கள் என்று குறை கூறுவதில் ஏதாவது உண்மை இருக்க முடியுமா? அவர்கள் சுற்றிலும் எதிரிகளால் சூழப்பட்டிருந்தார்கள். உள்ளுக்குள்ளும்

பல எதிரிகள் இருந்தார்கள். யூதர்களும் இருந்தார்கள். குறைஷியர்கள் மதீனா நகர் மீது அடிக்கடி போர் தொடுத்துக் கொண்டே இருந்தார்கள். பல இனக் குழுவினரும் மதீனா நகரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்தார்கள். இரவு நேரங்களில் அமைதியாகத் தூங்குவது கூட நபியவர்களுக்குச் சிரமமாக இருந்தது. அத்தகைய ஒரு சூழ்நிலையில், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் போன்ற ஒரு மேன்மையாளர் உடல் ரீதியான இன்பக் கேளிக்கைகளில் எப்படி ஈடுபட முடியும்? தங்களது உணர்வுகளுக்கும் விருப்பங்களுக்கும் தக்கவாறு முடிவிற்கு வரும் கெடுமதியாளர்கள் கூறிடும் அவதூறுப் பிரச்சாரமே இது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அவர்களிடம் குறைகள் இருப்பதால், மற்றவர்களிடம் குறை காண்கிறார்கள்.

நபிகளார் மிகவும் எளிய முறையில் வாழ்ந்தார்கள். பாய்க்கள், குவளைகள், போர்வைகள் போன்ற மிக எளிமையான பொருட்களே அவர்களது இல்லத்தில் இருந்தன. அந்த நாட்களில் அவர்கள் அரேபிய தீபகற்பத்தின் தலைவராகவும், தலைமை நீதிபதியாகவும், இராணுவத் தலைவராகவும் விளங்கினார்கள். இரவு நேரங்களில் அவர்கள் மிகச்சிறந்த இறை பக்தியாளராக விளங்கினார்கள்.

> 'ஒரு இரவின் மூன்றில் இரண்டு பாகத்தை அவர்கள் தொழுவதிலும் தியானம் செய்வதிலும் கழித்தார்கள்' எனத் திருக்குர்ஆன் கூறுகிறது. (குர்ஆன் 73:20)

அவர்களது வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளில் பல பகுதிகளிலிருந்தும் மதீனாவில் செல்வம் குவிந்தது. நபிகளாரின் பெரும்பாலான மனைவிமார்கள் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்திலிருந்து வந்தவர்கள். தங்களது பெற்றோர்களின் இல்லங்களில் ஆடம்பரமாக வாழ்ந்தவர்கள். ஆனால் நபிகளாரின் இல்லத்தில் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கூட இல்லை. இந்நிலையில் ஆடம்–பரத்தைப் பற்றியோ, வசதிகளைப் பற்றியோ சொல்லத்

தேவையில்லை. பல நாட்களில் நபிகளார் பட்டினி கிடந்தார்கள். வீட்டிலுள்ள உணவுப் பொருட்கள் அவர்களது மனைவியர்கட்குப் போதுமானதாக இல்லை. பல்வேறு பகுதிகளிலிருந்தும், மதீனாவிற்கு செல்வம் வந்து சேர்ந்த போதும் அவை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும், நபிகளாரின் மனைவியர்கட்கு மிகக் குறைந்த அளவிலேயே அவை வழங்கப் பட்டன. பல நேரங்களில் வழங்கப்பட வில்லை. எனவே அவர்கள் நபிகளாரிடமிருந்து தங்களது தேவைகளுக்காக அதிகப் பங்கு கேட்டனர். இது சம்பந்தமான குர்ஆனில் இறைவன் கூறுவதாவது: "ஓ! தீர்க்கதரிசியே! உங்களது மனைவியரிடம் சொல்லுங்கள். இந்த உலக வாழ்க்கையும், அதன் சுகபோகங்களும் தான் உங்களுக்கு வேண்டுமென்றால் வாருங்கள்.' உங்களுக்கு வசதியளித்து அழகிய முறையில் உங்களை விடுவித்து விடுகிறேன்.

இதன் மூலம் அவர்கட்கு நபிகளாருடன் எளிமையான முறையில் வாழ வேண்டுமா அல்லது அவர்களை விட்டுப் பிரிந்து சென்று செல்வச் செழிப்புடன் வாழ வேண்டுமா என்று தீர்மானித்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் அனைவரும் வறுமையில் வாடிய நபிகளாருடன் சேர்ந்து வாழவே முழுமனத்துடன் இசைவு தெரிவித்தார்கள். இத்தகைய பண்பும், நற்குணமும் கொண்ட ஒருவர் உடலின் விரும்பியாக இருந்தார் என்று குறை கூற முடியுமா? குறை கூறுவோர் முதலில் தங்களது வாழ்க்கை எப்படியுள்ளது என்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும். அதன் பிறகு நபிகளாரின் வாழ்க்கை முறை எப்படியிருந்தது என்பதை அவர்கள் புரிந்து கொண்டு வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் தங்களது தீர்ப்பைச் சொல்லட்டும்.

உஹதுப் போரின் போது, ஏராளமான முஸ்லிம் வீரர்கள் இறந்து போனதால் அவர்களது மனைவிமார்கள் விதவை களாகவும், குழந்தைகள் அநாதைகளாகவும் ஆயினர். அவர்களைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு உயிரோடிருந்த

முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. விதவைகளையும், அனாதை–களையும் பாதுகாக்கத் திருமணம் ஒன்றே ஒரே வழியாக இருந்தது. நபிகளாரும், அவர்களுடைய தோழர்களும் திருமணம் என்ற பந்தமில்லாமல் அவர்களை தங்களது இல்லத்திற்குள் அனுமதிக்க முடியாது. இந்த வழியிலேயே நபிகளார் விதவைகளையும், ஆதரவற்றவர்களையும், கைவிடப்பட்ட–வர்களையும் மணந்து கொண்டார்கள். பலர் போர்க் கைதிகளாகச் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கட்குப் பாதுகாப்பும், உத்திரவாதமும் தேவைப்பட்டது. அவர்கள் கொல்லப்பட வில்லை. அவர்களது மனித உரிமைகள் மறுக்கப்படவில்லை. அதற்குமாறாக, சட்டப் படியான திருமண உறவுகள் மேற்கொள்ளப்பட்டு நிரந்தர வாழ்வு கொடுக்கப்பட்டது. நபிகளாரும் அவர்களுடைய தோழர்களும் இத்தகை எண்ணற்ற விதவைகளுக்கு மறுவாழ்வு கொடுத்து அவர்களையும் அவர்களது குழந்தைகளையும் பட்டினியிலிருந்தும், அழிவி லிருந்தும் பாதுகாத்தார்கள்.

இப்படிச் சிறைப்பிடிக்கப்பட்ட பெண்கள் அப்படியே விடப்–பட்டிருந்தால், அன்றைய ஒட்டு மொத்த சமூகச் சூழலும் தவறான வழிமுறைகள் காரணமாகப் பாழ்பட்டுப் போயிருக்கும். நபிகளாரும் அவர்களது தோழர்களும், திருமணம் செய்து கொள்ளாமல் தங்களது வீட்டு அந்தப் புரங்களில் இந்தப் பெண்களை வைத்திருக்கவில்லை. இதை விட வேறு ஒரு சிறந்த நிவாரணத்தை விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் யாரேனும் வழங்கிட முடியுமா? இதை முன்கூட்டியே உணர்த்திய அல்குர்ஆன், இத் திருமணங்களின் நோக்கம் பற்றி கூறும்போது' 'உங்கள் மீது எந்தக் குறையும் வந்துவிடக்கூடாது என்பதற்காக' என்று குறிப்பிடுகிறது.

மனித சமுதாயத்திற்கு வழிகாட்டியாக இவை அமைய வேண்டும் என்பதும் இத்திருமணங்கள் மூலம் நபிகளார் உணர்த்திய செய்தியாகும். நபிகளார் இறைவனால் உலகிற்கு அனுப்பப்பட்ட ஒரு ஆசிரியராவார்கள். அவர்களது

எண்ணங்களும், செயல்களும் இறைவனாலேயே வழி நடத்தப் பட்டன. மனித சமூகத்தில் சரிபாதியாக உள்ள பெண்களுக்கு இஸ்லாத்தின் இந்தச் செய்தி சரியான, நியாயமான முறையில் கொண்டு செல்லப்படவேண்டும். தங்களது வாழ்க்கை மூலமாகவும், போதனைகள் மூலமாகவும் நபிகளார் தினந் தோறும் இச் செய்தியை மக்களுக்கு அறிவித்துக் கொண்டே இருந்தார்கள். அர்ப்பணிப்பு உணர்வும், விசுவாசமும், நேர்மைத் திறனும் கொண்ட ஒரு பெண் குழுவினர் இந்தச் செய்தியை மற்றப் பெண்களிடம் கொண்டு சென்றிடத் தயாராக இருக்க வேண்டும். இதனைச் செய்திட வலுவான, சாத்தியமான, நடை முறைக்கு ஏற்ற ஒரே வழி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது மனைவி–யர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதேயாகும். அந்த மனைவியர்கள் தான் நபிகளாருக்கு மிகவும் நெருக்கமாக இருந்து அவர்களது வாழ்வின் ஒவ்வொரு அம்சங்களையும் உற்றுக் கவனித்து, அவர்கள் கூறுவதைச் செவிமடுத்து அவர்களின் பிரியத்திற்கு உள்ளானவர்கள்.

நபிகளாரிடமிருந்து பெற்ற இந்தப் பயிற்சியையும், கல்வியின் மூலமாக பெற்ற தெளிவையும் அவர்கள் மற்றவர்கட்குத் தெரிவித்தார்கள். இதன் மூலமே பெண்களின் சிக்கலான, அந்தரங்கமான தனிப்பட்ட பல பிரச்னைகளை மனித சமூகம் அறிந்து கொள்ள முடிந்தது. நபிகளாரின் வாழ்க்கை முறையை நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொண்ட அவர்கள் தாங்களும் அதன்படி வாழ்ந்து, இஸ்லாமிய ஞானக்கருவூ–லங்களை மற்றவர்களுக்கும் தெரிவித்தார்கள். இத் திருமணங்–களுக்கு வேறு சில காரணங்களும் இருந்தன. அவையாவன...

* இனக்குழுக்களுக்கிடையே திருமணத்தை ஊக்குவித்தல்
* விதவைகள் திருமணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்
* விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களை மறுமணம் செய்து வாழ்வளித்தல்

சாதிக்களுக்கிடையே திருமணம் செய்து கொள்வதை சமுதாயம் தடை செய்துள்ளது. இது ஒரு பெரும் அநீதியாகும். மனித சமுதாயத்திற்கு நடைமுறைக்கல்வியை அளிக்க எண்ணிய நபிகளார், பிறப்பு மற்றும் குலம் காரணமாக இனக் குழுவினரி டையே, நிலவி வந்த அனைத்து விதமான பேதங்களையும் களைந்திட எண்ணினார்கள். ஸுஃபிய்யா(ரலி) என்ற ஒரு யூத குலப் பெண்மணியைத் திருமணம் செய்ததன் மூலம் வேறு மதத்தைச் சார்ந்த வேறு இனத்தைச் சார்ந்த எந்த ஒரு பெண்ணையும் அவள் இறைவனுக்கு இணை வைக்காத பட்சத்தில் மணந்து கொள்ளலாம் என நபிகளார் உலகிற்கு உணர்த்தினார்கள். மாரிய்யா(ரலி)வுடன் செய்து கொண்ட திருமணமும் இத்தகையது தான். இந்தியாவிலும், இஸ்லாத்திற்கு முந்தைய கால கட்டங்களில் உலகின் பிறபகுதிகளிலும், விதவைகள் திருமணம் ஒரு பிரச்னையாகவே இருந்து வந்துள்ளது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் விதவை மறுமணத்திற்கு அனுமதி அளித்தார்கள். அவர்களே பல விதவைப் பெண்களை மறுமணம் செய்து கொண்டார்கள் (ஆயிஷா(ரலி) தவிர), விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களைத் திருமணம் செய்வதை இஸ்லாத்திற்கு முந்திய அரபுகள் தவிர்த்தே வந்தனர். இதன் தேவையை மக்களுக்கு உணர்த்தவே, நபிகளார் ஸைது(ரலி) அவர்களால் விவாகரத்துச் செய்யப்பட்ட ஜைனப்(ரலி) அவர்களை மணந்து கொண்டார்கள்.

நபிகளார் செய்திட்ட திருமணங்களை மேலோட்டமாக நோக்கினாலே, அதில் உள்ள அரசியல் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளலாம். இந்தத் திருமண உறவுகள் மூலமாகத் தான் பல்வேறு இனக்குழுவைச் சார்ந்தவர்கள் நபிகளாருக்கு நெருங்கிய உறவினர்களாயினர். பூகோள ரீதியில், இந்த இனக் குழுவினர் அரேபிய தீபகற்பம் முழுவதும் பரவியிருந்தனர். இந்த இனக் குழு வினருடன் ஏற்பட்ட திருமண உறவுகள் காரணமாக அவர்களின் எதிர்ப்புக் குறைந்து நபிகளாரின் நிலை வலுப்பெற்றது. இனக்குழுவினரிடையே இருந்து வந்த

மோதல்கள் குறைந்தன. இது அரேபிய தீபகற்பத்தில் அமைதிக்கும், நியாயத்திற்கும் வழிவகுத்தது.

நபிகள்நாயகம்(ஸல்) அவர்களின் சில திருமணங்கள், சில தவறான பழக்க வழக்கங்களை ஒழிக்கும் விதத்தில் அமைந்திருந்தன.

ஜைனப்(ரலி) யுடன் அவர்கள் செய்து கொண்ட திருமணம் விவாகரத்துப் பெற்றவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் என்பதை சுட்டிக் காட்டியது. ஸைது(ரலி) நபிகளாரின் வளர்ப்பு மகன். வளர்ப்பு மகன் உண்மையான மகனே என்று இஸ்லாத்திற்கு முந்தைய அரபிகள் கருதினர். ஆனால் இஸ்லாம் இந்தப்பழக்கத்தை ரத்துச் செய்தது. இந்தப் பழைய பழக்கத்தை மறுத்த முதல் மனிதர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களே! ஆகையால் அவர்கள், தனது வளர்ப்பு மகனால் விவாகரத்துச் செய்யப்பட்டவரை மணந்து கொண்டார்கள்.

வளர்ப்பு மகன் தத்தெடுத்த தந்தையின் உண்மையான மகனாக இருக்க முடியாது என்பதையும், விவாகரத்துப் பெற்ற பெண்கள் சட்டப்பூர்வமாக மறுமணம் செய்து கொள்ளலாம் என்பதையும் இது உலகிற்கு உணர்த்தியது. உண்மையில் ஜைனப்(ரலி) நபிகளாரின் அத்தை மகள். ஸைது(ரலி)க்கும் அவருக்கும் திருமணம் நடைபெறுவதற்கு முன்னரே, அவரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு நபிகளாருக்கு ஆலோசனை சொல்லப்பட்டது. ஆனால் நபிகளார் அதனை ஏற்க மறுத்து விட்டார்கள். எனினும் அவர் விவாகரத்துச் செய்யப்பட்ட பின்பு, அவரைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

விவாகரத்து செய்யப்பட்ட பெண்களை திருமணம் செய்து கொள்ளலாம் என்பதும், வளர்ப்பு மகன்களின் உண்மையான நிலைபற்றி விளக்குவதுமே இத் திருமணத்திற்கான காரணங்களாகும். ஜைனப்(ரலி)யுடனான நபிகளாரின் திருமணம் குறித்து கேலி செய்தும், அவர்களது அறநெறிப் பண்புகளைக் குறை கூறியும் சிலர் கதை புனைந்து வருகின்றனர். எதிரிகளின்

இந்தப் புனை கதைகள் பரிசீலனைக் குரியவை அல்ல என்பதை திருக்குர்ஆன் வசனங்கள் தெரிவிக்கின்றன. (குர்ஆன் வசனங்கள் *33:36–38* )

இந்தச் சூழ்நிலைகளில் தான் நபிகளாரின் திருமணங்கள் நடந்தேறின. எல்லாச் சூழ்நிலைகளிலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு பண்பு மிக்கவராக, அறநெறிகளைப் பேணுபவராக வாழ்ந்தார்கள் என்பதை விருப்பு வெறுப்பற்ற பார்வையாளர் களால் புரிந்து கொள்ளமுடியும். இது சம்பந்தமாக தீவிரமான விவாதங்கள் நடத்தப்பட வேண்டும் என நாம் கேட்டுக்– கொள்கிறோம். நபிகளாரின் மனைவிமார்கள் நற்பண்புடைய வர்களாக இருந்தனர். மிகச் சிறந்த குடும்பப் பின்னணி கொண்டிருந்த அவர்களின் வாழ்க்கை இறை நம்பிக்கை கொண்ட வாழ்க்கையாக அமைந்திருந்தது.

நபிகளாரின் மறைவிற்குப் பின்னரும் அவர்கள் எளிமையாக வாழ்ந்தார்கள். அவர்கள் மீது எந்த ஒரு குற்றச்சாட்டும் சொல்லப்படவில்லை. ஆனாலும் நபிகளாரின் எதிரிகள் அவர்களைக் களங்கப்படுத்த முயற்சித்தனர். மக்களால் புகழப்பட்ட உயர்ந்த மரியாதையுடன் இருந்த அத்தகைய நபிகளாரின் மனைவியர்களை களங்கப் படுத்துவது தான் கருத்துச் சுதந்திரமா? அல்லது அவர்களது உள்ளங்களைப் புண்படுத்த வழங்கப்பட்ட லைசென்ஸா? நபிகளார் இறந்து சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர், அவர்கள் உடல் இச்சை கொண்டவர்களாக விளங்கினார்கள் என்பது போல் காட்டிட சில திரிக்கப்பட்ட ஹதீஸ்கள் மக்களிடையே பரப்பப்பட்டன. இவற்றில் எள்ளளவும் உண்மையில்லை. துரதிருஷ்டவசமாக, நபிகளாரின் எதிரிகளும், குறை கூறுபவர்களும், முஸ்லிம் பழமைவாதிகள் பரப்பிய இத்தகைய விஷமத்தனமான, பொய்யான கருத்துக்களை எடுத்துக் கொண்டு ஆதாயம் தேட முயற்சிக்கின்றனர். அவர்களின் இந்தக் கூற்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் செய்த திருமணங்களுக்கோ அல்லது நபிகளார் தங்களது மனைவியர்கள் மீது கொண்டிருந்த

உண்மையான உறவுகளுக்கோ எந்த விதத்திலும் பொருந்திப் போகவில்லை. தற்போதைய பிரச்னைகள் மட்டுமின்றி, அடிப்படையான நிலையான முக்கியத்துவம் வாய்ந்த பல விஷயங்களும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பல இறை வசனங்கள் அருளப்பட்ட அந்த நேரத்தில் நிலவிய சூழ்நிலைகளை விளக்கத்தக்கவையாக அமைந்துள்ளன.

எனவே நபிகளாரின் பலதார மணம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நிலவிய சூழ்நிலைகளையும், தேவைகளையும் கருத்தில் கொண்டு செய்யப்பட்டன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பிரிட்டீஸ் நூலாசிரியரான ஆர்.வி.சி.போட்லே என்பவர் தனது '''தூதர். முஹம்மதுவின் வாழ்க்கை வரலாறு''' என்ற நூலில் '''நபிகளார் செய்திட்ட திருமணங்களை கிறிஸ்துவர்கள் தங்களது கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது. தாங்கள் வாழ்ந்த நாடு, வாழ்ந்த காலகட்டம் அப்போது அங்கு நிலவிய அற நெறிகள் ஆகியன மட்டுமே அவர்கட்கு தெரியும்,''' என்று குறிப்பிடுகிறார். ஏன் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க மரபுகள், ஆசிய, ஆப்ரிக்க மரபுகளைக் காட்டிலும் உயர்வானவை என்று கருதப்பட வேண்டுமென்றும் அவர் (போட்லே) கேள்வி எழுப்புகிறார். மற்றவர்களைக் காட்டிலும் தங்களது வாழ்க்கை அறநெறிப்பண்புகள் மிகக் கொண்டவை என்று மேற்குலகில் உள்ளவர்கள் நிரூபித்தால் மட்டுமே அவர்கள் இதைப்பற்றிப் பேசவேண்டும். இல்லையெனில் அவர்கள் மற்ற இனங்கள், பிரிவுகள், நாடுகள் பற்றிப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

# 25

# மதீனா ஒரு முன்மாதிரி நகரம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மதீனாவில் ஒரு அரசை நிறுவியபோது, அங்கு அதற்கு முன்பு எந்த விதமான ஒரு அரசோ, நிர்வாக அமைப்போ இல்லை. எண்ணற்ற இனக் குழுக்களைக் கொண்ட ஒரு சமுதாயம் அங்கு இருந்தது. தாங்கள் வகுத்துக் கொண்ட சட்டங்கள், மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த இனக்குழு மக்கள் வாழ்ந்து வந்தனர். எனவே நபிகளார் பெரும் அடிப்படைச் சீர்திருத்தங்களைச் செய்தார்கள். அங்கு இராணுவமோ, கருவூலமோ, கல்வித்துறையோ, நீதித் துறையோ, பொது நிர்வாகமோ எதுவும் இல்லாததால் நபிகளார் அனைத்தையும் முதலி லிருந்தே தொடங்க வேண்டியதிருந்தது.

ஒரு நிறுவனமோ, நிர்வாக அமைப்போ இல்லாத ஒரு சமூகத்தில் சமூக நிறுவனங்கள் ஏற்பட முன் முயற்சி எடுத்தார்கள். அவர்கள் தொடாத வாழ்க்கையின் எந்தப்பிரிவும் இல்லை. பழைய பழக்கவழக்கங்களை விட்டொழித்து விட்டு புதிய சட்டங்களை உருவாக்குவதும், மதீனா வாழ் மக்களை அந்தப் புதிய சட்டங்களுக்கு உட்படுத்தச் செய்வதும் இலகுவான ஒரு பணி அல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இருளில் கிடந்த அரேபிய தீபகற்பத்திற்கு வழிகாட்டும் ஒளியாக மதீனா திகழ வேண்டுமென நபிகளார் எண்ணினார்கள்.

1500 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் ஆரம்பித்து வைத்த சீர்திருத்தங்கள் அன்றையக் காலகட்டத்தில் முற்போக்கானவை என்பதை மேலோட்டமாகப் பார்த்தாலே உணர்ந்து கொள்ள முடியும். மத்திய கிழக்கில் முழுமையாகப் பூத்திட்ட ஒரு இஸ்லாமிய நாகரீகத்திற்கு அவர்கள் 'அடிக்கல்' நாட்டினார்கள். அவர்கள் அமைத்த முதல் நிறுவனம் 'நபிகளாரின் பள்ளிவாசல்' என்று அழைக்கப்படும் 'மஸ்ஜிதே நபவியாகும்'. நகரின்

அனைத்துச் செயல்பாடுகளின் கேந்திரமாக அது திகழ்ந்தது. இந்த பள்ளிவாசலுடன் இணைந்திருந்த ஒரு இல்லத்தில் தான் நபிகளார் வசித்து வந்தார்கள்.

ஒன்று கூடி தொழுகை நடத்திடும் இடமாக மட்டுமல்லாது, அது ஒரு சமுதாயமையமாகவும் விளங்கியது. அரசின் தலைமை யிடமாக விளங்கிய அந்தப் பள்ளிவாசல் கல்வி கற்பிக்கும் இடமாகவும், அவ்வப்போது மருத்துவ சிகிக்சை அளிக்கும் கேந்திரமாகவும், புனர் வாழ்வு மையமாகவும், சமூகநல மையமாகவும், அனுமதிக்கப்பட்ட பொழுது போக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கேந்திரமாகவும் திகழ்ந்தது.

உருவாகிக் கொண்டிருந்த புதிய மதீனா நகரில் மையமாக விளங்கிய அது எல்லோரும் எளிதில் வந்து கூடும் இடமாகவும் விளங்கியது. பல மொழிகள் பேசும் மக்கள், பலதரப்பட்ட வித்தியாசமான சுவையும், நிறமும் கொண்டவர்கள் என அனைவரும் வந்து சேரும் ஒரு முதல் பொது இடமாக விளங்கிய காரணத்தால், அது சமூக ஒற்றுமையை வளர்த்தது. தொலை தூர இடங்களிலிருந்தும் தூதுக்குழுக்கள் பள்ளிவாசலுக்கு வந்தன. உதவி தேவைப்படுவோர், உதவி புரிவோர் என அனைவரும் இந்தப் பள்ளி வாசலைத் தவிர வேறெங்கும் செல்ல மாட்டார்கள்.

## முதலாவதாக எழுதப்பட்ட அரசியல் சட்டம்

மதீனாவிற்கு இடம் பெயர்ந்து சென்ற பின்பு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அங்கு ஒரு நகர அரசை நிறுவி, அதற்கு ஒரு அரசியல் சட்டத்தையும் உருவாக்கினார்கள். உலக வரலாற்றில் எழுதப்பட்ட முதல் அரசியல் சட்டம் இதுவேயாகும். இஸ்லாமிய அரசாட்சிக்கு உட்பட்டிருந்த முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்துவர்கள், இஸ்லாத்தில் இணையாத அரபிகள் என அனைத்துத் தரப்பு மக்களின் உரிமைகளையும், கடமைகளையும் இது உள்ளடக்கியதாக இருந்தது.

# அறிவின் மேம்பாடு

அறிவை மேம்படுத்துவதற்கு பெருமானார் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். அறிவு பெறுவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை என்று நவின்றார்கள். அறிவு பெறுவதை வணக்கத்துடன் ஒப்பிட்டுப் பேசிய நபிகளார், 'எல்லா உயிர்களும் தண்ணீரில் இருக்கும் மீனும் கூட அறிவு வேண்டி பிரார்த்தனை செய்கின்றன' என்றார்கள்.

நீண்ட நெடிய வணக்கத்தை விடச் சிறிய அளவு அறிவு தேடுவது உயர்ந்தது' என்றும் கூறினார்கள். 'எப்படி நட்சத்திரங்களை விட சந்திரன் உயர்ந்ததோ, அப்படியே ஒரு பக்தனை விட அறிஞன் உயர்ந்தவன்' என்று ஒரு முறை சொன்னார்கள். 'கல்வி ஞானம் பெறுவதற்காக மலக்குகள் எனும் வானவர்கள் தங்களது சிறகுகளை' தாழ்த்துகிறார்கள் என்றும் அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகள் என்றும், அவர்களிடம் செல்வம் இல்லை. அறிவு ஞானமே இருக்கிறது என்றும் நவின்றார்கள். எனவே அறிவைப் பெறுபவன் பெரிய பாக்கியம் பெற்றவனாவான்.

'நான் ஒரு ஆசிரியராகவே அனுப்பப் பட்டுள்ளேன்.' என்று அறிவித்த நபிகளார், பள்ளிக்கூடங்களை நிறுவி மக்களுக்கு அறிவை ஊட்டுவதற்கான தெளிவான திட்டம் ஒன்றை வகுத்திருந்தார்கள். அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா (திண்ணைத் தோழர்கள்) அதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இந்த முதல் பள்ளிவாசல் தவிர, மேலும் ஒன்பது பள்ளி வாசல்கள் மதீனாவில் கட்டப்பட்டன.

ஒவ்வொரு பள்ளி வாசலிலும் ஒரு பள்ளிக்கூடமும் இருந்தது. மக்களுக்கு அறிவைப் புகட்டுவதில் நபிகளார் பெரும் ஈடுபாடு காட்டினார்கள். மதீனாவிற்குத் தெற்கில் 3கி.மீ தொலைவில் குபா எனும் பகுதி இருந்தது. அங்கிருந்த பள்ளிவாசலுக்கும், பள்ளிக் கூடத்திற்கும் நபிகளார் அடிக்கடி சென்று வந்தார்கள்.

## இஸ்லாத்தின் முதல் பல்கலைக் கழகம்

கல்விக் கூடங்கள் நிறுவி அறிவைப் பரப்பும் வகையில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு தெளிவான திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். அதற்கு திண்ணைத்தோழர்கள் ஒரு உதாரணமாகும். மதீனா பள்ளி வாசலின் ஒரு மூலைப் பகுதியில் ஒரு செவ்வக வடிவிலான மேடையில் அது நிறுவப்பட்டிருந்தது. இடம் பெயர்ந்து வந்த குடும்பம் இல்லாதவர்கள் அந்தத் திண்ணையில் தங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இப்படி இடம் பெயர்ந்து வந்தவர்கள் பல்வேறு காரியங்களுக்காகப் பயன் படுத்தப்பட்டனர். இதில் கல்வி அறிவு பெற்றிருந்தவர்களை நபிகளார் மதீனா நகரில் வசித்து வந்த பொதுமக்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கும்படி வேண்டினார்கள். அவர்களில் அறிவுக்கூர்மை பெற்றிருந்தவர்கள் புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்கட்கு இஸ்லாத்தின் கொள்கை கோட்பாடுகளை விளக்கிச்சொல்லும் பணியில் அமர்த்தப்–பட்டனர். இன்னும் சிலர் தினந்தோறும் இனக்குழுவினர் வசித்து வந்த கிராமங்களுக்கு அனுப்பப்பட்டு இஸ்லாத்தில் இணைந்தவர்கட்கு பயிற்சி அளித்தனர். அந்தத் திண்ணை பகல் நேரங்களில் பள்ளிக்– கூடமாகவும், இரவு நேரங்களில் புதிய முஸ்லிம்கள் தங்கும் விடுதியாகவும் செயல்பட்டது. சுருங்கக்கூறின் இஸ்லாத்தின் முதல் உறைவிடப் பல்கலைக் கழகமாக அது திகழ்ந்தது.

ஜபல் மகன் மாஸ்(ரலி) என்ற நபிகளாரின் முக்கியத் தோழர் அதன் துணை வேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். இஸ்லாத்தைப் பரப்புவற்காக தனதுசெல்வம் அனைத்தையும் தாராளமாகச் செலவு செய்து கடன்களை அடைக்கத் தனது சொந்த வீட்டையே விற்று திவாலாகிப் போன அவர் அல்ஸுஃபாவிற்குத் தங்குவ–தற்காக வந்தவர். மதீனாவில் தங்களுக்கிருந்த முக்கியமான பணிகளுக்கு மத்தியிலும், நேரம் கிடைக்கும் போதெல்லாம், நபிகளார் இந்த திண்ணை வகுப்புக்குச் சென்று பாடம்

நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். தோழர்கள் பலரும் இந்த வகுப்புகளுக்கு வந்து பாடம் பயின்றார்கள். ஒருநாள் பள்ளிவாசலுக்கு வந்த நபிகளார் அங்கு இரண்டு குழுவினர் தனித்தனியே அமர்ந்திருக்கக் கண்டார்கள்.

ஒரு குழுவினர் தஸ்பீஹ் மணியை உருட்டிக் கொண்டும் (ஜெப மாலை) இன்னொரு குழுவினர் கல்வி கற்றுக் கொண்டும் இருந்தனர். இது பற்றி நபிகளார், இரண்டு குழுவினருமே நற்செயல்களில் ஈடுபட்டிருந்த போதிலும் கல்வி கற்றுக் கொண்டிருந்தவர்கள் தான் சிறந்தவர்கள் என்று கருத்துத் தெரிவித்தார்கள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே நபிகளார், கல்வி கற்றுக் கொண்டவர்களின் அருகில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். அறிவைப் பெறுவதற்காக ஒரு முழு இரவைச் செலவு செய்வது, தூங்காமல் விழித்திருந்து இரவு முழுவதும் செய்திடும் வணக்கத்தை விடச் சிறந்தது' என்றும் அவர்கள் நவின்றார்கள்.

இரண்டு வகையான மாணவர்கள் அப்போது அல்ஸுஃபாவில் இருந்தனர். ஒரு பிரிவினர் தினசரி வந்து படித்துவிட்டுச் சென்றனர். இன்னொரு பிரிவினர் தங்களுக்குத் தங்குமிடம் இல்லாத காரணத்தால், அங்கேயே இரவு நேரங்களில் தங்கிப் பயின்றனர். நபிகளாரின் வீட்டிலுள் ளவர்களைச் சார்ந்து அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அரசின் கருவூலத்திலிருந்தும் அவர்கட்கு நிதி உதவி செய்யப்பட்டது. ஆனால், மாணவர்கள் 'சாறுண்ணிகள்' போன்று இருக்க வில்லை. படித்துக்கொண்டே அவர்கள் பிற வேலைகளிலும் ஈடுபட்டு வருவாய் ஈட்டினார்கள்.

அல்ஸுஃபா நிறுவப்பட்ட பின்னர், வேறு பள்ளிக் கூடங்களும் தொடங்கப்பட்டன. அல்ஸுஃபா தவிர, பலாதூரி என்ற பள்ளி கூடமும் தொடங்கப்பட்டது. மதீனாவிலிருந்து பல்வேறு பள்ளி வாசல்களில் ஒன்பது பள்ளிக்கூடங்கள் இணைக்கப்பட்டிருந்தன. புதிதாக இஸ்லாத்தில் இணைந்து கொண்டிருந்த மக்களுக்கு விளக்கங்கள் கொடுப்பதற்காக மதீனாவின் சுற்றுப்புறப்

பகுதிகளுக்கு நபிகளார் தங்களது தோழர்களை அனுப்பி வைத்தார்கள். ஹாஸ்ம் மகன் அம்ர்(ரலி) அரசாட்சிப் பணியோடு கல்வி கற்பிக்கும் பணியையும் சேர்த்தே செய்து வந்தார்.

## பெண் கல்வி

நீங்கள் ஒரு ஆணுக்கு கல்வி கற்பித்துக் கொடுத்தால் அது அவனுக்குமட்டுமே பயனளிக்கும். ஆனால் ஒரு பெண்ணுக்கு கல்வி கற்பித்துக் கொடுத்தால், அந்தக் குடும்பமே பயன் பெறும் என்று நபிகளார் கூறினார்கள். கல்வி அறிவைப் பெறுவதில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் நபிகளார் எந்த விதமான வித்தியாசத்தையும் கற்பிக்கவில்லை. குர்ஆன் வசனங்கள் தங்களுக்கு இறைவனால் அருளப்பட்ட–போதெல்லாம், உடனே முதலில் அதனை ஆண்களிடமும், பின்னர் பெண்களிடமும் ஓதிக் காட்டுவார்கள். வாரத்தில் ஒரு நாள் பெண்களுக்கு கல்வி கற்பிக்க நேரம் ஒருக்கினார்கள். அவர்கள் கேட்கும் பல்வேறு விதமான கேள்விகளுக்கெல்லாம் நபிகளார் பொறுமையுடனும், பிரியத்துடனும் பதிலளிப்பார்கள்.

மதீனா நகர அன்சாரிப் பெண்களின் எளிமை, கல்வி கற்பதினின்றும் அவர்களைத் தடுத்திட வில்லை என நபிகளாரின் மனைவி ஆயிஷா(ரலி) அவர்கள் ஒரு முறை அவர்களைப் புகழ்ந்து பேசினார்கள். நபிகளார் வாழ்ந்த காலத்தில் சில பெண்கள் குர்ஆனை மனப்பாடம் செய்திருந்தனர்.

சில பெண்கள் திருக்குர்ஆன் விளக்க உரை நிகழ்த்துவார்கள். பலர், ஹதீஸ்களை கற்றுக்கொடுப்பதோடு விளக்கமும் கூறினார்கள். ஆண்களைப் போலவே மத விஷயங்களில் பெண்களும் பத்வா (தீர்ப்பு) வழங்கினார்கள். 'உம்முல் பத்ல்' என்ற பெண்மணி தனது இல்லத்தில் ஒரு பள்ளிக்கூடம் நடத்தி வந்தார். நபிகளார் வாழ்ந்த காலத்தில் குறைந்த பட்சம் ஐந்து பெண்கள் எழுதவும், படிக்கவும் தெரிந்திருந்தனர்.

# செயலகம்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய வரலாற்று ஆசிரியர்களும், பிறரும் பல்வேறு கால கட்டங்களில் நபிகளாருக்கு உதவிட ஐம்பது நகல் எழுத்தர்கள் இருந்ததாகப் பதிவு செய்துள்ளனர். அவர்களில் சிலர் குர்ஆன் வசனங்களை மொழி பெயர்க்கும் பணியிலும், மற்றவர்கள் நபிகளாரின் சார்பாக அரசர்களுக்கும், ஆளுநர்கட்கும் அலுவலக் கடிதங்கள் எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தனர். சிலர் ஜகாத் கணக்கு எழுதுவதிலும், சிலர் அரசின் வருவாய்க் கணக்கை எழுதுவதிலும் ஈடுபட்டனர்.

## அலுவலக முத்திரை – கடிதங்கள்

சுமார் நானூறுக்கும் அதிகமான ஆவணங்கள், உடன் படிக்கைகள், சாஸனங்கள், அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள், கணக்கெடுப்பு ஆவணங்கள் ஆகியவை பாதுகாக் கப்பட்டன. இஸ்லாத்தில் இணைய வேண்டி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பல அரசர்களுக்கு எழுதிய கடிதங்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள.

தமது செயலாளரிடம் கடிதத்தில் எழுத வேண்டிய வாசகங்களை குறிப்பிடும் போது நபிகளார் முதலில் இறைவனின் பெயரால் ஆரம்பிக்கிறேன் என எழுதச் சொல்லி விட்டுப் பின்னர் அனுப்புவரின் பெயர் பெறுபவரின் பெயர், செய்திகள் ஆகியவற்றை எழுதச் செய்தபின், இறுதியில் அரசு முத்திரையை அதில் இடச் செய்வார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது நபித்துவத்தின் அத்தாட்சிக்கு அடையாளமாக 'அல்லாஹ்வின் தூதர் முஹம்மது' என செதுக்கப்பட்டிருந்த வெள்ளி முத்திரை ஒன்றைப் பயன்படுத்தினார்கள்.

# செயலாளர்களும்,
# வேற்று மொழிகளைக் கற்றலும்

உமர் மகன் அப்துல்லாஹ்(ரலி) நபிகளாரின் தனிச் செயலாளராகவும், அறிவார்ந்த இளைஞர் அனஸ்(ரலி) செயலாளராகவும், தாபித் மகன் ஸைது தலைமைச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். ஸைது அசாதாரண அறிவு பெற்றவராக விளங்கினார். நபிகளார் அவரை ஹீப்ரு மொழி கற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்த அவரும் மிகக் குறுகிய காலத்தில் அம்மொழியைக் கற்றுக் கொண்டார். தான் எழுதச் சொல்லும் கடிதங்களை ஹீப்ரு மொழியில் மொழிபெயர்ப்புச் செய்வதற்காக ஸைதின் துணை நபிகளாருக்குத் தேவையாக யிருந்தது. ஹீப்ரு மொழி தெரிந்த வேறு யாரையும் நபிகளார் அவ்வளவாக நம்பவில்லை. ஸைது அம் மொழியைக் கற்று அதில் நன்கு புலமை பெற்றார்.

இவ்வாறாக நபிகளார் தனது செயலாளர் மூலம் அலுவலகப் பணிகளை ஹீப்ரு மொழியில் நடத்திட்டார்கள். பின்னர் நபிகளார் அவரை சிரியாக் மொழியைக் கற்றுக் கொள்ளும்படி வேண்ட அவர் அந்த மொழியையும் கற்றுக் கொண்டார். அம் மொழியிலும் நல்ல புலமை பெற்றிருந்தார். ஸைதுவின் அபார நினைவாற்றல் காரணமாகவும், குர்ஆனின் வசனங்களை அப்படியே அட்சரம் பிசகாமல் சொல்லிடும் ஆற்றல் பெற்றிருந்ததன் காரணமாகவும் அவர் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அவர் குர் ஆனின் வசனங்களை உடனுக்குடன் சொல்லும் ஆற்றல் பெற்றிருந்ததன் காரணமாக அவர் 'இறை வசனங்களை எழுதுபவர்' எனப் பெயர் பெற்றிருந்தார்.

இந்தக் கால கட்டத்தில் தான் நபிகளார் குர்ஆனைத் தொகுத்திட ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக்குழுவிற்கு ஸைதைத் தலைவராகவும், அபூபக்கர்(ரலி) உமர்(ரலி), உஸ்மான்(ரலி) ஆகியோரை உறுப்பினர்களாகவும் நியமித்தார்கள்.

## கணக்கெடுப்பு

மதீனாவிற்கு வந்தவுடன், அந்த நகரத்தின் மக்கட் தொகையைக் கணக்கிட நபிகளார் ஆணையிட்டார்கள். இந்தக் கணக்கெடுப்பின் படி அந் நகரின் மக்கட் தொகை (ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் சேர்ந்து) 10,000 ஆக இருந்தது. இதில் 500 முஸ்லிம்கள் இருந்தனர். மதீனாவில் இஸ்லாம் வருவதற்கு முன்னர், மக்கட் தொகை கணக்கெடுப்பு ஒரு பாவமான செயல் என்றும், அது இறைவனின் விருப்பத்தில் தலையிடும் ஒரு செயல் என்றும் யூதர்கள் கருதினார்கள்.

## நகரமைப்பு

மதீனாவில் நகரை நிர்வகிக்கும் அமைப்பு ஒன்றினை நபிகளார் உருவாக்கி னார்கள். இதற்கு பலதியா என்று பெயர் இந்த வார்த்தை பலதி(நகரம்) என்ற அரபு வார்த்தையிலிந்து வந்தது. இந்த பலதியா, நகரைப் பராமரிக்கும் பணியை மேற்கொண்டிருந்தது.

## நான்கு வழிச் சாலை

வீடுகளிலிருந்து தண்ணீரும், கழிவுநீரும் வெளியேறு–வதற்காக தெருக்களின் பின்புறத்தில் ஓடைகளை அமைத்–திடுமாறு மக்களை நபிகளார் அறிவுறுத்தினார்கள். இதுவே அவர்கள் எடுத்த முதல் நடவடிக்கையாகும். பள்ளி வாசலைச் சுற்றி உருவாகி வளர்ச்சியடைந்து வந்த புதிய நகர்ப்பகுதியில் வீடுகளுக்கிடையே சந்துகளையும், வழிப்– பாதைகளையும் குறிப்பிட்ட நீள அகலத்தில் அமைத்து அவற்றைச் சுத்தமாகப் பராமரித்திடுமாறு நபிகளார் மக்களை அறிவுறுத்தினார்கள். இஸ்லாமிய அறிஞர் முஹம்மது ஹமீதுல்லாஹ் என்பவர் கூறுவதாவது: நபிகள்நாயகம்(ஸல்) அவர்கள் குறுக்குச் சாலைகளை அறிமுகம் செய்தார்கள். சுமையுடன் இரு ஒட்டகங்கள் ஒரே நேரத்தில் இருபக்கமும் செல்லும் வண்ணம் சாலைகளை நான்கு வழிச் சாலையாக அமைக்கும் படியும்

பயணிகளுக்கு வசதியாக சாலை இரு புறங்களிலும் நிழல் தரும் மரங்களை வளர்க்கவும் ஆலோசனைகள் கூறினார்கள்.

## வீட்டு வசதி

மஸ்ஜிதே நபவியின் (நபிகளார் பள்ளிவாசல்) நீண்ட கால முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சில குறிப்பிட்ட குடும்பங்களுக்கு, குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வீடுகளை ஒதுக்கினார்கள். இக்குடும்பங்கள் வசிக்கும் வீடுகளைச் சுற்றி சுவர்களை எழுப்புமாறும் ஆணையிட்டார்கள். இதன் மூலம் தனிமையைப் பராமரிக்கவும் நல்ல காற்றோட்டம் கிடைக்கவும் வழி ஏற்பட்டது. கணவன், மனைவி, குழந்தைகள் சேர்ந்து வாழும் தனிக் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற இஸ்லாமியக் கோட்பாட்டின் அடிப்படையில், நபிகளார் திருமணமான புதிய தம்பதியினருக்கு தனியே குடியிருப்புகள் ஒதுக்குவதை ஊக்குவித்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூட்டுக் குடும்பங்களை ஊக்குவிக்க வில்லை.

ஒவ்வொரு தம்பதியினரும் தனித்தனி வீடு பெற்று அதன் மூலம் தங்களது குழந்தைகளைப் பிறரது தொல்லையின்றி அன்புடனும் பரிவுடனும் வளர்த்திட முடிந்தது. நபிகளாரின் ஒரு ஹதீஸின் படி அவர்கள், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனி வீடும் சவாரி செய்ய ஒரு கால்நடையும் வழங்குவதற்கு முன்னுரிமை கொடுத்தார்கள். அதுவே குடும்பத்திற்கு மகிழ்ச்சி அளிக்கும் என்று கருதினார்கள்.

## குடிநீர் வழங்கல்

நபிகளார் மதீனாவிற்கு வந்த போது அங்கு மக்கள் குடிப்பதற்காக நல்ல தண்ணீர்க் கிணறு ஒன்று மட்டுமே இருந்தது. 'ரூமா கிணறு' என இது அழைக்கப்பட்டது. அந்தக் கிணற்றை விலைக்கு வாங்கி அதனை மக்கள் பயன்படுத்த அனுமதிப்–போருக்கு, சொர்க்கத்தில் மிகச் சிறந்த இடம் உண்டு என்று

நபிகளார் நவின்றார்கள். அவர்களின் சகாவான உதுமான்(ரலி) அவர்கள் அந்தக் கிணற்றை விலைக்கு வாங்கி அதனை மக்களுக்க அர்ப்பணித்தார்கள். இபாதாவின் மகன் ஸஅத்(ரலி) தனது தாயார் மரணமுற்ற போது அவரின் சார்பாக காணிக்கை ஒன்றினைச் செலுத்திட விரும்பினார். நபிகளாரை அணுகி மிகச்–சிறந்த காணிக்கை எது என அவர் வினவிய போது, அதற்கு நபிகளார் ஒரு கிணறு வெட்டுங்கள் என்று கூறினார்கள். தனது தாயர் பெயரில் ஸஅத்(ரலி) கிணறு ஒன்றினை வெட்டினார்.

## புராதானச் சின்னங்களைப் பாதுகாத்தல்

பழமை வாய்ந்த கட்டிடங்களையும், இயற்கை வளங்களையும் பாதுகாப்பதில் நபிகளார் பெரிதும் கவனம் செலுத்தினார்கள். வீடுகளை இடித்துக் கட்டுகின்ற போது, பழமையான அரண்களையும், சுவர்களையும் இடித்து விட வேண்டாமென்றும். புதிய கட்டுமானத்தில் அவற்றையும் சேர்த்துக் கொள்ளுமாறும் மக்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். மரங்களை வெட்ட வேண்டாமென்றும் அறிவுறுத்தினார்கள். பழைய கட்டிடங்களும், மரங்களும் மதீனா நகரின் வனப்பை அதிகரிக்கச் செய்யும் என நபிகளார் கூறியதாக குரோனிகிளர் பைஹாகி (*CHRONICLER BAIHAHI*) என்பவர் கூறுகிறார்.

வீடுகளுக்குள்ளும், வீடுகளுக்கு வெளியிலும் மரங்களை வளர்க்குமாறு நபிகளார் வேண்டினார்கள். நியாயத்தீர்ப்பு நாள் நெருங்கி வரும் நேரத்தில் கூட உங்களிடமுள்ள பேரீச்சம்பழ விதையை நட்டு வையுங்கள்' என நபிகளார் அறிவுறுத்தியதாக ஒரு ஹதீஸ் சொல்கிறது. ஊன்றப்படும் விதை மரமாக வளர்ந்து பலனைத் தரும் என்ற நம்பிக்கை இல்லாத போதும் கூட அதனைச் செய்யுங்கள் என நபிகளார் கூறியிருப்பது மரம் நடுவதற்கு அவர்கள் அளித்திட்ட முக்கியத் துவத்தைக் காட்டுகிறது.

## விருந்தினர் இல்லங்கள்

மதீனா நகரம், அரசு, நிர்வாகம், சட்டம், வர்த்தகம், வியாபாரம், கல்வி என அனைத்து துறைகளின் மையமாக உருவாகி வந்தது. இந்த நகரம், வடக்கில் சிரியாவிற்கும், பாலஸ்தீனத்திற்கும், தெற்கில் மக்கா வழியாக ஏமனுக்குச் செல்லும் முக்கியப் பாதையில் அமைந்திருந்தது.

வணிகர்கள் இங்கு தங்கி உணவுப் பொருட்களையும், கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பொருட்களையும் வாங்குவதோடு தாங்கள் கொண்டு வந்த பொருட்களையும் பண்டமாற்றுச் செய்வார்கள். வர்த்தகர்கள் தங்குவதற்காக பல விருந்தினர் இல்லங்களைக் கட்டுமாறு நபிகளார் ஆணையிட்டார்கள். அங்கு அவர்கட்குப் பல வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

பல பகுதிகளிலிருந்தும் நபிகளாரைச் சந்தித்து புதிய அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள தூதுக்குழுக்கள் வந்தன. ஆரம்பத்தில் அவர்கள் மஸ்ஜிதே நபவியுடன் இணைந்திருந்த நபிகளாரின் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டு உபசரிக்கப்பட்டனர். பல பகுதிகளை வென்று இஸ்லாமிய அரசு விரிவடைந்த போது இஸ்லாத்தில் புதிதாக இணைந்தவர்கள் தொடர்ந்து மதீனா நகருக்கு வந்து கொண்டே இருந்தனர்.

மக்காவிலிருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த அப்துர்ரஹ்மான் பின்அவ்ப் என்ற வசதிபடைத்த வணிகர், மதீனாவில் தனக்குச் சொந்தமான பெரிய வீடுகளில் ஒன்றினை விருந்தினர்கள் தங்குவதற்காக ஒதுக்கியிருந்தார் என வரலாற்று ஆசிரியர் நூருத்தீன் சம்கௌதி தெரிவிக்கிறார். ஒரு நேரத்தில் அத்தகைய 200 தூதுக்குழுக்கள் மதீனாவில் தங்கியிருந்ததாகச் சொல்லப் படுகிறது. பல பெரிய வீடுகள் அவர்கள் தங்குவதற்காக வாடகைக்கு விடப்பட்டன.

## மருத்துவமனைகள் நிறுவுதல்

இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர், அரபுகள் சொந்தமாகவே மருத்துவம் பார்த்துக் கொண்டனர். பொது மருத்துவ மனைகள் அப்போது அங்கு இல்லை. இஸ்லாமிய அரசு ஏற்பட்ட பின்னர் மதீனாவில் பொது மக்களின் நல்வாழ்வைப் பேணுவதற்காக மருத்துவமனைகள் நிறுவப்பட்டன. ராபிதா(ரலி) என்ற நபித்தோழர், நபிகளார் கட்டிய பள்ளிவாசலுக்கு அருகில் ஒரு கூடாரம் அமைத்து காயம் பட்ட வீரர்களுக்குச் சிகிட்சை அளித்தார். முஆத் மகன் ஸஅத்(ரலி) அகழிப் போரில் காயமுற்ற போது, நபிகளார் அவரை இந்த ராபிதா(ரலி) அவர்களின் மருத்துவ முகாமிலேயே தங்கியிருந்து சிகிட்சை பெறும்படி அறிவுறுத்தியதோடு. அவரை அடிக்கடி சென்று பார்த்துக் கொண்டார்கள். மருத்துவ முகாம்களை அமைப்பதிலும் நிரந்தரமான மருத்துவ மனைகளை அமைப்பதிலும் இஸ்லாம் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பணியைச் செய்துள்ளது. உம்மு சுலைம், நஸீபா என்ற இரண்டு பெண் தோழர்கள் போரில் காயம்பட்ட தோழர்கட்கு முதலுதவி செய்தார்கள். குடிநீர் வழங்கினார்கள். எனவே இஸ்லாமிய வரலாற்றில் இந்த இருவரும் முதல் செவிலியர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

## சிறப்பு மருத்துவர்களின் சிகிட்சை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் காலத்தில் இருந்த மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிட்சை நிபுணர்கள் ஆகியோரைப் பற்றிய தகவல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. ஒரு தோழர் சுகவீனமுற்றிருந்த போது அவரை விசாரிக்க நபிகளார் சென்றார்கள். அப்போது அந்தப் பகுதியில் மருத்துவர் யாரேனும் உள்ளனரா? என அவர்கள் விசாரித்தபோது இரண்டு பேர்களின் பெயர்கள் சொல்லப்பட்டன. அந்த இருவரில் நன்கு நிபுணத்துவம் பெற்ற ஒருவரிடம் அவரை அனுப்புமாறு நபிகளார் ஆலோசனை கூறினார்கள்.

இந்தச் சம்பவம் நபிகளார், சிறப்பு மருத்துவர்களின்

சிகிட்சை பற்றி நன்கு தெரிந்திருந்தார்கள் என்பதையே காட்டுகிறது. தகுந்த கல்வித் தகுதி இல்லாமல் மருத்துவம் பார்த்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். ஏனெனில் அவர்களின் அறியாமை சமுதாயத்தைப் பாதித்துவிடும் என நபிகளார் எண்ணினார்கள். இது போன்ற பல சம்பவங்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் காலத்தில் மருத்துவத்தின் முக்கியத்துவம் எந்த அளவுக்கு உணரப்பட்டது என்பதைத் தெரிவிக்கின்றன.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் வந்து தங்கள் நோயினைச் சொல்லி ஆலோசனை கேட்டவர்கட்கு அவர்கள் மிக எளிதான மருத்துவ முறைகளைச் சொல்லியுள்ளார்கள். நபிகளாரின் செய்முறை மருத்துவம், ஆலோசனைகள் காரணமாக மருந்துகளைப் பற்றிய முழுமையான விஞ்ஞானம் அப்போதே உருப் பெற்று விட்டது.

## மதீனா சந்தை

மதீனாவில் ஒரு ஒழுங்கு முறைச் சந்தையை நபிகளார் உருவாக்கி இருந்தார்கள். அது அஸ்வாக் என மக்களால் அழைக்கப்பட்டது. நபிகளார் கட்டிய பள்ளிவாசலின் வடமேற்குத் திசையில் வெகு அருகாமையில் இந்தச் சந்தை இருந்தது. இது சுமார் 500 மீட்டர் நீளமும், நூறு மீட்டருக்கும் அதிகமான அகலமும் கொண்டதாக இருந்தது அப்போதையத் தேவையை விடவும், இச் சந்தை சற்று பெரியதாக இருந்தது எனலாம். நபிகளாரின் விசாலமான பார்வை மற்றும் சிந்தனையின் வெளிப்பாடாக இது திகழ்ந்தது.

மதீனா நான்கு திசைகளிலும் விரிவடைந்து கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில் அங்கு வசித்து வந்த பல்வேறு இனக்குழுவைச் சார்ந்த மக்களும் இந்த அதிசயத்தை வியந்து பார்த்த வண்ணம் இருந்தனர்.

# பாவம் – சட்ட விரோதம் – தடை

இந்த உலகம் முழுவதிலுமுள்ள மக்களை நேர்வழிப் படுத்தும் அரிய பணி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆன்மீக ரீதியிலும், லௌகீக ரீதியிலும் மனிதனைச் சீர்படுத்தும் பணியாக இது இருந்தது. திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்தச் சீர் திருத்தங்களைச் செய்திட அவர்கள் பணிக்கப்பட்டிருந்தார்கள். திருக்குர் ஆனின் போதனைகளும், நபிகளாரின் போதனைகளும் காலம், சமூகம் என அனைத்து விதமான எல்லைகளையும் தாண்டி ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் இன்னும் வரப்போகின்ற மக்கள் என அனைவருக்கும் வழிகாட்டுவதாக அமைந்திருந்தன. ஒரு உலகளாவிய கொள்கையை வழங்கிய நபிகளார் அதற்குரிய விதிமுறைகளையும் சட்டங்களையும் வகுத்தார்கள். ஒட்டு மொத்த மனித சமுதாயத்தின் மரபுகளை உள்ளடக்கியதாகவும், நாடி வந்தவர்கள் அதனை எளிதில் அறிந்து கொள்ளும் வகையிலும் அவை அமைந்திருந்தன. இந்த முதிர்ச்சியடைந்த 21ம் நூற்றாண்டிலும் மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்திட உருவாக்கப்பட்ட அந்தக் கொள்கைகள் கீழே குறிப்பிடப்–பட்டுள்ளன.

- தர நிர்ணயம் செய்யப்பட்ட எடைகள், தராசுகள் இருந்தன
- விலைகள் வரையறை செய்யப்பட்டன.
- வியாபாரத்தில் ஏகபோகம் தடுக்கப்பட்டது.
- உணவு தானியங்களைப் பதுக்குவது சட்ட விரோதமாக்கப்பட்டது. யூக வணிகம் தடுக்கப்பட்டது.
- வட்டியுடனான வியாபாரம் தடைசெய்யப்பட்டு, அது சட்டவிரோதமென்றும் பாவமான செயல் என்றும் அறிவிக்கப்பட்டது.
- மது வியாபாரம் தடை செய்யப்பட்டது. மது குடிப்பதும் தடுக்கப்பட்டது.

- சூதாட்டம் சட்ட விரோதம் என அறிவிக்கப்பட்டு தடை செய்யப் பட்டது.
- விபச்சாரம் சட்ட விரோதமாக்கப்பட்டு தடை செய்யப்பட்டது.

மேற் சொல்லப்பட்ட வழிமுறைகள் ஒழுங்காக நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்பதை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அடிக்கடி பார்வையிட்டு உறுதி செய்து கொண்டார்கள். ஒரு முறை ஒரு வணிகர் நன்கு காய்ந்த தானியங்களோடு, ஈரமான தானியங்களைக் கலந்து விட்டதை நபிகளார் பார்த்துவிட்டார்கள். உடனே, அந்த தானியக் குவியலின் உள்ளே தமது கைகளை விட்டு அந்த கலப்படத்தை உறுதி செய்த நபிகளார், வாங்கு பவர்களை ஏமாற்றுவதற்காகவே அந்த வணிகர் இவ்வாறு செய்ததாக அறிந்து ஏன் இப்படிச் செய்தீர்கள் என அவரிடம் வினவியபோது அதற்கு அவர் மழை தான் காரணம் என்று பதிலளித்தார் உடனே நபிகளார் "பிறரை ஏமாற்றக் கூடிய அவர் நம்மவர் இல்லை" என்று அறிவித்தார்கள்.

தூய்மைக்கு நபிகளார் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார்கள். வீட்டு முற்றங்களையும் சந்தைப் பகுதியையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென தங்களது தோழர்களிடம் வலியுறுத்துவார்கள். சாலையோரங்களில் அமர்ந்து கொண்டு பேசுவதைத் தடை செய்தார்கள். வரிவசூலைக் கண்காணிப்பதற்கு ஆண்/பெண் ஆய்வாளர்களை நியமித்து இருந்தார்கள். சட்டத்தை மீறியவர்கட்கு கடும் தண்டகைள் வழங்கப்பட்டன.

## ஆண் ஆய்வாளர்கள்

ஆய்வாளர்களாகவும், வரிவசூல் செய்பவர்களாகவும், ஆண்களையும், பெண்களையும் நபிகளார் நியமித்து இருந்தார்கள். ஆய்வாளர்களில் ஸஅத் பின் முஆத்(ரலி) அப்துல்லாஹ் மகன் ஸஅத் மற்றும் உமர்(ரலி) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## பெண் ஆய்வாளர்கள்

பெண் ஆய்வாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மஹ்ராபா(ரலி) மகள் ஸம்ரா(ரலி) அப்துல்லா(ரலி) மகள் ஷிஃபா ஆகியோராவர். இஸ்லாத்தின் முதல் படித்த பெண்மணியான அப்துல்லாஹ் மகள் ஷிஃபா(ரலி) அவர்களை மதீனா சந்தையின் ஆய்வாளராகவும், சுங்க அதிகாரியாகவும் நபிகளார் நியமித்–தார்கள். பெண் வர்த்தகர்களால் சந்தைக்குக்கொண்டு வரப்பட்ட உணவுப் பொருட்களை இவர்கள் மூலம் மேற்பார்வையிட முடிந்தது.

## ஆண் வர்த்தகர்கள்

இஸ்லாமிய அரசின் முதல் கலீபாவான ஹழ்ரத் அபூபக்ர்(ரலி) அவர்கள் துணி வியாபாரம் செய்து வந்தார்கள். முஸ்லிம் படையின் தளபதியாக இருந்து பாரசீக, பைஸாண்டியப் பேரரசுகளை வென்ற ஹழ்ரத் உமர்(ரலி) அவர்கள் நவதானிய வியாபாரம் செய்து வந்தார்கள். ஹழ்ரத் உதுமான்(ரலி) அவர்களும், அப்துல் ரஹ்மான் பின் அவ்ப்(ரலி) அவர்களும் முன்னணி ஜவுளி வணிகர்களாக இருந்தனர். நபிகளாரின் தோழர்களில் பலர் நெசவு, தச்சு, விவசாயம், தோட்டம், தையல் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

## பெண்வணிகர்கள்

பெண் வணிகர்களில் மர்ஹாபா மகள் அஸ்மா(ரலி), சுயைப் மகள் கௌலா, பின்த் ஷனுப் மற்றும் மாலிகா உம்மு ஸயீப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## வணிகம்

வணிகம் பற்றித் திருக்குர்ஆன் பின் வருமாறு குறிப்பிடுகிறது.

உன்னுடைய இறைவனிடமிருந்து செல்வத்தைக்

கோருவதில் எந்தப் பாவமும் இல்லை. பிரபஞ்சம் முழுவதும் பரவியிருக்கும் இறைவனின் கருணையைக் கேட்டுப் பெற்றிடு (திருக்குர்ஆன் *60:11*)

உண்மையில் அல்லாஹ் வியாபாரத்தை அனுமதிக்கப் பட்டதாகவும், வட்டியை தடுக்கப்பட்டதாகவும் ஆக்கியுள்ளான். (திருக்குர்ஆன் *2:275*)

வணிகம் புரிந்தபோது நபிகளார் காட்டிய நேர்மை, நாணயம், நேரியதன்மை ஆகிய பண்புகள், எல்லா வணிகர்களும் என்றைக்கும் பின் பற்றத்தக்க முன்மாதிரிகளாக அமைந்திருந்தன. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் கீழ்க்கண்ட கருத்துக்கள் நியாயமும், கடின உழைப்பும் கொண்ட அனைத்து வணிகர்கட்கும் மிகச் சிறந்த வழிகாட்டுதல்களாக அமைந்துள்ளன.

"அன்றாட வாழ்க்கைக்காக சட்டப்பூர்வமான முறையில் ஊதியம் ஈட்டுவது கட்டாயக் கடமையாகும். அது மற்றக் கடமைகளை விடவும் உயர்ந்தது, உண்மையான நம்பகமான ஒரு வியாபாரி இறைத்தூதர்களுடனும், நேர்மையாளர்களுடனும், தியாகிகளுடனும் மறுமையில் எழுப்பப்படுவார். விற்கும் போதும், வாங்கும் போதும், தனக்குரியதை கேட்டுப் பெறும் போதும் அன்பாக நடந்து கொள்பவர்கள் மீது இறைவன் கருணை காட்டுகிறான். ஒரு நாடு ஆயுத வலிமையைக் காட்டிலும் வளமான வர்த்தகத்தின் மூலமே பெரிதும் நன்மையடைகிறது. நியாயமற்ற வணிகர்கள் நீண்ட நாட்களுக்குத் தாக்குப் பிடிக்க மாட்டார்கள். நாணயமான வணிகர்களே வெற்றி பெறுவார்கள்".

## வர்த்தக உடன்பாடுகள்

மதீனாவில் இஸ்லாமிய அரசு நிறுவப்படுவதற்கு முன்பு, வர்த்தகக் கூட்டங்களின் பாதுகாப்புத் தான் பெரும் பிரச்னையாக இருந்தது. அவர்களைப் பாதுகாப்பதற்காக நபிகளார் ஒரு திட்டத்தை வகுத்தார்கள். வர்த்தகமும், வாணிபமும் பாதுகாப்புடன் நடந்திட நபிகளார் முறையான சாட்சிகளைக்

கொண்டு எழுத்துபூர்வமான உடன்படிக்கைகளை அறிமுகப் படுத்தினார்கள். எல்லாவிதமான வர்த்தகப் பரிமாற்றங்களையும் எழுத்துப் பூர்வமாகச் செய்யும்படி குர்ஆன் வலியுறுத்துகிறது. சரக்குகளைப் பட்டுவாடாச் செய்யாமலிருக்கும் போது இது மிகவும் அவசியமானது. இது பற்றிக் குர்ஆன் குறிப்பிடுவதாவது.

> இறை நம்பிக்கையாளர்களே! ஒரு குறிப்பிட்ட தவணையை நிர்ணயித்து நீங்கள் உங்களுக்குள் கடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டால் அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள் மற்றும் உங்களில் இரு ஆண்களைச் சாட்சியாக்கிக் கொள்ளுங்கள். (குர்ஆன் 2:282)
>
> இஸ்லாத்தில் ஒப்பந்தம் (உடன்படிக்கை) மிகவும் முக்கியமானது. திருமண ஒப்பந்தம், சமூக ஒப்பந்தம், வணிக ஒப்பந்தம், தகராறுகள் மற்றும் போர்களைத் தவிர்ப்பதற்கான ஒப்பந்தம் என அனைத்திலும் ஒப்பந்தம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தங்களின் முக்கியத்துவம் பற்றியும், அவற்றை நிறைவேற்ற வேண்டிய தேவை பற்றியும் குர்ஆன் 'ஒவ்வொரு ஒப்பந்தமும் விசாரிக்கப்படும்' (குர்ஆன்17:34)

என்று குறிப்பிடுகிறது. முஸ்லிம்கள் தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் உறுதியாக நிற்க வேண்டுமென நபிகளார் கூறியுள்ளார்கள்.

## அந்நியச் செலவாணி

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சர்வதேச வணிகச் சட்டங்களையும் அறிமுகப்படுத்தினார்கள். அவர்களது காலத்தில் அந்நியச் செலவாணி முறை அறிமுகமானது. முஸ்லிம் அரசர்கள் சர்வதேச வணிகத்திற்கு 'சக்கா' எனப்படும் உறுதி மொழிப்பத்திரங்களை அறிமுகப்படுத்தினார்கள். சக்கா' என்ற அரபி வார்த்தையே பின்னர் செக் (*cheque*) என்று மாறியது.

## இராணுவ நிர்வாகம்

ஆரம்பக் கட்டத்தில் இராணுவத்திற்கென நிர்வாக அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தேவையான இராணு வீரர்களைத் தேர்வு செய்து அவர்களை பல்வேறு இராணுவ முகாம்களுக்கும் அனுப்பினார்கள்.

## நிரந்தர இராணுவம்

போதுமான வாய்ப்புகள் இல்லாத முஸ்லிம் இராணுவ வீரர்களுக்கு அரசு மானியம் வழங்கியது. அதன் மூலம் இராணுவத்தின் வலிமை பெருகியது.

## உடல் தகுதியும், தற்காப்புப் பயிற்சியும்

இராணுவப் பயிற்சி கட்டாயமாக்கப்பட்டு, அதற்கான தகுந்த பயிற்சி முறை நபிகளாரால் உருவாக்கப்பட்டது. உதாரணமாக உடற் பயிற்சிகள் மூலமாக தங்களது உடல் தகுதியைப் பராமரித் திடுமாறு நபிகளார் மக்களை வலியுறுத்தினார்கள். விற் பயிற்சியை அவர்கள் ஊக்குவித்தார்கள். அல் சிபாக் என்ற மைதானத்தில் நடைபெற்ற அப்போட்டிகளை நபிகளாரே நேரில் சென்று பார்த்தார்கள். குதிரைப் பந்தயம், ஒட்டகப் பந்தயம், மல்யுத்தம், நீச்சல் போன்ற போட்டிகளையும் ஊக்குவித்தார்கள். அந்நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்கட்கு நபிகளார் பரிசுகள் வழங்கினார்கள். மதீனாவின் வடக்கு வாசலில், மஸ்ஜிதுல் அல் சிபாக் என்ற பள்ளிவாசல் இன்றைக்கும் இருக்கிறது. அல் சிபாக் என்ற வார்த்தைக்கு 'போட்டியில் வெல்வது' என்பது பொருளாகும். ஒரு மலைக்கு அருகிலுள்ள உயரமான ஒரு இடத்தில் நின்று கொண்டு நபிகளார் குதிரைப் பந்தயத்தைப் பார்த்து அதில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தவர்களை தெரிவு செய்வார்கள். அல் மகிரிஸி எனும் வரலாற்றாசிரியர் வெற்றி பெற்ற முதல் ஐந்து குதிரைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதாகவும், பரிசுப் பொருட்கள் பேரீச்சம்

பழங்களாகவோ, பிற பொருட்களாகவோ இருந்தன என்றும் குறிப்பிடுகிறார். அதே நேரத்தில், அரசின் முயற்சிகள் மூலம் ஆயுதங்களைச் சேகரிக்கும் பணியும் நடைபெற்றது. ஆயுதங்களில் குதிரைகள், ஒட்டகங்கள் என அனைத்தும் அடங்கும். புல்வெளிகளில் வைத்து குதிரைகளும் ஒட்டகங்களும் பராமரிக்கப்பட்டன.

## ரோந்து புரியும் புலனாய்வு நிறுவனம்

மதீனா ஒரு மிகச் சிறிய இஸ்லாமிய நாடாக இருந்தது. அதன் முதல் ஆட்சியளாராக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இருந்தார்கள். மதீனாவைச் சுற்றிலும் எதிரிகள் இருந்தார்கள். இந்த அரசு வலுப்பெற்று ஒரு பெரிய சக்தியாக வருவதற்கு முன்னரே அதனை அழித்துவிட வேண்டுமென்று அந்த எதிரிகள் திட்டம் தீட்டினார்கள். எனவே எதிரிகளின் நிலைமை, நகர்வு, திட்டங்கள், வழிமுறைகள், ஆயுத வலிமை, பொருட்கள், உணவு தானியக்கையிருப்பு ஆகியவற்றைக் கண்காணித்து தகவல்கள் தெரிவித்திட நபிகளார் ஒரு புலனாய்வு காவல் ரோந்துப் பிரிவை உருவாக்கியிருந்தார்கள். இந்தப் புலனாய்வுக் காவல் ரோந்துப் பிரிவு மதீனாவைச் சுற்றிலுமிருந்த எதிரிகள் மற்றும் இனக் குழுவினரின் நடவடிக்கைகளை நபிகளாருக்கு அவ்வப்போது தெரிவித்து வந்தது. மேலும் மதீனாவைப் பாதுகாக்கும் நோக்கில் தேவைப்படும் இடங்களிலெல்லாம் கண்காணிப்புத் தூண்கள் அமைக்கப்பட்டன. முஸ்லிம் வீரர்கட்கு இராணுவ வார்த்தைகள், ரகசிய சமிக்ஞைகள், சங்கேத வார்த்தைகள் ஆகியவற்றில் தக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டன. புலனாய்வுத் தகவல்களைப் பெறுவதற்காக நபிகளார் ஒன்றுக்கும் மேற்பட்ட அமைப்புகளை வைத்திருந்தார்கள்.

## நிதி அமைச்சகம்

## பைத்துல் மால் – தேசியக் கருவூலம்

மதீனா இஸ்லாமிய அரசில், முஸ்லிம்கள் ஸகாத் வரி செலுத்தினர். இது பைத்துல் மால்கள் மூலம் (பொது ஊதியம்)

வசூலிக்கப்பட்டது. இந்த ஸகாத் பணம் அரசுக்கு நிதி அளிப்பதற்கும், ஏழைகளுக்கும் தேவைப்பட்டவர்கட்கும் உதவிடவும் பயன்படுத்தப்பட்டது. அதிக வருமானத்தை ஈட்டித்தந்த இந்த ஸகாத் கட்டாயமானது. வருமானமுள்ள ஒவ்வொருவரும் இந்த வரியைச் செலுத்த வேண்டும். இந்த வரி, சொத்தின் அடிப்படையில் ஒரு பிரிவினருக்கும் இன்னொரு பிரிவினருக்குமிடையே மாறுபடும். உதாரணமாக இது விவசாயப் பொருட்களுக்கு 10 சதவிகிதமாகவும், வியாபாரி–களுக்கு அவர்களது மூலதனத்தில் 2.5 சதவிகிதமாவும் வசூலிக்கப்பட்டது. இரும்பு, தங்கம், வெள்ளி வைத்திருந்தோர் குறிப்பிட்ட ஒரு பகுதியை அரசிற்குச் செலுத்த வேண்டும்.

மதீனாவிற்கு வெளியிலுள்ள இடங்களிலிருந்து 'ஸகாத்' வசூல் செய்வதற்காக வருவாய் ஆய்வாளர்கள் அனுப்பப்பட்டனர். பின்னர், உள்ளூர் வரி வசூலிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். தபூக் போரின் போது ஏற்பட்ட பெரும் செலவினை ஈடுகட்ட நபிகளார் சிறப்பு நிதி வழங்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். அதே நேரத்தில் தங்களுடைய தோழர்களை ஸகாத்தை முன் கூட்டியே வழங்குமாறு பணித்தார்கள். இப்படி முதல் முறையாக 'முன் ஸகாத்' அல்லது 'முன் வரி' வசூல் செய்யப்பட்டது.

பைத்துல்மால் மூலம் வசூல் செய்யப்பட்ட வருவாய்க் கணக்குகளைப் பராமரித்திட நபிகளார் எழுத்தர்களை நியமித்தார்கள். அரசிற்கு வந்த வருவாய்க் கணக்கை மேற்பார்வை செய்ய ஹழ்ரத் பிலால் நியமிக்கப்பட்டார். தொழுகை அழைப்புப் பணியை மேற்கொண்டிருந்த அவர், நிதி அமைச்சராகவும் பணியாற்றினார். நபிகளாரின் பள்ளிவாசலில் பைத்துல்மாலுக்கென ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அரசுப் பணமும் அரசின் சொத்து ஆவணங்களும், கருவூல ஆவணங்களும் அங்கிருந்த பாதுகாப்புப் பெட்டக அறையில் வைக்கப்பட்டிருந்தன.

## ஓய்வூதியமும் – நஷ்டஈடும்

ஆதரவற்றவர்கட்கும், ஏழைகட்கும் உதவிடும் வகையில் நபிகளார் ஓய்வூதியத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தினார்கள். மதீனாவிலிருந்த பனூஆரித் என்ற யூத இனக்குழுவினருக்கு நபிகளார் வருடாந்திர ஓய்வூதியம் நிர்ணயம் செய்து வழங்கி வந்தார்கள், இயற்கைக்கு மாறான முறையில் மரணமடைந்த–வர்கட்கும் நஷ்டஈடு வழங்கினார்கள்.

## வெளிவிவகாரத் துறை

ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டிலேயே, மதீனா இஸ்லாமிய அரசு மிகுந்த வலிமையையும், அங்கீகாரத்தையும் பெற்றது. அரேபிய தீபகற்பத்தைச் சார்ந்த 38 அரசர்கள், இனக்குழுத்தலைவர்கள், வெளிநாட்டு அரசர்கள் எனப் பலரும், இஸ்லாமிய அரசுடன் ஒப்பந்தங்கள் செய்திடவும், உறுதி மொழிப் பத்திரம் கையொப்பமிடவும் முன் வந்தனர். கிறிஸ்துவ, யூத இனக் குழுவைச் சார்ந்தவர்களும் நபிகளாரிடம் வந்து உதவி புரியும் ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர்.

## நீதி நிர்வாகம்

அக்காலத்திற்கு மிகவும் தேவையாகயிருந்த ஒரு நீதி நிர்வாகத்தையும் நபிகளார் உருவாக்கினார்கள். ஆரம்ப கால கட்டத்தில் சில நூறு முஸ்லிம்களே மதீனாவில் இருந்தனர். அவர்களுக்கிடையில் பெரிய அளவு பிரச்னைகள் ஏதும் அப்போது இல்லை. ஏதாவது பிரச்னைகள் ஏற்பட்டால், இனக் குழுத்தலைவர்களிடமோ, அல்லது நபிகளாரிடமோ அவற்றின் தீர்விற்காகச் செல்வார்கள். பிரச்னைகளின் குறித்து விரைவாக முடிவுகள் எடுக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டன. மிகப் பெரிய நீதிபதியாக இருந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் தங்களது பிரச்னைகளைக் கொண்டு சென்று தீர்வுகாணும் உரிமையையும் மக்கள் பெற்றிருந்தனர்.

# அனைவருக்கும் நீதி

மதீனா இஸ்லாமிய அரசின் மிகப் பெரிய நீதிபதியான நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மிகச் சிறந்த நீதிமானாக விளங்கினார்கள். இன, மத உறவுகளுக்கு அப்பாற்பட்டு, நண்பர்–எதிரி என்ற எந்த விதமான பேதமுமின்றி நியாயத்துடனும் நேர்மையுடனும் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கினார்கள். குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது. இறை நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியைக் கடைப்பிடிப்ப–வராகவும் அல்லாஹ்வுக்காகச் சான்று வழங்குபவராகவும் திகழுங்கள். (நீங்கள் செலுத்தும் நீதியும், வழங்கும் சாட்சியும்) உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே. அவர் செல்வந்தராகவோ, ஏழையாகவோ இருந்தாலும் சரியே. (குர்ஆன் *4:135*)

பிரச்னைகளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டே நபிகளார் தீர்ப்பு வழங்கினார்கள். அவை பாகுபாடற்ற நிரந்தரத் தீர்வாக அமைந்திருந்தன. சட்டப் பிரச்னைகளில் அவர்கள் கொண்டிருந்த தெளிவான, தீர்க்கமான அறிவு, தெளிவான ஞானம் காரணமாகப் பிரச்னைகள் தக்க முறையில் தீர்த்து வைக்கப்பட்டன. யூதர்களிடமிருந்து அவர்கள் விளைவித்த பொருட்களின் பங்கினைப் பெறுவதற்காக அப்துல்லாஹ் பின் சேஹி என்பவர் கைபருக்கு அனுப்பிவைக்கப்பட்டார். ஆனால் அவர் சென்ற இடத்தில் கொலை செய்யப்பட்டார். அவரது உடல் அவரது சித்தப்பா முஹீஸாவால் கண்டு பிடிக்கப்பட்டது. அவர் நபிகளாரிடம் சென்று யூதர்களை பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று வலியுறுத்தினார். நபிகளார் அவரிடம் 'அவர்

யூதர்களால் தான் கொல்லப்பட்டார் என்று நீங்கள் உறுதியாகச் சொல்ல முடியுமா?' என்று கேட்டபோது, அவர் கொலையைத் தான் கண்ணால் பார்க்க வில்லை என்று கூறினார். நபிகளார் அவரிடம், "யூதர்களிடம் உறுதி மொழி வாங்க வேண்டுமென்று கூறியபோது." 'யூதர்களின் உறுதி மொழியை எப்படி நம்ப முடியும்? அவர்கள் பொய்யான உறுதி மொழியை நூறு தடவைகள் சொல்வார்கள்" என்று முஹீஸா கூறினார்.

கைபரில் யூதர்களைத் தவிர வேறு யாருமில்லை. எனவே அவர்கள் தான் அப்துல்லாவைக் கொன்றிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் கொலையைப் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தால், யூதர்கள் மீது குற்றம் சாட்ட நபிகளார் விரும்பவில்லை. எனினும் அப்துல்லாஹ்வின் குடும்பத் தினருக்கு அரசுக் கருவூலத் திலிருந்து நட்ட ஈடு வழங்கினார்கள்.

'மக்ஸூமி' என்ற இனக்குழுவைச் சார்ந்த பெண்ணொருவர் திருடும் போது பிடிபட்டு விட்டார். இஸ்லாமிய முறைப்படி அவருக்குத் தண்டனை வழங்கப் படலாம் என குறைஷியர்கள் அஞ்சினர் இது பற்றி நபிகளாரிடம் பேசுவதற்காக நபிகளாரின் நேசத்திற்குரிய இளைஞரான உஸாமா என்பவரை அனுப்பி வைத்தார்கள். உஸாமா நபிகளாரிடம் இது பற்றி முறையிட்ட போது அவர்களின் முகத்தில் கோபக் குறிகள் தென்பட்டன. "இறைவன் வகுத்தளித்த சட்டநெறியில் தலையிட அவர்களுக்கு எப்படி தைரியம் வந்தது" எனக் கேட்டார்கள்.

குற்றமிழைத்த ஏழைகளுக்கு மட்டும் தண்டனை கொடுத்து விட்டு, பணக்காரர்களை விட்டு விட்ட பல முந்தைய சமூகத்தினர் இறைவனால் அழிக்கப்பட்டனர். எனது மகள் பாத்திமா(ரலி) திருடினாலும் அவளது கை வெட்டப்படும் என நபிகளார் அப்போது கூடியிருந்த வர்களிடையே கூறினார்கள்.

தாரிக் முஹர்பி என்பவர் குறிப்பிடுவதாவது:- ஒரு முறை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மதீனா பள்ளிவாசலில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்த போது அங்கிருந்த பனூதலாபா

இனக்குழுவைச் சார்ந்தவர்களைக் கண்ட அன்சாரித் தோழர் ஒருவர் எழுந்து நபிகளாரிடம் 'ஓ அல்லாஹ்வின் தூதரே! இந்த பனூதலாபா இனக்குழுவைச் சார்ந்தவர்களின் முன்னோர்கள் எங்களது குடும்பத்தைச் சார்ந்த ஒருவரை கொன்று விட்டனர். அதற்குப் பகரமாக அக் குழுவினரில் ஒருவரைத் தூக்கில் போட உத்தரவிடுங்கள்' என்றார். அதற்கு நபிகளார்' தந்தை செய்த செயலுக்காக மகனைப் பழிவாங்க முடியாது' என்று கூறினார்கள். இதன் மூலம் நபிகளார், தங்களை விட வேறு யாரும் நீதி வழங்குவதில் உறுதியாக இருக்க முடியாதென்றும் அது தங்களுடைய தனிப்பட்ட நலன்களுக்கோ அல்லது தங்களுக்கு நெருக்கமான உறவினர்களுக்கோ எதிராக இருந்தாலும் சரி என்பதை நிரூபித்துக் காட்டினார்கள்.

எதிரியாக இருந்தாலும், நண்பராக இருந்தாலும், பிரச்னையை யார் கொண்டு வந்தாலும் நியாயத்தின்படியே தீர்ப்பு வழங்கினார்கள். ஏழைக்கோ, பணக்காரருக்கோ சலுகை காட்டவில்லை. ஆனால் பிரச்னைகளை நியாயத்துடனும், நேர்மையுடனும் ஆராய்ந்து தீர்ப்பு வழங்கினார்கள். எதிரிகள் சம்பந்தப் பட்ட பிரச்னைகளையும் அவ்விதமே அணுகினார்கள். முஸ்லிம்களும், அல்லாதவர்களும் நபிகளார் நியாயம் வழங்குவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையிலே எந்த விதமான தயக்கமுமின்றி அவர்களிடம் பிரச்னைகளைக் கொண்டு சென்றார்கள்.

ஒரு முறை பனூகுரைழா குழுவைச் சார்ந்த யூதர் ஒருவர், பனூநளீர் குழுவைச் சார்ந்த இன்னொரு யூதரால் கொல்லப்பட்டார். இது சம்பந்தமான புகார் நபிகளாரிடம் வந்த போது, 'ஒரு உயிருக்கு ஒரு உயிர்' என்ற தவ்ராத் சட்டத்தை அமுல் படுத்தினார்கள். போரின் போதும், வெற்றி பெற்ற சூழ்நிலைகளின் போதும் நடைமுறைப்படுத்தப்பட்ட யூதச் சட்டங்கள் பின்வருமாறு உள்ளன.' எஜமானராகிய உங்கள் இறைவன் உங்களிடம் ஒப்படைத்த ஆண்கள் அனைவரையும் வாளுக்கு இரையாக்கி விடுங்கள். ஆனால் பெண்கள், சிறிய

குழந்தைகள், கால்நடைகள், நகரத்திலுள்ள மற்றப் பொருட்கள், கொள்ளையடிக்கப்பட்டவை என அனைத்தையும் நீங்கள் பங்கிட வேண்டிய லாபப் பொருளாக எடுத்துக் கொள்ளலாம் (டியூட்ட ரோமோனி *20:13–14* ) யூதர்களுக்கிடையே ஏற்படும் பிரச்னைகள், முஸ்லிம் களுக்கும் மற்றவர்கட்குமிடையே ஏற்படும் பிரச்னைகள் என அனைத்திற்கும் நபிகளாரே இறுதி மேல்முறையீட்டு நீதிபதியாக இருந்தார்கள்.

நீதிபதிகளில் மூன்று வகையினர் உள்ளனர். ஒரு வகையினர் சொர்க்கத்திலும், மற்ற இரு வகையினர்கள் நரகத்திலும் இருப்பார்கள். உண்மையை அங்கீகரித்து தீர்ப்பு வழங்கியவர்கள் சொர்க்கத்தில் இருப்பார்கள். ஆனால் உண்மையை உணர்ந்த பின்னரும் அநீதமாக தீர்ப்பு வழங்கியவரும், அறியாமை காரணமாக தீர்ப்பு வழங்கியவரும் நரகத்தில் இருப்பார்கள்.' என்றும் ஒரு 'நீதிபதி கோபமாக இருக்கும் போது தன்னுடைய தீர்ப்பை வழங்கக் கூடாது' என்றும் நபிகளார் கூறினார்கள்.

# இஸ்லாமிய சட்டத்தின் முன் மன்னரும் குடிமகனும் சமமே

இஸ்லாமியச் சட்டத்தின் படி இஸ்லாமிய அரசின் தலைவருக்கு எந்தவிதமான சலுகையும் இல்லை. அரசின் கலீபாவும் (அல்லது அரசரும்), அந்த அரசில் வசிக்கும் ஒரு குடிமகனும் இஸ்லாமியச் சட்டத்தின் முன்பு சமமானவர்களே! ஒரு முறை கலீபா அலீ(ரலி) அவர்கள் தமது கவசத்தைத் தொலைத்து விட்டார்கள். சில நாட்கள் கழித்து அதை ஒரு கிறிஸ்தவர் வைத்திருப்பதைக் கண்டார்கள். எனவே இது சம்பந்தமாக நீதிபதி சுரைஹ் அவர்களின் நீதி மன்றத்தில் புகார் செய்தார்கள். அந்த கிறிஸ்தவரை அழைத்து அவர் விசாரித்த போது கவசம் தனக்குரியது என அவர் சொல்லிவிட்டார். நீதிபதி சுரைஹ், ஹழ்ரத் அலீ(ரலி) அவர்களிடம் நீங்கள் இது சம்பந்தமாக ஏதேனும் சான்றுகள் வைத்துள்ளீர்களா எனக் கேட்ட போது அலீ(ரலி) அவர்கள் தன்னிடம் சான்றுகள் எதுவுமில்லை எனப் பதிலளித்தார்கள். உடனே நீதிபதி அந்த கிறிஸ்தவருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்து, கலிபா அலீ(ரலி) அவர்களின் புகாரைத் தள்ளுபடி செய்தார். இத்தகைய ஒரு உன்னதமான தீர்ப்பைக் கேட்ட அந்த கிறிஸ்துவர் பெரிதும் மகிழ்ச்சியடைந்து இஸ்லாத்தில் இணைவதாக அறிவித்தார். அவர் வியப்புற்றுக் கூறியதாவது:– "இது நபிமார்களின் நீதியாக இருக்கிறது. ஒரு அரசர் எனக்கு எதிராக நீதிபதி முன்பு புகார் செய்கிறார். ஆனால் நீதிபதியோ அரசருக்கு எதிராகத் தீர்ப்பளிக்கிறார்."

இஸ்லாமிய சமூகத்தில் ஆளும் நிர்வாக அமைப்பிலிருந்து நீதித்துறை சுதந்திரமாக செயல்பட்டது. நீதிபதி அச்ச

உணர்வின்றி. சாதக பாதகமின்றி இஸ்லாமிய ஷரிஅத் சட்டத்தின் அடிப்படையில்தான் தீர்ப்பு வழங்க வேண்டும். தனது கடமைகளைச் செய்யும் போது, அவர் மன்னருக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவரல்ல. மாறாக இறைவனுக்கே அவர் பதில் சொல்லக்கடமையுடையவர். ஒரு சுதந்திரமான நிர்வாக அமைப்பு, இஸ்லாமியச் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் முக்கியப் பங்கு வகித்தது.

சிரியா நாட்டைச் சார்ந்த ஒரு இனக்குழு அரசரான ஜபலா என்பவர் ஹஜ்ஜுக்கடமைகளை மேற்கொண்டிருந்தபோது அவரது மேலாடை அவிழ்ந்து அரேபிய கிராமப் புறத்தான் ஒருவரின் காலடியில் விழுந்து விட்டது. இதனால் கோபமுற்ற ஜபலா கிராமப்புறத்தான் முகத்தில் அறைந்தார். இதுபற்றி அந்த கிராமப்புற அரபி கலீபா உமர்(ரலி) அவர்களிடம் புகார் செய்தார் ஜபலாவை அழைத்துவரச் செய்த கலீபா உமர்(ரலி) ஜபலாவை திருப்பி அடிக்குமாறு அந்த கிராமப்புற அரபியிடம் கூறினார்.

இது கேட்டு வியப்புற்ற அந்த சிரியா மன்னர்' இது எப்படி சாத்தியமாகும்? அவர் சாதாரண மனிதர். நானோ ஒரு அரசர்' என்று குறிப்பிட்டார். உடனே கலீபா உமர்(ரலி) அவர்கள், 'இஸ்லாம் உங்களையும் அவரையும் ஒன்றாகவே வைத்துள்ளது. நீங்கள் அவரை விட இறைபக்தி, நற்செயல்கள் ஆகியவற்றைத் தவிர வேறு எந்த வகையிலும் உயர்ந்தவர் இல்லை' என்று குறிப்பிட்டார்கள்.

## மகனின் இறப்பிற்காக வருந்துதல்

ஹிஜ்ரி பத்தாவது ஆண்டில், நபிகள் நாயகம்(ஸல்) தங்களது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இருந்த போது, அரேபிய தீபகற்பம் முழுமையும் ஓரிறைக் கொள்கை மக்களால் ஏற்கப்பட்டு, இஸ்லாத்தின் மீதான வெறுப்பு குறைந்து, இஸ்லாத்தில் இணைவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருந்தது.

நபிகளாருக்கு மனைவி மாரிய்யா(ரலி) மூலம் ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு இப்ராஹிம் எனப் பெயரிடப்பட்டது. குழந்தை பிறந்தது குறித்து நபிகளார் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள். அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட நபிகளார் விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். தங்களுடைய மடியில் குழந்தையை வைத்துக் கொண்டு நபிகளார் அன்புடன் விளையாடுவார்கள்.

ஒன்றரை வயது நிரம்பியிருந்த குழந்தை இப்ராகிமுக்கு கடும் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. தங்களது ஒரே மகன் தங்களை விட்டுப் பிரிந்து சென்று விடுவானோ என நபிகளார் அஞ்சினார்கள். ஒவ்வொரு நாளும், பல மணி நேரம் தங்களது மகனின் அருகிலேயே இருந்தார்கள். ஆனால் பலனில்லை. குழந்தை மரணமடைந்து விட்டான். இறந்த குழந்தையை தனது மார்பில் சுமந்து கொண்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். அவர்களின் இதயம் துயரம் அடைந்தது. அவர்களது வேதனையை முகம் படம் பிடித்துக் காட்டியது. அப்துர்ரஹ்மான் என்ற நபிகளாரின் விசுவாசமிக்க தோழர் நபிகளார் அழுவதைக் கண்டு வியப்படைந்தார். ஏனெனில் இது போன்று துக்கத்தை வெளிப்படுத்த நபிகளார் தடை விதித்திருந்தார்கள் என்று அவர் எண்ணியிருந்தார் முதலில் நபிகளாரால் பேச இயலவில்லை. பின்னர் நபிகளார் அவரிடம்,

சோகத்தை மிக அதிகமான அளவில் வெளிப் படுத்துவதையும், மனம் பேதலித்ததுபோல் நடந்து கொள்வதையுமே தடுத்த–தாகவும், சோகத்தையும் வேதனையையும் இயல்பான முறையில் வெளிப்படுத்துவதைத் தடை செய்யவில்லையென்றும் கூறினார்கள். 'கண்ணீர் விடுவது அன்பு மற்றும் துயரத்தின் வெளிப்பாடே' என்று நபிகளார் விளக்கமளித்தார்கள்.

தங்களுடைய சொந்த அனுபவத்திலிருந்து இந்தக் கருத்துக்களை நபிகளார் கூறிய போதிலும் அது எல்லா முஸ்லிம்களுக்கும் பொருந்தக் கூடியதாக அமைந்திருந்தது. இரக்கம் இல்லாதவன் பிறரிடம் இரக்கம் காட்டமாட்டான். வாழ்க்கையின் சிரமமான கால கட்டங்களில் ஒருவருக் கொருவர் அன்பும், பரிவும், இரக்கமும் காட்டுவது அர்ரஹ்மானான இறைவனை நெருங்கிச் செல்ல உதவும். (மிகவும் அன் பானவன், கருணையானவன்) அதன் மூலமாக இறைவன் நம்பிக்கை யாளர்களின் இதயத்திற்கு நெருக்கமானவனாகி விடுகிறான். நம்பிக்கை கொண்டோர் எதனை விரும்புகின்றார்களோ, அதனையே அவர்கள் சமுதாயத்திலுள்ள தனது சகோதர–னுக்கும், சகோதரிக்கும் வழங்க வேண்டும்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தனிப்பட்ட முறையில் பாதிப்பிற் குள்ளான போது தங்களது துயரத்தை வெளிக்காட்டிக் கொள்ள அவர்கள் தயங்கவில்லை. அவர்கள் கூறினார்கள்:– "கண்கள் கண்ணீர் வடிக்கின்றன. இதயம் எல்லையற்ற துயரத்தில் இருக்கிறது. இறைவனை எந்த வார்த்தை திருப்தியுறச் செய்யுமோ அதனையே ஒருவன் சொல்ல வேண்டும்" மீண்டும் ஒரு முறை இறைவன் நபிகளாரைச் சோதித்துப் பார்த்து விட்டான். அவர்கள் அன்பு செலுத்திய பல, தோழர்களை, மனைவி கதீஜா(ரலி) அவர்களை, மூன்று மகன்களை மூன்று மகள்களை இழந்து விட்டார்கள். வாழ்க்கையில் பல துயரங்களைச் சந்தித்த போதிலும் அவர்கள் மனத்தளவில் மென்மையாக இருந்தார்கள். தங்களது கொள்கைப் பாதையில் உறுதியாக இருந்தார்கள்.

# கிரகணம்

இறந்த மகனை அடக்கம் செய்து விட்டு நபிகளார் திரும்பிய சில மணி நேரத்திற்குப் பின், வானில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. இதனை நபிகளாரின் மகன் இறப்போடு தொடர்புபடுத்தி இது ஒரு அதிசய நிகழ்வு என்றும், இறைவன் தனது தூதருக்கு இதன் மூலம் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளான் என்றும் முஸ்லிம்கள் கருதினார்கள். ஆனால் இந்தக் கருத்துகளை ஏற்க மறுத்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சூரியனும் சந்திரனும் இறைவனின் இரண்டு அத்தாட்சிகள். யாருடைய மரணத்திற்காகவும் அவை தங்களை இருட்டாக்கிக் கொள்வதில்லை' என உறுதிபடத் தெரிவித்தார்கள். இதன் மூலம் நபிகளார் தங்களுடைய தோழர்களிடம் 'இயல்பாக நடைபெறும் விஷயங்களுக்குத் தவறான பொருள் கற்பித்து மூடச் செயல்களுக்கு வித்திட வேண்டாம் என்று அறிவுறுத்தினார்கள். நபிகளாரின் இந்தக் கருத்துக்கள், தங்களுடைய அன்புக்குரியவர்களை இழக்கின்றபோது முஸ்லிம்கள் எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டுமென்பதையும், அதிலிருந்து பெற வேண்டிய படிப்பினைகளையும் உணர்த்துகின்றன. ஒரு மனிதனின் இறப்பின் போது அதிசயங்கள் எதையும் நிகழ்த்தி இறைவன் தன்னுடைய இருப்பை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. மாறாக அவனது படைப்புகளின் இயற்கையான செயல்கள் மூலமாக அவன் தனது நிரந்தரமான இருப்பை நிலைநாட்டிக் கொள்கிறான்.

# 26

# விடைபெறும் ஹஜ்ஜுப் பயணம்

ஹிஜ்ரி பத்தாம் ஆண்டின் ரம்ஜான் மாதத்தில் நபிகளாருக்கு இறைவனிடமிருந்து மேலும் ஒரு அத்தாட்சி வந்தது. நபிகளார் தங்களுடைய புதல்வியான பாத்திமா(ரலி) அவர்களிடம் "ஒவ்வொரு ஆண்டும் வானவர் ஜிப்ரீல் திருக்குர்ஆனை என்னிடம் ஒரு முறை ஓதிக்காட்டுகிறார். நானும் ஒரு முறை ஓதுகிறேன். ஆனால் இந்த ஆண்டு இரண்டு தடவைகள் ஓதிக் காட்டினார். எனது நேரம் நெருங்கிவிட்டதை இது உணர்த்துகிறது" என்று கூறினார்கள்.

ஹஜ் (புனிதப் பயணம்) இஸ்லாத்தின் ஐந்தாவது தூணாகும். வசதி வாய்ப்புள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தனது ஆயுளில் ஒரு முறை (அவன் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி) துல்ஹஜ் மாதத்தின் குறிப்பிட்ட நாட்களில் மக்காவிற்குச் சென்று இந்த ஹஜ்கடமையை நிறைவேற்ற வேண்டும். நபிகளார் இந்தக் கடமையை இன்னமும் நிறைவேற்றவில்லை. அதற்கான நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. நபிகளார் மக்காவிற்குப் புனிதப் பயணம் மேற்கொள்வார்கள் என்ற செய்தி அறிவிக்கப்பட்டது. அவர்களின் தலைமையின் கீழ் முப்பதாயிரம் முஸ்லிம்கள் மதீனாவிலிருந்து மக்காவிற்கு புனிதப் பயணம் புறப்பட்டனர். இது ஒட்டு மொத்த அரேபிய தீபகற்பத்திலிருந்து வந்த புனிதப் பயணிகளின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு அதிகமாகும்.

நபிகளார் பயணம் மேற்கொண்டிருந்தபோது, மக்காவைப் பற்றியும், கஅபாவில் செய்ய வேண்டிய கிரியைகள் பற்றியுமான முக்கியமான இறை வசனங்கள் அவர்கட்கு அருளப்பட்டன. இந்த வசனங்களே திருக்குர்ஆனின் ஒன்பதாவது அத்தியாயத்தின் முதல் வசனங்களாக அமைந்துள்ளன. மற்ற அத்தியாயங்களின்

ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று 'மிகுந்த இரக்கமும் கருணையும் கொண்ட எல்லாம் வல்ல இறைவனின் திருப் பெயரால்' என்ற வார்த்தைகள் இதில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வசனங்களில் இறைவன், அறியாமை காரணமாக கஅபாவில் மக்கள் இதற்கு முன்னர் செய்திட்ட கிரியைகள் இனிமேல் செய்திட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், சிலை வணக்கம் செய்பவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெளிவுபடுத்தினான்.

இச்செய்தி தெளிவானது. கஅபா இப்போது முழுக்க முழுக்க ஓரிறைக் கொள்கையாளர்கட்கே உரியது என்றும் முஸ்லிம்கள் மட்டுமே அதனுள் நுழைய முடியுமென்றும் இச் செய்தி உறுதிபடத் தெரிவித்தது. இந்த இறை வசனங்கள் குறிப்பிடுவதாவது, ' இறைவன் மீதும், இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள், முறையாகத் தொழுகை புரிபவர்கள், ஜகாத் கொடுப்பவர்கள், இறைவனைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சாதவர்கள் மட்டுமே இந்த இறை இல்லத்திற்கு (கஅபா) வர முடியும் அவர்கள் தான் சரியான முறையில் வழி நடத்தப்பட்டவர்கள்'. பெரும்பாலான தோழர்களும், அவர்கட்குப் பின்னர் வந்த அறிஞர்களும் இந்தத் தடை மக்காவின் புனிதத் தலங்களுக்கு மட்டுமே பொருந்துமென்றும், பிற பள்ளி வாசல்களுக்குப் பொருந்தாதென்றும், முஸ்லிமல்லாதவர்கள் அங்கு செல்லலாம் என்று உணர்ந்து கொண்டனர். ஓரிறையை வணங்க வேண்டியதன் அவசியத்தை இந்தச் செய்தி மக்களுக்குத் தெளிவுபட தெரிவித்துள்ளது.

மக்காவில் பல்வேறு விதமான கிரியைகளைச் செய்திட்ட நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், இவைதான் தங்களது தந்தையான இப்ராகிம் நபி(அலைஹி) அவர்கள் செய்திட்ட தூய்மையான ஓரிறை வணக்கம் எனத் தெரிவித்திருந்தார்கள். இந்தப் புனிதப் பயணமும் கஅபாவை நிர்மாணித்த நபி இப்ராஹிம் (அலைஹி) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மேற் கொள்ளப்பட்டது. இதன் மூலம் நபிகளார் ஓரிறைவன் என்ற

அடிப்படைக் கொள்கையினை உறுதிப்படுத்தினார்கள். நபிகளார் செய்திட்ட ஒவ்வொரு கிரியையும் கண்ணுற்று அதன்படியே தோழர்களும் செய்தார்கள். இதன் மூலம் ஹஜ்ஜின் போது செய்ய வேண்டிய கிரியைகளை வழிகாட்டிய நபிகளார் "என்னிடமிருந்து கிரியைகளைக் கற்றுக் கொள்ளுங்கள்" என தோழர்களிடம் கூறினார்கள். ஹிஜ்ரி பத்தாம் ஆண்டு துல்ஹஜ்மாதம் ஒன்பதாம் நாள், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அரபா பள்ளத்தாக்கில் குழுமியிருந்த 144,000 ஹஜ் பயணிகளிடையே கருணை மலை என்றழைக்கப்படும் ஜபலுத் ரஹ்மத் மலையின் அடிவாரத்திலிருந்து உரையாற்றினார்கள். நபிகளார் ஒவ்வொரு வரியாகச் சொல்ல, அடுத்தடுத்து நின்றவர்கள் அதனைத் திருப்பக் கூறினார்கள். இதன் மூலம் அந்தப் பள்ளத்தாக்கில் குழுமியிருந்த அனைவரும் அவர்களது உரையினைக் கேட்க முடிந்தது.

## விடைபெறும் உபதேசம்

கி.பி.632ம் ஆண்டு, ஹிஜ்ரி பத்தாவது ஆண்டில் வருடாந்திர ஹஜ் கடமைகள் நிகழ்வுறும் அந்த நேரத்தில் அரபாத் பெருவெளியில் இருந்து நபிகளார் தங்களது இறுதி உரையை நிகழ்த்தினார்கள். பேச்சினைத் துவக்குகின்ற போதே ஓராண்டுக்குப் பின்னர் மீண்டும் இதே இடத்தில் புனிதப் பயணிகளை சந்திப்பேனா? என்று எனக்குத் தெரியாது என்று குறிப்பிட்ட நபிகளாரின் உரை வலிமை மிக்கதாகவும் உறுதியாகவும் இருந்தது. பின்னர் அந்த மாதத்தின், அந்த இடத்தின் புனிதத் தன்மையையும், அவர்களின் வாழ்க்கையையும், கௌரவத்தையும், உடமைகளையும் நபிகளார் நினைவுபடுத்தினார்கள். அறியாமைக் காலம் முடிவுக்கு வந்துவிட்டதென்றும், அதிகாரம், இலாபம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த நடைமுறைகளும், பகைமையும், மோதல்களும் முடிவிற்கு வந்து விட்டது என்றும் இன்றிலிருந்து முஸ்லிம்கள் நம்பிக்கை, சகோதரத்துவம், அன்பு ஆகியவற்றால் ஒன்றுபட்டுவிட்டார்கள் என்றும் எந்தச் சூழ்நிலையிலும் ஒடுக்குபவர்களாகவோ அல்லது

ஒடுக்கப்பட்டவர்களாகவோ அவர்கள் இருக்கக் கூடாது என்றும் கூறினார்கள்.

மேலும் நபிகளார் கூறியதாவது:– இறைவன் முன்பு அனைவரும் சமமே. ஏனெனில் களிமண்ணால் படைக்கபட்ட ஆதம், ஹவ்வாவின் வழித் தோன்றல்களே நீங்கள். யார் அதிக இறை அச்சம் கொண்டவரோ அவரே இறைவனின் முன்பு அதிகக் கண்ணியம் வாய்ந்தவராவார். அரேபியரல்லாதாரை விட அரபியர் உயர்ந்தவரல்லர். இறைவனுக்கு உகந்தவராக இருப்பதே முக்கியமானது என்று அறிவுறுத்திய நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், மனைவியர்களிடம் அன்பாக நடந்து கொள்ளும்படியும் வேண்டினார்கள்.

இறை உணர்வுடன் அவர்களுடன் பிரியமாகவும், அன்பாகவும் நடந்து கொள்ளுங்கள் என்றும் கூறினார்கள். இங்குள்ள நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும், இங்கு இல்லாதவர்கட்கும் நான் சரியான வழியைக் காட்டி விட்டேன் என்று கூறிய நபிகளார், 'நான் இறைவனின் வேதமான திருக்குர்ஆனையும் என்னுடைய போதனைகளையும் உங்களிடம் விட்டுச் செல்கிறேன். இந்த இரண்டையும் நீங்கள் உறுதியாகப் பற்றிப் பிடித்துத் தவறுகளைத் தவிர்த்து வழிகாட்டுதல் பெறுங்கள் என்றும் கூறினார்கள்.

"ஓ! மக்களே! நான் உங்களுக்குச் செய்தியை முழுமையாகச் சொல்லி விட்டேனா? என்ற கேள்வியுடன் நபிகளார் தங்களது உரையினை நிறைவு செய்தார்கள். 'ஆம்' என்று அந்தப் பள்ளத்தாக்கில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான புனிதப் பயணிகளும் குரலெழுப்பினர். உடனே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களது ஆட்காட்டி விரலை உயர்த்திக்காட்டி' இறைவனே நீயே இதற்குச் சாட்சி" என்று கூறினார்கள்.

நபிகளாரின் உரை நிறைவுற்றதும், கூடியிருந்தவர்கள் "இஸ்லாத்தின் செய்தியை நீங்கள் முழுமையாக எங்களிடம் சொல்லிவிட்டீர்கள் என்பதற்கும் நீங்கள் உங்கள் தூதை

நிறைவேற்றி விட்டீர்கள் என்பதற்கும், நீங்கள் உங்களுடைய சமுதாயத்திற்கு நேர்வழிகாட்டி விட்டீர்கள் என்பதற்கும் நாங்கள் சாட்சியம் பகர்கிறோம்." என்று கூறினார்கள். இறுதியாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஓ இறைவனே! நீயும் இதற்கு சாட்சியாக இரு.' என்று கூறிவிட்டு இங்கு இருப்பவர்கள், இங்கு வராதவர்களுக்கு இச்செய்தியை தெரிவித்து விடுங்கள் என்றும் சொன்னார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஆன்மீக முஸ்லிம் சமுதாயத்திற்குச் சாட்சியாக இருந்தார்கள். எளிமையையும் மனித சமுதாயத்தின் ஒற்றுமையையும் இறைவன் முன்னால் பறைசாற்றும் இந்த ஆன்மீக ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியில் இறைவனுடைய செய்தியின் முக்கிய அம்சங்களை நினைவு–படுத்தினார்கள். இன, சமூக பேதங்களுக்கு அப்பாற்பட்டு இறைவனின் முன்பு மனிதர்கள் அனைவரும் சமமே என்பதே அச் செய்தியாகும். இதயப் பூர்வமாக, அறிவுப் பூர்வமாக, தங்களது குணநலன்களின் அடிப்படையில் அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்ற அம்சம் ஒன்றே அவர்களை வேறுபடுத்திக் காட்டும்.

அவர்கள் எங்கிருந்து வந்தாலும், அரபியராக இருந்தாலும் அல்லாதவராக இருந்தாலும், வெள்ளையராக இருந்தாலும், கருப்பராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும், பணக்காரராக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் மனிதர்கள் தாங்கள் பெற்ற ஆன்மீகக் கல்வி, தன் முனைப்பைக் கட்டுப்படுத்துதல் நம்பிக்கையை வெளிப்படுத்துதல், கண்ணியமான நடத்தை, நேரியகுணம், பெருந்தன்மை ஆகிய பண்புகளின் அடிப்படையிலேயே அவர்களின் தரம் தீர்மானிக்கப்படுகிறது. அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்திருந்த அடிமைகள், இனக்குழுத் தலைவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவரையும் உள்ளடக்கிய ஆயிரக்கணக்கான மக்கள் முன்னால் நபிகளார் இறைவனின் செய்தியை முழுமையாக எடுத்துரைத்து விட்டதாக சாட்சியம் அளித்தார்கள்.

அங்கு குழுமியிருந்த இறை நம்பிக்கையாளர்கள் அனைவரும் இறைவனின் செய்தியைத் தாங்கள் முழுமையாகப் பெற்றுக்–கொண்டுவிட்டோம் என்றும் அதனுடைய பொருளையும், உள்ளடக்கத்தையும் புரிந்துகொண்டுவிட்டோம் என்றும் சாட்சியம் அளித்தார்கள். இதற்குச் சில மணி நேரத்திற்குப் பின், நபிகளாரின் தூது முழுமை பெற்றுவிட்டதாக இறைவசனங்கள் வெளிப்பட்டன.

> இன்று உங்களுடைய தீனை உங்களுக்காக நான் முழுமையாக்கிவிட்டேன். எனது அருட் கொடை–யையும் உங்கள் மீது நான் நிறைவு செய்து விட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை உங்களுடைய தீன் வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொண்டு விட்டேன். (திருக்குர்ஆன் *5:3*)

தூதுத்துவத்தின் கடைசிச் சக்கரம் சுழன்று முடிவுக்கு வந்து விட்டது. இறைவனின் தூதர் இறைவனுக்கு நெருங்கி வரும் தருணம் வந்து விட்டது.

## இதயங்களை சீர்திருத்தியவன்

முஸ்லிமல்லாதவர்களைப் பொறுத்த அளவில், சிலர் அமைதியையும், உண்மையையும், நேர்மையையும் தேடிக் கொண்டிருந்தனர். சிலர் இன்னமும் நபிகளார் வழங்கிய செய்தியின் மெய்த்தன்மை பற்றி சந்தேகம் கொண்டிருந்தனர். ஆனால் இவர்கள் அனைவரும் ஒரு புது விதமான உள் மனப் போராட்டங்களுக்கு ஆட்பட்டிருந்தனர். அவர்களுக்குப் பொறுமையும், முயற்சியும் தேவைப்பட்டது. இஸ்லாத்தின் ஒளியைப் பார்க்க வேண்டுமாயின் அவனது அத்தாட்சிகளை உற்று நோக்கி அவனது உதவியையும், வழிகாட்டுதலையும் கேட்டுப் பெற வேண்டுமென நபிகளார் ஆலோசனை கூறினார்கள்.

இறைவன் ஒருவனே என்பதை உணர்ந்து அங்கீகரித்துக்

கொண்ட முஸ்லிம்கள் தங்களது உள் மனப் போராட்டங்களை தொடர்ந்து நடத்தும் படியும், தங்களது நிலையற்ற தன்மையை உணர்ந்து அடக்கத்துடன் இருக்கு மாறும், இறைநினைவு மூலம் (திக்ர்) ஆன்மீக சக்தியினை பெற முடியுமென்றும் நபிகளார் அறிவுறுத்தினார்கள். மன உறுதியைத் தருமாறு இறைவனிடம் வேண்டும்படி குர்ஆன் பரிந்துரை செய்கிறது. எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு வழிகாட்டிய பிறகு எங்களது மனம் அதிலிருந்து விலகிச் செல்லாதவாறு எங்களைக் காத்தருள்வாயாக! நபிகள் நாயகம்(ஸல்) இறைவனிடம் அடிக்கடி 'ஓ எங்களின் இதயங்களைச் சீர்த்திருத்தியவனே உன்னுடைய மார்க்கத்தில் எங்களது இதயம் உறுதியாக இருக்கும்படி செய்வாயாக என பிரார்த்தனை செய்தார்கள்.

# 27

# சொர்க்கத்தில் ஓர் உயர்ந்த ஒருங்கிணைப்பு

ஹஜ்கடமைகளைப் பூர்த்தி செய்த பின்னர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தங்களுடைய தோழர்களுடன் மதீனாவிற்குத் திரும்பி வழக்கமான பணிகளைத் தொடர்ந்தார்கள்.

இஸ்லாத்தின் கொள்கைகளையும், குர்ஆனின் போதனைகளையும், சமய நடைமுறையின் அம்சங்களையும், அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனை களையும் முஸ்லிம்கள் இப்போது நன்கு புரிந்து கொண்டு விட்டனர். ஜகாத் அதற்குரிய விதி முறைகளின்படியும், இறை வழி காட்டுதல் மற்றும் நபிகளாரின் வழிமுறைகளின் படியும் வசூல் செய்யப்பட்டது (ஜகாத் என்பதற்கு ஒருவரது செல்வத்தைத் தூய்மையாக்கி இறைவனின் அருளால் பெருகச் செய்வது என்பது பொருளாகும்) இவ்வாறாக, ஹஜ்உட்பட இஸ்லாத்தின் ஐந்து கடமைகளும் நன்கு வரைமுறை செய்யப்பட்டன. தங்களது அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை முஸ்லிம்கள் நன்கு தெரிந்து கொண்டனர்.

## சுகவீனம்

ஹிஜ்ரி 11வது ஆண்டில் ரம்ஜான் முடிந்து சில வாரங்கள் கழிந்த பிறகு, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் உஹதுக்குச் சென்றார்கள். அங்கு முஸ்லிம்களுக்கும், குறைஷியர் களுக்குமிடையே நடைபெற்ற போரில் உயிரிழந்த முஸ்லிம் வீரர்களுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள். பின்னர்

மதீனாவிற்குத் திரும்பிய நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், அங்குள்ள பள்ளிவாசலின் 'மிம்பர்' படியில் நின்று கொண்டு (தொழுகை நடத்தும் இமாம் நின்று கொண்டு உரையாற்றும் உயரமான இருக்கைக்கு மிம்பர் என்று பெயர்) விசுவாசமிக்க தங்களை தோழர்களை நோக்கி உரையாற்றினார்கள். 'நான் உங்களை முந்திச் செல்லவிருக்கிறேன். நான் உங்களுக்கு சாட்சியாக இருப்பேன்' என முதலில் கூறிய அவர்கள் பின்னர் தங்களுடைய உரையின் இறுதியில் 'நீங்கள் எனக்குப் பிறகு பல தெய்வ வழிபாட்டுக்குச் சென்றிடுவீர்கள் என்று நான் பயப்பட–வில்லை. ஆனால் இந்த உலகில் உள்ள செல்வங்களை அடைவதற்காக நீங்கள் சண்டையிடக் கூடும் என அஞ்சுகிறேன்' என்று தெரிவித்தார்கள்.

இந்த வார்த்தைகள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்லப்போகிறோம் என அவர்கள் உணர்ந்து விட்டதையே காட்டின. அதே வேளையில், தங்களது ஆன்மீக சமூகத்தின் எதிர்கால நிலை குறித்தும் அச்சம் தெரிவித்தார்கள். தங்களது சமூகத்தினர் விசுவாசத்தை இழக்க மாட்டார்கள். அதே நேரத்தில் உலகாதய விஷயங்களிலும் ஆர்வம் செலுத்துவார்கள். துரதிருஷ்டவசமாக, இந்த இரண்டு பண்புகளும் அவர்களிடம் இருக்கும் என நபிகளார் எண்ணினார்கள். தாங்கள் முன் கூட்டியே அறிந்து கொண்ட விஷயத்தையே அச்சமாக வெளிப்படுத்தி னார்கள். (முஸ்லிம்கள்) இறைவனை வணங்கி வாழ்வார்கள். அதே நேரத்தில் அவர்கள் அந்தஸ்து, செல்வம், அதிகாரம், ஆகியவை காரணமாகப் பிளவுபட்டுக் கிடப்பார்கள். இவை அவர்களின் சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் மறக்கச் செய்து விடும்.

அந்த நாள் இரவில் நபிகள் நாயகம்(ஸல்) மதீனாவின் கபரஸ்தானுக்குச் சென்று (இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடம்) அங்கு அடங்கப்பட்டவர்களுக்காகப் பிரார்த்தனை செய்து விட்டு 'நீங்கள் முதலாவதாக இருக்கிறீர்கள் (நீங்கள் முந்திக்–கொண்டீர்கள்) நாங்கள் உங்களுக்குப் பிறகு வருகிறோம்

(நாங்கள் உங்களுடன் சேர்ந்து கொள்கிறோம்) என்று கூறினார்கள்.' வரும் வழியில் நபிகளாருக்குக் கடும் தலைவலி ஏற்பட்டது. இரண்டு வாரங்களுக்கு நீடித்த இந்தத் தலைவலி அவர்களைப் படுக்கையிலேயே கிடத்தி விட்டது. ஆரம்பத்தில் கடுமையான தலைவலி மற்றும் காய்ச்சலுக்கு இடையிலும் அவர்கள் தொழுகையினை தலைமை தாங்கி நடத்தி வந்தார்கள். ஆனால் நாட்கள் செல்ல செல்ல நோயின் தீவிரம் அதிகரித்து அவர்கள் நீண்ட நேரம் படுக்கையிலேயே கழிக்கும் நிலை ஏற்பட்டது. காய்ச்சல் அதிகமாக இருந்த போது அவர்கள் சில நாட்கள் ஆயிஷா(ரலி) அவர்களு டனேயே இருந்தார்கள்.

அப்போது ஒரு நாள் மயக்கமடைந்துவிட்டார்கள். மயக்கம் தெளிந்த பின், தண்ணீரைத் தங்களுடைய முகத்தில் தெளிக்கும்படி சொன்னார்கள் (கால்நடைகளின் தோலினால் செய்யப்பட்ட பைகளில் தண்ணீரைச் சேகரித்து வைப்பது அப்போது பழக்கமாக இருந்தது) சில மணி நேரத்திற்குப் பின் சற்று நன்றாக இருப்பதாக உணர்ந்த அவர்கள், தலையைச் சுற்றி ஒரு துணியைக் கட்டிக் கொண்டு பள்ளிவாசலுக்குச் சென்றார்கள். மிம்பரில் உட்கார்ந்து கொண்ட அவர்கள் அங்கிருந்த தோழர்களிடம் "என்னுடைய கல்லறையை வணக்கஸ்தலமாக ஆக்கி விடாதீர்கள்" என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் இறைவனின் தூதராக இருந்தார்கள். ஆனால் அவர்களும் ஒரு மனிதரே. தங்கள் மீது தோழர்கள் கொண்டிருந்த அளப்பரிய அன்பையும், பரிவையும் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்த அவர்கள், இதற்கு முந்தைய நபிமார்களை அவர்களைப் பின்பற்றுவோர் இறைவனாக ஆக்கியதைப் போல, தங்களது தோழர்களும் அந்தத் தவறைச் செய்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள்.

இந்தத் தடை எப்போதும் இருந்து கொண்டே இருக்கும் அதன் காரணமாகத் தான் நபிகளாரின் உருவப்படங்களோ, வடிக்கப்பட்ட சிலைகளோ எங்கும் வைக்கப்படவில்லை. நபிமார்களின் போதனைகளைத் தான் கடைபிடிக்க வேண்டுமே

தவிர அவர்களை வணங்கக் கூடாது. இறைவனுக்கு நெருக்கமாக மக்களை இட்டுச் செல்லும் பாதைகளையே அவர்கள் காட்டினார்கள். இறைவன் மட்டுமே வணக்கத்திற்குரியவன்.

பின்னர் நபிகளார் எழுந்து அங்கிருந்த தோழர்களிடம் நான் உங்களுக்கு ஏதேனும் தர வேண்டியதுள்ளதா? யாருக்கேனும் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி உள்ளதா? என வினவினார்கள். நான் யாரையாவது புண்படுத்தி விட்டேனா? அப்படி என்றால் பாதிக்கப்பட்டவர் இப்போதே அதனைத் தெரிவிக்கலாம். அந்த விஷயத்தைப் பேசித் தீர்வு காணலாம் என்றும் கூறினார்கள். அப்போது ஒரு தோழர் எழுந்து தனக்கு மூன்று திர்ஹம்கள் தர வேண்டியதுள்ளது என்று கூறவே, நபிகளார் உடனே அவருக்கு அந்தப் பணத்தைக் கொடுக்கும்படி ஆணையிட்டார்கள்.

இது சம்பந்தமான இறை வசனங்கள் அருளப்பட்ட பின்னர், பட்ட கடனைத் தீர்க்காத எந்த ஒரு நபரின் ஜனாஸா தொழுகையையும் நபிகளார் நடத்தி வைக்கவில்லை. கடன் இல்லாமலேயே ஒருவர் இறக்க வேண்டும். யாருக்கும் எதுவும் கொடுக்க வேண்டிய நிலையில் அவர் இறக்கக் கூடாது. மன்னிக்கப்படாத தவறுகளுடனோ, ஆற்றப்படாத காயங்க ளுடனோ, உரிய செய்தியைக் கேட்காமலோ ஒருவர் மரணமடையக் கூடாது என்பதே அவர்களின் கருத்தாகும். மிம்பரில் உட்கார்ந்து கொண்டு நபிகளார் மீண்டும் குறிப்பிட்டதாவது: 'எல்லாம் வல்ல இறைவன், கருணையாளன் அவனது பணியாளரான எனக்கு இரண்டு வாய்ப்புகளை அளித்தான். ஒன்று உலகச் செல்வங்களைப் பெற்றிருப்பது, இன்னொன்று அவனுக்கு நெருக்கமாக இருப்பது இந்த இரண்டில் இறைவனுக்கு நெருக்கமாக இருப்பதையே நான் தேர்வு செய்தேன்'. இந்த வார்த்தைகளைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி) அவர்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்ல விருப் பதையே நபிகளார் கோடிட்டுக் காட்டுவதாக அவர்கள் பால் பேரன்பு கொண்ட அபூபக்ர்(ரலி) அவர்கள் உணர்ந்து கொண் டார்கள். அவர்களை

ஆறுதல் படுத்திய நபிகளார், தங்களது உரையைத் தொடர்ந்தார்கள். அபூபக்ர்(ரலி) அவர்களை நேரடியாக அழைத்துப் பேசிய நபிகளார் "தம்முடைய நட்பாலும், செல்வத்தாலும் என்னுடன் மிகுந்த அன்புடனும், பெருந்தன்மையுடனும் நடந்து கொண்டவர் அபூபக்ர்(ரலி) அவர்களே. இறைவனுக்குப் பிறகு நான் அதிகம் நேசிக்கும் உயிர்நேசர் உண்டென்றால் அது அபூபக்ர்(ரலி) தான். ஆனால் இஸ்லாமிய சகோதரத்துவமும், நேசமும் முன்னுரிமை அளிக்கத்தக்கன"' என்று கூறினார்கள்.

## பிரிவு

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மீண்டும் ஆயிஷா(ரலி) அவர்களின் இல்லத்திற்குச் சென்று அங்கேயே படுத்துக் கொண்டார்கள். இறை விசுவாசம், நடைமுறை விஷயங்கள், கஅபாவை பராமரித்தல் ஆகியன பற்றி மேலும் சில ஆலோசனை வழங்கினார்கள். பள்ளிவாசலுக்குச் செல்ல வேண்டுமென விரும்பி எழுவதற்கு முயன்ற போது, வலியின் கடுமை காரணமாக மயக்கமடைந்து விட்டார்கள். மயக்கம் தெளிந்த பின்பு மக்கள் தொழுகையினை நிறைவேற்றி விட்டார்களா என்று அவர்கள் ஆயிஷா(ரலி) யிடம் கேட்க தங்களின் வருகைக்காகத்தான் காத்திருக்கிறார்கள் என்று அவர் பதிலளித்தார். மீண்டும் நபிகளார் எழ முயன்ற போது மறுபடியும் அவர்கட்கு மயக்கம் ஏற்பட்டது. மயக்கம் தெளிந்த பின்பு மீண்டும் அதே கேள்வியை எழுப்பினார்கள். மக்கள் உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள் என்று பதில் அளிக்கப்பட்டது. உடனே நபிகளார் ஆயிஷா (ரலி)யிடம், அபூபக்ர்(ரலி) அவர்களைத் தலைமையேற்று தொழுகை நடத்தச் சொல்லும்படி வேண்டிக் கொண்டார்கள்.

தொடர்ந்து வந்த நாட்களிலும், அபூபக்ர்(ரலி) அவர்களையே தொழுகையை நடத்தும்படி நபிகளார் கேட்டுக் கொள்ள அவரும் அவ்வாறே செய்து வந்தார். ஆனால் ஆயிஷா(ரலி) அவர்கள், நபிகளாரிடம் தமது தந்தையான

அபூபக்ர்(ரலி) அவர்களை தொழுகை நடத்தச் சொல்ல வேண்டா மென்றும், மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடிய அவர்கள் தொழுகையில் குர்ஆனை ஓதும் போது அழுது விடுகிறார்கள் என்றும் கூறினார்கள். ஆனால் நபிகளார் அபூபக்ர்(ரலி) தான் தொழுகை நடத்திட வேண்டுமென்று உறுதிபடச் சொன்னார்கள்.

இரண்டு நாட்களுக்குப் பின் தங்களது உடல் நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்ட போது லுஹர் தொழுகை நேரத்தில் நபிகளார் பள்ளிவாசலுக்குச் சென்றார்கள். அப்போது தொழுகை நடத்திக் கொண்டிருந்த அபூபக்ர்(ரலி) அவர்கள் சில அடிகள் எடுத்து வந்து நகர்ந்து நபிகளாரை தொழுகை நடத்தும்படி வேண்டினார்கள். இதனை ஏற்க மறுத்த நபிகளார் அபூபக்ர்(ரலி) அவர்களின் இடது புறத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். பின்னர் நபிகளார் மீதமிருந்த தொழுகையை நடத்திட அபூபக்ர்(ரலி) அவர்கள் உரத்த குரலில் அதனைத் திருப்பிச் சொன்னார்கள். இதுவே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்கு வந்த கடைசி முறையாகும்.

அடுத்த நாளில், தங்களிடமிருந்த கடைசி திர்ஹம், மேல்சட்டை என அனைத்தையும் பிரித்துக் கொடுத்தார்கள். மீண்டும் மீண்டும் அடிமைகளையும், ஏழைகளையும் கீழ் நிலையில் உள்ளவர்களையும் நன்றாக நடத்த வேண்டும் என வலியுறுத்திச் சொன்னார்கள்.

மறுநாள் திங்கட்கிழமை காலை நேரத் தொழுகையின் போது, பள்ளிவாசலில் தொழுது கொண்டிருக்கும் முஸ்லிம்களைப் பார்க்கும் வண்ணம் ஆயிஷா(ரலி) இருந்த இடத்திற்கு அருகில் இருந்த திரைத்துணியை மேலே உயர்த்தி தொழுகை நடத்திக் கொண்டிருந்த முஸ்லிம்களைப் பார்த்து புன்னகை புரிந்தார்கள். இது கண்டு மகிழ்ச்சியடைந்த முஸ்லிம்கள் நபிகளார் தங்களுடன் வந்து தொழுகையில் கலந்து கொள்ளப்போகிறார்கள் என எண்ணியபோது, திரைத்துணி மூடப்பட்டது.

நபிகளாரை அவர்களால் பார்க்க முடியவில்லை. அதற்குச் சில மணி நேரத்திற்குப் பின், நபிகளாரின் புதல்வியான பாத்திமா(ரலி) அவர்களைப் பார்க்க வந்தார்கள். நபிகளாரின் வேதனையைப் போக்கிட சில பரிவான வார்த்தைகளை பாத்திமா(ரலி) சொன்ன போது குறுக்கிட்ட நபிகளார் "இன்றைக்குப் பிறகு உன்னுடைய தந்தையாருக்கு எந்த வேதனையும் இருக்காது" என்று கூறினார்கள். 'என்னுடன் நீயும் விரையில் வந்து சேர்ந்து கொள்வாய்' என நபிகளார் பாத்திமாவின் காதில் மெதுவாகக்கூறிய போது கண்ணீர் வழிந்தோட புன்னகை புரிந்தார்கள். வேதனை மேலும் மேலும் அதிகரித்தது. நபிகளார் பேசும் திறனை இழந்தார்கள்.

பின்னர் ஆயிஷா(ரலி) அவர்கள் நபிகளாரின் அருகில் அமர்ந்து தன்னோடு இறுக அவர்களைப் பற்றிக் கொண்டு தனது மடியில் அவர்களின் தலையை வைக்கும்படி செய்து வேதனையின் தீவிரத்தை குறைக்க முயற்சித்தார்கள்.

நபிகளார் கண்களை மூடிக் கொண்டார்கள். அவர்களை இறுகப் பிடித்துக் கொண்ட ஆயிஷா(ரலி) அவர்கள் சொர்க்கத்தில் மிக உயர்ந்த இணைப்பில்' என்று நபிகளார் கூறக் கேட்டார்கள் பின்னர் நபிகளார் அந்த வசனங்களின் இறுதிப் பகுதியை ஓதினார்கள். இறைவனின் அருளைப் பெற்றவர்களுடன் சேர்ந்திருப்பது நபிமார்கள், தியாகிகள், நேர்மையாளர்கள் கொண்ட அந்தச் சமூகத்தில் இருப்பது எத்தனை அழகானது' 'மிக உயர்ந்த இணைப்பில்' என்ற வார்த்தையை மீண்டும் மூன்று முறை உச்சரித்தார்கள்.

அவர்களது முன் கை திடீரென்று கீழே சரிந்து விழுந்தது. அவர்களின் தலை கனத்துக் காணப்பட்டது. நபிகளார் மரணமடைந்து விட்டதை ஆயிஷா(ரலி) உணர்ந்து கொண்டார்கள்.

கி.பி.632 ஜூன் மாதம் 8ம் தேதி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து (ஹிஜ்ரி 11ம் ஆண்டு,

ரபியுலவல் மாதம் 12ம் தேதி, வயது 63) தன்னுடைய எஜமானனும், ஆசிரியனும், நண்பனுமான இறைவனின் அழைப்பினை ஏற்றுச் சென்று விட்டார்கள். இறைவனின் செய்தியை மக்களிடம் எடுத்துரைத்த அவர்கள் நிரந்தரமான அமைதியை நாடிச் சென்று விட்டார்கள். அந்த நாளிலிருந்து உலகமெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் காலம் காலமாக அவர்களுக்கு மரியாதை செலுத்தி வருகிறார்கள். மிகுந்த அன்புடன் கீழ்க்கண்ட இறை வசனங்களை ஓதி வருகிறார்கள்.

> அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் நபியின் மீது ஸலவாத் எனும் நல்வாழ்த்துக்களை அனுப்புகின்றார்கள். நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள் (குர்ஆன் 33:56)

## அன்பும் – வெற்றிடமும்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணமுற்ற செய்தி மதீனாவெங்கும் பரவியது. மக்கள் துயரத்தில் மூழ்கினர். கண்ணீர் வடித்தனர். துயரத்தை வெளிப் படுத்தலாம். ஆனால் அதில் கட்டுப்பாடும், கண்ணியமும் இருக்க வேண்டும். உணர்ச்சிவயப்பட்டு அழுது அரற்றக் கூடாது என நபிகளார் ஏற்கனவே மக்களை அறிவுறுத்தியிருந்தார்கள். எனவே நபிகளாரின் இல்லத்திற்கு அருகாமையில் பெரும் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்கும் விதமாக உமர்(ரலி) அவர்கள் திடீரென்று நபிகளார் மரணமடையவில்லை என்று உறுதிபட உரத்த குரலில் குறிப்பிட்டார்கள். நபிகளார் மரணமடைந்து விட்டதாகச் சொல்பவர்ளை கொன்று விடுவேன் எனவும் பயமுறுத்தினார்கள். நபிகளார் மீது உமர்(ரலி) கொண்டிருந்த அன்பு அத்தகைய ஆழமானது. நபிகளாரின் இழப்பை அவர்களால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. தங்களுக்கு இத்தனை ஆண்டுகள் காலம் வழிகாட்டி அன்பும், ஆதரவும் அளித்த நபிகளார் இல்லாத எதிர்காலத்தை

அவர்களால் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலவில்லை. இது பற்றி குர்ஆன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

> உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்காளாவது அவருக்கு கடினமாக இருக்கிறது. மேலும் உங்களுடைய வெற்றியில் பேராவல் கொண்ட வராகவும் நம்பிக்கையாளர்கள் மீது அதிகப் பரிவும், கருணையும் உடையோராகவும் இருக்கின்றார். (திருக்குர்ஆன் 9:128 )

உமர்(ரலி) உணர்ச்சி வயப்பட்டு விட்டார். அந்த நேரத்தில் அங்கு வந்த ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி) அவர்கள் நபிகளாரின் படுக்கைக்கு அருகில் அமர்ந்து அவர்களை மூடியிருந்த துணியை விலக்கினார்கள். நபிகளார் தங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டார்கள் என்பதையறிந்த அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. வெளியே வந்த அவர்கள் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் அமைதியிழந்து நின்று கொண்டிருந்த உமர்(ரலி) அவர்களை அமைதிப்படுத்த முயன்றார்கள். அங்கு நின்று கொண்டு ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி) அவர்கள் மக்களிடம் உரையாற்றினார்கள். அவரது உரை அறிவார்ந்ததாகவும், இஸ்லாமிய நம்பிக்கையின் மிக முக்கிய அம்சத்தை விளக்குவதாகவும் அமைந்திருந்தது. "யாரேனும் முஹம்மதை வணங்குபவராக இருந்தாரெனில் (அவர் அறிந்து கொள்ளட்டும்) நிச்சயமாக முஹம்மது இறந்து விட்டார் என்பதை! ஆனால் அல்லாஹ்வை வணங்குபவர்கள் அறிந்து கொள்ளட்டும். நிச்சயமாக அல்லாஹ் நித்திய ஜீவன் அவனுக்கு மரணம் இல்லை என்பதை" பின்னர் அவர்கள் குர்ஆனின் கீழ்க்கண்ட வசனங்களை ஓதினார்கள்.

> முஹம்மது ஒரு தூதரேயன்றி வேறல்லர். திண்ணமாக அவருக்கு முன்பும் தூதர்கள் பலர் சென்றுள்ளனர். எனவே அவர் மரணமெய்தி விட்டால், அல்லது

கொல்லப்பட்டு விட்டால் நீங்கள் முந்திய வாழ்க்கைக்குத் திரும்பிச் சென்று விடுவீர்களா? நினைவிருக்கட்டும். எவன் அவ்வாறு திரும்பிச் செல்கின்றானோ அவனால் அல்லாஹ்விற்கு எத்தகைய தீங்கும் செய்து விட முடியாது. ஆயினும் நன்றி செலுத்தி வாழ்பவர்க்கு அல்லாஹ் மிக விரைவில் அதற்குரிய கூலியை வழங்குவான்' (திருக்குர்ஆன் *3:144*)

இந்த இறை வசனங்களைக் கேட்டதும், உமர்(ரலி) அவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். இந்த வசனங்களை நீண்ட காலத்திற்கு முன்பே அருளப்பட்டிருந்த போதிலும், அவர்கள் இதனை முதன் முதலாக இப்போது தான் கேட்பதுபோல் உணர்ந்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்ற உண்மையை உமர்(ரலி) அவர்களும் மற்ற முஸ்லிம்களும் உணர்ந்து கொண்டதோடு அந்த வெற்றிடத்தை என்றும் வாழ்கிற மரணமில்லாத' ஒரே ஒரு இறைவன் பால் விசுவாசம் கொள்வதால் மட்டுமே நிரப்பமுடியும் என்பதையும் அறிந்து கொண்டனர். இறைத் தூதர் இல்லாமல் வாழ்வதற்குரிய வலிமையையும், பொறுமையையும் மன உறுதியையும் இறைவன் தான் தங்களுக்கு வழங்க வேண்டும் என அவனிடமே வேண்டுமாறு முஸ்லிம்களை உமர்(ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

# 28

# இறைவனின் தூதர் ஒரு அழகிய முன் மாதிரி

நபித் தோழர்கட்கு உணர்த்தப்பட்ட கீழ்க்கண்ட இறை வசனங்கள் பல்வேறு சமூக, கலாச்சாரப் பிரிவுகளைக் கொண்ட இன்றைய முஸ்லிம்களுக்கு எக்காலத்திற்கும் தொடர்ந்து உணர்த்தக் கூடியதாகவே அமைந்துள்ளன.

> உண்மையாதெனில், உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன் மாதிரி இருந்தது. உங்களில் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகின்றவராகவும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவராகவும் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் (குர்ஆன் *33:21*)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், அவர்களின் போதனைகளைப் படிப்பவர்கட்கு ஒரு சிறந்த ஆசிரியராகவும், பின்பற்றத்தக்கவர்கட்கு சிறந்த வழிகாட்டியாகவும், ஆர்வமுடையவர்கட்கு சிறந்த முன் மாதிரியாகவும், திகழ்ந்தார்கள்.

தங்களுடைய இருபத்து மூன்று ஆண்டு கால தூதுத்துவ வாழ்க்கை முழுவதும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஆன்மீக விடுதலையையும், சுதந்திரத்தையுமே வலியுறுத்தினார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக அவர்கட்கு இறைவசனங்கள் வெளிப்படுத்தப்பட்டன. தங்களது வாழ்க்கைச் சூழலின் பல்வேறு நிலைகளில் வல்லமை பொருந்திய ஏக இறைவன் அல்லாஹ்விடம் அவர்கள் அவ்வப்போது உரையாடல் நிகழ்த்தியது போல் இவை அமைந்திருந்தன. நபிகளார் இறைவனை உற்று கவனித்தார்கள். அவனிடம் பேசினார்கள். இரவு, பகல் ஆகிய அவனுடைய அத்தாட்சிகளை (அரேபியப் பாலை வனத்திலிருந்து தங்களது விசுவாசமிக்க தோழர்களுடன்) நம்பினார்கள்.

உலக மக்கள் தூங்கிக் கொண்டிருந்த போது அவர்கள் இறைவனை வணங்கினார்கள். அவர்களது சகோதரர்களும், சகோதரிகளும் மன உறுதியை இழந்திருந்த போதும் அவர்கள் இறைவனைத் தொழுதார்கள். சிரமங்களுக்கும் அவமரியாதை–களுக்குமிடையில் பலர் அவர்களை விட்டுச் சென்ற நிலையிலும் பொறுமையாகவும், உறுதியாகவும் இருந்தார்கள். பறக்கின்ற பறவை, ஓங்கி நிற்கின்ற மரங்கள், இருள், மின்னும் வின்மீன்கள் என அனைத்திலும் அவர்கள் இறைவனின் அத்தாட்சிகளைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்) தங்களைச் சுற்றிலுமிருந்தவர்களிடம் அன்பை வெளிப்படுத்–தினார்கள். அவர்களது இளகிய மனம், அன்பு காரணமாக அவர்களது மனைவிமார்கள் நன்றியுடையவர்களாக இருந்தார்கள். தோழர்கள் அவர்களை மனதார மிக ஆழமாக நேசித்தார்கள்.

இன்முகத்துடன் அவர்கள் மக்களுடன் பழகினார்கள். ஒரு அடிமை அவர்களுடன் பேச விரும்பி, நகரின் மற்றொரு கடைசிப் பகுதிக்கு அழைத்தாலும், அங்கு சென்று அவர் சொல்வதைக் கேட்பார்கள். அவர்கள் இறைவனுக்குச் சொந்தமாக இருந்தார்கள். எனவே அனைவரிடமும் அன்பு பாராட்டினார்கள். யாரிடமாவது கை கொடுத்தால், கொடுத்த கையை அவர்களாக முதலில் விலக்கிக் கொள்ள மாட்டார்கள். அன்பான ஒரு வார்த்தை, பிரியமான ஒரு அழைப்பு, ஆறுதல் இவை ஒரு

மனிதனின் உள்ளத்தில் எத்தகைய அமைதியையும், ஒளியையும் ஏற்படுத்தும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். தங்களிடமிருந்து தங்களை விடுவித்துக் கொண்ட அவர்கள் யாரையும் புறக்கணித்ததில்லை. புகலிடம் வழங்குபவராகவும், தூதராகவும் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் மக்களை நேசித்தார்கள். மன்னித்தார்கள். ஒவ்வொரு நாளும் தன்னுடைய தவறுகளுக்கும், கவனக் குறைவிற்கும் மன்னிப்பு வழங்குமாறு இறைவனிடம் மன்றாடுவார்கள். யாராவது ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ அவர்களிடம் வந்து தங்களுடைய தவறுகளைக் கூறி மன்னிப்புக் கேட்டால் அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்வார்கள். அவர்கட்கு ஆறுதல் சொல்வார்கள். தேற்றி அனுப்புவார்கள்.

தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுக்கத்தின் தேவையை வலியுறுத்திய அவர்கள், ஒருவர் செய்யும் தவறுகளை பிறர் அறிந்து கொள்ளாவண்ணம் பார்த்துக் கொண்டார்கள். சோம்பேறித்தனம் காரணமாக யாரேனும் ஒருவர் செய்ய வேண்டிய அமல்களைக் குறைத்துக் கொள்ள விரும்பி அவர்களை அணுகினால் அதற்குச் சாதகமான பதில்களையே வழங்கினார்கள். தங்களது அறிவையும், புரிந்து கொள்ளும் தன்மையையும் மேம்படுத்தி, முரண்பாடுகளிலிருந்து தங்களை விடுவித்து, தங்களது பலவீனங்களையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுமாறு மக்களை வேண்டிக் கொண்டார்கள். விடுதலைக்கான நிபந்தனைகளாக, குற்றமற்ற பொறுப்–புணர்வையும், மரபுகளுக்கு அடிபணியும் பண்பையும் போதித்தார்கள்.

நீதியே அமைதிக்கு அடிப்படையாகும். மற்றவர்களின் மாண்பிற்கு மரியாதை அளிக்க முடியாதவர்களால் சமத்துவத்தின் மகிமையை அனுபவிக்க இயலாது என்றும் குறிப்பிட்டார்கள். அடிமைகளை அவர்கள் விடுவித்தார்கள். பிற முஸ்லிம்களை அங்ஙனமே செய்யப் பரிந்துரை செய்தார்கள். ஒரு சுதந்திரமான சமூகத்தில்தான், சுதந்திரத்தின் மீது நம்பிக்கை

கொண்டவர்கள் வாழ இயலும் என்றார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அடிமைகள், ஏழைகள் மற்றும் சமுதாயத்தின் அடித்தட்டு மக்கள் ஆகியோரின் நலனில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். இதை குர்ஆன் வசனங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. அவர்களின் வாழ்க்கை முழுவதிலும் இத்தகைய செயல்களை நாம் காணலாம். தங்களுடைய சுய கௌரவத்தை உறுதியுடன் வலியுறுத்துமாறும், உரிமைகளைக் கேட்டுப்–பெறுமாறும் தாழ்வுணர்ச்சியிலிருந்து விடுபடுமாறும் அம்மக்களைக் கேட்டுக் கொண்டார்கள். சமய, அரசியல் விடுதலையே அவர்கள் விடுத்த செய்தியாகும்.

தூதுத்துவத்தின் இறுதிக் காலத்தில் விடைபெறும் ஹஜ்ஜின் போது அரஃபா மைதானத்தில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஜபலுத் ரஹ்மத் எனும் மலையில் நின்று கொண்டு உரையாற்றிய போது அனைத்து இன, நிற, கலாச்சாரங்களையும் கொண்ட ஆண்கள், பெண்கள், ஏழை, பணக்காரன் என அனைவரும் எந்த விதமான பாகுபாடுமின்றி அங்கு கூடியிருந்தனர். நல்லிதயம் கொண்ட மக்களே சிறந்த மக்கள். அது இனத்தாலோ, நிறத்தாலோ, கலாச்சாரத்தாலோ தீர்மானிக்கப்படுவதில்லை என்பதே அங்கு விடுக்கப்பட்ட செய்தியாக இருந்தது. நபிகளார் ஒரு முறை மக்களிடம் யார் நன்முறையில் நடந்து கொள்கிறாரோ அவரே உங்களில் நல்லவர் எனக்குறிப்பிட்டார்கள்.

தங்களது இறுதி உரையில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தெரிவித்த சகோதரத்துவக் கருத்துக்கள் முஸ்லிம்களுக்கு மட்டும் சொல்லப்பட்டவையல்ல. ஒட்டு மொத்த மனித சமூகத்திற்கும் சொல்லப்பட்ட வையாகும். மனச்சாட்சி கொண்ட ஒவ்வொருவரும் நீதியை நோக்கி முன்னேறிச் செல்லும் பயணத்தில் தடங்கல்களை ஏற்படுத்தும் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும் பாகுபாட்டையும், சமூக அநீதியையும், இன துவேஷத்தையும் இறைவனின் முன்னால் நியாயப்படுத்த முடியாது என்றும் போதித்தார்கள்.

இஸ்லாமிய சமுதாயத்தில், ஒரு கருப்பு மனிதர் மக்களை தொழுகைக்கு அழைத்தார். ஒரு அடிமையின் மகன் படையை தலைமை தாங்கி நடத்தினார். இறைநம்பிக்கை, தவறான கண்ணோட்டத்தின் அடிப்படையில் முடிவுகள் எடுப்பதினின்றும் முஸ்லிம்களை விடுவித்தது. உரிமை மறுக்கப்பட்ட, தனித்து–விடப்பட்ட மோசமாக நடத்தப்பட்ட பெண்களின் நிலை மேம்பட நபிகளார் பெரிதும் கவனம் செலுத்தினார்கள். குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> 'தன்னுடைய கணவர் விஷயத்தில் உம்மிடம் விவாதித்துக் கொண்டும், அல்லாஹ்விடத்தில் முறையிட்டுக் கொண்டும் இருக்கின்ற பெண்ணின் சொல்லைத் திண்ணமாக அல்லாஹ் கேட்டுக் கொண்டான். உங்கள் இருவரின் உரையாடலை அல்லாஹ் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் கேட்பவனும் பார்ப்பவனும் ஆவான். (குர்ஆன் 58:1)

விருப்பமில்லை என்ற காரணத்தால் தன்னுடைய கணவரை விவாகரத்துச் செய்ய விரும்பிய ஒரு பெண்ணின் வேண்டுகோளை நபிகளார் கவனத்துடன் பரிசீலனை செய்து அத்தம்பதியினரைப் பிரித்து வைத்தார்கள்.

பல பெண்கள், நபிகளாரிடம் வந்து தங்களது கணவன்மார்–களிடமிருந்து விவாகரத்துப் பெற்றுத்தருமாறு (குலா) வேண்டினார்கள். உபையின் மகள் ஜமீலா, சகில் மகள் ஹபீபா, பரீரா, தாபித்தின் மனைவி ஆகியோரை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். கடைசியில் கூறப்பட்டுள்ள தாபித் பற்றி இப்னு அப்பாஸ் குறிப்பிடுவதாவது:– தாபித்தின் மனைவி நபிகளாரிடம் வந்து எனது கணவரின் குணத்தையோ மார்க்கப்பற்றையோ நான் குறைகூற வில்லை. ஆனால் நான் இஸ்லாத்தில் இருந்து கொண்டே இறை நிராகரிப்புக்குரிய செயலைச் செய்திடுவேனோ என அஞ்சுகிறேன் என்று கூறினார். (ஒரு கணவர் என்ற ரீதியில் அவரது உரிமைகளை மதிப்பது அல்லது தன்னுடைய நடத்தை,

சிந்தனை மூலமாக கணவருக்கு துரோகமிழைப்பது எனும் ரீதியில்) அவளிடம் கணவரிடமிருந்து மஹராகப் பெற்ற தோட்டத்தை அவருக்கு திருப்பிக் கொடுக்கத் தயாரா? என்று நபிகளார் கேட்டபோது, அவள் அதற்குத் தயார் என்று சொன்னாள். பின்னர் நபிகளார் தாபித்திடம் அவளை விட்டுப் பிரிந்துசெல்லும்படி கூறினார்கள்.

தனது தகப்பனார் தன்னுடைய கருத்தைக் கேட்காமல் தனக்குச் செய்விக்கப்பட்ட திருமணத்தை ரத்துச் செய்திட முயற்சிப்பதாக இன்னொரு பெண் நபிகளாரிடம் வந்து புகார் தெரிவித்தார். தான் தன்னுடைய தந்தையின் முடிவில் திருப்தியடைந்து கணவரைப் பிரியத் தயாராக இருப்பதாகவும், ஆனால் அதே நேரத்தில் தந்தைமார்கள் தங்களது மகள்களின் சம்மதத்தைக் கேட்காமல் இதுபோன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்பதை உலகிற்குத் தெரிவித்திட விரும்புவதாகவும் நபிகளாரிடம் கூறினாள். பெண்மை என்பது ஆண்களின் உற்று நோக்கும் கண்ணாடிச் சிறைக்குள் அடைபட்டிருக்கவில்லை. அல்லது அதிகாரம் வழிகேடு போன்ற ஆரோக்கியமற்ற உறவுகளால் பிரிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் உறுதிப்பாடு, மற்றும் ஆன்மீகப் பயிற்சி என இரண்டு வகையான தேவைகளை அது கொண்டிருப்பதாகவும் பெண்களிடம் நபிகளார் தெரிவித்தார்கள்.

பொது வாழ்வில் பெண்கள் ஈடுபடுவதையும், சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஏன் இராணுவம் போன்ற துறைகளில் பெண்கள் பங்கு பெறுவதையும் நபிகளார் தடை செய்யவில்லை. அதனை ஊக்குவிக்கவே செய்தார்கள். ஆன்மீகப் போதனை–களின் ஒளியில் தங்களது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், அனைத்து விஷயங்களிலும் பங்கு கொண்டு தங்களது கருத்துக்களைத் தெரிவிக்குமாறும், உண்மையான மன விடுதலையையும், அற நெறிக் கொள்கைகளையும் கேட்டு அறிந்து கொள்ளுமாறும் பெண்களுக்கு நபிகளார் வழி காட்டினார்கள். மிகப் பெரும் கருணையாளனான, வல்லமை மிக்க இறைவன் மேல் நம்பிக்கை கொண்டு, தங்களது

வழிமுறைகளை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அல்லது தேடிக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

குழந்தைகளை நபிகளார் பெரிதும் நேசித்தார்கள். இறைவனுக்கும், தமது இதயத்திற்கும் நெருக்கமாக இருந்த அவர்கள் இதயத்தின் மொழியைப் புரிந்து கொண்ட குழந்தைகளின் மீது மிகுந்த அக்கறை செலுத்தினார்கள். குழந்தைகளை முத்தமிட்டார்கள். அவர்ளைத் தங்களது தோள்களில் தூக்கிச் சுமந்து சென்றார்கள். அவர்களோடு விளையாடினார்கள். அவர்களின் களங்கமற்ற தன்மையை நேசித்தார்கள். தேவ தூதர்களைப்போல குழந்தைகளும் இறைவனுக்கு முற்றிலும் சொந்தமானவர்களே! அவர்கள் இறைவனின் அத்தாட்சிகள். நபிகளாரின் செயல்பாடுகள் இதனைத் தொடர்ந்து நினைவுபடுத்தும் வண்ணமே அமைந்–திருந்தன. உபரித் தொழுகையில் ஈடுபட்டிருக்கும் போது குழந்தைகளின் அழுகுரலைக் கேட்டு விட்டால், உடனே நபிகள் நாயகம்(ஸல்) தங்களது தொழுகையை சுருக்கிக் கொண்டு, அவர்களைக் கவனிக்கப்போய் விடுவார்கள். நபிகளார் மேலும் கூறியதாவது:– சில சமயங்களில் நான் நீண்ட நேரம் தொழுவதற்காக என்னைத் தயார்படுத்திக் கொண்டு தொழும் போது, இடையில் குழந்தை அழுவதைக் கேட்டுவிட்டால் அதனால் குழந்தையின் தாய்க்கு துன்பம் நேரிடுமே எனக் கருதி எனது தொழுகையைக் சுருக்கிக் கொள்வேன்’

குழந்தைகளின் களங்கமற்ற தன்மைக்காக நபிகளார் அவர்களைப் பெரிதும் நேசித்தார்கள். அவர்களிடமிருந்து மக்களையும், தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் வியப்புடன் பார்க்கக் கற்றுக் கொண்டார்கள். குழந்தைகளைப் பார்த்து தங்களது ரசிகத் தன்மையை வளர்த்துக் கொண்டார்கள். குழந்தைகளின் அழகை நேசித்தார்கள். அளவற்ற அழகும் மிகுந்த தயாள குணமும் கொண்ட இறைவன் அருளிய திருக்குர்ஆனின் சில வசனங்களில் காணப்படும் இசை நயமிக்க சொற்றொடர்கள் அவர்களின் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்பியது.

# வழி காட்டிய ஒளி

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறநெறிகளையும் இறை நம்பிக்கையையும் மனித சமுதாயத்திற்குச் சொல்லிடவே அனுப்பப்பட்டார்கள். அதன் மூலம் இறைவன் தனது இருப்பையும். தன்னுடைய தேவைகளையும், இறுதித் தீர்ப்பு நாளையும் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவதையும் விசாரிக்கப் படுவதையும் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் உணர்த்திட விரும்பினான். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இந்தச் செய்தியுடனேயே வந்தார்கள். தங்களது வாழ்நாள் முழுவதும் பெண்கள், குழந்தைகள், ஆண்கள், அடிமைகள், பணக்காரன், ஏழை, புறக்கணிக்கப்பட்டவர்கள் என அனைவர் பாலும் கவனம் செலுத்தினார்கள். இந்த உலக மக்களுக்காக தேர்ந்தெடுக்–கப்பட்டு அனுப்பப்பட்ட அவர்கள் தங்களது இரக்கத்தையோ, பரிவையோ அன்பு உள்ளத்தையோ ஒரு போதும் மறைக்க வில்லை.

நபிகளாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலும், புதுப்பிப்பதாகவும், சீர்திருத்து வதாகவும், அமைந்திருந்தது. அது மிகச் சிறிய செயலாக இருந்தாலும் சரி, மிகப் பெரிய சம்பவமாக இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, அல்லது பிற சமயங்களில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தாலும் சரி நபிகளாரைப் பற்றிப் படித்துத் தெரிந்து கொண்டவர்கள் தங்களது சமய நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு அவர்களின் வாழ்க்கை–யிலிருந்து பெரும் படிப் பினைகளைப் பெற முடியும். அதன் மூலம் அவர்கள் விடுத்த செய்தியின் சாராம்சத்தையும், நம்பிக்கையின் ஒளியையும் பெற முடியும்.

நபிகள் நாயகம்(ஸல்) பிரார்த்தனை செய்தார்கள். திக்ர் முறையில் தியானம் செய்தார்கள். தங்களைச் சீர்படுத்திக் கொண்டதோடு இந்த உலகத்தையும் சீர்திருத்தினார்கள். அவர்களது ஆசிரியரான எல்லாம் வல்ல இறைவனின் வழிகாட்டுதலால் தம்மிடமிருந்த நல்லவற்றை மக்களுக்கு

வழங்கினார்கள். அது தான் ஜிஹாத்தின் உண்மையான பொருளாகும். அது தான் நம்பிக்கையாளர்கட்குச் சொல்லப்பட்ட 'நன்மையை ஏவி தீமையைத் தடுத்திடுங்கள்' என்ற கட்டளையின் பொருளாகும். நபிகளாரின் வாழ்க்கை அப்போதனைகளின் பிரதிபலிப்பாகவே இருந்தது.

ஒரே இறைவனான எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கு தங்களை முற்றிலும் அர்ப்பணித்து நபிகளார் வாழ்ந்தார்கள். இதற்கு அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் பல முன்னுதாரணங்களைக் காண முடியும். எல்லோரும் நபிகளார் மீது அன்பு செலுத்தினார்கள். வாஞ்சையுடன் நடந்து கொண்டார்கள். மரியாதை செலுத்தினார்கள். இந்த ஆன்மீகப் பண்பு அவர்களை தன் முனைப்பிலிருந்து மேலெழச் செய்தது. தங்களையே கொடுத்து அதற்குப் பதிலாகத் தடையற்ற அன்பைப் பெற்றார்கள். தெய்வீக அன்பு மனிதனைச் சார்ந்திருப் பதிலிருந்தும் சுதந்திரமாக இருக்கிறது. நபிகள் நாயகம்(ஸல்) இறைவனுக்குப் பணிந்தார்கள். அதன் காரணமாக மனிதப் பொய்த் தோற்றங்களிலிருந்து விடுதலை பெற்றார்கள்.

உண்மையான அன்பின் ரகசியம் பற்றி ஒரு முறை தோழர் ஒருவரிடம் நபிகளார் "மனிதர்கள் எதை நேசிப்பார்களோ அத்தகைய செல்வத்திலிருந்து விலகியிருங்கள். மனிதர்கள் உங்களை நேசிப்பார்கள்" என்று குறிப்பிட்டார்கள். "என்னுடைய நேசருடன் யார் பகைமை பாராட்டினார்களோ அவர்களுடன் நான் போர்ப்பிரகடனம் செய்து விட்டேன். மேலும் என் அடியான் நான் அவன் மீது கடமையாக்கியுள்ள வணக்கத்தை விடவும் எனக்கு அதிகப்பிரியமான வேறெந்த அமலைக் கொண்டும் என் பக்கம் நெருக்கத்தை அவன் அடைவதில்லை. மேலும் என் அடியான் நஃபில் எனும் உபரி வணக்க வழிபாடுகளின் மூலம் என் பக்கம் தொடர்ந்து நெருங்கி வந்து கொண்டிருக்கிறான். எந்த அளவுக்கு எனில் நான் அவனை நேசிக்கும் அளவுக்கு (நெருங்கி வருகிறான்) நான் அவனை நேசித்து விட்டால் எதைக் கொண்டு அவன் கேட்கிறானோ அத்தகைய அவனது செவியாக நான் ஆகி

விடுவேன். எதைக் கொண்டு அவன் பாரக்கிறானோ அத்தகைய அவனது பார்வையாக நான் ஆகிவிடுவேன். எதைக் கொண்டு அவன் பிடிக்கிறானோ அத்தகைய அவனது கையாக நான் ஆகிவிடுவேன். மேலும் எதைக் கொண்டு நடக்கிறானோ அத்தகைய அவனது காலாக நான் ஆகி விடுவேன். அவன் என்னிடம் யாசித்தால் நான் நிச்சயம் அவனுக்குக் கொடுப்பேன். அவன் என்னிடம் தஞ்சம் அடைந்தால் நான் அவனுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பேன்." இறைவனின் மீது செலுத்தும் அன்பு, இறை நெருக்கத்திற்கு இட்டுச் செல்கிறது. தன் முனைப்பிலிருந்த விடுபட வைக்கிறது. இறைவனின் மீது வைத்திடும் அன்பு சார்பற்றது. அந்த அன்பு விடுதலை அளிக்கிறது. உயர்த்துகிறது' இவ்வாறு இறைவன் அன்பின் பாதையைப் பின்பற்றுமாறு நபிகளாருக்கு உணர்த்தினான்.

அழைப்புப் பணி, தலைமறைவு வாழ்க்கை, மீண்டும் திரும்பி வருதல், இறுதியில் பிரிதல் எனப் பல்வேறு கட்டங்கள் அவர்களது வாழ்க்கைப்பாதையில் இருந்தன. அவர்களின் வாழ்க்கைப் பயணம் முழுவதும் இறைவன் தனது அளப்பரிய அன்பினால் அவர்கட்குத் துணையாக நின்றான். உறுதுணை புரிந்தான். அதுபோல மக்களும் தங்கள் அன்பின் மூலமாக தன்னைத் தொடர வேண்டுமென இறைவன் விரும்புகிறான்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒரு உலகளாவிய செய்தியை மக்களுக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களின் வாழ்க்கை அன்பு மயமானதாக இருந்தது. பிரிவுகள், விருப்பங்கள், பொய்யான அடையாளங்கள் ஆகியவற்றைத் தாண்டி உலகம் முழுவதும் ஏற்கும் அறநெறிகளைக் கடைப்பிடிக்குமாறு மக்களை அவர்கள் நினைவுபடுத்திக் கொண்டே இருந்தார்கள். அதுதான் உண்மையான விடுதலையாகும். இனம், நாடு, குலம் ஆகியன சார்ந்து உணர்ச்சிவயப்பட்ட அன்பாக அது இல்லாமல் நியாயத்தின்– பாற்பட்டதாக இருப்பது தான் ஒரு மனிதனுக்கு விடுதலை அளிக்கும் என நம்பினார்கள். அற நெறிகளால் ஒளியூட்டப்பட்ட

அவர்களின் அன்பு அவர்களை மேன்மையுறச் செய்தது. அன்பால் வழிகாட்டப்பட்ட அவர்களின் அறநெறி உணர்வு அவர்கட்கு விடுதலை அளித்தது. மனிதர்களிலே மிகவும் நல்லவர், மற்றவர்களிடமிருந்து அசாதாரணமான முறையில் வேறுபட்டவர் என்ற இரண்டு குணாதிசயங்களைத் தோழர்கள் நபிகளாரிடம் கண்டார்கள். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இறைவனால் நேசிக்கப்பட்டார்கள். மனிதர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தார்கள். பிரார்த்தனை செய்தார்கள். தியானித்தார்கள், அன்பு செலுத் தினார்கள், வழங்கினார்கள், சேவை செய்தார்கள். சீர்திருத்தம் செய்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்) வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்ந்தார்கள். அவர்களது வாழ்க்கையிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளும் நம்பிக்கையாளர்கள் அவர்களின் ஒளியையும், அன்பையும் கண்டு கொள்கிறார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டுச் சென்றிருக்கலாம். ஆனால் என்றும் அவர்களை மறக்க வொண்ணா வண்ணம் நமக்கு போதித்து விட்டுச் சென்றிருக் கிறார்கள். உயர்ந்த புகலிடம் அளிப்பவராக, சாட்சியாக, இறை வனுக்கு மிகவும் நெருக்கமானவராக அவர்கள் இருந்தார்கள். அல்லாஹுவைத் தவிர வேறு இறைவன் யாருமில்லை என்று சாட்சியம் பகர்வது ஆழமான, உண்மையான விடுதலையை நோக்கிச் செல்வதற்கு ஒப்பானதாகும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை இறைவனின் தூதராக அங்கீகரித்து அவர்கள் பால் அன்பு பாராட்டுவது இறைவனுக்கு அன்பு செலுத்துவதற்கு ஒப்பானதாகும். நாம் இறைவன் மீதும் அவனின் தூதர் மீதும் படைப்பினங்களின் மீதும், மனித சமூகத்தின் மீதும் அன்பு செலுத்தக் கற்றுக் கொள்வோம்.

# நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பற்றிய பேரறிஞர்களின் கூற்றுக்கள்

அமெரிக்க நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள 'நூறுபேர்கள் என்ற நூல் ஒன்றில் அதன் ஆசிரியர் மனித வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நூறு மேன் மக்களைப் பற்றி எழுதியுள்ளார். அந்த நூலின் ஆசிரியர் மைக்கேல் ஹார்ட் என்பார் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவர். அறிவியல் பயின்றவர். ஆனால் அவர் வரிசைப்படுத்தி எழுதியுள்ள நூறு பேர்களில் முதலாவதாக ஏசு கிறிஸ்துவின் பெயரோ அல்லது நியூட்டனின் பெயரோ இல்லை. தமது சாதனைகள் மூலம் மற்றவர்களை வியப்பிலாழ்த்தியவர் இறை தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களே என அவர் நம்புகிறார். மனித குல வரலாற்றில் வேறு யாரும் அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை எனக்குறிப்பிடும் அவர் '100 பேர்கள்' என்ற தனது புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் 'உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நூறு பேர்களின் பட்டியலில் நான் முஹம்மதுவை(நபி) முதலாவதாகக் குறிப்பிட்டிருப்பது சில வாசகர்களை வியப்புக்குள்ளாக்கலாம். சிலர் கேள்விகள் எழுப்பலாம். ஆனால் உலக வரலாற்றில் சமய சார்பற்ற ரீதியிலும், சமய ரீதியிலும் பெரும் வெற்றியடைந்த ஒரே மனிதர் அவர் ஒருவர் மட்டுமே. 'ஏசு நாதரும், புனித பீட்டரும் இணைந்து செலுத்திய தாக்கத்தைக் காட்டிலும், வரலாற்றில் முஹம்மதுவின் தாக்கம் அதிகமானது என்றே நான் நினைக்கிறேன். இணையற்ற முறையில் இத்தாக்கத்தை ஏற்படுத்தியதற்காக நான் முஹம்மது நபி(ஸல்) அவர்களை ஒரு வல்லமை வாய்ந்த தனித்த மனிதராகக் கருதுகிறேன் என்றும் குறிப்பிடுகிறார்.

'உண்மையான இஸ்லாம்' என்ற தன்னுடைய நூலில் ஜார்ஜ்பெர்னார்ட் ஷா பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அதன் வியக்கத்தகு வலிமை காரணமாக நான் முஹம்மது(ஸல்) அவர்களின் சமயத்தைப் பெரிதும் மதிக்கிறேன். ஒவ்வொரு கால கட்டத்திலும் மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மக்களைத் தன் மயமாக்கும் சக்தி அந்த சமயத்திற்கு மட்டுமே உண்டு என்று நான் உறுதியாக நம்புகிறேன். நான் அவரைப் பற்றிப் படித்திருக்கிறேன். அந்த வியத்தகு மனிதர் ஒரு ஏசு கிறிஸ்து எதிர்ப்பாளராக இல்லாமல், மனித சமுதாயத்தின் ஒட்டு மொத்தப் பாதுகாவலராக இருந்தார் என்பதே என் கருத்தாகும் ஏதாவது ஒரு சமயம், அடுத்த நூற்றாண்டில் இங்கிலாந்தை அல்லது ஐரோப்பாவை ஆளுகின்ற வாய்ப்புப்–பெறுமென்றால் அது இஸ்லாமாகத்தான் இருக்கும்'

புகழ் பெற்ற பிரான்ஸ் நாட்டு கவிஞரும், வரலாற்று ஆசிரியருமான 'லா மார்டின்' என்பார் டி–லா–டர்கியூ பாரிஸ் என்ற நூலில் (பக்கர் 276, 277) பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

சிறந்த தத்துவ ஞானி, சிறந்த பேச்சாளர், போதனையாளர், மிகச்சிறந்த போர் வீரர், சட்டத்தை உருவாக்கியவர், பகுத்தறிவுச் சிந்தனைகளுக்குப் புத்துயிர் ஊட்டியவர், இறை பக்தி மிக்கவர், இருபதுக்கும் மேற்பட்ட பிரதேச அரசுகளையும், ஒரு ஆன்மீகப் பேரரசையும் நிறுவியவர் அவர் தான் முஹம்மது நபி(ஸல்) அவர்கள். மனிதர்களில் உயர்ந்தவர்களைக் கண்டறியப் பயன்படுத்தும் அளவு கோல்களைப் பொறுத்த அளவில், நான் கேட்க விரும்பும் கேள்வியெல்லாம் 'அவர்களை விட உயர்ந்த மனிதர் வேறு யாரேனும் உள்ளனரா என்பதேயாகும்.

தனது 'யங் இந்தியா' பத்திரிகையில் (16–9–1924) மகாத்மா காந்திஜி எழுதியிருப்பதாவது.

லட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் வீற்றிருக்கிற, பிரச்னைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு மிகச் சிறந்த மனிதரை நான் அறிந்திட விரும்புகிறேன். இன்றைக்கு இஸ்லாம் பெற்றிருக்கும்

இடம் வாளால் வந்ததல்ல என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். தங்களையே தியாகம் செய்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வாக்குறுதிகளுக்கு அளித்த மதிப்பு, நண்பர்களிடமும் பின்பற்றுவோரிடம் காட்டிய அளப்பரிய அன்பு, இறைவன் மீது கொண்ட முழுமையான விசுவாசம், அவர்களின் தூதுத்துவம் இவையே இஸ்லாம் பரவியதற்கான காரணங்களாகும். வாளால் எந்த விதமான மாற்றங்களும் நிகழவில்லை. எல்லாத் தடைகளையும் தாண்டி அவர் வெற்றி கண்டார்.

பெண்ணுரிமைக்குப் பாடுபடுபவராகவும், சிறந்த எழுத்தாளராகவும், சொற்பொழிவாளராகவும் விளங்கிய அன்னிபெசன்ட் அம்மையார் 'முஹம்மதுவின் வாழ்வும் போதனைகளும்' என்ற தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அரேபியாவின் அந்தப் பெரும் தீர்க்கதரிசியின் வாழ்க்கையையும், பண்பு, குண, நலன்களையும் படித்தவர்கள், அவர்கள் எங்ஙனம் போதித்தார்கள், எங்ஙனம் வாழ்ந்தார்கள் என்பதை அறிந்தவர்கள், அவர்கள் மீது (நபிகளார் மீது) பெருமதிப்புக் கொண்டிருக்கிறார்கள். இறைவனின் மிகப் பெரிய தீர்க்க தரிசிகளில் ஒருவராக அவர்கள் திகழ்கிறார்கள். நான் சொல்ல வருகின்ற செய்திகள் ஏற்கனவே பலர் சொல்லிய பழைய செய்திகளாக உங்களுக்குத் தோன்றக் கூடும். நான் மீண்டும் மீண்டும் அவர்களைப் பற்றிப் படிக்கும் போதெல்லாம் வல்லமைமிக்க அந்த அரேபிய போதகரின் மீது எனக்குப் பெருமிதமும் மரியாதையும் ஏற்படுகிறது.

'கிழக்கத்திய தீர்க்கதரிசிகள்' என்ற தனது நூலில் திவான்சந்த் சர்மா என்பவர் குறிப்பிடுவதாவது:-

அன்பின் ஆத்மாவாக முஹம்மது திகழ்ந்தார்கள். அவர்களது தாக்கம் பெரிதும் உணரப்பட்டது. அது அவர்களைச் சுற்றியிருந்தவர்களால் எப்போதும் மறக்கப்படமாட்டாது.

பிரான்ஸின் மன்னரான நெப்போலியன் போன பார்-ட் டி-

அல்–இஸ்லாம் என்ற தனது நூலில் எழுதியிருப்பதாவது:

மோஸஸ், இறைவனைப் பற்றி தனது நாட்டுக்கு எடுத்துச் சொன்னார். ஜீசஸ், ரோமன் நாட்டு மக்களுக்கு இறைவனைப் பற்றி சொன்னார். முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அந்த கண்டத்திற்கே இறைவனைப் பற்றிச் சொன்னார்கள். ஜீசஸ் வாழ்ந்து மறைந்த ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அரேபிய தீப கற்பத்தில் சிலை வணக்கம் இருந்தது. ஆபிரகாமும், இஸ்மாயிலும், மோசஸும், ஜீஸஸும் வணங்கிய அதே இறைவனை நபிகளார் மீண்டும் மக்களிடம் அறிமுகம் செய்தார்கள். இறைவன் ஒருவனே என முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். அந்த இறைவனுக்குச் சிலை வணங்கிகள் சொன்னதைப் போல் தந்தையோ மகனோ இல்லை. உலகத்தின் அனைத்து நாடுகளிலுமுள்ள அறிவாளிகளையும் கற்றவர்களையும் ஒன்றிணைத்து குர்ஆனின் அடிப்படையில் ஒரே சீரான சட்டங்களை இயற்றி ஆட்சி செய்யும் நாள் வெகு தூரத்தில் இல்லை . அந்த ஆட்சி ஒன்றே மக்களை மகிழ்ச்சி கொள்ள வைத்திடும் என நான் நம்புகிறேன்.

# Bibliographic References


| | | |
|---|---|---|
| 1. | Seerath - by ibn Ishaaq | Mohammad bin Ishaaq. |
| 2. | Seerath - by Ibn Khatir | Ibn Khatir |
| 3. | Seerath - un - Nabi (s) | Maulana Shibli Noumani |
| 4. | Seerath - un- Nabi (s) | Syed Sulaiman Nadvi |
| 5. | Muhammed (s) Encyclopedia of Seerah | Afzalur Reman. |
| 6. | The Emergence of Islam | Dr.Mohammed Hameedullah. |
| 7. | Mohsin-e-Insaniyath (s) | Nayeem Siddique |
| 8. | The Life of Muhammed(s) | Haykal. |
| 9. | The Sealed Nectar (Ar-Reheequl-Makhtum) | Al-Mubarakpuri. |
| 10. | Muhammed(s) | Martine Lings |
| 11. | Prophet Muhammad(s) | Fethullah Gulen. |
| 12. | The Perfect Guide for Mankind | Mohd. Rabey Hasani Nadvi. |
| 13. | Social Service in Islam | Syed Jalaluddin Umri |
| 14. | The Messenger | Tariq Ramdan |
| 15. | Muhammed(s) and the Quran | Rafiq Zakaria |
| 16. | Muhammad's (s) Legacy | Ibrahim H.Malabari, Canada |
| 17. | The Leadership of Muhammad(s) | John Adair. |

| | | |
|---|---|---|
| 18. | Prophet Muhammad's(s) Life and Teachings | A.R.Momin |
| 19. | The Prophetic Mission | Proff. M.Rafat |
| 20. | Prophet Muhammad(s) 'A Role Model' | Muhammad Yasin Mazhar Siddiqui |
| 21. | Teachings of Prophet(s) | Proff. Dr.Mohammed Saud Alam Qhasimi. |
| 22. | Pondering Over the Quarn | Amin Ahsan Islahi |
| 23. | Tafhim al-Quran | Sayyid Abul Ala Mawdudi |
| 24. | The Holy Quran | Abdullah Yusuf Ali |
| 25. | The Quran | Dr.Nazeer Ahamed. |